37

இதயத்தின்கடிதம்



எம்.ஷோலகோவ்

இதயத்தின் கட்டளை

எம். ஷோலகோவ்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

முதற் பதிப்பு : ஜூலை, 1981

உரிமைப் பதிவு

தமிழாக்கம்

தொ. மு. சி. ரகுநாதன்

Tamil Translation of
At the Bidding of the Heart
by
M. Sholokhov
Original Published by
Progress Publishers, Moscow.

விலை: ரூ. 20-00

அச்சிட்டோர் :

நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
சென்னை–600 098.

பொருளடக்கம்

	பக்கம்
முன்னுரை	1

பகுதி-1 வாழ்க்கை

நோவோச்செர்க்காஸ்க் தேர்தல் வட்டார வாக்காளர்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து ..	45
டான் பிரதேசத்தில் ..	47
கோஸாக் கூட்டுப் பண்ணைகள் ..	56
நீசத்தனம் ..	65
போர்முனைக்குச் செல்லும் வழியில் ..	66
முதல் சந்திப்புக்கள் ..	74
செஞ்சேனை வீரர்கள் ..	82
யுத்தக் கைதிகள் ..	93
லெனின்கிராடு வாசிகளுக்கு ஒரு கடிதம் ..	102
பகைமையின் விஞ்ஞானம் ..	103
அமெரிக்க நண்பர்களுக்கு ஒரு கடிதம் ..	132
வரலாறு என்றுமே கண்டறியாத அத்தகைய வெற்றி ..	135
வெஷென்ஸ்காயா தொகுதி வாக்காளர்களுக்கு ஆற்றிய உரை ..	136
தாயகத்தைப்பற்றி ஒரு வார்த்தை ..	137
சமாதான வீரர்களின் அகில-யூனியன் மாநாட்டுக்கு ஆற்றிய உரையிலிருந்து ..	180

நமது மாபெரும் நிர்மாணத் திட்ட நிலையங்களின் தலைச்சன் பிள்ளை .. 182
எனது கட்சியே! நீ நீடுழி வாழ்க! .. 195
நமது உக்ரேனியச் சோதரர்களுக்கு .. 199
வியப்பும் பெருமிதமும் .. 199
மனிதகுலத்தின் திபஸ்தம்பம் .. 200
மிகப்பெரும் சாதனை .. 201
பிராவ்தாவே! நாடு முழுவதும் உனக்கு வணக்கம் செலுத்துகிறது .. 201
நான் உங்களைத் தந்தையின் பாசத்தோடு அரவணைக்கிறேன் .. 202
கம்யூனிச உழைப்பின் அதிரடிப்படைத் தொழிலாளர்களுக்கு .. 203
நான் அழைப்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன் .. 203
அமைதியான டான் நதிக் கூட்டுப் பண்ணையின் கம்யூனிஸ்டுகள் தமது இலக்குகளை நிர்ணயிக்கின்றனர் .. 204
கிளைஜோஸ் மீது கை வைக்காதே! .. 207
ஆத்மாவின் மகத்துவம் .. 207

பகுதி-2 எழுத்தாளர்

எழுத்தாளரும் விமர்சகரும் நேர்மையாகச் செயல்பட வேண்டும் .. 215
ஆங்கில வாசகர்களுக்கு .. 224
இலக்கியம் பொதுவான பாட்டாளி வர்க்க லட்சியத்தில் ஒரு பகுதியாகும் .. 226
லட்சக்கணக்கான மக்களுக்கு அவர் ஒரு முன்னுதாரணமாக விளங்குவார் .. 236
சோவியத் எழுத்தாளரைப் பற்றி .. 237
மக்களுக்கான ஒரு பிரதிநிதி .. 240
ஒரு போல்ஷ்விக் எழுத்தாளர் .. 241

18ஆவது கட்சிக் காங்கிரசில்
ஆற்றிய உரையிலிருந்து .. 243

மிகப் பெரிய கலைஞர் .. 249

அலெக்சி டால்ஸ்டாயின் அந்திமக் கிரியையின்
போது ஆற்றிய உரையிலிருந்து .. 251

இலக்கியத்தின் மாபெரும் நண்பர் .. 252

இலக்கியத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் .. 258

ஒரு வானொலி உரை .. 259

உக்ரேனிய மக்களே! உங்களுக்கு ஆனந்தம்
கிட்ட வாழ்த்துகிறேன்! .. 262

சோவியத் எழுத்தாளர்களின்
இரண்டாவது அகில-யூனியன்
காங்கிரசில் ஆற்றிய உரை .. 265

உணர்ச்சிப் பெருக்கோடும் உண்மையோடும் .. 280

எனது இதயத்தின் அடியாழத்திலிருந்து .. 280

''இஸ்க்ரன்னயா லித்தரத்துரா''
சஞ்சிகை ஆசிரியர்களுக்கு ஒரு
கடிதம் .. 281

புத்தாண்டு வாழ்த்துக்கள் .. 285

20 ஆவது கட்சிக் காங்கிரசில்
ஆற்றிய உரையிலிருந்து .. 286

உக்ரேனின் மாபெரும் புதல்வர் .. 305

ஹங்கேரிய எழுத்தாளர்களுக்கு .. 306

கட்சியோடும் மக்களோடும் சேர்ந்து
நடை போடுக .. 307

பொது மக்களது மதியூகத்தின்
செல்வக் களஞ்சியம் .. 308

கடற்படையினருக்கு ஒரு கடிதம் .. 310

தாகன்ரோக் வாக்காளர்களுக்கு
ஆற்றிய உரையிலிருந்து .. 311

தற்காலத்தைப் பற்றிய புதிய புத்தகங்களை
வாசகர்கள் விரும்புகிறார்கள் .. 314

''பிராவ்தா''வின் ஆசிரியர்களுக்கு .. 316

''லித்தரத்துர்னயா கெஜத்தா''
பத்திரிகையின் நிருபருக்களித்த பேட்டி .. 316
செம்யோன் தாவிதோவைப் பற்றி .. 319
வலுப்படுத்தல், மீண்டும் வலுப்படுத்தல்! .. 320
கம்யூனிச லட்சியங்களுக்கு விசுவாசம் .. 321
சார்லஸ் பெர்ஸி ஸ்ஞேவுக்கு ஒரு கடிதம் .. 325
எழுத்தாளர்களின் ஐரோப்பியக் கமிட்டிக்
கூட்டத்தில் ஆற்றிய உரை .. 325
எழுத்தாளர்கள் தமது கதாநாயகர்களோடு
நண்பர்களாக இருக்கும்போது .. 327
தொழிலாளி வர்க்கத்தின் கீர்த்தி
பற்றிய புத்தகங்கள் தேவை .. 329
தொழில் துறைக்கும் கலைத் துறைக்கும்
இடையே மேலும் வலுவான
கூட்டணிக்காக .. 330
ரஷ்ய சமஷ்டி எழுத்தாளர்களது
இரண்டாவது காங்கிரசில்
ஆற்றிய தொடக்க உரை .. 334
ஒரு நன்றியுரை .. 339
ஸ்வீடிஷ் ராயல் அகாடமிக்கு .. 339
''பிராவ்தா''வுக்கு .. 340
''பிராவ்தா'' நிருபருக்களித்த ஒரு பேட்டி .. 340
எதார்த்த வாதத்தின் ஜீவபலம் .. 342
புத்தாண்டு வாழ்த்துக்கள் .. 346
லீப்சிக்கிலுள்ள காரல் மார்க்ஸ்
பல்கலைக் கழகம் வழங்கிய தத்துவ
வியலில் டாக்டர் என்ற கௌரவப்
பட்டத்தின் சான்றிதழைப் பெற்றுக்
கொண்டபோது ஆற்றிய உரை .. 347
23ஆவது கட்சிக் காங்கிரசில் ஆற்றிய உரை .. 348
போராடும் மனிதனே மனிதாபிமானி .. 362
''கிரோவ் ஆலையின் வரலாறு'' என்ற
புத்தகத்துக்கு எழுதிய முகவுரை .. 365

மாஸ்கோவிலுள்ள போலிஷ் தூதரகத்தில்
ஆற்றிய உரை .. 366

சர்வதேச இலக்கியக் கருத்தரங்குக்கு
அனுப்பிய ஒரு தந்தி .. 366

24 ஆவது கட்சிக் காங்கிரசில் ஆற்றிய உரை .. 367

பகுதி-3 இளம் மக்கள்

மாக்சிம் கார்க்கியைப் பற்றிய
உரையிலிருந்து .. 381

வெஷென்ஸ்காயாவிலுள்ள கூட்டுப்பண்ணைக்
கோஸாக் இளைஞர்களது நாடக
அரங்கின் முதலாவது ஆண்டுவிழா .. 382

எங்கள் இதயங்கள் அனைத்தோடும் நாங்கள்
உங்களோடு இருக்கிறோம் .. 382

வெஷென்ஸ்காயாவிலுள்ள கூட்டுப்
பண்ணைக் கோஸாக் இளைஞர்களது
நாடக அரங்கின் இரண்டாம்
ஆண்டு விழா .. 384

உங்கள் விசுவாசமிக்க துணைவன் .. 386

கஜாக் எழுத்தாளர்களின் மூன்றாவது
காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து .. 387

மக்களுக்காக எழுதுவது மிகப்பெரும்
கௌரவம் ஆகும் .. 391

இளம் எழுத்தாளர்களின் மூன்றாவது
அகில-யூனியன் காங்கிரசில்
ஆற்றிய உரை .. 393

நட்பை என்றும் மறவாதீர் .. 395

லவாவ் மாணவர்களுக்கு ஒரு கடிதம் .. 396

எனது நாட்டின் பெருமிதம் .. 397

கீவ் பிரதேசத்தைச் சேர்ந்த பெலாயா
திசெர்கோவ் என்ற கிராமத்திலுள்ள
2ஆம் எண் பள்ளியில் படிக்கும் இரு
மாணவர்களுக்கு எழுதிய கடிதம் .. 397

எனது டான் பிரதேச மக்களுக்கு .. 398

இதயம் கனிந்த நன்றி .. 399

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 22 ஆவது காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து .. 402

இளம் பயோனீர்களுக்கு .. 419

இளம் விவசாயிகளுக்கு .. 419

வெஷென்ஸ்காயாவைச் சேர்ந்த இளைஞர் களுக்கு .. 419

டான் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் களுக்கு ... 420

இளைஞர் படை பதிப்பகத்தின் பார்வையாளர் பதிவேட்டில் எழுதப்பட்ட வாசகம் .. 421

நாட்டுக்கு இளம் உழைப்பாளிகள் தேவை .. 421

எப்போதும் தேசபக்தி மிக்கவராக இருங்கள் .. 426

சோவியத் எழுத்தாளர்களது நாலாவது காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து .. 429

இத்தகைய அற்புதமான மக்களோடு வாழ்வது தான் எத்தனை ஆனந்தமானது! .. 438

முன்னுரை

இந் நூலில் இடம் பெற்றுள்ள புகைப்படங்கள் ஒன்றில், மிக்கேல் ஷோலகோவ் தமது மேஜையின் முன் அமர்ந்து கடிதங்கள் சிலவற்றைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் காணலாம். அவரது வேலை நேரத்தில் ஒரு பெரும் பகுதியை இந்தக் கடிதங்களே எடுத்துக் கொள்கின்றன. இந்த எழுத்தாளர் வசித்து வரும் டான் நதிக்கரைக் கிராமமான வெஷென்ஸ்காயாவுக்கு சோவியத் யூனியனின் சகல பகுதிகளிலிருந்தும் மூட்டை மூட்டையாகத் தபால்கள் வருகின்றன. ஆழமான சொந்த விஷயங்களிலிருந்து அரசு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் வரையிலான விஷயங்கள் குறித்து மக்கள் அவரது ஆலோசனையையோ, உதவியையோ கோரி, அவருக்கு எழுதுகின்றனர். பலர் அவரிடம் தமது எண்ணங்களை அந்தரங்கமாகத் தெரிவிக்க விரும்புகின்றனர்; அறிவாழம் மிக்க மூத்த நண்பர் ஒருவரிடம் கூற முனைவதுபோல், அவர்கள் தம்மைப்பற்றி அவரிடம் கூறுகின்றனர். இளம் மக்களும் அவருக்கு எழுதுகின்றனர். அரும்பிவரும் இளம் எழுத்தாளர்களும் கூடத்தான்.

ஷோலகோவுக்கு வரும் தபால்கள் பலவும் முற்றிலும் காரியார்த்தமான தன்மை படைத்தவைதாம். அவர் படித்துப் பார்ப்பதற்காக அவரது ஆரம்ப காலக் கதைத் தொகுதிகளின் புரூபுகள் அவருக்குத் தபாலில் வருகின்றன; அவரது கதைகளில் ஒன்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய திரைப்படத்தை வெஷென்ஸ்காயாவில் திரையிட்டுக் காட்டுவதற்காக அவரிடம் ஒரு தேதியைக் கேட்டு ஒரு திரைப்பட ஸ்டூடியோ அவருக்கு எழுதுகிறது; அவரது கதையின் நாடகமாக்கம் ஒன்றைப்பற்றி ஒரு நாடக அரங்கு அவரது ஆலோசனையைக் கேட்டறிய விரும்புகிறது.

பயன்மிக்க கலாசாரப் பரிவர்த்தனையை மேலும் மேம்படுத்துவதிலும், நாடுகளுக்கிடையே பரஸ்பர நல்லிணக்கத்தை

அபிவிருத்தி செய்வதிலும் மிகவும் பயன்மிக்கதாக விளங்கிய தமது பயணங்களைப் போன்ற மற்றொரு பயணத்துக்கு ஷோலகோவ் திட்டமிட்டுள்ளாரா என்று கேட்டு, வெளிநாடுகளிலுள்ள பதிப்பாளர்களிடமிருந்தும், ஸ்தாபனங்களிடமிருந்தும் கடிதங்களும், தந்திகளும் வருகின்றன.

சர்வதேச அரங்கில்

நாங்கள் டோக்கியோவை விட்டு வெகுதூரம் வந்து விட்டோம்; மலைப் பிரதேசமான நிக்கோவை நோக்கிச் சுட்டெரிக்கும் வெயிலில் காரை ஓட்டிச் சென்றோம். நாங்கள் இன்னும் பல மைல்கள் கடக்க வேண்டியிருந்தது; எங்களுக்கு மிகவும் தாகமாகவும் இருந்தது. சிறு நகரமொன்றின் பிரதானச் சதுக்கத்தின் வழியாக நாங்கள் காரை ஓட்டிச் சென்றபோது, அதன் ஒருபுறத்தில் ஞாபகார்த்தப் பொருள்களை விற்கும் கடைகளும் மற்றும் சிகரெட்டுகளையும், குளிர்பானங்களையும் விற்கும் பெட்டிக் கடைகளும் இடையருது வரிசையாக அமைந்திருப்பதைக் கண்டோம். நாங்கள் எங்கள் பயணத்தைச் சில நிமிட நேரம் நிறுத்திக் கொள்ளத் தீர்மானித்தோம்.

மிகவும் பல்வகைப்பட்ட ஞாபகார்த்தப் பொருள்களைப் படைக்கும் திறமையும், சுறுசுறுப்பும் மிக்க உள்ளூர் ஜப்பானியக் கைவினைஞர்கள் உருவாக்கிய பொருள்களை அந்தக் கடைகள் விற்றுக் கொண்டிருந்தன. நாங்கள் சந்தர்ப்பவசமாகத் தங்கி நிற்க நேர்ந்த அந்த இனந்தெரியாத நகரில், என்ன ஞாபகார்த்தப் பொருளை வாங்கலாம் என்று யோசித்து நாங்கள் அந்தக் கடைகளின் ஒன்றில் நின்று கொண்டிருந்தபோது, விற்பனை செய்யும் இளம் யுவதி ஒருத்தி நாங்கள் எங்கிருந்து வருகிறோம் என்று மொழி பெயர்ப்பாளரிடம் கேட்டாள். நாங்கள் சோவியத் யூனியனிலிருந்து வந்திருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டவுடன், எங்களோடு எழுத்தாளர் ஷோலகோவும் வந்திருக்கிறாரா என்று அவள் கேட்டாள். அவர் ஜப்பானில் சுற்றுப் பயணம் செய்து வருவதாகப் பத்திரிகைகள் அறிவித்திருந்தன. ஷோலகோவ் எங்கிருக்கிறார்? அவரை அவள் எப்படிக் காண முடியும்? ஷோலகோவ் எங்களுடன்தான் இருக்கிறார் என்பதை மொழிபெயர்ப்பாளர் அவளிடம் கூறியவுடன், விற்பனை செய்யும் பெண்கள் யாவரும் சிறிது நேரம் திடீரென்று கண் மறைந்து போய் விட்டனர்; பின்னர் அவர்கள் ஷோலகோவின் நூல் தொகுதிகளையும் ஆட்டோகிராப் நோட்டுப் புத்தகங்களையும் கைநிறையச் சுமந்து கொண்டு திரும்பவும் வந்து சேர்ந்தனர். ஷோலகோவ் சிகரெட்டுகள் வாங்கிக் கொண்டிருந்தார்.

நட்புறவான எனினும் விடாக்கண்டர்களான அந்த ரசிகர்கள் அவரை அங்கு முற்றுகையிட்டு விட்டனர்; ஆட்டோகிராப் கையெழுத்துக்களைச் சற்று நேரம் போட்டுக் கொடுத்த பின்னர் தான் அவர் தப்பிக்க முடிந்தது.

இந்தச் சிறு நகரில் தங்கிச் செல்வது என்பதொன்றும் முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்ட காரியம் அல்ல என்பதை வலியுறுத்தியாக வேண்டும். நாங்கள் வெந்து புழுங்கினோம்; தாகமாகவும் இருந்தது. எனவேதான் நாங்கள் அங்கே சற்றுத் தங்கினோம். இதனை எவரும் முன்னதாகவே அறிந்திருக்கவோ, எங்களுக்காக எந்தத் தயாரிப்பையும் செய்திருக்கவோ முடியாது. அந்த இளம் ஜப்பானிய வாசகர்களோடு ஏற்பட்ட இந்தச் சந்திப்பு முற்றிலும் திட்டமிடப்படாத, முற்றிலும் தானாக நிகழ்ந்த ஒன்றேயாகும்.

சகிப்புத் தன்மையின் சிறு சோதனையொன்று வெற்றிகரமான சாதனையாக மாறியதை நாங்கள் நிக்கோவிலேயே கண்டோம். ஷோலகோவின் படைப்புக்களை ரசிக்கும் ரசிகையான பள்ளி மாணவி ஒருத்தி, ஜப்பானிய எழுத்தாளர் சங்கத்தின் அழைப்பின்பேரில் அவர் ஜப்பானுக்கு விஜயம் செய்வதாக ஒரு பத்திரிகை மூலம் படித்தறிந்திருந்தாள். அவர் செல்லக் கூடிய உத்தேசமான மார்க்கமும் அதில் கூறப்பட்டிருந்தது; அதில் நிக்கோவும் சேர்க்கப்பட்டிருந்தது. நிக்கோவிலுள்ள புராதனமான கோயில், அயல்நாட்டுச் சுற்றுப் பயணிகள் அநேகமாக காணத் தவறிவிடாத காட்சித் தலங்களில் ஒன்றாகும் என்பதை அறிந்திருந்த அவள், அந்த எழுத்தாளரின் கையெழுத்தைப் பெற்று விடும் நம்பிக்கையோடு அதன் வாசலில் காத்திருக்கத் தீர்மானித்தாள். ஐந்து மணிநேரம் காத்திருந்த பின்னால், அவள் நம்பிக்கை இழக்கத் தொடங்கினாள்; என்றாலும் அவள் காத்திருந்தாள். அவளது பொறுமைக்குப் பயன் கிட்டியது. அவள் பெரிதும் திக்குமுக்காடும் அளவுக்கு, பத்திரிகை நிருபர்கள் அவளைப் பேட்டிகள் கண்டனர்; ஷோலகோவுடன் சேர்த்து அவளைப் படமும் பிடித்தனர். இந்தப் புகைப்படங்கள் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்தன; அவற்றில் ஒன்றில் அந்த யுவதி தான் எந்தக் கையெழுத்துக்காக அத்தனை நேரம் காத்துக் கொண்டிருந்தாளோ, அந்தக் கையெழுத்தை வாங்கிக் கொண்டிருக்கும் காட்சி இடம் பெற்றிருந்தது.

ஏனைய பல சந்தர்ப்பங்களையும் போலவே இந்தச் சந்தர்ப்பத்திலும், எங்களோடு வந்திருந்த மொழிபெயர்ப்பாளர்கள் எங்களுக்கு இன்றியமையாதவர்களாக விளங்கினர்; அவர்களைப்

பற்றியும் தனியே குறிப்பிடத்தான் வேண்டும். இளைஞர்களாயினும் ஷோலகோவின் நூல்களை மொழி பெயர்த்து அதன்மூலம் ஏற்கெனவே பரவலாகப் பிரபலமாகி யிருந்த அவர்கள் ஒன்றும் சாதாரணச் சுற்றுலாப் பயண வழி காட்டிகளாக இருக்கவில்லை. அவர்களில் டோக்குயா ஹரா, டாக்கு எகாவா என்ற இருவரும் **டான் நதி அமைதியாக ஓடுகிறது** என்ற நாவலை, ஜப்பானில் முதன் முதலில் மொழி பெயர்த்தவர் களான தமது தந்தையரின் அடிச்சுவட்டில் தொடர்ந்து நடை போட்டு வருகின்றனர். தற்செயலாக அவர்களில் ஒருவரின் தந்தையான டெட்சுயா பாபா, **டான் நதி அமைதியாக ஓடுகிறது** நாவலின் முதல் அயல் மொழி மொழிபெயர்ப்பைச் செய்த வராவார்; அந்த நாவலைப் புத்தக வடிவில் வெளிக்கொணர்வ தற்கும் முன்பே, அவர் அதனை ஒரு சஞ்சிகையில் அத்தியாயம் அத்தியாயமாக மொழிபெயர்த்து வெளியிட்டு வந்தார்.

1965ஆம் ஆண்டின் குளிர்பருவம். அது ஒரு மிதமான குளிர்பருவம். ராஜ மாளிகை அமைந்துள்ள கரையை அடுத் திருக்கும் வளைகுடாவிலிருந்து அன்னப் பறவைகள் தெற்கு நோக்கி இடம் பெயர்ந்து செல்வதில்லை; மாறுக, அவை அங்கேயே உணவுண்டு வாழ்கின்றன; மேலும் கப்பல்களை வரவேற்கவும், வழியனுப்பி வைக்கவும் அவை எப்போதும் அங்கேயே பிரசன்னமாக உள்ளன.

இம்முறை அவை வரவேற்ற கப்பல் **ஸ்வியாற் யாரல்** என்ப தாகும்; டுர்க்கூ என்ற பின்லாந்து நகரிலிருந்து வந்த அந்தக் கப்பல், இலக்கியத்துக்காக நோபெல் பரிசு பெற்றிருந்த மிக்கேல் ஷோலகோவை ஸ்டாக்ஹோம் நகருக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

டிசம்பர் மாதத்தின் அந்த வாரமானது அனுபவங்களின், நினைவுகளின்—கச்சேரி மண்டபத்திலும், டவுண் ஹாலிலும் நடந்த மரபு வழி வந்த கொண்டாட்டங்களின், சம்பிரதாய பூர்வமான வரவேற்புக்கள் மற்றும் அத்தனை சம்பிரதாய பூர்வ மாக இல்லாத கூட்டங்கள் ஆகியவற்றின், ஆரவாரம் மிக்க பத்திரிகை நிருபர் கூட்டங்களின், நேயமிக்க உளமார்ந்த உரையாடல்களின்—ஒரு வண்ணக் கோலக் காட்சியாகவே இப்போது தோன்றுகிறது.

ஷோலகோவ் வந்து சேர்ந்த தினத்தன்று ஒரு பத்திரிகை நிருபர் கூட்டம் நடந்தது; அதைப் பற்றி **ஸ்டாக்ஹோம்ஸ் டிட்னிங்ஜென்** என்ற செய்தித்தாள் இவ்வாறு எழுதியது: ''ஸ்டாக்ஹோமில் தாம் தங்கியிருந்த முதல் நாளன்றே, ஷோலகோவ் முந்திய சாதனைகள் அனைத்தையும் முறியடித்து

விட்டார்—கிராண்டு ஹோட்டல் மண்டபத்தில் இதற்கு முன் என்றுமே இத்தனை பத்திரிகையாளர்கள் கூடியதே இல்லை.''

ஸ்வீடிஷ் வாசகர்களின் கவனத்துக்கு ஷோலகோவின் படைப்புக்களைக் கொண்டுவருவதில் எவ்வளவோ பணியாற்றி யுள்ள டிடென் பதிப்பகத்தார் ஏற்பாடு செய்திருந்த வரவேற்புக் கூட்டத்தில், அந்தப் பதிப்பகத்தின் ஜெனரல் டைரக்டரான பெங்ட் கிறிஸ்டெல், அந்த எழுத்தாளரைப் பின்வரும் வாசகங் களால் வாழ்த்தி வரவேற்றார்.

''உங்கள் நூல்களை வெளியிடுவோர் என்ற முறையில் உங்களோடு இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியுறுகிறோம்; எனினும் உங்களது புத்தகங்களை நாங்கள் விற்பனை செய்கிறோம் என்பது மட்டுமே அதற்குக் காரணம் அல்ல....உண்மையான, எதார்த்த பூர்வமான ஒரு மாபெரும் கலைக்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது; எனவேதான் நாங்கள் இன்று மகிழ்ச்சியடை கிறோம்.''

''டான் நதி பற்றிய தமது காவியப் படைப்பில் ரஷ்ய மக்களது வாழ்வின் ஒரு வரலாற்று ரீதியான சகாப்தத்தை அவர் எத்தகைய கலா வலிமையோடும் சத்தியத் தன்மையோடும் வருணித்துள்ளாரோ அவற்றுக்காகவே''ஷோலகோவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஸ்வீடிஷ் அகாடமியின் நோபல் பரிசுக் கமிட்டியின் தலை வரான டாக்டர் ஆண்டர்ஸ் ஆஸ்டெர்லிங், கச்சேரி மண்டபத் தில் நடந்த பரிசு வழங்கு விழாவின்போது ஆற்றிய தமது உரையில், டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற நாவலில் கோஸாக்குகளின் வாழ்க்கையை வருணிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ள உள்ளங் கவரும் எதார்த்தவாதத்தைக் குறித்தே பேசினார். அது சகல விதத்திலும் சக்தி மிக்க ஒரு படைப்பாகும். ''இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெற்ற வெற்றியாளர்களின் பட்டியலை, தற்காலத்தின் தனிச் சிறப்புமிக்க எழுத்தாளர்களில் ஒருவரின் பெயரை அதில் சேர்த்து அதனை வளப்படுத்தும் இந்தப் பரிசு காலதாமதமாக,—எனினும் அதிருஷ்டவசமாக மிகவும் காலதாமதமாக இல்லாமல்—வந்துள்ளது'' என்று கூறினார் அவர். பின்னர் அவர் ஷோலோகோவின் பக்கம் திரும்பி இவ்வாறு கூறினார்: இந்தப் பரிசு சோவியத் இலக்கியத்துக்குத் தாங்கள் ஆற்றியுள்ள குறிப்பிடத்தக்க பணிக்கு, எங்கள் நாட்டிலும் அதேபோல் உலகம் முழுவதிலும் நன்கு பிரபலமாகி யுள்ள பணிக்கு வழங்கப்படும் நியாயமான, நன்றியுணர்வு மிக்க பாராட்டாகும்.

சம்பிரதாய பாணியில் அமையாத சூழ்நிலையில் டவுண் ஹாலில் நடந்த விருந்தின்போது ஸ்வீடிஷ் அகாடமியின் இலக்கியத் துறைக்கான நிரந்தரச் செயலாளர் டாக்டர் கே. ஆர். கீரோ நகைச்சுவையும், சொல்வன்மையும் மிக்க சொற்பொழிவொன்றை ஆற்றினார். இதில் விசித்திரம் என்னவென்றால், ஷோலகோவை நோக்கி அவர் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி, பத்திரிகைச் செய்தியொன்றில் இடம் பெற்றிருந்த ஒரு பிழையான மொழிபெயர்ப்பினால் அவரது உள்ளத்தில் தோன்றிய ஓர் இலக்கிய கர்த்தாவைப் பற்றிய கற்பனையைச் சார்ந்ததாக இருந்தது. என்றாலும், டாக்டர் கீரோ தமது அற்புதமான பேச்சு வன்மையைப் புலப்படுத்தும் விதத்தில், அந்தப் பிழையையும் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டு விட்டார்.

''மிஸ்டர் ஷோலகோவ்'' என்று தொடங்கிய டாக்டர் கீரோ இவ்வாறு கூறினார்: ''உங்களுக்கு நோபல் பரிசு வழங்கப் பட்ட தருணத்தில் நீங்கள் யூரல்ஸ் மலைப் பகுதியில் வேட்டையாடிக் கொண்டிருந்தீர்கள். மாஸ்கோ பத்திரிகையொன்றின் தகவலின்படி, அதே நாளில் நீங்கள் தூரத்திலிருந்து வெடித்த ஒரே (!) வேட்டின் மூலம் இரண்டு காட்டு வாத்துக்களை சுட்டுத் தள்ளி விட்டீர்கள்.... ஆயினும் கடந்த ஆண்டில் நோபல் பரிசு பெற்ற வெற்றியாளர்கள் மத்தியில் நீங்கள் ஓர் அதிர் வேட்டு என்ற முறையில், நாங்கள் இன்று உங்களுக்குத் தலை வணங்குகிறோம் என்றால், குறி பார்த்துச் சுடும் திறமையின் இத்தகைய சாதனைகள் பற்றிய பேச்சுக்கும், உங்கள் படைப்புக்கும் சம்பந்தம் உண்டு என்பதே காரணமாகும்.

''உங்களது படைப்பைப் போன்ற ஒரு காவியப் படைப்பானது, மாபெரும் வீச்சோடும் விரிவோடும், சம்பவங்கள் மற்றும் சொல்லாட்சிகளின் புயல் வேகமிக்க, எனினும் கம்பீரமான வெள்ளப் பிரவாகத்தோடும், கருப்பொருளைத் தீர்மானிப்பதில் தன்னம்பிக்கை மிக்க திறமையோடும் எழுதப் பட்டிருக்கக் கூடும்—மேலும், இவையனைத்தின் பயனாகவும் அது என்றுமே மறக்கொணாத ஓர் அருமையான படைப்பாகவும் ஏற்கனவே விளங்கியிருக்கக் கூடும். நாடகத்தன்மை மிக்க சம்பவத்தின் ஜீவன் மிக்க உணர்வையும், கலாபூர்வமான முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு விவரத்தையும் பற்றிய கூர்ந்த காட்சியறிவையும், மனிதனின் வருங்காலம் பற்றிய உணர்ச்சி வேகம் மிக்க பரிவையும் அதில் உருவேற்றுவதும் சாத்தியமாகியிருக்கும்—இவை யாவும் சேர்ந்து அதனை என்றென்றும் நேசிக்கப்பட வேண்டிய படைப்பாகவும் மாற்றியிருக்கும். இந்த

சாத்தியப் பாடுகள் இரண்டையும் ஒன்றுபடுத்துவது, மேதத்துவத்துக்கு—உங்களது மேதத்துவத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். ஒரே வேட்டில் இரண்டு பறவைகளைச் சேர்ந்தாற்போல் சுட்டுத் தள்ளுவது மாதிரி இது மிகமிக அரிதாகத்தான் நிகழ்கிறது. நீங்கள் இரண்டு 'பறவைகளையும்' ஒரே 'கல்லில்' தட்டிவிட்டீர்கள்.

''கலகலத்துச் சரியும் தனது ஸ்தானங்களைத் தன்னம்பிக்கையற்றுத் தற்காத்து நிற்கும் பழைய ஆட்சியையும், ரத்தம் தோய்ந்த ஒவ்வோர் அங்குல நிலத்துக்காகவும் மூர்க்கமாகப் போராடி வரும் புதிய ஆட்சியையும் பற்றிய உங்கள் கதை, மகத்தான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. உலகை ஆள்வது எது என்ற கேள்வி இடையறாது எழுப்பப்படுகிறது. அதற்கு இவ்வாறு பதிலும் அளிக்கப்படுகிறது: இதயம்தான். தனது அன்பையும் கொடூரத்தையும், துயரத்தையும், நம்பிக்கைகளையும், அவமானத்தையும், பெருமிதத்தையும் கொண்ட மனிதனின் இதயம்தான். நமது உலகின் வாழ்வுக்கு நேரும் எல்லா வெற்றிகளும் தோல்விகளும் எங்கிருந்து வருகின்றனவோ அந்த உண்மையான போர்க்களமான மனிதனின் இதயம்தான். இவ்வாறு உங்கள் கலையானது எல்லா எல்லைகளையும் தாண்டிவிடுகிறது; நாங்களும் அதனை ஆழ்ந்த நன்றிப் பெருக்கோடு எங்கள் இதயங்களில் ஏற்றுக் கொள்கிறோம்...''

...இந்த நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் மத்தியில் எழுத்தாளர் ஷோலகோவ் பல இளம் மக்களை—ஸ்டாக்ஹோம் நகர மாணவர்களையும், பழைய பல்கலைக் கழக நகரமான உப்சாலா நகர மாணவர்களையும்—சந்திப்பதற்கும் அவகாசம் தேடிக் கொண்டார். ஸ்லாவோனிக் கல்லூரியிலும், உப்சாலா பல்கலைக் கழகத்திலும் எண்ணூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஷோலகோவைச் சந்திக்கத் திரண்டு வந்தனர். தனிச் சிறப்புமிக்க அந்த சோவியத் எழுத்தாளரின் படைப்புக்களில் மாணவர்களும் சரி, ஆசிரியர்களும் சரி, பேரார்வம் காட்டினர்; அவரிடம் ஏராளமான கேள்விகளைக் கேட்டனர்; சம்பிரதாய ரீதியில் இல்லாத கலகலப்பான பதில்களையும் பெற்றனர். இதன் மூலம் நேய பாவமும், நம்பிக்கையும் பரஸ்பர மதிப்பும் மிக்க ஒரு சூழ்நிலை உடனே ஏற்பட்டு விட்டது; ஷோலகோவுக்கே உரிய மென்மையான நகைச்சுவையினால், உரையாடலுக்கு மிகவும் உளமார்ந்த தன்மையை வழங்கி, அவர் யாரோடு உரையாடுகிறோர் அவர்களது பரிவுணர்ச்சிகளையெல்லாம் எப்போதுமே பெறத் தவறாத நகைச்சுவையினால், இந்தச் சூழ்நிலை மேலும் அதிகரித்தது.

ஐரோப்பாவின் தொன்மையான பல்கலைக் கழகங்களில் மற்றொன்றின் மண்டபத்தில் நிகழ்ந்ததும் எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. ஷோலகோவின் படைப்புக்களில் தத்துவார்த்தப் பிரச்சினைகளுக்கான விடைகளைக் கண்டறியவும், ஒரு மனிதன் தனது வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பது பற்றிய அறிவுரையைப் பெறவும் வேண்டி மாணவர்கள் அங்கு குழுமியிருந்தனர். அந்த எழுத்தாளர் அங்கு ஆன்மிக வடிவில் தான் பிரசன்னமாகியிருந்தார்; என்றாலும் ஒரு விதத்தில் அந்த இளைஞர்கள் அவரோடு உரையாடினர்; அவரிடம் முறையிட்டனர்; வாழ்வின் நாளுவிதமான முக்கியப் பிரச்சினைகளைப் பற்றிய தமது விவாதங்களின்போது வெடித்துக் கிளம்பிய உணர்ச்சி வேகம்மிக்க வாதப் பிரதிவாதங்களில் தமக்கு ஆதரவளிக்குமாறு அவரிடம் கேட்டுக் கொண்டனர்.

இந்த இளம் ஆடவரும் பெண்டிரும் ஜூனுவில், ஸ்லாவோனிக் கல்லூரியில் சந்தித்துப் பேசினர். அவர்கள் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் மிகப் பெரும் பல்கலைக் கழகங்களிலிருந்து, அந்தக் குடியரசு முழுவதிலுமுள்ள மேற்கல்வி நிலையங்கள் மேற்கொண்டு நிறைவேற்றி வந்த பணியைத் தொகுத்துக் காண்பதற்காகக் கூட்டப்பட்டிருந்த ஒரு மாநாட்டில் பங்கெடுப்பதற்காக வந்திருந்தனர். மிக்கேல் ஷோலகோவின் படைப்பில் சோஷலிச எதார்த்தவாதம் என்பதே மாநாட்டின் கருப்பொருளாகும்.

மண்டபம் நிரம்பி வழிந்த இந்தக் கூட்டத்துக்கு ஓர் இளம் மாணவி தலைமை வகித்தார். மூன்று மாணவர்கள் கூட்டாகச் சேர்ந்து தயாரித்திருந்ததும், மாநாட்டில் பங்கு கொள்ள வந்திருந்தோர் அனைவரிடமும் வினியோகிக்கப்பட்டிருந்ததுமான விவாதத்துக்குரிய ஆய்வுரைகளும், மற்றும் இவற்றின் ஆசிரியர்கள் எழுப்பியிருந்த கேள்விகளும் விவாதிக்கப்பட்டன. எல்லா முதுநிலைத் தரங்களைச் சேர்ந்த மாணவர்களும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்திருந்த மாணவர்களும் பேசினர்; அவர்களில் சிலர் பல முறை பேசினர். விவாதம் உருவாகி வளர வளர, மேலும் மேலும் பல நிகழ்காலப் பிரச்சினைகள் உண்மையில் விவாதத்துக்குள் புகுந்து ஊடாடவே தொடங்கி விட்டன.

ஒரு கட்டத்தில் இரண்டு பேச்சாளர்கள் ஒரே சமயத்தில் மேடைமீது தோன்றினர்: இந்த இரு மாணவிகளும் பிரதிநிதித்துவப்படுத்திய கோஷ்டியில் அபிப்பிராயங்கள் மாறுபட்டிருந்தன; எனவே அந்த வேறுபட்ட கருத்தோட்டங்களை எடுத்துரைக்கும் பணி அவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்டிருந்தது.

அந்த மாணவர்களிற் சிலர் ஷோலகோவின் பரிபூரணமாவை கலைத் திறனைத் திறம்பட அலசி ஆராயும் அளவுக்கு, அவரது எதார்த்தவாதத்தின் சாராம்சத்தையோ, மற்றும் சம்பந்தப் பட்ட கலாபூர்வமான, அழகியல் ரீதியான பிரச்சினைகளையோ இன்னும் போதுமான அளவுக்கு, அவற்றை ஆழமாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை. எனவே அவரது கதாபாத்திரங்கள் இடம் பெற்றிருந்த ஸ்தூலமான வரலாற்று ரீதியான சந்தர்ப்பச் சூழ்நிலைகள் பற்றிய பிரச்சினை போன்ற சில பிரச்சினைகள், நமது காலத்தின் தார்மிக மற்றும் அழகியல் தேவைகளின் கண்ணோட் டத்தில் அவர்களது செயல்களும், சிந்தனைப் போக்குகளும் எவ்வாறு இருந்தன என்ற விவாதங்களுக்கு இடம் கொடுத்து, இரண்டாம் பட்சமான ஸ்தானத்தையே பெற்றிருந்தன.

என்றாலும், இந்த உண்மையிலேயே விவாதங்களின் பிரத்தி யேகமான மதிப்பும் அடங்கியிருந்தது. ஷோலகோவின் பாத்திர வடிவங்களுக்கும், மிகவும் பிரபலமான தற்கால ஜெர்மன் எழுத்தாளர்களது பாத்திரங்களுக்கும் நேரிடையான ஒப்பீடுகள் காணப்பட்டன. ஒரு கம்யூனிஸ்ட் தனக்கு அண்டையிலிருப் பவரின்பால் மேற்கொள்ளவேண்டிய பொறுப்புணர்ச்சியைப் பற்றியும் (டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற நாவலில் கிரிகோரி, மெலேகோவுக்கும், மிக்கேல் கோஷிவாயிக்கும் இடையே நிலவும் உறவே இதற்கான ஆரம்பத் தூண்டுகோலாக விளங்கியது), எல்லா வழிகளும் ஒரு மனிதத் தன்மைமிக்க குறிக் கோளையே நோக்கிச் செலுத்தப்படுமாயின் அவை யாவற்றையுமே மனிதத் தன்மை மிக்கதாகத்தான் கருத வேண்டுமா என்பதைப் பற்றியும், சோஷலிசத்தின்கீழ் துன்பியல் பிரச்சினை நிலவுகிறதா என்பதைப் பற்றியும், ஒரு பாத்திரத்தை ''ஆக்க பூர்வமான'' பாத்திரமாக்குவது எது— அந்தப் பாத்திரத்தின் நோக்கங்களும் செயல்களுமா, அல்லது செயல்கள் மட்டும்தானா—என்பது பற்றியும் (இது விஷயத்தில் வாதப் பிரதி வாதங்கள் நகுல்னுவ் பாத்திரத்தைச் சுற்றியே நிகழ்ந்தன), மற்றும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் விவாதம் எழுந்தது.

உண்மையில் இந்த இளம் ஆடவரும், பெண்டிரும் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையே மீண்டும் கண்டு பிடித்து வந்தனர்; ஏற்கெனவே கண்டுணரப்பட்டதையே தாமும் கண்டறிந்து வந்தனர். ஆயினும் பரவாயில்லை. முக்கிய மான விஷயம் என்னவெனில், அவர்களில் ஒவ்வொருவரும் உண்மையைத் தாமாகவே கண்டறியவும், வாழ்க்கைப் பிரச்சினை களுக்குத் தீர்வு காணவும், தமக்காகவும் தமது காலத்தவர்

களுக்காகவும் அவற்றுக்குத் தீர்வு காணவுமே விரும்பினர். ஷோலகோவின் படைப்புக்களை அவர்கள் படித்ததானது, ஓர் உலகக் கண்ணோட்டத்தை உருவாக்குவது போன்ற ஜீவாதார மான பிரச்சினைகளையெல்லாம் பற்றி விவாதிக்கும் உத்வேகத்தை அவர்களது உள்ளத்தில் எழுப்பியது; வாழ்க்கையில் தாம் வகிக்க வேண்டிய ஸ்தானத்தைப் பற்றியும், பிரஜைகள் என்ற முறையில் தமக்குள்ள கடமைகளைப் பற்றியும், ஒரு கம்யூனிச வருங்காலத்துக்காகவும் ஒரு புதிய உலகுக்காகவும் போராடி வரும் மக்கள் போற்றிவரும் தார்மிக, நல்லொழுக்கத் தரங்களை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம்பற்றியும், அது அவர்களைச் சிந்திக்க வைத்தது.

லீப்ஸிகிலுள்ள காரல் மார்க்ஸ் பல்கலைக் கழகம் ஷோல கோவுக்கு வழங்கிய தத்துவவியலில் டாக்டர் என்ற கௌரவப் பட்டச் சான்றிதழை அவரிடம் நேரில் கொடுப்பதற்காக வெஷென்ஸ்காயாவுக்கு வந்திருந்த ஜெர்மன் அறிஞர்கள் அவரிடம் வாசித்தளித்த பாராட்டுப் பத்திரம் பின்வரும் முக்கியத்துவம் வாய்ந்த வாசகத்தோடு முடிவுற்றிருந்தது:

''ஷோலகோவின் படைப்புக்கள் எங்களது மக்களுக்கு, மாணவர்கள் உள்ளிட்ட எங்கள் நாட்டு இளைஞர்களுக்கு ஒரு வற்றாத ஊற்றுப் பெருக்காக மாறியுள்ளன; அவர்கள் அவற்றி லிருந்து அத்தாட்சி பூர்வமான புரட்சிகர உணர்வு, கட்சியை உறுதியோடு பின்பற்றி வரும் உறுதிப்பாடு, குறை காண முடியாத நேர்மை, ஆழமான மனிதத்தன்மை, தமது வாழ்க்கை லட்சியத்துக்குத் தம்மைப் பூரணமாக அர்ப்பணித்துக் கொள்ளும் தன்மை ஆகிய லட்சியங்களைக் கிரகித்துக் கொள் கிறார்கள்.''

இதயத்தின் கட்டளைப்படி

''இளம் எழுத்தாளர்களோடு பணியாற்றும் பொறுப்பை வகித்து வரும் நான், எனது கடமையின் அறைகூவலால் மட்டு மன்றி, எனது இதயத்தின் கட்டளைப்படியும்தான் இந்த மாலை நேரத்தில் உங்களோடு இருக்கிறேன்.''

இவ்வாறுதான் மிக்கேல் ஷோலகோவ் 1969 ஜூலை 2ஆம் தேதியன்று ரஸ்தாவ்-ஆன்-டானிலுள்ள கட்சிக் கல்வி மாளிகையில் தமது பேச்சைத் தொடங்கினார். அவர் இளம் கலைஞர்களுக்கான பல்கேரிய–சோவியத் மன்றத்தின் உறுப்பினர் களுக்கு, அவர்களது, முறையான கூட்டமொன்றில் உரை யாற்றிக் கொண்டிருந்தார். அன்றைய கூட்டத்தின் பொது வான விஷயத் தலைப்பு ''வரலாறு மற்றும் மக்கள் முன்னிலையில்

கலைஞரின் பொறுப்பு'' என்பதாகும். அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோரில் இளம் பல்கேரிய, சோவியத் எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும், கலைஞர்களும், டைரக்டர்களும், ஓவியர்களும், சிற்பிகளும், வரலாற்றாசிரியர்களும், மணைச் சிற்பிகளும், இசைவாணர்களும், மற்றும் ஹங்கேரி, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லோவாகியா ஆகிய நாடுகளிலிருந்து வந்திருந்த அந்த மன்றத்தின் விருந்தினர்களும் இடம் பெற்றிருந்தனர்.

எல்லோரையும் காட்டிலும் இளம் சகாக்களைச் சந்திப்பதில் தாம் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக அவர் கூறினார்; ஏனெனில், இது அவருக்கு இளம் மக்களோடு தொடர்பு கொள்ளவும், அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கண்டறியவும், சமுதாயத்தின் முன் எழுத்தாளனுக்குள்ள பொறுப்பைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதில் அவர்களோடு கூடி நிற்கவும் கூடிய வாய்ப்பை வழங்கியது. சித்தாந்த மோதல்கள் நிகழ்ந்து வரும் உலகில், சமுதாய வாழ்வில் கலைஞன் வகிக்க வேண்டிய பாத்திரம் பற்றியும் கலைஞனின் பணி மற்றும் கடமையைப் பற்றியும் அவர் பேசினார். இலக்கியத் துறையில் நிகழ்ந்து வரும் சில விஷயங்கள் தமக்குக் கவலையளித்ததாகவும், அதே சமயம் ஏனைய விஷயங்கள், மக்களுக்குப் பணியாற்றும், தேச பக்தர்களையும் சர்வ தேசியவாதிகளையும் பயிற்றுவித்து வளர்க்கும், கம்யூனிசத்தைக் கட்டியமைக்க உதவும் ஓர் இலக்கியம் பற்றிய வருங்கால நம்பிக்கையைத் தம்முள் எழுப்பித் தமக்கு உத்வேகம் ஊட்டியதாகவும் அவர் கூறினார். இலக்கியத் துறையில் இளைஞர்களின்மீது ஒரு மோசமான விளைவை ஏற்படுத்தக் கூடிய எதன்பாலும் ஒரு மிதவாதப் போக்கை மேற்கொள்வதை அவர் கண்டித்தார்; கவிதையிலும், வசனத்திலும் தற்போது கேட்கப்பட்டு வரும் புத்தம் புதிய, ஆரோக்கியமான இளம் குரல்களைப் பற்றி அவர் பேசினார். ''கலாசார விற்பன்னர்களே, நீங்கள் யார் பக்கம்?'' என்ற, இன்றும் உடனடியாகப் பிரயோகிக்கக் கூடிய, கார்க்கியின் கேள்வியை அவர் சபையோருக்கு நினைவுபடுத்தினார். தன்மையில் விட்டுக் கொடுக்காததாயினும்கூட, பரிவோடு கூடிய ஆலோசனையும் கூட்டு விவாதமும் கலைஞனுக்குப் பயன்மிக்கதாக இருந்தன; எழுத்தாளன் தன் விஷயத்திலும் தன் கலையின் விஷயத்திலும் மிகமிக எதிர்பார்ப்பவனாக இருந்தாக வேண்டியது அவசியமாகும் என்றார் ஷோலகோவ்; இதனை டான் நதி அமைதியாக ஓடுகிறது, கன்னி நிலம் உழப்பட்டது, அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் ஆகிய தமது நூல்களை எழுதும் போது தமக்கேற்

பட்ட தமது சொந்த அனுபவத்திலிருந்து எடுத்துக் காட்டிய பல உதாரணங்களின்மூலம் அவர் விளக்கினர். இளம் மக்களுக்கு உரையாற்றுகையில், தமது நோக்கமானது அவர்களுக்கு உபதேசம் செய்வதாக இருக்கவில்லை, மாறாக அவர்கள் தமது சிந்தனையில் என்ன கருதியிருந்தார்கள் என்பதைக் கேட்டறிந்து கொள்வதாகவும், தாம் கண்ட முடிவுகளை அவர்களோடு பகிர்ந்து கொள்வதாகவுமே இருந்தது என்பதை அவர் பல முறை வலியுறுத்தினர்.

பிரபலமான பல்கேரியக் கவிஞரான லியுமோமிர் லெவ்சேவ் அந்தக் கூட்டத்தில் கூறிய வாசகங்களும் மறக்கொணாதவை யாகும்:

''இந்தக் கூட்டத்தின் மிக முக்கியமான அம்சம் தங்களைச் சந்திப்பதுதான். இதுவே அதன் மணிமகுடமாகும். உங்களது நூல்கள் கம்யூனிஸ்டுகளின் தலைமுறைகளை, காம்சொமால் உறுப்பினர்களது தலைமுறைகளை, போராளிகளின் தலைமுறை களைப் போஷித்து வளர்த்து வந்துள்ளன; தொடர்ந்து வளர்த் தும் வருகின்றன. மிக முக்கியமான பல்கேரிய எழுத்தாளர்கள் தமது கலைத் திறனைத் தங்களிடமிருந்தே கற்றுக் கொண்டுள்ளனர். அவர்களிற் சிலர் எங்களது விடுதலைப் போராட்டத்தில் அழிந்து பட்டு விட்டனர்; ஏனையோர் எங்கள் நாட்டில் சோஷலிசத்தைக் கட்டியமைப்பதில் தமது வாழ்க்கை முழுவதையுமே அர்ப் பணித்துள்ளனர்; இன்னும் சிலர் உங்களிடமிருந்து கற்றுக் கொண்டு உழைத்து வருகின்றனர். குருடருக்குப் பார்வையும், போர்வீரன் வெற்றி பெறும் விதத்தில் அவனுக்கு வலிமையை யும் வழங்கும் 'ஆயிரம் மந்திரக் கிணறுகள்' பற்றிய பல்கேரிய இதிகாசக் கதை ஒன்று உண்டு. உங்களைச் சந்திப்பதில், அத்தகைய கிணறுகளில் ஒன்றை நாங்கள் எட்டிப்பிடித்து, அதிலிருந்து எங்களது வருங்காலப் படைப்புக்கான வலிமையைப் பெறு வதையே எங்களது நோக்கமாகக் கொண்டிருந்தோம். முக்கியமான பணிகள் எம்மை எதிர் நோக்கியுள்ளன என்பது தெளிவு. அவற்றை நிறைவேற்ற, ஷோலகோவின் உத்வேகம் பெற்ற சத்தியம், ஷோலகோவின் திறமை ஆகியவற்றில் ஓரள வேனும்—அது மிகமிகச் சிறிய அளவாயினும் கூட—எங்களுக்குத் தேவைப்படும்.''

1967 ஜூன் மாதத்தில் சோவியத் யூனியனையும், பிற சோஷலிச நாடுகளையும் சேர்ந்த இளம் எழுத்தாளர்களோடு, ஷோலகோவ் வெஷென்ஸ்காயாவில் நடத்திய உரையாடல் களும் இதே போன்ற சூழ்நிலையில்தான் நிகழ்ந்தன. தற்கால இலக்கியம் பற்றியும், சமுதாய வாழ்க்கையோடு அதற்குள்ள

பிரிக்க முடியாத தொடர்பைப் பற்றியும், நவீன யுகத்தில் இலக்கிய வளர்ச்சியோடு சம்பந்தப்பட்ட முதன்மையான பிரச்சினைகளைப் பற்றியும், கலைஞனின் தார்மிக உருவாக்கம் பற்றியும், மக்கள்முன் அவனுக்குள்ள கடமையைப் பற்றியும் தமது இளம் சகாக்களோடு உரையாடிய சமயத்தில், ஷோலகோவ் இளம் எழுத்தாளர்களை எமது இலக்கியத்தின் நம்பிக்கை எனக் கூறினர்; இளம் எழுத்தாளர்களுக்கும், முது பெரும் எழுத்தாளர்களுக்கும் இடையே படைப்பாக்கத் தொடர்புகள் பலப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். சோவியத் இலக்கியத்தின் தலைசிறந்த மரபுகளை வழுவாது, பிறழாது பின்பற்றுமாறும், முதலாளித்துவ சித்தாந்தத்தின் எந்தவொரு வெளிப்பாடுகளின்பாலும் விட்டுக் கொடுக்காத போக்கை மேற்கொள்ளுமாறும் அவர் வளர்ந்து வரும் சோவியத் எழுத்தாளர் பரம்பரைக்கு அறைகூவல் விடுத்தார்; மேலும், சமுதாயத்தின் முன்னுள் இடையறாது வளர்ந்தோங்கி வரும் கலைஞனின் பொறுப்பைக் குறித்தும், கட்சி மற்றும் மக்களின் நலன்களின்பால் சோவியத் எழுத்தாளர் கொள்ளும் ஆழ்ந்த ஈடுபாட்டைக் குறித்தும் அவர் பேசினர்.

பல்வேறு படைப்பாக்கப் பிரச்சினைகளைக் குறித்து அபிப் பிராயங்களைத் தாராளமாகப் பரிமாறிக் கொண்டிருந்த சமயத்தில், தவறுகளை இழைப்பதற்கு எழுத்தாளனுக்குள்ள உரிமை பற்றிய பிரச்சினையின்பால் உரையாடல் திரும்பியது. ஷோலகோவ் இந்தப் பிரச்சினையின்பால் பிரத்தியேகமான கவனத்தைச் செலுத்தினர்:

''எந்த ஓர் எழுத்தாளரும்—அவரது கீர்த்தி அல்லது வயது எதுவாக இருந்த போதிலும்—அவர் தமக்குத்தாமே ஒரு சலுகை மிக்க ஸ்தானத்தைக் கோரக் கூடாது என்றே நான் கருதுகிறேன். 'தவறுகள் இழைப்பதற்கான சுதந்திரம்' பற்றிய விஷயத்தில், கூட்டுப் பண்ணைக் கோஷ்டியின் தலைவர் ஒருவர் ஒரு தவறு புரிந்தால், அந்தப் பண்ணையின் தலைவர், எப்போதுமே அவரைத் திருத்திச் சரியான பாதையில் செலுத்தி விடுவார். இது ஒரு வட்டாரத் தன்மை வாய்ந்த தவறுகும்; இது ஏனைய வட்டார மக்களுக்குத் தீங்கு இழைக்காது. வெளியிடப்பட்ட ஒரு நூலில் ஒரு தவற்றைப் புரிந்து விடும் எழுத்தாளன், ஆயிரக் கணக்கான வாசகர்களைத் தவறான வழியில் இட்டுச் சென்று விடுகிறான்; நமது தொழிலின் ஆபத்து இதில்தான் அடங்கி யுள்ளது. ஆன்ம சுதந்திரம், படைப்பாக்கச் சுதந்திரம் ஆகியவை யெல்லாம் மிகவும் நல்லவைதாம்; என்றாலும், தயவு செய்து, நாம் தவறுகளைக் குறித்து மிகவும் கவனமாக இருந்து

வருவோமாக. நம்மில் ஒவ்வொருவரது நூல்களும் படிக்கப்படுகின்றன; நம்மில் ஒவ்வொருவரும், இங்கு யாரோ ஒருவர் குறிப்பிட்டது போல் 'உலகளாவிய வாசகர் கூட்டத்தை'ப் பெற்றிரா விட்டாலும், மிகவும் கவனம் மிக்க, நம்மிடம் மிகவும் எதிர்பார்க்கின்ற சில ஆயிரக்கணக்கான வாசகர்களை யேனும் நிச்சயமாகப் பெற்றிருக்கிறோம். அமைதியற்ற, நிச்சய தீர்க்கமற்ற ஆன்மாக்களை எழுத்தாளர்கள் மத்தியில் மட்டுமே காணலாம் என்பதில்லை; ஒரு தவறு—அது மிகவும் முக்கியமான தாக இருந்தால், வேதனைமிக்க சிந்தனைகளிலிருந்து எழுந்து, அதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட தனிநபர் விஷயத்தில் அது ஓரளவுக்கு நியாயமான தவறுகவும் இருந்தாலும்கூட—ஏனைய ஆயிரக்கணக்கான மக்களது கண்ணோட்டங்களிலும், ஆயிரக் கணக்கான வாழ்க்கைகளிலும், ஆயிரக்கணக்கான தவறுகள் ஏற்பட வழி வகுக்கிறது. ஒரு தவற்றை இழைக்கக் கூடிய தார்மிக உரிமையைக் குறித்து நாம் பேசுகிறோம் என்றால், அறுவைச் சிகிச்சை புரியும் டாக்டர் ஒருவரும்கூட, ஓர் அறுவைச் சிகிச்சையைப் புரியும்போது அத்தகைய உரிமையைப் பெற்றிருக்கக் கூடும்: அதனால் ஒரே ஒரு நபர்தான் பாதிக்கப் படுவார். ஆனால் நாம் குறிப்பிட்ட விஷயங்களை வைத்துக் கொண்டு, 'அறுவைச் சிகிச்சை' புரியும்போது ஒரு தவறினைத் தான், அத்தத் தவறு பரவலாகவும் இழைக்கப்பட்டால், அத்தகைய தவறு—நான் திரும்பவும் கூறுகிறேன்—ஆயிரம் மடங்கு மிகவும் ஆபத்தானதாகும். நாம் இரு மடங்கு எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்; ஏனையோர் பாதிக்கப்படாமலிருப்பதற் காக நாம் நமது அமைதியற்ற ஆன்மாக்களைச் சில சமயங்களில் நசுக்கித் தள்ளி விடவும் வேண்டும்.''

1969 மார்ச் மாத இறுதியில் மாஸ்கோவில் நடைபெற்ற இளம் எழுத்தாளர்களின் ஐந்தாவது அகில—யூனியன் காங்கிரஸ் தனது வேலையை முடித்துக் கொண்டது. வெளிநாட்டுப் பயண மொன்றை முடித்துத் திரும்பிய பின்னர், அந்நகரின் வழியாகச் சென்று கொண்டிருந்த ஷோலகோவ், மாநாட்டில் பங்கெடுத்த வர்களிற் சிலரைத் தம்மை வந்து காணுமாறு அழைத்திருந்தார்; அவர்கள் மாநாட்டின் பணியைப் பற்றியும் அதன் பல்வேறு கூட்டங்கள், கருத்தரங்குகள் ஆகியவை பற்றியும் அவரோடு விவாதித்தனர்; அது தமது மனத்தில் ஏற்படுத்தியிருந்த எண்ணங்களைப் பற்றியும் அவரிடம் கூறினர். ஷோலகோவ் மாநாட்டின் நினைவுக் குறிப்பேட்டில் இவ்வாறு எழுதினார்: ''மாநாட்டின் வெற்றியைக் கண்டு நான் பெருமகிழ்ச்சியடை

கிறேன். எப்போதும்போல் நான் இளம் மக்கள் சாதனையையும், துணிவாற்றலையும், வெற்றியையும் பெறுமாறு வாழ்த்துகிறேன்.''

இந்தச் சந்திப்பின்போது உரையாடல் வாழ்வின் பல பிரச்சினைகளைப் பற்றியும், இளம் எழுத்தாளர்களும் கவிஞர்களும் எந்தப் படைப்பாக்க மார்க்கங்களில் உருவாகி வந்தார்களோ அந்த மார்க்கங்களைப் பற்றியும் மீண்டும் திரும்பியது. இந்தப் பணிக்கே அவர்கள் தம்மை முழுக்க முழுக்க அர்ப்பணித்துக் கொள்ளக் கூடாது என்று ஷோலகோவ் அவர்களை எச்சரித்தார்; எந்தவோர் உண்மையான கலைஞனும் வாழ்க்கையிலிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள முடியாது என்பதை அவர்களுக்கு நினைவூட்டினார். எழுத்துக்கலையின் ஒவ்வோர் அம்சத்திலும் திறமை பெற வேண்டியதன், ஒரு படைப்பில் ஒவ்வொரு வார்த்தையையும் செம்மையுறச் செய்ய விடாப்பிடியோடு போராட வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

ஷோலகோவுக்கும் இளம் எழுத்தாளர்களுக்கும் நடைபெறும் உரையாடல்கள் இலக்கியத்தின் உடனடியான பிரச்சினைகளைச் சுற்றியே நடைபெறுகின்றன; மக்களது வாழ்க்கையில் கலைஞனுக்குள்ள ஸ்தானமும், நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் அவனுக்குள்ள கடமையும் எப்போதுமே விவாதிக்கப்படுகின்றன. ஆயினும் பிற சந்திப்புக்களின்போது, உதாரணமாக, இளம் ஆலைத் தொழிலாளர்கள் அல்லது விவசாயிகள், விண்வெளி வீரர்கள், போர்வீரர்கள், மாலுமிகள், மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசும்போதும் அல்லது பள்ளிப் பிள்ளைகளோடு அவர் நடத்தும் கடிதப் போக்குவரத்துக்களின் போதும் எழுப்பப்படும் பிரச்சினைகளும், தொட்டுக் காட்டப்படும் மானிட நடவடிக்கைத் துறைகளும் முற்றிலும் வேறுனவையே.

ஆயினும், நேர்முகமாகவோ அல்லது அச்சடித்த பக்கங்களின் மூலமாகவோ நடைபெறும் இந்தச் சந்திப்புக்கள் யாவும், இளைய தலைமுறையின் வருங்காலத்தின் பக்கமே, வருங்காலத்தின் பக்கமே, தமது சொந்த மக்களின் வருங்காலம் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுவரும் இன்றைய நிகழ்காலத்தின் பக்கமே எப்போதும் தமது சிந்தனைகளைச் செலுத்திவரும் ஒரு மாபெரும் எழுத்தாளரின், பிரஜையின் ''இதயத்தின் கட்டளைப்படியே'' நிகழ்கின்றன.

இந்தச் சமயத்தில், டான் நதி அமைதியாக ஓடுகிறது, கன்னி நிலம் உழப்பட்டது ஆகிய நவீனங்களை எழுதிய அந்த எழுத்தாளரின் படைப்பாக்க வாழ்க்கையிலிருந்து சில முக்கியமான அம்சங்களைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும் எனத்

தோன்றுகிறது. ஷோலகோவ் சிறு நடைச் சித்திரங்களை எழுதும் எழுத்தாளராகவே இலக்கியத் துறையில் பிரவேசித்தார். இவற்றைத் தொடர்ந்து சிறு கதைகள் வெளிவந்தன; இவற்றை அவரது மாபெரும் நாவல்களுக்கான ஒரு பீடிகை என்றே குறிப்பிடலாம்; இவை முதன்முதலில் சோவியத் இளைஞர் வெளியீடுகளில் பிரசுரமாயின. மாஸ்கோலிருந்து வெளிவந்த இளைஞர் செய்தித்தாளான யுனெஷெஸ்காயா பிராவ்தா (பின்னர் இதற்கு மொலோதாய் லெனினிஸ்ட் என வேறு பெயர் இடப் பட்டது), ஜூர்னல் கிரெஸ்தியான்ஸ்கோயி மொலோத்யோஷி, மற்றும் கம்சொமோலியா என்ற சஞ்சிகை ஆகியவற்றுக்காகப் பணியாற்றுவதன் மூலமே ஷோலகோவ் தமது எழுத்துத் தொழிலைத் தொடங்கினார். இளைஞர் படை எனப் பெயர் பெற்றிருந்த எழுத்தாளர் கோஷ்டி அவ்வப்போது வெளியீட்டு வந்த ஒரு கலை இலக்கியத் தொகுதிக்கும் அவர் எழுதி வந்தார். அவரது படைப்புக்கள் காம்சொமால்ஸ்காயா பிராவ்தாவிலும் ஸ்மேனு சஞ்சிகையிலும் வெளிவந்தன.

இளைஞர்களுக்கான வெளியீடுகளோடும், வெளியீட்டாளர்களோடும் தம்மைப் பிணைத்துள்ள நெருங்கிய தொடர்புகளுக்கு ஷோலகோவ் என்றும் விசுவாசமாக இருந்து வந்திருக்கிறார். 1962-ல் மொலோதயா கவார்தியா (இளைஞர் படை) பதிப்பகம் தனது நாற்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது; அப்போது வந்த வாழ்த்துச் செய்திகளில் ஷோலகோவிடமிருந்து வந்த பின்வரும் தந்தியும் இடம் பெற்றிருந்தது: ''இந்த உன்னதமான கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவொட்டாது வேலைப் பளு என்னைத் தடுப்பது குறித்து நான் ஆழ்ந்த வருத்தமடைகிறேன். உங்கள் பணி நமது இளைஞர்களை வளர்த்து உருவாக்கும் மிகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும்; இந்தப் பணிக்காக, மூத்த தலைமுறையைச் சேர்ந்த வாசகர்களும் எழுத்தாளர்களுமான நாங்கள் உங்களை உளமார்ந்த அன்போடு போற்றுகிறோம்; உங்களை மிகவுயர்வாக மதிப்பிடுகிறோம்; உங்களை ஆழமாக மதிக்கிறோம். வாழ்க்கையில் மகிழ்ச்சியும், வேலையில் வெற்றியும் பெற, உங்கள் ஒவ்வொருவருக்கும் சொந்த முறையில் நான் தெரிவிக்கும் நல்வாழ்த்துக்களையும் மனமுவந்து ஏற்றுக் கொள்ளுங்கள். இங்ஙனம், வேண்டா வெறுப்போடு முதுமை எய்திவரும் உங்களது இளம்படைவீரன் மிக்கேல் ஷோலகோவ்.'' இந்தப் பதிப்பகத்தின் பார்வையாளர் ஏட்டில் அடுத்த ஆண்டில் அவர் எழுதி வைத்த பின்வரும் குறிப்பு மூத்த தலைமுறையினருக்கும் இளைய தலைமுறையினருக்கும் இடையே உள்ள பிரிக்கமுடியாத தொடர்புகள் மற்றும் மொலோதயா

கவார்தியாவின் மரபுகள் ஆகியவற்றின் தொடர்ச்சியை நவீன மாக வலியுறுத்துகிறது: ''மொலோதயா கவார்தியாவின் இளம் நூலாசிரியர்களோடு சேர்ந்திருப்பதில் நான் எப்போதுமே மகிழ்ச்சியடைகிறேன்! நானே மேலும் இளமை பெற்று வருவது போல் உணர்கிறேன்...''

தமது புத்தகங்கள் மற்றும் தாம் உயிரைப் பெய்து உருவாக்கி யுள்ள கதாபாத்திரங்கள் ஆகியவற்றின் மூலமாக மட்டுமல் லாமல், அபிப்பிராயங்களை நேருக்குநேர் பரிமாறிக் கொள்ளும் பரிவர்த்தனைகளின் மூலமும், தமது இளம் வாசகர்களோடு நேர் முகமாக உரையாட ஷோலகோவ் தயாராக இருப்பதே, இந்த நாணுவிதமான, எண்ணற்ற சந்திப்புக்களின் முக்கியமான அம்சமாகும்.

ஷோலகோவுடன் நடைபெறும் இந்தச் சந்திப்புக்களில், இளம் எழுத்தாளர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், போர் வீரர்கள், ஏன் எங்களது புகழ்பெற்ற சோவியத் விண்வெளி வீரர்கள் ஆகிய எல்லா விதமான நபர்களுமே கலந்து கொள் கின்றனர். அமரர் யூரி ககாரினும், போரிஸ் வோலினேவும், வெஷென்ஸ்காயாவில் ஷோலகோவின் விருந்தினர்களாக இருந்துள்ளனர்.

பண்டிதத்தனமான அல்லது உபதேசம் செய்கின்ற தொனி யைக் கடைப்பிடிப்பதும் அதனைப் ''பற்றிப் பிடித்துக் கொள் வதும்'', ஷோலகோவுக்குக் கட்டோடு பிடிக்காது; அவர் தம்மிடம் நேரடியாகக் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிப் பதையே பொதுவாக விரும்புகிறார். தமக்கும் தம்முன் இருப்போ ருக்கும் இடையே ஒரு துடிப்புமிக்க கலந்துரையாடலைத் தூண்டி விடுவதையே அவர் விரும்புகிறார். தமது எண்ணங்களை முறைப் படி தங்குதடையற்று வெளியிடும் முறையானது, அவரது வியா சங்கள் மற்றும் செய்தித்தாள் கட்டுரைகள் அல்லது பெரிய சபையோரின் முன்னால் ஆற்றப்படும் சொற்பொழிவுகள் ஆகிய வற்றுக்கு மட்டுமே கையாளப்பட்டு வருகிறது.

போராடும் மனிதனே மனிதாபிமானி

ஷோலகோவின் எழுத்துக்கள் அனைத்திலும் மனிதனின் நன்மைக்கான போராட்டம் பற்றிய கருத்தும் மற்றும் கம்யூனிசக் கருத்துக்களுமே குடிகொண்டுள்ளன. அவரது கதைப் படைப் புக்கள் மற்றும் அவர் உருவாக்கியுள்ள உலக நடப்புப் பற்றிய கட்டுரைகள் ஆகிய இரண்டின் விஷயத்திலும் இதுவே உண்மை யாகும். இந்தத் தொகுதி ஷோலகோவின் சொற்பொழிவுகள் மற்றும் வானொலி உரைகள் ஆகியவை உட்பட, மேற்குறிப்

பிட்டவற்றில் இரண்டாம் பிரிவில் அவர் எழுதிய அடிப்படை யான எழுத்துக்களைத் தொகுத்து வழங்குகிறது.

1931-ல் அவர் பிராவ்தாவில் ''டான் நதியின் வடகரையின் வழியாக'' என்ற தமது கட்டுரையை வெளியிட்டார்; அதில் அவர் பண்ணைகளை எதிர்நோக்கி நின்ற அதியவசரமான பணிகளைக் குறித்து அக்கறையோடும் ஆழ்ந்த விஷய ஞானத்தோடும் எழுதியிருந்தார்; கூட்டுப் பண்ணை நிர்வாகத்தில் திறமைக்கு நேரும் இடையூறுகளையும் மற்றும் தவறுகளையும் அதில் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

''எழுத்தாளர் மற்றும் விமர்சகரின் நேர்மையான பணிக்காக'' என்ற கட்டுரை (1934) இலக்கியப் பணியில் நிகழ்ந்து வந்த உதவாக்கரைப் போக்குக்கு எதிரானதாக இருந்தது. பான்ஃபெ ரோவின் நூல்களில் பயன்படுத்தப் பட்டிருந்த பாஷை சம்பந்த மாக கார்க்கி வெளியிட்ட கண்டன விமர்சனத்தால் வெடித்த காரசாரமான வாக்குவாதத்தில், ஷோலகோவ் பான்ஃபெரோ வோடும் செராஃபிமோவிச்சோடும் கடுமையாக வாதிட்டும், குறிப்பிட்ட கும்பல்களோடு தாம் கொண்டிருந்த பரிவுணர்ச்சியின் சாயல்களைத் தாங்கிய கருத்துக்களைக் கொண்ட அந்த இலக்கிய விமர்சகர்களை கண்டனம் செய்தும், கார்க்கியின் பக்கம் உறுதியோடு நின்றார்.

டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற நாவலின் ஆங்கிலப் பதிப்புக்கு அவர் எழுதிய முன்னுரையும் வாதிடும் தன்மை படைத்ததேயாகும். அதில் ஷோலகோவ் ஏற்கெனவே உலகப் புகழ் பெற்றுவிட்ட இந்த நாவல், மற்றும் தமது புதிய படைப்பான கன்னி நிலம் உழப்பட்டது ஆகியவற்றின் அடிப் படைக் கருத்தை விளக்குகிறார்; உள்நோக்கங் கொண்ட அயல்நாட்டு வாசகர்கள் மற்றும் விமர்சகர்கள் மத்தியில் அவரது படைப்பைப் பற்றி அப்போது நிலவி வந்த தவறான வியாக்கியானத்தை அவர் திருத்துகிறார். டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற நாவல் சம்பந்தமாக, அவர் ''முதல் உலக யுத்தம் மற்றும் புரட்சி ஆகியவற்றின் விளைவாக வாழ்க்கையிலும், அன்றாட நடவடிக்கைகளிலும், மனித மனோபாவத்திலும் நிகழ்ந்துள்ள பிரம்மாண்டமான மாற் றங்களை''ப் பற்றி எழுதினார்; ''இரு போர்களின் போதும் (முதல் உலக யுத்தம்; உள்நாட்டு யுத்தம்) புரட்சியின் போதும் வாழ்ந்த டான் பிரதேச மக்கள் தொகையின் பல்வேறு சமூகப் பகுதியினரையும் காட்டுவதும்'', ''...1914-க்கும் 1921-க்கும் இடையே நிகழ்ந்த சம்பவங்களின் வலிமைமிக்க சுழுவளிக்குள் சிக்கிய தனிநபர்களின் துன்ப மயமான வாழ்க்கையை இனம்

கண்டறிவதுமே'' தமது பணியாக இருந்தது என்று அவர் எழுதினர்.

1934–ல் அகில–யூனியன் எழுத்தாளர் காங்கிரசுக்கு ஒரு மாதத்துக்குப் பின்னர், ராஸ்தாவ்-ஆன்-டானில் ஆலைத் தொழிலாளர்களும் ரயில்வேத் தொழிலாளர்களும் கூடியிருந்த ஒரு கூட்டத்தில், பாட்டாளி வர்க்க லட்சியத்தின் ஒரு பகுதி என்ற முறையில் இலக்கியம் என்பதுபற்றி ஷோலகோவ் ஒரு முக்கியமான உரையை ஆற்றினர்.

இதனையடுத்து, கூட்டுப்பண்ணை விவசாயியின் ஒட்டுமொத்த மான கல்வித்தரத்தைத் தொழிலாளியின் கல்வித்தரத்துக்கு உயர்த்த வேண்டுமெனக் கோரும் ஒரு கட்டுரையையும், உள் நாட்டு யுத்தத்தின்போது பொத்குஷ் செவ்கா பண்ணை வீட்டையும், அந்தப் பிரதேசத்தில் நிறுவப்பட்ட கூட்டுப் பண்ணையின் மையமாக விளங்கிய அதன் மக்களையும் பற்றிய வீரஞ்செறிந்த கதையைக் கூறும் மற்றொரு கட்டுரையையும், அதன்பின் நிக்கோலாய் ஆஸ்த்ரோவ்ஸ்கி மற்றும் சுலெய்மான் ஸ்தால்ஸ்கி ஆகியோரின் நினைவைப் போற்றும் விதத்தில் எழுதப்பட்ட இரண்டு கட்டுரைகளையும் அவர் எழுதினர். மாக்சிம் கார்க்கியின் மரணத்தின்போது ஷோலகோவ் மாணவர்களும் ஆசிரியர்களும் அடங்கிய ஒரு கூட்டத்தில் பேசினர்.

சுப்ரீம் சோவியத்தின் பிரதிநிதி என்ற முறையில் தாம் ஆற்றிய உரைகளில், தாயகத்தின்பால் கொள்வதில் எது உண்மையான அன்பு, எது போலியான அன்பு என்பதைப் பற்றியும், மனிதர்களை அவர்களது சொல்லைக் கொண்டல்லாமல், அவர்களது செயல்களைக் கொண்டே சோதித்துப் பார்க்கும் வரலாற்றைப் பற்றியும், டான் கோஸாக்குகளின் வாழ்க்கையையும் சோவியத் தேசபக்தியையும் பற்றியும் ஷோலகோவ் கூறுகிறார்.

ஏ. எஸ். செராஃபிமோவிச்சின் எழுபத்தைந்தாவது பிறந்த நாள் விழாவின்போது அவர் எழுதிய பாசமும் மதிப்பும் மிக்க பின்வரும் வாசகங்கள் ஷோலகோவின் மனப்போக்கைப் பெரிதும் சுட்டிக் காட்டக் கூடியவையாகும்: ''இளம் எழுத் தாளர்களான நாங்கள் எந்த எழுத்தாளர்களிடமிருந்து கற்றுக் கொண்டோமோ, அந்த எழுத்தாளர்களது பரம்பரையைச் சேர்ந் தவர் செராஃபிமோவிச். நான் சொந்த முறையில் அவருக்குப் பெரிதும் கடன்பட்டிருக்கிறேன்; ஏனெனில் எனது இலக்கிய வாழ் வின் தொடக்கத்தில் எனக்கு முதன்முதலில் ஆதரவும் ஊக்கமும் அளித்து என்னை ஓர்எழுத்தாளனாக அங்கீகரித்தவர் அவரேயாகும்.''

கட்சியின் வழிகாட்டலின்படி செயல்பட்ட காம்சொமால் இளைஞர்கள் உள்நாட்டு யுத்தத்தில் எதிரியை முறியடித்தனர் என்றும், கூட்டுப் பண்ணைகளை நிறுவப் போராடினர் என்றும், சோஷலிசப் போட்டியின் பதாகையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, அவர்கள் சோவியத் தொழில்துறையைக் கட்டியமைத்து வந்தோரின் முன்னணிப் படையில் இடம் பெற்றிருந்தனர் என்றும், இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தின் இருபதாவது ஆண்டுவிழாவின்போது ஷோலகோவ் எழுதினார். போல்ஷிவிஸத்தின் வித்துக்கள் வளமான பூமியில் விழுந்துள்ளன என்று எழுதினார் அவர்.

மிகவும் அண்மையில் நடந்த ஆண்டு விழா, வெஷென்ஸ்காயாவிலுள்ள இளம் கோஸாக் கூட்டுப் பண்ணை விவசாயிகளது நாடக அரங்கு தனது இரண்டாவது ஜென்ம தினத்தைக் கொண்டாடியபோது நிகழ்ந்தது. ஷோலகோவ் அப்போது அந்த நாடக அரங்கைக் குறித்து, அது டான் நதிக்கரைக் கிராமமொன்றில் ஏற்றிவைக்கப்பட்ட ''பிரகாசமான கலைச் சுடர்'' என்றும், கலையானது பரந்து பட்ட வெகுஜனங்களுக்கு மத்தியில் மேலும் ஆழமாக ஊடுருவும் அளவுக்கு அந்த ஜோதியானது அந்தப் பிரதேசம் முழுவதிலும் ஒளிபரப்ப வேண்டும் என்றும் பேசினார்.

உலக நடப்பைப் பற்றிக் கூறுபவர் என்ற முறையில் ஷோலகோவினது நடவடிக்கையின் முதற் கால கட்டத்தின் தர்க்க ரீதியான முடிவாக, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 18ஆவது காங்கிரசில் அவர் ஆற்றிய பிரபலமான உரை அமைந்தது. அங்கு அவர் பிரதிநிதிகளுக்கு சோவியத் யூனியனது சோதர தேசியக் குடியரசுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களின் பணியைக் குறித்துப் பேசினார். தேசிய எழுத்தாளர்களின் புதிய குரல்கள் ரஷ்ய இலக்கியப் பிரவாகத்தோடு ஒன்று கலந்து, அதனை வளப்படுத்தி, அதனை உண்மையிலேயே சகல சோவியத் மக்களின் படைப்பாகவும் ஆக்கியுள்ளன என்றார் ஷோலகோவ். அவர் எடுத்துக் காட்டிய உதாரணங்களில் ''தமது எளிமையால் உள்ளத்தை அத்தனை தூரம் கவரும்'' ஜாம்புல்லின் கவிதைகளும், ''ஜார்ஜியக் கவிதைகளின் மயக்கும் இனிமை''யும், சுலெய்மான் ஸ்தால்ஸ்கியின் ''புதுமையான, இனிய நாதமிக்க பாடல்வரிகளும்'' இடம் பெற்றிருந்தன, இதன்பின் அவர் சோவியத் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் உள்ள உறவுகளைக் குறித்து இவ்வாறு கூறினார்:

''நமது கலையின்மூலம் எந்த மக்களுக்குப் பணி புரிகிறோமோ அந்த மக்கள், நம்மைப் பற்றிய தமது அபிப்பிரா

யத்தைத் தெரிவிக்க என்றுமே தயங்குவதில்லை. நாம் விமர்சிக்கப் படுகிறோம்; அவசியமானபோது கண்டிக்கப் படுகிறோம். நாம் தோல்வியைச் சந்திக்கும்போது ஆதரவு காட்டப்படுகிறோம்; நாம் பாராட்டுக்குத் தகுதியாகும்போது பாராட்டப் படுகிறோம்; நம்மில் ஒவ்வொருவரும் மக்களின் வழி காட்டும் அன்பு கனிந்த கரத்தை எப்போதும் உணர்ந்தே இருக்கிறோம்.''

கட்சியால் பேணி வளர்க்கப்பட்ட சோவியத் அறிவுத் துறையினரின் முதல் இளம் குருத்துக்கள் என்ற முறையில், ஒரு கட்சிக் காங்கிரஸில் முதன் முறையாகப் பங்கெடுத்த தம்மைக் குறித்தும் மற்றும் ஏனைய பல பிரதிநிதிகளைக் குறித்தும் ஷோலகோவ் பெருமிதத்தோடு பேசினார். ஏற்கனவே கலாசாரத்தைத் தமது மற்றோர் இயல்பாக மாற்றிக் கொண்டு விட்ட லட்சோப லட்சக் கணக்கான நபர்கள் இவர்களைத் தொடர்ந்து வருவார்கள் என்று கூறினார் அவர்.

அந்தக் காலத்தில் சோவியத் சமுதாயத்தின் தன்மையை எடுத்துக் காட்டி வந்த துரிதமான முன்னேற்றம், மற்றும் கம்யூனிச நிர்மாணத்தில் மேன்மேலும் பெற்று வந்த சாதனைகள் ஆகியவற்றினால் ஏற்பட்டிருந்த மகிழ்ச்சிகரமான உணர்வின் மீது, நெருங்கி வந்து கொண்டிருந்த உலகப் போர் ஒரு கரு நிழலைப் பரப்பியது. அது 1939ஆம் ஆண்டு. அந்த ஆண்டில் காங்கிரஸில் ஷோலகோவ் கூறிய பின்வரும் வாசகங்கள் மக்கள் நினைவரங்கில் ஒரு சபதம் போல் ஒலித்தன:

''சோவியத் எழுத்தாளர்கள் உணர்ச்சி மேலீடு மிக்க மேற்கு-ஐரோப்பிய அமைதிவாதிகளின் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதை முற்றிலும் வெளிப்படையாகக் கூறியாக வேண்டும்...எதிரி நமது நாட்டைத் தாக்கினால், சோவியத் எழுத்தாளர்களான நாம் நமது பேனாக்களைக் கீழே வைத்து விட்டு, கட்சி மற்றும் அரசாங்கத்தின் அறை கூவலுக்குச் செவி சாய்த்து வேறோர் ஆயுதத்தைக் கையில் ஏந்துவோம்...செஞ்சேனையின் அணிகளில், அதன் மகோன்னதமான செம்பதாகைளின்கீழ், நமக்கு முன்னால் எவருமே இதுவரை செய்திராத விதத்தில் நாம் எதிரியை அடித்து நொறுக்குவோம்...எதிரியை முறியடித்த பின்னால், நாம் அதனை எப்படிச் செய்து முடித்தோம் என்பதை வருணிக்கும் புத்தகங்களை நாம் எழுதுவோம். இந்தப் புத்தகங்கள் நமது மக்களுக்கு ஆற்றும் சேவையாக விளங்கும்; எஞ்சி மிஞ்சியுள்ள ஆக்கிரமிப்பாளர்கள் எவரேனும் இருந்தால் அவர்களுக்கும் அவை ஓர் எச்சரிக்கையாக இருக்கும்.''

இவை யாவும் உண்மையாயின.

ஷோலகோவின் பேனுவுக்குப் பதிலாக மற்றோர் ஆயுதம் இடம் பெற்றது. எனினும் அந்தப் பேனுவும் சோம்பிக் கிடந்து விடவில்லை. யுத்த ஆண்டுகளின்போது ஷோலகோவ் எழுதிய செய்தித்தாள் நடைச் சித்திரங்களும், உலக நடப்புப் பற்றிய கட்டுரைகளும் மற்றும் புத்தகங்களும் எங்களது மக்களுக்கு நன்கு பயன்பட்டன; அதேபோல் அவை இரண்டாம் உலகப் போரைத் தொடக்கி வைத்தவர்களுக்கு நேர்ந்த கேவலமான அவலநிலையை மறந்துவிட்டு, ஒரு புதிய போரைத் தொடங்கக் கூடிய எவருக்கும் ஓர் எச்சரிக்கையாகவும், ஒரு கோரமான நினைவுக் குறிப்பாகவும் விளங்கின.

1941 ஜூன் 26 அன்று **போல்ஷிவிஸ்த்ஸ்கி டான்** என்ற செய்தித்தாள், போர்முனைக்குச் செல்லும் கோஸாக் படைப் பிரிவுகளுக்கு, ஷோலகோவின் வாசகங்களை மேற்கோள் காட்டி யிருந்தது. ஜூன் 24 ஆம் தேதியன்று, எழுத்தாளரும் தேச பக்தருமான ஷோலகோவ் தாயகத்தின் அறைகூவலுக்குச் செவி சாய்த்து ஆயுதம் ஏந்திய தமது நாட்டு மக்களுக்கு, வரலாறு அவர்களுக்குச் சொத்தாக விட்டுச் சென்றுள்ள வீரமிக்க, வெற்றி விஜய மரபுகளை நினைவூட்டியிருந்தார். தற்காப்புத்துறை மக்கள் கமிஸார் அலுவலகத்துக்குத் தாம் அனுப்பியிருந்த ஒரு தந்தியைப் பற்றியும் அவர் அவர்களுக்குக் கூறியிருந்தார். அந்த தந்தியில் அவர் தமக்களிக்கப்பட்டிருந்த அரசாங்கப் பரிசைத் தாம் தற்காப்பு நிதிக்கு நன்கொடையாக வழங்குவதாகவும், தமது கடைசிச் சொட்டு ரத்தம் இருக்கும் வரையிலும் சோஷலிசத் தாயகத்தைப் பாதுகாப்பதற்காக, தொழிலாளர் களையும் விவசாயிகளையும் கொண்ட செஞ்சேனை அணிகளிற் சேர்வதற்குத் தாம் எந்த நேரத்திலும் தயாராயிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

1941 ஜூலை 4 அன்று பிராவ்தாவில் வெளிவந்த **''டான் பிரதேசம் பற்றி''** என்ற கட்டுரையின் முடிவுரை, உலக நடப்புப் பற்றிய ஷோலகோவின் எழுத்துக்களில் நெடுங்காலமாகவே மேலோங்கி நின்று வந்துள்ள கருத்தைத் தொகுத்துக் கூறியது; ''டான் கோஸாக்குகளின் இதயங்களில் இரண்டு உணர்ச்சிகள் வாழ்ந்து வருகின்றன: தமது தாயகத்தின்பால் அன்பு, நாஜிப் படையெடுப்பாளர்கள்மீது பகைமை என்பனவே அவை. அவர்களது அன்பு என்றென்றும் வாழ்ந்து வரும்; ஆயினும் அவர்களது பகைமையுணர்வு எதிரி முற்றிலும் முறியடிக்கப்படும் வரையிலும் இருந்து வரட்டும்.''

போர் அப்போதுதான் தொடங்கியிருந்தது; என்றாலும் அந்த ஆரம்ப நாட்களிலும்கூட ஷோலகோவின் வாசகங்கள் அவரது சொந்த மக்களின்மீது அவர் கொண்டிருந்த பரிபூரண மான திட நம்பிக்கையும் முழுமையான விசுவாசமும் மிக்கதாகத் ஒலித்தன: ''மக்களது கோபாவேசத்தின் கொடிய சீற்றத்தையும் இந்தப் பகைமையையும் கிளறி விட்டுள்ளவர்கள் அழிந் தொழிக!''

யுத்தம் தொடங்கியதன் முதல் ஆண்டு நிறைவின்போது பிராவ்தா ''பகைமையின் விஞ்ஞானம்'' என்ற தலைப்பில் ஒரு கதையை வெளியிட்டது. அது கதை வடிவில் உருவாக்கப்பட் டிருந்த போதிலும், அந்தக் கதை தன்மையில் தெள்ளத் தெளி வாக உலக நடப்புப் பற்றியதாகவும், ஷோலகோவிடம் ஏற்பட்ட புதிய திருப்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவுமே உள்ளது. அந்தக் கதையின் தலைமைப் பாத்திரமான லெப்டினென்ட் கெராசிமோவ், தமது முதல் யுத்தகால நடைச்சித்திரத்தில் ஷோலகோவ் வெளியிட்டிருந்த கருத்துக்களைத் தமக்கே உரிய முறையில் எடுத்துக் கூறுகிறார். அன்பையும் பகைமையையும் என்றுமே அருகருகே வைக்க முடியாது என்று தோன்றலாம் என்று அந்த லெப்டினென்ட் குறிப்பிடுகிறார்; என்றுமே ஒன்றுகச் சேர்த்து வண்டியில் பூட்ட முடியாத மொட்டை வண்டிக் குதிரையையும், பயந்த சுபாவம் கொண்ட பெண்மானையும் பற்றிய ரஷ்யக் குட்டிக்கதையையும் அவர் நினைவு கூர்கிறார். ''ஆனால் பாருங்கள், நாம் அதனைச் செய்து முடித்துவிட்டோம். இப்போது இரண்டும் சேர்ந்து நன்றாக இழுத்துச் செல் கின்றன!...நாம் நமது நாட்டின்பாலுள்ள அன்பை நமது இதயங்களில் சுமந்து கொண்டிருக்கிறோம்; நமது இதயங்கள் துடிக்கின்ற வரையிலும் அதுவும் அங்கேயே இருந்துவரும்: நமது பகைமையுணர்ச்சியை நாம் நமது துப்பாக்கிச் சனியன் களது முனைகளின்மீதுதான் எப்போதும் சுமந்து செல்கிறோம்'' என்று கூறுகிறார் அவர் (உலக நடப்புப்பற்றிய எழுத்துக்களின் தொகுதியில் ஒரு கதையைச் சேர்த்துக்கொள்வது நியாயமாக இருக்குமா என்று ஆரம்பத்தில் எங்களுக்குச் சந்தேகம் ஏற்படத் தான் செய்தது; என்றாலும் இது நியாயமானதுதான் என்று பின்வரும் காரணங்களினால் தீர்மானிக்கப்பட்டது: ''பகைமையின் பின் விஞ்ஞானம்'' முதன் முதலில் வெளிவந்தபோது, அதன் ஆசிரியர் அதற்கு எந்தக் குறிப்பிட்ட இலக்கிய வகையின் முத்திரையையும் குத்தி விடவில்லை; இதுவே அவரது நிகழ்கால உலக நடப்புப்பற்றிய எழுத்துக்களோடு அதனைச் சேர்த்துக் கொள்ள அனுமதித்தது; எவ்வாறாயினும் அந்தக் கதை மிகவும்

உலக நடப்புத்தன்மை மிக்கதாகும்; அது இல்லாவிட்டால், யுத்த ஆண்டுகளின்போது ஷோலகோவ் உலக நடப்புப்பற்றி எழுதிய எழுத்துக்களின் தொகுதி முழுமையற்றதாகவே தோன்றும். ''பகைமையின் விஞ்ஞானம்'' இல்லாமல் அத்தகையதொரு தொகுதியை எண்ணிப் பார்ப்பது என்பதே மிகவும் சிரமம்தான்).

''பென்சில்களையும், நோட்டுப் புத்தங்களையும், சிறு எந்திரத் துப்பாக்கிகளையும் தாங்கிய ஆயுதபாணிகளாக நாங்கள் முன்னணிக்கு ஒரு காரில் சென்றோம்..''— யுத்த நிருபர் என்ற முறையில் ஷோலகோவ் எழுதிய நடைச் சித்திரங்களில் ஒன்று இவ்வாறு தொடங்குகிறது. போரின் இரண்டாம் ஆண்டு முடிவு வாக்கில் தாம் எழுதிய ''அமெரிக்க நண்பர்களுக்கு ஒரு கடிதம்'' என்ற கடிதத்தில், அவர் இவ்வாறு எழுதுகிறார்: ''யுத்த நிருபர் என்ற முறையில் நான் தெற்கு, தென்மேற்கு, மேற்குப் போர் முனைகளில் இருந்திருக்கிறேன்.'' ஷோலகோவின் உலக நடப்புப் பற்றிய படைப்புகளில் இந்தக் ''கடிதம்'' பெரும் முக்கியத் துவம் வாய்ந்த ஸ்தானத்தை வகிக்கிறது. அதில் அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற தலைப்பில் மாபெரும் தேச பக்தப் போரைப்பற்றித் தாம் ஒரு நாவல் எழுதிக் கொண் டிருப்பதாகவும், அதில் ஜெர்மன் நாஜிப் படையெடுப்புக்கு எதிரான தமது போராட்டத்தில் சோவியத் மக்களின்மீது விழுந்து விட்ட சுமையைத் தாம் வருணிக்க விரும்புவதாகவும், தமது அமெரிக்க வாசகர்களுக்கு அவர் கூறுகிறார்; இதற்கிடையில், அந்த நாவல் இன்னும் பூர்த்தியடையாத நிலையில், ஓர் எழுத்தாளன் என்ற முறையிலல்லாமல், வெறுமனே நேச நாடுகள் ஒன்றின் பிரஜை என்ற முறையில், தமது அமெரிக்க நண்பர்களோடு தாம் பேச விரும்புவதாக அவர் கூறுகிறார்.

இன்றைக்கு ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால்—அதற்குள் நெடுங்காலத்துக்கு முன்பே மறைந்து போய் விட்ட ஒரு காட்சியுண்மையாகிவிடும்—யுத்தத்தின் இயல்பைப் பற்றி ஆராயும் சரித்திர ஆசிரியர்கள், ஒரு நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் ஒருவர் மற்றொரு நாட்டுமக்களை நோக்கி, உண்மையிலும் சரி, உருவக ரீதியிலும் சரி, ஒரு மகாசமுத் திரத்துக்கு அப்பால் சென்று ஒலிக்கும் விதத்தில் கூறிய வாசகங்களைப் படித்துப் பார்க்கும்போது இப்போது நமக்கு ஏற்படுவதைப் போலவே, அவர்களும் தமது தொண்டையில் ஏதோ ஒன்று எழுந்து அதனை அடைப்பதுபோல் உணரவே செய்வர். ஷோலகோவ் இவ்வாறு எழுதினார்: ''ஒரு நாடு மற்றொரு நாட்டை முற்றிலும் துடைத்தெறியவும் அல்லது விழுங்கித்

தீர்க்கவும் முனையும் ஒரு முயற்சிக்குரிய அத்தனை கோரத்தோடும் யுத்தம் எங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் புகுந்துள்ளது. போர்முனையில் நிகழ்ந்து வருபவை யாவும், ஒரு முழுமையான போரில் நிகழ்பவை யாவும், எங்கள் அனைவரது வாழ்க்கையிலும் ஓர் அழிக்க முடியாத முத்திரையை ஏற்கெனவே பதித்துள்ளது. நான் எனது தாயை இழந்து விட்டேன்; எந்தவிதமான போர்க் கேந்திர முக்கியத்துவமும் இல்லாத எங்களது கிராமத்தின்மீது தொடுக்கப்பட்ட விமானத் தாக்குதலின்போது. ஒரு ஜெர்மன் விமானம் வீசிய குண்டினால் அவள் கொல்லப்பட்டு விட்டாள். இந்த நடவடிக்கை கொள்ளைகாரக் கும்பல்களுக்கே பொருத்தமான ஒரு நோக்கத்தையே கொண்டிருந்தது. அதாவது ஜெர்மன் ராணுவம் முன்னேறி வரும் நிலையில், மக்கள் தமது கன்று காலிகளைக் கிழக்கு நோக்கி ஓட்டிச் செல்ல முடியாதவாறு தடுக்கும் விதத்தில், அவர்களைச் சிதறடிப்பதுதான் அந்த நோக்கமாகும். ஜெர்மன் குண்டுகள் எனது வீட்டையும் எனது நூலகத்தையும் நாசமாக்கியுள்ளன. நான் எழுத்தாளர்களும் சக கிராமவாசிகளுமான பல நண்பர்களை ஏற்கனவே இழந்து விட்டேன்; அவர்கள் போர்முனையில் கொல்லப்பட்டனர். நெடுங்காலமாக நான் எனது குடும்பத்தோடு தொடர்பு இல்லாமலே இருந்து வந்தேன். இந்தச் சமயத்தில் என் மகனும் நோய்வாய்ப் பட்டிருந்தான். அவர்களுக்கு நான் எந்த விதத்திலும் உதவ முடியவில்லை. ஆயினும், என்னதான் இருந்தாலும், இவை தனிப்பட்ட சிரமங்களே; சொந்தத் துயரங்களே; இதனையும் எங்களிற் பலரும் அறிவோம். இந்தத் துயரங்கள் யாவும் தமது வாழ்க்கையில் யுத்தம் புகும்போது மக்கள் அனுபவித்து வருந்த வேண்டிய ஒரு பொதுவான, நாடு தழுவிய பெருந்துயரை அதிகமாக்கி விடுகின்றன. எந்த எழுத்தாளரும் எந்தவொரு கலைஞரும் இதுவரையில் உலகுக்கு எடுத்துச் சொல்லிவிட இயலாததாகவுள்ள மக்களின் துன்ப துயரங்களை, எங்களது சொந்த, தனிப்பட்ட துயரங்கள் எங்களிடமிருந்து மூடிமறைத்து விட முடியாது.''

ஒருவரது கரங்களை ரத்தத்தில் நனைக்காமல் இந்தப் போரிலிருந்து மீண்டு கரையேறுவது அசாத்தியமே என்று எழுதினார் ஷோலகோவ். யுத்தம் வியர்வையையும் ரத்தத்தையும் கோரியது. அவற்றை வழங்க மறுத்தால், அது இரட்டிப்புப் பலியை ஏற்படுத்தும். தயக்கத்தின் விளைவுகள் இழப்பை ஈடு செய்ய முடியாதவையாக இருக்கக் கூடும். எனவே இதன்பின் அந்த அச்சடித்த பக்கத்தில் வார்த்தைகள் கனற்பிழம்பாக இவ்வாறு இடம் பெறுகின்றன: ''உங்கள் உறவினர்களின் ரத்தத்தை

உங்கள் வீட்டு வாசற்படியில் நீங்கள் இன்னும் கண்டதில்லை. நான் கண்டிருக்கிறேன்; எனவே இத்தனை பட்டவர்த்தனமாக உங்களிடம் பேசும் உரிமையை நான் பெற்றிருக்கிறேன்.''

எழுத்தாளர் ஒல்கா பெர்கோல்ட்ஸ், வரலாற்றுக்கு—எங்களது மக்களின் வரலாற்றுக்கு, இலக்கியத்தின் வரலாற்றுக்கு, இறுதியாக மனித குலத்தின் வரலாற்றுக்கு—ஒரு விஷயத்தைப் பாதுகாத்துக் கொடுத்திருக்கிறார்; அதாவது முற்றுகை நாட்களின்போது வீரத் திருநகரான லெனின்கிராடு நகரின் புத்திர புத்திரிகளுக்கு ஷோலகோவ் வாஞ்லி மூலம் ஆற்றிய ஒரு சிறு உரையைப் பாதுகாத்துத் தந்திருக்கிறார். அது வருமாறு:

''எனது லெனின்கிராடுத் தோழர்களே! எதிரி சுற்றி வளைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில், வாழ்வதும், உழைப்பதும், போராடுவதும் உங்களுக்கு எத்தனை சிரமமயமானதாக இருக்கும் என்பதை நான் அறிவேன். மக்கள் எங்களும்—ஒவ்வொரு போர் முனையிலும், பின்னணியிலும்—உங்களை நினைவில் வைத்துள்ளனர். தூராதொலையிலுள்ள யூரல்ஸில் உருகி வழிந்தோடும் உலோகப் பிரவாகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் உருக்குத் தொழிலாளி உங்களைப் பற்றி நினைத்துப் பார்க்கிறார்; உங்களது விடுதலை கிட்டும் நேரத்தைத் துரிதப்படுத்துவதற்காக, அவர் அயர்வு சோர்வின்றி உழைக்கிறார்; டான்பாஸில் ஜெர்மன் படையெடுப்பாளர்களோடு போரிட்டுக் கொண்டிருக்கும் போர்முனையிலுள்ள போர்வீரர், படுநாசமாக்கப்பட்ட தமது சொந்த உக்ரேனுக்காக மட்டுமல்லாமல், லெனின்கிராடு வாசிகளான உங்கள்மீது எதிரி சுமத்திவிட்ட மாபெரும் துயரங்களுக்காகவும், அவர்களை அடித்து வீழ்த்தி வருகிறார்.... முற்றுகை வலையம் உடைபடும் அந்த நேரத்தை, மாபெரும் சோவியத் நாடு லெனின்கிராடு நகரின்—நிரந்தரக் கீர்த்தியில் நீராடியநகரின்—வீரஞ் செறிந்த புத்திர புத்திரிகளைத் தன் மார்போடு சேர்த்தணைக்கும் அந்த நேரத்தை, நாங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறோம்.''

1945 மே மாதம் 13ஆம் தேதியன்று பிராவ்தா ''வரலாறு என்றுமே கண்டறியாத அத்தகைய வெற்றி'' என்ற தலைப்புக் கொண்ட ஒரு கட்டுரையை வெளியிட்டது. உலக வரலாற்றில், இப்போது முடிவுற்ற போரைப் போன்ற அத்தனை ரத்த பயங்கரமான, படுநாசகரமான ஓர் யுத்தம் எப்போதுமே நடந்தது இல்லை என்றும், பின்னர் சோவியத் ராணுவம் பெற்றுள்ளதைப்போன்ற அத்தனை அற்புதமான வெற்றிகளையும் எந்தவொரு ராணுவமும் என்றும் பெற்றதில்லை என்பதும் ''கீர்த்தி, வலிமை, மகத்துவம் ஆகியவற்றின் இத்தகையதொரு

பேரொளியில் குளித்தெழுந்து, மனிதகுலத்தின் வியந்து போற்றும் கண்களுக்கு முன்னால் இவ்வாறு காட்சியளித்ததும் இல்லை'' என்பதும் உண்மையேயாகும் என்று எழுதினர் ஷோலகோவ்.

உலக நடப்புப்பற்றிய ஷோலகோவின் படைப்புக்கள் முழுவதன் படைப்பாக்க முறையைத் தனிச் சிறப்பான முறையில் எடுத்துக் காட்டும் முக்கியமான அம்சங்களிற் சில, அல்லது எப்வாறுயினும் அதன் மிகவும் தனிச் சிறப்புமிக்க உதாரணங்களிற் சில, அவரது யுத்த காலக் கட்டுரைகளிலும் நடைச் சித்திரங்களிலும் தெள்ளத் தெளிவாகப் புலப்பட்டுள்ளன. அவை யாவும் உடனடியான, அதியவசரமான பிரச்சினைகளுக்குச் செவி சாய்த்து எழுதப்பட்டவையாகும்; அவை யாவும் காவிய இலக்கியத்தோடு வழக்கமாகச் சம்பந்தப்பட்டுள்ள தன்மைகளின் ஓர் ஒருங்கிணைந்த சேர்க்கையை—மக்களது வாழ்க்கையை உருவாக்க உதவும் சம்பவங்கள் பற்றிய ஒரு பரந்த கிரகிப்புத் தன்மையை, அதே சமயத்தில், இந்த வரலாற்றுப் புகழ் மிக்க சம்பவங்களிற் பங்கெடுக்கும், அவற்றை உருவாக்கும் சாதாரண மக்களான அவரது கதாநாயகர்களது, ஆன்மீக வாழ்வின் கூறுகளுக்குள் கூர்ந்து புகுந்து காணும் ஆழமான பார்வையைக்—கொண்டுள்ளன. ஒரு நடைச் சித்திரம் அல்லது ஒரு செய்திப் பத்திரிகை விவரத்திலும்கூட, ஷோலகோவ் ஒரு சிறிய, எனினும் முற்றிலும் கண்டுணரத்தக்க உத்தியின்மூலம் ஒரு வர்ணனையை அல்லது ஒரு சம்பவ விவரத்தை உயிர் பெறச் செய்து விடுகிறார். அது அந்த எழுத்தாளர் தாமே நேரில் கண்ட ஒரு சம்பவமாக, அல்லது ஒரு தனி நபரின் வாழ்க்கையில் அல்லது நடத்தையில் தென்படும் அவருக்கே உரிய ஏதோ ஒன்றாக, உண்மையில் சோவியத் கதாபாத்திரத்தின் பொதுவான அம்சங்களில் ஒன்றாக இருக்கக் கூடும்.

தமது நாட்டின் வாழ்க்கையில் மிக முக்கியமான சம்பவங்கள் மற்றும் நிகழ்ச்சிகளைப் பற்றி—மக்களின் இதயங்களையும் எண்ணங்களையும் மிகவும் கிளரும் தற்கால எதார்த்தத்துவத்தின் அம்சங்களைப் பற்றி—ஷோலகோவ் எழுதியுள்ள கட்டுரைகள், ஒரு சோஷலிச நாட்டின் பிரஜை இந்தப் பிரச்சினைகள் மற்றும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின்பால் காட்டுகின்ற போக்கையும் அவை பற்றிய அவரது மதிப்பீட்டையும் எப்போதுமே தெள்ளத் தெளிவாக வெளியிடுகின்றன.

இந்த எழுத்துக்களின் சிந்தனைத் தெளிவு மற்றும் மதிப்பீடு செய்யும் நுண்ணோக்கு, அவற்றின் உணர்ச்சித் தன்மை, கட்சி மற்றும் மக்களது நலன்களின்பால் அவை கொண்டுள்ள ஆழ்ந்த

ஈடுபாடு, உள்ளடக்கத்தை வெளியிட்டுள்ள முறையின் எளிமை ஆகியவையெல்லாம், இந்தக் கட்டுரைகளை மிகமிகப் பரந்த வாசகர் கூட்டத்துக்குப் புரியத் தக்கனவாக ஆக்கி விடுகின்றன. தமது ரசிகப் பெருமக்களாக விளங்கும் லட்சோப லட்சக் கணக்கான மக்களிடம் இந்த எழுத்தாளர் பேசும்போது, அவர் சொந்த முறையில் தமக்கு அக்கறையுள்ள விஷயங்களைப்பற்றிக் கூறி, தமது எளிமையினால் வாசகர்களைத் தம்பால் கவர்ந்து விடுகிறார்; ஷோலகோவின் நடைக்கே உரிய வலிமை மிக்க உருவகக் காட்சிகளின்மூலம், அவர் தமது வார்த்தைகளின் அழுத்தத்தையும் அதிகரிக்கச் செய்து விடுகிறார்.

சோஷலிச, மற்றும் போர்க்குணம் மிக்க மனிதாபிமானம், சமாதானத்துக்கான போராட்டம் ஆகிய கருப்பொருள்கள், ஷோலகோவின் உலக நடப்புப்பற்றிய யுத்தப் பிற்கால எழுத்துக்களில் மேன்மேலும் அழுத்தமான முறையில் இடம் பெற்று விடுகின்றன. அவரது கருப் பொருள்களும், அவற்றை அவர் கையாள்கின்ற முறைகளையும், அவற்றை எழுப்புவதற்கு அவருக்குள்ள நோக்கங்களையும் போலவே, மிகமிக நானாவிதமானவை; ஆயினும் அவரது தத்துவார்த்த நெறிமுறை, அவர் மேற்கொண்டுள்ள நிலை, அவரது வழிகாட்டும் கோட்பாடுகள் ஆகியனவெல்லாம் உறுதியானவை; மாறுதலவை.

''தாயகம் பற்றி ஒரு வார்த்தை'' என்ற கட்டுரை இந்தத் தலைப்பின் துடிப்பான தன்மையை முற்றிலும் நியாயப்படுத்துகிறது; ஏனெனில் அது உண்மையில் உலக நடப்புப் பற்றிய மிகவும் வலிமை மிக்க படைப்புக்களில் ஒன்றாகும். அது 1948-ல் எழுதப்பட்டது; மூன்றாண்டுகளுக்கு முன்னால் முடிந்திருந்த ரத்த பயங்கரமான போரின் வேதனைமிக்க நினைவுகள் இன்னும் மங்காதிருந்த வேளையில் அது எழுதப்பட்டது.

ஏற்கெனவே கடந்த காலமாகி விட்ட காலத்தில் நம்மை மீண்டும் வாழச் செய்யவும், ஏற்கெனவே அனுபவிக்கப்பட்டு விட்ட துயரத்தை மீண்டும் அனுபவிக்கச் செய்யவும், அந்த எழுத்தாளர் ஏன் அத்தனை கண்டிப்பாகவும் அத்தனை ஈவிரக்கமற்றும் நம்மை நிர்ப்பந்திக்கிறார்? ஏற்கெனவே ஆறிவிட்ட புண்களை அவர் ஏன் மீண்டும் கீறிப் பிளக்கிறார்? இதற்கான விடை எளிதானதே; உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்திருக்கும்போது, மக்கள் எதனை மறந்து விடக்கூடாதோ அதனை அவர்கள் மறந்துவிடக் கூடாது என்பதே அதற்குக் காரணம். சமாதானத்துக்கான போராட்டத்தின் ஜீவாதாரமான அவசியம் முழுவதையும் மக்கள் உணர வேண்டும் என்பதும், போரின்போது பகைமையின் விஞ்ஞானம் தமக்குக் கற்றுக்

கொடுத்த பாடங்களை அவர்கள் மறந்து விடக் கூடாது என்பதும் தான் அதற்குக் காரணம்; சமாதானத்தின் எதிரிகளின்மீது கொள்ளும் பகைமை, ''இன்னும் தனது பயங்கரமான அனுபவத்திலிருந்து விடுபடாத மனிதகுலத்தை, தமது பிசாசுத்தனமான குருட்டுத்தனமான தவற்றின் காரணமாக ஒரு புதிய போரினுள் ஈடுபடுத்தத் தயாராகி வருவோரின்மீது'' கொள்ளும் பகைமை, மக்களது இதயங்களில் வாழ்ந்து வரவேண்டும் என்பதே அதற்குக் காரணம். ஏனெனில் புதிய போர்களைப் பற்றிய அச்சுறுத்தலை நாம் மறந்துவிடக்கூடிய காலம் இன்னும் வந்து விடவில்லை; எனவே, போர்களைத் தூண்டிவிடுவோரின்மீது கொள்ளும் பகைமையுணர்வும், ''மனிதர்களின் மொழியில் எந்தவொரு பெயரையும் பெற்றிராத பிறவிகளுக்கு எதிராக, கோடிக் கணக்கான மக்களின் ரத்தத்தைச் சிந்தித் தாம் அடைந்துள்ள லாபங்களோடு இன்னும் திருப்தியடையாதவர்களுக்கு எதிராக, நமது இதயங்களில் பன்மடங்காகப் பெருகிக் கோபாவேசத்தோடு பொங்கி வழியட்டும்... அது சரியான தருணத்தில் பயன்மிக்கதாக விளங்கும்!''

ஷோலகோவின் விஷயத்தில் வழக்கமாகத் தென்படுவதைப் போலவே இந்தக் கட்டுரையிலும் அன்பையும் பகைமையையும் பற்றிய கருப்பொருள்கள் அருகருகே இருந்து வருவதோடு மட்டுமல்லாமல், ஒன்றோடொன்று பின்னிக் கலந்தும் உள்ளன: தாயகத்தின்பால் கொள்ளும் அன்பு அதன் எதிரிகளின்பால் பகைமையைத் தோற்றுவிக்கிறது; அதே சமயம் தனி மனிதனின், பொதுவாக மனிதகுலத்தின் அன்பும், மனிதத் தன்மையற்று அடிமைப் படுத்துவோரின் மீது பகைமையைத் தோற்றுவிக்கிறது.

''தாயகம் பற்றி ஒரு வார்த்தை'' என்ற கட்டுரை ஒரு சாதனமாகும்; இதன் மூலம் இதன் ஆசிரியர் துடிப்பான எதிர்மறைக் காட்சிகளைப் பயன்படுத்தி, சோவியத் ஆட்சிக் காலத்தில் எங்கள் நாட்டில் உழைக்கும் மக்களின் வாழ்க்கை எவ்வாறு மாறியுள்ளது என்பதையும், பொருளாதாரத்திலும் மற்றும் மனிதர்களின் வாழ்க்கையிலும் குணும்சங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எத்தனை பெரியவை என்பதையும் எடுத்துக் காட்டுகிறார். ஷோலகோவ் மக்களிடத்தில் வீரஞ் செறிந்த போராட்டத் தன்மைகளைப் பேணி வளர்த்து, அவர்களை ஈடிணையற்ற முன்னேற்றங்களை எய்துமாறு வழி நடத்திச் சென்ற கம்யூனிஸ்டுக் கட்சியைப்பற்றி எழுதுகிறார்; ''பல்லாண்டுகள் அனுபவித்த துன்பங்களுக்குப் பின்னால் ஒரு மாபெரும் புரட்சிகரப் போராட்டத்தின் மூலம் மக்கள்

ஸ்தாபித்ததும்,.... தமது ரத்தத்தாலும் தமது உழைப்பினாலும் வலுப்படுத்தியது''மான ''ஒரே நியாயமான அரசாங்க அமைப்பான'' சோவியத் ஆட்சியைப் பற்றியும், இந்த ஆட்சியில் எங்கள் மக்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைப் பற்றியும் அவர் பேசுகிறார்.

ஒரு மனிதாபிமானி என்ற முறையில் இந்த எழுத்தாளர் ஸ்பெயினிலும், கொரியாவிலும், வியத்நாமிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்து உணர்ச்சிப் பெருக்கோடு எழுதுகிறார்... ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்கள் இழைத்த குற்றங்களையும் இவர் வீரியமிக்க முறையில் தாக்கும்போது, உலக நடப்புப் பற்றிய இவரது எழுத்துக்கள், பெரும்பாலும் ஒரு துண்டுப் பிரசுரத்தின் சுவையையும் தொனியையும் பெற்று விடுகின்றன.

இன்றைய உலகில் கலைஞனின் ஸ்தானம், மற்றும் அவனது பாத்திரம், எழுத்தாளனின் கிரியை, தனது சொந்த மக்கள் மற்றும் மனிதகுலத்தின் வருங்காலம் ஆகிய விஷயத்தில் அவனுக்குள்ள பொறுப்பு ஆகிய விஷயங்கள், ஷோலகோவின் எழுத்துக்கள் மற்றும் சொற்பொழிவுகள் பலவற்றின் போக்கிலும் இயல்பாகவே எழுந்து வரும் விஷயங்களாக உள்ளன. கட்சிக் காங்கிரசுகளிலும் மற்றும் எழுத்தாளர்கள் இலக்கிய அறிஞர்கள் ஆகியோரின் கூட்டங்களிலும் அவர் ஆற்றிய உரைகள் பெருமளவில் இந்த விஷயங்கள் பற்றியதாகவே உள்ளன; மேலும், தனிச் சிறப்புமிக்க சமூகப் பிரமுகர்களையும் மற்றும் இன்றைய முற்போக்குக் கலாசாரத் துறையின் தலையாய பிரமுகர்களையும் பற்றிய அவரது கட்டுரைகள் மற்றும் வியாசங்களில் இதே விஷயங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இரண்டாவது அகில-யூனியன் எழுத்தாளர் காங்கிரசில் உரையாற்றும்போது, ஷோலகோவ் சோவியத் கலைஞனைச் சிறப்பாக எடுத்துக் காட்டும் கட்சி உணர்வு பற்றிய ஓர் அற்புதமான விளக்கத்தை வழங்கினார். ''வெளிநாடுகளிலுள்ள பகைமையுணர்ச்சி கொண்ட நமது எதிரிகள், சோவியத் எழுத்தாளர்களான நாம் கட்சியின் கட்டளைப்படியே எழுதுவதாகக் கூறுகின்றனர். இந்த விஷயத்தின் உண்மையோ முற்றிலும் மாறுனது; ஏனெனில் நம்மில் ஒவ்வொருவரும் தமது சொந்த இதயத்தின் கட்டளைப்படியேதான் எழுதுகிறோம்— நமது இதயங்களோ கட்சிக்கும், நாம் நமது கலையின்மூலம் யாருக்குப் பணியாற்றுகிறோமோ அந்த மக்களுக்குமே சொந்தமாக உள்ளன.'' சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 20 ஆவது காங்கிரசில் இந்த எழுத்தாளர் கூறிய வாசகங்கள்,

ஆழமான உணர்ச்சி நிறைந்தவையாக இருப்பதோடு மட்டு மல்லாது, ஒரு பிரஜை என்ற முறையில் சோவியத் எழுத் தாளரது ஸ்தானத்தின் சாராம்சத்தையும் வெளியிடுகிறது: ''நாம் அனைவரும் நமது மாபெரும் கம்யூனிஸ்டுக் கட்சியின் குழந்தைகள். கட்சியைப்பற்றி எண்ணும்போது நம் மில் ஒவ்வொருவரும், 'நீ எங்களுக்கு ஒரு தாய் போன்றவள். நீதான் எங்களைப் பேணி வளர்த்தாய்; எங்களை உருக்கைப்போல் உறுதிபெறச் செய்தாய்; உண்மையான ஒரே மார்க்கத்தின் வழியாக நீதான் எங்களை வாழ்க்கை முழுவதும் வழி நடத்திச் செல்கிறாய்' என்று மிகப்பெரும் உணர்ச்சிப் பெருக்கோடு மனத்துக்குள் எப்போதும் கூறிக்கொள்கிறோம்.''

22 ஆவது கட்சிக் காங்கிரசில் ஷோலகோவ் ஆற்றிய உரை, கலைஞனின் படைப்பாக்க உணர்வு பற்றியும், தனது கதாபாத்திரங்களோடு நூலாசிரியருக்குள்ள உறவு நிலை பற்றியும் ஒளிவுமறைவற்று, ஆழமாக உணர்ந்து கூறும் முறையில் அமைந்தது:

''ஒரு கலைஞன் ஒன்றைப் படைக்கும்போது உணர்ச்சி யற்றவனாக இருக்க முடியாது. நீங்கள் ஒரு மீனின் ரத்தத்தையும், அசைந்தே கொடுக்க முடியாத அளவுக்கு அத்தனை தூரம் கொழுப்பேறிப்போன இதயத்தையும் பெற்றிருந்தால் நீங்கள் ஓர் உண்மையான இலக்கியப் படைப்பையே உருவாக்க முடியாது. ஓர் எழுத்தாளன் எழுதும்போது அவனது ரத்த நாளங்களில் ரத்தம் கொதிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எதிரியைப் பற்றி அவன் எழுதும்போது, எதிரியின்பாற் கொண்ட அவனது கட்டுப்படுத்தப்பட்ட பகைமையுணர்வினால் அவனது முகம் வெளுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவன் தான் நேசிக்கும், தனக்கு மிகவும் அருமை மிக்கவர்களாக விளங்கும் தனது கதாபாத்திரங்களோடு சேர்ந்து தானும் சிரிக்க வேண்டும், அழ வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதன் மூலம்தான் போலியல்லாத ஓர் உண்மையான கலைப்படைப்பை உருவாக்க முடியும்.''

இஸ்ரேஸ்த்ரான்னயா லித்தரத்துரா சஞ்சிகைக்கு ஷோலகோவ் எழுதிய கடிதம் வெளிநாடுகளிலுள்ள எழுத்தாளர்கள் மத்தியில் பரவலான வரவேற்பைப் பெற்றது. அதில் அவர் உலகம் முழுவதிலுமுள்ள எழுத்தாளர்களின் ''வட்ட மேஜை'' ஒன்றை உருவாக்க வேண்டும் என்று யோசனை தெரிவித்திருந்தார்; ஏனெனில் எழுத்தாளர்கள் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்த போதிலும், தாம் பயன்மிக்கவர்களாக

விளங்கவேண்டும் என்ற பொதுவான உந்துதலால் அவர்கள் ஒன்றுபட்டே உள்ளனர்.

ஓர் இலக்கிய வகை என்ற முறையிலும் இலக்கிய வடிவம் என்ற முறையிலும் நாவல் அழிந்து வரும் நிலையில் உள்ளது என்ற எண்ணம் சில வட்டாரங்களில் வளர்ந்து வருகிறது. எழுத்தாளர்களது ஐரோப்பியக் கமிட்டிக் கூட்டமொன்றில் பங்கெடுத்தபோது, ஷோலகோவ் இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசினார்; முற்றிலும் தமது சொந்தக் கருத்தையே சகஜமாக வெளியிடுவதைப் போல் அவரது பேச்சு இருந்த போதிலும், அவர் அதில் ஒரு கடுமையான வாதப்பிரதிவாதத் தொனியைப் புகுத்தி விட்டார். திறமை வாய்ந்த வார்த்தைப் பிரயோகமும் கண்ணியமும் மிக்க அவரது பேச்சு, இந்தப் பிரச்சினையை எழுப்புவது என்ற கருத்தே எத்தனை அபத்தமானது, எத்தனை சூழ்ச்சியானது என்பதை எடுத்துக் காட்டி விட்டது. "நாவலைக் கல்லறையில் புதைப்பதற்காகப் பலகைகளைச் செதுக்கி ஒரு சவப் பெட்டியைச் சேர்க்க எவரேனும் தொடங்குவாராயின்" மீண்டும் பேசும் உரிமையைத் தாம் பயன்படுத்த விரும்புவதாக அவர் சபையோரிடம் தெரிவித்தார்: "விவசாயி ஒருவருக்குத் தமது வயலில் விதைக்க வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வி எவ்வாறு எழுவதில்லையோ, அதேபோல் நாவல் 'இருப்பதா, அல்லது இறப்பதா' என்ற கேள்வியே எனக்கு எழவில்லை. விவசாயியின் விஷயத்தில் கேள்வியை இப்படித்தான் கேட்க முடியும்: "மிகவும் சிறந்த அறுவடையைப் பெறுவதற்கு, எப்படி மிகவும் சிறந்த முறையில் வயலில் விதைப்பை நடத்தலாம்? என் விஷயத்திலும் இப்படித்தான். இங்குள்ள கேள்வி இதுதான்: எனது நாவல் நல்ல மதிப்போடு எனது மக்களுக்கும் எனது வாசகர்களுக்கும் உண்மையிலேயே பயன்படும் அளவுக்கு, அதனை எப்படி அவ்வளவு சிறந்ததாக்குவது?"

நாவலின் முக்கியத்துவம் பற்றிய இந்தக் கருத்தை ஷோலகோவ் ஓர் எழுத்தாளர் என்ற முறையிலும், தற்கால இலக்கியத்தின் ஒரு வகை என்ற முறையிலும் பின்னர் விரித்துரைத்தார். 1965ஆம் ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபெல் பரிசு தமக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அறிய வந்த பின்னர், பிராவ்தாவுக்கு அவர் அளித்த பேட்டியொன்றில், இந்தப் பரிசினால் தாம் இயல்பாகவே மகிழ்ச்சியடைந்ததாகக் கூறிய அதே சமயத்தில், தமது பணிக்கான மிகவுயர்ந்த சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதில் இது ஒரு தனிநபரின், தாழ்ந்த முறையான எழுத்தாளர் ஒருவரின் சுய மனநிறைவைக் குறிப்பதாகாது என்பதையும் நாம் முற்றிலும் தெளிவாக்கி விட

விரும்புவதாக அவர் கூறினார்; அவர் உள்ளத்தில் மேலோங்கி நின்ற உணர்ச்சியானது, தாம் தமது நாட்டுக்கும், தமது வாழ்நாளில் செம்பாதிக் காலத்தில் எந்தக் கட்சியின் அணிகளில் இருந்து வந்துள்ளாரோ அந்தக் கட்சிக்கும், சோவியத் இலக்கியத்துக்கும், ஓரளவுக்கேனும் கீர்த்தி தேடித் தர உதவிய தால் ஏற்பட்ட உவகையுணர்ச்சியேயாகும். ''தற்கால உலகில் சில இலக்கியப் பிரமுகர்கள் எதன் வாழ்வைக் குறித்து ஆட்சேபித்துள்ளார்களோ அந்த நாவல் இலக்கிய வகையும், அதன் தர்ம நியாயமும் நிர்த்தாரணம் செய்யப்பட்டுள்ளது என்றும் கூற முடியும்'' என்ற மன நிறைவுணர்ச்சியையும் தாம் உணர்வதாக அவர் கூறினர்.

பின்னர் ஸ்டாக்ஹோமில் நோபெல் பரிசளிப்பு வாரத்தின் போதும் அவர் மீண்டும் நாவல் பற்றிய பிரச்சினை குறித்துப் பேசினர்; இந்த இலக்கிய வகைக்கும் எதார்த்த பூர்வமான வர்ணனை முறைக்கும் உள்ள தொடர்புகளையும் வலியுறுத்தினர். எதார்த்த உலகை அதன் மிகப்பெரும் ஆழத்தோடும் அகலத் தோடும் அரவணைக்கவும், அது பற்றிய தமது வர்ணனையில் தமது சொந்தக் கண்ணோட்டத்தையும், வாழ்க்கையையும் அதன் அதியவசரமான பிரச்சினைகளையும் பற்றிய தமது கருத்துக்களைத் தம்மோடு பகிர்ந்து கொள்ளும் மக்களின் கண்ணோட்டத்தையும் புகுத்தி எடுத்துக் காட்டவும் நாவல்தான் தமக்கு உதவியுள்ளது என்று கூறினர் ஷோலகோவ். பிரபஞ்சத்தின் மையக்கேந்திரமாக ஒரு நபரின் சின்னஞ்சிறிய ''நான்'' என்ற தன்மையைச் சித்திரித்துக் காட்ட முயலும் முயற்சிகளின்பால் நம்மைச் செலுத்தாமல், நம்மைச் சுற்றியுள்ள மாபெரும் வாழ்க்கையைப் பற்றி மேலும் ஆழமான ஞானத்தைப் பெறப் பாடுபடும் முயற்சியை நோக்கி நாவல்தான் நம்மைச் செலுத்துகிறது என்றும் கூறலாம் என்றார் ஷோலகோவ். இந்த இலக்கிய வகை இதன் இயல்பின் காரணமாகவே, எதார்த்தவாதிக்கு சாத்தியமான அளவுக்கு மிகப்பரந்த உந்துதளத்தை வழங்கி விடுகிறது.

''புதுமை'' இலக்கியம் பற்றி—அதாவது அதிநவ நாகரிகமான சோதனை முயற்சிகளைப்பற்றி, முதன்மையாக உருவம் பற்றிய துறையில் செய்யப்படும் சோதனை முயற்சிகளைப்பற்றி—ஷோலகோவ் தெரிவித்த கருத்துக்கள் வெளிநாடுகளில் பொது ஜனத்தின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தன. உண்மையான புதுமை இலக்கிய கர்த்தாக்கள் என்பவர்கள் நமது யுகத்தில் வாழ்வில் உருவேறியுள்ள புதிய அர்த்தபாவத்தையும், தற் காலத்துக்கே உரிய தனித்த தன்மைகளையும், தமது படைப்புக்

களில் வெளிக் கொணரும் எழுத்தாளர்களேயாவர் என்பதே தமது சொந்தக் கருத்தாகும் என்று கூறி, இந்தப் பதம் பற்றிய வியாக்கியானத்தை அவர் மறுத்தார். இந்தப் பேச்சின் போக்கின்போது, சோஷலிச எதார்த்தவாதக் கோட்பாடுகள், மக்கள்பால் எழுத்தாளனுக்குள்ள பொறுப்பு, தற்கால உலகில் எழுத்தாளனின் ஸ்தானம், கலை இலக்கியத்தை எதிர்நோக்கி யுள்ள பெரும் பணிகள் ஆகியவை உட்பட, இன்றைய இலக்கிய வளர்ச்சி எழுப்பியுள்ள அதியவசரமான பிரச்சினைகள் பலவற்றையும் குறித்துத் தமது கண்ணோட்டம் என்ன என்பதையும் ஷோலகோவ் வெளியிட்டார்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 23-வது காங்கிரசில் ஆற்றிய **உரையிலும்** அவர் இதே பிரச்சினைகளைக் குறித்து மீண்டும் பேசினார்:

''சமுதாய வாழ்க்கையில் எழுத்தாளனின் பாத்திரம் என்ன என்பதைப் பற்றி, பிரதிநிதித்துவம் வாய்ந்த பெரும் கூட்டங்களில் எழுத்தாளர்களோடும், பத்திரிகை யாளர்களோடும், பத்திரிகை நிருபர்களோடும் விவாதிக்கும் சந்தர்ப்பம் எனக்குப் பலமுறை கிட்டியுள்ளது. குறிப்பாக, சென்ற ஆண்டில் நோபெல் பரிசு வழங்கும் விழாவின்போது ஸ்டாக்ஹோம் டவுண் ஹாலில் நான் ஆற்றிய உரையில், இந்த விஷயம் ஒரு முக்கியப் பகுதியாக விளங்கியது. எனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சபையோர், இப்போதைய சபையோரிட மிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டவர்களாகவே இருந்தனர். எனவே நான் எனது கருத்துக்களைப் பொதிந்து தெரிவிக்கப் பயன்படுத்திய உருவமும் அதற்கேற்ப மாறு பட்டதாகவே இருந்தது. நினைவிருக்கட்டும் உருவம்தான் மாறியது; உள்ளடக்கம் அல்ல.

''கம்யூனிஸ்டுகள் எங்கெங்கே என்னென்ன மொழியில் பேசினாலும், நாம் எப்போதும் கம்யூனிஸ்டுகள் என்ற முறையிலேயே பேசுகிறோம். இது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம்; என்றாலும் அவர்கள் இதனைச் சகித்து விழுங்கிக் கொள்ளத்தான் வேண்டும். மேலும் இதே குணநலன்தான் எங்களும் மதிக்கவும் படுகிறது. ஒரு சோவியத் பிரஜை எங்கே ஒரு மேடைச் சொற்பொழிவை ஆற்றினாலும், அவர் ஒரு சோவியத் தேசபக்தர் என்ற முறையிலேயே உரையாற்ற வேண்டும். சமுதாய வாழ்வில் எழுத்தாளனின் பாத்திரத்தை விளக்கிக் கூறும்போது, நாம் கம்யூனிஸ்டுகளாகவே, நமது மாபெரும் தாயகத்தின் புதல்வர்களாகவே, கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியமைத்து வரும் ஒரு நாட்டின் பிரஜை

களாகவே, நமது கட்சியின் மற்றும் நமது மக்களின் புரட்சிகர–மனிதாபிமானக் கருத்துக்களின் பிரதிநிதிகளாகவேதான் பேசுகிறோம்.''

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24-வது காங்கிரசில் பேசுகையில், ஷோலகோவ் இவ்வாறு கூறினார்:

''கலாசார அபிவிருத்தியின் உலக வளர்ச்சிப் போக்கில் சோவியத் இலக்கியமும் கலையும் வகித்துவரும் போர்க்குணம் மிக்க பாத்திரத்தை, எல்லாவற்றுக்கும் முதன்மையாக நமது கலைஞர்களின் தலைசிறந்த படைப்புக்களில் குடிகொண்டுள்ள கம்யூனிச சித்தாந்தம் மற்றும் சார்பு நிலை ஆகியவற்றின் வேகம்தான் தீர்மானிக்கிறது.''

சமீப ஆண்டுகளில் ஷோலகோவ் எழுதிய உலக நடப்புப் பற்றிய எழுத்துக்களில், சோஷலிச மற்றும் புரட்சிகர மனிதாபிமானத்தின் சாராம்சத்தோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பல முறை முதலிடம் பெற்று வந்துள்ளன. ''மனிதாபிமானி என்பவன் போராடும், கொலைகாரனின் கையை மடக்கி, அவனது தீய சித்தத்தைத் தீங்கற்றதாகச் செய்ய உதவும் மனிதனுவான்'' என்று அவர் 1966-ல் பாகூவில் நடந்த எழுத்தாளர் கூட்டமொன்றுக்கு அனுப்பிய கடிதத்தில் எழுதியிருந்தார். மனிதாபிமானம், மற்றும் மனிதனின்பால், மனிதகுலத்தின்பால் கொள்ளும் அன்பு ஆகியவை பற்றிய கருத்துக்கள், பல்வேறு நபர்களால், அவர்கள் எந்தச் சமூகச் சக்திகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்களோ அதனைப் பொறுத்து, மிகவும் பல்வேறு விதமாக அர்த்தப்படுத்தப் படுகின்றன என்று கூறியிருந்தார் அவர் கொலை அல்லது கொள்ளைக்குப் பலியாகும் ஒரு துர்ப்பாக்கியசாலியின்பால் வெறுமனே பரிவு காட்டுவதோடு நின்று, உலகில் கொலையும் நடக்கத்தான் செய்கிறது என்ற உண்மையைக் கண்டு ஒப்பாரி வைக்கும் ஒரு நபர் மனிதாபிமானியே அல்ல என்றுதான் சோவியத் எழுத்தாளர்கள் தமது கம்யூனிசக் கருத்துக்களுக் கேற்பக் கருதுகின்றனர். ''நமது பலம், எழுத்தாளர்களின் பலம், எண்ணங்களையும் இதயங்களையும் கொள்ளை கொள்ளும், மானிட சக்திகளைத் தூண்டிவிடும், மனிதனுக்காகவும் மனிதகுலத்துக் காகவும் சுதந்திர ஒளிக்காகவும் நாடுகளின் சோதரத்துவத்துக காகவும், ஏகாதிபத்தியத்தின் காட்டுமிராண்டித்தன இருளுக்கு எதிராகவும் போராடும் விருப்பத்தையும் உறுதியையும் பலப் படுத்தும் நமது உணர்ச்சி வேகமிக்க வார்த்தைகளில்தான் அடங்கியுள்ளது'' என்று அந்தக் கடிதம் வலியுறுத்துகிறது.

1968 ஆகஸ்டில் தாஷ்கெண்டில் நடந்த ஒரு சர்வதேச இலக்கிய கருத்தரங்கில் பங்கு கொண்டோருக்கு ஷோலகோ

விடமிருந்து ஒரு தந்தி வந்தது; அதில் உலகெங்கணும் சமாதானத்தையும் முன்னேற்றத்தையும் மேம்படுத்தும் உன்னதமான பணியில் ஒன்றுகூடி உழைக்குமாறு எழுத்தாளர்களை அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

இதற்கு ஈராண்டுகளுக்கு முன்னர் பிரெஞ்சு நாட்டு சுற்றுலாப் பயணிகளின் கோஷ்டியொன்று, மாஸ்கோவில் நொவோஸ்தி செய்தி ஸ்தாபன அலுவலகத்தில் இந்த எழுத்தாளரைச் சந்தித்தது.

''நமது நாடுகளுக்கிடையே பரந்துபட்ட ஒத்துழைப்பு அபிவிருத்தியடைந்திருப்பதைக் கண்டு நான் ஆழ்ந்த மன நிறைவைப் பெற்றுள்ளேன்'' என்று ஷோலகோவ் அவர்களிடம் கூறினர்.

''நான் ஒரு டான்கோஸாக். ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்னால் டான்கோஸாக்குகள் பாரீசில் இருந்தனர். திராட்சைத் தோட்ட வளர்ப்பாளர்களாகவிருந்த அவர்கள் திராட்சைப் பழ விதைகளையும் திராட்சைக் கொடிகளையும் இங்கு கொண்டு வந்தனர்; அந்தத் திராட்சைக் கொடிகள் டான் நதிக்கரை மண்ணில் வேர் பிடித்து வளர்ந்துள்ளன, உங்கள்பால் எனது நாட்டு மக்கள் கொண்டுள்ள மனப்போக்கு மிகவும் உளங்கனிந்த ஒன்றாகும்.''

ஷோலகோவுக்கு மிகவும் பிடித்த பிரெஞ்சு எழுத்தாளர் யார் என்று அவரிடம் அந்தச் சுற்றுலாப் பயணிகள் கேட்டனர். அதற்கு அவர் அளித்த பதில் இதுதான்:

''இத்தகைய கேள்விகளுக்குப் பதில் அளிப்பது எப்போதுமே சிரமம்தான். இறந்து போனவர்களைக் குறித்து ஒருவர் மிகவும் உயர்வாகப் பேச முடியும்; ஆனால் ஜீவியவந்தர்களாக இருப்பவர்களைப்பற்றிப் பேசுவது சற்றே சங்கடமான விஷயம். என்றாலும், ரஷ்ய இலக்கியம், மாபெரும் ரஷ்ய இலக்கியம் உண்மையிலேயே உங்களோடு கொண்டிருந்த தொடர்புகளின் மூலம் பெரிதும் லாபமடைந்துள்ளது. இது பரஸ்பரம் ஒருவரையொருவர் வளப்படுத்துவதாகவே இருந்துவந்துள்ளது. டால்ஸ்டாயும் ஸ்டென்டாலும் பிரித்துப்பார்க்க முடியாதவர்கள். வரலாற்றுப் போக்கில் நமக்குப் பல விஷயங்கள் நிகழ்ந்துள்ளன. சென்ற யுத்தம், நாஜி ஜெர்மனியோடு நடத்திய போர் ஒரு பொதுவான போராக இருந்தது; பிரெஞ்சு மக்களும் சோவியத் மக்களும் சிந்திய ரத்தம், நமது நாடுகளை உண்மையிலேயே மிகவும் நெருங்கியவையாகக் கொண்டு வந்து விட்டது.''

சோவியத் இலக்கியத்தின் தலையாய தகுதியாக ஷோலகோவ் எதனைக் கண்டார்?

''சத்தியம். எங்களது சோவியத் வரலாற்றின் போக்கு முழுவதிலும் நாங்கள் நம்பிக்கையின், சத்தியத்தின்—எங்களது சத்தியத்தின்—மூலமே வாழ்ந்து வந்துள்ளோம். நான் பெருமையடித்துக் கொள்ளாதவாறு, நாங்கள் உண்மையில் எவ்வளவோ சாதித்திருக்கிறோம் என்றே கருதுகிறேன்.''

இளைஞர் விவகாரங்களில் ஷோலகோவின் தொடர்ச்சியான ஆழமான சம்பந்தம்

ஷோலகோவின் உலக நடப்புப் பற்றிய ஆரம்பகால எழுத்துக்களில், அக்கறைமிக்க இரு அடிப்படைத் துறைகள் இடம் பெற்றிருப்பது உடனடியாகப் புலனுகின்றது. எங்களது பொருளாதாரம் மற்றும் கூட்டுப்பண்ணை விவசாயிகளது அவசரத் தேவைகள் உட்பட, ஏராளமான ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்கால அக்கறைகள் ஒரு துறை; கலை இலக்கியம் உட்பட பொதுவான கலாசாரம் பற்றிய பிரச்சினைகள் மற்றொரு துறை. இந்த இரு துறைகளுக்கும் ''வாழ்க்கை'' ''எழுத்தாளர்'' என்ற மிகவும் காரணரீதியான வரையறைகளை வழங்கி விடலாம். என்ருலும், நாம் ஏற்கெனவே கண்டு கொண்டுள்ளபடி, யுத்தமானது ஷோலகோவின் மனத்தை இந்த அடிப்படை அக்கறைகளிலிருந்து பறித்துக் கொண்டு விட்டது; தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதிவர அவரைத் தூண்டிவிட்டது; அந்தக் கட்டுரைகளில் அன்பு அல்லது பகைமையின்—சோஷலிசத் தாயகத்தின்பால் அன்பு அல்லது அதன் எதிரிகளின்பால் பகைமையின்—தொனிதான் மேலோங்கியிருந்தது. இவை யாவும் யுத்த ஆண்டுகளின் போது நிகழ்ந்த சம்பவங்களாலும், அதன்பின் யுத்தம் முடிவுற்றதோடு உலகம் முழுவதிலும் நிகழ்ந்துவந்த சமாதானத்துக்கான போராட்டத்தாலும் எழுந்த நேரடியான எதிரொலியாக எழுதப்பட்ட உலக நடப்புப் பற்றிய விஷயங்களாகவே இருந்தன.

யுத்தப் பிற்காலத்தில் ஷோலகோவ் உலக நடப்புப் பற்றிய எழுத்துக்கள், அவரது ஆரம்பக்கால அடிப்படைக் கருத்துக்களுக்கு தெள்ளத் தெளிவாகத் திரும்பவும் செல்லும் தன்மையையே பெற்றுள்ளன. இளைஞர்கள் பற்றிய விஷயமும், ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறைக்குக் கைமாற்றிக் கொடுக்கப்படும் மரபுகள் பற்றிய விஷயமும், இளம் திறமையாளருக்குக் கம்யூனிச மற்றும் தேசபக்தக் கல்வியை அளிக்கு விஷயமும் மேன்மேலும் துடிப்பாக வரையறுக்கப்பட்ட

இடத்தை வகிக்கவும் தொடங்கியுள்ளன. சமீப ஆண்டுகளில் இளைஞர்களோடு அவர் கொண்டுள்ள நேர்முகத் தொடர்புகள் மிகவும் தீவிரமடைந்துள்ளன; சோவியத் இளைஞர்களின் மிகவும் நாளுவிதமான பிரிவினருக்கும் எழுதும் முகமாக அவர் எழுதிவரும் கட்டுரைகள் மிகவும் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றன.

1920 ஆம் ஆண்டுகளிலும் 1930 ஆம் ஆண்டுகளிலும் ஷோலகோவ் மேற்கொண்டிருந்த இலக்கிய நடவடிக்கையின் சில அம்சங்களைச் சுருக்கமாகப் பார்ப்பது, இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் பயன்தருவதாகும். முதலில் வெளிவந்த அவரது எழுத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ''பரிசோதனை'', ''மூவர்'' ''அரசாங்க இன்ஸ்பெக்டர்'' என்ற பத்திரிகைகளில் எழுதிய நையாண்டி நடைச்சித்திரங்கள் அனைத்தும், 1920ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சோவியத் இளம் மக்களது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டதாகவே உள்ளன.

1938 வாக்கில், அப்போது 33 வயதை எட்டியிருந்த ஷோலகோவ், இரண்டு சிறு கதைத் தொகுதிகள், டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற நாவலின் மூன்று பாகங்கள், கன்னி நிலம் உழப்பட்டது என்ற நாவலின் முதற் பாகம் ஆகியவை வெளிவந்ததைத் தொடர்ந்து உலகப் புகழ் பெற்றிருந்தார். ஒரு மூத்த சகோதரர் என்ற முறையில், வேடிக்கையாகத்தான் என்றாலும், மீண்டும் இளைஞராக மாற விரும்பிய ஒருவர் என்ற முறையில், காம்சொமால் வயதை எட்டியிருந்த இளம் மக்களிடம் பேசுவதற்கு அவருக்கு உரிமையும் இருந்தது; ஓரளவுக்குக் கடமையும் இருந்தது:

''அன்பார்ந்த சோவியத் யுவர்களே! யுவதிகளே!

காம்சொமால் தனது இருபதாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது; இது நான் தவறவிட முடியாத ஒரு சந்தர்ப்பமாகும். குதூகலித்துக் களிக்கும் இளம் மக்களின் கூட்டமொன்றைக் கடந்து செல்லும் ஒரு வயதான மனிதர், ஒரு கணம் நின்று அதனைப் பார்ப்பார்; அக்கார்டியன் வாத்தியத்தில் வாசிக்கப்படும் கீதத்தை அவர் கேட்கும் போதும், அந்த மகிழ்ச்சி பொங்கும் இளம் முகங்களை அவர் புன்னகை தவழ நோக்கும்போதும், தாமே பல ஆண்டுகள் இளையவராகி விட்டவர் போல் அவர் உணர்கிறார். என் விஷயமும் அப்படித்தான். என் அன்பார்ந்த வாசகர்களே, உங்களைப்பற்றி நினைப்பதன் மூலமே நானும் இளைஞனாகிவிட்டதுபோல் உணர்கிறேன்; அதே சமயம் எனக்கு ஏற்கெனவே முப்பத்தி மூன்று வயது ஆகிவிட்டதா

லும், உங்களது அற்புதமான திருநாளில் நான் ஒரு நல்ல கிழட்டுப் பிறவி போலவே தோற்றமளிப்பேன் என்பதாலும், நான் சற்று வருத்தமும் அடைகிறேன்.''

கஜாக்ஸ்தான் எழுத்தாளர்களின் மூன்றாவது காங்கிரசில், உரையாற்றும் போது ஷோலகோவ். தமது உரையின் மிகவும் செம்பாகமான பகுதியை, இளம் எழுத்தாளர்களைப் பயிற்றுவித்து படைப்பாக்கத் துறையில் பணியாற்ற அவர்களுக்கும் வாய்ப்புண்டு என்பதை உறுதி செய்வது பற்றிய பிரச்சினைகளுக்கே ஒதுக்கினார். இந்தத் துறையில் இன்னும் தமது முதல் அடிகளையே எடுத்து வைத்து வந்தவர்களின்பால் காட்டும் ஒரு தந்தையின் அக்கறையே அந்த எழுத்தாளரின் வார்த்தைகளில் குடி கொண்டிருந்தது; என்ற போதிலும் அவர் தெரிவித்த கருத்துக்கள் எவ்விதத்திலும் இளக்காரம் காட்டுவதாக இருக்கவில்லை; அவரது பேச்சைக்கேட்ட பலரையும், எப்போதுமே வானெங்கிப் பறக்கும் உருவகச் சிறப்பைப் பெற்று விளங்கும் படைப்புக்களை படைக்கும் ஓர் எழுத்தாளருக்கே உரிய அவரது உரையில் மேலோங்கி நின்ற கற்பிதக் காட்சி கவர்ந்து விட்டது:

''பொன்னிறக் கழுகு தனது குஞ்சுகளுக்கு எவ்வாறு பறக்கக் கற்றுக் கொடுக்கிறது என்பதைப் பற்றி என்னிடம் ஒரு முறை கூறினர். அது அவற்றைச் சிறகை விரித்துப் பறக்கச் செய்கிறது; அவற்றைக் கீழே இறங்க அனுமதிக்காமல், அவற்றை மேலும் மேலும் உயரே பறந்து செல்லுமாறு நிர்ப்பந்திக்கிறது; அவை முற்றிலும் களைப்படையும் வரையிலும் அவற்றை விரட்டிவிரட்டி வேலை வாங்குகிறது. இவ்வாறுதான் ஓர் இளம் பொன்னிறக் கழுகு வானில் உயரப் பறந்து செல்லக் கற்றுக் கொள்ளும்.... நமது இளம் எழுத்தாளர்களைப் பயிற்றுவிப்பதில், நாம் இந்த முறையைத்தான் பயன்படுத்த வேண்டும்;மேலும் மேலும் உயரே ஏறிச் செல்லுமாறு அவர்களை நாம் நிர்ப்பந்திக்க வேண்டும்; அப்போதுதான் இதன் பயனுக அவர்கள் பயந்தாங்கொள்ளிக் காக்கைகளாகவோ வீட்டுப் பெட்டைக் கோழிகளாகவோ இல்லாமல், இலக்கியத்தில் உண்மையான கழுகுகளாக உருப் பெறுவார்கள். ஆயினும் பொன்னிறக் கழுகானது தனது குஞ்சுகள் முதல் முயற்சியிலேயே தேவைப்பட்ட உயரத்துக்குப் பறக்க இயலாவிட்டாலோ, அல்லது அவ்வாறு பறப்பதற்கு அவை பயந்தாலோ, அவற்றின் சிறகுகளை முறித்துப் போட்டு விடுவ தில்லை. அதேபோல் அரும்பிவரும் எழுத்தாளர்களின் இறக்கைகளை முறித்துப் போடவும் நமது விமர்சகர்களுக்கு உரிமை கிடையாது.''

இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தின் 13-வது காங்கிரசுக்கு ஷோலகோவ் அனுப்பிய செய்தியில் ஒரு வசன கவிதைக்குப் பொருத்தமான ஒரு மணிக்குரல் குடிகொண்டுள்ளது; அது காம்சொமால்ஸ்காயா பிராவ்தாவில் வெளிவந்தது; இதோ அதிலிருந்து ஒரு பகுதி:

''கடந்துபோய் விட்ட எனது சொந்த இளமைப் பருவமே! நமது நாட்டின், நமது கட்சியின் நியாயப்படுத்தப்பட்ட நம்பிக்கையே! உங்களது காங்கிரஸ் நடை பெறவிருக்கும் இந்தத் தருணத்தில் உங்களை வாழ்த்தவும், உங்களைத் தழுவி அரவணைக்கவும், எனது நாட்டின் பெருமிதமான நீங்கள் உங்கள் பணியிலும் படிப்பிலும், சொந்த வாழ்க்கையிலும் எல்லா வெற்றியும் மகிழ்ச்சியும் பெறவும் வாழ்த்துக் கூற என்னை அனுமதியுங்கள்.''

கூட்டுப் பண்ணை விவசாயிகளது மூன்றாவது அகில-யூனியன் காங்கிரசில் தாம் ஆற்றிய உரையிலும் அதன் கடைசிப் பகுதியில் ஷோலகோவ் சோவியத் இளைஞர்களைத் தமது நாட்டின் நம்பிக்கையாகவும் பெருமிதமாகவும் மீண்டும் நிரூபித்துப் பேசினார். இளம் எழுத்தாளர்கள் மத்தியில் பல உண்மையான திறமைசாலிகளைக் கண்டறியவேண்டும் என்றும், இயல்பாகவே அவர்களிடமிருந்து முக்கியத்துவம் வாய்ந்த படைப்புக்களை எதிர்பார்க்க முடியும் என்றும் அவர் கூறினார்.

ஷோலகோவ் உலக நடப்புப்பற்றி எழுதிய எழுத்துக்களுக்கே உரிய தனித்த தன்மைகளைக் கருத்தில் கொண்டு, இந்தப் புத்தகம் ''வாழ்க்கை'', ''எழுத்தாளர்'', ''இளம் மக்கள்'' என்ற தலைப்புக்களைக் கொண்ட மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

முதல் பகுதி இயல்பாகவே மிகவும் பரந்து பட்டதாக உள்ளது; இதற்கு இதன் கருப்பொருள் ரீதியான பெரும் நானாவிதத் தன்மை மட்டுமல்லாமல், எழுப்பப்பட்ட விஷயங்களின் ஜீவாதாரமான முக்கியத்துவமும் காரணமாகும். இந்தப் பகுதியை மேலும் பல பிரிவுகளாக, உதாரணமாக, ''படைப்பாக்கப் பணி'', ''போர்'' என்ற பிரிவுகளாகப் பிரிப்பதால் அனுகூலம் ஏதும் விளையாது என்றே நாங்கள் முடிவு செய்தோம். இரண்டாம் பகுதி அளவிலும் இரண்டாவது இடத்தையே வகிக்கிறது. மூன்றும் பகுதியில் இளம் மக்களுக்கு நேர்முகமாகக் கூறப்பட்ட அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட கட்டுரைகளும், சொற் பொழிவுகளும், வாழ்த்துச் செய்திகளும் அடங்கியுள்ளன.

இதிலுள்ள விஷயங்களை வெவ்வேறு பிரிவுகளாக வழங்குவதன் மூலம் இந்தப் புத்தகத்தை வாசகர் பயன்படுத்திக்

கொள்வதை மேலும் எளிதாக்கவே நாங்கள் விரும்பினோம். என்றாலும் ஷோலகோவ் தமது ஒரே பேச்சின் போக்கின்போது, மனித நடவடிக்கையின் மிகவும் நாணுவிதமான துறைகள் சம்பந்தப்பட்ட ஏராளமான பிரச்சினைகளை அடிக்கடி தொட்டுக் காட்டியே செல்கிறார். ஒரு கட்டுரை பல பொதுவான பிரச்சினைகளோடு தொடங்கி, இளைஞர்களுக்கு நேர்முகமாகக் கூறும் ஒரு செய்தியோடு முடிவுறவும் கூடும். லெனின் பரிசு வழங்கும் விழாவின்போதும், 22-வது கட்சிக் காங்கிரசிலும், சோவியத் எழுத்தாளர்களின் 4-வது காங்கிரசிலும், கூட்டுப் பண்ணை விவசாயிகளின் 3-வது அகில-யூனியன் காங்கிரசிலும் ஷோலகோவ் ஆற்றிய சொற்பொழிவுகள் மூன்றாவது பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஏனெனில் இந்த உரைகள் ஒவ்வொன்றிலும் ஒரு முக்கியமான பகுதி, இளம் மக்களையும், அவர்களது கல்வியையும், நாட்டுக்கும் வரலாற்றுக்கும் அவர்கள் ஆற்ற வேண்டிய கடமையையும் பற்றியதாக உள்ளது; ஏனென்றால், அவர்கள் தான் எங்களது சோவியத் அரசின் வருங்காலம் ஆவர்.

ஓய். லுகின்

பகுதி-1

வாழ்க்கை

நோவோச்செர்க்காஸ்க் தேர்தல் வட்டார வாக்காளர்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து

. . .நமது பத்திரிகைகளில் வெளிவந்துள்ள சுப்ரீம் சோவியத் வேட்பாளர்களது உரைகள் யாவும் ஒரு பெருமித உணர்வோடு ஒலிக்கின்றன; ஏனெனில் மக்கள் தமது நம்பிக்கையை உங்கள் மீது வைத்திருப்பதே ஒரு பெருமைக்குரிய விஷயமாகும். தோழர்களே, இதே உணர்ச்சிதான் என்னுள்ளும் நிரம்பி யுள்ளது. ஆயினும் என்னுள் இந்த நியாயமான உணர்ச்சி சொந்த மகிழ்ச்சியுணர்வோடும் கலந்திருக்கிறது. டான் பிரதேசத் தேர்தல் வட்டாரங்களில் ஒன்றே என்னை வேட்பாளனாக நியமித்துள்ளது என்பதே அதற்குக் காரணம். நான் டான் பிரதேசத்தில்தான் பிறந்தேன்; இங்குதான் வளர்ந்தேன்; இங்குதான் பள்ளிக்குச் சென்றேன்; இங்குதான் ஒரு மனிதனாகவும், எழுத்தாளனாகவும், மேலும் நமது மாபெரும் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினனாகவும் பரிபக்குவமடைந்தேன். மேலும், நமது மாபெரும் மகத்தான தாயகத்தின் ஒரு விசுவாச மிக்க புதல்வனாக இருந்து வரும் அதே சமயத்தில், எனது சொந்த டான் பிரதேசத்தின் தேசபக்தனாகவும், நான் இருக் கிறேன் என்பதை அறிவிப்பதில் நான் பெருமையடைகிறேன்.

தோழர்களே, உங்கள் நகரம் ஒரு பழமையான நகரம். அது பல தேசபக்தச் சொற்பொழிவுகளைக் கேட்டுள்ளது. உள்நாட்டு யுத்த ஆண்டுகளிலும் கூடத்தான். அந்த ஆண்டு களில் ஆட்டமன் கிராஸ்னேவும் மற்றும் பிற அரசியல் சூழ்ச்சிக் காரர்களும் இங்கு தமது தாயகத்தின்பால் தாம் கொண்டிருந்த அன்பைப் பற்றிப் பேசத்தான் செய்தனர்; அதே மூச்சில் அவர்கள் நமது டான் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொள்ளு மாறு ஜெர்மானியர்களையும், அதன்பின் நேச நாட்டினர் எனக் கூறப்பட்ட ஆங்கிலேயர்களையும் பிரெஞ்சுக்காரர்களையும் இங்கு அழைத்தனர். அவர்கள் தமது தேசபக்தியைப் பற்றிப் பேசினர்;

அதே சமயத்தில் கோஸாக்குகளின் ரத்தத்தை அவர்கள் விலை சாட்டினர்; சோவியத் ஆட்சியையும் ரஷ்ய மக்களையும் எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான ஆயுதங்களுக்காக அதனைப் பண்டமாற்றுப் பொருளாக்கினர்.

வரலாறு மக்களை அவர்களது செயல்களைக் கொண்டுதான் சோதித்துப் பார்க்கிறது; அவர்களது சொற்களைக் கொண்டல்ல. தனது நாட்டின்பால் ஒரு மனிதன் கொண்டுள்ள அன்பின் அளவையும், அந்த அன்பு எந்த அளவுக்குத் தகுதியானது என்பதையும் வரலாறு சோதித்துப் பார்க்கிறது. கிராஸ்னேவும் ஏனைய சண்டாளர்களும் உண்மையான தேசபக்தி பற்றிய கருத்தையே இழிவு படுத்தி விட்டனர்; கறைப் படுத்தி விட்டனர். அவர்கள் உழைக்கும் கோஸாக் மக்களைத் துரோகத்தனமான முறையில் தவறான வழியில் செலுத்தி, அவர்களை உள்நாட்டுப் போரில் ஈடுபடுத்தினர்.

இன்றோ சோவியத் யூனியனைச் சேர்ந்த கோடிக்கணக்கான மக்கள் முழுவதும் நாட்டின்பால் தாம் கொண்டுள்ள அன்பைப் பற்றிப் பேசுகின்றனர்; அவர்கள் ஒவ்வொருவரும் தமது உயிரையே பணயம் வைத்து அதன் எல்லைகளைப் பாதுகாக்கத் தயாராக உள்ளனர். பாசமிக்க ஒரு தாயின் பரிவோடு தன்னைப் பேணி வளர்த்துள்ள நாட்டின்பால் அன்பு செலுத்துவது ஒரு மனிதனின் புனிதமான கடமையாகும். நமது தாயகமோ அதன் 17 கோடி உழைக்கும் மக்களின் புத்திர விசுவாசத்தைப்பெற்றுள்ளது.

ஏதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடிய ரஸீன், புகசேவ் போன்ற அத்தகைய மாபெரும் கிளர்ச்சிக்காரர்களைத் தோற்றுவித்த கோஸாக்குகள், புரட்சி ஆண்டுகளின் போது ஜெனரல்களால் ஏமாற்றப்பட்டனர்; உழைக்கும் ரஷ்ய வெகு ஜனங்களுக்கு எதிரான சோதரப் படுகொலைப் போரில் இழுத்து விடப்பட்டனர். கோஸாக்குகள் தமது தவற்றைப் புரிந்து கொண்டனர்; வெள்ளை எதிர்ப்புரட்சி இயக்கத்திலிருந்து வெளியேறினர்; இன்று அவர்கள் போல்ஷிவிக் கட்சியின் வழி காட்டலின் கீழ் தமது புதிய மகிழ்ச்சிமிக்க வாழ்க்கையைக் கட்டியமைத்து வருகின்றனர்.

போல்ஷிவிக் கட்சியின் முயற்சிகளும், நமது பல–தேசிய இன உழைக்கும் மக்களது முயற்சிகளும் வறுமைவாய்ப் பட்டிருந்த நமது நாட்டை ஒரு செல்வ வளமிக்க நாடாக மாற்றியுள்ளன. நாம் கனரகத் தொழில்துறையையும் சோஷலிச விவசாயத் துறையையும் கட்டியமைத்திருக்கிறோம். ஒவ்வொரு நாளும் நாம் நமது பொருளாதார ஆற்றல் வளத்தை அதிகரித்து வருகிறோம்.

சோவியத் ஆட்சி ஆண்டுகளின்போது டான் கோஸாக்குகளின் வாழ்க்கை எவ்வாறு மாறியுள்ளது என்பதைப் பாருங்கள். வெறுமனே ஸ்தானித்ஸா*க்களில் மட்டுமல்லாமல், தனித் தனியாகவுள்ள பண்ணை வீடுகளிலும்கூட, அநேகமாக ஒவ்வொரு குடும்பத்திலுமே, பள்ளிக் கல்வியைப் பெற்றுவரும் பிள்ளைகள் உள்ளனர். வயல்களில் பாடுபடுவதற்கு மட்டுமே லாயக்கான எழுத்தறிவற்ற விவசாயிகளாகத் தமது புதல்வர்களை வளர்த்து ஆளாக்க, கோஸாக் கூட்டுப் பண்ணை விவசாயிகள் இனியும் விரும்பவில்லை. தங்கள் புதல்வர்கள் இஞ்சினீயர் களாகவும், செஞ்சேனை அதிகாரிகளாகவும், விவசாய விஞ்ஞானி களாகவும், டாக்டர்களாகவும் அல்லது ஆசிரியர்களாகவும் வர வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். ஒரு புதிய கோஸாக் அறிவுத் துறையினரே உருவாகி வருகின்றனர். டான் பிரதேசம் ஒரு புதிய பொலிவைப் பெற்று வருகிறது.

நமது ஒளிமயமான வருங்காலத்தை நோக்கி நாம் தைரியத் தோடும் தன்னம்பிக்கையோடும் வீறுநடை போட்டு வருகிறோம்.

கம்யூனிஸ்டுக் கட்சி நீடூழி வாழ்க!

நமது மாபெரும் சோவியத் மக்களும், உழைக்கும் டான் கோஸாக்குகளும் நீடூழி வாழ்க!

1937

டான் பிரதேசத்தில்

படையிற் சேரப் பொறுக்கியெடுக்கப்பட்டவர்கள் போருக்குத் தம்மை வழியனுப்பி வைக்க வந்திருந்த நண்பர் களோடும் உறவினர்களோடும் ஸ்தானித்ஸாவின் பிரதானச் சதுக்கத்துக்கு அவசரம் அவசரமாக விரைந்து கொண்டிருந்தனர். எனக்கு முன்னால் சுமார் ஏழு வயதும், பத்து வயதுமான இரு சிறுவர்கள் ஓடினர். அவர்களது பெற்றோர்கள் என்னை முந்திக் கொண்டு என்னைப் பின்தங்க விட்டுச் சென்றனர். அவர்களில், தந்தை நன்கு சலவை செய்த சட்டையையும் நேர்த்தியாகச் சேர்த்துத் தைத்திருந்த கால்சராயையும் தரித்து. கட்டுமஸ்தான ஆஜானுபாகுவாய் இருந்தார்; அவரது தோற்றத்திலிருந்து அவர் ஒரு டிராக்டர் டிரைவர் எனத் தோன்றியது. தாய் கறுத்த சர்மமும், இறுக மூடிய உதடுகளும், சற்று முன்னே அவள் வடித்திருந்த கண்ணீரைக் காட்டிக் கொடுக்கும் வீங்கிய

* ஸ்தானித்ஸா: கோஸாக் கிராமம்-மொ-ர்.

கண்ணிமைகளும் கொண்ட இளம் மாதாக இருந்தாள். அவள் என்னைக் கடந்து சென்றபோது, தன் கணவருக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மிகவும் மிருதுவான குரலில் இவ்வாறு கூறினாள்:

''அவர்கள் மீண்டும் நம்மோடு மோத வருகிறார்கள். அவர்கள் ஏன் நம்மை அமைதியாக வாழவிடக் கூடாது? அவர்களுக்கு என்ன நேரக் காத்திருக்கிறது என்பதைக் கற்றுக் கொடுங்கள். செய்வீர்களா, ஃபெத்யா?''

கரடிபோல் தோற்றமளித்த ஃபெத்யா எந்திர எண்ணெயினால் கறுத்துப் பிசுக்குப் பிடித்துப் போயிருந்த ஒரு கைக்குட்டையைக் கொண்டு வியர்வை பொங்கும் தமது கைகளைத் துடைத்தவாறே, தம் மனைவியை நோக்கிக் கருணை காட்டும் பாவத்தோடு புன்னகை செய்தார்; கனத்து உறுமும் குரலில் இவ்வாறு கூறினார்:

''இரவு முழுவதும்தான் நீ எனக்குப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தாய். இன்னும் நீ அதனை நிறுத்தவில்லை. இப்போது இவ்வளவு போதும். நான் என்ன செய்ய வேண்டுமென்பது எனக்குத் தெரியும். நீ ஒன்றும் எனக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. நீ செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். கினிலோய் லோகை நாம் கடந்து வரும்போது அவர்கள் வைக்கோலைப் போர்போட்டுக் குவித்து வைத்துக் கொண்டிருந்த லட்சணத்தைப் பார்த்தோமே, அந்த மாதிரியிலேயே உங்கள் கோஷ்டித் தலைவரும் போர் போட்டுக் கொண்டேபோனால், நாங்கள் அவரை உயிரோடு தோலை உரித்து விடுவோம் என்று நீ வீடு திரும்பியவுடன் அவரிடம் போய்ச் சொல். இந்த விஷயத்தை அவரிடம் சொன்னால் போதும். சொல்வாயா?''

அந்தப் பெண் இதனை ஆட்சேபித்து ஏதோ கூற முயன்றாள்: ஆனால் அவளது கணவர் கோபாவேசமிக்க ஒரு பார்வையிலேயே அவளை வாயடைக்கச் செய்துவிட்டார்; பின்னர் மேலும் கனத்த உறுமற் குரலில் இவ்வாறு கூறினார்:

''தயவு செய்து வாயை மூடு. நீ பேசியது போதும். எங்களை அணிவகுத்து நிற்கச் செய்தவுடனேயே அவர்கள் நீ சொல்ல நினைப்பதைக் காட்டிலும் மிகவும் சிறப்பான முறையில் எல்லாவற்றையும் எங்களுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள்.''

* * *

படையில் சேரப் பொறுக்கியெடுக்கப்பட்டவர்கள், சதுக்கத்திலுள்ள பேச்சாளர் மேடை முன்னால் ஒழுங்கான வரிசைகளாக அணிவகுத்து நிறுத்தப்பட்டார்கள். பலமிக்க மார்பைக்

கொண்ட உயரமான கோஸாக்கான யாகோவ் ஜெம்லியாசோவ் தான் முதலில் பேசினார்:

''நானே ஒரு பீரங்கிப் படை வீரனாக, செஞ்சேனைக் கொரில்லாப் படை வீரனாக இருந்தவன்தான். நான் உள் நாட்டுப்போர் முழுவதிலும் போரிட்டேன். என் மகனும் என்னைப்போலவே ஒரு பீரங்கிப் படை வீரன்தான். அவன் செஞ்சேனை அணிகளில் பணி புரிந்து வருகிறான். அவன் பின்னிஷ் போரில் போரிட்டான்; காயமடைந்தான்; இப்போது அவன் ஜெர்மன் நாஜிகளை எதிர்த்துப் போராடி வருகிறான். என்னால் ஜெர்மானியரின் துரோகத்தைச் சகித்துக் கொள்ள முடிய வில்லை. எனவே என்னையும் செஞ்சேனையில் ஒரு தொண்டர் படை வீரனாகச் சேர்த்துக் கொள்ளுமாறும், இருபது ஆண்டுகளுக்கு முன்னால் அந்த வெள்ளை வேசி மகன்களுக்கு நாங்கள் செம்மையாக உதை கொடுத்ததைப் போலவே, நாஜி வேசி மகன்களுக்கும் உதை கொடுக்கக் கூடிய விதத்தில், என்னை என் மகனது யூனிட்டிலேயே சேர்க்குமாறும் கோரி அவர்களிடம் நான் எனது மனுவைக் கொடுத்தேன். நான் ஒரு கம்யூனிஸ்டாகப் போர்க்களம் புக விரும்புகிறேன். என்னை ஒரு பரீட்சார்த்த உறுப்பினனாகச் சேர்த்துக் கொள்ளுமாறு கட்சி ஸ்தாபனத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.''

தமது முறை வந்தபோது முதிய ஆலைத் தொழிலாளியான பிராவ்தெங்கோ இவ்வாறு கூறினார்:

''செஞ்சேனையில் என் புதல்வர்கள் இருவர் இருக்கிறார்கள். ஒருவன் விமானப் படையில் இருக்கிறான்; மற்றொருவன் காலாட் படையில் இருக்கிறான். வானத்திலும் சரி அல்லது நிலத்திலும் சரி, எதிரிகளில் எவருமே மிஞ்சி நிற்காத வரையில், எதிரியை ஈவிரக்கமற்றுக் கொன்று தள்ளுவதற்கு நான் அவர்களுக்குத் தந்தையின் ஆசீர்வாதத்தை வழங்கியிருக்கிறேன். மேலும் அவர்களுக்கு உதவி தேவைப் படுமானால், நானும் துப்பாக்கியை ஏந்தி, முந்திய காலத்தில் செய்ததுபோல் பகைவர்களை நானே தாக்கிக் கொல்லுவேன்.''

* * *

பச்சைப் பசேலென்று கனத்துத் தடித்திருந்த மாரிக்காலக் கோதுமைப் பயிர்கள், இளம் மூங்கில் கட்டு வரிசையைப்போல் உயரமாக, ஒரு சுவராக எழுந்து நின்றன. ரை தானியப்பயிர் ஒரு சாதாரண மனிதனைக் காட்டிலும் உயரமாக இருந்தது. அதன் விறைப்பான நீலம்பாய்ந்த தாளிதழ்கள் அவற்றின் கனத்தினாலேயே கீழ்நோக்கி இழுக்கப்பட்டு, காற்றில் பலமாக ஆடிக்கொண்டிருந்தன.

குதிரை மீது ஏறிவந்த ஒருமனிதர் ரோட்டுப் பாதையில் தோன்றினார். அவர் எங்கள் காருக்கு வழிவிடுவதற்காக ரை தானிய வயலுக்குள் திரும்பி, மறுகணமே கண்பார்வையிலிருந்து மறைந்து போய்விட்டார். பசுமை குலுங்கும் பின்னணியில் மலர்ந்து வரும் குருக்கத்திப் பூவைப் போல் தோன்றிய அவரது கோஸாக் தொப்பியின் மீது கட்டப்பட்டிருந்த சிவப்புப் பட்டியைத்தவிர, அந்த மனிதரின் வெள்ளைச் சட்டையையோ அல்லது அந்தக் குதிரையையோ நாங்கள் காண முடியவில்லை.

நாங்கள் காரை நிறுத்தினோம்; குதிரையில் வந்த அந்த மனிதர் எங்களோடு பேசுவதற்காக ரை தானிய வயலை விட்டு வெளியே வந்தார்.

''பாருங்கள் இதை! இந்த ஆண்டு இது மிகவும் அழகாயில்லையா?'' என்று ரை தானியப் பயிரைச் சுட்டிக் காட்டியவாறே கூறினார் அவர்: ''இதைத்தான் அந்த அவிசாரிப் பயல் ஹிட்லர் அழிக்கப்பார்க்கிறான். அவன் நாசமாய்ப் போக! இந்தச் சண்டையை அவன் தொடங்கினால் அவன்தான் வருத்தப்படப் போகிறான். நிச்சயம் அவன்தான் வருந்தப் போகிறான். தோழர்களே, நான் வீட்டுக்குப்போய் இரண்டு நாட்களாகிறது. என்னிடம் புகையிலை தீர்ந்து போய்விட்டது. எனவே எனக்கு ஒரு சிகரெட் கொடுங்கள். கொடுப்பீர்களா? மேலும் போர் முனையில் போர் புதிய செய்தி என்ன என்பதையும் கூறுங்கள்.''

மிகவும் சமீபத்தில் வெளிவந்த அறிக்கைகள் என்ன கூறியுள்ளன என்பதை நாங்கள் அவரிடம் கூறினோம்; அவர் அதனைக்கேட்டுக் கொண்டிருக்கும்போது, சூரிய வெப்பத்தால் வெளிறி நரையோடிவரும் தமது மீசையைத் தடவி விட்டுக் கொண்டேயிருந்தார்.

''நமது வாலிபப் பிள்ளைகள் உற்சாகத்தோடு மிக நன்றாகப் போரிட்டு வருகிறார்கள். இல்லையா? சரி. மூன்றுபோர்களில் போராடியுள்ள அனுபவசாலிகளான நம்மையும் போரிட அழைத்தால் என்ன நிகழும்? அந்த நாஜிகளை நாம் அவர்களது அடிவயிறு வரையிலும், மருத்துவச்சிகள் அந்த வேசி மக்களின் தொப்புள் கொடிகளை எங்கே கட்டி முடிந்தார்களோ அதுவரையிலும், வெட்டிப்பிளந்து விடுவோம். நான் சொல்கிறேன். அவர்கள்தான் வருந்தப் போகிறார்கள்!''

அந்தக் கோஸாக் குதிரையை விட்டிறங்கித் தரையில் குந்தி அமர்ந்து கொண்டார்; காற்றடிக்கும் திசைப் பக்கமாகத் தமது முதுகைத் திருப்பிக் கொண்டு நாங்கள் அவருக்குக்

கொடுத்த சிகரெட்டைப் பற்ற வைத்தார். என்றாலும் கடிவாளத்தை மட்டும் அவர் கை நழுவ விட்டு விடவேயில்லை.

''உங்கள் பண்ணையில் நிலைமைகள் எவ்வாறு உள்ளன. முதியவர்களான கோஸாக்குகள் இந்தப் போரைப் பற்றி என்ன கூறுகிறார்கள்?'' என்று நான் அவரிடம் கேட்டேன்.

''நல்லது. நாங்கள் வைக்கோல் போர் போடுவதை முடித்து விட்டு, பின்னர் ரை தானியத்தையும், கோதுமையையும் அறுவடை செய்வதே சரியாகவும் முறையாகவும் இருக்கும் என்று தீர்மானித்தோம். என்றாலும், செஞ்சேனைக்கு நாங்கள் அதற்கும் முன்பே அவசியமானால், எந்தநேரத்திலும் வரத் தயாராயிருக்கிறோம். நாங்கள் இல்லாமலே பெண்கள் சமாளித்துக் கொள்வார்கள். அவசியம் நேர்ந்தால், டிராக்டர்களையும், அறுவடைக் கம்பைன் எந்திரங்களையும் எவ்வாறு கையாள்வது என்பதையும் நாங்கள் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். சோவியத் ஆட்சியும் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டுதான் இருக்கிறது. அதற்குத் தூங்குவதற்கே நேரம் கிடையாது'' என்று குறும்பாகக் கண்ணைச் சிமிட்டியவாறே கூறினார் அவர்: ''நிச்சயமாக இங்கு, இந்த ஸ்டெப்பி வெளியில் வசிப்பது மிகவும் அமைதியாகத்தான் உள்ளது. என்றாலும் கோஸாக்குகள் என்றுமே அமைதியான வாழ்க்கையைத் தேடிக்கொண்டிருந்தது கிடையாது; வேறெருவர் முதுகின் பின்னால் மறைந்து கொள்ளவும் அவர்கள் என்றுமே முயன்றதும் இல்லை. இந்தப் போரில் நாங்கள் மகிழ்ச்சியோடு போரிடுவோம். இந்த அவிசாரி மகன் ஹிட்லர் விஷயத்தில் மக்கள் வெறி பிடித்தவர்களாகத்தான் உள்ளனர். ஆமாம். அவனுக்கு என்னதான் நேர்ந்து விட்டது? அவன் போருக்காகத் துடியாய்த் துடித்துச் சாகிறானு அல்லது வேறு காரணம் இருக்குமா?''

அவர் அமைதியாக மேய்ந்து கொண்டிருந்த தம் குதிரையை ஓரக் கண்ணால் அடிக்கடி பார்த்தவறே, தமது சிகரெட்டை மௌனமாகப் புகைத்துக் கொண்டிருந்தார்.

''சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று நான் போரைப் பற்றிக் கேள்விப்பட்டபோது, என்னுள்ளே என்னென்னவோ எண்ணங்கள் தோன்றின'' என்று எதையோ நினைவு கூரும் தொனியில் மீண்டும் பேசத் தொடங்கினார்: ''அன்றிரவு என்னால் தூங்கவே முடியவில்லை. சென்ற ஆண்டில் கொலொரடோ வண்டுப்பூச்சி நம்மைத் தாக்கியது, இந்த ஆண்டில் ஹிட்லர் தாக்குகிறான் என்பதை எண்ணிப் பார்த்த வாறே நான் படுத்திருந்தேன். எப்போதும் ஏதாவதொரு

தொல்லை முளைத்துக் கொண்டேயிருக்கிறது. ஒவ்வொருவரின் மீதும் பாய்ந்து தாவி, எவருக்கும் எந்தவொரு நிம்மதியையும் கொடுக்காத அவன் எத்தகை சீலப் பேனுக இருக்க வேண்டும் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். பிறகு நான் இறுதிவரையிலும் போராடிய அந்த முதல் ஜெர்மன் போரை நினைத்துப் பார்த்தேன்; எதிரிகளை நான் எவ்வாறு வெட்டி வீழ்த்தினேன் என்பதையும் நினைவு கூர்ந்தேன்... இதோ இந்தக் கையினல் அவர்களில் எட்டுப் பேரை வெட்டி வீழ்த்தினேன். எல்லாம் தாக்குதலின்போதுதான்.'' இவ்வாறு கூறும்போது அவர் வெட்கத்தோடு புன்னகை புரிந்தார்; அவரது குரலும் தாழ்ந்தது: ''இந்தக் காலத்தில் நான் அதைப்பற்றி வாய்விட்டுக் கூற முடியும்; ஆனல் முன்போ அது என்னவோ அசிங்கமாகத்தான் தோன்றியது...அந்தப் போரில் நான் இரண்டு செயின்ட் ஜார்ஜ் சிலுவை விருது களையும் இரண்டு மெடல்களையும் பெற்றேன். அவற்றை நான் சும்மா காரணமில்லாமல் என் மார்பில் குத்தித்தொங்க விட்டுக் கொண்டிருக்கவில்லை, தெரியுமா? நான் அதைச் சொல்லக் கூடாதுதான், எனவே நான் சென்ற யுத்தத்தைப் பற்றிச் சிந்தித்தவாறே படுக்கையில் படுத்துக் கிடந்தேன்; அந்த ஜெர்மன் போரில் ஹிட்லரும் பங்கெடுத்தான் என்று ஒரு பத்திரிகையில் படித்த செய்தி என் நினைவுக்கு வந்தது. இதனை நினைவு கூர்ந்ததும் மிகவும் கடுமையான ஒரு வருத்த உணர்வு என் இதயத்தைக் கவ்விப் பிடித்தது. நான் படுக்கை யில் எழுந்து உட்கார்ந்தேன்; வாய்விட்டுப் பேசினேன்: 'நாச மாய்ப் போக! அந்தச் சமயத்தில் என் வழியில் குறுக்கிட்ட அந்த எட்டுப் பேரில் அவனும் ஒருவனுக ஏன் இல்லாது போனன்? அவ்வாறு இருந்திருந்தால் நான் என் வாளை ஒரே சுழற்று சுழற்றியிருப்பேனே, அவனும் இரண்டு துண்டாக வெட்டுப்பட்டு வீழ்ந்திருப்பானே!' என் மனைவி விழித்துக் கொண்டு விட்டாள். 'எதைக் குறித்து அலட்டிக் கொண்டிருக் கிறீர்கள்?' என்று என்னிடம் கேட்டாள். 'எல்லாம் ஹிட்லரைப் பற்றித்தான். அவன் படுநாசமாய்ப் போக! தூங்கு, நஸ்தாஸ்யா, தூங்கு. இதெல்லாம் உன் புத்திக்கு எட்டாது' என்று கூறினேன் நான்.''

அவர் தமது சிகரெட்டைக் கசக்கி அணைத்தார்; சேணத் தின்மீது தாவி ஏறினர்.

''நல்லது. கவலை வேண்டாம். அவனுக்கு நேரவிருக்கும் கதியை அவன் அடைந்தே தீருவான். ஒழியட்டும் அவன்.'' இவ்வாறு கூறிவிட்டு அவர் கடிவாளத்தைச் சுருட்டிக்

கையிலெடுத்தார்; என் பக்கமாகத் திரும்பிக் கண்டிப்பான குரலில் சொன்னார்: "நீங்கள் மாஸ்கோவுக்குச் செல்ல நேர்ந்தால், எல்லா வயதையும் எட்டிய டான் கோஸாக்குகள் தமது கடமையைச் செய்யத் தயாராயிருப்பதாக அவர்களிடம் கூறுங்கள். நல்லது, சென்று வருகிறேன். எங்களது பெண் குலத்துக்கு உதவுவதற்காக நான் வைக்கோல் போர் போடும் இடத்துக்கு விரைவில் போயாக வேண்டும்."

அவர் தமது குதிரையை இடித்து முடுக்கினார்; ஒரே நிமிடத்தில் கண் மறைந்து போய்விட்டார். பள்ளத்தாக்கின் களிமண் சரிவின்மீது அவரது குதிரையின் கால்குளம்புகள் உதைத்தெழுப்பிய மெல்லிய தூசிப் படலங்கள்தான் காற்றில் மிதந்து, அவர் போன பாதையை எங்களுக்குக் காட்டின.

* * *

அன்று மாலையில் விவசாயிகளின் கோஷ்டியொன்று மொக்கோல்ஸ்கி கிராம சோவியத்தின் முன்மண்டபத்தில் கூடியிருந்தது. குழி விழுந்த கன்னங்களைக் கொண்ட மத்திய வயது மனிதரான குஸ்னெத்சோவ் பேசிக் கொண்டிருந்தார்; வேலை செய்து களைத்துப்போன அவரது பெரிய கரங்கள் அவரது முழங்கால்களின்மீது அமைதியாக விழுந்து கிடப்பதை நான் கண்டேன்.

"...நான் அவர்கள் கையில் சிக்கியபோது காயம் பட்டிருந்தேன். எனக்கு உடம்பு சற்றே குணமானவுடனேயே அவர்கள் என்னை வேலை வாங்க ஆரம்பித்து விட்டனர். அவர்கள் எங்களில் எட்டுப்பேரை ஓர் ஏரில் பூட்டி, அவர்களுக்காக அவர்களது ஜெர்மன் நிலத்தை உழுமாறு செய்தனர். இதன் பின்னர் அவர்கள் என்னை நிலக்கரிச் சுரங்கத்துக்கு மாற்றி விட்டனர். நாங்கள் அன்றுடம் பாரம் ஏற்ற வேண்டிய நிலக்கரியின் கோட்டா அளவு எட்டு டன். ஆனால் எங்களால் இரண்டு டன்களைக்கூட ஏற்ற முடியவில்லை. நாங்கள் அந்தக் கோட்டா அளவைப் பூர்த்தி செய்யாதபோது, எங்களுக்கு அடிகள்தான் விழுந்தன. அவர்கள் எங்களைச் சுவரைப் பார்க்க நிறுத்தி வைத்து எங்கள் மூக்கு சுவரில்போய் மோதுமாறு எங்கள் பிடரியில் அடித்தார்கள். இந்த அடிகளுக்குப் பிறகு அவர்கள் எங்களை முள்வேலிக் கம்பிகளாலான கூண்டுகளில் அடைத்துப் பூட்டுவார்கள். அந்தக் கூண்டுகள் மிகவும் உயரம்

குறைந்தவை; அவற்றுள் நாங்கள் காலகளே மடக்கிக் குந்திதான் இருக்க முடியும். இவ்வாறு இரண்டு மணி நேரம் அடைத்து வைத்தபின், அவர்கள் எங்களை ஒரு துரட்டியால் வெளியே இழுத்துப் போடுவார்கள்; ஏனெனில் எங்களால் ஊர்ந்துவரக்கூட முடிவதில்லை.'' குஸ்னெத்சோவ் தமது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களைக் கனிவான கண்களோடு பார்த்தார்; பின்னர் அதே அமைதியான முறையில் தொடர்ந்து பேசினார்: ''என்னைச் சற்றே ஏறெடுத்துப் பாருங்கள். நான் இப்போது எலும்பும் தோலுமாய் நோய்வாய்ப்பட்டவனாக இருக்கிறேன். என்றாலும் நான் எழுபது கிலோ எடை இருக்கிறேன். ஆனால் சிறை முகாமில் இருந்தபோதோ, நான் அங்கிருந்த இரண்டரை ஆண்டுக் காலம் முழுவதிலும், நாற்பது கிலோவுக்கு மேல் என்றுமே இருந்ததில்லை.''

ஒரு கணநேர மௌனத்துக்குப் பின்னர் அவர் மீண்டும் பேசினார்:

''எனது புதல்வர்களில் இருவர் இப்போதும் நாஜிகளை எதிர்த்துப் போரிட்டு வருகின்றனர். இவர்களோடும் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டிய காலம் எனக்கு வந்து விட்டது என்றே நான் கருதுகிறேன். பிரஜைகளே, உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள். அவர்களை நான் கைதிகளாகப் பிடிக்கப் போவதில்லை. அவ்வாறு செய்ய என்னால் முடியவே முடியாது.''

பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள்மீது ஓர் ஆழமான, விழிப்பூட்டப் பெற்ற மௌனம் பரவியது. தமது குறுகிய கபில நிறக் கைகளின்மீது வைத்த பார்வையை விலக்காமலே குஸ்னெத்சோவ் மேலும் மிருதுவான குரலில் இவ்வாறு கூறினார்:

''உங்கள் மன்னிப்பைத்தான் வேண்டுகிறேன், பிரஜைகளே... ஆனால் அவர்கள் என் உடலிலிருந்து அதன் பலம் முழுவதையும், அதன் கடைசிச் சொட்டு வரையிலும் உறிஞ்சித் தீர்த்து விட்டனர். ஆயினும் நான் போராட வேண்டியிருக்குமாயின், நான் அவர்களது சாதாரணச் சிப்பாய்களை வேண்டுமானால், கைதிகளாகப் பிடித்து வரலாம்; ஆனால் அவர்களது அதிகாரி களை—என்றுமே கைதிகளாகப் பிடித்துக் கொண்டு வரவே மாட்டேன். அவ்வாறு செய்ய என்னால் முடியவே முடியாது அவ்வளவுதான் நான் சொல்ல முடியும். அவர்களது அந்தக் கனவான்களான அதிகாரிகளின் கைகளில் நான் அனுபவித்த படுபயங்கரமான துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. எனவே நீங்கள் என்னை மன்னிக்கத்தான் வேண்டும்.''

அவர் எழுந்து நின்றார்—பகைமையுணர்வினால் மேலும் பிரகாசமாகவும் மேலும் இளமைமிக்கதாகவும் திடீரென்று தோன்றிய கண்களைக் கொண்ட பெரிய, மெலிந்த மனிதனைக—அவர் எழுந்து நின்றார்.

* * *

போரின் இரண்டாவது நாளன்று வாஷ்சயாயேவ்ஸ்கி கூட்டுப் பண்ணையில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் குழந்தையும் வேலைக்கு வந்து விட்டனர். வேலையிலிருந்து வெகு காலத்துக்கு முன்பே ஓய்வளிக்கப்பட்டு விட்ட மிகவும் முதியவர்களும் கூடத் தம்மால் முடிந்த வேலையைச் செய்ய முன் வந்து விட்டனர். கதிரடிக்கும் களத்து மேட்டைச் சுத்தம் செய்யும் வேலை முழுவதும் முதியவர்களான கிழவர்களுக்கும், கிழவிகளுக்குமே ஒதுக்கிவிடப்பட்டது. மூதுமைப் பருவத்தினால் உண்மையிலேயே பூசணம் பிடித்தவர் போல் தோன்றிய ஒரு படுகிழவர், தமது நடுநடுங்கும் கால்களை அகல விரித்து வைத்தவாறு ஒரு பெஞ்சின் மீது அமர்ந்து, அந்தக் களத்து மேட்டை ஒரு மண்வெட்டியினால் சுரண்டிச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

''தாத்தா, ஏன் உட்கார்ந்து கொண்டு வேலை செய்கிறீர்கள்?'' என்று கேட்டேன் நான்.

''என் முதுகு வளைந்து கொடுக்காது. மகனே, மேலும் உட்கார்ந்திருப்பதால் நான் மகிழ்ச்சிகரமாகவும் இருக்கிறேன்.''

அங்கிருந்த முதிய மாதர்களில் ஒருவர் அவரிடம் இவ்வாறு கூறினார் : ''நீங்கள் ஏன் வீட்டுக்குப் போகக் கூடாது? நீங்கள் இல்லாமலே நாங்கள் சமாளித்துக் கொள்வோமே.''

இதைக் கேட்டதும் அந்தப் படுகிழவர் தமது ஒளியற்ற, குழந்தைத் தன்மைமிக்க கண்களை உயர்த்தினார்; அந்த மாதை நோக்கிக் கடுகடுப்போடு இவ்வாறு கூறினார்:

''எனது பேரப் பிள்ளைகள் மூவர் இந்தப் போரில் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே என்னால் முடிந்த மட்டும் எந்த வழியிலாவது அவர்களுக்கு நான் உதவத்தான் வேண்டும். மேலும் எனக்குப் போதுமே செய்கிற அளவுக்கு உனக்கொன்றும் அத்தனை வயது வந்து விடவில்லை. என் வயது உனக்கு வரும் வரையிலும் பொறுத்திரு. அப்புறம் நீ விரும்பு வதையெல்லாம் எனக்குப் போதுமே செய்!''

* * *

டான் கோஸாக்குகளின் இதயங்களில் இரண்டு உணர்ச்சிகள் வாழ்ந்து வருகின்றன: தமது தாயகத்தின்பால் அன்பு, நாஜிப் படையெடுப்பாளர்கள்மீது பகைமை என்பனவே அவை. அவர்

களது அன்பு என்றென்றும் வாழ்ந்து வரும்; ஆயினும் அவர்களது பகைமையுணர்வு, எதிரி முற்றிலும் முறியடிக்கப்படும் வரையிலும் இருந்து வரட்டும்.

மக்களது கோபாவேசத்தின் கொடிய சீற்றத்தையும் இந்தப் பகைமையையும் கிளறி விட்டுள்ளவர்கள் அழிந்தொழிக.

1941

கோஸாக் கூட்டுப் பண்ணைகள்

எல்லையற்ற டான் பிரதேசத்து வயல்களில் அறுவடை முழு வேகத்தோடு நடந்து கொண்டிருந்தது. டிராக்டர்கள் கண கணத்து முழங்கின; அறுவடை எந்திரங்களிலிருந்து எழும் மெல்லிய நீலநிறப் புகை ரை தானியக் கதிரின் வெண்ணிறத் தூசியோடு கலந்தது. நெடிய கனத்த ரை தானியக் கதிரைத் தமது இறக்கைகளால் அடித்துக் கசக்கிக் கொண்டிருந்த அரியும் கருவிகள் விர்ரென்று சுழன்று கொண்டிருந்தன. பார்வைக்கு இது அமைதி தவழும் காட்சியாகவே தோன்றியது; எனினும் எல்லாவற்றின் மீதும் போரின் கொடிய முத்திரை பதிந் திருந்தது. மக்களும் எந்திரங்களும் வழக்கத்திலிருந்து மாறு பட்ட வேகத்திலேயே செயல்பட்டுக் கொண்டிருந்தனர். வேலையின் வேககதி முன்னைக் காட்டிலும் மேலும் விரைவாகவும், விறுவிறுப்பாகவும் இருந்தது. மந்தைகளிலிருந்து அங்கு கொண்டு வரப்பட்டிருந்த செம் பொன்னிறம் படைத்த டான் குதிரைகள் கிராமச் சதுக்கத்திலிருந்த தாம்புக் கொட்டில்களில் கனைத்துக் கொண்டிருந்தன. சூரிய வெப்பத்தால் காய்ந்து கறுத்திருந்த இளம் குதிரைக்காரர்கள் நிறம் மங்கிப்போன குதிரைப்படைத் தொப்பிகளைத் தரித்தவர்களாய், படைக்குப் பதிவு செய்யும் நிலையங்களை நோக்கித் தமது குதிரைகளை ஓட்டிச் சென்றனர்; வயலில் கதிர்த்தாள்களைக் கட்டுப் போட்டுக் கொண்டிருந்த மாதர்கள் நிமிர்ந்து நின்று, அவர்களை நோக்கித் தமது கையை வெகு நேரம் ஆட்டியவர்களாய் இவ்வாறு சத்த மிட்டனர் : "கோஸாக்குகளே, பத்திரமாக நல்ல ஆரோக்கியத் தோடு திரும்பி வாருங்கள்! அதிருஷ்டம் உங்கள் பக்கம் இருக் கட்டும். நாஜி விரியன் பாம்புகளை அடித்துக் கொல்லுங்கள்! டான் பிரதேசத்தின் ஆழ்ந்த மரியாதை வணக்கங்களை புத்யோன்னிக்குத் தெரிவியுங்கள்!"

புதிதாக அறுவடை செய்யப்பட்ட தானிய மூட்டைகளை உயரமாகப் பாரம் ஏற்றி வைக்கப்பட்டதும், வசந்த பருவத்து வெங்காயங்களைப்போல் பசுமை மிக்கதும், மழைத் துளியின்

ஈரமே படாததுமான அற்புதமான வைக்கோல் மலைகள் கம்பீரமாக ஆடி வருவதுமான சாரிசாரியான வண்டிகள் தானியக் கொள்முதல் கிட்டங்கியை நோக்கிச் செல்லும் சாலைகளில் வந்து கொண்டிருந்தன. செஞ்சேனைக்கு எல்லாமே தேவைப்பட்டன; மேலும் எல்லாமே செஞ்சேனைக்காகச் செய்து வரப்பட்டன. மக்கள் அனைவரின் சிந்தனைகளும் அங்கேதான், போர் முனையில் தான் இருந்தன. மேலும் எல்லா இதயங்களும் ஒரே விருப்பத் தோடுதான் துடித்துக் கொண்டிருந்தன; நாஜி விரியன் பாம்பின் முதுகெலும்பைக் கூடிய விரைவில் முறித்தாக வேண்டும்.

ஒரு முதிய விவசாயி தமது கைகளில் ஒரு கோதுமைக் கதிரை வைத்துக் கசக்கியபடி புன்னகை புரிந்தவாறு நின்று கொண்டிருந்தார்.

''நமது நேச நாடுகளாக மாறியுள்ள இங்கிலாந்தும் மற்றும் பிற சாமர்த்தியம் மிக்க நாடுகளும் இருக்கட்டும். இயற்கைத் தாயே நமக்கு ஆதரவாகவும், ஹிட்லருக்கு எதிராகவும்தான் இருக்கிறார். இந்த ஆண்டின் அறுவடையைத்தான் பாருங்களேன். இது கற்பனைக் கதையில் நிகழ்ந்தது போல் இருக்கிறது; கோதுமைத் தண்டுகள் தூண்களைப்போல் அத்தனை கனமாக வளர்கின்றன; உருளைக் கிழங்குகளோ வண்டிச் சக்கரங்களின் அளவுக்குப் பெரிதாக உள்ளன. கோதுமை, சூரியகாந்தி, சாமை முதலியவற்றின் வசந்தகாலப் பயிருக்கு மழை தேவைப் பட்டது; மழையும் அறுவடைக் காலத்துக்கு முன்னுல் சரியான வேளையில் பெய்து விட்டது! இந்தப் பயிர்கள் யாவும் புண்பட்ட கண்களுக்கு ஒரு விருந்தாகவே உள்ளன. எல்லாமே நமது நன்மைக்குத்தான்.''

போல்ஷிவித்ஸ்கி நிர்ணய விலைக் கூட்டுப் பண்ணையில், நான் அறுவடைக் கம்பைன் எந்திர ஆபரேட்டரான பியோதர் ஜெலென்கோவுடன் பேசினேன். தாம் அறுவடை செய்திருந்த முதல் ஹெக்டர் நிலத்திலேயே பங்கர் எடைக்கு 2.8 டன்கள் விளைச்சல் கண்டுள்ளது எனக் கூறினார் அவர். முக்கியமானது என்னவென்றால், இந்தத் தானியத்தில் ஈரப் பதமும் கணிசமான அளவுக்குக் குறைவாகவே உள்ளது; அத்துடன் இதில் கலப்பட தானியம் எதுவும் கிஞ்சித்தும் தென்படவில்லை. சில இடங்களில் ஒரு ஹெக்டரில் மூன்று அல்லது மூன்றரை டன் அளவுக்குக்கூட விளைச்சல் கண்டிருந்தது.

ஜெலென்கோவ் எந்திரத்தை ஓட்டிக் கொண்டே அதில் சேகரிக்கப்பட்டிருந்த தானியத்தை வெளியே கொட்டினார்; எனவே அவர் நிற்கும் வரையிலும் நான் சற்றுக் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. இந்தக் குறுகிய ஓய்வு நேரத்

தின்போது, அவர் தமது எந்திரத்தை விட்டுக் கீழே இறங்கி, பங்கருக்குள் உற்றுப் பார்த்தார்; பின்னர் அவர் புகை பிடிப்பதற்காக, சிலிர்த்து நின்ற அரிதாள்களுக்கு மேலாகச் சற்றுத் தூரம் நடந்து சென்றார்.

''நீங்கள் போர்முனைக்குப் போக வேண்டியிருந்தால், உங்கள் இடத்தில் வேலை பார்க்க யாரையாவது ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?''

''நிச்சயமாக''

''யாரது?''

''என் மனைவி.''

''அவள் உங்கள் வேலையைச் செய்ய முடியும் என்பது உங்களுக்கு நிச்சயம்தானே?''

ஜெலென்கோவ் வெயிலால் கறுத்தும், தன்மீது படிந்திருந்த தூசிப்படலத்தால் மேலும் கறுத்தும் போயிருந்த தமது முகமெல்லாம் விரியப் புன்னகை புரிந்தார். சக்கரத்தைச் சுற்றிக் கொண்டிருந்த அந்த இளம் மாது வேலிக் கம்பியின்மீது சாய்ந்த வாறு இவ்வாறு கூறினாள்:

''நான்தான் ஜெலென்கோவின் மனைவி. இந்த வேலையை நான் தாற்காலிகமாகத்தான் செய்து வருகிறேன். சென்ற ஆண்டில் நான் கம்பைன் எந்திர ஆபரேட்டராக வேலை பார்த்தேன்; என் கணவரைவிட அதிகமாகவும் சம்பாதித்தேன்.''

இதனை நினைவூட்டியது ஜெலென்கோவுக்குப் பிடிக்கவில்லை என்று தெரிந்தது; அவர் ஓரளவு எரிச்சலோடு இவ்வாறு கூறினார்:

''நிலைமை மிகவும் மோசமாகிப் போய் விட்டால், எனக்குப் பதிலாக இவள் வேலை செய்ய முடியும் என்பது உண்மைதான். என்றாலும் எங்களுக்கு வேறு திட்டங்கள் உள்ளன. நாங்கள் இருவருமே போர் முனைக்குச் செல்ல விரும்புகிறோம்...''

தனது புருஷனையே பேசிக்கொண்டிருக்குமாறு விட்டுவிடும் பெண்களின் ரகத்தைச் சேர்ந்தவள் அல்ல மரினா ஜெலென்கோவா. எனவே அவள் தன் கணவர் தொடங்கிய பேச்சைத் தானே முடித்து வைத்து விட்டாள்:

''எங்களுக்குப் பிள்ளைகள் இல்லை; எனவே நாங்கள் இருவரும் சுலபமாகச் சேர்ந்தே போக முடியும். மேலும், என் கணவரைவிட மோசமாக இல்லாமல், என்னாலும் ஒரு டாங்கியை ஓட்ட முடியும். அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதே இல்லை!''

ஜெலென்கோவ் மீண்டும் தமது கம்பைன் எந்திரத்திடம் விரைந்து சென்றார்; வெட்டிப் பேச்சில் பொழுதை வீணாக்க அவருக்கு நேரமில்லை. ரை தானியம் பயிர் செய்யப்பட்டிருந்த அந்தப் பண்ணையின் 540 ஹெக்டர் நிலப்பரப்பில் 417 ஹெக்டர்கள் அரிவாள்களால் ஏற்கெனவே அறுவடை செய்யப்பட்டு விட்டன; இழந்து விட்ட நேரத்தை ஈடுசெய்வதற்கு அவர் துடியாய்த் துடித்தார்.

அந்த ஆண்டில் ராஸ்தாவ் பிரதேசத்தைச் சேர்ந்த மிகப் பெரும்பாலான கூட்டுப் பண்ணைகளில் மிகமிகச் சாதாரணமான அரிவாள்களே பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. அறுவடைக் கம்பைன் எந்திரங்களைக் கொண்டு அறுவடை செய்வதற்குப் போதுமான அளவுக்குத் தானியங்கள் முற்றும் வரையிலும் காத்துக் கொண்டிராமல், சாதாரணக் கருக்கரிவாள்களைக் கொண்டே அவர்கள் அறுவடை வேலையைத் தொடங்கி விட்டனர்; இதன் மூலம் அறுவடைக் காரியங்களையும் பெரிதும் துரிதப்படுத்தினர்; எரிபொருளையும் பெருமளவுக்கு மிச்சப் படுத்தினர். ஸ்டாலினேத்ஸ் கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த நபர்களில் ஒருவர் இது விஷயமாக இவ்வாறு கூறினர்: ''கூட்டுப் பண்ணைகள் தொடங்கப்பட்டவுடனேயே வியர்வை வழியப் பாடுபடுவதை நாங்கள் நிறுத்தி விட்டோம். முதுகை ஒடிக்கும் உழைப்பிலிருந்து எங்களை சோவியத் ஆட்சி விடுவித்தது. இன்றோ அரிவாள்களைக் கொண்டு வேலை செய்யும் இந்த இளவட்டப் பிள்ளைகள், முதுகு வலிக்கிறது என்று குறைப்பட்டுக் கொள்ளாமல் ஒரு நாள்கூட வேலை பார்க்க முடியவில்லை. அத்தனை தூரம் கொழுத்துப் போய்விட்டார்கள் அவர்கள். எங்களுக்காக டிராக்டர்கள் நிலத்தை உழுவதும், அறுவடைக் கம்பைன் எந்திரங்கள் அறுவடை செய்வதும், கதிரடிப்பதும் சமாதான காலத்தில் மிகவும் நல்லதாகத்தான் இருந்தது. ஆனால் நாஜிகள் நம்மோடு இந்தப் போரைத் தொடங்கியுள்ள இந்த நேரத்தில், நமது முதுகைப்பற்றிக் கவலைப்படுவதற்கு நேரமே கிடையாது. இப்போது வேலை செய்ய வேண்டிய முறையெல்லாம் நமது உடம்பின் ஒவ்வொரு மூட்டும் அதனால் முடிந்த வேலையைச் செய்யுமாறு செய்வதும், இங்கு நமக்குத் தேவைப்படுவதைக் காட்டிலும் செஞ்சேனைக்கு மிகவும் தேவைப்படும் எரிபொருள் அனைத்தையும் நம்மால் முடிந்தவரையிலும் அதற்கு மிச்சம் பிடித்துக் கொடுப்பதுமேயாகும். நாஜிகளின் மூட்டுக்கள் சடசடவென்று சொடுக்கு விடுவதோடு மட்டுமல்லாமல், அவை முறிந்து வெளியே வரத் தொடங்கும்

அளவுக்கு, அந்த எரிபொருளைச் செஞ்சேனை வீரர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள்.''

வைக்கோல் போர்க் குவியல் போடுவதில் தமது அன்றாடக் கோட்டாவைவிட இருமடங்கு வேலையை அப்போதுதான் செய்து முடித்திருந்த, 'இருபத்தாறு பாகூ கமிஸார்கள்' கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த வாஸிலி ஸோல்தத்தோவும் ஏறத்தாழ இதே மாதிரிதான் என்னிடம் கூறினார்:

''நமக்கு ஒரு கடினமான முரட்டு எதிரி வந்து வாய்த் திருக்கிறான். எனவே நாமும் கடினமான முரட்டு வேலையைத் தான் செய்ய வேண்டும். மேலும், கோட்டாவைப் பொறுத்த வரையில்...நாங்கள் இங்கு ஏதோ ஒரு கோட்டாவை நிர்ணயித் திருக்கிறோம்; ஆனால் எங்களைப் போர் முனைக்கு அனுப்பும்போது, நாங்கள் எந்தவிதக் கோட்டாக்களும் இல்லாமலே எதிரியைத் தாக்கிக் கொல்ல முனைவோம்.''

நான் சென்ற கூட்டுப் பண்ணைகள் அனைத்திலும் அங்குள் ளோரின் அற்புதமான உழைப்புக் கட்டுப்பாடும், தமது குடிமைக் கடமையைப் பற்றி மக்களுக்கிருந்த பிரக்ஞையுணர்வும் என்னைக் கவர்ந்தன. இளம் பிள்ளைகளிலிருந்து முதியோர் வரை, முந்திய ஆண்டில், அதிகமாக வேலை பார்க்க முடியாது என்று உணர்ந்து ஒதுங்கியிருந்த மிகவும் முதியவர்களும்கூட, எல்லோருமே வேலை பார்க்க வந்தனர். விதி விலக்கில்லாமல் ஒவ்வொருவரும் தமது திறமைக்கேற்ப மிகவும் சிறந்த முறையிலும், மிகப்பெரும் ஆர்வத்தோடும் பாடுபட்டனர். போல்ஷிவிஸ்ட் மார்க்கக் கூட்டுப் பண்ணையில் கோஷ்டித் தலைவராகவிருந்த வாஸிலி திசெலிகோவ், வட்டாரக் கமிட்டி அதிகாரி ஒருவர் கூறிய பாராட்டுரையைக் கேட்ட பின் இவ்வாறு கூறினார்:

''எங்களது திறமைக்கு முடிந்த அளவுக்குக் குறைவாக நாங்கள் வேலை பார்க்கவே முடியாது. இதனை நான் எப்படிப் பார்க்கிறேன் என்றால்,—நாங்கள் இப்போது எங்கள் உழைப் பால் நாட்டைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம்; வேளை வரும்போது அதனை ஆயுதங்களாலும் பாதுகாப்போம். மேலும், ஒவ்வொரு குடும்பத்திலும் யாரோ ஒருவர் போர் முனையில் போராடிக் கொண்டிருக்கும்போது, நாங்கள்தான் எவ்வாறு அரை மனதோடு வேலைபார்க்க முடியும்? உதாரணமாக, என்னை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு இரண்டு புதல்வர்கள்; இருவரும் போரிடுவதற்குத்தான் போயிருக்கிறார்கள். அவர்களில் அலெக்சி ஒரு பீரங்கிப் படை வீரன்; நிக்கொலாய் ஒரு டாங்கிப்

படை வீரன். போருக்குப் போக முடியாத அளவுக்கு எனக்கு மிகவும் வயதாகி விட்டது; என்றாலும், ஊர்காவல் படையில் நானும் என்னைப் பதிவு செய்து கொண்டிருக்கிறேன். சென்ற ஜெர்மன் போரில் என் வயிற்றில் காயம்பட்டுவிட்டது. அந்த ஜெர்மன் துப்பாக்கித் தோட்டா எனக்குப் பெரும் தொல்லை கொடுத்து வந்துள்ளது, என்றாலும் இன்னும் என்னால் வேலை பார்க்க முடியும்...அவசியம் நேர்ந்தால், போரிடுவதில் நான் என் புதல்வர்களோடு போய்ச் சேர்ந்தும் கொள்வேன்.''

கிராஸ்னயா ஸ்வெஸ்தாவுக்கு (ராணுவப் பத்திரிகை) நான் ஒரு கட்டுரை எழுதப் போகிறேன் என்று தெரிந்து கொண்டதும், அவர் ஆர்வத்தோடு இவ்வாறு கூறினார்:

''போர் முனையிலுள்ள எனது புதல்வர்களும் சரி, மற்றும் எல்லாப் போர்வீரர்களும் சரி, இங்கு பின்னணியிலுள்ள நாங்கள் அவர்களைக் கைவிட்டுவிட மாட்டோம் என்பதை உங்கள் பத்திரிகையின் மூலம் அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். அந்த நாஜிகளின் மீது எந்த இரக்கமும் காட்ட வேண்டாம் என்று அவர்களுக்குக் கூறுங்கள்; அந்த நாஜிகள் நமது நாட்டில் தமது கல்லறைகளைத் தவிர வேறு எதையும் காணப் போவதில்லை என்பதை அவர்களுக்குக் காட்டும் அளவுக்கு அத்தனை மூர்க்கமாக அவர்களோடு போரிடுமாறு அவர்களுக்குக் கூறுங்கள்.''

நாங்கள் சோஷலிச மார்க்கக் கூட்டுப் பண்ணையின் அலுவலகத்துக்குப் போய்ச் சேர்ந்தபோது, அங்கு பேரேடுகளைப் பதிந்து வரும் ஒரு முதியவரைத் தவிர வேறு யாரையும் நாங்கள் காணவில்லை. பண்ணையின் தலைவர் வயலுக்குப் போயிருப்பதாக அவர் கூறினார். கிராமத்திலேயே எவரும் தென்படவில்லை; மக்கள் அனைவருமே வயல்களுக்குச் சென்று அறுவடை செய்வதிலும், கதிரடிக்கும் களங்களைச் சுத்தம் செய்வதிலும் அல்லது தானியத்தை வண்டிகளில் ஏற்றுவதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

அந்தப் பேரேட்டுப் பதிவாளர் தமது பேனாவை ஒரு கணம் கீழே வைத்து விட்டு, எங்களிடம் இவ்வாறு கூறினார்: ''என் மகன் மேற்குப் போர் முனையில் இருக்கிறான். அவன் ராணுவ சேவையில் மூன்றாண்டுகளாகப் பணியாற்றி வந்தான்; ஒரு பீரங்கிப் படைப் பிரிவின் தளபதியாக இருந்தான். அவனிடம் என்ன ரகமான பீரங்கியுள்ளது என்று நான் எழுதிக் கேட்ட போது, 'நான் மிகவும் நன்றாக இருக்கிறேன். குடும்பத்தாருக்கு எனது வணக்கங்களைக் கூறுங்கள். பீரங்கிகளைப் பற்றி என்னிடம்

கேட்காதீர்கள். அப்பா! அது உங்கள் வேலையல்ல' என்று பதிலுக்குக் கடிதம் எழுதி விட்டான்.'' அந்தப் பேரேட்டுப் பதிவாளர் இதனை மகிழ்ச்சி பொங்கும் புன்னகையோடுதான் கூறினார்: ''ராணுவ விதிமுறைகள் எல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்கிறது என்பதுதானே இதற்கு அர்த்தம். உள்நாட்டுப் போரில் நானும்கூடத்தான் போரிட்டேன். முதலில் நான் வடக்கில் போரிட்டேன். பின்னர் பஸ்மாஸ் கொள்ளைக் கும்பல்களையும், மற்றும் ஏனைய எல்லா ரகமான எதிரிகளையும் எதிர்த்துப் போராடினேன். இப்போது நான் ஊர்காவல் படையில் இருந்து வருகிறேன். இங்கு கிராமத்தில் எங்களில் சுமார் நூறு பேர் இந்தப் படையில் இருக்கிறோம். இங்கு இப்போது எல்லாமே வேடிக்கையாக இருக்கிறது. பாருங்களேன். இங்கு, பின்னணியில்கூட எத்தனையோ இளைஞர்கள் உள்ளனர். அதாவது நாங்கள் நூறு பேரும் அணி வகுத்து நிற்கும்போது, எங்களில் முதியவர்கள் மத்தியிலும்கூட, ஒரு போர்க்களப் பீரங்கியை இழுத்துச் செல்லக் கூடிய அளவுக்கு வலிமை படைத்த பல இளவட்டப் பிள்ளைகளும் தென்படுகின்றனர். அவர்களுக்குப் பொலி குதிரைகளின் பலம் உள்ளது. ஆமாம். உண்மையாகத்தான். அவர்கள் தம்மைத் தொண்டர் படைக்காகப் பதிவு செய்து கொண்டுள்ளனர். என்றாலும் என்ன காரணத்தினாலோ இன்னும் அவர்களுக்கு அழைப்பு வரவில்லை. இதற்கு அர்த்தம் நம்மிடம் ஒரு மிகப் பெரிய ராணுவம் இருக்கிறது என்பதுதான். இதனைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே மனத்துக்குச் சுகமாக இருக்கிறது.''

இரண்டாம் நம்பர் கோஷ்டி அரியும் கருவிகளோடு அறுவடையை நடத்திக் கொண்டிருந்தது. ஒவ்வோர் அரியும் கருவியும் இரண்டு ஜோடி எருதுகளோடு சேர்த்துப் பிணைக்கப் பட்டிருந்தது. அந்தக் கருவியின் இறக்கைகளை எவ்வளவு உயரத்துக்கு உயர்த்த முடியுமோ அவ்வளவு உயரத்துக்கு உயர்த்தியிருந்த போதிலும் கூட, அறுப்பு வேலை மிகவும் கடினமாகத்தான் நடைபெற்றது. ஏனெனில் ரை தானியப் பயிர்கள் அத்தனை உயரமாகவும், கனமாகவும் வளர்ந்திருந்தன. எருதுகளை ஓட்டும் பெண்கள் அந்தப் பிராணிகளைச் சத்தம் போட்டும், சாட்டையடி கொடுத்தும் முடுக்கிக் கொண்டிருந்தனர்; கவர்முள் கம்புகளைச் சுழற்றி வேலை செய்து கொண்டிருந்த முரட்டு இளைஞர்களான கோஸாக்குகளும்கூட, தமது முகத்தில் வழிந்தோடும் வியர்வையைத் துடைக்க ஒரு விநாடியைக் கூட ஒதுக்க முடியாத அளவுக்கு, ஓடியோடி வேலை செய்து கொண்டிருந்தனர். இறுதியாக அவர்கள் வேலையை முடித்து நின்றதும்,

நான் அந்தக் கோஷ்டியினரிடம் சென்று, அவர்கள் ஏன் அந்த எருதுகளை அத்தனை தூரம் தெறிக்கும் வேகத்தில் விரட்டியடிக்க வேண்டும் என்று கேட்டேன்.

அதற்கு அந்தக் கோஸாக்குகளில் ஒருவன் இவ்வாறு பதில் சொன்னான்: "இந்த எருதுகளுக்கு இது பழகிப் போய் விட்டது. இதனால் அவற்றுக்கு எந்தக் கெடுதலும் நேர்வதில்லை. மேலும் நாங்கள் துரிதமாக வேலை பார்க்கும்போது எங்கள் வேலையும் மிகவும் எளிதாகவுள்ளது. அத்துடன் நாங்கள் அவசரம் அவசரமாகவும் வேலை பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில், எந்த நாளிலும் எங்களையும் போர் முனைக்கு அனுப்பி வைக்கக் கூடும். அவ்வாறுயின், இத்தகைய பயிர் விளைச்சலைச் சமாளிப்பது பெண்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கும். என்றாலும் என்னை ஏன் அவர்கள் படையில் சேரத் தேர்ந்தெடுக்கவில்லை? அதற்கான காரணம் எனக்குத் தெரிந்தால் நல்லது. என் வயதையொத்த ஏனைய பயல்களையெல்லாம் அவர்கள் படையில் சேரத் தேர்ந்தெடுத்துள்ளனர். ஆனால் என்னை மட்டும் ஏதோ காரணத்தினால் விட்டு விட்டார்கள். நான் மட்டும் மற்றவர்களைப்போல் தகுதியுள்ளவனாக இல்லையா? அல்லது இதற்கு வேறு என்ன காரணம்?"

அந்த நபரின் பெயர் பொகுசயேவ்; அவன் உள்ளூர்க் கொல்லுலைத் தொழிலாளியின் மகன். பீப்பாய் மார்பு கொண்ட அந்தக் கட்டுமஸ்தான இளைஞன் தனது ராணுவ சேவையின் போது பீரங்கிப் படையில் இருந்திருக்கிறான். மற்றவர்களோடு நான் உரையாடியதன் மூலம் அவர்கள் எல்லோருமே ஏதாவதொரு ராணுவ சேவைப் பிரிவில் ராணுவப் பயிற்சி பெற்றிருந்தனர் என்பதை அறிந்து கொண்டேன். போருக்குச் சென்று, ரத்தத்தினாலும் மலிவான வெற்றிகளாலும் போதையேறிப் போயிருந்த ஜெர்மானியர்களை அடித்து நொறுக்குவதற்கு, அந்த வலிமையும் ஆரோக்கியமும் மிக்க இளைஞர்கள் பொறுமையற்றுத் துடியாய்த் துடித்ததையும் நான் புரிந்து கொள்ள முடிந்தது. அது எல்லா இளம் டான் கோஸாக்குகளிடமும் தென்பட்ட பொறுமையின்மையாகும்; அது நமது நாட்டை அதன் எண்ணற்ற எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக, பல நூற்றாண்டுகளாக நமது நாட்டின் எல்லைகளில், தமது ரத்தத்தைப் பாய்ச்சிவந்த மூதாதையர்களைக் கொண்ட மனிதர்களிடம் தென்பட்ட பொறுமையின்மையேயாகும்.

அந்தக் கூட்டுப் பண்ணையின் கதிரடிக்கும் களத்தின் காவல் காரராக அப்போது பணியாற்றி வந்த, என்பத்தி மூன்று வயதான மனிதரான இஸாய் மார்க்கோவிச் யெவ்லாந்தியேவின்

வார்த்தைகளை நான் நினைத்துப் பார்த்தேன். அது இருண்ட வானத்திலிருந்து நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுந்து கொண்டிருக்கும் ஜூலை மாதத்தின் ஓர் அமைதியான இரவு. அவர் ஒரு முதியவரின் மிருதுவான குரலில் இவ்வாறு கூறினார்:

''என் பாட்டனார் நெப்போலியனுக்கு எதிராகப் போராடினார். நான் சின்னஞ்சிறுவனாக இருந்தபோது அவர் அதைப்பற்றியெல்லாம் என்னிடம் கூறினார். நெப்போலியன் நமக்கு எதிராகப் போரைத் தொடங்குவதற்கு முன்னால், ஒரு நல்ல நாளில் தனது தளபதிகளையெல்லாம் திறந்தவெளியில் ஒன்றுகூடச் செய்தான். 'ரஷ்யாவை ஜெயிக்க வேண்டும் என்ற நோக்கம் எனக்கு இருக்கிறது. மிஸ்டர் தளபதிகளே, இது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?' என்று அவர்களிடம் கேட்டான். 'மாட்சிமை தங்கிய மன்னர் அவர்களே! அவ்வாறு நடக்காது. அது மிகவும் வலிமைமிக்கதொரு நாடு. அதனை நாம் என்றுமே ஜெயிக்க முடியாது' என்று அந்தத் தளபதிகள் எல்லோரும் கூறினர். பின்னர் நெப்போலியன் வானத்தைச் சுட்டிக் காட்டி, 'அங்கு நட்சத்திரம் தெரிகிறதா, பாருங்கள்' என்று அவர்களிடம் கேட்டான். 'இல்லை. எங்களுக்குத் தெரியவில்லை. நட்சத்திரத்தைப் பகல் நேரத்தில் நாம் பார்க்க முடியாது' என்று அவர்கள் கூறினர். 'ஆனால், என்னால் பார்க்க முடிகிறது. அந்த நட்சத்திரம் ஒரு நல்ல சகுனம்' என்று நெப்போலியன் அவர்களிடம் கூறினான். இவ்வாறு கூறிவிட்டு அவன் தன் படைகளோடு நமக்கு எதிராகப் படை மூண்டு வந்தான். அவன் வரும்போது விசாலமான வாசல் வழியாகத்தான் வந்தான்; ஆனால் போகும் போதோ, எப்படியோ தப்பிப் பிழைத்துப் போகுமளவுக்கு ஒரு குறுகிய சிறிய வாசல் வழியாகத்தான் போனான். நமது மக்கள் அவனைப் பாரீஸ் வரையிலும் விரட்டியடித்துவிட்டுத்தான் திரும்பினர். அதே அசட்டுத்தனமான நட்சத்திரம்தான் இந்த ஜெர்மன் தளபதிக்கும் தோன்றியிருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. இவனும் வாசலிலிட்டு வெளியேறி ஓடவேண்டிய காலம் வரும்போது, இவனுக்கும் வாசல் மிகமிகக் குறுகியதாக ஆக்கப்பட்டுவிடும். இவன் அந்த வாசலின் வழியாகத் தப்பிச் செல்வானா, மாட்டானா என்பது எனக்குத் தெரியாது. அவன் தப்பிச் செல்லவே கூடாது என்று நாம் கடவுளை வேண்டிக்கொள்வோம். அப்போதுதான் மற்றவர்களும், இப்போதும் சரி, எப்போதும் சரி, மீண்டும் இந்த மாதிரி முயற்சியில் என்றுமே இறங்க மாட்டார்கள்.''

1941

நீசத்தனம்

போர்க்களத்திலுள்ள ராணுவத்திடமிருந்து இவ்வாறு செய்தி வந்துள்ளது: ''யெல்னியா கிராமத்துக்கு அருகே கடுமையான போர் நடந்து வந்தது. ஜெர்மானியர்கள் வீடுகளின் முன்னால் தடை மதில்களைக் கட்டியமைத்து, அவற்றை மூடி மறைத்து, நெடுநேரமாகச் சுட்டுக் கொண்டிருந்தனர். நமது யூனிட் தாக்குதலைத் தொடங்கியவுடன், நாஜிகள் கிராமத்திலிருந்த பெண்டு பிள்ளைகள் அத்தனை பேரையும் விரட்டிக் கொண்டு வந்து, அவர்களைத் தமது பதுங்கு குழிகளுக்கு முன்னால் நிறுத்தி வைத்துக் கொண்டனர்...''

தைரியமும் கௌரவமும் மிக்கவர்கள் என்று நாஜி ரேடியோவினால் போற்றிப் புகழப்பட்ட ஹிட்லர் ராணுவத்தின் போர் வீரர்கள்தான் இந்தக் காரியத்தைச் செய்தனர். அவர்களது கௌரவம் போன்றதொரு ''கௌரவம்'', குடலைப் புரட்டும் அழுகிய முடை நாற்றத்தைத்தான் தோற்றுவிக்கிறது. மேலும் இவ்வாறும் நம்மால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை; இந்தப் போர் வீரர்கள் உயிர்பிழைத்துத் திரும்பிச் சென்றால், இவர்கள் தமது தாய்மார்களையும், மனைவிமார்களையும், சகோதரிகளையும் நேர் நின்று நோக்கக் கூசமாட்டார்களா என்ன?

போர் வீரர்களின் உள்ளத்தில் எல்லா மனித உணர்ச்சிகளையும் அழித்தொழித்து, அந்த உயிருள்ள ஜீவன்களை மனிதத் தன்மையற்ற, காட்டுமிராண்டித்தனமான காரியங்களைப் புரியும் தானியங்கி எந்திரங்களாக மாற்றியுள்ள அளவுக்கு, நாஜிகளின் கருத்துருவேற்றம் அத்தனை மும்முரமாக முழுமையாக நடைபெற்றிருக்கத்தான் வேண்டும்.

யெல்னியாவில் நாஜிகள் புரிந்த இந்தச் செயலை, கோயபல்ஸின் பாஷையில் எப்படிக் கூறுவார்கள், ராணுவ மதியூகம் என்று கூறுவார்களா அல்லது ஜெர்மானியச் சாதுரியத் திறமை என்று கூறுவார்களா என்பது எனக்குத் தெரியாது; ஆனால் உலகின் நாகரிகமடைந்த நாடுகள் அனைத்தின் பாஷையிலும், இத்தகைய ஒரு செயல், ஒரு போர்வீரனுக்கு இழிவைத் தேடித் தரும் இந்தச் செயல், ஒரு நீசத்தனம் என்றே கூறப்பட்டுள்ளது; எப்போதும் கூறப்படும்.

இந்தப் புதிய நாஜி அக்கிரமத்தைப் பற்றிக் கேள்விப்படும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் உணர்வு, ஜெர்மானிய மக்களுக்காக வெட்கப்படும் உணர்வாகவும், நிராயுதபாணிகளான சிவிலியன் மக்களுக்குப் பின்னால் இழிவான முறையில் மறைந்து

கொள்வோரின்மீது கொள்ளும் வெறுப்பாகவும், பகைமை யாகவுமே இருக்கும்.

சோவியத் யூனியனது மக்களும் செஞ்சேனையும் நாஜிகள் இழைத்துவரும் கொடுமைகளுக்கெல்லாம் கணக்கு வைத்துக் கொண்டுதான் வருகிறார்கள். எங்களது மக்கள் சிந்திய ரத்தத்துக்காகவும், அவர்கள் தமக்குத்தாமே தேடிக்கொண்ட அவமானத்துக்காகவும், அதிகமான ரத்தத்தையே விலையாகக் கொடுப்பார்கள்.

1941

போர்முனைக்குச் செல்லும் வழியில்

பென்சில்களையும், நோட்டுப் புத்தகங்களையும், சிறு எந்திரத் துப்பாக்கிகளையும் தாங்கிய ஆயுதபாணிகளாக நாங்கள் முன்னணிக்கு ஒரு காரில் சென்றோம்; ரோட்டுப் பாதையில் ஆயுத தளவாடங்களையும் உணவுப் பொருள்களையும், போர் வீரர்களையும் ஏற்றிக்கொண்டு சென்ற ஏராளமான லாரிகளை நாங்கள் முந்திக்கொண்டு சென்றோம். அந்த லாரிகள் அனைத்தும் பெர்ச் மற்றும் ஸ்புரூஸ் மரக்கிளைகளைக்கொண்டு மிகவும் சாமர்த்தியமாக மூடிமறைக்கப்பட்டிருந்தன; அந்தக் கிளைகள் மேலிருந்து கீழ்நோக்கித் தொங்கி ரோட்டைப் பார்த்துக் கொண்டிருந்தன; இவற்றையெல்லாம் பார்க்கும் போது, புதர்களும் மரங்களும் ஒரு பிரம்மாண்டமாக ஊர்வல மாகப் புறப்பட்டு, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிக் குடிபெயர்ந்து செல்வதைக் காண்பது போன்ற எண்ணமே ஏற்பட்டது. ஒரு காடு முழுவதுமே நகர்ந்து செல்வதுபோல் தோன்றியது.

பீரங்கிப் பிரயோகத்தின் இடி முழக்கம் மேன்மேலும் பலமாகவும், மேன்மேலும் அருகிலும் கேட்கத் தொடங்கியது. நாங்கள் போர் முனையை நெருங்கிக் கொண்டிருந்தோம்; என்றாலும், செஞ்சேனையின் போக்குவரத்து அதிகாரிகள்தான் தமது சிவப்பு அல்லது மஞ்சள் கொடிகளை ஆட்டி அசைத்து இன்னும் பாதையைக் காட்டிக் கொண்டிருந்தனர்; லாரிகளின் வரிசை ரோட்டின் வழியாக மிக வேகமாக முன்னேறிச் சென்று கொண்டிருந்தன; அவற்றுக்குப் பக்கத்தில் நமது வலிமைமிக்க டிரெய்லர்—டிராக்டர்கள் கணகணத்து ஓடிக்கொண்டிருந்தன.

வானிலிருந்து எந்த நேரத்திலும் நாங்கள் தாக்கப்படக் கூடும் என்று எங்களுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருந்ததால்,

எனது தோழர்களும் நானும், புட்போர்டில் நின்றுகொண்டு வானின்மேலே நோட்டம் பார்க்கும் பணியை ஒருவர் பின் ஒருவராக ஏற்றுக்கொண்டோம். ஆயினும் ஜெர்மன் விமானங்கள் எதுவும் தென்படவில்லை; எனவே நாங்கள் எந்த வித அசம்பாவிதமும் நிகழாமல் சென்று கொண்டிருந்தோம்.

கிட்டத்தட்ட காடுகளே இல்லாத ஸ்டெப்பி வெளி வாசியான எனக்கு ஸ்மோலென்ஸ்க் பிரதேசத்தின் இயற்கைக் காட்சி அன்னியமானதாகத் தோன்றியது; அந்த இயற்கைக் காட்சி என்முன் விரிய விரிய நான் அதனைக் குறுகுறுப்புணர்வோடு பார்த்து வந்தேன். ரோட்டின் இரு மருங்கிலும் பைன் மரக்காடுகள் ஒரு சுவரைப்போல் வளர்ந்தோங்கியிருந்தன; அவற்றிலிருந்து குளுமையான காற்றும், காரமான, கீலெண்ணெய் வாடை போன்ற, மணமும் வந்தன. அந்த நடுப்பகலிலும்கூட அந்தக் காடுகள் அந்தியொளி மயக்கத்தில் மூழ்கியிருந்தன; அவற்றின் இருண்ட அமைதியில் ஏதோ அபாயம் குடிகொண்டிருப்பதுபோல் தோன்றியது; நெடிய மலைப்பூண்டுச் செடிகளும், அழுகிக் கொண்டிருக்கும் அடிமரக் கட்டைகளும் நிரம்பியிருந்த அந்த நிலமே என்மீது பகைமை பாராட்டுவது போல் தோன்றியது.

ஆங்காங்கே வெட்டவெளிப் பிரதேசங்கள் இருந்தன; அவையும் மிகக் குறைவாகவும், ஒன்றுக்கொன்று வெகு தொலைவிலும்தான் இருந்தன: அவற்றிலும் பெர்ச்மரக் கன்றுகளும், ஆஸ்பென் மரக் கன்றுகளும் பரவலாகத் தலை தூக்கியிருந்தன. திடீரென்று, சிவந்த சிறுபழங்கள் மலிந்த ரோவான் புதர் ஒன்று சூரிய ஒளியில் பளிச்சிடும்; அதன்பின் மீண்டும் காடுகள் ரோட்டின் இருபுறத்திலும் சுற்றி வளைக்கத் தொடங்கி விடும். மர உச்சிகளுக்கிடையே தோன்றும் இடைவெளி வழியாக, நாங்கள் எண்ணற்ற போர்வீரர்களின் பூட்சுகளால் மிதித்து நசுக்கப்பட்ட ரை அல்லது ஓட்ஸ் தானியக் கதிர்களைக் கொண்ட குன்றுச் சரிவான வயல் ஒன்றைப் பார்ப்போம்; அப்போது தூரத்திலுள்ள ஒரு சரிவின்மீது ஜெர்மனியர்களால் தரை மட்டமாகச் சுட்டுப் பொசுக்கப்பட்ட ஒரு கிராமத்தின் கரிந்து போன மிச்சம் மிஞ்சாடிகள் காட்சியளிக்கும்.

நாங்கள் ஒரு கிராமப்புறச் சாலை வழியாகத் திரும்பினோம்; சில நாட்களுக்கு முன்பு வரையிலும் ஜெர்மானியர்கள் வசத்தில் இருந்ததும், சமீபத்தில் நடந்த மூர்க்கமான போரின் வடுக்களைத் தாங்கிக் கொண்டிருந்ததுமான ஒரு வட்டாரத்தின் வழியே காரைச் செலுத்திச் சென்றோம். அந்த நிலப்பரப்பு முழுவதும் பீரங்கிக் குண்டுகள், கண்ணி வெடிகள், வெடி

குண்டுகள் ஆகியவற்றினால் ஏற்பட்ட அலங்கோலமான துளைகளை வடுக்களைப்போல் தாங்கியிருந்தது. அந்தத் துளைகளுக்கு ஓர் அளவே இல்லை. இறந்தவர்கள் இன்னும் புதைக்கப்படவில்லை; நாங்கள் மேலும் மேலும் அதிகமான அளவில் இறந்துபட்ட மனிதர்களையும், இறந்து கிடந்த குதிரைகளையும் கண்டோம். அழுகி நாறும் நாற்றம் மேலும் மேலும் அடிக்கடி எங்கள் மூச்சைப் பிடித்துக் கொள்ளச் செய்தது. ரோட்டுக்கு அருகிலேயே கருஞ்சிவப்பு நிறப் பெட்டைக் குதிரையொன்றின் வீங்கிப் போன சடலம் கிடந்தது; இறந்து போன அந்தத் தாய்க்குப் பக்கத்தில், இறந்துபோன சின்னஞ் சிறிய குதிரைக் குட்டி, குஞ்சம் போன்று அடர்த்தியான தனது வாலை அமைதியாகப் பின்பக்கம் வீசிப் போட்ட நிலையில் கிடந்தது. இறந்துபோன அந்தச் சின்னஞ் சிறிய குதிரைக் குட்டி, அந்தப் பெரிய போர்க் களத்தில், வருத்தம் தரத்தக்க விதத்தில் அத்தனை அநாவசியமான ஒரு பொருளாகக் காட்சியளித்தது.

சரிவின்மீது ஜெர்மானியர்கள் அமைத்திருந்த பதுங்கு குழிகளும், நிலவறைகளும் நமது குண்டுகளால் உழுது போடப் பட்டிருந்தன. பிளவுண்ட மரக்கட்டைகள் தரைக்குள்ளிருந்து வெளியே துருத்திக் கொண்டிருந்தன; கைப்பிடிச் சுவர்களுக்குப் பக்கத்தில், உபயோகிக்கப்பட்ட தோட்டாக்களும், காலியான உணவுப் பொருள் டப்பாக்களும், தலைக்கவசங்களும், ஜெர்மானியர்களின் பச்சை கபில நிற யூனிபாரம் உடைகளின் தாறுமாறான கிழிசல்களும், நொறுக்கப்பட்ட ஆயுதங்களின் துண்டு துக்காணிகளும், சிக்கல் முக்கலாகத் திருகி முறுகிப் போய்விட்ட தந்திக் கம்பிகளும் சிதறிக் கிடந்தன. ஒரு நேரடித் தாக்குதல் ஓர் எந்திரத் துப்பாக்கிப் படைவீரர் கோஷ்டியை அந்த எந்திரத் துப்பாக்கியோடு சேர்த்துத் தகர்த்தெறிந்திருந்தது. பதுங்கு குழிகளிலிருந்து சற்றுத் தூரத்தில் இருந்த தானியப் பண்டகசாலையின் வாசலருகே முடமாகிப் போன ஒரு டாங்கி—எதிர்ப்புப் பீரங்கியைக் காணமுடிந்தது; அந்தக் காட்சி சோவியத் பீரங்கிப் பிரயோக நெருப்புச் சூருவளியினால் ஏற்பட்ட நாசத்தின் இந்தப் பயங்கரமான காட்சிக்கு முத்தாய்ப்பாக விளங்கியது.

எந்தக் கிராமத்துக்காக அங்கு பல நாட்களாக இந்தப் போர் நடந்ததோ, அந்தக் கிராமம் குன்றின் மறுபக்கத்தில் இருந்தது. அதனைக் கைவிடுவதற்கு முன்னால், ஜெர்மானியர்கள் அங்கிருந்த வீடுகள் அனைத்துக்கும் தீ வைத்து விட்டனர். நமது ஸாப்பர் வீரர்கள் அப்போது அந்தக் குன்றின் அடிவாரத்திலுள்ள சிற்சுற்றின்மீது ஒரு பாலத்தைக் கட்டியமைத்துக் கொண்டிருந்

தனர்; அங்கு புதிதாகச் சீவி எடுக்கப்பட்ட பைன்மரக் கட்டைச் சீவல்கள் மற்றும் ஆற்றின் சேறு ஆகியவற்றின் மணம் நிலவியது. ஸாப்பர்கள் தமது இடுப்புவரையிலும் உடைகளைக் களைந்து விட்டிருந்தனர்; சூரிய ஒளியால் பதப்பட்டிருந்த அவர்கள் திறந்த முதுகுகள் சூரிய வெளிச்சத்தில் வியர்வையோடு பளபளத்தன; அவர்கள் அங்கு இழைத்துப் போட்டு வந்த புதிய மரப் பலகைகளைப் போல் அவை மிருதுவாகவும் தோற்ற மளித்தன.

வரிசையாகப் போடப்பட்டிருந்த மரக் கட்டைகளின்மீது நாங்கள் மிகவும் கவனமாகக் காரை ஓட்டிச் சென்று நதியைக் கடந்தோம். கரைகளின்மீது டாங்கிகளும், டிராக்டர்களும் தமது தடங்களைப் பதித்து, சேற்று மண்ணைக் கிளறி விட்டிருந் தன. ஒரு காலத்தில் கிராமமாகவிருந்த அந்தப் பகுதிக்குள் நாங்கள் பிரவேசித்தோம். வீடுகளின் கருகிப்போன இடிபாடுகள், செங்கல் அடுக்குகளுக்கு மேலாக எழுந்து நின்ற கறுத்துப்போன புகைக் கூண்டுகள், கருகிப்போன வீட்டுப் பண்ட பாத்திரங்கள், உடைந்து போன பானைகளின் துண்டுகள், உலோகக் கம்பிகளால் பின்னி உருவாக்கப்பட்ட ஒரு குழந்தைத் தொட்டில் ஆகிய வற்றை நாங்கள் கண்டோம்.

அதிசயமாகத் தான் மட்டும் தப்பிப் பிழைத்து, ஒன்றே ஒன்றுக நின்ற ஒரு சூரியகாந்திச் செடி, பொன்னிற மஞ்சள் இதழ்கள் சூழப்பட்ட தனது வட்ட வடிவமான முகத்தைச் சூரியனை நோக்கித் திருப்பி நின்ற காட்சியானது, அந்த இருளார்ந்த பின்னணியில் இயல்புக்கு மாறுன, தெய்வத் துரோகமான அழகுக் கொலுவாகத் தோற்றியது. எரிந்து சாம்பலாகிவிட்ட ஒரு வீட்டின் அஸ்திவாரத்திலிருந்து சற்று தூரத்தில் அழித்து நாசமாக்கப்பட்டிருந்த ஓர் உருளைக்கிழங்குப் பாத்தியின் மத்தியில் அந்தச் சூரியகாந்தி காட்சியளித்தது. அதன் இலைகள் லேசாகக் கருகியிருந்தன; இடிபாடுகள் அதன் தண்டின் மீது குவிந்து கிடந்தன; என்றாலும் அது உயிரோடு இருந்தது! இந்தப் பொதுவான நாசம், மரணம் ஆகியவற்றுக்கு மத்தியில் எல்லாமே நாசமாகியிருந்த போதிலும் அது மட்டும் உயிர் வாழ்ந்தது. காற்றில் மெதுவாக ஆடிக் கொண்டிருந்த அந்தச் சூரியகாந்திச் செடி மட்டுமே, அந்த இடுகாட்டில் தென் பட்ட ஒரே உயிருள்ள பிறவியாகத் தோன்றியது.

ஆயினும் உண்மை அதுவல்ல. நாங்கள் தெருவழியே நடந்து சென்ற போது, கரி படிந்து கறுத்துப்போன ஒரு சுவரின்மேல் மஞ்சள் நிறமான பூனையொன்று அமர்ந்திருப்பதையும் கண்டோம். அந்தப் பூனை அமைதியாகத் தன்னை நக்கிச் சுத்தப்

படுத்திக் கொண்டிருந்தது; தனக்கொரு வீடும், எஜமானும் இல்லாது செய்துவிட்ட பயங்கரமான நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் அது முற்றிலும் அலட்டிக் கொள்ளவில்லை என்பது போலவே தோற்றியது. என்றாலும் எங்களைப் பார்த்ததும் அந்தப் பூனை ஒரு கணத்துக்கு அசைவற்று எங்களை வெறித்து நோக்கியது; பின்னர் ஒரு மஞ்சள் நிற மின்னலைப்போல் மின்னியவாறு இடிபாடுகளுக்குள் பாய்ந்தோடி மறைந்து விட்டது.

சேவல்களை இழந்து விதவையாகிவிட்ட இரண்டு பெட்டைக் கோழிகள் நாசமாகிப்போன வீட்டுத் தோட்டத்தில் குதூகலத்தோடு இரை பொறுக்கிக் கொண்டிருந்தன. ஆயினும் காக்கிநிற உடை தரித்த மனிதர்களைக் கண்ட தருணத்திலேயே அவை சத்தம் ஏதும் செய்யாமல் அங்கிருந்து ஓடி, கணத்தில் கண் மறைந்து போய்விட்டன. எங்களை அவற்றின் பக்கத்தில் ஐம்பது கஜ தூரத்துக்குக்கூட நெருங்க வொட்டாதபடி, அவை அத்தனை மூர்க்கப் பிறவிகளாக மாறிவிட்டன.

''அவை தமது கோழி அறிவினால், நம்மை ஜெர்மானியர்கள் என்று தவறுதலாகக் கருதி விட்டன'' என்று சமீபத்தில் அங்கு நடந்த போர்களில் பங்கெடுத்திருந்த நபர்களில் ஒருவர் கூறினார்.

ஜெர்மானியர்கள் தாம் ஆக்கிரமித்திருந்த கிராமங்களில் வாத்துக்களையும், கோழிகளையும் தமது சிறு எந்திரத் துப்பாக்கிகளால் சுட்டுத் தள்ளி, முறையான கோழி வேட்டைகளையே நடத்தி வந்ததாக அவர் எங்களிடம் கூறினார்.

''இந்த இரண்டு பெட்டைக் கோழிகளும் அந்தத் துப்பாக்கி வேட்டையில் சிக்கித் தப்பிப் பிழைத்தவை என்பதில் சந்தேகமில்லை. எனவே நீங்கள் அவற்றின் போக்குகளைப் பொருட்படுத்தக் கூடாது'' என்று அந்த மனிதர் புன்னகை புரிந்தவாறே கூறினார்.

பிராணிகளும், பறவைகளும் தாம் வசிக்கும் இடத்தின்பால் எத்தனை ஒட்டுதலோடு பிரியம் காட்டுகின்றன என்பது உண்மையிலேயே உள்ளத்தைத் தொடும் விஷயம்தான். அதே கிராமத்தில் ஜெர்மன் குண்டுகளால் அழித்து நாசமாக்கப்பட்ட தேவாலயத்தின் இடிபாடுகளின்மீது ஒரு சிறிய புறுக் கூட்டம் வருத்தத்தோடு வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்ததைக் கண்டேன். ஒரு வேளை அவை அந்தத் தேவாலயத்தின் மணிக் கூண்டில் வசித்து வந்திருக்கக்கூடும்; இப்போது அவற்றின் இருப்பிடம் பறிபோய்விட்ட போதிலும்கூட, அவை அந்த இடத்தைத்தான் தமது இல்லமாக இன்னும் கருதிக் கொண்

டிருந்தன; அதனை விட்டுச் செல்வதற்கு அவை அவசரப்படவே இல்லை. பக்கத்து வீதிகள் ஒன்றில் ஒரு சிறு நாய் தனது வாலை யாட்டிக் கொண்டே எங்களை நோக்கி நகர்ந்து வந்தது. அது அத்தனை சுயமரியாதை படைத்ததாகத் தோன்றவில்லை; என்றாலும், அது தனது துணிவையெல்லாம் திரட்டிக்கொண்டு, காட்டிலிருந்து தன்னந்தனியாக இந்த இடத்துக்கு வந்திருந்தது; ஏனெனில் இந்த இடம்தான் அது வழக்கமாக வசித்து வந்த இடமாகும். கிராமத்தின் எல்லையோரத்திலிருந்த அவுரிச்செடி வயலில், நாங்கள் ஒரு குருவிக் கூட்டத்தைத் திடுக்கிடச் செய்து விட்டோம். அவை சமாதான காலத்தில் நாங்கள் பார்த்துப் பழக்கப்பட்டிருந்த குதூகலத்தோடும், சுறுசுறுப்போடும் கீச்சிட்டுத் திரியும் குருவிகளைப் போல் இருக்கவே இல்லை. அவை மிகவும் மௌனமான, பரிதாபகரமான பிறவிகள். அவை இடிபாடுகளின்மீது சிறிது நேரம் வட்டமிட்டுப் பறந்துவிட்டு, பின்னர் திரும்பி வந்து, நிராதரவான, கலக்கமடைந்த பார்வையோடு, அவுரிச் செடித் தண்டுகளின்மீது அமர்ந்தன.

உள்ளூரைச் சேர்ந்த விவசாயிப் பெண்களும், தமது வாழ்க்கையைக் கழித்த அந்த இடத்துக்கு, ஏதோ ஒரு சக்தி தம்மைப் பலமாக இழுப்பதுபோல் உணர்ந்தனர் என்பதையும் கூறத்தான் வேண்டும். ஆடவர்கள் போருக்குச் சென்று விட்டனர்; ஜெர்மானியர்கள் வந்தபோது பெண்களும், பிள்ளை களும் அருகிலுள்ள காடுகளிற் சென்று ஒளிந்து கொண்டனர். இப்போது அவர்கள் தமது ஊருக்குள் திரும்பி வந்து, நிராசை உணர்வோடு இடிபாடுகளுக்கிடையே அலைந்து திரிந்தனர்; தமது வீட்டுப் பொருள்களில் ஏதேனும் அழியாது மிஞ்சியிருந்து கிடைத்து விடாதா என்று இடிபாடுகளைத் தோண்டிக் கிளறிப் பார்த்தனர். இரவில் அவர்கள் மீண்டும் காட்டுக்குத் திரும்பிச் சென்றனர்; அங்கு ரிசெர்வ் துருப்புக்களைச் சேர்ந்த போர் வீரர்கள் அவர்களுக்கு ரொட்டியையும், படைப்பிரிவின் பானையில் காய்ச்சிய சூப்பையும் வழங்கினர்; மறுநாள் காலையில் அவர்களும், நாசமாகிவிட்ட தமது கூடுகளையே வட்டமிட்டு வரும் பறவைகளைப்போல், நாசமாகிவிட்ட கிராமங்களுக்கு மீண்டும் வந்தனர்.

தரைமட்டமாக எரித்துப் பொசுக்கப்பட்டிருந்த அண்டையி லிருந்த மற்றொரு கிராமத்திலும், அழியாது பிழைத்திருக்கக் கூடிய உடைமைப் பொருள்களை சாம்பல் குவியல்களைக் கிளறித் தேடுவதில், சிறுபிள்ளைகள் தமது தாய்மார்களுக்கு உதவிக் கொண்டிருப்பதை நான் கண்டேன்.

அந்த விவசாயப் பெண்களில் ஒருவரை நோக்கி, இனி அவர்கள் எப்படி வாழப் போகிறார்கள் என்று கேட்டேன். அதற்கு அவள் இவ்வாறு பதில் சொன்னாள்:

''நாசமாய்ப்போன அந்த ஜெர்மன்காரர்களை உங்களால் எவ்வளவு தூரம் விரட்டியடிக்க முடியுமோ, அவ்வளவு தூரம் விரட்டியடியுங்கள். எங்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நாங்கள் எங்களுக்குப் புது வீடுகள் கட்டிக் கொள்வோம். கிராம சோவியத் எங்களுக்கு உதவும். நாங்கள் சமாளித்துக் கொள்வோம்.''

அந்தப் பெண்டு பிள்ளைகளின் சிவந்த ஓரங்களைக் கொண்ட கண்களும், சாம்பலைத் தோண்டிக் கிளறியதால் சாம்பற் படலம் படிந்த அவர்களது முகங்களும் அத்தனை சீக்கிரமாக மறந்துவிடக் கூடியவை அல்ல. நான் இவ்வாறு சிந்தித்தேன்: ''அமைதியான நகரங்களையும், கிராமங்களையும் பூமிப் பரப்பிலிருந்தே துடைத் தெறியவும், அர்த்தமற்று, எந்த நோக்கமுமே இல்லாமல், எல்லா வற்றுக்கும் நெருப்பு வைத்து அழித்தொழிக்கவும் வேண்டு மென்றால், அந்த நாஜிகள் உயிர் ராசிகள் அனைத்தையும் எத்தனை மிருகத்தனமாகவும், பேய்த்தனமாகவும் வெறுக்க வேண்டும்!''

நாங்கள் மற்றொரு கிராமத்தின் வழியாகவும் காரை ஓட்டிச் சென்றோம். மீண்டும் எங்களைச் சுற்றிலும் காடுகளே தென் பட்டன; பின்னர் நாங்கள் அறுவடை முடியாத கோதுமை வயல்களையும், தமது நீல நிறப் பூக்களை இன்னும் தரித்துக் கொண்டிருந்த சில செடிகளைக் கொண்ட சணல் வெளியும் சிறு நிலம் ஒன்றையும், மற்றும் அந்தச் சணல் நிலத்திலிருந்து தலை நீட்டிக் கொண்டிருந்த ஒரு கம்பில் ஆணியால் அறையப் பட்டிருந்த ''கண்ணிவெடிகள் ஜாக்கிரதை!'' என்ற எச்சரிக்கைப் பலகையும், ரோட்டின் ஓரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு காவல் வீரனையும் கண்டோம்.

ஜெர்மானியர்கள் பின் வாங்கிச் செல்லும்போது அவர்கள் ரோடுகளிலும், ரோடுகளை ஒட்டிய நிலத்திலும், தாம் கைவிட்டுச் சென்ற கார்களிலும், தமது பதுங்கு குழிகளிலும்,—ஏன் இறந்து போன தமது போர்வீரர்களின் சடலங்களிலும்கூட,—கண்ணி வெடிகளை மறைத்து வைத்துவிட்டுச் சென்றிருந்தனர். திரும்பவும் பிடிக்கப்பட்ட பிரதேசங்களில் இந்தக் கண்ணி வெடிகளைக் கண்டுபிடித்து அவற்றை அகற்றுவதில் நமது ஸாப்பர்கள் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்; எங்கு பார்த்தாலும் அவற்றைக் குனிந்து தேடிக்கொண்டிருக்கும் அவர்களது உருவங்களை நாங்கள் காண முடிந்தது. இதற்கிடையில் கார்களும் வண்டிகளும் ஒன்றையொன்று உரசிக்கொண்டு

அபாய மண்டலத்தின் வழியே மிகவும் கவனமாக ஓட்டிச் செல்லப்பட்டன; அதே சமயத்தில் ஆபத்தான இடங்களில் எவரும் ரோட்டைவிட்டு விலகிப் போய்விடாதவாறு, அங்கு நிறுத்தப்பட்டிருந்த காவல் வீரர்கள் தமது கழுகுப் பார்வையைப் பாய்ச்சி நாலா பக்கமும் கண்காணித்து வந்தனர்.

பீரங்கிச் சண்டையின் முழக்கம் அதிகரித்தது; அளவில் பெருகி விம்மியது; இப்போது நாங்கள் நமது சோவியத் கனரக பீரங்கிகளின் இடி முழக்கத்தைத் துலாம்பரமாக இனம் கண்டு கொள்ள முடிந்தது; அந்த முழக்கம் எங்கள் காதுகளில் இனிய சங்கீதம்போல் ஒலித்தது.

விரைவிலேயே நாங்கள் நமது ரிசெர்வ் படை யூனிட்டுகளில் ஒன்றின் மகிழ்ச்சியில் கலந்து கொண்டோம். அந்தப் போர் வீரர்கள் அப்போதுதான் போரிலிருந்து திரும்பி வந்திருந்தனர்; எனினும் அதற்குள்ளேயே அவர்களில் யாரோ ஒருவர் அக்கார்டியன் வாத்தியத்தில் ஏதோ ஒரு மிருதுவான சிறு கீதத்தை வாசித்துக் கொண்டிருந்தார். நிலவறைக்கு முன்னால் சுமார் இருபது போர் வீரர்கள் வட்டமாகச் சூழ்ந்து நின்று கொண்டு, அந்த வட்டத்தின் நடுவில் பகட்டு நடை நடந்து கொண்டிருந்த ஒரு கட்டுமஸ்தான இளம் போர் வீரனைப் பார்த்துக் குதூகலித்துச் சிரித்துக் கொண்டிருந்தனர். அவன் கோமாளித்தனமான சோர்வோடு தனது பரந்த தோள்களை உலுப்பித் திருப்பியபோது, அவனது சட்டை அவனது முதுகுக்குக் குறுக்கே விறைத்து நீண்டது; அப்போது காய்ந்துபோன வியர்வையின் வெள்ளை நிறமான கறைகள் அவனது தோள் பட்டைகளின்மீது தெளிவாகத் தெரிந்தன. அவன் தனது பெரிய கரங்களின் உள்ளங்கைகளால், தனது உயர்ந்த பூட்சுகளின் கால்களைத் தட்டிக் கொடுத்துக்கொண்டே, அலங்கோலமாகவும் ஒல்லியாகவும் இருந்த போர்வீரனை தனது நெருங்கிய நண்பனை நோக்கிக் குதூகலத்தோடு இவ்வாறு அழைப்பு விடுத்தான்:

"வா, வா, முன்னே வா. எதைக் கண்டு பயப்படுகிறாய்? நீ ஒரு ரையஜான் பிரதேசத்து மனிதன்; நான் ஓரெல் பிரதேசத்து மனிதன். எனவே நம்மில் யார் நாட்டியமாடுவதில் கெட்டிக்காரர் என்பதைப் பார்த்து விடுவோம்."

ஆயினும் அங்கு நிலவிய குறுகிய கால அந்தியொளி இருளாகக் கனத்து மாறி, காட்டின்மீது கவிந்தது; முகாமிலும் அமைதி நிலவத் தொடங்கியது. மறுநாள் பொழுது விடிந்ததும், நாங்கள் தாக்குதலில் ஈடுபட்டிருந்த தளபதி கோஸ்லோவின் யூனிட்டுக்குச் செல்ல விருந்தோம்.

1941

முதல் சந்திப்புக்கள்

இரவைக் கழிக்க எனக்கும், எனது மூன்று நண்பர்களுக்கும் இளம் ஆஸ்பென் மரங்களைக் கொண்டு கவனமாக மூடி மறைக்க பட்டிருந்த கூடாரம் ஒன்றை வழங்கினர். தரையில் பிர் மரக் கிளைகளைப் பரப்பி, அதன் மீது விரிக்கப்பட்டிருந்த ஒரு கோட்டுதான் எங்கள் படுக்கையாக விளங்கியது. நாங்கள் கத கதப்புக்காக ஒருவருக்கொருவர் நெருக்கமாக சுருண்டு படுத்துக் கொண்டோம்; எங்களது கம்பளிக் கோட்டுகளை எங்கள்மீது வாரிக்குவித்துப் போட்டுக் கொண்டு தூங்கிவிட்டோம்.

இரவு 11 மணிக்கு எனக்கு அடியில் பூமி குலுங்கியது. எனது தூக்கத்திலும் நான் ஒரு குண்டு வெடிப்பின் கனத்த முழக் கத்தைக் கேட்டேன். நான் என் கம்பளிக் கோட்டை எடுத்து எறிந்து விட்டு எழுந்து உட்கார்ந்தேன். இதனைத் தொடர்ந்து நிலவிய அமைதியில், பைன் மரங்கள் காற்றில் சலசலப்பதையும், மழைத்துளிகள் கூடாரத்தின் பக்கங்களில் மோதி விழும் சத்தத்தையும் நான் கேட்டேன். அந்த அமைதி நெடுநேரம் நீடிக்கவில்லை. மேற்கே வெகு தொலைவில் எங்கிருந்தோ ஒரு குண்டுவெடிப்பின் உள்ளடங்கிய சத்தம் கேட்டது; பின்னர் மழை பெய்யும் சத்தத்தின் ஊடாக, எங்களுக்கு மேலாகப் பறந்து செல்லும் ஒரு குண்டின் மெல்லிய அழுகுரலைக் கேட்டேன்; இதன் பின் உடனே அது இடிபோன்று வெடித்து முழங்கிய சத்தம் கேட்டது.

எனக்கு அடுத்தாற்போல் படுத்துக் கிடந்த குதூகலமிக்க இளம் லெப்டினென்ட் தூக்கக் கலக்கத்தோடு கூறிய குரல் கேட்டது; ''ஜெர்மானியர்கள் கனரகப் பீரங்கிகளால் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள்.'' பின்னர் அவர் தமது கைக்கடிகாரத்தின் சுடர்விடும் முகத்தைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்து பேசினார்: ''நாம் இங்குக் காரை ஓட்டி வந்தோமே, அந்த ரோட்டு வழியில்தான் அவர்கள் குண்டு மழை பொழிந்து கொண்டிருக்கி றார்கள். இது ஒரு தொல்லை தரும் பீரங்கிப் பிரயோகம். ஒவ்வோர் இரவிலும் அவர்கள் இப்படித்தான் செய்கிறார்கள். நான் உங்களுக்குக் கூறக் கூடிய யோசனை, நீங்கள் இதை யெல்லாம் கவனிக்காமல் தூங்குங்கள் என்பதுதான். இதற் கெல்லாம் நீங்கள் பழகிப் போய்விட வேண்டும். இந்த ஜெர்மானி யர்கள் ஒரு நேரம்தவறாத பிறவிகள்; அவர்கள் சரியாகப் பதினைந்து நிமிட நேரம் சுடுவார்கள்; பிறகு நிறுத்தி விடுவார்கள்; ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரம் கழித்து அவர்கள் மீண்டும் நமக்கு வேடிக்கை காட்டி மகிழ்விக்கத் தொடங்கு வார்கள்.

அந்த லெப்டினென்ட் விரைவிலேயே தமது ஆழ்ந்த இளம் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார். தூங்க முயன்றும் தூங்க முடியாத நானோ, அந்த பதினைந்து நிமிட நேரத்தில், மிகவும் அருகில் வெடித்து வந்த ஜெர்மன் குண்டுகளுக்குப் பழகிப் போக முடியாது சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். நடு நிசி வரையிலும் நான் தூங்கவேயில்லை. ஆயினும் நான் தூங்கத் தொடங்கியபோதோ மரக்கட்டை போலத் தூங்கினேன்; அதன்பின் தமது கனரகப் பீரங்கிகளின் சங்கீதத்தால் அவர்கள் எங்களுக்கு வேடிக்கை காட்டி மகிழ்வித்ததையோ அல்லது எங்களது பீரங்கிப் படை அவற்றுக்குப் பதிலளித்து வந்ததையோ நான் கேட்கவே இல்லை. பொழுது விடிவதற்குச் சற்று முன்னால், எனக்கு இடதுபுறம் படுத்திருந்த மனிதரால் நான் விழித்தெழுந்து விட்டேன். அவர் அப்படியே குளிரால் விறைத்துப் போய் விட்டார்; ஏனெனில் அவர்மீது கிடந்த அவரது கம்பளிக் கோட்டு கீழே நழுவி விழுந்து விட்டது. அவர் ஒரு நாய் நடுநடுங்கிக் கொண் டிருப்பது மாதிரி அத்தனை வெடவெடென்று நடுங்கிக் கொண் டிருந்தார்; இதனால்தான் நான் யாரோ உலுக்கி எழுப்புவதாக நினைத்துக் கொண்டு விட்டேன் என்றாலும் அவரோ தொடர்ந்து தூங்கிக் கொண்டுதான் இருந்தார்.

நாங்கள் கூடாரத்தைவிட்டு வெளிவந்தோம். அதிகாலைப் பனிமூட்டம் காட்டின்மீது தணிந்து இறங்கியிருந்தது. போர் வீரர்கள் இடுப்பு வரையிலும் உடைகளைக் களைந்து விட்டுத் தமது உடம்பை பனிக்குளிர்மிக்க நீரினால் கழுவித் துடைத்து விட்டுக் கொண்டனர்.இதனை ஏற்கெனவே செய்து முடித்து விட்ட இருவர் உடம்பில் சூடேறுவதற்காகக் குஸ்தி விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். இதனை அவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன்தான் செய்தனர் என்பது, அவர்களில் ஒருவரது நெற்றியில் வியர்வை துளிகள் பூத்திருந்ததிலிருந்தும், மற்றொருவரின் முகமும் கழுத்தும், சிவந்து கனிந்து போய் விட்டதிலிருந்தும் தெரிய வந்தது.

இறைச்சியோடு கூடிய சூடான சூப், டப்பாவில் பதனம் செய்யப்பட்ட பன்றிக்கறி, தேநீர் ஆகியவற்றோடு நாங்கள் நல்லதொரு ராணுவக் காலையுணவை வயிறார உண்டோம். அன்போடு எங்களை உபசரித்த அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு நாங்கள் எங்கள் வழியில் புறப்பட்டுச் சென்றோம்.

நமது கனரகப் பீரங்கிப் படை, தான் சுடத்தொடங்கு வதற்கான நிலைகளை மாற்றிக் கொண்டிருந்தது. விரைவாகச் செல்லும் இழுவை—டிராக்டர்கள் கம்பீரமாகத் தோன்றும் நீண்ட குழாய்களைக் கொண்ட பீரங்கிகளை இழுத்துக் கொண்டு

எங்களைக் கடந்து கடகடத்துச் சென்றன. அந்த ராட்சச டிராக்டர்களுக்கு வழிவிட்டு ஒதுங்குவதற்காக நாங்கள் ரோட்டுப் பாதையிலிருந்து நிர்பந்தமாக விலகிச் செல்ல நேர்ந்தது. இதன் பின்னர் நாங்கள் காயமடைந்த போர்வீரர்களைச் சுமந்து வந்த இரு ஆம்புலன்ஸ் கார்களுக்கும், காயமடைந்த குதிரைகளைக் கொண்டு வந்த ஒரு டிரக் வண்டிக்கும் இடம் விட்டு விலகிக் கொண்டோம். நான் ரோட்டின் ஓரத்தில்தான் நின்றேன்; எனவே ஆடியசைந்து வந்த அந்த டிரக் வண்டியின் பலகைப் பகுதி, என் தலைக்கு மேலாகக் கடந்து செல்வதுபோல் எனக்குத் தோன்றியது; அப்போது நான் எனக்கு மிகவும் அருகில், பனித் துவிகள் படிந்து நனைந்த கழுத்தையும், கண்ணீர் வடியும் பெரிய, கருநீலக் கண்ணையும் கொண்ட ஒரு காயமுற்ற குதிரையை அதில் கண்டேன். இரவு நடந்த போரில் முதன்முதலாகப் பாதிக்கப்பட்டவை அந்த குதிரைகள்தான்.

தளபதி கோஸ்லோவின் யூனிட்டைச் சேர்ந்த அதிகாரிகள் இருக்குமிடம் ஒன்றும் அதிக தூரத்தில் இல்லை. நாங்கள் காரை மரச்செறிவு மிக்க ஒரு பள்ளத்தாக்கில் நிறுத்திவிட்டு, நூற் றாண்டுக் காலமாக வளர்ந்தோங்கி நின்ற பைன் மரங்கள் அடர்த்தியாகச் செறிந்திருந்த செங்குத்தான சரிவில் இறங்கி நடக்கத் தொடங்கினோம். நாங்கள் அந்த அதிகாரிகள் இருக்கும் பிரதேசத்தைக் கிட்டதட்ட நெருங்கிவிட்ட சமயத்தில், ஒரு மாயைத் தோற்றம் சற்றும் எதிர்பாராத விதத்தில் அரவமே இல்லாமல் உருவெடுத்துக் காட்சியளிப்பது போல், திடீரென்று எங்கிருந்தோ ஒரு ஸெண்ட்ரிக் காவல் வீரரின் உருவம் எங்கள் முன்னால் பாதையில் எதிர்ப்பட்டது. என்றாலும் அந்த மாயைத் தோற்றம் கையில் ஒரு தானியங்கித் துப்பாக்கியைத் தரித் திருந்தது; ஆனால் மறைத்துக் காட்டும் ஒரு கோட்டையும் அணிந்திருந்தது. அந்தக் காவல் வீரர் ஒரு புதருக்குப் பின்னாலிருந்துதான் வெளியே வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது அவர் தமது துப்பாக்கியைத் தயார்நிலையில் பிடித்துக் கொண்டு, எங்களை அளந்து நோக்கினார்; பின்னர் எங்களது அனுமதிச் சீட்டுக்களைக் காட்டுமாறு கேட்டுக் கொண்டார்; அவற்றை வாங்கி அவற்றை மிகவும் துருவித் துருவி ஆராய்ந்துப் பார்த்தார். அவருக்குப் பின்னாலிருந்த புதர் லேசாக அசைந்து கொண்டிருப் பதை நான் கண்டேன்; அங்கு இலைகளுக்கூடே எங்களது வழியைக் குறி வைத்து இரண்டு துப்பாக்கிச் சனியன்களின் முனைகள் தென்படுவதையும் நான் கண்டேன்.

அங்கிருந்த நிலப்பரப்பு நீளப்போக்கில் அமைந்த பதுங்கு குழி களால் வெட்டுண்டிருந்தது. மரக்கிளைகளால் மூடப்பட்டிருந்த

பல நிலவறைகளை நாங்கள் கண்டோம். அந்தக் காட்டில் பல கார்களும் நின்றன; எனினும், அவற்றின் அருகில் சென்று அவை மீது மோதிக் கொண்டலொழிய அவற்றைக் கண்டு கொள்ள முடியாத விதத்தில், அவை மிகவும் சாமர்த்தியமாக மூடி மறைக்கப்பட்டிருந்தன. எங்கு பார்த்தாலும் ஸாப்பர்கள் பலகைகளை அறுத்துக் கொண்டும், சுத்தியலால் அடித்துக் கொண்டும், புதிய பதுங்குமிடங்களைத் தோண்டிக் கொண்டும் வேலை செய்து கொண்டிருந்தனர். அந்த கானகத்தில் பைன் மர ஊசி இலைகளின் மணமும், ஈரக் களிமண்ணின் மணமும் நிரம்பியிருந்தது.

ஒரு தடித்த குள்ளமான காப்டன், அதிகாரிகளது நிலவறையின் வாசலில் எங்களைச் சந்தித்தார். ஜெனரல் கோஸ்லோவும் தலைமை அதிகாரியும் அந்தத் தருணத்தில் ஏதோ மும்முரமான வேலையில் ஈடுபட்டிருப்பதாக அவர் என்னிடம் கூறினார்; பின்னர் அவர் எங்களை அடுத்திருந்த தளபதியின் நிலவறைக்கு மரியாதையோடு அழைத்துச் சென்றார்.

நாங்கள் சில அகன்ற படிகளின் வழியே இறங்கி, ஒரு குறுகிய சந்தினுள் நுழைந்தோம்; அங்கு எங்கள் முன் ஒரு வாசல் திறந்தது. பதுங்கு குழி என்ற சொல்லுக்கு வழக்கமாக வுள்ள அர்த்த பாவத்துக்கேற்ப அந்தப் பதுங்கு குழி இருக்கவில்லை. அது ஒரு விசாலமான விவசாயக் குடியிருப்பின் குடிசையை ஏதோ மாயமந்திரத்தால் பூமிக்குள் ஆழமாகப் புதைத்து இறக்கி வைத்தது போலத்தான் இருந்தது. இந்தக் கற்பனைத் தோற்றத்தைப் பூர்த்தி செய்ய அங்கு ஒரு பெரிய ரஷ்ய அடுப்பும் இருந்தால் மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும். என்றாலும் அங்கு அவர்கள் வைத்திருந்த இரும்பு அடுப்பு எல்லாவிதத்திலும் அவ்வாறே விளங்கியது. அந்தப் பெரிய அறை புதிதாக இழைத்துச் சுத்தப்படுத்தப்பட்ட மரக்கட்டைகளாலான தரையைக் கொண்டிருந்தது; சுவர்கள் புதிய பலகைகளால் உருவாக்கப்பட்டிருந்தன; முகடு பளபளவென்று சுத்தமாக இருந்தது. மேஜைக்குமேல் ஒரு மின்விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது அங்கு பைன்மர ஊசி இலைகளின் மணம் வீசியது. புதிதாகச் சுடப்பட்ட ரொட்டியின் மணமும் வீசுவதாக ஓர் எண்ணம் தோன்றியது. நாங்கள் அந்தப் பாதாளக் குடியிருப்பை வியப்போடு பார்த்தோம்; அந்தக் காப்டன் புன்னகை புரிந்தவாறே இவ்வாறு கூறினார்:

"எங்கள் ஜெனரல் மிகவும் காரியார்த்தமிக்க மனிதர். இங்கிருந்து சற்றுத் தொலைவில் கைவிடப்பட்ட கிராமம் ஒன்று உள்ளது. ஜெர்மானியர்கள் ஒவ்வொரு நாளும் அதன்மீது

முறையாகக் குண்டுகளைப் பொழிந்து வருகின்றனர். ஏற்கனவே அதில் பாதியை அவர்கள் தரைமட்டமாக்கி விட்டனர். மிஞ்சியுள்ள குடிசைகளும் எப்படியும் அழியத்தான் போகின்றன என்பதால், அவற்றை இங்கு கொண்டு சேர்க்குமாறு ஸாப்பர்களுக்கு ஜெனரல் உத்தரவிட்டார். ஸாப்பர்களும் இந்தக் காரியத்தை இரண்டே நாளில் செய்து முடித்து விட்டனர். இப்போது நாங்கள் இங்கு இருந்து வருகிறோம்.

செயலூக்கமும், நகைச்சுவையும் மிக்க மனிதரான பீரங்கிப் படைத் தளபதி கர்னல் குரோசித்ஸ்கி அறைக்குள் வந்தார்; அறிமுகங்கள் முடிந்த பின், போர் முனையின் இந்தப் பகுதியில் நிலவும் நிலைமையைப்பற்றி அவர் எங்களிடம் கூறினார்:

"எதிரியை நாங்கள் நன்றாக நெருக்கிக் கொண்டிருக்கிறோம். இன்று மதியம் நாங்கள் தயாரிப்புக்கான குண்டு வீச்சையும், பின்னர் தாக்குதலையும் தொடங்குவோம். நீங்கள் வரும் வழியில் பார்த்த மலையை இங்கு குத்ரியாவயா (சுருட்டைத்தலை—மொ. பெ.) குன்று என்று சொல்வது வழக்கம்; இப்போதோ அதற்கு லிசாயா (வழுக்கைத்தலை—மொ. பெ.) குன்று என்று மறுபெயரிடப்பட்டுள்ளது. எங்களது பீரங்கிப் பிரயோகத்தால் அது உண்மையிலேயே வழுக்கையாக மாறி விட்டது; ஆனால் அது காடுகள் நிறைந்து காணப்பட்ட ஒரு காலமும் உண்டு. ஜெர்மானியர்கள் கீழே விட்டெறிந்து வரும் துண்டுப் பிரசுரங்களே, எங்களது இந்தப் பீரங்கிப் பிரயோகம் எத்தனை பயன்மிக்கது என்பதற்குப் போதிய சான்றாகும். 'சோவியத் காலாட்படை வீரர்களே, சரணடைந்து விடுங்கள்! சோவியத் பீரங்கிப் படை வீரனே, நாங்கள் வந்து உன்னைப் பிடிக்குமாறு விட்டுவிடாதே!' என்று அவை கூறுகின்றன. நாங்கள் ஒன்றும் எங்களை அவர்கள் பிடித்துக்கொள்ளுமாறு விட்டுக் கொண்டிருக்கவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்; மாறாக, அதனைப் பிடிக்க அவர்களை விட்டுக் கொண்டிருக்கத் தான் நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம். மேலும், நாங்கள் எல்லாவற்றையும் சரியாகவே செய்து வருகிறோம். நாங்கள் நமது காலாட்படை இருக்கும் இடத்தில், முன்னணியில் எங்களது நோட்டம் பார்க்கும் வீரர்களை விட்டுவைக்கிறோம். அவர்கள் இலக்குகளைக் கண்டறிந்து கூறுகிறார்கள். எங்கள் கோஷ்டி அற்புதமாக வேலை செய்கிறது: ஜெர்மன் பீரங்கிகள், சிறு பீரங்கிகள், பதுங்கு குழிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகத் தகர்க்கப்பட்டு வானில் தூள் பறக்கின்றன! அவர்கள் தமது பதுங்கு குழிகளின்மீது கட்டைகளை மூன்று அடுக்குகளாக அடுக்கித்தான் அவற்றுக்குக் கூரை போட்டுக்

கொள்வது வழக்கம். இப்போதோ அவர்கள் ஆறு அல்லது ஏழு அடுக்குகளைப் போட்டுக் கொள்கிறார்கள். மேலும், அவர்கள் தரைக்குள் மேன்மேலும் ஆழமாகக் குழி தோண்டிப் பதுங்கிக் கொள்கிறார்கள். ஆயினும் இதனால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. நாங்கள் அங்கேயும் எங்கள் குண்டுகளை வீசி அவர்களை வெளிக்கொணர்ந்து விடுகிறோம்.''

அன்று காலையில் மந்தமான பீரங்கிப் பிரயோகப் பரிவர்த்தனையோடு தொடங்கிய அந்தப் போர் மேன்மேலும் வலுக்கத் தொடங்கியது. ஜெர்மன் குண்டுகள் வெடிப்பது அதிகரித்து வருவதைக் கேட்ட அந்தக் கர்னல் தொலைபேசிக்குச் சென்றார். அவர் தணித்த குரலில் சுருக்கமாகத் தொலைபேசியில் பேசினார். இதன்பின் உடனடியாகவே இதுவரையிலும் மௌனமாக அடங்கியிருந்த அருகிலுள்ள பீரங்கிப்படை செயல்படத் தொடங்கியது. ஜெர்மன் சிறு பீரங்கிகளின் பிரயோகம் கணிசமான அளவில் குறைந்து விட்டது.

ஜெர்மன் பீரங்கிப் படையைப் பற்றி அந்தக் கர்னல் பெரிதாக எண்ணிக் கொண்டிருக்கவில்லை. அவர் எங்களிடம் இவ்வாறு கூறினார்:

''அவர்கள் சரியாகக் குறிவைத்துச் சுடத் தெரியாதவர்கள்; அவர்களுக்கு எந்த ஒழுங்கு முறையும் கிடையாது. போர்க்களத்துக்கு மேல் பறந்து சென்று இலக்குகளைச் சுட்டிக் காட்டும் விமானம் இல்லாவிட்டால், அவர்களால் எதுவும் செய்ய முடியாது. அதோ இடதுபுறம் விழுந்து வெடிக்கும் குண்டுச் சத்தங்களைக் கேளுங்கள். எங்களது பீரங்கிப்படை நேற்றிரவு இருந்த பகுதியின்மீதுதான் அவர்கள் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் பொழுது விடிவதற்கு முன்பே அங்கிருந்து இடம் பெயர்ந்துவந்து விட்டோம். எனவே அவர்கள் ஒன்றுமில்லாத இடத்தின் மீதுதான் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள்; இப்படியே அவர்கள் நெடுநேரம் சுட்டுக்கொண்டிருப்பார்கள். பிறகு ஒருவேளை அவர்கள் தாங்கள் சோவியத் ஹொவிட்ஸர் பீரங்கிப் படையை அழித்தொழித்து விட்டதாகத் தமது அதிகாரிகளிடம் கூறிக்கொள்ளலாம்.''

ஜெனரல் கோஸ்லோவும் சீக்கிரமே வந்துவிட்டார். ஐந்து யுத்தங்களில் போரிட்டிருந்த அந்த ஜெனரல் நரையோடிய நெற்றிப் பொருத்துக்களும், அவசர கோலமில்லாத நடமாட்டமும் கொண்ட மத்திம வயது மனிதராக இருந்தார். அவர் ஒரு பெஞ்சின்மீது சோர்ந்துபோய் உட்கார்ந்தார்; தமது பெரிய, ரோமம் நிறைந்த கைகளைத் தம்முன் மேஜைமீது விரிக்கப்பட்டிருந்த வரைபடத்தின்மீது வைத்தார்.

''நீங்கள் தேநீர் அருந்தினீர்களா?'' என்று கேட்டார் அவர்: ''இல்லேயா? ரொம்ப மோசம். சரி. எங்களுக்குக் கொஞ்சம் தேனீர் கொண்டுவா, சீக்கிரம் கொண்டுவா.''

ஒரு விவசாயியின் மகனான அந்த ஜெனரல் தமது பதினெட்டாவது வயதிலிருந்தே ராணுவ சேவையில் இருந்து வந்திருக்கிறார். அவர் ஒரு பொதுவான ரஷ்ய முகத்தையும், சற்றே மேலேந்திய மூக்கும், குறும்பாக நோக்கும் புத்திக் கூர்மை மிக்க நீல நிறக் கண்களும் கொண்டவராக இருந்தார்.

''ஜெர்மன் காலாட்படை 1914-ல் எப்படியிருந்ததோ அதைக்காட்டிலும் இப்போது கணிசமான அளவுக்குத் தரத்தில் தாழ்ந்ததாகவே உள்ளது'' என்று அவர் நிதானமாகப் பேசத் தொடங்கினர்: ''அவர்கள் டாங்கிகளுக்குப் பின்னல் ஓடுகிறார்கள்; ஆனல் டாங்கிகள் ஏதும் இல்லாவிட்டால், உடனே அவர்கள் தற்காப்பில் இறங்கி, எங்கே இருக்கிறார்களோ அங்கேயே தங்கி விடுகிறார்கள். அவர்கள் துப்பாக்கிச் சனியன்களால் தாக்கும் தாக்குதலே மேற்கொள்வதில்லே; அத்தகைய தாக்குதல் என்றால் அவர்களுக்கு ஒரே பயம். பின்லாந்துக் காரர்கள் இதில் சிறந்த போர் வீரர்களாக இருந்தார்கள். ஆனல் இந்த ஜெர்மன் போர் வீரர்களோ நரம்புத் தளர்ச்சியால் நிலைகுலைந்து போனவர்கள். ஆம். அவர்கள் அந்த நிலைக்குத்தான் ஆளாகி விட்டார்கள். இதனே அவர்கள் தமது வீட்டுக்கு எழுதும் கடிதங்கள், அவர்கள் எழுதிவைத்துள்ள டைரிக் குறிப்புக்கள் ஆகியவற்றின் மூலமே நீங்கள் கண்டுகொள்ள முடியும். கைதிகளோடு பேசிப்பார்த்தாலும் புரிந்து கொள்ளலாம். இதை யெல்லாம் பார்க்கும்போது நமக்கு மனத்தைக் குமட்டுகிறது. அவர்கள் அழுகிறார்கள்; நடுநடுங்குகிறார்கள்; பணிந்து கெஞ்சுகிறார்கள். இல்லே. அவர்கள் சென்ற போரில் பங்கெடுத்த போர் வீரர்களேப்போல் இருக்கவில்லே. எந்த விதத்திலும் இருக்கவில்லே!''

ஜெனரல் எங்களுக்குச் சில சுவையான சம்பவங்களேக் கூறினர். பின்னர் சமையற்காரர் அனதோலி நெத்ஜெல்ஸ்கி எங்கள் அனேவருக்கும் தேநீர் பரிமாறினர்.

''இந்த விருந்தினர்களுக்கு உனது ஜாமில் கொஞ்சத்தை நீ ஏன் பரிமாறக் கூடாது?'' என்று ஜெனரல் அவரிடம் கேட்டார்.

தமது வெண்ணிறமான சமையற்காரர்-தொப்பியை மாஞ்சுங் காணியான ஏதோ ஒரு கோணத்தில் பின்னேக்கித் தள்ளியிருந்த அந்த நெடிய, திடகாத்திரமான சமையற்காரர்,—ஜெனரலின்

கட்டளையைக் கேட்டதும், பறந்தோடிச் சென்று, கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு ஜாம் பாத்திரத்தோடு வந்து சேர்ந்தார்.

''இந்த ஜாமை நாங்களேதான் தயார் செய்தோம்'' என்று பெருமிதத்துடன் கூறிக்கொண்டார் அவர்: ''இங்கு காட்டில் கிரான்பெர்ரிப் பழங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன; எங்கள் ஓய்வு நேரத்தில் நாங்கள் அவற்றைப் பொறுக்கினோம். இப்போது எங்களிடம் புத்தம் புதிய ஜாம் ஏராளமான அளவில் இருக்கிறது.''

தமது ஜெனரலைப் போலவே அந்தச் சமையற்காரரும் காரியார்த்த மிக்க நபர்தான்; அவரது ஜாமும் உண்மையிலேயே அருமையாக இருந்தது. உரையாடலின்போது நேத்ஜெல்ஸ்கியின் ஏனைய குணநலன்களைப் பற்றியும் நாங்கள் தெரிந்து கொண்டோம். அன்றொரு நாள் ஜெனரலும், அதிகாரிகள் சிலரும் முன்னணி நிலைகளில் இருந்தனர்; அதிகாரிகளின் தலைமையகத்திலேயே தங்கிவிட்ட நேத்ஜெல்ஸ்கி, உணவு நேரம் நெருங்கியவுடன் அவர்களுக்கு நல்ல சூடான உணவைக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். எனவே அவர் இரண்டு சக்கர வண்டியொன்றில் ஒரு குதிரையைப் பூட்டிப் புறப்பட்டுச் சென்றார். போகும் போது நடுரோட்டில் ஒரு ஜெர்மன் குண்டு விழுந்து வெடித்து அந்தக் குதிரையைக் கொன்று விட்டது. எனினும், துணிவுமிக்க அந்த இளைஞரை இந்தத் துர்ப்பாக்கியம் நிலைகுலைத்துவிடவில்லை. ஒரு வாளியிலும் தெர்மாஸ் பிளாஸ்கிலும் சூடு பொருந்திய சூப்பை நிரப்பி எடுத்துக்கொண்டு, அவர் எதிரியின் மூர்க்கமான பீரங்கிப் பிரயோகத்துக்கு மத்தியில் ஊர்ந்து ஊர்ந்து சென்று, பசியோடு இருந்த தமது ஜெனரலுக்கும், அதிகாரிகளுக்கும் உணவைப் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டார்.

சண்டை மும்முரமடைந்தபோது, நேத்ஜெல்ஸ்கியும் அதில் சேர்ந்து கொண்டார்; சமையலைப் பார்த்துக் கொள்ளுமாறும், இறைச்சித் துண்டுகள் கருகிப்போய்விடாது கவனித்துக் கொள்ளுமாறும் அவர் அதிகாரிகளின் எழுத்தரிடம் கூறிவிட்டு, தமது துப்பாக்கியையும், கையால் எறியும் சில வெடிகுண்டுகளையும் எடுத்துக்கொண்டு பதுங்கு குழிகளை நோக்கி ஓடினார். இத்தகைய அவசர காலங்களில், ஜெனரல் உண்ணும் உணவு வழக்கம்போல் அத்தனை நன்றாக அமைந்து விடுவதில்லைதான். என்றாலும் அவரது சமையற்காரரின் தேசபக்த உத்வேகம் மதிக்கத்தக்கதாகவே இருந்தது; அது மதிக்கவும்பட்டது. ஒரு முறை நேத்ஜெல்ஸ்கி தமது உயிருக்கு நேரக்கூடிய ஆபத்தையும்

பொருட்படுத்தாமல், காயமடைந்த லெப்டினென்ட் ஒருவரை, போர்க்களத்திலிருந்து பத்திரமான இடத்துக்குச் சுமந்து சென்றார். போர் முடிவதற்கு முன் அவர் இன்னும் பல வீரச் செயல்களைப் புரிவார் என்பது நிச்சயம். சமையற்காரரும் போர் வீரருமான அனதோலி நெத்ஜெல்ஸ்கி இவ்வாறு ஓர் இரட்டை வாழ்க்கை வாழ்ந்து வந்தார். பதுங்கு குழிகளிலிருந்து அவர் தமது சமையற்கட்டுக்கு ஓடி வருவார்; அநேகமாக அவர் அவ்வாறு வரும்போது, சூப் வற்றி ஆவியாகப் போயிருக்கும்; இறைச்சியும் நிலக்கரியைப்போல் கறுத்துக் கருகிப் போயிருக்கும். அல்லது மீண்டும் அவர் சூப்பைத் தயார் செய்து கொண்டிருப்பார்; இந்த நேரம் பார்த்து, திடீரென்று வெடி குண்டுகளின் இடி முழக்கத்தினூடே, ரஷ்ய மொழியில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் மாபெரும் கலகலப்போசை அவருக்குக் கேட்கும்; அந்தச் சமயத்தில் தமது இதயமும், ஆன்மாவும் எந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருந்ததோ, அந்தத் தாக்குதலில் தாம் பங்கெடுக்கவில்லையே என்று நினைந்து அவர் வருந்துவார்: அத்தகைய சமயங்களில் அவர் ஏதோ நினைவாகப் பானைக்குள் உப்புக்குப் பதிலாகச் சர்க்கரையைக் கொட்டி விடுவார்; அல்லது மிளகுக்குப் பதிலாகப் பாதாம் பருப்புக்களை அரைத்து விடுவார். எவ்வாறுயினும், இவ்வாறுதான் நடக்க முடியும் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். என்றாலும், என்னதான் இருந்தாலும், இது அந்த ஜெனரலுக்கும் அவரது சமையற்காரருக்கும் மட்டுமே சம்பந்தப்பட்ட ஒரு சொந்த விஷயமேயாகும். அவர்களுக்குத் தான் அது நன்கு தெரியும் என்பதும் உண்மைதான்.

1941

செஞ்சேனை வீரர்கள்

ஜெனரல் கோஸ்லோவ் எங்களிடம் விடைபெற்றுக்கொண்டு, ஸ்தலத்துக்குச் சென்று தாக்குதலைக் கவனிப்பதற்காகத் தமது யூனிட்டுகள் ஒன்றுக்குச் சென்றுவிட்டார். நாங்கள் அவருக்கு அதிருஷ்டம் வாய்க்கட்டும் என்று நல்வாழ்த்துக் கூறினோம்; என்றாலும், எங்களது வாழ்த்துக்கள் இல்லாவிட்டாலும்கூட, ஒரு விவசாயியின் கூரிய விவேகத்தையும், ஒரு போர் வீரனின் பிடிவாதத்தையும் கொண்ட, முன்யோசனையும் அனுபவமும் மிக்க, இந்த விவசாயி-ஜெனரலுக்கு எதிராக அதிருஷ்டமும் கூடச்சென்றுவிட முடியாது என்பது சர்வ நிச்சயமென்றே தோன்றியது.

நான் நிலவறையைவிட்டு வெளியே வந்தேன். நமது

தயாரிப்புக்கான குண்டு வீச்சு இன்னும் பதினைந்து நிமிடங்களில் தொடங்கவிருந்தது. முன்னணியிலிருந்து அப்போதுதான் வந்திருந்த துணை லெப்டினென்ட் நவ்மோவுக்கு என்ன அறிமுகம் செய்து வைத்தனர். அவர் எதிரியின் பீரங்கிப் பிரயோகத்துக்கு மத்தியில் கிட்டத்தட்ட அரைக் கிலோ மீட்டர் தூரத்துக்குத் தரையில் ஊர்ந்து வரவேண்டியிருந்தது; எனவே அவரது சட்டைக்கைகள், மார்பு, முழங்கால்கள் ஆகியவற்றிலெல்லாம் நசுங்கிப் போன புல்லின் பிரகாசமான பச்சை நிறம் கறை படிந்திருந்தது. என்றாலும், அவர் ரோட்டுத் தூசியைத் தட்டி விட்டுவிட்டு, என் முன் நின்றார்—கச்சிதமான ராணுவத் தோற்றத்தோடு அமைதியாகப் புன்னகை புரியும் இளம் அதிகாரியாக நின்றார். அவருக்கு 27 வயதாகியிருந்தது; இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் அவர் ஒரு பள்ளி ஆசிரியராக இருந்தார். போர் ஆரம்பித்த நாட்களிலிருந்தே அவர் போர்புரிந்து வந்திருந்தார். அவரது முகம் வட்டவடிவ மாக இருந்தது; கன்னங்களில் இளம் பொன்னிறமான சுருட்டை முடி நிறைந்திருந்தது; அவரது கபில நிறக்கண்களில் அன்பு ததும்பியது; அவரது புருவங்கள் சூரிய ஒளியில் நிறம் மங்கிப் போயிருந்தன. அவரது உதடுகளில் எப்போதும் ஓர் இனிமை யான, நாணப் புன்னகை குடிகொண்டிருந்தது. இந்த அடக்கம் மிக்க இளம் ஆசிரியர் தமது மாணவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானவராக இருந்திருக்க வேண்டும் என்றும், ஒரு காலத்தில் அவர் தமது மாணவர்களுக்குக் கணக்குகள் சம்பந்தப் பட்ட விஷயங்களை எவ்வாறு விளக்கிக் கூறினாரோ, அதே அத்துபடியான தன்மையோடும், பொறுமையோடும் போர் வீரர்களுக்கு அவர்களது பணிகளை விளக்கிக் கூறுவதன் மூலம் போர் வீரர்கள் மத்தியிலும் அவர் மிகவும் பிரபலமானவராகவே இருக்கவேண்டும் என்றும் நான் எண்ணிக்கொண்டிருந்தேன். அவரது தலைக்கவசத்துக்கு அடியில் தலைகாட்டிய அவரது வெட்டப்பட்ட அழகிய தலைமுடியில் ஏராளமான நரை தென் படுவதையும் நான் வியப்போடு கவனித்தேன். உரிய பருவத்துக்குமுன் தோன்றிவிட்ட இந்த நரைக்குப் போர்தான் காரணமா என்று அவரிடம் கேட்டேன்; அவரோ ஒரு புன்னகை புரிந்தவாறே, தாம் ராணுவத்தில் சேரும் காலத்தில் தமக்கு ஏற்கெனவே நரை தோன்றி விட்டது என்றும், எனவே இனி எந்தவிதமான அதிர்ச்சிகளும் தமது தலைமுடியின் நிறத்தைப் பாதித்துவிட முடியாது என்றும் பதில் கூறினார்.

நாங்கள் உரையாடி மகிழ்வதற்காக 'நிலவறையின்' மண் சுவரின்மீது வந்து அமர்ந்தோம். ஆயினும் உரையாடல் தளர்வு

கணடது. எங்களோடு உரையாடியவர் தம்மைப்பற்றி பேசுவதையே விரும்பவில்லை. அவரது தோழர்களைப்பற்றி நான் அவரிடம் கேட்கும்போது மட்டும்தான் அவர் உற்சாகம் அடைந்தார். சமீபத்தில் நடந்த சண்டையில் கொல்லப்பட்டு விட்ட தமது நண்பரான லெப்டினெண்ட் அஞஷ்கின்னை அவர் வியந்து பாராட்டிப் பேசினார். இடையிடையே அவர் நமது பீரங்கிகளின் ஓசையையும், அதிகாரிகளது பிரதேசத்துக்குப் பின்னால் எங்கேயோ வெடித்துக் கொண்டிருந்த ஜெர்மன் குண்டுகளின் ஓசையையும் கேட்பதற்காக, தமது கதையை அடிக்கொருதரம் நிறுத்திக் கொண்டார். உரையாடலை நான் அவரைப் பற்றிய தாக மாற்ற முயன்றபோது, அவர் முகம் சுளித்தார்; பிறகு விருப்பமில்லாமலே இவ்வாறு கூறினார்:

"உண்மையில், சொல்வதற்கு எதுவுமே இல்லை. நமது டாங்கி—எதிர்ப்புப் பீரங்கிப் படை சக்கைப்போடு போட்டு வருகிறது. நாம் ஏராளமான ஜெர்மன் டாங்கிகளை முடமாக்கி விட்டோம். எல்லோரும் செய்வதைத்தான் நானும் செய்கிறேன். ஆனால் அஞஷ்கின்—அவர் செய்தது உண்மையிலேயே அற்புதமானது! லுச்கி கிராமத்துக்கு அருகில் நாங்கள் நள்ளிரவில் தாக்குதலைத் தொடுத்தோம்; பொழுது விடிந்தபோது, எங்களுக்கு எதிராக ஐந்து ஜெர்மன் டாங்கிகள் இருந்தன என்பதை நாங்கள் கண்டுபிடித்தோம். நான்கு டாங்கிகள் வயல்வெளியில் ஓடிக்கொண்டிருந்தன. ஐந்தாவது டாங்கி எரிபொருள் இல்லாமையால், அசையாமல் நின்றுகொண்டிருந்தது. நாங்கள் பீரங்கிப் பிரயோகத்தைத் தொடங்கி, அந்த ஐந்து டாங்கிகள் அனைத்தையும் பிடித்து விட்டோம். ஜெர்மானியர்கள் தமது சிறு பீரங்கிகளால் சுட்டுக் கொண்டிருந்தனர்; அவர்களது ஆயுதங்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த இடங்களுக்கு எங்களால் செல்லவே முடியவில்லை. நமது காலாட்படை உற்சாகம் இழந்துவிட்டது. இதன்பின் அஞஷ்கினும் எங்களது வேவு பார்க்கும் படை வீரரான ஷிகலேவும் அந்த ஜெர்மன் டாங்கிகளில் ஒன்றின் பக்கமாக ஊர்ந்து சென்று, அதனுள் ஏறினர். அந்த டாங்கியில் இருந்த பீரங்கி நல்ல நிலையிலிருந்தது. அது ஓர் 76 எம். எம். பீரங்கி. மேலும் அங்கு குண்டுகளும் போதிய அளவுக்கு இருந்தன. எனவே அவர் இந்த ஜெர்மன் பீரங்கியை ஜெர்மானியர் களுக்கு எதிராகவே திருப்பிச் சுட்டார்; அவர்களது சிறு பீரங்கிப்படையை நொறுக்கித் தள்ளினர்; பின்னர் அவர்களது காலாட்படையின் பக்கம் திரும்பினர். அஞஷ்கினும் அவரோடு இருந்தவர்களும் சுடுவதற்கான ஒரு புதிய நிலைக்குத் தமது

பீரங்கியைத் திசை திருப்பிக்கொண்டிருந்தபோது, அவரும் அவரோடு இருந்தவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர்.

நவ்மோவின் கபில நிறக் கண்கள் இருண்டன; அவரது உதடுகள் லேசாகப் பிதுங்கித் திருகின. அவரது முகம் இரண்டாம் முறையும் இவ்வாறு மாறுவதைக் கண்டேன். அதாவது அவருக்கு அவரது வீட்டிலிருந்து அடிக்கடி கடிதங்கள் வருகின்றனவா என்று நான் எதையும் யோசித்துப் பாராமல் அவரிடம் கேட்டு விட்ட போதும், அவரது கண்கள் இருண்டன; உதடுகளும் பிதுங்கித் திருகின.

''கடந்த மூன்று வாரங்களில் நான் என் மனைவிக்கு ஆறு கடிதங்கள் எழுதி விட்டேன்; எனினும் எந்தப் பதிலும் வரவில்லை'' என்று சொன்னார் அவர்; பின்னர் அவர் வெட்கத் தோடு புன்னகை புரிந்தவாறே என்னிடம் இவ்வாறு கேட்டார்: ''நீங்கள் மாஸ்கோவுக்குத் திரும்பிச் செல்லும் போது, தயவு செய்து என் மனைவியைச் சந்தித்து, நான் இங்கு நன்றா யிருப்பதாகக் கூறி, எனது புதிய விலாசத்தையும் அவளிடம் கொடுப்பீர்களா? பாருங்கள். எங்கள் யூனிட் தனது தபால் எண்ணை மாற்றிக் கொண்டுள்ளது. ஒருவேளை அதனால்தான் அவளது கடிதங்கள் எனக்கு வந்து சேரவில்லையோ, என்னவோ?''

இந்த வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க நான் மகிழ்ச்சியோடு சம்மதம் தெரிவித்தேன். விரைவிலேயே எங்கள் உரையாடல் நின்று போய் விட்டது. ஏனெனில் நமது தயாரிப்புக்கான குண்டுவீச்சு தொடங்கி விட்டது. குண்டுவீச்சி னால் நிலம் அதிர்ந்தது; தனித் தனியான குண்டு வெடிப்புக்களும் சரமாரியான குண்டு வெடிப்புக்களும் காதைச் செவிடுபடச் செய்யும் தொடர்ச்சியான இடி முழக்கமாக ஒன்று கலந்தன. திருப்பித் தாக்கும் தமது குண்டுப் பிரயோகத்தை ஜெர்மானியர்கள் தீவிரமாக்கினர்; அவர்களது கனரகக் குண்டுகள் விழுந்து வெடிப்பது மேலும் மேலும் அருகிலேயே கேட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் நிலவறைக்குள் இறங்கிச் சென்றோம்; எனினும் சில நிமிட நேரத்திலேயே மீண்டும் வெளியே வந்தோம். அப்போதும் அந்த நிலவறைக்கு மேல் தாம் புரிந்து வந்த நிர்மாணப் பணியை அந்த ஸாப்பர்கள் நிறுத்தி வைக்கவில்லை என்பதைக் கண்டு நான் வியப் படைந்தேன். அவர்களில் கடுவன் பூனையின் மீசையைப்போல் நீண்டு துருத்திக் கொண்டிருந்த பழுப்பு நிற மீசையைக் கொண்ட மத்திம வயதினரான மனிதர் ஒருவர், அப்போது தான் வெட்டி வீழ்த்தப் பட்டிருந்த ஒரு பெரிய பைன் மரத்தின்

அடிப்பாகத்தைத் தமது கோடரியால் தட்டிப் பார்த்தவாறு, அதனை மிகவும் கரிசனையோடு ஆராய்ந்து கொண்டிருந்தார். ஏனையோர் தமது மண்வெட்டிகளையும் கடப்பாரைகளையும் கொண்டு வேலை செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்; அவர்கள் தோண்டியெடுத்த மண்ணை, அங்கிருந்த பிரகாசமான மஞ்சள் நிறக் களிமண் குவியலின்மீது வீசிப் போட்டுக் கொண்டிருந்தனர்; அதனால் அந்தக் குவியல் எங்கள் கண் முன்னால் ஒரு மலையாகவே உயர்ந்து வந்தது.

அங்கிருந்த அதிகாரிகளில் ஒருவர், சற்றுத் தொலைவில் புல்வின்மீது படுத்துக் கொண்டிருந்த ஒரு போர்வீரனைத் தலையை அசைத்து இனம் காட்டியவாறே, என்னிடம் இவ்வாறு கூறினார்: ''எங்களது வேவு பார்க்கும் தலைசிறந்த வீரர்களில் ஒருவரைச் சந்தித்து நீங்கள் பேச விரும்புகிறீர்களா? அதோ அவர் எதிரியின் அணிகளுக்குப் பின்னாலேயே சென்று வந்தவர்; இன்று காலையில்தான் அவர் திரும்பி வந்தார். மிக முக்கியமான தகவல்கள் சிலவற்றையும் அவர் கொண்டு வந்திருக்கிறார்.

பேச வாய்ப்புக் கிடைத்தால் மகிழ்ச்சிதான் என்று நான் கூறினேன்; அதன்பேரில் அந்த அதிகாரி பீரங்கி முழக்கத்தையும் மிஞ்சிக் கொண்டு கேட்கும் விதத்தில் அவரை நோக்கி இவ்வாறு கத்தினார்: '' தோழர் பெலோவ்!''

அந்த மனிதர் சட்டென்று நாசூக்காகத் துள்ளியெழுந்து நின்றார்; பின்னர் தமது சட்டையை நேராக இழுத்து விட்டவாறே எங்களை நோக்கி நடந்து வந்தார்.

திடீரென்று மௌனம் குடிகொண்டது. அந்த அதிகாரி தமது கைக்கடிகாரத்தைப் பார்த்தார்; பெருமூச்சுவிட்டார்; பிறகு இவ்வாறு கூறினார்: ''நமது போர்வீரர்கள் இப்போது தாக்குதலைத் தொடுத்து விட்டார்கள்.''

பெலோவ் நாசூக்காக நடந்து வந்த நடையில் பூனையின் நடை போன்ற தன்மை ஏதோ புலப்பட்டது. அங்கு தரையில் பைன் மரக்கிளைகளும், காய்ந்த சுள்ளிகளும் மலிந்துதான் கிடந்தன. என்றாலும் அவரது காலடியின்கீழ் ஒரு சுள்ளி கூட முறிந்துச டசடக்கவில்லை. அவர் ஏதோ மணலின்மீது நடந்து வருவதுபோல்தோன்றியது; ஏனெனில் அவரது காலடியின் மூலம் எழுந்த சத்தமே அவ்வளவுதான். இதன் பிறகு வெகுநேரம் கழித்துத்தான் அவர் ஊடுருவிச் செல்ல முடியாத காடுகள் மலிந்த மூரோம் பிரதேசத்துக்கு அருகிலுள்ள கிராமங்கள் ஒன்றைச் சேர்ந்தவர் என்பதைத் தெரிந்து கொண்டேன்; இதன்பின்தான், வேட்டையாடச் செல்லும் பிராணிகளைப் பயமுறுத்தி விரட்டிவிடாதபடி, மிருதுவாக, சத்தமே இல்லாமல்

நடந்து செல்லும் ஒரு வேட்டைக்காரரின் திறமையை அவர் எப்படிக் கற்றுக் கொண்டிருந்தார் என்பதையும் புரிந்து கொண்டேன்.

துணை லெப்டினென்ட் நவ்மோவுடன் நான் நடத்திய உரையாடலின்போது என்ன நடந்ததோ, அதுவேதான் இப் போதும் நடந்தது. இந்த மனிதரும் தம்மைப் பற்றிப் பேசுவதற்கு விரும்பவில்லை; எனினும் தமது தோழர்களை இவர் ஆர்வத்தோடு பாராட்டிப் பேசினார். தமது தாயகத்துக்காக அஞ்சாது போரிடும் வீரர்கள் யாவருக்கும், அடக்கம் ஓர் அத்தியாவசியமான குணமாகும் என்பதை நன் கண்டறிந்து கொண்டேன்.

பெலோவ் தமது கூர்மையான பழுப்பு நிறக் கண்களால் என்னைச் சற்று நேரம் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து பார்த்தார்.

"ஒரு எழுத்தாளரை நான் நேருக்கு நேராகக் காண்பது இதுவே முதல் தடவை" என்று அவர் பல்லெல்லாம் தெரியப் புன்னகை புரிந்தவாறே கூறினார்: "நான் உங்கள் புத்தகங்களைப் படித்திருக்கிறேன். பல்வேறு எழுத்தாளர்களின் படங்களையும் பார்த்திருக்கிறேன். என்றாலும் உயிருள்ள எழுத்தாளரை நான் இதற்கு முன் நேரில் கண்டதே இல்லை."

தமது உயிரை ஒவ்வொரு நாளும் பணயம் வைத்து, எதிரிகளின் அணிகளுக்குப் பின்னல் பதினாறு முறை சென்று திரும்பியிருந்த, அசாதாரணமான துணிச்சலும், சாதுரியமும் மிக்க அந்த மனிதரை நானும் குறுகுறுப்புணர்ச்சியோடு கூர்ந்து கவனித்தேன்.

அவர் சற்றே உருண்டு திரண்ட தோள்களும், நீண்ட கரங் களும் கொண்டவராக இருந்தார். அவர் மிகவும் அரிதாகத்தான் புன்னகை புரிந்தார்; ஆயினும் அவர் புன்னகை புரியும்போதோ அவரது முகம் ஒரு குழந்தையின் முகம்போல் பிரகாசித்தது; மேலும் இடைவெளிகள் அதிகமாகவுள்ள அவரது வெள்ளிய பற்களையும் காண முடிந்தது. சாக்லேட் நிறங்கொண்ட அவரது கண்கள் எப்போது பார்த்தாலும் சுருங்கிச் சொருகிக் கொண்டிருந்தன. இராக்காலப் பறவையைப்போல் அவர் பகல் வெளிச்சத்தைக் கண்டு அஞ்சுவதாகவும், தமது கனத்த கண்ணிமைகளால் கண்களைத் திரையிட்டு மூடிக் கொள்வதாக வும் தோன்றியது. இருட்டில் அவரால் நன்றாகப் பார்க்க முடியும் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அவரது உள்ளங்கைகளை நான் உற்றுப் பார்த்தேன். அவற்றில் ஆறிப்போன சிராய்ப்புகளும் புதிய சிராய்ப்புப் புண்களும் நிறைந்திருந்தன. அவர் தரை மீது அடிக்கடி ஊர்ந்து செல்ல

நேர்கின்ற காரணத்தால்தான், அவரது கைகளில் தோல் உரிந்திருந்தது என்று நான் ஊகித்துக் கொண்டேன். அவரது சட்டையிலும் கால்சராயிலும் பச்சை நிறக் கறை படிந்திருந்தது. ஆயினும் அவரது இயல்பான தோற்றமே மிக நன்முக இருந்தது; அதாவது இலேயுதிர் காலத்தின் வாடிய பச்சைப் புல்லின்மீது அவர் குப்புறப் படுத்துக் கிடந்தால், ஐந்தடி தூரத்திலிருந்தும்கூட நீங்கள் அவரைக் கண்டுகொள்ள முடியாது. அவர் தமது கதையைச் சாவதானமாகச் சொல்லத் தொடங்கினுர்; பேசும்போதே அவர் ஒரு புல்லிதழைத் தமது வலுவான பற்களால் கடித்துக் கொண்டேயிருந்தார்:

''நான் முதலில் ஒரு எந்திரத் துப்பாக்கி வீரனுகத்தான் இருந்தேன். ஜெர்மானியர்கள் எங்கள் படைப்பிரிவைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டு விட்டார்கள். நாங்கள் எந்தத் திசை வழியே தப்பிச் செல்ல முயன்முலும் அங்கெல்லாம் அவர்கள் இருந்தனர். அப்போது எனது நண்பன் ஒருவன்—அவனும் துப்பாக்கி வீரன்தான்—தான் போய் வேவு பார்த்து விட்டு வர முன் வந்தான். நானும் அவனேடு சென்றேன். நாங்கள் மோட்டார் கார்ப் பாதைக்கு ஊர்ந்து சென்று, அங்கு ஒரு பாலத்துக்கு அருகில் பம்மியிருந்தோம். நாங்கள் அங்கேயே நெடுநேரம் பம்மிக் கிடந்தோம். எங்களேக் கடந்து சென்ற ஜெர்மன் லாரிகளே நாங்கள் எண்ணிக் கணக்கெடுத்தோம்; அவற்றில் என்னென்ன சாமான்கள் சென்றன என்றும் எழுதி வைத்துக் கொண்டோம். பிறகு ஒரு பயணிகள் கார் அங்கு வந்தது; அது பாலத்துக்கருகில் வந்து நின்றது. உயரமான தொப்பியும் நெடிய உயரமும் கொண்ட ஒரு ஜெர்மன் அதிகாரி அதிலிருந்து இறங்கினுன். அவன் போர்க்களத் தொலே பேசியைத் தேடிப்பிடித்து, தனது காருக்கடியில் சென்று, அங்கு படுத்துக் கொண்டு தொலேபேசியில் பேசினுன். அவனேடு யாரும் வருகிறர்களா என்று கண்காணித்துக் கொண்டிருக்க இருபோர் வீரர்களும் வந்திருந்தனர். காரின் டிரைவர் அவனது ஸ்தானத்தில் காரின் சக்கரத்தைப் பிடித்தவாறு அமர்ந்திருந்தான். எனது நண்பன் —அவன் ஒரு ராட்சசப் பயல்!—என்னே நோக்கிக் கண்ணடித் தான்; கையால் எறியும் வெடிகுண்டு ஒன்றையும் வெளியே எடுத்தான். நானும் அவ்வாறே செய்தேன். நாங்கள் இருவரும் முழங்கைகளே ஊன்றி எழுந்தோம்; இருவரும் குண்டுகளே ஒரே சமயத்தில் வீசியெறிந்தோம். நாங்கள் அந்த நான்கு ஜெர்மானி யர்களேயும் கொன்று அந்தக் காரையும் நாசமாக்கி விட்டோம். பின்னர் இறந்துபோன அந்த மனிதர்களிடம் ஓடிச்சென்று, அதிகாரியின் தோளில் தொங்கிக் கொண்டிருந்த, வரைபடப்

பையை இழுத்துப் பறித்தோம்; அதிலிருந்து ஏதேதோ விதமான குறியீடுகளைக் கொண்டிருந்த ஒரு வரைபடத்தையும் வெளியே எடுத்தோம்; அவர்களது ஆயுதங்கள் சிலவற்றையும் எடுத்துக் கொண்டோம்; அந்தச் சமயத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் வரும் சத்தத்தை நாங்கள் கேட்டோம். கேட்டதும் மீண்டும் பள்ளத்துக்குள் சென்று பதுங்கிக் கொண்டோம். மோட்டார் சைக்கிளில் வந்த அந்த ஜெர்மானியன் நாச மாக்கப்பட்ட அந்தக் காரின் பக்கம் வந்து, சைக்கிளின் வேகத்தைக் குறைத்ததும், நாங்கள் மூன்றாவது வெடிகுண்டு ஒன்றையும் வீசியெறிந்தோம். அது அந்த ஜெர்மானியனைக் கொன்று விட்டது; மோட்டார் சைக்கிளும் இரண்டு முறை உருண்டு புரண்டது; அதன் இஞ்சினும் ஓய்ந்து அடங்கி விட்டது. நான் மோட்டார் சைக்கிளை நோக்கி ஓடினேன்—அது புத்தம் புதியது போல் இருந்தது. என் நண்பன் வீராதி வீரன்தான்; என்றாலும் மோட்டார் சைக்கிளை ஓட்டுவது எப்படி என்பது மட்டும் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. எனக்கும் தெரிய வில்லை. என்றாலும், அதனை விட்டு விட்டுச் செல்வதற்குப் பரிதாபமாக இருந்தது. எனவே நாங்கள் அதனை உருட்டிக் கொண்டே சென்றோம்.'' பெலோவ் இதனை நினைத்துப் பார்த்துப் பல்லைக் காட்டிச் சிரித்தார். ''அந்தப் பாழாய்ப் போன மோட்டார் சைக்கிளைக் காட்டின் வழியே உருட்டித் தள்ளிக் கொண்டு வந்ததால் என் கைகள் எல்லாம் மரத்துப் போய் விட்டன; என்றாலும் அதனை எப்படியோ எங்கள் ஆட்களிடம் பத்திரமாகக் கொண்டு சேர்ப்பித்து விட்டோம். மறுநாளே நாங்கள் முற்றுகையை உடைத்துக் கொண்டு தப்பி வெளி வந்து விட்டோம். அத்துடன் அந்த மோட்டார் சைக்கிளையும் கொண்டு வந்து விட்டோம். எங்களது சிக்னல் வீரர் இப்போது அதனை ஓட்டிக் கொண்டிருக்கிறார்; புழுதி பறக்க ஓட்டிக் கொண்டு செல்கிறார்! வேவு பார்க்கும் வேலை மிகவும் வேடிக்கையானது என்று நான் நினைத்தேன். எனவே என்னை வேவு பார்க்கும் படையில் மாற்றி விடுமாறு எங்கள் கம்பெனித் தளபதியிடம் கேட்டுக் கொண்டேன். இந்த ஜெர்மானியர்களைப் போய்க் கண்டு வர நான் பலமுறை சென்றிருக்கிறேன். சில சமயங்களில் நாங்கள் நடந்து செல்ல வேண்டும்; சில சமயம் தரையோடு தரையாய்ப் படுத்து உடம்பு தேய ஊர்ந்து செல்ல வேண்டும்; மற்றும் தரையை அணைத்துப் படுத்துக் கொண்டு, பல மணி நேரத்துக்கு ஆடாமல் அசையாமல் கிடக்க வேண்டிய சமயங்களும் உண்டு. இவையெல்லாம் எங்களுக்கான அன்றாட வேலைதான். ஜெர்மானியர்கள் தமது தளவாடக் கிடங்குகளையும், ரேடியோ நிலையங்களையும், விமான

தளங்களையும், மற்றும் பிற பொருள்களையும் எங்கெங்கே வைத்திருக்கிறார்கள் என்று மோப்பம் பிடித்துக் கண்டறிய முயல்வதற்கு, நாங்கள் மிகப் பெரும்பாலும் இரவு நேரத்தில் தான் செல்கிறோம்.''

கடைசியாக ஜெர்மானியர்களிடம் போய் அவர் கண்டு வந்த விவரங்களைக் கூறுமாறு நான் அவரிடம் கேட்டுக் கொண்டேன்.

''தோழர் எழுத்தாளரே, அதில் சொல்வதற்குச் சுவையான விஷயம் எதுவும் இல்லை'' என்றார் அவர்: ''நேற்றைக்கு முந்திய நாள் எங்கள் படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே சென்றோம். நாங்கள் சில ஜெர்மன் பதுங்கு குழிகளுக்கு மேலாக ஊர்ந்து சென்றோம்; ஒரு ஜெர்மானியனை அவன் கூச்சல் போட்டு மற்றவர்களை உஷார்ப்படுத்தி விடாத படி, அவனை அரவமின்றிக் கத்தியால் குத்திக் கொன்றோம். அதன்பின் நெடுநேரம் வரையிலும் காட்டு வழியாக நடந்து சென்றோம். எங்களுக்கு இடப்பட்டிருந்த உத்தரவு, ஜெர்மானியர்கள் அப்போதுதான் கட்டி முடித்திருந்த ஒரு பாலத்தை வெடி வைத்துத் தகர்க்க வேண்டும் என்பதே. அது எதிரியின் பிரதேசத்துக்குள் சுமார் நாற்பது கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. மேலும், நாங்கள் கண்டறிந்து கொள்ள வேண்டிய வேறு சில விஷயங்களும் இருந்தன. நாங்கள் அன்றிரவில் சுமார் பதினெட்டுக் கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து விட்டோம். பின்னர் எங்கள் படைப்பிரிவின் தளபதி ஒரு செய்தியை அனுப்புவதற்காக என்னைத் திருப்பியனுப்பி விட்டார். நான் ஒரு குறுகிய பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு குதிரையின் புதிதாகப் பதிந்திருந்த கால் குளம்புத் தடங்களை நான் கண்டேன். நான் அதனைக் கூர்ந்து பார்த்ததில், அது ஜெர்மன் குதிரை லாடங்களின் தடமேயன்றி, நமது குதிரை லாடங்களின் தடமல்ல என்பதைக் கண்டேன். அதனை அடுத்து மனிதர்களின் காலடித் தடங்களையும் கண்டேன்: அந்தக் குதிரைக்குப் பின்னால் நான்கு பேர் நடந்து சென்றிருக்க வேண்டும்; அவர்களில் ஒருவனுக்கு அவனது காலில் ஓர் ஊனம் இருக்க வேண்டும். அந்தக் காலடித் தடங்கள் சற்று நேரத்துக்கு முன் பதிந்தவைதான். நான் அந்த ஜெர்மானியர்களை எட்டிப் பிடித்து விட்டேன்; அவர்களை நெடு நேரமாகப் பின் தொடர்ந்து சென்றேன்; பின்னர் அவர்களை விட்டுவிட்டு ஒரு சுற்று வழியாகச் சென்று, எனது சொந்த வழிக்கு வந்து விட்டேன். நான் அவர்கள் அனைவரையும் சுலபமாகச் சுட்டுத் தள்ளியிருக்க முடியும். ஆனால் ஒரு சண்டையில் ஈடுபடுவதற்கு எனக்கு உரிமை

இருக்கவில்லை. ஏனெனில் என் சட்டைப் பையில் அந்தக் கடிதம் இருந்தது. அதனை இழந்துவிடும் ஆபத்துக்கு நான் உள்ளாகக் கூடாது. பொழுது இருட்டுகிற வரையிலும் நான் ஜெர்மன் பதுங்கு குழிகளுக்கு மிகவும் அருகிலேயே காத்துக் கிடந்தேன். அதன்பின் பொழுது விடிவதற்கு முன்பே நமது பக்கத்துக்கு வந்து விட்டேன். அவ்வளவுதான்.''

அவர் மௌனமானார். வெளிச்சத்துக்கு எதிரே, அவர் தமது கண்களைச் சுருக்கிக் கொண்டவராய், ஒரு காய்ந்த புல்லிதழைத் தமது விரல்களால் திருகியவாறே, ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டு அமர்ந்திருந்தார். பின்னர் தமது சொந்த எண்ணங்களுக்கே பதில்கூறுவதுபோல் அவர் இவ்வாறு பேச முனைந்தார்:

''தோழர் எழுத்தாளரே, நான் நினைப்பது என்னவென்றால், நாம் இந்த ஜெர்மானியர்களை முறியடித்து விடுவோம். நமது மக்களுக்குக் கோபத்தை ஏற்படுத்த எவ்வளவோ தேவைப் படுகிறது. அவர்கள் இன்னும் உண்மையில் கோபம் கொண்டு விடவில்லை. ஆனால் அவர்கள் உரிய முறையில் கோபம் கொண்டு விட்டால், ஜெர்மானியர்களின் கதையே முடிந்து விடும். அவர்களை நாம் நசுக்கியொழித்துவிடுவோம். அது மட்டும் நிச்சயம்.''

நாங்கள் காரை நோக்கி நடந்து வந்தபோது, காயமடைந்த போர் வீரர் ஒருவர் பக்கமாக வந்து விட்டோம். அவர் சில அடிகள் எடுத்து வைத்ததுமே, ஒவ்வொரு முறையும் குடி போதையில் தள்ளாடுவது போல் ஆடிக்கொண்டு, ஆம்புலன்ஸ் வண்டியை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவரது தலையில் கட்டுப் போட்டிருந்தது; ஆயினும் அந்தக் கட்டின் வழியாக ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவரது கம்பளிக் கோட்டின் காலர் மடிப்புக்களிலும் அதன் கீழ்ப் பகுதியிலும், ஏன் அவரது பூட்சுகளிலும் கூட, காய்ந்து போன ரத்தத்துளிகள் காணப் பட்டன. அவரது கைகளிலும், முழங்கை வரையில் அவரது சட்டைக் கைகளிலும் ரத்தம் தென்பட்டது. அவரது முகம் விசித்திரமான சுண்ணும்புக் கட்டி போன்ற வெளுப்பைப் பெற்றிருந்தது; அவர் ஏராளமான ரத்தத்தை இழந்து விட்டார் என்பதே இதற்கு அர்த்தமாகும்.

நாங்கள் அவரை ஆம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி விட அவருக்கு உதவ விரும்பினோம்; ஆனால் அவரோ அந்த உதவியை மறுத்து விட்டார்; தாமே போய் ஏறிக் கொள்வதாகக் கூறி விட்டார். ஒரு மணி நேரத்துக்கு முன்னர்தான் தாம் காயம்பட்டு விட்டதாக அவர் சொன்னார். அவரது தலையிலிருந்து கண்கள் வரையிலும் அகலமாகக் கட்டுப் போடப்பட்டிருந்தது. எனவே

தான் யாருடன் பேசுகிறோம் என்பதைக் காண்பதற்காக அவர் அந்தக் கட்டை மேலே மிகவும் உயர்த்த வேண்டியிருந்தது.

''வெடிகுண்டின் சிதறல் ஒன்று என்னைக் காயப்படுத்தி விட்டது. என் தலைக்கவசம்தான் என்னைக் காப்பாற்றியது. இல்லாவிட்டால் என் தலையே சுக்கு நூறுகச் சிதறிப் போயிருக்கும்'' என்று அவர் தணிந்த குரலில் கூறினார்; அத்துடன் தமது நீலம் பாரித்த, ரத்தமிழந்த உதடுகளால் புன்னகை செய்யவும் முயன்றார்: ''அந்தச் சிதறல் என் தலைக்கவசத்தைத் துளைத்துக் கொண்டு பாய்ந்துவிட்டது; நான் தலையைக் கைகளால் பற்றிப் பிடித்துக் கொண்டேன்; ரத்தம் பொங்கி வந்தது.'' அவர் தமது கைகளை உற்றுப் பார்த்தார்; பின்னர் தமது குரலை இன்னும்கூடத் தாழ்த்திக் கொண்டு இவ்வாறு கூறினார்: ''நான் என் துப்பாக்கியையும், எனது தோட்டாக்களையும், கையால் எறியும் இரு வெடிகுண்டுகளையும் நண்பர் ஒருவரிடம் கொடுத்தேன்; அவசரசிகிச்சை நிலையத்துக்கு ஊர்ந்து சென்றேன்.'' திடீரென்று அவரது முகம், வெடிகுண்டுகளின் வெடிப்புச் சத்தமும் எந்திரத் துப்பாக்கிப் பிரயோகத்தின் சடசடப்புச் சத்தமும் வந்துகொண்டிருந்த மேற்குத் திசை நோக்கிச் சட்டென்று திரும்பியது. பின்னர் அவர் வலுவும் உறுதியும் மிக்க உரத்த குரலில் இவ்வாறு கூறினார்: ''நான் திரும்பவும் வருவேன். அங்கு அவர்கள் என் உடம்பை ஓரளவுக்குக் குணப்படுத்தி விடுவார்கள். பின்னர் நான் திரும்பவும் எங்கள் கம்பெனிக்கு வந்து சேர்வேன். இந்த ஜெர்மானியர்களோடு சரிக்கட்ட வேண்டிய கணக்கு ஒன்று எனக்கு உண்டு!''

அவரது தலை உயர்ந்திருந்தது; அவரது கண்கள் தலைக் கட்டுக்குக் கீழ் பளிச்சிட்டன; அவரது அந்தச் சாதாரண வார்த்தைகள் ஒரு வஞ்சின சபதம் போல் ஒலித்தன.

நாங்கள் காட்டுக்குள் புகுந்தோம். அங்கு தரைமீது செந்நிறமான இலைகள் பரவிக் கிடந்தன — நெருங்கி வரும் இலையுதிர்காலத்துக்கான முதல் அறிகுறி அது. அந்த இலைகள் ரத்தக்கறைகளைப் போல், ஜெர்மன் படையெடுப்பாளர்கள் எனது தாயகத்தின் உடலின்மீது ஏற்படுத்திவிட்ட காயங்களைப் போல் தோன்றின.

''செஞ்சேனையில்தான் எத்தனை அற்புதமான நபர்கள் இருக்கிறார்கள்!'' என்று எனது சகாக்களில் ஒருவர் தணிந்த குரலில் கூறினார்: ''சிறிது காலத்துக்கு முன் ஒரு மாவீரனைப் போல் மாண்டுபட்ட மேஜர் வாய்த்செகோவ்ஸ்கியைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். அவர் இங்கிருந்து சற்றுத் தொலைவி

லிருந்த கட்டிடங்கள் ஒன்றின் கீழறையில் இருந்து, நமது பீரங்கிப் பிரயோகத்தின் திசையைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தார். அப்போது பதினறு ஜெர்மன் டாங்கிகள் கிராமத்துக்குள் புகுந்து, அந்தக் கட்டிடத்தின் முன்னுல் வந்து நின்றன. உடனே அவர் ஒருகணமும் தயங்காமல் தமது தொலேபேசியைக் கையில் எடுத்து, 'என்னே நோக்கிக் குறி வையுங்கள், சீக்கிரம். ஜெர்மன் டாங்கிகள் இங்குதான் இருக்கின்றன' என்று பீரங்கி வீரர்களுக்கு உத்தரவிட்டார். இதே உத்தரவை அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினர். இறுதியில் அந்தப் பதினறு டாங்கிகள் அனேத்தும் அழிக்கப்பட்டன; நமது தற்காப்புக்கு நேர்ந்த ஆபத்தும் தவிர்க்கப்பட்டது.''

நாங்கள் மௌனமாக நடந்து சென்ருேம். ஒவ்வொருவரும் அவரவரின் சிந்தனேகளில் மூழ்கியிருந்தனர்; என்ருலும், அந்தக் காட்டைவிட்டு வெளிவரும்போதோ, நமது நாட்டுக்கு எத்தகைய சோதனேகள் நேருமாயினும், அதனே வெல்ல முடியாது என்ற தன்னம்பிக்கை உணர்வோடு நாங்கள் எல்லோரும் வெளிவந்தோம். அது வெல்ல முடியாதது; ஏனெனில் அதனேப் பாதுகாக்க, லட்சோப லட்சக்கணக்கான, அடக்கமும் துணிவாற்றலும் மிக்க, சாதாரண மக்கள் திரண்டு நிற்கின்றனர்; பழுப்புநிறச் சட்டையணிந்த இந்த எதிரிக்கு எதிராக நடத்தும் போராட்டத்தில் அவர்கள் தமது ரத்தத்தைச் சிந்தவோ அல்லது உயிரையும்கூடப் பலி கொடுக்கவோ தயங்கமாட்டார்கள்.

1941

யுத்தக் கைதிகள்

அவர்களது படைப்பிரிவு பாரீஸில் ரயிலில் ஏற்றப்பட்டு, கிழக்கு நோக்கி அனுப்பிவைக்கப்பட்டது. அவர்கள் வசம். பிரான்சில் அவர்கள் கொள்ளேயடித்திருந்த பொருள்களும், மற்றும் பிரெஞ்சு ஒயின் புட்டிகளும், பிரெஞ்சுக் கார்களும் இருந்தன.

பெட்ரோல் இல்லாத காரணத்தால் அவர்கள் தமது கார்களே மின்ஸ்க் நகரிலேயே விட்டுவிட்டு வர நேர்ந்தது; அங்கிருந்து அவர்கள் கால் நடையாகவே போர் முனேயை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். ஜெர்மன் ஆயுதங்களால் பெற்ற வெற்றியாலும், பிரெஞ்சு ஒயின் மதுவினுலும், போதை யேறிப் போயிருந்த அவர்கள் தமது சட்டைக் கைகளே முழங்கை

வரையிலும் திரைத்துச் சுருட்டிக் கொண்டும், காலர்களைப் பொத்தான் இடாமல் திறந்து போட்டுக் கொண்டும், பைலோ ரஷ்யாவின் தூசி மலிந்த ரோடுகளின் வழியே நடந்து சென்றனர். அவர்களது தலைக் கவசங்கள் அவர்களது பெல்ட் வாரோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன; அவர்களது மூடாத, வியர்வை படிந்த தலைகள் இந்த அன்னிய நாட்டின் இதமான சூரிய ஒளியையும் சுகமான காற்றையும் அனுபவித்தன. தமது பிளாஸ்க்குகளில் இன்னும் சிறிது ஒயின் தளும்பிக் கொண்டிருக்க, அவர்கள் சோவியத் கிராமங்களின் எரிந்து கரிந்த இடிபாடுகளின் வழியே விரைவாக நடந்து சென்றனர்; செல்லும் போதே, ஜெர்மானியர்கள் பாரீசுக்குள் புகுந்த காலத்திலேயே உண்மையான போர் வீரர்களை முதன் முதலில் நேரில் பார்த்தவளும், உண்மையான ஆடவர்களிடம் தனது முதல் அனுபவத்தைப் பெற்றவளுமான ஜீன் என்னும் அழகிய பிரெஞ்சு யுவதியைப் பற்றிய ஆபாசமான பாட்டொன்றையும் உரக்கப் பாடிச் சென்றனர்.

இதன்பின் அவர்களுக்கு வாழ்க்கை அத்தனை சுகமாக இருக்கவில்லை. பகலிலும் இரவிலும் சரி, அவர்கள் நடந்து செல்லும் போதும் சரி, முகாமிட்டுத் தங்கியிருக்கும்போதும் சரி, கொரில்லாப் படைவீரர்களின் தொல்லைகளுக்கு அவர்கள் உள்ளானார்கள். ஆறே நாட்களுக்குள் அந்தப் படைப்பிரிவில் கிட்டத்தட்ட நாற்பதுபேர் கொல்லப்பட்டனர்; காயமடைந்தனர். தலைமையகத்துக்கு ஒரு மோட்டார்சைக்கிளில் தகவல் கொண்டு சென்ற தூதுவன் என்ன ஆனான் என்பதே தெரியாமல் மாயமாய் மறைந்து விட்டான். அதேபோல் ஆறு சாதாரணப் போர்வீரர்களும் ஒரு லான்ஸ் கார்ப்போரலும் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. இந்த ஏழுபேரும் படைப் பிரிவுக்கு ஏதோ கொஞ்சம் உணவு தேடிக் கொண்டு வருவதாகக் கூறி மிக அருகிலிருந்த ஒரு கிராமத்துக்குச் சென்றனர்; ஆனால் போனவர்கள் திரும்பவே இல்லை. ஜெர்மானியர்களோடு மகிழ்ச்சிகரமாக இருந்து வந்த அந்த அழகிய பிரெஞ்சு யுவதியைப் பற்றிய பாட்டும் இப்போது மிகமிகக் குறைவாகத்தான் கேட்டது. இங்குள்ள மக்கள் ஜெர்மானியர்களோடு மகிழ்ச்சிகரமாக இருக்க விரும்பவில்லை. அந்தப் படைப் பிரிவு, நாசமாக்கப் பட்ட கிராமங்களுக்குள் புகுந்ததும், கிராமவாசிகள் காடுகளுக்குள் ஓடி வீட்டவர்கள்; தமது வீடுகளில் பின்தங்கி விட்டார்களோ, ஜெர்மானியர்களின் மீது தமது கண்களில் கனன்று கொண்டிருக்கும் பகைமையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக, தமது பாதங்களையே உம்மென்று முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த ஆடவர் பெண்டிரின்

கண்களில் பயத்தைக் காட்டிலும் பகைமையே அதிகமாகக் குடிகொண்டிருந்தது.

* * *

லான்ஸ் கார்ப்போரல் ஃபிரிட்ஜ் பெர்க்மான்—அவர் சொல்வதை நாம் நம்புவதாக இருந்தால்—சிவிலியன் மக்களுக்கு எதிரான எந்தத் தண்டனை நடவடிக்கைகளிலும் அவர் பங்கெடுத்ததே கிடையாது. அநாவசியமான கொடுமைகளுக்கெல்லாம் இயல்பாகவே எதிரானவரான பண்பும் கண்ணியமும் மிக்க நபராகவே அவர் தம்மைப்பற்றிக் கருதிக் கொண்டிருந்தார். எனவே, குடிவெறி ஏறிய அவரது போர்வீரர்கள் ஆபாசமான ஜோக்குகளைக் கூறிச் சிரித்துக் கொண்டு, ஓர் இளம் விவசாயமாதைத் தானியக் கிடங்குக்குள் இழுத்துச் சென்றபோது, அவர் அவளது கூக்குரலைக் காதில் கேட்காதிருப்பதற்காக, அந்த முற்றத்தைவிட்டே அப்பால் சென்று விட்டார். அந்தப் பெண் இளமையும் பலமும் மிக்கவளாக இருந்தாள். அவள் அவர்களை வலுவாக எதிர்த்துப் போராடினாள்; இதனால் அந்தப் போர் வீரர்களில் ஒருவனது கண் பறிபோய்விட்டது. என்றாலும், மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து அவளை மடக்கி விட்டனர். அவர்கள் அவளைக் கற்பழித்து முடித்த பின்னால், அந்த ஒற்றைக் கண் போர் வீரன் அவளைக் கொன்று விட்டான். இதைப்பற்றிக் கேள்விப்பட்டபோது, லான்ஸ் கார்ப்போரல் பெர்க்மான் படுகோபம் கொண்டார். அவராக இருந்தால், இத்தனை நீசத்தனமான காரியத்தை அவர் செய்திருக்கவே மாட்டார். அவருக்கு அவரது சொந்த ஊரான நூரெம்பர்க்கில், மனைவியும் இருகுழந்தைகளும் இருந்தனர். எனவே தமது மனைவிக்கு இந்த மாதிரி எதுவும் நேர்வதை அவர் விரும்பவே மாட்டார். போகட்டும். மிருகப் பிறவிகளின் செயல்களுக்கு அவரால் பதில் கூற முடியாது; துர்பாக்கியவசமாக அத்தகைய பிறவிகளும் ரீச் ராணுவத்தில் இருக்கத்தான் செய்தார்கள். இந்தச் சம்பவத்தைக் குறித்து அவர் தமது லெப்டினென்டிடம் கூறியபோது, அந்த மனிதர் 'போரென்றால் இப்படித்தான்!' என்று தோளை உலுக்கி விட்டு, 'அற்ப விஷயங்களுக்கெல்லாம் அலட்டிக் கொள்ள வேண்டாம்' என்று பெர்க்மானிடம் கூறினார்.

அந்தப் படைப் பிரிவு வந்துசேர்ந்தவுடனேயே நேராகப் போரில் ஈடுபட நேர்ந்தது. அவர்கள் பதுங்கு குழிகளை விட்டு 26 நாட்களுக்கு வெளி வரவில்லை. 170 பேர் கொண்ட பெர்க்மானின் கம்பெனியில் 38 பேரே உயிர் பிழைத்திருந்தனர். இத்தகைய பேரிழப்பைக் கண்டு போர்வீரர்கள் சோர்வடைந்தனர். அவர்கள் தமது பாடல்களை உரக்கப்பாடிக் கொண்டு

பாரிஸிலிருந்து ரயிலில் வரும்போது, ரஷ்யர்களோடு நடத்தப் போகும் போர் எவ்வாறு இருக்கும் என்று அவர்கள் கற்பனை செய்திருந்தார்களோ, அவ்வாறு இப்போது இருக்கவில்லை. வெண்ணெயைக் கத்தி வெட்டிக் கொண்டு இறங்குவதுபோல், ரஷ்யாவுக்குள் அவர்கள் லகுவாக முன்னேறிவிட முடியும் என்று தான் அவர்களது அதிகாரிகள் அவர்களிடம் கூறியிருந்தனர். அவ்வளவு சுலபமாக எல்லாம் நிறைவேறிவிடும் என்று கூறி யிருந்தனர். ஆனால் இவையாவும் வெறும் ஜம்பப் பிதற்றல் தான் என்பது புலனாகிவிட்டது. இவ்வாறெல்லாம் அவர்களிடம் கூறிய அந்த அதிகாரிகளிற் பலரும், இந்த மாதிரி எதையும் மீண்டும் என்றுமே அவர்களிடம் கூற மாட்டார்கள். ஏனெனில் எங்கிருந்தோ வந்து தாக்கும் ரஷ்யத் துப்பாக்கித் தோட்டாக் களும், ரஷ்ய வெடிகுண்டுகளின் சிதறல்களும்தான், வெண் ணெயை வெட்டிக் கொண்டு இறங்கும் கத்தியைப் போல், உண்மையில் அத்தனை எளிதாக அவர்களது உடல்களின் வழியே புகுந்து சென்றன.

* * *

இன்று காலையில் நமது தாக்குதலின்போது பெர்க்மான் கைதியாகப் பிடிக்கப்பட்டார். நமது போர் வீரர்கள் அவரை நமது நிலவறைக்குள் கொண்டு வருவதற்கு முன்னால், அவரது கண்களைத் துணியால் கட்டிமறைத்துக் கூட்டி வந்தனர்.

''நீங்கள் என்னைச் சுட்டுக் கொல்லப் போகிறீர்களா?'' என்று பெர்க்மான் நடுங்கும் குரலில் கேட்டார்.

போர் வீரர்களுக்கு ஜெர்மன் மொழி தெரியாததால் அவர்கள் பதிலளிக்கவில்லை.

பெர்க்மான் பயத்தால் நடுங்கிக் கொண்டே நிலவறைக்குள் பிரவேசித்தார். அவரது கண்கட்டை அகற்றிய பின், தமக்கு முன்னால் ஒரு மேஜையைச் சுற்றிலும் பலர் அமைதியாக உட் கார்ந்திருப்பதைக் கண்டதும், அவர் ஆழமான நிம்மதியுணர் வோடு, மூக்கை உறிஞ்சும் சத்தம் எழும்ப, நீண்ட பெருமூச்சு விட்டார்; இதனைக் கண்டதும் எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது.

''அவர்கள் என்னைச் சுடப் போகிறார்கள் என்றுதான் நான் நினைத்தேன்'' என்று அவர் தம்மையுமறியாமல் எழுந்த பெரு மூச்சுக்கு விளக்கம் கூறும் விதத்தில், முணுமுணுத்தார்; மறுகணம் அவர் அட்டென்ஷனில் நின்றார்.

ஓர் ஆசனத்தில் அமருமாறு அவரிடம் கூறப்பட்டது; அவர் தமது கைகளை முழங்கால்களின் மீது வைத்தவாறே ஒரு நாற் காலிக்குள் பொத்தென்று அமர்ந்தார்.

தமது பயத்திலிருந்து அவரால் இன்னும் மீள முடியவில்லை. அவரது சன்னம் சுருங்கி நெளிந்தது; கைகள் முழங்கால்களின் மீது நடுங்கிக் கொண்டிருந்தன. அவர் தமது பலத்தையெல்லாம் சேகரித்து, தமது தளர்ச்சியை வெற்றி கொள்ளவும், தாம் எவ்வாறு நடுங்குகிறோம் என்பதை நாங்கள் கண்டு கொள்ளாத வாறு மறைக்கவும் முயன்றார்; ஆயினும் இதில் அவர் வெற்றி பெறவில்லை. அவருக்கு வழங்கப்பட்ட சிகரெட்டை அவர் ஆசை யோடு புகைத்த பின்னர்தான், அவர் தமது நிதானத்தைத் திரும்பப் பெற்றார்.

அவர் சுருட்டைத் தலைமுடியையும் ஒன்றுக்கொன்று மிகவும் இடைவெளிவிட்டு விலகியிருந்த அசட்டுத்தனமான நீலநிறக் கண்களையும் கொண்டவராக இருந்தார். சந்தேகத்துக்கிட மில்லாத ஆரிய இனத்தைச் சேர்ந்த அவர் பசியால் மிகவும் வாடியிருந்தார்; யுத்தமோ மேலும் மிக மோசமாக அவர் வாடிக் களைத்துப் போகவே வழி செய்திருந்தது, அவர்களது அன்றாட ரேஷன் மூன்று சிகரெட்டுகளும், ஒரு சிறு ரொட்டியும், மெஸ் டின்னில் பாதியளவுக்குச் சூடான சூப்பும்தான். மேலும் பதுங்கு குழிகளில் சூடான உணவைக் கொண்டு கொடுப்பதும்எப்போதும் சாத்தியமாக இல்லை. எனவே ஜெர்மானியர்கள் பட்டினி கிடக்கத்தான் நேர்ந்தது.

சோவியத் ரஷ்யாவோடு நடத்திய போரின் விளைவுபற்றி அவர் என்ன நினைத்தார். அது ஒரு உதவாக்கரை முயற்சி என்றே அவர் கருதினார். ரஷ்யாவைத் தாக்குவதில் ஃபூரெர் ஒரு தவறிழைத்து விட்டார். ஜெர்மனியால் விழுங்க முடியாத அளவுக்கு அது மிகவும் பெரிய நாடாக இருந்தது. இங்காவது தாம் தமது மனத்திலுள்ளதைத் தாராளமாகப் பேசுவதற்குத் தமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்றும், தமது கம்பெனியில் தாம் இந்த மாதிரி என்றுமே பேச முடியாதென்றும், ஏனெனில் நாஜிக் கட்சியின் உறுப்பினர்கள் போர்வீரர்களை உளவு பார்த்து வந்தனரென்றும் அவர் கூறினார். சிந்திக்காமல் வாய் தவறிக் கூறும் ஒவ்வொரு சொல்லும் துப்பாக்கியினால் சுடப்பட்டு மாயும் கதியையே ஏற்படுத்தக் கூடும். செய்திருக்க வேண்டியது என்னவென்றால், இங்கிலாந்தைத் தோற்கடித்து அதன் காலனி நாடுகளைக் கைப்பற்றிவிட்டு, அத்துடன் யுத்தத்தை முடித்துக் கொள்வதாகத்தான் இருக்க வேண்டும் என்பதே அவரது சொந்த அபிப்பிராயமாக இருந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட சோவியத் பிரதேசத்தில் அவரது அனுபவங்கள் பின்வருமாறுதான் இருந்தன: அங்கே போதிய உணவு இல்லை. ஜெர்மன் ராணுவத்தின் முன்னேறி வந்த

படைப்பிரிவுகள் நாட்டு மக்கள் வைத்திருந்ததையெல்லாம் தின்று தீர்த்து விட்டன. இப்போது எங்காவது ஒரு கோழி தென்பட்டால் அதுவே பெரிய அதிருஷ்டம்தான். அவர்களது டாங்கி டிவிஷன்களையும், மோட்டார் கார் வசதிகளைக் கொண்ட யூனிட்டுகளையும் பற்றி அவர் கிட்டத்தட்ட வெறுப்போடுதான் பேசினார்: ''அவர்கள் கிராமங்களை வெறுமனே தூர்த்துத் துடைத்தெறிந்து விடுகிறார்கள், பன்றிப் பயல்கள்! அவர்களுக்குப் பின்னால் செல்வது என்பது பாலைவனத்தின் வழியாகச் செல்வது போலத்தான்.''

லான்ஸ் கார்ப்போரல் பெர்க்மானுடன் பேசிக் கொண்டிருப்பது பொறுமையை மிகவும் சோதிப்பதாகத்தான் இருந்தது. அந்தப் புழுக்கம் மிகுந்த நிலவறையில் நிலவிய காற்று, போர்வீரனின் உடையிலிருந்த, வெறி பிடித்ததுபோல் வாய் ஓயாமல் பிதற்றுகிற அசட்டு முட்டாளான அந்தக் கொலை காரனின் நசுநாறித்தனமான பேச்சுக்களால் இன்னும் அதிகமான அளவில் எங்களைப் புழுங்கவைத்து அமுக்குவதாகவே நாங்கள் உணர்ந்தோம். சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்காக வெளியே போக விரும்பினேன்; எனவே உரையாடலைச் சட்டென்று நிறுத்தினேன்.

முடிவில் அவர் தமது ஆசனத்தைவிட்டு எழுந்து நின்றார்; அட்டென்ஷனில் நின்றவாறு, இரண்டு மணி நேரமாகத் தம்மிடம் கேள்விகள் கேட்டபோது, தாம் தமது படைப்பிரிவின் நிலையையும் அதன் பலத்தையும், மற்றும் அதிகாரிகள் இருக்கும் இடத்தையும் ஆயுத தளவாடங்களைக் குவித்து வைத்துள்ள இடத்தையும் பற்றி சோவியத் தளபதியிடம் தாம் உண்மையான தகவல்களையே சொல்லியதாகக் கூறினார். ரஷ்யாவுக்கு எதிரான போருக்குத் தாம் திடமான எதிரி என்பதாலேயே தாம் தமக்குத் தெரிந்ததையெல்லாம் கூறிவிட்டதாகவும், விசாரித்துப் பார்த்தால், தாம் கொடுத்த தகவல்களையெல்லாம் நிச்சயமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்பதாகவும் அவர் கூறினார். எனவே அவர் தாம் ஒரு யுத்தக் கைதியாக இருப்பதைத் தமது மனைவிக்குத் தெரிவிக்க ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்றும், மேலும், தாம் கடைசியாக உணவு உண்டு ஏழு மணி நேரம் ஆகிவிட்டதாகவும், அதனால் முடிந்தால் தமக்கு இன்னொரு முறை உணவளிக்குமாறும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

* * *

இப்போது எங்கள் முன்னால் வழவழப்பான தலைமுடியும், முகத்தின்மீது நீல நிறப் பருக்களும், திருட்டுத்தனமாகப் பாய்ந்தோடும் கண்களும் கொண்ட ஒரு இருபது வயது இளைஞன் இருந்தான். அவன் ஜெர்மன் தேசிய—சோஷலிசக்

கட்சியின் உறுப்பினனுவான். அவன் பிரான்சிலும், யூகோஸ்லாவியாவிலும், கிரீஸிலும் போர் புரிந்திருந்தான். கையால் எறியும் வெடிகுண்டுகள் பலவற்றை மொத்தமாக வீசி, ஒரு சோவியத் போர்வீரர் அன்று அவனது டாங்கியைத் தகர்த்தெறிந்து விட்டார். அவன் டாங்கியிலிருந்து வெளியே குதித்து இறங்கித் திருப்பிச் சுட்டான். நான்கு சோவியத் தோட்டாக்கள் அவனைத் தாக்கி விட்டன; என்றாலும் காயங்கள் படுமோசமாக இல்லை. இடையிடையே அவன் வலியினால் துடித்தான்; எனினும், மொத்தத்தில் அவன் துணிவுமிக்கவன் போல் வெளிக்குக் காட்டிக் கொண்டு அகந்தையோடு நடந்து கொண்டான். அவன் எங்கள் கேள்விகளுக்குக் கண்களை நிமிர்த்திப் பார்க்காமலே பதிலளித்தான். சில கேள்விகளுக்குப் பதிலளிக்க அவன் அடியோடு மறுத்துவிட்டான்; எனினும் பின்னர் அவன் ஜெர்மன் தேசத்தின் மேலாண்மையைப் பற்றியும், பிரெஞ்சு, பிரிட்டிஷ், மற்றும் ஸ்லாவ் இனத்தவரின் கீழான தன்மையைப் பற்றியும் நன்கு மனப்பாடம் செய்திருந்த வாக்கியங்களை மிகவும் உற்சாகத்தோடு வாய்விட்டுக் கூறினான். இல்லை. எங்கள் முன் பேசிக் கொண்டிருந்தது ஒரு மனிதப் பிறவி அல்ல; நாற்ற மெடுக்கும் மசாலாவைத் தன்னுட் பொதிந்த வேகாத பலகாரம் தான் அவன். அவனுடைய சொந்தக் கருத்து என்று சொல்லிக் கொள்ள ஒரு கருத்து கிடையாது; ஆன்மிக நலன்கள் எதையும் பற்றிய அக்கறையும் அவனுக்குக் கிஞ்சித்தும் கிடையாது. புஷ்கினைப் பற்றியும், ஷேக்ஸ்பியரைப் பற்றியும் அவனுக்குத் தெரியுமா என்று நாங்கள் அவனிடம் கேட்டோம். அவன் ஏதோ சிந்தித்தவனைத் தனது நெற்றியைச் சுருக்கினான்.

''யார் அவர்கள்?'' என்று கேட்டான் அவன். அவர்கள் யார் என்று நாங்கள் அவனிடம் சொல்லியதும், அவன் ஏளனத்தோடு உதட்டைப் பிதுக்கி இளித்தவாறு இவ்வாறு பதிலளித்தான்: ''அவர்களை எனக்குத் தெரியாது; அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் நான் விரும்பவில்லை. அவர்கள் எனக்குத் தேவையும் இல்லை.''

போரில் ஜெர்மனிதான் ஜெயிக்கும் என்றும் அவன் நிச்சயமாகக் கருதினான். அசட்டுத்தனமான, முட்டாள்தனமான பிடிவாதத்தோடு அவன் திரும்பவும் இவ்வாறு கூறினான்:

''மாரிப் பருவத்துக்கு முன்னால் எங்கள் ராணுவம் உங்கள் கதையை முடித்துவிடும். பின்னர் அது தனது வலிமை முழுவதோடும் இங்கிலாந்தின்மீது பாயும். இங்கிலாந்து அழியத் தான் வேண்டும்.''

''ஆனால், ரஷ்யாவும், இங்கிலாந்தும் ஜெர்மனியைத் தோற்கடித்தால்?''

''அது சாத்தியமே அல்ல. நாங்கள்தான் வெற்றி பெறுவோம் என்று ஃபூரர் எங்களுக்குக் கூறியுள்ளார்'' என்று அவன் தனது கால் விரல்களை உணர்ச்சியற்று வெறித்துப் பார்த்தவாறே பதிலளித்தான். வார்த்தைகளை மனப்பாடமாக உருப்போட்டுள்ள; எனினும் அநாவசியமான சிந்தனைகளால் தன்னை அலட்டிக் கொள்ள முனையாத ஒரு மந்தமான மாணவனின் பதில்களைப் போலவே அவனது பதில்கள் இருந்தன. அந்த இளைஞனிடம் ஏதோ பொய்யான, நம்புதற்கேயரிய விதத்தில் ஒரு குரூரமான தன்மை குடிகொண்டிருந்தது. உண்மையிலேயே நேர்மையோடு அவன் கூறிய ஒரே விஷயம் இதுதான்: ''எனது ராணுவ வாழ்க்கை இடையில் தடைப்பட்டுப்போனது குறித்து நான் வருந்துகிறேன்.''

ஹிட்லரின் பிரசாரத்தினால் படுமோசமான அளவுக்குச் சீர் கெட்டுப் போயிருந்த இந்தக் கடைகெட்ட இளைஞன் மக்களைக் கொன்று தள்ளுவதில் சலிப்படையவே இல்லை. அவன் கொலை செய்வதிலேயே ஒரு ருசியை வளர்த்துக் கொண்டிருந்தான்; தனக்குப் பலியானவர்களின் ரத்தத்தை அவன் இன்னும் போதுமான அளவுக்கு ருசி பார்க்கவில்லை. இப்போதோ அவன் இங்கு ஒரு கைதியாக நின்றான். கூண்டுக்குள் சிக்கிவிட்ட ரத்த வெறி பிடித்த வெருகுப் பூனையின் வேட்டையாடப்பட்டுவிட்ட பார்வையோடு எங்களைப் பார்த்தவாறே அவன் எங்கள் முன் நின்றான்; நிரந்தரமாகத் தீங்கற்றவனாகச் செய்யப்பட்டுவிட்ட ஒரு கொலைகாரனாக நின்றான்; அவனது நாசித்துவாரங்கள், எங்கள்மீது அவன் கொண்டிருந்த குருட்டுப் பகைமை வெறியினால் விரிந்து கொடுத்தன.

ஒரு சோவியத் போர்வீரரின் காவலின்கீழ் ஆறு சாதாரண ஜெர்மன் போர் வீரர்கள் கூடாரத்தை விட்டு வெளிவந்தனர்; அவர்கள் பைன்மர ஊசியிலைகள் விரிப்பாகப் பரந்து கிடந்த தரைமீது குந்தியமர்ந்தனர். அந்தக் கைதிகள் அப்போதுதான் பிடிபட்டிருந்தார்கள். அவர்களது யூனிபாரம் கோட்டுகள் அழுக்கடைந்திருந்தன; அவற்றில் தாறுமாறாக ஒட்டுத் தையல்கள் போடப்பட்டிருந்தன. அவர்களில் ஒருவன் தனது பூட்சின் பிதிர்ந்து தொங்கும் தோல் விழுந்து விடாது இருப்பதற்காக, தனது உள்ளங்காலைச் சுற்றி ஒரு கம்பியைக் கட்டியிருந்தான். அவர்கள் ஆறு நாட்களாகக் குளிக்கவில்லை. அவர்களது பீரங்கிப்படை அதற்கான வாய்ப்பையே அவர்களுக்கு அளிக்க வில்லை. அவர்களது சோர்ந்த முகங்களில் காய்ந்துபோன தூசிப்

படலம் படர்ந்திருந்தது. பதுங்கு குழிகளில் இருந்தபோது அவர்களது தலைகளில் பேன்கள் பற்றிக்கொண்டு விட்டன; எனவே அவர்கள் கூச்சமே இல்லாமல் தமது அழுக்கடைந்த விரல்களால் தலையைச் சொறிந்து கொண்டார்கள்.

அந்த ஆறு பேரில், அழகிய கருநிற வாலிபனுகவிருந்த ஒருவன் மட்டுமே மகிழ்ச்சியோடு புன்னகை புரிந்தான்; அவன் என் பக்கம் திரும்பி இவ்வாறு கூறினுன்:

''என்னைப் பொறுத்தவரையில் யுத்தம் நல்லபடியாக முடிந்து விட்டது. என்னைக் கைதியாகப் பிடித்ததும் என் அதிருஷ்டம்தான் என்று எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன்.''

ஆவி பறக்கும் முட்டைக்கோஸ் சூப் நிரம்பிய மெஸ்-டின்கள் கொண்டு வரப்பட்டன. அந்தக் கைதிகள் பசியெடுத்த மிருகங்களைப்போல் உணவின்மீது பாய்ந்தார்கள்; இறைச்சியைக் கூடக் கடித்துச் சுவைத்துத் தின்னுமல், தமது வாயெல்லாம் வெந்துபோகும் வண்ணம் அந்த சூப்பை ஆசையோடு ஓசை யெழும்பச் சப்பிக் குடித்து அதனை உள்ளே விழுங்கினுர்கள். இரண்டு கரண்டிகள் குறைவாக இருந்தன. ஆனுல் கரண்டிகள் வரும் வரை காத்துக் கொண்டிராமல், இரண்டு ஜெர்மானியர்கள் தமது அழுக்கடைந்த கைகளினுலேயே அந்த மெஸ்-டின் களுக்குள் துழாவி, அதிலிருந்த முட்டைக் கோஸையும் உருளைக் கிழங்குகளையும் வெளியே எடுத்தார்கள்; அந்த உணவைத் தமது வாய்களுக்குள் திணித்தார்கள்; பிறகு தமது தலைகளைப் பின்னேக்கிச் சாய்த்தவாறு, ஆனந்த பரவசத்தால் கண்களை ஏறச் சொருகினுர்கள்.

தமது பசி ஆறிய பின்னர், அவர்கள் தூக்கத்தையும் பாரத்தையும் உணர்ந்தவர்களாய் தமது இடத்தைவிட்டு எழுந்தார்கள்.

''நன்றி'' என்று ஒரு கட்டுமஸ்தான லான்ஸ் கார்ப்போரல் பொங்கிவந்த ஏப்பத்தை உள்ளடக்கியவாறே கூறினுன்: ''மிகவும் நன்றி. இத்தகைய நிறைவான உணவை நாங்கள் கடைசியாக எப்போது உண்டோம் என்பதுகூட எனக்கு நினைவில்லை.''

ஏழாவது கைதி உண்பதற்கே மறுத்தவாறு கூடாரத்தி லேயே இருந்து வருவதாக மொழிபெயர்ப்பாளர் எங்களிடம் கூறினுர். நாங்கள் கூடாரத்துக்குள் சென்றோம். நாங்கள் உள்ளே புகுந்ததும் நெடுநாளாகச் சவரம் செய்யாத முகமும், மிகவும் எலும்பும், தோலுமான உடம்பும் கொண்ட ஒரு மத்திம வயதான ஜெர்மன் போர்வீரன் எழுந்து நின்றுன்; தனது மரத்துப் போயிருந்த பெரிய கரங்களைத் தனது உடம்பின் பக்க

வாட்டில் தொங்கவிட்டான். அவன் ஏன் சாப்பிட மறுக்கிறான் என்று அவனிடம் நாங்கள் கேட்டோம்.

பதைபதைப்போடு நடுங்கும் குரலில் அவன் இவ்வாறு பதிலளித்தான்: "நான் ஒரு விவசாயி, ஜூலை மாதத்தில் என்னை ராணுவத்தில் சேர்த்துவிட்டார்கள். இந்த இரண்டு மாத காலப் போரின்போது, எங்களது ராணுவம் இழைத்த படுநாசத்தில் நான் பார்க்கவேண்டியதையெல்லாம் பார்த்து விட்டேன்; கைவிடப்பட்ட வயல்களையும் நான் கண்டுள்ளேன்; இவை யாவற்றையும் நாங்கள் கிழக்கு நோக்கி முன்னேறிய போதுதான் புரிந்தோம்... எனக்குத் தூக்கமே போய்விட்டது; என்னால் உண்ணவே முடியவில்லை. அநேகமாக ஐரோப்பா முழுவதுமே இவ்வாறுதான் நாசமாக்கப்பட்டுள்ளது என்பதை நான் அறிவேன்; எல்லாவற்றுக்கும் ஹிட்லர் பயங்கரமான விதத்தில் பிரதிபலனை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதை யும் நான் அறிவேன். அந்த நாசமாய்ப்போன கீழ்மகனை ஹிட்லர் மட்டுமல்லாமல், ஜெர்மன் தேசம் முழுவதுமே இதற் கான பிரதிபலனை அனுபவிக்கத்தான் வேண்டியிருக்கும். நான் கூறுவதன் அர்த்தம் உங்களுக்குப் புரிகிறதா?"

அவன் முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டு, நெடுநேரம் மௌனமாக இருந்தான். நல்லது, இது ஒரு வரவேற்கத் தக்க சிந்தனையோட்டம்தான். ஜெர்மன் போர் வீரர்கள் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாகத் தமது பொறுப்பின், தவிர்க்கொணாத விதத்தில் தாம் அனுபவிக்கவேண்டிய பிரதி பலனின் முழுப்பாரத்தையும் உணர்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரமாக வெறிபிடித்துப் போய்விட்ட நாஜிசத்தின் மீது ஜனநாயகமும் வெற்றி பெறும்.

1941

லெனின்கிராடு வாசிகளுக்கு ஒரு கடிதம்

எனது லெனின்கிராடுத் தோழர்களே!

எதிரி சுற்றி வளைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில், வாழ்வதும், உழைப்பதும், போராடுவதும் உங்களுக்கு எத்தனை சிரமமயமானதாக இருக்கும் என்பதை நான் அறிவேன். மக்கள் எங்களும்—ஒவ்வொரு போர் முனையிலும், பின்னணி யிலும்—உங்களை நினைவில் வைத்துள்ளனர். தூரதொலைவி லுள்ள பூரல்ஸில் உருகி வழிந்தோடும் உலோகப் பிரவாகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் உருக்குத் தொழி லாளி உங்களைப்பற்றி நினைத்துப் பார்க்கிறார்; உங்களது விடுதலை

கிட்டும் நேரத்தைத் துரிதப்படுத்துவதற்காக, அவர் அயர்வு சோர்வின்றி உழைக்கிறார்; டான்பாஸில் ஜெர்மன் படையெடுப் பாளர்களோடு போரிட்டுக் கொண்டிருக்கும் போர்முனையிலுள்ள போர்வீரர், படுநாசமாக்கப்பட்ட தமது சொந்த உக்ரேனுக் காக மட்டுமல்லாமல், லெனின்கிராடு வாசிகளான உங்கள் மீது எதிரி சுமத்திவிட்ட மாபெரும் துயரங்களுக்காகவும், அவர்களை அடித்து வீழ்த்தி வருகிறார்...முற்றுகை வளையம் உடைபடும் அந்த நேரத்தை, மாபெரும் சோவியத்நாடு லெனின்கிராடு நகரின்—நிரந்தரக் கீர்த்தியில் நீராடிய நகரின்—வீரம் செறிந்த புத்திர புத்திரிகளைத் தனது மார்போடு சேர்த்தணைக்கும் அந்த நேரத்தை, நாங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறோம்.

1942

பகைமையின் விஞ்ஞானம்

போரில், மரங்களும்—மக்களைப் போலவே—தமது சொந்தத் துர்ப்பாக்கியத்துக்கு உள்ளாகின்றன. நமது பீரங்கிப் படையின் குண்டுப் பிரயோகத்தால் வீழ்த்தப்பட்டுவிட்ட ஒரு பெரிய காட்டுப் பகுதியை நான் கண்டேன். எஸ். கிராமத்திலிருந்து வாபஸாகும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளான ஜெர்மானியர்கள் இந்தக் காட்டில் நிலைத்து நிற்க விரும்பினர். ஆனால் மரங்களோடு சேர்த்து அவர்களும் தரையோடுதரையாக வெட்டி வீழ்த்தப்பட்டனர். முறிந்து முடமாகிப்போன பைன் மரங் களுக்கடியில் பத்து ஜெர்மன் போர் வீரர்கள் செத்துக் கிடந்தார்கள்; சிதறுண்டு போன அவர்களது உடலங்கள் பச்சை நிறக் காட்டுச் செடிகளுக்கு மத்தியில் அழுகிக் கொண்டிருந்தன; குண்டுகளால் பிளவுண்ட அடிமரங்களின் பிசின் மணம், அழுகிச் சிதைந்து கொண்டிருக்கும் சதையின் குடலைக் குமட்டும் முடை நாற்றத்தில் அமிழ்ந்து போய்விட்டது. குண்டு வீச்சினால் குழி பறிக்கப்பட்டு, கரிந்து பொடிந்து சாம்பல் நிறமாகக் காட்சி யளித்த விளிம்புகளோடு கூடிய குழிகளைக் கொண்ட தரையே, மரணத்தின் விஷக்காற்றை வெளியிடுவது போல் எண்ணத் தோன்றியது.

நமது குண்டுகளால் குழிபறிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்த வெட்டவெளியின்மீது, மரணம் மௌனமான ஆணவத் தோடு ஆட்சி செலுத்தியது. அதன் மத்தியில் ஒரு பெர்ச் மரம் அதிசயமாக உயிர் பிழைத்து நின்றது. காற்று அதன் காயம் பட்ட கிளைகளை அசைத்தது; அதன் புதிய, பளபளப்பான, பசை போன்ற இலைகளைச் சலசலக்கச் செய்தது.

நாங்கள் இந்த வெட்ட வெளியின் வழியாகச் சென்றோம். எனக்கு முன்னால் நடந்து சென்று கொண்டிருந்த போர் வீரர் அந்த பெர்ச் மரத்தைத் தொட்டார்; பின்னர் உளமார்ந்த, அன்பு கனிந்த அக்கறையோடு இவ்வாறு கூறினார்: ''அன்புக்குரிய அப்பாவி மரமே, நீ மட்டும் எப்படி தப்பிப் பிழைக்க முடிந்தது?''

பைன் மரங்கள் கொலையுறுகின்றன; ஒரு குண்டு அவற்றைத் தாக்கும்போது, அவை அப்படியே செத்து விழுகின்றன; அவற்றின் வெட்டுண்ட தலைப்பகுதிகள், ஊசியிலைகள் போர்த்தி மூடியுள்ள தரைமீது, பிசினை ரத்தம்போல் ஒழுக விட்டவாறே விழுந்து கிடக்கின்றன. ஆனால் ஓக் மரங்களோ அவ்வளவு எளிதில் மரணத்துக்கு இரையாவதில்லை.

பெயரில்லாத சிற்றூறு ஒன்றின் கரைமீது வளர்ந்திருந்த ஒரு பழைய ஓக் மரத்தின் அடி மரத்தை ஒரு ஜெர்மன் குண்டு தாக்கிவிட்டது. அந்த மரத்தில் பாதி கிழிந்து, வாய்பிளந்த காயத்தினால் வாடிச் சுருங்கி இறந்து விட்டது. என்றாலும், அதன் மறுபாதி அந்தக் குண்டு வெடிப்பினால் ஆற்றின் பக்கமாகச் சாய்ந்து, வசந்த பருவத்தில் அதிசயிக்கத்தக்க விதத்தில் புத்துயிர்பெற்று, புதிய இலைகளைத் தோற்றுவித்துவிட்டது. முடமாக்கப்பட்ட அந்த மரத்தின் கீழ்க்கிளைகள் நீரில் குளித்துக் கொண்டிருக்க, அதன் மேற்கிளைகள் சூரியனின் இதமான கதகதப்பை நாடித் தமது விறைப்பான, வடிவார்ந்த இலைகளைத் திருப்பி, சூரியனை நோக்கி இன்றும்கூட மேலே உயர்ந்து கொண்டிருக்கும் என்றே நான் எதிர்பார்க்கிறேன் . . . .

* * *

ஒரு கறுப்பு நிற ராஜாளிப் பறவையின் தோள்களைப்போல் சற்றே கூனிய பரந்த தோள்களைக் கொண்ட உயரமான மனிதரான லெப்டினென்ட் கொராசிமோவ் நிலவறைக்குள் செல்லும் வாசலில் அமர்ந்திருந்தார்; அவர் அன்றைய போரைப் பற்றியும், படைப்பிரிவினால் வெற்றிகரமாக எதிர்த்தடிக்கப்பட்ட ஜெர்மன் டாங்கித் தாக்குதலைப்பற்றியும் விவரமாகக் கூறினார்.

அந்த லெப்டினென்டின் மெலிந்த முகம் அமைதியாகவும், ஏறத்தாழ உணர்ச்சிவசப் படாததாகவுமே இருந்தது; ரத்தம் பாய்ந்த அவரது கண்கள் களைப்பினால் சுருங்கிப் போயிருந்தன. அவர் பெரிய கணுக்களைக் கொண்ட தமது பெரிய கைவிரல்களைப் பிணைத்துத் தமது கரங்களை அடிக்கொரு தரம் பற்றிப் பிடித்த வராய், ஓர் ஆழ்ந்த, உடைபட்ட குரலில் பேசினார். மௌனமான வருத்தத்தை அல்லது ஆழமான, வேதனைமிக்க சிந்தனையை மிக நன்முகப் புலப்படுத்திய இந்த அபிநயம், அவரது வலிமைமிக்க

தோற்றத்துக்கும், அவரது சுறுசுறுப்பும் ஆண்மையும் மிக்க முகத்துக்கும் அன்னியமாகத் தோற்றியது.

திடீரென்று அவர் மௌனமானார்; அவரது முகம் உடனே மாறியது: அவரது கரிய, வெயிலால் காய்ந்து வாடிய கன்னங்கள் வெளிறின; அவரது விறைப்பான தோலின் கீழ் தாடைத் தசைகள் மேலும் கீழும் அசையும் விதத்தில் அவர் பற்களை அத்தனை பலமாக இறுகக் கடித்தார்; அவரது கண்கள் அத்தனை தணிக்க முடியாத, மூர்க்கமான பகைமையுணர்ச்சியோடும் முன்னேக்கி நிலைகுத்தி வெறித்து நோக்கின. என்னையும் அறியாமல் அவரது பார்வை சென்ற திக்கை நானும் பார்த்தேன். அங்கு மங்கிய, அநேகமாக நிறத்தையே இழந்து விட்ட சட்டையையும், தமது தலைக்குப் பின்னால் தள்ளி வைக்கப்பட்ட பக்கவாட்டுத் தொப்பியையும் தரித்த ஒரு போர்வீரரின் காவலின்கீழ், எங்களது தற்காப்பு முன்னணி நிலையின் திசையிலிருந்து மூன்று ஜெர்மன் கைதிகள் வருவதைக் கண்டேன்.

நமது போர்வீரர் மெதுவாக நடந்து வந்தார். அவர் தமது கையிலிருந்த துப்பாக்கியைத் தமது அளந்து நடக்கும் நடைக்கேற்பத் தாளம் தவறுமல் வீசியசைத்து வந்தார்; அந்தத் துப்பாக்கிச் சனியன் சூரிய ஒளியில் பளபளத்தது. மஞ்சள்நிறச் சேற்றுக்கறை படிந்த குட்டைப் பூட்சுகளைத் தரித்த தமது பின்னும் பாதங்களை வேண்டா வெறுப்பாக நகர்த்தி, அந்தக் கைதிகள் மிகவும் மெதுவாக நடந்து வந்தனர்.

நிலவறையின் மட்டத்துக்கு நேராக வந்ததும், அந்த வரிசையின் முன்னால் வந்த கைதி—தடித்த பழுப்புநிறக் குத்து மயிர் மண்டியிருந்த குழிந்த கன்னங்களைக் கொண்ட மத்திம வயதான அந்த ஜெர்மானியன்—எங்கள்மீது ஓநாயின் பார்வையோடு தனது ஓரக்கண்ணைப் பாய்ச்சினான்; பின்னர் தனது பெல்ட் வாருடன் கட்டப்பட்டிருந்த தலைக்கவசத்தைச் சரி செய்வதற்காகத் திரும்பிக் கொண்டான். இதனைக் கண்டதும் லெப்டினென்ட் கெராசிமோவ் துள்ளியெழுந்தார். காவலாக வந்த போர்வீரரை நோக்கி, எரிந்து விழும் கீச்சுக் குரலில் இவ்வாறு கத்தினார்:

''நீ இவர்களோடு சாவகாசமாக உலாவப் போய்க் கொண்டிருக்கிறாயா, என்ன? சீக்கிரம் நட. போ முன்னே. சொன்னது காதில் விழுந்ததா?''

அவர் மேலும் பேச விரும்பினார் என்று தெரிந்தது; என்றாலும் கோபாவேசம் அவரது தொண்டையை அடைத்தது; அவர் தமது குதியங்காலைச் சட்டென்று வீசித் திருப்பி, நிலவறையின் படிகளின் வழியே இறங்கி ஓடினார். அவர்

இவ்வாறு சுத்தியபோது அங்கிருந்த அரசியல் போதகர், எனது வியப்புற்ற பார்வையைத் தடுத்து நிறுத்தி, தணிந்த குரலில் இவ்வாறு விளக்கமளித்தார்:

''அவரது உணர்ச்சிகள் கொதித்துப் போயுள்ளன. அதனை அவரால் தவிர்க்க முடியாது. அவர் ஜெர்மானியர்களிடம் ஒரு கைதியாக இருந்திருக்கிறார். இந்த விஷயம் உங்களுக்குத் தெரியாதா? பின்னொரு சமயம் அவரிடமே இதுபற்றிக் கேளுங்கள். அங்கு அவர் அனுபவித்த துன்பங்களுக்குப் பிறகு, உயிருள்ள ஜெர்மானியன் ஒருவனைப் பார்ப்பதையே அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. உயிருள்ளவர்களை மட்டும்தான் நான் குறிப்பிடுகிறேன். இறந்து போனவர்களைப் பார்ப்பதை அவர் பொருட்படுத்துவதில்லை. ஆனால் அவர் ஜெர்மன் கைதிகளைப் பார்க்கும்போது, ஒன்று அவர் தமது கண்களை மூடிக் கொள்வார்; அல்லது தமது சாம்பல் நிற முகத்தில் வியர்வை வழிந்தோட அப்படியே உட்கார்ந்திருப்பார்; அல்லது வெறுமனே எழுந்து போய் விடுவார்.'' அவர் தமது குரலை ரகசியம் பேசுவதுபோல் தாழ்த்திக் கொண்டு, என்னருகே நெருங்கி வந்து இவ்வாறு கூறினார்: ''நான் இருமுறை அவரோடு சேர்ந்து தாக்குதலில் இறங்கியிருக்கிறேன். அவர் குதிரையைப்போல் பலம் மிக்கவர்; அவரால் என்ன செய்ய முடியும் என்பதை நீங்கள் நேரில் பார்க்க வேண்டும்... நானும் எவ்வளவோ விஷயங்களைப் பார்த்திருக்கிறேன். ஆயினும் அவர் தமது துப்பாக்கிச் சனியனையோ, துப்பாக்கி மட்டையையோ வீசிச் சுழற்றித் தாக்குவதைப் பார்க்கும்போது, நமது உடம்பே புல்லரிக்கும்.''

* * * *

அன்றிரவு ஜெர்மன் கனரக பீரங்கிகள் தொல்லை கொடுக்கும் பீரங்கிப் பிரயோகத்தைத் தொடங்கின. அவை முறையாக, குறிப்பிட்ட இடைவேளைகளுக்குப் பிறகு, குண்டுகளைச் சுட்டுத் தள்ளின: முதலில் நாங்கள் தூரத்தில் குண்டு வெடிக்கும் ஓசையைக் கேட்டோம். சில வினாடிகளில் நட்சத்திரங்கள் சுடர் விடும் வான்வழியாக, தலைக்குமேல் பறந்து செல்லும் குண்டின் கணகணக்கும் கீச்சொலி வந்தது; இந்தப் புலம்பலொலி அளவில் பெரிதாகிப் பின்னர் மங்கி மறைந்தது; இதன் பின்னர் எங்களுக்குப் பின்னால் எங்கோ ஓரிடத்தில், போர்முனைக்கு ஆயுதத் தளவாடங்களைக் கொண்டு வரும் லாரிகள் நாள் முழுவதும் நெருக்கமாக அணி வகுத்துச் சென்ற ரோட்டுப்பாதை இருந்த திசையில், மஞ்சள் நிறமான தீப்பிழம்புகள் வெடித்துக் கிளம்பின; அத்துடன் குண்டு வெடிப்பின் இடிமுழக்கமும் கேட்டது.

காட்டில் அமைதி நிலவிய இடைவேளைகளின்போது, தமது மெல்லிய ரீங்காரத்தோடு கொசுக்கள் பாடுவதையும், அருகிலிருந்த சிறு குட்டையில் திடுக்கிட்டுப் போன தவளைகள் பயந்து போய் ஒன்றையொன்று அழைக்கும் சத்தத்தையும் நாங்கள் கேட்க முடிந்தது.

நாங்கள் ஒரு காட்டுச் செடிப் புதருக்கடியில் படுத்திருந்தோம். லெப்டினென்ட் கெராசிமோவ் மிகவும் சாவதானமாகவும், தொல்லை கொடுத்து வந்த கொசுக்களை ஒடிந்துபோன ஒரு மரச் சுள்ளியால் விரட்டிக் கொண்டும் தம்மைப் பற்றி என்னிடம் கூறினார். அவர் கூறிய கதையை நான் மனப்பாடமே செய்ய முடிந்து விட்டதால், அவர் கூறியபடி அதனை அப்படியே தருகிறேன்.

''போருக்கு முன்னால் நான் மேற்கு சைபீரியாவில் ஒரு தொழிற்சாலையில் மெக்கானிக்காக வேலை பார்த்து வந்தேன். சென்ற ஆண்டு ஜூலை 9-ஆம் தேதியன்று படையில் சேர்க்கப் பட்டேன். என் குடும்பத்தில் என் மனைவியும், இரண்டு பிள்ளைகளும், உடம்புக்கு முடியாத என் தந்தையும் உள்ளனர். ஆம். அவர்கள் என்னை வழியனுப்பி வைக்கும்போது என் மனைவி அழத்தான் செய்தாள்; 'உங்கள் பலத்தையெல்லாம் கொண்டு நாட்டையும் எங்களையும் பாதுகாத்து நில்லுங்கள். அவசிய மானால் உங்கள் உயிரையும் கொடுங்கள்; ஆனால் வெற்றிமட்டும் நமதாகுமாறு பார்த்துக் கொள்ளுங்கள்' என்று பிரியாவிடை யாக என்னிடம் கூறினாள். எனக்கு நினைவிருக்கிறது. நான் அவளைப் பார்த்துச் சிரித்தேன்; 'உன்னைப்பற்றி நீ என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ என்ன மனைவியா அல்லது குடும்ப அரசியல் போதகரா? எனக்குப் போதுமான வயதாகி விட்டது. வெற்றியைப் பொறுத்தவரையில், அதைப்பற்றி நீ என்றுமே கவலைப்பட வேண்டாம், ஜெர்மானியர்களின் தொண்டைக் குழி, உணவுக்குழாய் எல்லாவற்றையும் நாங்கள் கிழித்தெறிய வேண்டியிருந்தாலும், வெற்றியை நாங்கள் பெற்றே தீருவோம்' என்று நான் கூறினேன்.

என் தந்தை திடசித்தம் படைத்தவர்தான்; அவர் அழவில்லை; ஆயினும் அவர் எனக்கு அறிவுரை கூறவேண்டுமெனக் கருதினார். 'ஞாபகம் வைத்துக் கொள், விக்தர். கெராசிமோவ் என்ற பெயர் வெறும் பெயர் மட்டும் அல்ல. நீ பரம்பரை பரம்பரையாக வந்த ஆலைத் தொழிலாளியாவாய். உன் முப்பாட்டனார் ஸ்த்ரோகனேவ்* குடும்பத் தொழிலாளர்களில்

* ஸ்த்ரோகனேவ் குடும்பத்தினர் 17ஆம் நூற்றாண்டு முதல் வாழ்ந்து வந்த, யூரல்ஸைச் சேர்ந்த வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆவர்.

ஒருவராவார். நமது குடும்ப வரலாறு அத்தனை பழமையானது. நமது குடும்பம் பல நூற்றாண்டுகளாக ரஷ்யாவுக்கு இரும்பை உற்பத்தி செய்து வந்துள்ளது. இந்தப் போரில் நீயும் இரும்பைப் போல் பலம் வாய்ந்தவனாக இருக்க வேண்டும். அரசு—நினைவில் வைத்துக் கொள், உனது அரசு, — உன்னைப் போர் வரும் வரையிலும் ஒரு ரிசர்வ் அதிகாரியாகத்தான் வைத்திருந்தது; இப்போது நீ எதிரிக்குச் சரியான அடி கொடுக்க வேண்டும் தெரிகிறதா? என்று அவர் என்னிடம் கூறினார். 'அவ்வாறே செய்கிறேன்' என்று நானும் கூறினேன்.

''ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் வழியில், நான் வட்டாரக் கட்சிக் கமிட்டி அலுவலகத்துக்குச் சென்றேன். எங்கள் செயலாளர் பேச ஆரம்பித்தால் லேசில் விடமாட்டார். என் மனைவியும், தந்தையும் எனக்கு விடைதரும்போது அவரவர் உபதேசத்தைக் கூறினார்கள் என்றால், இவரும் நிச்சயம் ஒரு நீண்ட பிரசங்கத்தையே செய்ய விரும்புவார் என்று நான் நினைத்தேன். ஆனால் என் கணிப்டெல்லாம் தவறாகி விட்டது! 'உட்காருங்கள், கெராசிமோவ்' என்று என்னைப் பார்த்துக் கூறினார் அவர்: 'நமது பழைய நல்ல வழக்கப்படி, நீங்கள் புறப்படுவதற்குமுன் ஒரு நிமிடம் உட்காருங்கள்' என்றார். நாங்கள் எதுவும் பேசாமல் ஓரிரு நிமிடங்கள் உட்கார்ந்திருந்தோம். பிறகு அவர் எழுந்தார்; நான் அவரது மூக்குக் கண்ணாடியில் ஏதோ பனிமூட்டம் படிந்திருப்பதைக் கவனித்தேன். நல்லது, நல்லது, நமது மக்களுக்கு என்னதான் நேர்ந்து விட்டது என்று என்னுள் கூறிக் கொண்டேன். இதன்பின் செயலாளர் இவ்வாறு கூறினார்: 'எல்லாமே தெளிவான விஷயம். அதிகமாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. தோழர் கெராசிமோவ், நீங்கள் ஒரு சிவப்பு இளம் பயோனீர் டையைக் கழுத்தில் கட்டிய, தொங்கும் காதுபடைத்த சிறுவனாக இருந்தது எனக்கு நினைவிருக்கிறது; நீங்கள் காம்சொமாலின் உறுப்பினராக இருந்ததும் எனக்கு நினைவிருக்கிறது; உங்களைப் பத்தாண்டுக் காலமாகக் கம்யூனிஸ்டாகவும் அறிந்திருக்கிறேன். நீங்கள் போய் அந்த வேசி மக்களை ஈவிரக்கமற்றுக் கொல்லுங்கள். கட்சி ஸ்தாபனம் உங்கள்மேல் தனது நம்பிக்கையை வைத்திருக்கிறது.' செயலாளர் என்னைக் கட்டியணைத்தார். மரபுக்கேற்ப நாங்கள் முத்தமிட்டுக் கொண்டோம். அவர் ஓர் உணர்ச்சியற்ற மரக்கட்டையாக எனக்கு இனியும் தோன்றவில்லை. அலுவலகத்தைவிட்டு வெளியே வந்தபோது நான் உண்மையிலேயே பெருமித உணர்வை உணரும் அளவுக்கு அவரது உளமார்ந்த அன்பு இதயத்துக்கு அத்தனை இதமாக இருந்தது.

"பிறகு என் மனைவி என்னைச் சிரிக்கவைத்தாள். போருக்குச் செல்லும் கணவனை வழியனுப்புவது ஒன்றும் அத்தனை வேடிக்கையான விஷயமல்ல என்பது உங்களுக்கும் தெரிந்தது தானே. இயல்பாகவே என் மனைவியால் அவளது சிந்தனைகளை ஒருமுகப்படுத்த முடியவில்லை. அவள் என்னிடம் ஏதோ முக்கிய மான விஷயத்தைக் கூறத் தொடர்ந்து முயன்று வந்தாள்; எனினும் அவளது சிந்தனைகள் குழம்பிப் போயிருந்தன; அவை என்னவென்பதே அவளுக்கு நினைவுக்கு வரவில்லை. அதற்குள் ரயில் புறப்பட்டுவிட்டது; அவள் எனது ஜன்னலுக்கு அருகில், மிக நெருக்கமாகப் பிளாட்பாரத்தில் நடந்து வந்தாள்; என் கையைப் பாசத்தோடு பற்றிப் பிடித்துக்கொண்டு, 'விக்தர், உங்களுக்கு அங்கு சளி பிடித்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள், உங்கள் உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!' என்று விரைவாகத் திரும்பத் திரும்பக் கூறினாள். 'நாத்யா, நிச்சயமாகப் பார்த்துக் கொள்கிறேன். எக்காரணத்தாலும் எனக்குச் சளி பிடிக்காது. போர்முனையில் பருவநிலை அற்புதமாக உள்ளது; உண்மையிலேயே முற்றிலும் மிதமாகவே உள்ளது' என்று நானும் கூறினேன். என் மனைவியின் இனிமையான, அர்த்தமற்ற வார்த்தைகள் பிரிவின் கடுமையான வேதனையை எனக்குக் குறைத்தது. கடவுளே! நான் அந்த ஜெர்மானியர்களை எத்தனை வெறிவேகத்தோடு வெறுத்தேன்! 'வாருங்கள், துரோகத்தனம் படைத்த அண்டை நாட்டினரே, இந்தப் போரை நீங்கள்தான் தொடங்கினீர்கள். எனவே இப்போது என்ன நடக்கிறதென்று பாருங்கள்! உங்களுக்கு என்ன நேரவேண்டுமோ அதனை நாங்கள் கொடுப்போம்; அதற்கு மேலும் கொடுப்போம்!' என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்."

கெராசிமோவ் தூரத்தில் திடீரென்று தொடங்கிய எந்திரத் துப்பாக்கிப் பிரயோகப் பரிவர்த்தனையைக் கேட்டவாறே மௌனமானார்; அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நின்றதும், அவர் சட்டென்று மீண்டும் தம் கதையைக் கூறத் தொடங்கினார்:

"யுத்தத்துக்கு முன்னால் நாம் ஜெர்மனியிலிருந்து எந்திரங் களைப் பெற்று வந்தோம். இந்த எந்திரங்களைக் கோத்திணைக்கும் போது நான் அதன் ஒவ்வொரு பாகத்தையும் குறைந்த பட்சம் ஐந்து முறையாவது தொட்டுப் பார்ப்பேன். அதனை எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து பார்ப்பேன். அந்த எந்திரங்கள் நிச்சயமாகத் திறமைசாலிகளால் செய்யப்பட்டவைதான். மேலும் ஜெர்மன் நூலாசிரியர்களின் புத்தகங்களையும் நான் விரும்பினேன். எப்படியோ நான் ஜெர்மன் மக்களை மதிப்போடு கருதிப் பார்ப்பதற்குப் பழகிப் போய்விட்டேன். அரும்பாடு

பட்டு உழைக்கும் அத்தகைய திறமைசாலிகளைக் கொண்ட நாடு ஹிட்லரின் அருவருக்கத்தக்க ஆட்சியைச் சகித்துக் கொண்டிருப்பது சமயங்களில் எனக்கு வெறுப்பை ஊட்டியது என்பது உண்மைதான். என்றாலும், அதெல்லாம் அவர்களது சொந்த விஷயம் என்று நினைத்துக் கொண்டேன். இதன் பின் போர் மேற்கு ஐரோப்பாவில் தொடங்கியது...

''எனவே நானும் போர் முனைக்குச் செல்லும் வழியில் சென்று கொண்டிருந்தேன். அப்போது நான் இவ்வாறு நினைத்துக் கொண்டேன்: ஜெர்மானியரிடம் வலிமைமிக்க எந்திரங்கள் உள்ளன; அவர்களது ராணுவமும் மோசமானதல்ல. எப்படி இருந்தால் என்ன? அத்தகைய எதிரியோடு மோதுவதும், அவர்களுக்கு உதை கொடுப்பதும் நல்ல வேடிக்கையாகத்தான் இருக்கும் என்றும் நினைத்துக் கொண்டேன். நாம் யாருக்கும் மூட்டாள்கள் அல்ல, இல்லையா? நிச்சயமாகச் சொன்னால், அவர்கள் மிகவும் நேர்மையான முறையிலேயே சண்டை போடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை—மேலும், பாசிசத்தோடு அவர்கள் உறவு வைத்துக் கொண்டிருக்கும்போது அங்கு என்ன நேர்மை இருக்க முடியும்?—என்றாலும், இத்தகைய நீசத்தனமான ஈனப் பிறவிகளோடு நாம் சண்டைபோட வேண்டியிருக்கும் என்று நான் என்றுமே நினைத்துப் பார்த்ததில்லை. ஹிட்லரின் ராணுவம் அந்த அளவுக்குக் கேடு கெட்டுப் போயிருந்தது. நல்லது. இப்போது நான் அதைப்பற்றிக் கூறிக் கொண்டிருக்க விரும்பவில்லை...

''எங்கள் யூனிட் ஜூலை மாத இறுதியில் போர் முனையை அடைந்தது. நாங்கள் 27ஆம் தேதியன்று காலையில் சண்டையில் கலந்து கொண்டோம். முதலில் எங்களுக்குச் சற்றுப் பயமாக இருந்தது. அவர்கள் தமது சிறு பீரங்கிகளால் எங்களுக்குப் பெருந் தொல்லை கொடுத்தனர்; என்றாலும் அன்றைய பகற்பொழுது கழிவதற்கு முன்பே நாங்கள் சுதாரித்துக் கொண்டு விட்டோம்; பின்னர் அவர்களை அவர்கள் ஆக்கிரமித்திருந்த கிராமத்திலிருந்து விரட்டியடித்தோம் அந்தச் சண்டையில் நாங்கள் சுமார் பதினைந்து பேரைக் கைதிகளாகப் பிடித்தோம். எனக்கு எல்லாமே நேற்று நடந்ததுபோல் நினைவிருக்கிறது: அவர்களை உள்ளே கொண்டு வந்தபோது அவர்கள் பயந்து வெளிறிப் போயிருந்தனர். எனது படைவீரர்கள் அந்த மோதலுக்குப் பின்னர் அதற்குள் ஆத்திரம் தணிந்து விட்டனர். இப்போதோ அவர்களில் ஒவ்வொருவரும் தம்மால் முடிந்ததனைத்தையும்—மெஸ்-டின் நிறைய சூப், புகையிலை, சிகரெட்டுகள், தேநீர் முதலிய பலவற்றையும்—அந்த ஜெர்மானியர்களுக்குக் கொடுக்க

விரும்பினர்; அவர்களைக் காமராடுகளே என்று ஜெர்மன் மொழியில் அழைத்தனர்; அவர்கள் எதற்காகப் போரிட்டுக் கொண்டிருந்தனர் என்று அவர்களிடமே கேட்டனர்.

''ஒரு வயதான போர்வீரர் இந்த உள்ளத்தைத் தொடும் காட்சியைச் சற்று நேரம் பார்த்தார்; பிறகு தமது சகாக்களை நோக்கி இவ்வாறு கூறினர்: 'நீங்கள் உங்கள் காமராடுகளின் மீது உணர்ச்சிமயமான ஒப்பாரியைப் பொழிந்து கொண்டிருக்கிறீர்கள். நிச்சயமாக இங்கு அவர்கள் எல்லாம் காம்ரேடுகளாகத் தான் உள்ளனர்; ஆனால் இதே காம்ரேடுகளை போர்முனைக்கு அப்பால் அவர்கள் பக்கத்தில் நீங்கள் பார்க்க வேண்டும்; அவர்கள் நமது காயம்பட்ட போர்வீரர்களுக்கும், சிவிலியன் மக்களுக்கும் என்ன கொடுமை இழைக்கிறார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும்!' இவ்வாறு கூறிவிட்டு அவர் போய் விட்டார். எங்கள் முகத்தில் பனிக்குளிர் மிக்க ஒரு வாளித் தண்ணீரை வாரிக் கொட்டியதைப்போல் நாங்கள் உணர்ந்தோம்.

''விரைவிலேயே நாங்கள் தாக்குதலில் இறங்கினோம். அப்போது அங்கு நான் கண்ட காட்சிகள் உண்மையிலேயே படு பயங்கரமாகவே இருந்தன! தரைமட்டமாகச் சுட்டுப் பொசுக்கப் பட்டிருந்த கிராமங்கள்; நூற்றுக்கணக்கில் கொன்று குவிக்கப் பட்டிருந்த பெண்கள், பிள்ளைகள், முதியவர்கள்; யுத்தக் கைதிகளின்—எங்களது சொந்த சோவியத் போர்வீரர்களின்—உருக்குலைத்துச் சின்னபின்னமாக்கப்பட்ட சடலங்கள்; கற்பழிக்கப்பட்டு மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்ட மாதர்கள், இளம் யுவதிகள், வெறும் சிறுமிகள்...

''அவர்களில் ஒருத்தியை மட்டும் நான் என்றுமே மறக்க மாட்டேன். அவள் ஏறத்தாழப் பதினேழு வயதுக் குழந்தையாக இருந்தாள். அவள் தனது பள்ளிக் கூடத்துக்குச் சென்று கொண்டிருந்தாள் போலும். ஜெர்மானியர்கள் அவளை வழியில் பிடித்து, அவளை யாரோ ஒருவரது வீட்டுத் தோட்டத்துக்குள் இழுத்துச் சென்று, அவளைக் கற்பழித்தனர்; பின்னர் அவளைக் கொன்றும் விட்டனர். சின்னஞ்சிறுமியான அவள், குழந்தைப் பருவத்தைக்கூடத் தாண்டாத அவள், மிதித்துத் துவைக்கப்பட்ட ஓர் உருளைக்கிழங்குப் பாத்தியில் பிணமாகக் கிடந்தாள். அவளைச் சுற்றிலும் அவளது பள்ளிப் புத்தகங்கள் ரத்தத்தால் நனைந்து சிதறிக் கிடந்தன. அவர்கள் அவளது முகத்தை ஒரு பெரிய வாளால் வெட்டிப் பிளந்திருந்தார்கள்: அது படுபயங்கரமாக உருக்குலைந்திருந்தது.....தனது கையில் அந்தச் சிறுமி தனது திறந்த பள்ளிக்கூடப் பையைப் பற்றிப் பிடித்திருந்தாள். நாங்கள் அவளது உடலை ஒரு கோட்டைக்

கொண்டு போர்த்தி மூடினேன். அதன் முன் மௌனமாக நின்றேன். எனது சகாக்கள் எல்லோரும் மௌனமாகத் தத்தம் வழியில் போன பின்னரும் நான் அங்கு நின்றேன்; ஒரு வெறியில் இவ்வாறு முனகிக் கொண்டேன்: 'பௌதிக பூகோளவியல்: பால்கோவும் போலோவின்கினும் எழுதியது. ஏழாம் அல்லது பத்தாம் ஆண்டுப் பள்ளிகளுக்கான பாடப் புத்தகம்.' இந்த வாசகங்களை அந்தச் சிறுமியின் பள்ளிக்கூடப் பையிலிருந்து வெளியே வந்து விழுந்து கிடந்த புத்தகங்கள் ஒன்றின் அட்டை மீது நான் வாசித்தேன். எனக்கு அந்தப் பாடப்புத்தகம் நன்கு தெரியும். எனது மகளும் ஐந்தாம் படிவத்தில்தான் படித்து வந்தாள்.

''ரூஷினுக்கு அருகில்தான் இது நிகழ்ந்தது. இதன் பின் ஸ்விவிராவுக்கு அருகிலும் ஒரு பள்ளத்தாக்கில் ஓர் இடத்தை நாங்கள் காண நேர்ந்தது. அங்கு ஜெர்மானியர்கள் தாம் கைதிகளாகப் பிடித்த சோவியத் போர்வீரர்களைச் சித்திரவதை செய்து கொன்று தீர்த்திருந்தனர். நீங்கள் கசாப்பு வெட்டும் இடத்தைப் பார்த்ததுண்டா? நல்லது. அந்த இடமும் அப்படித் தான் தோற்றமளித்தது. அந்தப் பள்ளத்தாக்கின் வழியே வளர்ந்தோங்கியிருந்த மரங்களின் கிளைகளில் கால்களோ அல்லது கைகளோ இல்லாத, உடம்புத் தோலைப் பாதி வரையிலும் வெட்டிக் கிழித்த உடல்கள் தொங்கிக் கொண்டிருந்தன. எந்த உடற் பகுதி யாருக்குச் சொந்தமானது என்றே நம்மால் சொல்ல முடியாது. அவை யாவும் வெறுமனே பெரிய இறைச்சிக் குவியலாகத்தான் காட்சியளித்தன. அந்தக் குவியலின் உச்சியில் எட்டு சோவியத் பக்கவாட்டுத் தொப்பிகள், ஒன்றோடொன்று பொருந்தும் கோப்பைகளை அடுக்காக அடுக்கி வைத்ததுபோல் ஒன்றுகப் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன.

''அங்கு நான் பார்த்ததையெல்லாம் ஒருநபர் வார்த்தை களால் வருணிக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? முடியாது. அவரால் முடியவே முடியாது. அதற்கு வார்த்தை களே கிடையாது. இதனை அவரவர் தமது சொந்தக் கண்களால் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். சரி. எவ்வாறுயினும், நாம் இந்த விஷயத்தை விட்டு விடுவோம்'' என்று கொராசிமோவ் சட்டென்று கூறிவிட்டு, நெடுநேரம் மௌனியாகி விட்டார்.

''இங்கே புகை பிடிக்கலாமா?'' என்று நான் அவரிடம் கேட்டேன்.

''நிச்சயமாக ஆயினும் கைக்குள் பொத்தி வைத்துக்



இ. க 1



1935-ல் மிக்கேல் ஷோலகோவ்



டான் நதியின் புதல்வர்கள்

ஆலைத் தொழிலாளர்கள் கலந்து கொண்ட ஒரு வாசகர் மாநாட்டில்





1930 ஆம் ஆண்டுகளில்



நோவோச்செர்க்காஸ்க்கில், பிரதிநிதி ஷோலகோவும் அவரது வாக்காளர்களும்

போர் முனையில். எழுத்தாளர்களான எவ்கெனி பெத்ரோவ், மிக்கேல் ஷோலகோவ், அலெக்ஸாந்தர் ஃபதயேவ் ஆகியோர், தகர்க்கப்பட்ட ஜெர்மன் டாங்கி ஒன்றிலிருந்து அகற்றப்பட்ட கருவிகளைப் பார்வையிடுகின்றனர்





பீரங்கிப் படையினருடன் மிக்கேல் ஷோலகோவ்

மிக்கேல் ஷோலகோவ், அலெக்ஸாந்தர் ஃபதயேவ் ஆகியோருடன், ஜெனரல்-லெப்டினென்ட் கோரேவ் உரையாடிக் கொண்டிருக்கிறார்





1944-ல



அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினர்கள்

காலாட்படைக் காவல் நிலையொன்றில் ஷோலகோவ்





வெஷென்ஸ்காயா கிராமத்தின் ஒரு காட்சி

வெஷென்ஸ்காயாவில் ஒரு வீதி





வெஸ்ஸெக்ஸ் காபாவில் ஆற்றுப்பாலத்துக்குச் செல்லும் பாதை

எழுத்தாளர் ஹோலகோவின் வீட்டிலிருந்து தெரியும் டான் நதிக் காட்சி





காலையுணவு வேளையின்போது ஷோலகோவும் அவரது மனைவி மரியா பெத்ரோவ்னாவும்

ஷோலகோவ் தமக்கு வந்துள்ள கடிதங்களைப் படிக்கிறார்





தமது தோட்டத்தில் ஷோலகோவ் தம்பதிகள்



ஒரு குடும்பப் புகைப்படம்

ஷோலகோவ் மீன் பிடிக்கிறார்





காட்டு வாத்து வேட்டைக்குப் புறப்பட்டுச் செல்கிறார்



டான் பிரதேச ஸ்டெப்பி வெளியின் மீது பறந்து செல்கிறார்.
ஒரு மனிதனின் தலைவிதி என்ற கதையின்
திரைப்படப்பிடிப்பின் போது ஷோலகோவ்
படத் தயாரிப்பாளர்களோடு விவாதிக்கிறார்





இன்றைய கதாநாயகர்களான லெனின்கிராடு நகரின் கிரோவ் ஆலைத்தொழிலாளர்களோடு ஷோலகோவ்

கொண்டுதான் பிடிக்க வேண்டும்'' என்று அவர் கரகரத்த குரலில் கூறினார்.

அவரும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு மேலும் தொடர்ந்தார்:

''உங்களுக்குப் புரிகிறதா? அந்த நாஜிக் கொடுமைகள் அனைத்தையும் கண்டுதான் நாங்களும் மிருகமானோம்; இது வேறு விதமாகவும் இருந்திருக்க முடியாதுதான். நாங்கள் மனிதப் பிறவிகளை எதிர்நோக்கவில்லை, மாறாக ஏதோ ரத்தவெறி பிடித்த ராட்சசப் பிறவிகளைத்தான் எதிர் கொண்டோம் என்பது எங்கள் எல்லோருக்குமே தெளிவாகிவிட்டது. அவர்கள் ஒரு காலத்தில் தமது எந்திரக் கருவிகளை எத்தனை அத்துபடியான தன்மையோடு உற்பத்தி செய்தார்களோ, அதே அத்துபடியான தன்மையோடுதான் அவர்கள் நமது மக்களைச் சித்திரவதை செய்தனர்; கற்பழித்தனர்; கொலை செய்தனர்.

''இதன்பின் நாங்கள் மீண்டும் பின்வாங்க நேர்ந்தது; என்றாலும் நாங்கள் வெறி பிடித்தவர்கள்போல் போரிட்டோம்.

''அநேகமாக எனது கம்பெனியில் இருந்த போர்வீரர்கள் எல்லோருமே சைபீரியர்கள்தான்; என்றாலும் நாங்கள் உக்ரேன் மண்ணைப் பாதுகாப்பதற்காக உண்மையிலேயே மூர்க்கமாகப் போரிட்டு நின்றோம். எனது நாட்டைச் சேர்ந்தவர்களில் பலர் உக்ரேனில் கொல்லப்பட்டனர்; எனினும் அவர்கள் கையினால் ஜெர்மானியர்களும் அதிக அளவில் தமது சாவைத் தழுவினர். நாங்கள் பின்வாங்கிக் கொண்டிருந்தோம் என்பது உண்மைதான். என்றாலும், அதே சமயத்தில் நாங்கள் அவர்களுக்குச் செம்மையடி கொடுக்கவும் செய்தோம்.''

லெப்டினென்ட் கெராசிமோவ் தமது சிகரெட்டை ஆசையோடு உள்ளிழுத்தவாறு, இப்போது வேறுபட்ட, மிருதுவான தொனியில் இவ்வாறு கூறினார்:

''உக்ரேனில் மண்வளம் நன்றாக உள்ளது; அங்குள்ள இயற்கைக் காட்சியும் வனப்பு மிக்கதாக உள்ளது! பெரியதாயினும், சிறியதாயினும், அங்குள்ள ஒவ்வொரு கிராமமும் எங்களுக்குச் சொந்த ஊரைப் போல் அருமை மிக்கதாக இருந்தது; ஒருவேளை அங்கு நாங்கள் எங்கள் ரத்தத்தைத் தரைமீது தாராளமாகப் பாய்ச்சியதுதான் அதற்குக் காரணமாக இருக்கலாம். ரத்தம் மனிதர்களைச் சகோதரர்கள் ஆக்கி விடுகிறது என்று மக்கள் கூறுவர்... அத்தகைய ஒரு கிராமத்தை விட்டு நாங்கள் போக வேண்டிய காலம் வந்தபோது எங்கள் இதயங்களே உடைந்து போயின. அதற்காக நாங்கள் மிகவும்

வருத்தப்பட்டோம். நாங்கள் பின்வாங்கி வரும்போது ஒருவர் கண்களை மற்றொருவர் கூர்ந்து நோக்க முடியாத அளவுக்கு நாங்கள் அதைப்பற்றி அத்தனை வருத்தமடைந்தோம்.

''...நான் என்றுவது கைதியாக இருக்க வேண்டியிருக்கும் என்று நான் என்றுமே நினைத்துப் பார்த்ததில்லை. ஆனால் அவ்வாறு நான் இருந்தாக வேண்டிய நிலையே ஏற்பட்டுவிட்டது. நான் முதன் முதலில் செப்டம்பர் மாதத் தொடக்கத்தில்தான் காயமடைந்தேன். என்றாலும் அப்போதும் நான் படைகளோடு தான் இருந்து வந்தேன். போல்தவா பிரதேசத்தில் தெனி சோவ்காவில் நடந்த சண்டையின்போது, செப்டம்பர் 21 ஆம் தேதியன்று நான் இரண்டாம் முறையாகக் காயம் அடைந்தேன்; அப்போதுதான் நான் கைதியாக்கப்பட்டேன்.

''ஜெர்மன் டாங்கிகள் எங்களது இடப்புறப் பக்கவாட்டில் ஊடுருவிப் புகுந்தன; அவற்றைத் தொடர்ந்து அவர்களது காலாட் படைகளும் வந்தன. நாங்கள் முற்றுகையிலிருந்து விடுபட்டு வெளி வருவதற்காகப் போராடிக் கொண்டிருந்தோம். அன்று எனது கம்பெனிக்குப் பெருத்த சேதங்கள் நேர்ந்தன. நாங்கள் அவர்களது தாக்குதலை இருமுறை எதிர்த்தடித்தோம்; அவர்களது டாங்கிகளில் ஆறு டாங்கிகளையும், ஒரு கவச மோட்டார் காரையும் நெருப்புக்கு இரையாக்கினோம்; ஹிட்லர் படையைச் சேர்ந்த சுமார் நூற்றியிருபது பேர்களை மக்காச்சோள வயல்களில் பிணமாக்கிக் குவித்தோம். ஆயினும் பின்னர் அவர்கள் தமது சிறு பீரங்கிப் படைகளைக் கொண்டு வந்து தாக்கினர்கள். எனவே நடுப் பகலிலிருந்து மாலை நாலு மணி வரையிலும் நாங்கள் விடாப்பிடியாகப் பிடித்து வைத்திருந்த மேட்டுப் பகுதியைக் கைவிட்டு விலகும் நிர்ப்பந்தத்துக்கு ஆளானோம். அதிகாலையிலிருந்தே புழுக்கமூட்டும் வெப்பம் அதிகமாக இருந்தது; வானத்தில் ஒரு மேகத்தைக்கூடக் காணோம்; சூரியனை நாங்கள் கிட்டத்தட்ட திக்குமுக்காடிப் போகும் அளவுக்கு அத்தனை மூர்க்கமாகக் காய்ந்து கொண் டிருந்தது. குண்டுகள் நெருக்கமாகவும், விரைவாகவும் வந்து விழுந்தன. எங்களுக்கு எவ்வளவு தாகமாக இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது; படைவீரர்களின் உதடுகள் காய்ந்து கறுகத்து விட்டன; நான் உத்தரவுகளை ஒரு விசித்திரமான, கரகரத்த குரலில் இடும் அளவுக்கு என் தொண்டையே அத்தனை தூரம் வறண்டு, காய்ந்து போயிருந்தது. எனக்கு முன்னால் அந்தக் குண்டு விழுத்து வெடித்த போது, நாங்கள் ஒரு பள்ளத்தின் வழியேஓடிக் கொண்டிருந்தோம். நான் அதனைக் கடந்து செல்வதற்கு முன்னால், ஒரு கண நேரத்தில் கரிய

மண்ணும் தூசியுமாக என்முன் ஒரு பெரிய தூணே எழுந்து நிற்பதைக் கண்டேன் என்று நினைக்கிறேன். அவ்வளவுதான். ஒரு குண்டுச் சிதறல் என் தலைக் கவசத்தைத் துளைத்துப் பாய்ந்தது; மற்றொரு சிதறல் எனது வலது தோளுக்குள் புகுந்து தங்கிக் கொண்டது.

''நான் எவ்வளவு நேரம் வரையில் அங்கே கிடந்தேன் என்பது எனக்குத் தெரியாது. எனினும் எனக்குப் பிரக்ஞை மீண்டபோது, காலடிச் சத்தங்களைக் கேட்டேன். நான் தலையை உயர்த்திப் பார்த்தேன்; பார்த்தபோது நான் அடி பட்டு விழுந்த இடம் அதுவல்ல என்பதைக் கண்டு கொண்டேன். யாரோ என் சட்டையைக் கழற்றி விட்டு, என் தோளுக்குக் கட்டுப் போட்டிருந்தனர். என் தலைக் கவசத்தைக் காணவில்லை. என் தலைக்குக் கட்டுப்போட்டது யாராக இருந்தாலும், அந்த நபர் அதனை அவசரம் அவசர மாகத்தான் போட்டிருக்க வேண்டும் என்று தெரிந்தது. ஏனெனில் கட்டுப் போட்டிருந்த துணியின் கடைசிப் பகுதி சரியாகக் கட்டப்படாமல், என் மார்பின்மீது தொங்கிக் கொண்டிருந்தது. பிரக்ஞை மீண்ட அந்த முதல் கண நேரத்தில், எனது படை வீரர்கள்தான் என்னை இங்கு கொண்டு வந்திருக்க வேண்டும் என்றும், அவர்கள்தான் வழியில் என் காயங்களுக்குக் கட்டுப் போட்டிருக்க வேண்டும் என்றும் நினைத்தேன். நான் தலையை உயர்த்திப் பார்க்கச் சிரமப்பட்டபோது அவர்களையே நான் காண்பேன் என்று எதிர்பார்த்தேன். ஆனால் என்னை நோக்கி ஓடி வந்தவர்களோ ஜெர்மானியர்கள். அவர்களை நான் நல்ல திரைப்படத்தில் காண்பதுபோல் அத்தனை தெளிவாகப் பார்த்தேன். நான் என்னைச் சுற்றிலும் கைகளால் தட்டுத் தடவிப் பார்த்தேன். ஆனால் கைக்கெட்டும் தூரத்தில் ஒரு ஆயுதமும் இல்லை. ஒரு கைத்துப்பாக்கியோ, ஒரு துப்பாக்கியோ, அல்லது கையால் எறியும் வெடிகுண்டும்கூட இல்லை. எனது படை வீரர்களிற் சிலரே வரைபடம் இருந்த எனது பையையும், எனது ஆயுதங்களையும் அகற்றியிருக்க வேண்டும்.

''மரணம் இதோ நெருங்கி விட்டது என்றே நான் நினைத்தேன். அந்தக் கணத்தில் நான் வேறு என்ன நினைத்தேன்? ஒன்றுமே இல்லை. நீங்கள் உங்களது வருங்கால நாவலுக்கு இதைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினால், எப்படியாவது கற்பனை செய்து சமாளித்துக் கொள்ளுங்கள்; ஏனெனில் எதைப் பற்றியும் நினைத்துப் பார்ப்பதற்கே எனக்கு உண்மையில் நேரமில்லை. ஜெர்மானியர்கள் மிகவும் அருகிலேயே இருந்தனர்; நான் கீழே கிடந்தவாறே சாக விரும்பவில்லை.

ஆமாம். நான் கீழே கிடந்தவாறு சாகவே விரும்பவில்லை. புரிகிறதா உங்களுக்கு? நான் என்னிடம் மிஞ்சியிருந்த சக்தியையெல்லாம் திரட்டி, கைகளையும் கால்களையும் ஊன்றி எழுந்து நிற்க அரும்பாடு பட்டேன். ஜெர்மானியர்கள் என் அருகில் வந்துவிட்ட சமயத்தில் நான் ஏற்கெனவே எழுந்து நின்று விட்டேன். நான் நின்றேன்; என்றாலும் தள்ளாடினேன். நான் திடீரென்று மயங்கிக் கீழே விழுந்து விடுவேன் என்றும், அவர்களும் நான் கீழே விழுந்து கிடக்கும்போது என்னைக் குத்திக் கொன்று விடுவார்கள் என்றும் நான் மிகவும் பயந்தேன். அவர்களில் ஒருவர் முகம்கூட எனக்கு நினைவில்லை. 'வாருங்கள்; என்னைக் கொல்லுங்கள், வேசி மக்களே! நான் கீழே விழுவதற்கு முன் என்னைக் கொல்லுங்கள்' என்று அவர்களிடம் கூறினேன். அவர்களில் ஒருவன் தனது துப்பாக்கியின் மட்டையினால் என் கழுத்தின்மீது அடித்தான்; நான் கீழே சாய்ந்தேன்; எனினும் மீண்டும் எழுந்து நின்றேன். அவர்கள் கடகடவென்று சிரித்தார்கள். அவர்களில் ஒருவன் என்னை நடக்குமாறு உத்தரவிட்டுத் தனது கையை அசைத்தான். நான் நடந்தேன். என் முகம் முழுவதிலும் காய்ந்துபோன ரத்தம் பெருக்கோடியிருந்தது; தலையிலுள்ள காயத்திலிருந்து மிகவும் கதகதப்பான, பிசுபிசுப்பான ரத்தம் சொட்டியது; என் தோள் பயங்கரமாக வலித்தது; எனது வலதுகையை என்னால் தூக்கவே முடியவில்லை. தரைமீது படுத்துக் கிடக்க வேண்டும் என்று எத்தனை பரிதாபகரமாக நான் விரும்பினேன் என்பது எனக்கு நினைவிருக்கிறது. நான் எங்கும் போக விரும்பவில்லை; என்றாலும் நான் போகத்தான் செய்தேன்...

"இல்லை. நான் சாகவே விரும்பவில்லை; அதைக் காட்டிலும் கைதியாக்கப்பட்டுச் சிறையில் இருக்க நேர்வதை விரும்பவே இல்லை. எனது கிறக்கத்தையும், குமட்டலையும் நான் போராடி வெற்றி கண்டவாறே நடந்தேன். நான் உயிரோடு இருந்தேன், எனவே எனக்கு இன்னும் செயல்படும் திறன் இருந்தது என்பதே இதற்கு அர்த்தமாகும். கடவுளே! எனக்குத்தான் எவ்வளவு தாகமாக இருந்தது! என் வாய் காய்ந்து வறண்டு போயிருந்தது; எந்நேரமும் என் கண் முன்னால் ஒரு கறுப்புத் திரை அசைந்து கொண்டிருப்பதுபோல் தோன்றியது. நான் ஏறத்தாழப் பிரக்ஞை இழந்தவனைத்தான் இருந்தேன், என்றாலும், நான் நடந்தேன்; 'எனக்குக் கொஞ்சம் தண்ணீரும் சற்று ஓய்வும் கிடைத்தவுடனேயே நான் ஓடிப் போய் விடுவேன்' என்று எனக்குள் எந்நேரமும் சொல்லிக் கொண்டவாறே நடந்தேன்.

''கைதிகளாக எங்கள் எல்லோரையும் காட்டின் ஓரத்தில் ஒன்று சேர்த்து வரிசையாக நிற்க வைத்தனர். கைதிகளில் பலரும் பிரதானமாக மற்றொரு யூனிட்டைச் சேர்ந்தவர் களாகவே இருந்தனர்; எனது ரெஜிமெண்டின் மூன்றாவது கம்பெனியைச் சேர்ந்தவர்கள் இரண்டே இரண்டு பேர்தான் இருந்தனர். கைதிகளில் மிகப் பெரும்பாலோர் காயமடைந் திருந்தனர். அந்த ஜெர்மன் லெப்டினென்ட் ஓட்டை ரஷ்ய மொழியில் பேசியவாறே, எங்கள் மத்தியில் கமிஸார்களோ அல்லது அதிகாரிகளோ யாரேனும் இருக்கிறார்களா என்று கேட்டான். எவரும் பதில் சொல்லவில்லை. பிறகு அவனே இவ்வாறு சொன்னான்: 'கமிஸார்களும், அதிகாரிகளும் இரண்டடி முன்னே வரவும்!' எவரும் இடம் விட்டு அசையவில்லை.

''அந்த லெப்டினென்ட் எங்கள் வரிசையின் பக்கமாக மெதுவாக நடந்து வந்தான். யூதர்கள்போல் தோற்றமளித்த பதினைந்து அல்லது பதினாறு பேரைப் பொறுக்கியெடுத்தான். அவர்கள் ஒவ்வொருவரின் முன்பும் சென்று, 'நீ யூதனா?' என்று கேட்டான்; பிறகு அவர்களது பதிலைக் கேட்பதற்குக்கூடக் காத்திராமல், அவர்களை வரிசையை விட்டு வெளியே வருமாறு உத்தரவிட்டான். அவர்களில் பெரும்பாலோர் யூதர்கள்தான்; என்றாலும் அவர்கள் மத்தியில் கறுத்த தலைமுடியும் கறுத்த சர்மமும் கொண்ட பல அர்மீனியர்களும், ரஷ்யர்களும் இருக்கவே செய்தனர். அவர்கள் அனைவரும் ஒரு பக்கமாகக் கொண்டு செல்லப்பட்டனர்; பின்னர் எங்கள் கண் முன்னாலேயே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன் பின்னர் எங்களை அவர்கள் அவசரம் அவசரமாகச் சோதனை போட்டனர். எங்கள் பைகள் மற்றும் எங்களது சட்டைப் பைகளிலிருந்த பொருள்கள் ஆகிய எல்லாமே எடுத்துக் கொள்ளப்பட்டன, ஒரு விஷயம், உங்களுக்குத் தெரியுமா? நான் எனது கட்சிக் கார்டை, அதைத் தொலைத்து விடுவோம் என்ற பயத்தில், என் தோள்ப்பையில் என்றுமே கொண்டு சென்றதில்லை. அதனை நான் என் கால்சராய்ப் பாக்கெட்டில்தான் வைத்திருந்தேன். அந்த ஜெர்மானியர்கள் என்னைச் சோதனை போட்டபோது, அதனைக் கண்டுபிடிக்கத் தவறி விட்டனர். மனிதன் ஒரு வியத்தகும் பிராணி என்றே நான் சொல்லுவேன்! என் உயிரே ஒரு நூலிழையில்தான் தொங்கிக் கொண்டிருந்தது என்பதை நான் அறிந்திருந்தேன்; நான் கொல்லப்படவில்லையென்றாலும், தப்பியோட முயலும்போது, வழியில் எப்படியும் கொல்லப் படுவேன் என்பதையும் நான் அறிந்திருந்தேன். ஏனெனில், ரத்தச் சேதத்தால் நான் மிகவும் பலவீனமாக இருந்ததால்,

மற்றவர்களோடு சேர்ந்து செல்வதே எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. என்றாலும், எனது கட்சிக் கார்டு பத்திரமாக இருக்கிறது என்பதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்; அந்த மகிழ்ச்சியில் நான் எவ்வளவு தாகமாக இருந்தேன் என்பதையும்கூட மறந்து விட்டேன்.

''நாங்கள் அனைவரும் மேற்கு நோக்கி நடத்திச் செல்லப் பட்டோம். ரோட்டின் இரு பக்கத்திலும் எங்களுக்குப் பலத்த காவல் இருந்தது; சுமார் பத்துப்பேர் மோட்டார் சைக்கிள் களில் காவலாக வந்தனர். நாங்கள் விரைவாக நடந்து செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டோம்; எனது பலமோ துரித மாகக் குன்றி வந்தது. நான் இரண்டு முறை கீழே விழுந்தேன்; எனினும் எழுந்து நின்று மேலும் நடந்து சென்றேன்; ஏனெனில், நான் தரையிலேயே மேலும் ஒரு நிமிடம் இருந்தால், அதனால் எங்கள் வரிசை என்னைக் கடந்து முன்னே சென்றுவிட்டால், அங்கேயே, ரோட்டின்மீதே என்னைச் சுட்டுத் தள்ளி விடுவார் கள் என்பதை நான் அறிந்திருந்தேன். வரிசையில் எனக்கு முன்னால் சென்ற சார்ஜெண்ட் விஷயத்தில் இப்படித்தான் நிகழ்ந்தது. அவருக்கு ஒரு காலில் காயம் பட்டிருந்தது; அவரால் நடக்கவே முடியவில்லை. அவர் முனகினார்; வேதனை சகிக்க முடியாததாக இருந்தபோது அவர் வாய்விட்டுக் கதறவும் கூடச் செய்தார். சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்ற பிறகு அவர் உரத்த குரலில் இவ்வாறு கூறினார்: ''முடியாது. இனிமேலும் என்னால் நடக்க முடியாது. விடைபெறுகிறேன், தோழர்களே!'' இதன்பின் அவர் ரோட்டின் மத்தியில் வெறுமனே உட்கார்ந்து விட்டார். நடையை நிறுத்தாமல், மற்றவர் கள் அவரைத் தூக்கியெடுத்து அவரை நிற்கச் செய்ய முயன்று ரபார்த்தனர். ஆனால் அவரோ மீண்டும் தரைமீதே சரிந்து விழுந்தார். அவரது மிகவும் வெளிறிப் போன இளம் முகத்தை யும், சுளித்துச் சுருங்கி ஒன்று சேர்ந்திருந்த புருவங்களையும், கண்ணீர் நிரம்பி நின்ற கண்களையும் இப்போதும்கூட நான் ஒரு கனவில் காண்பதுபோலக் காண முடிகிறது...வரிசை அவரைத் தாண்டிச் சென்றது. நான் திரும்பிப் பார்த்தேன். மோட்டார் சைக்கிளில் காவலாக வந்த ஒருவன் அந்த சார்ஜெண்டுக்கு அருகில் வண்டியை ஓட்டிச் சென்றான்: உறையிலிருந்து கைத்துப்பாக்கியை வெளியே எடுத்தான்; அதனை அந்த மனிதரின் காதில் இடித்து அவரைச் சுட்டுத் தள்ளினான். இவ்வாறு செய்வதற்கு அவன் சைக்கிளை விட்டுக் கூட இறங்கவில்லை, தெரியுமா? நாங்கள் ஆற்றங்கரைக்கு வந்து சேர்வதற்கு முன், ஜெர்மானியர்கள் மேலும் பல

கைதிகளை அவர்கள் பின்தங்கிவிட்டார்கள் என்பதற்காகச் சுட்டுக் கொன்று விட்டனர்.

"நான் அந்த ஆற்றையும், அதன் குறுக்கே தென்பட்ட தகர்க்கப்பட்ட பாலத்தையும், அதன் ஒரு கோடியில் மாட்டிக் கொண்டு நின்ற ஒரு லாரியையும் ஏற்கெனவே பார்க்க முடிந்தது. அங்கு நான் ரோட்டில் முகம் குப்புற விழுந்தேன், இல்லை. நான் பிரக்ஞை இழந்து விடவில்லை. என் வாய் முழுவதும் புழுதி அடைக்க, நெடுஞ்சாண் கிடையாக அங்கு நீண்டு விழுந்து கிடந்தேன். ஒரு குருட்டுத்தனமான கோபாவேசத்தோடு என் பற்களை நறநறவென்று கடித்தேன்; ஆயினும் என் உடம்பில் உயிர் இருந்ததே தவிர, என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை. மற்றவர்கள் என்னைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் தணிந்த குரலில் இவ்வாறு கூறினார்: 'எழுந்திருங்கள் சீக்கிரம்; இல்லாவிட்டால் அவர்கள் உங்களைச் சுட்டுக் கொன்று விடுவார்கள்.' நான் என் விரல்களால் என் வாயைக் கிழித்தேன்; வேதனையாவது என்னை எழுந்து நிற்க உதவும் என்ற எண்ணத்தில் கண்களையும் பிரண்டினேன்...

"வரிசை ஏற்கெனவே என்னைக் கடந்து சென்று விட்டது. அப்போது அந்த மோட்டார் சைக்கிள் என்னை நோக்கி உருண்டோடி வரும் சத்தத்தைக் கேட்டேன்; உடனே நான் எழுந்துவிட்டேன். என்னைக் கொல்லப் போகிறவன் யார் என்பதைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், குடிகாரனைப்போல் தள்ளாடி நடந்து கொண்டே, வரிசையை எட்டிப் பிடித்து அதனோடு சேர்ந்து கொண்டேன். அந்த ஆழமற்ற சிற்றாற்றை அப்போதுதான் கடந்து சென்றிருந்த ஜெர்மன் டாங்கிகளும், கார்களும் தண்ணீரைக் கலக்கிச் சேற்றை மேலே கிளப்பி விட்டிருந்தன; என்றாலும் நாங்கள் அந்த இதமான, பழுப்பு நிறமான சேற்றின்மீது தாகத்தோடு பாய்ந்தோம்; எங்களுக்கு அது மிக மிக இனிமையான ஊற்று நீரைக் காட்டிலும் இனிமையாக ருசித்தது. நான் அந்த நீரில் என் தலையையும், காயம்பட்ட தோளையும் கழுவிக் கொண்டேன். இது எனக்கு அற்புதமாகப் புத்துணர்வூட்டியது. இப்போது எனக்கு மேலும் நடப்பதற்கும் தெம்பு இருந்தது. இனியும் நான் சோர்ந்து விழுந்து ரோட்டில் கிடக்கமாட்டேன் என்ற நம்பிக்கை பிறந்தது.

"நாங்கள் அந்த ஆற்றைக் கடந்து வந்ததுமே, நடுத்தர ஜெர்மன் டாங்கிகளின் அணிவகுப்பொன்று ரோட்டின் வழியாக எங்களை நோக்கி வருவதைக் கண்டோம். அவற்றில் முன்னே

லிருந்த டாங்கியில் இருந்த ஒருவன், நாங்கள் கைதிகள்தான் என்பதைச் சரிவர அடையாளம் கண்டு கொண்டு, டாங்கியின் வேகத்தை அதிகரித்து, அதனை எங்கள் வரிசையை நோக்கி நேராக ஓட்டி வந்தான்; இதன் மூலம் முன் வரிசைகளில் பீதியை ஏற்படுத்தி, தனது டாங்கியின் போக்கினால் எங்கள் போர்வீரர்களை இடித்துத் தள்ளினான். எங்களுக்குக் காவலாக வந்தவர்கள் இந்தக் காட்சியைக் கண்டு, தமது கைகளை ஆட்டிக் கொண்டும், டாங்கிகளின் மேல்தளங்களிலிருந்து தமது தலைகளை நீட்டிக் கொண்டிருந்த டாங்கி வீரர்களை நோக்கி ஏதோ கூறி கத்திக் கொண்டும், விலா வெடிக்கச் சிரித்தனர். மனமாரச் சிரித்து முடித்த பின்னால், அவர்கள் மீண்டும் எங்களை ஒழுங்காக அணி வகுத்து நிற்க வைத்து, ரோட்டின் ஓரமாக எங்களை நடத்திச் சென்றனர். நிச்சயமாக அவர்களுக்கு, இந்த ஜெர்மானியர்களுக்குச் சிரிப்பதும் பிடித்திருக்கிறது...

"அன்றிரவு நான் தப்பித்துச் செல்ல எந்த முயற்சியும் செய்யவில்லை; அதிக தூரம் செல்ல முடியாத அளவுக்கு நான் மிகவும் பலவீனமாக இருந்ததை உணர்ந்தேயிருந்தேன். மேலும், எங்களுக்குப் பலத்த காவலும் போடப்பட்டிருந்தது; எனவே தப்பித்துச் செல்ல முயலும் எந்த முயற்சியும் தோல்வியில்தான் முடிந்திருக்கும். என்றாலும், அத்தகைய முயற்சியை நான் செய்யாமைக்காகப் பின்னால் என்னையே எவ்வளவு தூரம் சபித்துக் கொண்டேன் என்பது உங்களுக்குத் தெரியாது! மறு நாள் நாங்கள் ஒரு ஜெர்மன் காலாட்படைக் கம்பெனி தங்கியிருந்த ஒரு கிராமத்தின் வழியாக நடத்திச் செல்லப் பட்டோம். அங்கிருந்த ஜெர்மானியர்கள் எல்லோரும் எங்களைப் பார்ப்பதற்காகத் தெருவில் வந்து கூடிவிட்டனர். போர் முனைக்குச் செல்லும் வழியில் சென்று கொண்டிருந்த அந்தக் காலாட் படைக் கம்பெனிக்குத் தைரியம் ஊட்டுவதற்காக, எங்களுக்குக் காவலாக வந்தவர்கள் எங்களைத் துள்ளித் துள்ளி ஓடுமாறு செய்து, எங்களை அவமானப்படுத்தி, அந்தக் கிராமம் முழுவதன் வழியாகவும் எங்களை ஓட ஓட விரட்டினர். நாங்கள் ஓடினோம். யாராவது மெதுவாக ஓடினாலோ அல்லது கீழே விழுந்தாலோ, அங்கேயே அவர்களைச் சுட்டுத் தள்ளினர்.

"அன்றைய பொழுது சாய்வதற்குள், நாங்கள் ஒரு யுத்தக் கைதி முகாமில் அடைக்கப்பட்டோம். இதற்காக ஒரு எந்திர மற்றும் டிராக்டர் நிலையத்தின் முற்றம் கனத்த முள்கம்பி வேலியினால் நாலாபுறமும் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. அதனுள் கைதிகள் சிறு மீன் குவியலைப்போல் அடைக்கப்

பட்டிருந்தனர். நாங்கள் முகாம் காவலாளிகள் வசம் ஒப்படைக் கப்பட்டோம்; அவர்கள் தமது துப்பாக்கி மட்டைகளால் எங்களை அடித்தும், முடுக்கியும், அந்த முகாமுக்குள் எங்களை மந்தைபோல் விரட்டிச் சென்றனர். அது நரகமாக இல்லை; அதைக் காட்டிலும் மோசமாக இருந்தது. அங்கு கக்கூஸ்களே இல்லை. கைதிகள் அங்கேயே மலஜலம் கழித்தனர்; மலஜலம் நாறும் அந்த இடத்திலேயே கைதிகள் நிற்கவோ அல்லது படுக்கவோ வேண்டும் என்று அங்கு எதிர்பார்க்கப்பட்டது. பலவீனமானவர்கள் எழுந்திருக்கவே இல்லை. எங்களுக்கு உணவும் தண்ணீரும்—அதாவது ஒரு குவளைத் தண்ணீரும், ஒரு கைப்பிடி யளவுக்கு வேக வைக்காத தினைத் தானியமும் அல்லது புளுத்துப் போன சூரியகாந்தி விதைகளும்—நாளொன்றுக்கு இருமுறை வழங்கப்பட்டன. சில நாட்களில் காவலாளிகள் கைதிகளுக்கு உணவளிக்கவே முற்றிலும் மறந்துவிட்டனர்.

''நாங்கள் அங்கு போய்ச் சேர்ந்த மூன்றும் நாளன்று மழை கொட்டத் தொடங்கியது. நாங்கள் முழங்கால் அளவுச் சேற்றில் நடந்து சென்றோம். காலையில் கைதிகள் குதிரைகளைப் போல் சுடுமூச்சு வாங்கிக் கொண்டிருந்தனர். அந்தப் பேய் மழை எப்போதாவது நிற்கும் என்ற நம்பிக்கைக்கே இடமில்லாததுபோல் தோன்றியது....ஒவ்வோர் இரவிலும் டஜன் கணக்கில் கைதிகள் மாண்டனர். நாங்கள் நாளுக்கு நாள் பசிக் கொடுமையினால் மேன்மேலும் பலவீனமடைந்து வந்தோம். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல், எனது காயங்களும் எனக்கு நரக வேதனையளித்து வந்தன. ஆறுவது நாளன்று என் தோளிலும், தலையிலும் வேதனை மிகவும் அதிகரித்து வந்ததை நான் உணர்ந்தேன். எனது காயங்களில் சீழ் பிடிக்கத் தொடங்கிவிட்டது. அவற்றிலிருந்து துர் நாற்றமும் வீசியது. மிகவும் மோசமாகக் காயமடைந்துள்ள சோவியத் போர் வீரர்களை அந்த முகாமுக்கு அருகிலுள்ள கூட்டுப் பண்ணைக் குதிரை லாயங்களில் வைத்திருப்பதாகவும், அங்கு அவர்களைக் கவனித்துக் கொள்ள ஒரு டாக்டரும் இருந்ததாகவும் என்னிடம் கூறினர். அங்கு சென்று அந்த டாக்டரைப் பார்க்க அனுமதிக்குமாறு நான் காலையில் காவலாளிகளின் சார்ஜெண்டிடம் கேட்டுக் கொண்டேன். அவன் ரஷ்ய மொழியை நன்றாகப் பேசினான். 'போ. போய் உங்கள் டாக்டரைப் பார். அவர் உடனே உனக்குச் சிகிச்சை செய்வார்' என்று பதிலளித்தான் அவன்.

''அதில் தொனித்த கிண்டலை நான் புரிந்துகொள்ளவில்லை. நான் நம்பிக்கையோடு அந்த லாயங்களை நோக்கிச் சென்றேன்.

''டாக்டர் என்னை வாசலிலேயே சந்தித்து விட்டார். அவரே முற்றிலும் ஒய்ந்துபோன மனிதராகத்தான் இருந்தார். பயங்கரமாக வற்றி மெலிந்து ஆரோக்கியம் குன்றிப் போயிருந்த அவர், தாம் அனுபவிக்க நேர்ந்த துன்பங்கள் அனைத்திலுலும் ஏற்கெனவே அரைப்பைத்தியமாக மாறியிருந்தார். காய மடைந்தவர்கள் அசிங்கமான வைக்கோலின்மீது படுத்துக் கிடந்தனர்; அந்த லாயத்தில் நிரம்பி நின்ற மூச்சைப் பிடிக்கும் துர்நாற்றத்தில் அவர்கள் மூச்சுவிட மாட்டாமல் திணறிக் கொண்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலோரின் காயங்களில் புழுக்கள் நெளிந்தன. காயமடைந்தவர்களில் அவற்றைத் தோண்டியெடுத்துப்போட முடிந்தவர்கள் தமது கைவிரல் களாலோ அல்லது குச்சிகளாலோ அவற்றைத் தோண்டி எடுத்துப் போட்டனர்...இறந்து போனவர்களும்கூட அங்கு குவியலாகத்தான் குவித்துப் போடப்பட்டிருந்தனர்; அந்தக் குவியலை அகற்ற முடியாத அளவுக்கு அது மிகவிரைவாக உயர்ந்துகொண்டே வந்தது.

''''நல்லது. உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய முடியும்?' என்று டாக்டர் என்னிடம் கேட்டார்: 'என்னிடம் கட்டுப்போடும் துணி ஒரு துண்டுகூடக் கிடையாது. என்னிடம் எதுவுமே கிடையாது! கடவுள் பெயரால் கூறுகிறேன். போய் விடுங்கள்; இங்கிருந்து போய் விடுங்கள்! உங்களது கட்டுக்களை அவிழ்த்தெறிந்துவிட்டு, உங்கள் காயங்களின்மீது கொஞ்சம் சாம்பலைத் தூவிவையுங்கள். இங்கேயே வாசலருகே கொஞ்சம் புதுச்சாம்பல் கிடக்கிறது.'

''அவர் சொன்னபடியே நான் செய்தேன். நான் முகாமுக்குத் திரும்பி வந்ததும், காவலாளிகளின் சார்ஜெண்ட் பல்லெல்லாம் தெரியச் சிரித்துக் கொண்டே, 'நல்லது. எல்லாம் எப்படி இருந்தது? ஓ! போர் வீரர்களான உங்களுக்கு ஒரு அருமையான டாக்டர் வாய்த்திருக்கிறார். அவர் உனக்கு உதவினாரா?' என்று என்னிடம் கூறினான். நான் பதில் கூறுமலே அவனைக் கடந்து செல்ல விரும்பினேன்; ஆனால் அவனே என்முகத்தில் தனது முஷ்டியால் ஒரு குத்து விட்டவாறே, 'எனக்குப் பதில் கூறவுமா மறுக்கிறாய்? அட்டுப்பிடித்த பன்றிப் பயலே!' என்று கத்தினான். நான் கீழே விழுந்தேன்; அவனே என்னைத் தன் காலால் உதைக்கத் தொடங்கினான்; என் தலையும் மார்பும்தான் அவனது உதைகளின் இலக்காக இருந்தன. மேலும் உதைக்கமாட்டாமல் அவன் களைத்துப்போன பிறகுதான், அவன் உதைப்பதை நிறுத்தினான். நான் உயிரோடிருக்கும் வரையிலும் அந்த நாளையை மறக்கமாட்டேன்!

என்றுமே மறக்கமாட்டேன்! இதன்பின்னரும்கூட நான் அவனிடமிருந்து பலமுறை அடி வாங்கினேன். முள்கம்பி வேலியின் ஊடாக அவன் பார்க்கும்போது நான் அவன் கண்ணில்பட்டுவிட்டால் போதும், மறுகணமே அவன் என்னை வெளியே வருமாறு உத்தரவிடுவான். வெளியே வந்ததும் மௌனமாக அடிகொடுப்பதிலேயே கவனமாக இருந்து என்னை அடித்து நொறுக்குவான்.

''நான் எவ்வாறு இதையெல்லாம் மீறி உயிர் பிழைத்திருந்தேன் என்று நீங்கள் கேட்கக் கூடும்.

''பாருங்கள். நான் மெக்கானிக்காக வேலை பார்க்கத் தொடங்குவதற்கு முன்னால், காமா துறைமுகத்தில் ஒரு சுமைக் கூலியாக இருந்தேன். சரக்கை இறக்குவதற்காக அங்கு கப்பல் எதுவும் வரும்போது, ஒவ்வொன்றும் ஒரு சென்ட்னர் எடையுள்ள இரண்டு உப்பு மூட்டைகளை நான் ஒரே சமயத்தில் சுமந்துகொண்டு வந்து விடுவேன். எனவே என் உடல் அத்தனை வலுவாக இருந்தது; அத்துடன் எனது ஆரோக்கியமும் பொதுவாக நன்முகத்தான் இருந்தது. என்முலும் பிரதானமான விஷயம் என்னவென்முல், நான் சாகவே விரும்பவில்லை என்னிடம் அத்தனை எதிர்ப்புச் சக்தியும் இருந்தது. நான் எனது நாட்டைப் பாதுகாத்து நிற்கும் போர் வீரர்களின் அணிகளுக்குத் திரும்பவும் வந்துவிடவேண்டும் என்றே காத்திருந்தேன். அவ்வாறே எதிரியின்மீது எனது பழியைத் தீர்த்துக்கொள்ள நான் திரும்பி வரவும் செய்தேன்.

''வேறொரு முகாமுக்கு நான் மாற்றப்பட்டேன். அது முதல் முகாமிலிருந்து சுமார் நூறு கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. அது ஒருவிதமான வினியோகக் கேந்திரமாகவே இருந்தது. இந்த இரண்டு முகாம்களும் ஒன்றுபோலத்தான் இருந்தன. இங்கும் முள் கம்பியினால் அமைக்கப்பட்ட உயரமான வேலி இருந்தது; மேலும் எங்கள் தலைக்குமேல் கூரை எதுவும் இல்லை. இங்கும் உணவு படுமோசமாகவே இருந்தது; சில சமயங்களில் வேகவைக்காத தினைத் தானியத்துக்குப் பதிலாக ஒரு குவளையளவுக்கு வேகவைத்த உலர்த்த கோதுமையை எங்களுக்கு வழங்கினர் என்பதொன்றே வித்தியாசம். எப்போதாவது இறந்துபோன குதிரைகள் முற்றத்துக்குள் இழுத்து வரப்பட்டன; அதன் நாற்றமெடுக்கும் தசையை எங்களுக்குள் பங்கு போட்டுக்கொள்ள மட்டும் அவர்கள் விட்டுவிட்டனர். நாங்கள் அதனைத் தின்றோம்; அதனால் நாங்கள் பசியினால் சாகவில்லை; மாறுக, அது விஷமாக மாறியிருந்ததால் எங்களில் நூற்றுக்கணக்கானோர் மாண்டுபட்டனர்...செப்டம்பர் மாதம்

முடிவதற்கு முன்பே குளிர்காலம் வந்துவிட்டது; மழை இடை விடாது கொட்டியது; அதிகாலையில் தரையில் உறைபனி படிந் திருந்தது. வாழ்க்கை சற்றேனும் குறையாத துன்பமாகவே இருந்தது. இறந்து போனவர்களில் ஒருவரின் சட்டையையும் கம்பளிக்கோட்டையும் பெறும் அளவுக்கு நான் அதிருஷ்டசாலி யாகவே இருந்தேன். என்றாலும்கூட, என் எலும்புகளை உறைய வைக்கும் குளிரிலிருந்து நான் தப்பிக்க முடியவில்லை. பசியைப் பொறுத்தவரையில், நாங்கள் அதற்கு ஏற்கெனவே பழகிப் போய்விட்டோம்.....

''கொள்ளையடித்ததன்மூலம் கொழுத்துப் போயிருந்த போர் வீரர்களே எங்களுக்குக் காவலாக இருந்தனர். குணத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் எல்லோருமே ஒரே வார்ப்பில் வார்த்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவன் விடாமல் அத்தனைபேரும் முழுக்கமுழுக்க அயோக்கியர் களாகவே இருந்தனர். அவர்கள் வேடிக்கைக்காக என்ன செய்தார்கள் என்பதை இப்போது சொல்கிறேன்: காலையில் ஒரு லான்ஸ் கார்ப்போரல் முள்வேலியின் பக்கமாக வருவான்; எங்களை உணவுக்காக வரிசையாக வந்து நிற்குமாறும், முகாமின் இடதுபுற மூலையின் கடைக்கோடியில் எங்களுக்கு உணவு வழங்கப்படும் என்றும் மொழிபெயர்ப்பாளன் மூலமாக எங்களுக்குக் கூறுவான்.

''நாங்கள் எல்லோரும், அதாவது இன்னும் தமது காலால் எழுந்து நிற்கக் கூடியவர்கள் எல்லோரும் அங்கு கும்பலாகக் கூடுவோம்; அங்கு நாங்கள் ஒரு மணி, இரண்டு மணி, மூன்று மணிநேரம்கூடக் காத்திருப்போம். கடுமையான வாடைக் காற்றில் நடுநடுங்கிக் கொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான உயிருள்ள எலும்புக் கூடுகளாக நாங்கள் நிற்போம்; காத்து நிற்போம்.

''திடீரென்று காவலாளிகள் முற்றத்தின் மறுகோடியில் தலை காட்டி, குதிரை-இறைச்சித் துண்டுகளை முள் வேலிக்கு மேலாகத் தூக்கி எறியத் தொடங்குவார்கள். பசியால் வாடிய கும்பல் முழுவதும் அந்தப் பக்கமாகப் பாய்ந்து சென்று, மிருகங்களைப் போல் தமக்குள் சண்டை பிடித்துக் கொண்டு, அந்த அட்டுப் பிடித்த இறைச்சித் துண்டுகளைப் பொறுக்குவதற்காக அடிபிடிப் போரில் இறங்குவார்கள்...காவலாளிகள் இந்தக் காட்சியைக் கண்டு சிரித்து முழங்குவார்கள்; பின்னர் திடீரென்று எந்திரத் துப்பாக்கிகள் நெடுநேரம் சடசடவென்று குண்டுகளைப் பொழியத் தொடங்கும். கூட்டத்தினர் பீதியினால், இறந்தவர் களையும், காயம்பட்டவர்களையும் தரையில் கிடக்க விட்டுவிட்டு,

இடதுபுறம் நோக்கி ஓடுவர். இதன்பின் அந்த முகாமின் தலைமை வார்டனுன உயரமான ஓபர்—லெயூட்னென்ட் முள்வேலிப் பக்கமாக வருவான்; பொங்கிவரும் சிரிப்பை அடக்க மாட்டாமல் அவன் எங்களை நோக்கி இவ்வாறு கூறுவான்: 'உணவை வழங்கும்போது நீங்கள் நடந்துகொண்ட முறை அதிர்ச்சி தரத்தக்கதாகும்! இதுமாதிரி மீண்டும் நடந்தால், ரஷ்யப் பன்றிப் பிறவிகளான உங்களை நான் ஈவிரக்கமற்றுச் சுட்டுத் தள்ளுவேன். இறந்தவர்களையும், காயம்பட்டவர்களையும் அகற்றுங்கள். தமது தலைவனுக்குப் பின்னல் கும்பலாகக் கூடி நிற்கும் போர் வீரர்கள் உயிர்போகிற மாதிரி விலா வெடிக்கச் சிரித்தார்கள். அவர்கள் அவனைப் பெரிய புத்திசாலி என்று நினைத்துக்கொண்டனர்; இதெல்லாம் அவர்கள் மனத்துக்கு ஒரு வேடிக்கையாக இருந்தது.

''நாங்கள் இறந்து போனவர்களைத் தூக்கிச் சென்று, முகாமுக்கு அருகிலிருந்த பள்ளத்தில் புதைத்துவிட்டு வருவோம்...இந்த முகாமிலும் அடி கொடுப்பது வழக்கமான முறைகளில் ஒரு பகுதியாக இருந்தது. முஷ்டிகள், கம்புகள், துப்பாக்கி மட்டைகள் எல்லாமே இதற்குப் பயன்படுத்தப் பட்டன. காவலாளிகள் எங்களைக் காரணமில்லாமல் வெறுமனே அடித்தார்கள்; ஏனெனில் அவர்களுக்கு வாழ்க்கை அவ்வளவு தூரம் சலித்துப் போயிருந்தது; எங்களை அடிப்பது அவர்களுக்கு ஒரு அருமையான, வேடிக்கையான மாற்றாக இருந்தது. என் காயங்கள் குணமாகியிருந்தன; எனினும், ஈரத்திலோ அல்லது பட்ட அடிகளிலோ அவை மீண்டும் வாய்திறந்து, பயங்கரமான வேதனையை அளித்தன. என்றாலும் அப்போதும் நான் உயிர் வாழ்ந்தேன்; நம்பிக்கையை இழக்காதிருந்தேன்... நாங்கள் தரையில், சேற்று மண்ணின்மீது படுத்துறங்கினோம். கீழே பரப்பி விரித்துக் கொள்வதற்கு எங்களுக்கு வைக்கோலைக் கூட அவர்கள் கொடுக்கவில்லை. நாங்கள் ஒருவரோடொருவர் நெருக்கமாகச் சுருண்டு படுத்துக் கொள்வோம். எங்கள் மனிதக் குவியல் இரவு முழுவதும் நிலைகொள்ளாமல் புரண்டும், உருண்டும், ஊர்ந்தும், சுருண்டும், நிலைகளை மாற்றிப் படுத்துக் கிடக்கும்; ஏனெனில், சேற்று மண்ணின்மீது படுத்துக் கிடந்தவர்கள் ஈரத்தால் எவ்வாறு விறைத்து அவதிப்பட்டார் களோ, அதேபோல் குவியலின் உச்சியில் படுத்துக் கிடந்தவர் களும், குளிரால் அவதிப்பட்டனர். அது தூக்கமே அல்ல; ஒரே வேதனை.

''எனவே நாட்கள் ஒரு பேய்க் கனவைப்போல் நகர்ந்து சென்றன. நான் மேலும் மேலும் பலவீனமடைந்து வந்தேன்.

ஒரு குழந்தைகூட என்னைப் பிடித்துத் தள்ளிவிட முடிந்திருக்கும். தோலை இழுத்துப் போர்த்திய காய்ந்த குச்சிகளைப் போல் சுருங்கிப் போய்விட்ட எனது கரங்களை நான் பயபீதியோடு பார்த்தேன்; இந்நிலையில் நான் எப்படி, இங்கிருந்து எப்படித் தான் தப்பித்து ஓட முடியும் என்று எண்ணி வியந்தேன். ஆரம்பத்திலேயே தப்பியோட முயலாததற்காக என்னை நானே சபித்துக் கொண்டேன். அப்படி ஓடும்போது என்னை அவர்கள் கொன்றிருந்தால்தான் என்ன? இந்தச் சித்திரவதையாவது எனக்கு மிச்சமாகியிருக்குமே!

''மாரிப்பருவம் வந்தது. நாங்கள் இடத்தைச் சுத்தம் செய்வதற்காக, தரையில் படிந்திருந்த வெண்பனியை வாரி வழித்துக் கொட்டிவிட்டு, உறைந்த தரைமீது படுத்துறங்கினோம். முகாமில் மேலும் மேலும் ஒரு சிலரே மிஞ்சியிருந்தனர்.... இறுதியாக, விரைவிலேயே நாங்கள் எங்காவது வேலை செய்ய அனுப்பப்படுவோம் என்று எங்களிடம் கூறப்பட்டது. எங்கள் உணர்வுகள் புத்துயிர் பெற்றன. அது ஒரு மங்கலான நம்பிக்கைதான்; எனினும், எங்களில் ஒவ்வொருவரும், தாம் எப்படியாவது தப்பிச்செல்ல முடியும் என்று மீண்டும் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினோம்.

''அன்றிரவு மிகவும் குளிராக இருந்தது; என்றுமிலும் காற்று எதுவும் வீசவில்லை. பொழுது விடியப்போகும் தருணத்தில், நாங்கள் பீரங்கிப்படையின் குண்டுப் பிரயோக ஓசையைக் கேட்டோம். குவியலாகக் குவிந்து கிடந்த நாங்கள் அனைவரும் விழிப்படைந்து பரபரத்தோம். அந்த ஓசை திரும்பத் திரும்பக் கேட்டபோது யாரோ ஒருவர், 'தோழர்களே! நமது ராணுவம் தான் முன்னேறி வருகிறது!' என்று உரத்த குரலில் கூறினார்.

''கடவுளே! அப்போது ஏற்பட்ட உணர்ச்சிப் பரபரப்பைப் பார்க்கவேண்டுமே! நாங்கள் எல்லோரும் உடனே துள்ளியெழுந்து நின்றோம்; சில நாட்களாகவே எழக்கூட மாட்டாமல் இருந்தவர்களும்கூட எழுந்து நின்று விட்டார்கள். அவர்கள் உணர்ச்சிப் பரவசத்தோடு ரகசியக் குரலில் பேசினர்; உள்ளடங்கிய குரலில் விம்மியழுவதும்கூடக் கேட்டது; என் அருகிலிருந்த யாரோ ஒருவர், ஒரு பெண்ணைப்போல் விம்மி விம்மி வாய்விட்டே அழுதுவிட்டார்; நானும்தான்; நானும் கூடத்தான்... என் கன்னங்களில் கண்ணீர் உருண்டோடியது; அது பனிக்கட்டியாய் உறைந்தது... யாரோ மெலிந்த கரகரத்த குரலில் சர்வதேச கீதத்தைப் பாடத் தொடங்கினார்கள். நாங்கள் எங்களது மெலிந்த கீச்சுக் குரல்களோடு அவரோடு சேர்ந்து பாடினோம். காவலாளிகள் எந்திரத் துப்பாக்கிகளாலும் சிறு

எந்திரத் துப்பாக்கிகளாலும் எங்கள்மீது சுடத் தொடங்கினர்; அத்துடன் 'கீழே படுங்கள்' என்று எங்களுக்கு உத்தரவிடப் பட்டது. நான் பனிப் படிவத்தின்மீது என் உடம்பை நீளக் கிடத்தினேன்; ஒரு குழந்தையைப்போல் அழுதேன். ஆனந்தத் தாலும், அதேபோல் நமது மக்களின்பால் கொண்ட பெருமித உணர்ச்சியாலும் அழுதேன். நாஜிகள் நிராயுதபாணிகளாக இருந்த எங்களை, பசியால் மயங்கிக் கிடந்த எங்களைக் கொன்று தள்ளக்கூடும்; எங்களை அவர்கள் சித்திரவதை செய்து கொல்லக் கூடும்; ஆனால் அவர்கள் எங்கள் உணர்வை உருக்குலைக்க முடியாது; அதனை அவர்களால் என்றுமே செய்யமுடியாது! மேலும், அவர்கள் எங்கள் உணர்வை உருக்குலைத்து விடமுடியும் என்று நினைப்பார்களேயானால், அவர்கள் அதுபற்றி மீண்டும் ஒரு முறை நன்கு சிந்தித்துப் பார்க்கட்டும்.''

* * *

லெப்டினென்ட் கெராசிமோவுக்குத் தலைமையகத்திலிருந்து அவசர அழைப்பு வந்து விட்டதால், நான் அவரது மீதிக் கதையையும் அன்றிரவு கேட்க முடியவில்லை. சில நாட்கள் கழித்து நாங்கள் மீண்டும் சந்தித்தோம். நிலவறையில் பூஞ்சைக் காளான் மற்றும் பைன் மரப்பிசின் ஆகியவற்றின் மணம் வீசியது. லெப்டினென்ட் கெராசிமோவ் தமது தோள்களைக் குனிந்து, தமது பெரிய, இறுகி மூடிய கைகளை முழங்கால்களின் மீது போட்டவாறு பெஞ்சின்மீது அமர்ந்திருந்தார். அவர் அவ்வாறு அமர்ந்திருந்ததை நான் பார்த்துக் கொண்டிருந்த போது, இவர் காவல் முகாமில் இருந்த காலத்தில், வாய் பேசாமல், தமது கசப்பான, பயனற்ற சிந்தனைகளிலேயே மூழ்கியவராய் மணிக்கணக்காக இப்படியே இருந்து அதற்கே பழகிப் போயிருக்க வேண்டும் என்று என்னால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

''நான் எப்படித் தப்பித்து வந்தேன் என்று நீங்கள் தெரிய விரும்புகிறீர்கள். இல்லையா? அதுபற்றிக் கூறுகிறேன்'' என்று அவர் என்னிடம் கூறினார்: ''நமது பீரங்கிப் பிரயோகத்தைக் கேட்ட அன்றிரவுக்குப்பின் விரைவிலேயே எங்களை அரண்கள் அமைக்கும் வேலையில் ஈடுபடுத்தக் கொண்டு சென்றனர். பனி உருகும் காலம் தொடங்கிவிட்டது; மழை பெய்தது. முகாமி லிருந்து வடக்கு நோக்கி எங்களை நடத்திச் சென்றார்கள். அப்போதும் அதேமாதிரிதான் மீண்டும் நிகழ்ந்தது; அதாவது யாராவது களைப்பினால் மயங்கி விழுந்தால், அவரைச் சுட்டுத் தள்ளி, அவரை அங்கேயே தரையில் கிடக்குமாறு விட்டுச் சென்றனர். ஒருவர் ஓர் உறைந்துபோன உருளைக் கிழங்கைப்

பொறுக்கியெடுத்ததற்காகச் சுட்டுக் கொல்லப்பட்டார். நாங்கள் ஓர் உருளைக்கிழங்கு வயலைக் கடந்து சென்றிருந்தபோது, இந்த மனிதர்—அவர் பெயர் கொஞ்சார்; அவர் ஓர் உக்ரேனியர்—அந்தப் பாழாய்ப்போன உருளைக்கிழங்கைக் கையால் பொறுக்கியெடுத்து, அதனை மறைத்து வைக்க முயன்றார். அவர் இவ்வாறு செய்வதை ஜெர்மன் காவலாளி கண்டுவிட்டான்; அவன் ஒரு வார்த்தைகூடப் பேசாமல், கொஞ்சாரின் பக்கமாக வந்து, அவரது தலைக்குப் பின்னால் சுட்டுத் தள்ளினான். எங்கள் வரிசையை நிற்குமாறும் ஒரே வரிசையாய் நிற்குமாறும் உத்தரவிடப்பட்டது. அந்தக் காவலாளி எங்களைச் சுற்றியுள்ள வயல்களைக் கையைவீசிச் சுட்டிக் காட்டியவாறே, 'இவையாவும் ரீச்சின் சொத்துக்களாகும். உங்களில் எவரேனும் அனுமதியின்றி எதையேனும் எடுத்தால், அவர்கள் சுட்டுக்கொல்லப்படுவார்கள்' என்று கூறினான்.

"நாங்கள் ஒரு கிராமத்தின் வழியாக நடந்து சென்றபோது, அங்கிருந்த பெண்கள் எங்களை நோக்கி ரொட்டித் துண்டுகளையும், அவித்த உருளைக்கிழங்குகளையும் விட்டெறிந்தனர். எங்களில் சிலர் அவற்றைப் பிடித்துக் கொள்ளவோ அல்லது பொறுக்கியெடுத்துக் கொள்ளவோ முடிந்தது; ஏனையோர் அத்தனை அதிருஷ்டசாலிகளாக இல்லை. ஏனெனில் எங்களது காவலாளிகள் ஜன்னல்களை நோக்கிச் சுட்டனர்; எங்களையும் விரைவாக நடந்து செல்லுமாறு உத்தரவிட்டனர். அந்தக் கிராமத்திலுள்ள பிள்ளைகள்—இளம் பிள்ளைகள் பயமறியாதவர்கள் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே—அவர்கள் எங்களுக்கு மிகவும் முன்னால் ஓடிச் சென்று, ரோட்டின்மீது ரொட்டிகளைப் போட்டு வைத்தனர்; நாங்கள் அதற்குப் பக்கத்தில் வரும்போது அதனைப் பொறுக்கியெடுத்துக் கொள்ள முடியும் என்பதற்காகவே அவர்கள் இவ்வாறு செய்தனர். இவ்வாறு உணவுப் பொருள்களைப் பெற்ற ஒரு சில அதிருஷ்டசாலிகளில் நானும் ஒருவன். நான் ஒரு பெரிய உருளைக் கிழங்கைப் பிடித்து வைத்திருந்தேன். அதில் ஒரு பாதியை எனக்கு வலது புறத்தில் வந்தவரிடம் கொடுத்தேன். நாங்கள் அதனைத் தோலுடனேயே தின்றோம். என் வாழ்வில் நான் அத்தனை ருசிமிக்க உணவை என்றுமே உண்டதில்லை!

"அரண்கள் காட்டிலேயே கட்டப்படவிருந்தன. காவலாளிகள் இருமடங்காக்கப்பட்டனர். எங்களிடம் மண்வெட்டிகள் வழங்கப்பட்டன. நான் அவர்களது அரண்களை நாசமாக்கத்தான் விரும்பினேனே தவிர, அவற்றைக் கட்டி முடிக்க விரும்பவில்லை!

''நான் அன்றே, பொழுது சாய்வதற்கு முன்பே, அங்கிருந்து ஓடிவிடத் தீர்மானித்தேன். நாங்கள் தோண்டிக் கொண்டிருந்த குழியைவிட்டு நான் மெல்ல ஊர்ந்து வெளியே வந்தேன்; என்னிடமிருந்த மண்வெட்டியை எனது இடது கையில் தூக்கிக்கொண்டு, அங்கிருந்த காவலாளியை நோக்கிச் சென்றேன்; எங்கள் கோஷ்டிக்குக் காவலாக நின்றவன் அவன் ஒருவன் மட்டும்தான்; ஏனெனில் ஏனைய ஜெர்மானியர்கள் அனைவரும், பதுங்கு குழிகளைத் தோண்டிக் கொண்டிருந்த கைதிகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

'' 'பாருங்கள் என் மண்வெட்டி உடைந்து போய்விட்டது' என்று முணுமுணுத்தேன். முதல் அடியிலேயே நான் அவனைக் கீழே அடித்து வீழ்த்தத் தவறிவிட்டேனென்றால், நான் இறந்த மாதிரிதான் என்பதை உணர்ந்தேன். என் முகத்தில் தோன்றிய முகபாவத்திலிருந்து அவன் ஏதோ சந்தேகப்பட்டதாகத் தோன்றியது; ஏனெனில் அவன் தனது சிறு எந்திரத் துப்பாக்கியின் தோள்பட்டைப் பட்டியை உலுக்கத் தொடங்கினான். அந்தத் தருணத்தில்தான் நான் அவனை எனது மண்வெட்டியால் முகத்துக்கு நேராகத் தாக்கினேன். நான் அவனது தலையில் தாக்க முடியவில்லை; ஏனெனில் அவன் தனது தலைக் கவசத்தை அணிந்திருந்தான். என்றாலும், நான் கொடுத்த அடி மிகவும் பலமாகத்தான் விழுந்தது; மறுகணமே அவன் மூச்சுப் பேச்சற்றுச் செத்து விழுந்தான்.

''இப்போது என்னிடம் ஒரு சிறு எந்திரத் துப்பாக்கியும், மூன்று தோட்டாப் பைகளும் இருந்தன. நான் ஓடத் தொடங்கினேன்; அப்போதுதான் என்னால் ஓட முடியாது என்பதைக் கண்டு கொண்டேன். என் உடம்பில் பலமே இல்லை; நிலைமை அப்படித்தான் இருந்தது. நான் மூச்சு வாங்கிக் கொள்வதற்காகச் சற்று நின்றேன்; பிறகு நத்தை வேகத்தில் சென்றவாறு மீண்டும் முன்னேறினேன். பள்ளத்தாக்கின் மறுபுறத்தில் காடு அடர்த்தியாகிக் கொண்டே சென்றது; அதனை நோக்கித்தான் சென்று கொண்டிருந்தேன். நான் எத்தனை முறை கீழே விழுந்தேன், மீண்டும் எழுந்து நின்றேன், மீண்டும் விழுந்தேன் என்பதெல்லாம் எனக்கு நினைவில்லை. எனினும் அங்கிருந்து மேலும் மேலும் தொலைவில் விலகிச் சென்று கொண்டேயிருந்தேன். நான் களைப்பினால் விம்மிப் பொருமிக் கொண்டும் மூச்சுவிடத் திணறிக் கொண்டும், குன்றுக்கு மறுபக்கத்திலிருந்த காடுகளின் வழியே புகுந்து முன்னேறிக் கொண்டிருந்தபோது, எனக்குப் பின்னால் வெகுதொலைவில் சிறு எந்திரத் துப்பாக்கிக் குண்டுகளின் சடசடவென்ற சத்தத்தையும், உரத்த கூச்சல்

கூடாயும் கேட்டேன். இப்போது என்னைப் பிடிப்பது ஒன்றும் அத்தனை சுலபமல்ல.

''பொழுது இருட்டிக் கொண்டே வந்தது. ஜெர்மானியர்கள் என்னைப் பின் தொடர்ந்து வந்துவிட்டால், நான் என்னிட மிருந்த தோட்டாக்களில் கடைசித் தோட்டாவைத் தவிர, ஏனையவை எல்லாவற்றையும் அவர்கள் மீதே பிரயோகித் திருப்பேன். கடைசித் தோட்டாவை எனக்காகப் பத்திரப் படுத்தியிருப்பேன். இந்த எண்ணம் எனக்கு ஊக்கத்தைத் தந்தது; நான் மிகுந்த எச்சரிக்கையோடு மேலும் முன்னேறிச் சென்றேன்.

''நான் அன்றிரவைக் காட்டில் கழித்தேன். சமீபத்திலேயே ஒரு கிராமம் இருப்பதைக் கண்டு கொண்டேன்; என்றாலும் நான் அங்கு செல்லவில்லை. அங்கு சென்று எதிரியிடம் சிக்கிக் கொள்ளக் கூடாதே என்ற பயம்.

''கொரில்லாப் படைவீரர்கள் என்னை மறுநாள் கண்டெடுத்தார்கள். நான் இரண்டு வார காலம் அவர்களது நிலவறையில் படுக்கையில் கிடந்து கழித்தேன்; அப்போது நான் எனது இழந்த பலத்தையும் திரும்பப் பெற்று வந்தேன். நான் எனது கட்சிக் கார்டை அவர்களிடம் காட்டி னேன் என்றபோதிலும், முதலில் அவர்கள் என்னை ஓரளவு சந்தேகத்துடன்தான் நடத்தினர்; நான் காவல் முகாமில் இருந்தபோதே, எனது கட்சிக் கார்டை, எனது கம்பளிக் கோட்டின் மடிப்புக்குள் வைத்துத் தைத்து மறைத்து வைத்திருக்க எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்தேன். அவர்களது நடவடிக்கைகளில் பங்கெடுக்கும் அளவுக்கு எனக்கு உடல் தேறிய பிறகு, அவர்கள் என்பால் காட்டி வந்த போக்கை முற்றிலும் மாற்றிக் கொண்டு விட்டனர். அங்கிருந்த போதுதான் நான் கொன்று தள்ளிய நாஜிகளுக்கும் நான் கவனமாகக் கணக்கு வைத்துக் கொள்ளத் தொடங்கினேன். அவர்களின் எண்ணிக்கை படிப்படியாக நூறை எட்டிக் கொண்டிருந்தது.

''பிப்ரவரி மாதத்தில் கொரில்லாப் படைவீரர்கள் என்னை முன்னணி எல்லைக்கு அப்பால் கூட்டிச் சென்றனர். நான் அங்கு சுமார் ஒரு மாதகாலம் ஆஸ்பத்திரியில் இருந்தேன். அங்குதான் எனது தோளில் புகுந்திருந்த குண்டுச் சிதறல் அகற்றப்பட்டது. முகாமிலிருந்த போது எனக்கு ஏற்பட்ட வாத நோயும், மற்றும் எனது பிற நோய்களும், யுத்தத்துக்குப் பின்னரும்கூட இருந்துதான் வரும். என்னை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே அனுப்பியபோது, எனது சொந்த ஊருக்குச் சென்று உடம்பைத்

தேற்றிக் கொள்ள என்னை அனுமதித்தனர். நான் அங்கு ஒரு வாரம்தான் இருந்தேன்; அதற்குமேல் என்னால் அங்கு இருக்க முடியவில்லை. நான் ராணுவத்தை நினைத்து ஏங்கினேன்; ஏனெனில் நீங்கள் என்னதான் சொன்னாலும், முடிவுகாலம் வரும் வரையிலும் எனக்குரிய இடம் இதுதான்.''

* * *

நிலவறையின் வாசலில் நாங்கள் ஒருவருக்கொருவர் விடை பெற்றுக் கொண்டோம். சூரிய ஒளியால் பிரகாசித்துக் கொண்டிருந்த வெட்டவெளியை ஏதோ சிந்தனை வயப்பட்ட வராகக் கூர்ந்து நோக்கிய வண்ணம் லெப்டினென்ட் கெராசிமோவ் இவ்வாறு கூறினார்:

''நாம் சரியான முறையில் போராடக் கற்றுக் கொண்டுள் ளோம்; பகைக்கவும் அன்பு செலுத்தவும் கற்றுக் கொண்டுள் ளோம். எல்லா உணர்ச்சிகளையும் கூராக்குவதற்கு யுத்தம் ஓர் அற்புதமான உரை கல்லாகும். அன்பையும், பகைமையையும் அருகருகே வைப்பது சாத்தியமே அல்ல என்று ஒருவர் கருதக் கூடும். ஒரு மொட்டை வண்டிக் குதிரையையும் பயந்த சுபாவம் கொண்ட பெண் மானையும் ஒன்றுகச் சேர்த்து ஒரே வண்டியில் பூட்ட முடியாது எனக் கூறும் கதையை நீங்கள் அறிவீர்கள். ''ஆனால், பாருங்கள், நாம் அதனைச் செய்து முடித்து விட்டோம். இப்போது இரண்டும் சேர்ந்து நன்றுக இழுத்துச் செல்கின்றன. எனது நாட்டுக்கும் எனக்கும் நாஜிகள் இழைத்த கொடுமைக்காக நான் அவர்களைப் பகைக்கிறேன்; நான் என் நாட்டு மக்களை என் இதயமெல்லாம் நிறைய நேசிக்கிறேன்; நாஜிகளின் கீழ் அவர்கள் அவதிப்படுவதை நான் விரும்பவில்லை. அன்பு, பகைமை என்ற இந்த இரு உணர்ச்சிகளும்தான் என்னை —ஏன், சொல்லப்போனால் நம் எல்லோரையும்—இத்தனை மூர்க்க மான ஆவேசத்தோடு போரிடுமாறு நிர்ப்பந்திக்கின்றன. நாம் நமது நாட்டின்பாலுள்ள அன்பை நமது இதயங்களில் சுமந்து கொண்டிருக்கிறோம்; நமது இதயங்கள் துடிக்கின்ற வரையிலும் அதுவும் அங்கேயே இருந்துவரும்; நமது பகைமையுணர்ச்சியை நாம் நமது துப்பாக்கிச் சனியன்களது முனைகளின் மீதுதான் எப்போதும் சுமந்து செல்கிறோம். இந்தத் தடபுடலான வார்த்தைகளைப் பிரயோகித்ததற்காக என்னை மன்னித்து விடுங்கள்; என்றாலும், நான் உண்மையில் இப்படித்தான் உணருகிறேன்'' என்று அவர் கூறி முடித்தார்; அவரை நான் அறிய வந்தபின் முதன்முறையாக அப்போதுதான் அவர் என்னை நோக்கி, ஒரு குழந்தையைப் போல் எளிமையும் இனிமையும் மிக்கவிதத்தில் புன்னகை புரிந்தார்.

மேலும், எவ்வளவோ, துன்ப துயரங்களை அனுபவித் திருந்தும், ஒக் மரம் போல் இன்னும் வலிமை மிக்கவராக விளங்கிய அந்த முப்பத்திரண்டு வயது மனிதரின் நெற்றிப் பொருத்துக்களில் பனி வெள்ளை நிறமான நரைமயிர் மலிந் திருப்பதையும் அப்போதுதான் நான் முதன் முறையாகக் கவனித்தேன். எண்ணற்ற துன்பங்களாலும் வேதனையாலும் ஏற்பட்டிருந்த இந்த வெண்மையானது, அவரது பக்கவாட்டுத் தொப்பியோடு ஒட்டித் தொங்கிக் கொண்டிருந்த ஒரு நூலாம் படை, அவரது முடியைப் போய்த் தொட்டதுமே மறைந்து போய்விட்ட அளவுக்கு நான் முயன்று முயன்று பார்த்தாலும், அது என் கண்ணுக்குப் புலப்படாத அளவுக்கு, அத்தனை சுத்த மான வெள்ளையாக இருந்தது.

1942

அமெரிக்க நண்பர்களுக்கு ஒரு கடிதம்

இந்தக் கொடூரமான, சிரமமான போரில் நாங்கள் கிட்டத் தட்ட ஈராண்டுக் காலமாகப் போராடி வந்துள்ளோம். எதிரியின் முன்னேற்றத்தை நாங்கள் தடுத்து நிறுத்தி அவர்களைப் பின் வாங்கச் செய்துள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆயினும், இந்தப் போரின் காரணமாக, நாங்கள் ஒவ்வொரு வரும் அனுபவித்து வருந்தும் சிரமங்களைப்பற்றி நீங்கள் போதிய அளவுக்குத் தெரிந்து கொள்ளாமலிருக்கலாம். எங்களது நண்பர்கள் அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

யுத்த நிருபர் என்ற முறையில் நான் தெற்கு, தென்மேற்கு, மேற்குப் போர் முனைகளில் இருந்திருக்கிறேன். தற்போது நான் அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினர்கள் என்ற நாவலை எழுதி வருகிறேன்; அதில் தமது சுதந்திரத்துக்காகப் போராடி வரும் மக்களது போராட்டம் எவ்வளவு கடினமானது என்பதைப் புலப்படுத்த விரும்புகிறேன். அந்த நாவல் இன்னும் பூர்த்தி யடையவில்லை; எனவே நான் ஓர் எழுத்தாளன் என்ற முறையில் லாமல், வெறுமனே நேசநாடுகள் ஒன்றின் பிரஜை என்ற முறையில் உங்களிடம் பேச விரும்புகிறேன்.

ஒரு நாடு மற்றொரு நாட்டை முற்றிலும் துடைத்தெறியவும் அல்லது விழுங்கித் தீர்க்கவும் முனையும் ஒரு முயற்சிக்குரிய அத்தனை கோரத்தோடும் யுத்தம் எங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் புகுந்துள்ளது. போர் முனையில் நிகழ்ந்து வருபவை யாவும், ஒரு முழுமையான போரில் நிகழ்பவை யாவும், எங்கள்

அனைவரது வாழ்க்கையிலும் ஓர் அழிக்க முடியாத முத்திரையை ஏற்கெனவே பதித்துள்ளது. நான் எனது தாயை இழந்து விட்டேன்; எந்தவிதமான போர்த் தந்திர முக்கியத்துவமும் இல்லாத எங்கள் கிராமத்தின் மீது தொடுக்கப்பட்ட விமானத் தாக்குதலின் போது, ஒரு ஜெர்மன் விமானம் வீசிய குண்டினால் அவள் கொல்லப்பட்டுவிட்டாள். இந்த நடவடிக்கை கொள்ளைக் காரக் கும்பல்களுக்கே பொருத்தமான ஒரு நோக்கத்தையே கொண்டிருந்தது. அதாவது ஜெர்மன் ராணுவம் முன்னேறி வரும் நிலையில், மக்கள் தமது கன்றுகாலிகளைக் கிழக்கு நோக்கி ஓட்டிச் செல்ல முடியாதவாறு தடுக்கும் விதத்தில், அவர்களைச் சிதறவடிப்பதுதான் அந்த நோக்கமாகும். ஜெர்மன் குண்டுகள் எனது வீட்டையும், எனது நூலகத்தையும் நாசமாக்கியுள்ளன. நான் எழுத்தாளர்களும் சக கிராமவாசிகளுமான பல நண்பர்களை ஏற்கெனவே இழந்து விட்டேன்; அவர்கள் ப்ரார்முனையில் கொல்லப்பட்டனர். நெடுங்காலமாக நான் எனது குடும்பத் தோடு தொடர்பு கொள்ளாமலே இருந்து வந்தேன்; இந்தச் சமயத்தில் என் மகனும் நோய்வாய்ப் பட்டிருந்தான். அவர்களுக்கு நான் எந்த விதத்திலும் உதவ முடியவில்லை. ஆயினும், என்னதான் இருந்தாலும், இவை தனிப்பட்ட சிரமங்களே; சொந்தத் துயரங்களே; இதனையும் எங்களிற் பலரும் அறிவோம். இந்தத் துயரங்கள் யாவும், தமது வாழ்க்கையில் யுத்தம் புகும்போது மக்கள் அனுபவித்து வருந்த வேண்டிய ஒரு பொதுவான, நாடு தழுவிய பெருந்துயரை அதிகமாக்கி விடுகின்றன. எந்த எழுத்தாளரும் எந்தவொரு கலைஞரும் இதுவரையில் உலகுக்கு எடுத்துச் சொல்லிவிட இயலாததாகவுள்ள மக்களின் துன்ப துயரங்களை, எங்களது சொந்த, தனிப்பட்ட துயரங்கள் எங்களிடமிருந்து மூடிமறைத்து விட முடியாது.

எங்களது நாட்டின் மிகப்பரந்த நிலப்பரப்புக்களையும், எங்களது மக்களில் பல்லாயிரக்கணக்கான பேர்களையும் எதிரி—வரலாறு இதற்குமுன் என்றுமே கண்டறியாத மிகமிகக் கொடூர மான எதிரி—கைப்பற்றியிருக்கிறான் என்பதை நீங்கள் நினைவு கூற வேண்டும். ஹன்களும், மங்கோலியர்களும், மற்றும் பிற காட்டுமிராண்டித்தனமான இனத்தவர்களும் நடத்திய ரத்த பயங்கரமான படையெடுப்புக்களைப் பற்றிப் பண்டைய வரலாறுகள் எங்களுக்குக் கூறுகின்றன. அவையனைத்தும் எங்களுக்கு எதிரான இந்தப் போரில் ஜெர்மன் நாஜிகள் இழைத்துள்ள வன்கொடுமைகளுக்கு முன்னால் மங்கிப்போய் விடுகின்றன. கிராமங்களும் வீடுகளும் தரைமட்டமாக்கப்

பட்டுள்ளதை நான் என் கண்களாலேயே கண்டுள்ளேன்; அந்த வீடுகள் எனது நாட்டு மக்களுக்கு, எனது நூல்களில் வரும் கதாநாயகர்களுக்குச் சொந்தமானவை; அழைதைகளையும், குடியிருக்க வீடுகள் இல்லாமல் விடப்பட்ட மக்களையும் நான் கண்டிருக்கிறேன்; படுகோரமாகச் சிதைத்துச் சின்னபின்னமாக்கப்பட்ட உடல்களையும், உருக்குலைந்துபோன வாழ்க்கைக்கு உள்ளான ஆயிரக்கணக்கான பேர்களையும் நான் கண்டிருக்கிறேன். இவை யாவற்றையும் தமது வெறிபிடித்த தலைவனின் உத்தரவின் பேரில் ஹிட்லரின் படைகளே எங்கள் நாட்டுக்குக் கொண்டு வந்துள்ளன.

ஹிட்லரிசம் உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும்—உங்கள் நாடு, உங்கள் வீடு, உங்கள் வாழ்க்கை ஆகியவற்றுக்கும் கூட—இதே கதியை ஏற்படுத்தவே தயாராகி வருகிறது.

நீங்கள் வருங்காலத்தை ஒரு விவேகமிக்க நோக்கோடு ஏறிட்டுப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்களது நட்புறவான, தன்னலமற்ற உதவியை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். பொருள்களை உற்பத்தி செய்வதோடும், முக்கியமாக அவற்றை எங்கள் நாட்டுக்கு வழங்குவதோடும் சம்பந்தப்பட்ட உங்கள் முயற்சிகளின், உங்கள் சிரமங்களின் அளவை நாங்கள் அறிவோம்; அவற்றை நாங்கள் மதிக்கிறோம். எங்களது டான் ஸ்டெப்பி வெளிகளில் உங்களது டிரக் வண்டிகளை நான் கண்டிருக்கிறேன்; எங்களது கிராமங்களின்மீது தாக்குதல் நடத்திய விமானங்களோடு உங்களது அற்புதமான விமானங்கள் போரிடுவதையும் நான் கண்டிருக்கிறேன். எங்கள் நாட்டில் உங்களது நட்புறவான ஆதரவைப் பற்றி அறியாத நபர் ஒருவர்கூடக் கிடையாது.

என்றாலும் நான் உங்களோடு மிகவும் பட்டவர்த்தனமாகவே பேச விரும்புகிறேன்; ஏனெனில் யுத்தம் எங்களுக்குப் பேசக் கற்றுக் கொடுத்துள்ளது. எங்கள் நாடும், எங்கள் மக்களும் இந்தப் போரில் படுபயங்கரமாகக் காயமடைந்துள்ளனர், இப்போதுதான் மோதல் மும்முரமடையத் தொடங்யுள்ளது. மேலும், நாங்கள் எங்களோடு எங்கள் நண்பர்களும் தோளோடு தோள் சேர்ந்து நின்று போரிடுவதைக் காண விரும்புகிறோம். போர் புரியவருமாறு நாங்கள் உங்களை அறைகூவி அழைக்கிறோம். நாங்கள் உங்களுக்கு நமது இரு நாடுகளின் நட்புறவை மட்டுமல்லாமல், போர் வீரர்களின் நட்புறவையும் வழங்குகிறோம்.

பிரதேச ரீதியிலான காரணங்களினால் நாம் உண்மையிலேயே தோளோடு தோள் சேர்ந்து நின்று போராட முடியா

விட்டால், உங்களது படைகளின் வலிமை மிக்க குத்துக்கள், எங்கள் நாட்டின்மீது படையெடுத்துள்ள எதிரியின் முதுகில் பாய்வதையேனும் நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம்.

உங்களது விமானப் படை நமது பொது எதிரியின் தொழில் துறைக் கேந்திரங்களின்மீது மிகவும் பயன்மிக்க முறையில் குண்டு வீசித் தாக்கி வருகிறது என்பதை நாங்கள் அறிவோம். என்றாலும், போரில் நல்லவிதமாகப் போரிட வேண்டுமென்றால், அதில் எல்லாப் படைகளும் சேர்ந்தாக வேண்டும். எங்கள் மக்களையும் உங்கள் மக்களையும் தீராத கடும் பகைமையுணர்ச்சியோடு பகைத்துவரும் ஒரு வலிமையும் தந்திரமும் மிக்க எதிரியை நாம் எதிர்நோக்கியுள்ளோம். இந்த யுத்தத்தில் எவரும் தமது கரங்களை ரத்தத்தில் நனைக்காமல் இதிலிருந்து மீண்டு கரையேற முடியாது. யுத்தம் ரத்தத்தையும் வியர்வையும் கோருகிறது. அவற்றை வழங்க மறுத்தால், அது வாங்கும் பலி இரட்டிப்பாகி விடும். தயக்கம் ஈடுசெய்ய முடியாத விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். உங்கள் உறவினர்களின் ரத்தத்தை உங்கள் வீட்டு வாசற்படியில் நீங்கள் இன்னும் கண்டதில்லை. நான் கண்டிருக்கிறேன். எனவே இத்தனை பட்டவர்த்தனமாக உங்களிடம் பேசும் உரிமையை நான் பெற்றிருக்கிறேன்.

1943

வரலாறு என்றுமே கண்டறியாத அத்தகைய வெற்றி

(கட்டுரைப் பகுதி)

...உலக வரலாற்றில் எந்தவொரு போருமே, 1941-1945 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த இந்தப் போரைப்போல் இத்தனை ரத்த பயங்கரமாகவும் படுநாசகரமாகவும் இருந்ததில்லை; அதேபோல் உலகில் எந்தவொரு ராணுவமும், எங்களது செஞ்சேனை பெற்றது போன்ற அத்தகைய அற்புதமான வெற்றிகளை என்றுமே பெற்றதில்லை; இதனைப்போல் கீர்த்தி, வலிமை, மகத்துவம் ஆகியவற்றின் இத்தகைதொரு பேரொளியில் குளித்தெழுந்து, மனிதகுலத்தின் வியந்து போற்றும் கண்களுக்கு முன்னால் இவ்வாறு காட்சியளித்ததும் இல்லை.

எங்கள் படைகள் கிழக்குப் பிரஷ்ஷியாவில், எய்த்குனென் என்ற இடத்தைக் கைப்பற்றியபோது, அந்நகரின் ரயில்வே நிலையக் கட்டிடச் சுவரில் எழுதப்பட்டிருந்த ''பெர்லினுக்கு இன்னும் 741.7 கிலோமீட்டர் தூரம்'' என்ற ஜெர்மன் வாசகத்தை அடுத்து, ரஷ்ய மொழியிலும் ஒரு வாசகம் எழுதப்

பட்டது. அந்த வாசகத்தை எங்களது போர் வீரர்களில் ஒருவர் தான் கொட்டை எழுத்தில் எழுதியிருந்தார்: ''எவ்வாறுயினும் நாங்கள் அங்கு போயே தீருவோம்.'' அதன்கீழ் அவரது கையெழுத்தும் இருந்தது: செர்ஜேசோவ்.

ஒரு ரஷ்யப் போர்வீரர் எழுதிய இந்த எளிமையான வார்த்தைகள், உண்மையிலேயே மகோன்னதமான தன்னம் பிக்கையோடு ஒலிக்கவில்லையா? மேலும் இந்த ரஷ்யப் போர் வீரர்கள் பெர்லினுக்குப் போய்ச் சேரவும் செய்தார்கள்; அது மட்டுமல்ல. ஹிட்லரின் அந்தத் தலைநகரின் இடிபாடுகளின்கீழ், அவனது வெறி பிடித்த உலகாதிக்கக் கனவுகளையும் நிரந்தர மாகப் போட்டுப் புதைக்கவும் செய்தனர்.

நூற்றாண்டுகள் கடந்து செல்லும்; என்றாலும் எங்களது வீரஞ்செறிந்த செஞ்சேனையை மனிதகுலம் நன்றியுணர்வோடு என்றென்றும் நினைவில் வைத்திருக்கும்.....

1945

வெஷென்ஸ்காயா தொகுதி வாக்காளர்களுக்கு ஆற்றிய உரை

தோழர்களே!

சோவியத் யூனியனது சுப்ரீம் சோவியத்துக்கு என்னை உங்களது பிரதிநிதியாக நியமித்ததன் மூலம் நீங்கள் எனக்குச் செய்துள்ள மாபெரும் கௌரவத்துக்கும், நீங்கள் காட்டியுள்ள நம்பிக்கைக்கும் உங்களுக்கு நன்றி கூற அனுமதியுங்கள்.

எனது சொந்த ஸ்தானித்ஸாவின் மக்களான உங்கள் முன் தோன்றுவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. நீங்கள் எல்லோரும் என்னை அறிவீர்கள்; நானும் உங்கள் ஒவ்வொருவரையும் மிக நன்றாக அறிவேன். எனவே என்னைப்பற்றி உங்களுக்குக் கூற வேண்டிய அவசியமே எனக்கு இல்லை. உங்களையும் என்னையும் எதிர் நோக்கியுள்ள பணிகளைப் பற்றி மட்டும் நான் சில வார்த்தைகள் கூறுகிறேன். போரால் விளைந்த நாசங்களை அதி விரைவில் சீர்ப்படுத்த வேண்டும் என்று சோவியத் அரசாங்கமும் நமது கட்சியும் நம்மைக் கோருகின்றன. பொருளாதாரப் புனர் வாழ்வுக்கு நாம் நமது முயற்சிகளை ஈடுபடுத்தியாக வேண்டும். விவசாயத்தின் புனர்வாழ்வு நமது தாயகத்தின் ஆற்றல் வளத்தை அதிகரிக்கச் செய்யும்.

ஏனைய சோவியத் மக்கள் அனைவரோடும் சேர்ந்து நாம் சமாளிக்கவிருக்கும் பொதுவான பிரச்சினைகளைத் தவிர, நமது வட்டாரத்தின் முன்னுள் கீர்த்தியையும் எழிலையும் மீட்க

வேண்டிய நமது சொந்தப் பணியும் நமக்கு உள்ளது. வெஷென்ஸ்கி வட்டாரத்தின் மீட்புப் பணிக்காக அரசாங்கம் ஏராளமான பணத்தை ஒதுக்கியுள்ளது; என்றாலும் நாம் நமது உள்ளூர்ச் சாத்தியப்பாடுகளையும் தலை சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்ள எல்லா முயற்சிகளையும் செய்தாக வேண்டும். நாசமடைந்து விட்ட நமது வெஷென்ஸ்காயா ஸ்தானித்ஸாவை, போருக்கு முன்னால் அது இருந்ததைப் போல், எழில்மிக்க, நகரமயமான இடமாக, ஓரிரண்டு ஆண்டுகளுக்குள் மாற்றி யமைப்பதே நமது பணியாகும்.

ஒரு பிரதிநிதிக்கு அவர் ஆற்றவேண்டிய சிக்கலான கடமைகள் பல உள்ளன. ஒரு பிரதிநிதி தமது வாக்காளர்களின் வேண்டுகோள், முறையீடுகள் அனைத்தையும் கவனமாகக் காது கொடுத்துக் கேட்க வேண்டும். ஒரு பிரதிநிதி தமது சொந்தத் தொகுதியில் அரசாங்கத்தின முடிவுகள் அமலாவதை ஆர்வத் தோடு கண்காணித்து வரும் செயலூக்கமிக்க செயல்வீரராக இருக்க வேண்டும்.

நான் உங்கள் நலன்களுக்குப் பாடுபட உறுதி கூறுகிறேன். எனது பிரதானமான தொழில் எழுதுவதுதான்; என்னைப் பற்றி நீங்கள் அவமானப்பட வேண்டிய அவசியமே இல்லாத விதத்தில், நான் இலக்கியத் துறையில் நல்ல பணியாற்றவும் உறுதி கூறுகிறேன்.

1946

தாயகத்தைப் பற்றி ஒரு வார்த்தை

(என்ற கட்டுரையிலிருந்து)

இது மாரிக்காலம். இரவு நேரம்...

எனது அன்பார்ந்த நாட்டவரே, நண்பரே, இந்த இரவின் தனிமையிலும் அமைதியிலும் உங்கள் கண்களை மூடுங்கள்; உங்கள் நினைவு உங்களை அண்மைக் கடந்த காலத்துக்குக் கொண்டு செல்லட்டும். அப்போது உங்கள் மனக் கண்ணைக் கொண்டு நீங்கள் இந்தக் காட்சிகளைக் காண்பீர்கள்:

பைலோ ரஷ்யாவின் காடுகள் மற்றும் சதுப்பு நிலங்கள்; சுருங்கிப்போன மலைப் பூண்டுச் செடிகள் மண்டி வளர்ந்துள்ள, காலியான, நெடுங்காலத்துக்கு முன்பே கைவிடப்பட்ட நிலவறைகள்; துரு நிறம் படைத்த தண்ணீர் நிரம்பிச் சரிந்து கொண்டிருக்கும் பதுங்கு குழிகள் மற்றும் மறைவிடங்கள்; இவற்றுக்கடியில் கிடக்கும் களிம்பேறிப்போன துப்பாக்கித்

தோட்டாப் பெட்டிகளின் மங்கிய பளபளப்பு; இவை யாவற்றுக்கும் மேலாகப் பயந்து பயந்து சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் குளிர்மிக்க வெண்பனி மூட்டம்...

ஸ்மோலென்ஸ்கிலும் மாஸ்கோவின் சுற்றுப்புறக் காட்டிலும் குண்டுச் சிதறல்களால் மேனியெங்கணும் வெட்டுண்டு நிற்கும் பைன் மரங்கள் உள்ளடங்கிய குரலில் அழுது புலம்புகின்றன; வேகமாக வீசும் வட காற்றுக்கு முன்னால் தமது தலைகளைத் தாழ்த்தி வணங்குகின்றன.

லெனினது மரணமில்லா நகரத்தின் சுற்றுப்புறத்தின்மீது, நமது மக்கள் புனிதமானதாகப் போற்றும் இந்த நிலத்தின் மீது போரினால் ஏற்பட்ட கொடிய வடுக்களை மூடி மறைக்கத் துடிப்பதுபோல், பஞ்சுபோன்ற வெண்ணிறப் பனித்துகள்கள் துரிதமாக விழுகின்றன.

எண்ணிறந்த குண்டுகளால் திரும்பத் திரும்ப உழுது தள்ளப் பட்டதும், போரின் இடிமுழக்கத்தை இன்னும் நினைவில் வைத்துக் கொண்டிருப்பதுமான உக்ரேன் நாட்டின் புத்துயிரூட்டப் பெற்ற வயல்களின் குறுக்கே சூரியனின் நிழல்கள் வழுக்கிச் செல்கின்றன.

குர்ஸ்க், ஓரெல், வோரோனேஷ், துலா ஆகியவற்றை— பல்லாயிரக் கணக்கான டாங்கிகளின் தாங்கிக் கொள்ள முடியாத பெரும் பளுவின் கீழ் சிக்கி, முழுமையாக மூன்றரைண்டுக் காலம் முனகிக் கொண்டிருந்த இந்தத் தொன்மையான ரஷ்யப் பிரதேசத்தைச்—சுற்றிலும், சாய்வாக வீழும் கடுங்குளிர்மிக்க பனித் துகள்களைக் காற்று அடித்து வீசிக் கொண்டு செல்கிறது. உறைபனியினால் கருகிப்போன கடைசி இலைகள் மரங்களிலிருந்து உதிர்ந்து விழுந்து கிடக்கின்றன; சந்தேகமன்னியில் உலகிலேயே தலைசிறந்த நமது காலாட் படைகளின் எண்ணிறந்த, பொறுமை மிக்க பாதத்தடங்கள் பட்ட வயல்வெளிகள், நெடுஞ்சாலைகள், வண்டித் தடங்கள் ஆகிய எங்கணும் அந்த இலைகள் சிதறிக் கிடக்கின்றன.

ஒவ்வோர் அங்குல நிலத்திலும் ஒரு காலத்தில் உயிரைக் குடிக்கும் உலோகமாக விளங்கிய குண்டிலிருந்து வெடித்துச் சிதறிய குண்டுச் சிதறல்கள் விதைகள் போல் புதையுண்டு கிடப் பதும், தேர்ந்தெடுத்து அனுப்பிய ஜெர்மன் ராணுவ டிவிஷன் களைச் சாம்பலாகவும் மண்ணுகவும் மாற்றியதுமான ஸ்டாலின் கிராடு நகரைச் சுற்றியுள்ள ஸ்டெப்பி வெளிகளில், வால்கா நதிப்பரப்பின் வழியாக வீசிவரும் கோபாவேசமிக்க காற்று, அந்த ஸ்டெப்பி வெளியில் சிதறிக் கிடக்கும் ஜெர்மன் டாங்கிகள் மற்றும் கார்களின் உருக்குலைந்து போன மிச்சம் மிஞ்சாடிகளைப்

போல் துருநிறம் பிடித்து அவலட்சணமாகத் தோன்றிய ஒரு காட்டுப் புதர்ச்செடி உருண்டையை விரட்டிக் கொண்டே செல்கிறது.

மேலும், கிரீமியாவிலும், நீல நிறமான காகேசிய மலைகளின் அடிவாரத்திலும், சிலந்தி வலைகளின் பளிச்சிடும் வெண்ணிற இழைகள், தெளிவான குளிர்ந்த காற்றில் இன்னும் மிதந்தாடிக் கொண்டிருக்கின்றன. ஒரு காலத்தில் இரவும் பகலும் போர் முழக்கம் ஒலித்துக் கொண்டிருந்த—அந்த இடத்திலிருந்த பதுங்கு குழிகள் மற்றும் குண்டு விழுந்து குழிந்த பள்ளங்கள் ஆகியவற்றின் விளிம்போரங்களைச் சுற்றிலும், தெத்தும் குத்துமான களைச்செடிகள் மண்டி வளர்ந்துள்ளன; அந்தச் செடிகளின் மீது வெள்ளிநிறமான சிலந்தி வலைகள் படர்ந்துள்ளன; அந்தச் சிலந்தி வலையின் இழைகள், தம்மீது முத்துமுத்தாகப் படிந்து திரண்டிருந்த பனியின் சிறு கண்ணீர்த் துளிகளின் பாரத்தைத் தாங்க மாட்டாமல் தொய்ந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றன.

மேலும் எங்கணும், ஸ்டாலின் கிராடிலிருந்து பெர்லின் வரையிலும், காகசஸிலிருந்து பாரென்ட்ஸ் கடல் வரையிலும்,—என் நண்பரே, உங்கள் பார்வை எங்கெங்கே தங்கிய போதிலும் அங்கெல்லாம்—போரில் இறந்துபட்ட போர்வீரர்களின் கல்லறைகளையே, நமது தாயகத்தின் இதயத்துக்கு மிகவும் அருமைவாய்ந்த கல்லறைகளையே நீங்கள் காண்பீர்கள். மேலும், அந்தக் கணத்தில் நீங்கள் நமது சொந்த சோவியத் ஆட்சியைப் பாதுகாப்பதில் உங்கள் நாட்டுக்கு ஏற்பட்ட எண்ணிறந்த இழப்புக்களை மனவேதனையோடு நினைவு கூர்வீர்கள்; உங்கள் நினைவில் "நமது தாயகத்தின் விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமான போரில் வீழ்ந்துபட்ட வீரர்களின் கீர்த்தி நிரந்தரமாக வாழ்க" என்ற வாசகங்கள் புனிதத் தன்மைமிக்க இரங்கற் பாவைப்போல் ஒலிக்கும்.

கடந்த காலத்தை நினைவு கூர்ந்து பார்க்கும்போது, நீங்களே இவ்வாறு சிந்திப்பதைக் கண்டுணர்வீர்கள்: இந்தப் போரினால் எவ்வளவுபேர் அனாதைகளாகி விட்டனர்! துக்ககரமான நினைவுகளுக்கு நேரமும் வாய்ப்பும் நிறையவுள்ள இந்த நெடிய மாரிக்கால இரவில், போரினால் விதவையாக்கப்பட்ட மாதர்கள் எத்தனை பேர், தமது தனிமையில், முதுமை தட்டிய தமது முகத்தைக் கைகளால் அழுத்தி மூடிக்கொண்டு, காஞ்சிரங்காயைப்போல் கசப்பான கண்ணீர்த் துளிகள் தமது கைவிரல்களைச் சுட்டெரிக்க, இருட்டில் கலங்கி அழுதுகொண்டிருப்பார்கள். தமது சோஷலிசத் தாயகத்துக்கான போரில் மாண்டு

பட்ட தந்தையின் மரணத்தால், என்றுமே ஆறுத வகையில் காயம்பட்டுவிட்ட எத்தனை குழந்தைகளின் இதயங்கள், படுக்கப் போகும் நேரத்தில் சந்தர்ப்பவசமாக நேர்ந்த பழைய நினைவின் காரணமாக, குழந்தைத் தன்மையற்ற கொடிய வேதனையால் சாம்பிச் சுருங்கும், அல்லது அது இவ்வாறும் நிகழலாம்: பல ஆண்டுகளாக ஒரு சோகமயமான அமைதி நிலவி வந்துள்ள ஓர் அறைக்குள், ஒரு வயோதிகர், இறந்துபோன தனது மகன்களை எண்ணிக் கண்ணீர் சிந்தாமல் அழுதுகொண்டிருக்கும் தமது நரைத்த தலை கொண்ட மனைவியின் அருகே நெருங்கிச் சென்று, மக்களை இழந்த மாளாத பெருஞ்சோகத்தால் தனது கண்ணீரை யெல்லாம் கசக்கிப் பிழிந்து கொட்டிவிட்ட அந்தத் தாயின் ஒளியிழந்த கண்களை உற்று நோக்குவார். பிறகு அவர் உள்ளடங்கிய, நடுங்கும் குரலில் இவ்வாறு கூறுவார்: "வா, வா. எழுந்து வா, வருத்தப்பட்டுக் கொண்டேயிருந்தால் எப்படி?.. தயவு செய்து அழாதே, கண்ணே...மக்களை இழந்தவர்கள் நாம் மட்டும்தானே?..." பிறகு அவர் பதிலுக்குக்கூடக் காத்திராமல், ஜன்னல் பக்கமாக நடந்து செல்வார்; ஒரு சிறு வறண்ட விம்மலோடு எழுந்து வரும் தமது கண்ணீரை விழுங்கித் தீர்ப்பதற்காகத் தொண்டையைச் செருமிக் கொள்வார்; பிறகு எதையும் காணாது நிலைகுத்திப்போன கண்களோடு பனிமூட்டம் படிந்த ஜன்னலையே வெறித்து நோக்கியவாறு, நெடுநேரம் அங்கேயே நின்று கொண்டிருப்பார்.....

நண்பரே, நினைத்துப் பாருங்கள். சோவியத் ஆட்சியின் முப்பது ஆண்டுக் காலத்திலும், ஏற்பட்ட சிரமங்கள் எவ்வளவு தான் பெரியவையாக இருந்த போதிலும்கூட, சோவியத் யூனியன் போரிலாகட்டும், அல்லது தான் மேற்கொண்ட எந்த வொரு பொறுப்பிலாகட்டும், என்றுமே தோல்வி கண்டதில்லை என்பதை நினைத்துப் பாருங்கள். இறுதியில் அது வெற்றியே அடைந்தது. போர்களில் மிகமிகப் பெரியதான இந்தப் போர் நமக்கு ஏராளமான துன்பங்களையும் எண்ணிறந்த இழப்புக்களை யும் ஏற்படுத்தியுள்ளது; என்றாலும், நமது நாட்டின் சுதந்திர பீடத்தின்மீது கொடுக்கப்பட்ட இந்தப் பலிகள் நமது பலத்தைக் குறைத்து விடவில்லை; அதேபோல் உயிரிழப்பினால் ஏற்படும் மனக்கசப்பு நமது உணர்வைக் குன்றச் செய்துவிடவில்லை.

சமயங்களில் இவ்வாறு நேர்வதுண்டு. அதாவது ஸ்டெப்பி வெளியில் காஞ்சிரைச் செடிகள் அமோகமாக முளைத்து வளர்ந்து, கோதுமை வயல்களை அடுத்துள்ள செழிப்பான புல் வெளிகளின்மீதும் நீல நிற மூட்டம்போல் படர்ந்து பரவி விடுவ துண்டு. இதனால் கோதுமைத் தானியக் கதிர்கள் முற்றிவரும்

போது, அவை காஞ்சிரைச் செடிகளின் கசப்பையும் தம்முள் கிரகித்துக் கொண்டுவிடும். இத்தகைய கோதுமை மணிகளை அரைத்து மாவாக்கினால், அது கேக் செய்வதற்கோ, அது போன்ற வேறு உணவுப் பண்டங்களைச் செய்வதற்கோ பயன் படாது. ஆனால் அதைகொண்டு ரொட்டி செய்தால், அதில் சற்றே கசப்பு ருசி இருந்தபோதிலும், அந்த ரொட்டி ரொட்டி யாகத்தான் இருக்கும். மேலும், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபடுவோருக்கு இந்த ரொட்டி ஒரு வரப்பிரசாத மாகவே தோன்றும்; ஏனெனில், அது மறுநாள் வேலையில் செலவிடுவதற்கான பலத்தை மனிதனுக்கு அமோகமான அளவில் வழங்குகிறது.

மக்கள் போரினால் ஏற்பட்ட காயங்களை அதிசயிக்கத்தக்க அமோகமான வேகத்தில் ஆற்றி வருகின்றனர். இடிபாடுகளி லிருந்து நகரங்களும் கிராமங்களும் முளைத்தெழுகின்றன; எனது சொந்த வட்டாரமான டான்பாஸ் பிரதேசத்தில் சுரங்கங்கள் மீண்டும் உயிர்பெற்று எழுந்துள்ளன; இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் முட்செடிகளும் களைகளும் குத்திட்டு வளர்ந்து நின்ற வயல்களில், அதற்குள் அமோக தானிய விளைச்சல் கண்டுள்ளது; புத்துயிரூட்டப்பெற்ற தொழிற்சாலை களின் புகைக் கூண்டுகளிலிருந்து புகை பொங்கி வந்து கொண்டு இருக்கிறது; சர்வநாசம் கோலோச்சி நின்ற இடங்களில் புதிய தொழில்துறை ஆலைகள் முளைத்தெழுந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றையும் கண்ணுரை நேரில் கண்டும், மக்களது மேதத்து வத்தின் படைப்பாக்க வலிமையிடமிருந்து அசாத்தியமான வற்றையும்கூட எதிர்பார்க்கக் கற்றுக் கொண்டும் விட்ட ஒரு சோவியத் நபரும்கூட, நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கும் முன்னரே ஒரு புனரமைக்கப்பட்ட ராட்சச உலோகத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கியுள்ளது என்பதையோ, அல்லது இது வரையிலும் தெரிய வாராத யாரோ ஒரு ஸ்தக்கனோவைட் தொழிலாளி, ஒரு புதிய அகில—யூனியன் சாதனையையே சாதித் துள்ளார் என்பதையோ அறிய நேரும்போது, பிரமித்துப் போய், பின் மகிழ்ச்சிகரமான வியப்போடு தலையை ஆட்டிக் கொள்வார்.

நாட்டின் பெருமையாகத் திகழும் லெனின் கிராடு நகரத் தொழிலாளி வர்க்கம், ஐந்தாண்டுத் திட்டத்தை நான்கே ஆண்டுகளில் நிறைவேற்றி முடிக்க முயன்று பார்க்குமாறு நாடெங்கிலுமுள்ள தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே சவால் விடுத்துள்ளது. மேலும், ஒரு புதிய, எழில்மிக்க வாழ்க்கையின்

மகோன்னதமான சித்திரங்கள், நம் கண் முன்னாலேயே கண்ணுரக் காணும் வண்ணம் எழுந்தோங்கி வருகின்றன.

வரலாற்றில் முன்னென்றுமே கண்டறியாத வீரச்செயல் களைப் புரிந்து காட்டுவதற்கு, மக்களை ஒழுங்கமைக்கவும், அவர்களுக்குப் போதமும் ஆயுதபலமும் வழங்கி, அவர்களை ஓரணியில் திரட்டவும் கூடிய கட்சி உண்மையில் மகாவலிமை படைத்ததுதான்! தமது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்து, எதிரிகள் அனைவரையும் முறியடித்ததோடு மட்டுமல்லாமல், உலகெங்கணுமுள்ள உழைக்கும் மக்களுக்கு நம்பிக்கைத் தீபமாக வும் மாறியுள்ள மக்கள் மகத்தானவர்கள்தான்! வெல்லற் கரியவர்கள்தான்!

எனது நண்பரே, அத்தகைய மக்களின், அத்தகைய கட்சியின் உண்மையான புத்திரனாக இருப்பது, நாமும் நமது காலத்தவரும் வாழ்வில் அறிந்து கொள்ளக் கூடிய மிகப் பெரும் ஆனந்தம் இல்லையா? மேலும், நமது தாயகத்தின் வருங்காலம் மற்றும் நமது கட்சியின் லட்சியம் ஆகியவாற்றின்பால் நமக்குள்ள கடுமையான பொறுப்பிலிருந்து, வருங்காலத் தலைமுறையினருக்கு மட்டுமன்றி, நமது நாட்டைப் பாதுகாக்கும் பணியில் போரிட்டு மாண்டவர்களின் புனித நினைவுக்கும் நாம் கடமைப்பட்டுள்ள பொறுப்பிலிருந்து, இன்று வாழ்ந்து வரும் நாம், அலுப்புச் சலிப்பு அறியாத முயற்சிகளுக்கும் புதிய வீரச் செயல்களுக்கு மான உத்வேகத்தைப் பெறவில்லையா?

* * *

ஜனவரி 21 அன்று, லெனினது மரண தினத்தன்று, உலகத் தொழிலாளர்கள், 24 ஆண்டுகளுக்கு முன்பு தாம் செய்ததைப் போலவே, இந்தத் துக்க நாளில் அன்று தொட்டுச் செய்து வந்துள்ளதைப் போலவே, மனித குலத்துக்கு ஒரு புதிய வாழ்க்கைக்சான மார்க்கத்தைக் காட்டிய இந்த மனிதருக்கு மௌன அஞ்சலி செலுத்துவர். ஒரு மாபெரும் கட்சியின் தலைவரும், உலகின் முதல் சோஷலிச அரசின் நிறுவனருமான இவர் 1919-ல் பின்வரும் மறக்க முடியாத வாசகங்களைக் கூறினார்:

''இந்த நாட்டில், ரஷ்யாவில், உலக வரலாற்றிலேயே முதன் முறையாக, சுரண்டல்காரர்கள் நீங்கலாக, தொழிலாளிகளையும் உழைக்கும் விவசாயிகளையும் கொண்டு உருவாக்கப்பட்ட சோவியத்துக்கள் எனப்படும் வெகுஜன ஸ்தாபனங்களைக் கொண்டே, நாட்டின் அரசாங்கம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது; இந்த சோவியத்துக்களே எல்லா அரசு அதிகாரத்தையும் செலுத்தி வருகின்றன. எனவேதான் முதலாளித்துவ வர்க்கத்தின்

பிரதிநிதிகள் எல்லா நாடுகளிலும் ரஷ்யாவைப் பற்றி அவதூறுகளைப் பரப்பி வந்த போதிலும், 'சோவியத்' என்ற இந்தச் சொல் இப்போது உலகெங்கணும் புரிந்து கொள்ளப் பட்டுள்ளதோடு மட்டுமன்றி, பிரபலமாகவும் மாறியுள்ளது; தொழிலாளர்களுக்கும் சகல உழைக்கும் மக்களுக்கும் மிகவும் பிடித்தமான சொல்லாகவும் மாறியுள்ளது.''

''சோவியத் ஆட்சி என்பது உழைக்கும் வெகுஜனங்களால் கண்டுபிடிக்கப்பட்ட சோஷலிசத்துக்கான மார்க்கமாகும்; எனவே தான் அது உண்மையான மார்க்கமாக உள்ளது; எனவேதான் அது வெல்லற்கரியதாக உள்ளது'' என்று கூறினார் லெனின்.

போருக்கும் சரி, ஆக்கபூர்வமான உழைப்புக்கும் சரி, நாம் நமது பலத்தை எந்த வற்றாத சுரங்கத்திலிருந்து பெற்று வருகிறோம் என்பதை நமது நண்பர்கள் அறிவர்.

நமது எதிரிகளோ தமக்குத் தாமே விசுவாசமாக இருந்து வருகின்றனர்; சிலர் வெறும் அவதூறுகளில் இறங்குகின்றனர்; அதையும் கொச்சைத்தனமாக, தமக்கே உரிய வெட்கங்கெட்ட முறையில் செய்கின்றனர்; மற்றவர்களோ தமது தூசி படிந்து கிடக்கும் பழைய சுவடிகளை அவசரம் அவசரமாகத் தோண்டியெடுத்து, ''மர்மம் மிகுந்த ஸ்லாவ் ஆன்மா''வையும் ''ரஷ்ய வெறித்தன''த்தையும் பற்றிய பழைய, செல்லரித்துப் போன வாதங்களை வெளிக் கொணர்கின்றனர்; இந்த நைந்து கிழிந்துபோன பழங்கந்தல் வாதங்களின் மூலம் தமது இழிதன்மையையும் கீழ்மையையும் மூடி மறைக்கின்றனர்; சோவியத் மக்கள் தமது பிரம்மாண்டமான பலத்தை எங்கிருந்து பெறுகின்றனர் என்பதைத் தம்மால் புரிந்து கொள்ளவே முடியாததுபோல் பாசாங்கு செய்கின்றனர்.

பல்லாண்டுகள் அனுபவித்த துன்ப துயரங்களுக்குப் பின்னால், ஒரு மாபெரும் புரட்சிகரப் போராட்டத்தின் மூலம் நமது மக்கள் ஒரே நியாயமான அரசாங்க அமைப்பைக் கண்டறிந்தனர்; இதற்காக அவர்கள் உறுதியோடும் துணிவாற்றலோடும் போராடினர்; அதனைத் தமது ரத்தத்தாலும் தமது உழைப்பினாலும் வலுப்படுத்தினர்; இந்த அமைப்பில் அவர்களுக்குள்ள நம்பிக்கையை உலகில் எந்தச் சக்தியும் அசைத்து விட முடியாது.

அண்மைக் கடந்த காலத்தை நமது இன்றைய நிகழ்காலத்தோடு நீங்கள் ஒப்பிட்டுப் பார்ப்பீர்களானால், ரஷ்யர்கள் ஆன்மீக ரீதியில் எவ்வளவு பெருமளவுக்கு மாறியுள்ளனர்

என்பதை, குறிப்பாக, கூட்டுப்பண்ணை விவசாயிகள் என்ற முறையில் ரஷ்ய விவசாயிகள் எத்தகைய வியந்து பாராட்டத் தக்க புதிய குணநலன்களைப் பெற்றுள்ளனர் என்பதை நீங்கள் தெள்ளத் தெளிவாகக் காண்பீர்கள்.

* * *

1930 ஜனவரியில், டான் பிரதேசத்தில் பண்ணைத் தொழிலின் கூட்டுடைமையாக்கம் நடைபெற்று வந்த காலத்தில், குதிரைகள் இழுத்துச் செல்லும் ஒரு வழுக்கு வண்டியில், மில்ல ரோவாவிலிருந்து வெஷன்ஸ்காயா வரையிலும் நான் பயணம் செய்ய நேர்ந்தது. அந்த 168 கிலோ மீட்டர் தூரத்தையும் மிகவும் குறுகிய காலத்தில் கடந்துவிடக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக; எனக்கோ அல்லது எனது வண்டியோட்டிக்கோ பிரமைகள் எதுவும் இருக்கவில்லை. குதிரைகளும் களைத்துப் போயிருந்தன; மேலும், அந்த ரோட்டுப் பாதை மிகவும் மோசமானது, வழியெல்லாம் குண்டும் குழியும் மிக அதிகம் என்று மக்களும் கூறினர்; அத்துடன் ஸ்டெப்பி வெளியில் தரைப் பனியும் படிந்திருந்தது; கிழக்கு வானத்தில் தென்பட்ட மங்கலான மலைத் தொடரிலிருந்து எழுந்து வந்த அடர்த்தியான செந்நீல நிற மேகங்களும் பருவ நிலை மோசமாகக் கூடும் எனப் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

நாங்கள் பொழுது விடிந்ததும் புறப்பட்டோம். நகரை விட்டு வெளியேறியதும், புகைக் கூண்டுகளிலிருந்து சுருள் சுருளாக வெளிவரும் புகையும் மற்றும் ஆலைத் தூசியின் காரமான நெடியும் படிப்படியாக மறைந்து விட்டன; காற்றில் சுத்தமான புதிய பனியின் புத்தம் புதிய குளுமை குடி கொண்டிருந்தது; வைக்கோல் பாரம் ஏற்றிச் செல்லும் வண்டிகளிலிருந்து ரோட்டின் இருபுறமும் சிந்தியிருந்த வைக்கோலின் நறுமணமும், குதிரைகளது வியர்வையின் நெடி நாற்றமும் கலந்து வீசின. அந்த ஆழமான மாரிக்கால மோன அமைதியை, வழுக்கு வண்டிக் கட்டைகளின் கிரீச்சொலியும், குதிரைகளின் கொர கொரத்த மூச்சொலியும்தான் குலைத்தன. மேலும், அவ்வப்போது ரோட்டில் ஆழமான குழிகள் குறுக்கிடும்போது குறுக்குக் கட்டை வண்டியின் நுகக்காலின் மீது மோதும் போதும் அந்த அமைதி குலைந்தது.

இளமை மிடுக்கும், குறும்புத் தனமாகச் சிமிட்டும் ஆழமாகப் பதிந்த சிறிய கண்களும், அநாயாசமாகத் தொங்கிப் புரளும் மூன்தலை மயிரும், தாடியும் கொண்ட வயதான கோஸாக் ஆன எனது வண்டியோட்டி மிக மிக வாயாடியான நபர் என்று பின்னர்தான் தெரிய வந்தது. ஆரம்பத்தில் அவர் தமது சொந்தச் சிந்தனைகளிலேயே மூழ்கியவராய், ஏதோ ஒரு சோக

கீதத்தைச் சீட்டியடித்து இசைத்துக் கொண்டு மௌனமாகக் குதிரைகளை ஓட்டிச் சென்றார். அவர் விஷயத்தில் எனது பார்வையில் பட்டதெல்லாம் உடம்போடு இறுகி ஒட்டிக்கிடந்த ஆட்டுத் தோல் கோட்டுடன் கூடிய அவரது பரந்த முதுகு, அவரது சுருக்கங்கள் விழுந்த பழுப்பு நிறமான கழுத்தின் பின்பகுதி, மாஞ்சுகாணியான ஏதோ ஒரு கோணத்தில் அவர் அணிந்திருந்த கம்பளித் தொப்பிக்குக் கீழாக, உறைபனி படிந்து வெள்ளை நிறமாகத் தோற்றிய அவரது தலைமுடி ஆகியவைதாம். ஆனால் நான் அவரிடம் ஏதோ கேட்டவுடனேயே, அவர் சட்டென்று என்னைப் பார்க்கத் திரும்பி, கடிவாளங்களைத் தமது ஆசனத்தின் கீழ் சொருகி வைத்து விட்டு, புன்னகையோடு எனக்கு உடனே பதிலளிக்கத் தொடங்கி விட்டார்:

''எங்கள் பண்ணை வீடுகளில் இப்போது என்ன நடந்து வருகிறது என்பதை நீங்கள் கண்ணால் பார்க்க வேண்டும். கடவுள் தான் இதிலிருந்து எங்களைத் தடுத்துக் காப்பாற்ற வேண்டும்...''

''ஏன்? என்ன நடந்து கொண்டிருக்கிறது?'' என்று கேட்டேன் நான்.

''ஏனா? கூட்டுப் பண்ணைகள் தொடங்கப்பட்டு வருகின்றன; எனவே கிராம மக்கள் எப்போது பார்த்தாலும், கூட்டம் கூட்டம் என்று கூட்டத்திலேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். மாஸ்கோவில் கூட அவர்கள் இப்படி உட்காருவதில்லை என்றே நான் கருதுகிறேன்!''

''இப்படி என்னால் எப்படி?''

''ஏனா? அவர்கள் இரவும் பகலும், மூன்று நாட்களாகத் தொடர்ந்து ஒரே மூச்சில் இப்படியே உட்கார்ந்திருக்கிறார்கள்!''

''உங்கள் ஊரில் பல பேர் கூட்டுப் பண்ணையில் சேர்ந்திருக்கிறார்களா?''

''அவர்கள் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்திருக்கிறார்கள். பாதிப்பேர் சேர்ந்துள்ளனர்; மற்றவர்கள் இதைப்பற்றி இன்னும் முடிவு செய்ய முடியாத இரண்டுங்கெட்டான் மனத்தோடு, வீட்டு முற்ற வாசல்களின் முன்னால் ஆட்டு மந்தைபோல் கூடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கூட்டங்களில் கூடியமர்ந்திருக்கின்றனர்; அங்கு இளஞ்சேவற் கோழிகளைப் போல் அவர்கள் சண்டை பிடிக்கவும் தொடங்கி விடுகின்றனர். உண்மையைச் சொன்னால், இதையெல்லாம் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. என் அண்டை வீட்டுக்காரரான மிக்கி ஃபோமிச் அந்திமப் பருவத்தை எட்டிவிட்ட வயோதிகர். கிழடுகள் விஷயத்தில் வழக்கமாக ஏற்படும் மலஜல உபாதைகள் கடுமையாகி

அவரை முடுக்கும் போதுதான் அவர் கூட்டத்தை விட்டுக் கிளம்பி வருகிறார்; மற்றப்படி அவர் இப்போது கிராம சோவியத் அலுவலகத்திலேயே வாழ்ந்து வருகிறார்; உண்ணுவதும் உறங்குவதும் கூட அங்கேயேதான். அவரது வயதான மனைவி அவருக்குச் சாப்பாட்டுக்காக ஒரு பானை நிறைய முட்டைக்கோஸ் சூப் கொண்டு வருகிறாள்; ஆனால் பனிப் படிவத்தையெல்லாம் கடந்து நடந்து அவள் இங்கு வந்து சேர்வதற்குள் மணிக்கணக்காகி விடுகிறது. எனவே மிக்கி ஃபோமிச் பனிக் குளிராய்க் குளிர்ந்து போன சூப்பில் கொஞ்சத்தை மட்டும் கரண்டியினால் அள்ளிக் குடிக்கிறார்; பிறகு மீண்டும் கூட்டத்திலேயே ஈடுபட்டு விடுகிறார்; இவ்வாறு அவர் சுவரில் அறைந்த ஆணியைப் போல் கிராம சோவியத்திலேயே ஓட்டிக் கொண்டு கிடக்கிறார்... கடவுளே! அவர்தான் எத்தகைய செயல் வீரராக மாறி விட்டார்!''

''அவர் ஒரு கூட்டுப் பண்ணைச் செயல் வீரரா?''

''யார், மிக்கி ஃபோமிச்சா? ஏன், அவரும் ஒரு செயல்வீரர் தான்; ஆனால் எதிர்த் தரப்புச் செயல்வீரர். அந்தப் பணக்கார மத்தியதர விவசாயிகளில் அவரும் ஒருவர். கூட்டுப் பண்ணையை எதிர்த்து அவர் பேசுவதில்லை. ஆம். அவ்வாறு பேசுவதில்லை. ஆனால், அவர் வெறுமனே பின் வரிசையில் அமர்ந்து கொண்டு, விஷமத்தனமாக எதையாவது சொல்லிக் கொண்டிருப்பார்; பைபிளிலிருந்து எதையாவது அல்லது தாமாகவே இட்டுக்கட்டிய எதையாவது சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பார். அன்றொரு நாள் அந்தக் கூட்டங்கள் ஒன்றுக்கு நானே சென்றிருந்தேன். அங்கு எல்லோரும் பெஞ்சுகளில் நெருக்கியிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தனர். நான் ஓரத்தில் அமர்ந்திருந்தேன்; எனக்கு அடுத்தாற்போல் இதே மிக்கி ஃபோமிச் உட்கார்ந்திருந்தார். அவருக்கு அடுத்தாற்போல், ஒரு விதவை—பெயர் எஃப்ரோசின்யா மெல்னிக்கோவா—அவள் உட்கார்ந்திருந்தாள். மிக்கி ஃபோமிச் ஏதேதோ சளசளத்துக் கொண்டிருந்தார்; இதனால் நாங்கள் பேச்சாளர்கள் கூறுவதைக் கேட்க முடியவில்லை. இந்த எஃப்ரோசின்யா மெல்னிக்கோவா அவரை வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கும்படி மிகவும் பவ்வியமாகக் கேட்டுக் கொண்டாள்; பிறகு மீண்டும் ஒருமுறை அவ்வாறே கேட்டுக் கொண்டாள்; ஆனால் அவரோ சளசளத்துக் கொண்டே இருந்தார். பேச்சாளர் வட்டாரக் கேந்திரத்திலிருந்து வந்திருந்த கட்சி நபர், அவர் கூட்டுப் பண்ணைகளைப்பற்றி எங்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் மிக்கி ஃபோமிச் தமது சொந்தப் பேச்சை நிறுத்தவில்லை; இது

மோசமானது, அது படுமோசமானது என்று ஏதேதோ முனகிக் கொண்டேயிருந்தார்....பிறகு அவர் எஃப்ரோசின்யாவைத் தமது முழங்கையினால் லேசாக இடித்து, அமைதியாக இவ்வாறு கூறினார்: 'முதலில் அவர்கள் பசு மாடுகளையெல்லாம் பொதுச் சொத்து ஆக்குவார்கள்; பிறகு பெண்களான உங்களையெல்லாம் ஆண்களோடு படுத்துக் கிடப்பதற்காக, ஒரு பொதுவான படுக்கைக்கே விரட்டியடித்துக் கொண்டு செல்வார்கள். விஷயம் தெரிந்த யாரோ ஒருவரிடமிருந்துதான் நான் இதனைக் கேள்விப் பட்டேன்.' கேலி பேசுவதில் கெட்டிக்காரியான அவளும் இவ்வாறு சட்டென்று பதில் கூறினாள்: 'நல்லதாய்ப் போயிற்று. நானோ ஒரு ஏழை விதவை; நான் இழக்கப் போவது ஏதும் இல்லை. என்றாலும், நான் உமது பக்கத்தில் படுத்துக் கிடக்கும் கதி நேராமல், கடவுள் என்னைக் காப்பாற்றட்டும்! அப்படி நேர்ந்தால், பிறகு நான் கூட்டுப் பண்ணையிலிருந்து விலகிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும்.' நல்லது. இந்தப் பதில் ஃபோமிச்சுக்குப் பிடிக்கவில்லை. எனவே அவர் உரத்த குரலில் இவ்வாறு கேட்டார்: 'நீ என்னைப்பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய், வெட்கங்கெட்ட சிறுக்கியே?' இதைக் கேட்டதும் எஃப்ரோசின்யாவுக்கு உண்மையிலேயே ஆத்திரம் வந்து விட்டது; அவள் எல்லோரது காதிலும் விழும் வண்ணம் உரத்த குரலில் இவ்வாறு கத்தினாள்: 'ஒரு மைலுக்கு அப்பாலும் நாற்றமடிக்கும் பழைய தானியக் குதிரின் எலிப் புழுக்கைகளைப் போலத்தான் நீர் நாறுகிறீர் என்றுதான் சொன்னேன்?' இதன் பின் வார்த்தைக்கு வார்த்தை தடித்தது; இருவரும் ஒருவரை யொருவர் ஏதேதோ வசைபாடிச் சண்டை பிடித்துக் கொண் டனர். அவர் அவளை வெட்கங்கெட்டவள், விவஸ்தை கெட்ட வள், பாவி என்று ஏதேதோ கூறித் திட்டினார்; அவளும் அவர் இரண்டு ஜோடி எருதுகளும் ஒரு ஜோடி குதிரைகளும் கொண்ட ஒரு குட்டிக் குலாக்காக இருப்பதால், அவர் இயல்பாகவே கூட்டுப் பண்ணைக்கு எதிராகச் செல்வதாகவும், அவளிடம் இருந்ததெல்லாம் ஒரே ஒரு பாழாய்ப்போன பசுமாடு மட்டும் தான் என்றும் அவரிடம் கூறினாள். அவர் அவளை ஏதோ ஆபாசமான வார்த்தையைக் கூறித் திட்டினார்; அவளும் தன்னால் முடிந்த மட்டிலும் பதிலுக்குப் பதில் கூறித் திட்டித் தீர்த்தாள். பிறகு அவர்களுக்குள் கை கலப்பே தொடங்கி விட்டது. பழைய ஆட்சிக் காலத்தில் நடந்ததைப் போல், ஃபோமிச் அவளது தலை மீது கிடந்த சால்வையை இழுத்தெறிந்து விட்டு, அவளது தலை மயிரைப் பற்றிப் பிடித்தார். எஃப்ரோசின்யா—அவளும் முட்டாளல்ல—அவரும் அவரது தாடியைப் பற்றி பிடித்தாள். மேலும்

அவள் இளமையும் பலமும் மிக்க பெண்ணாக இருந்ததால், அந்தத் தாடியை ஒரு வெட்டு வெட்டி இழுத்துக் கையோடு ஒரு கொத்து மயிரையும் பிடுங்கி விட்டாள். உண்மையில் அவர்கள் இருவரையும் கை கலப்பிலிருந்து விலக்கி விடுவதே பெரும் பாடாய்ப் போய் விட்டது. நான் ஃபோமிச்சைப் பார்த்தேன்; அவரது தாடியில் பாதி சுத்தமாகப் பறிபோய் விட்டது! நான் சிரிப்பை அடக்கி வைக்க முயன்றவாறு அவரிடம் இவ்வாறு சொன்னேன்: 'மிக்கி ஃபோமிச், இனிமேல் இந்த மாதிரிக் கூட்டங்களுக்கெல்லாம் வராதீர்கள். இல்லாவிட்டால், பெண்கள் உங்களைக் கோழிக் குஞ்சின் தூவலைப் பிடுங்குவதுபோல் பிடுங்கிப் போட்டு விடுவார்கள். அப்புறம் அவர்கள் உங்களுக்கு மருந்துக்குக்கூட ஒரு மயிரையும் கூட விட்டு வைக்க மாட்டார்கள்.' அவர் பெருமைப்படுபவர்போல் என்னை வெறித்துப் பார்த்து விட்டு இவ்வாறு கூறினார்: 'என் தலையில் உள்ள எல்லா மயிரையும் நான் இழந்தாலும் கூட, கூட்டங்களுக்குப் போவதை மட்டும் நான் நிறுத்தமாட்டேன்!' அவர் அப்படிப்பட்ட செயல் வீரராகத்தான் மாறி விட்டார். அவர் இப்படி மாறுவார் என்று நான் என்றுமே நினைத்ததில்லை.''

''சரி, நீங்கள்—நீங்கள் கூட்டுப் பண்ணையில் சேர்ந்து விட்டீர்களா?'' என்று நான் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

அவர் தமது பழுப்பு நிறத்தாடியை அமைதியாகத் தடவிக் கொடுத்தார்; பிறகு தமது துறுதுறுக்கும் நீலநிறக் கண்களைக் குறும்புத்தனமாக ஏறச் சொருகினார்.

''அதற்கொன்றும் அவசரமில்லை'' என்றார் அவர்: ''கல்யாண மானாலும் அல்லது வேறு எந்த மகிழ்ச்சிகரமான சந்தர்ப்ப மானாலும், பந்திக்கு முந்திப்போய் உட்காருவதில் நான் என்றுமே அவசரப்படுவதில்லை. கடைசியாகச் சென்று உட்கார்ந்தால், நமக்குக் கடை கோடியிலுள்ள இடம்தான் கிடைக்கும். அதனால் அவசியப்பட்டால், நாம் முதலிலேயே எழுந்து வந்து விடலாம். இல்லையா?'' ஒருவேளை தமது உருவகமான பேச்சு எனக்கு அவ்வளவு தெளிவாகப் புரியவில்லை என்று கருதியோ, என்னவோ அவர் மேலும் இவ்வாறு கூறினார்: ''ஒருவேளை அந்த விருந்தில் போய் உட்கார்வதே எனக்குப் பிடிக்காமல் இருக்கலாம். தெய்வ விக்கிரகங்களுக்குக் கீழே போய் நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்தக் கும்பலில் நான் எதற்காகப் போய் மாட்டிக் கொள்ள வேண்டும்?''

நான் சிரித்துக் கொண்டே, அவர் நெடுநேரம் காத்திருந்து விட்டுப் பிறகு சென்றால், விருந்தின்போது அவருக்கு உட்கார்வதற்கு எந்த ஆசனமும் கிடைக்காது போகலாமே என்று அவரிடம் சொன்னேன்.

''நான் அப்படி ஏமாறுகிற ஆசாமி அல்ல'' என்று அவர் தமது தலையை உறுதியோடு அசைத்தவாறே கூறினார்: ''நான் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். நான் ஒரு சரியான ஊசலாடும் மத்தியதர விவசாயி என்று கண்டு கொண்டதும், கூட்டுப் பண்ணையில் சேருமாறு எனக்கு அழைப்பு வந்திருக்கத்தான் செய்கிறது. என்னிடம் இருப்பதெல்லாம் ஒரு ஜோடிக் குதிரைகளும் ஒரு சாதாரணக் கிழட்டுப் பசுவும்தான். ஆயினும், அவர்கள் என்னை அந்தக் கூட்டங்களுக்குக் கூப்பிட்டுக்கொண்டே இருப்பதால், நான் இன்னும் கொஞ்சம் ஊசலாடத்தான் செய்வேன். இந்தக் கூட்டுப் பண்ணையை நான் உண்மையிலேயே நன்றாகப் பார்த்துத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தலைகால் தெரியாத வேகத்தில் அதில் போய்ச் சேர்வது என்பது...அதை எப்படிக் கூறுவதென்றே எனக்குத் தெரியவில்லை...''

''ஏன்? பயமா?'' என்று கேட்டேன் நான்.

''இல்லையில்லை. நான் ஒன்றும் எளிதில் பயந்து விடமாட்டேன். என்றாலும் நான் ஜாக்கிரதையாக இருந்து கொள்ள விரும்புகிறேன். ஏதாவது பாதகமாகி விட்டால்? நீங்கள் இதை எனக்குச் சொல்லுங்கள்: எது பாதுகாப்பானது? கூட்டுப் பண்ணை விவசாயியாக மாறுவதா? அல்லது தனிப்பட்ட விவசாயியாக இருப்பதா? எத்தகைய வாழ்க்கையை நான் விலக்கி வைக்க வேண்டும்? பாருங்கள், தவறு செய்துவிடக் கூடாதே என்றுதான் நான் பயப்படுகிறேன். நான் இளைஞனாக இருந்த காலத்தில், எனக்கு எவ்வளவோ அதிர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. நாம் ஒரு புறத்திலிருந்து தொல்லையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம், ஆனால் அது மறுபுறத்திலிருந்து நம்மை வந்து தாக்கும் என்பதை நான் அறிவேன். அதிருஷ்டம் இருந்தால் தான் பிழைத்தோம். உதாரணத்துக்கு உங்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், காலஞ்சென்ற எனது பெற்றோர்கள் எனக்கு மணம் முடிக்க, மற்றொரு பண்ணை வீட்டில் ஒரு பெண்ணைப் பார்த்தார்கள். அவளைப் பார்த்துவிட்டு வருவதற்காக நாங்கள் சென்றோம். நான் தைரியசாலியாகத்தான் இருந்தேன். என்றாலும், அவளை முதன் முதலாக நான் பார்த்தபோது, என் இருதயமே துடிக்காது நின்று விட்டது; மறுகணம் அது என் தொண்டையில்

இடித்துக் கொண்டிருப்பதை நான் உணர்ந்தேன்....என் முன்னுல் சுடர்விடும் துடிப்பான கண்களோடு ஒரு கட்டுமஸ்தான பெண் நின்ருள். அவள் முகம் மிகமிக அழகான மலரைப்போல் அத்தனை அழகாக இருந்தது! அவள் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். என்னுல் ஒரு வார்த்தை கூடப் பேசமுடிய வில்லை. நான் ஒரு செத்துப்போன மீனைப்போல் ஊமையாக அங்கு நின்றேன்.

''நல்லது. அவர்கள் எங்களைத் தனியே ஓர் அறையில் விட்டு விட்டார்கள். நாங்கள் இருவரும் அங்கிருந்த பெட்டிமேல் உட்கார்ந்தோம். அப்போதும் நான் ஒரு வார்த்தை பேசவில்லை; அவளை மேலும் கீழும் பார்த்தவாறு வெறுமனே கண்களை இமை கொட்டியவாறே இருந்தேன். ஒரு விஷயம் என் கவனத்தைக் கவர்ந்தது. அவளது சின்னஞ் சிறிய கைகள் நான் அவை. அவை ஒரு குழந்தையின் கரங்களைப் போல் அத்தனை சிறிதாக இருந்தன. இத்தகைய கைகளைக் கொண்டு, இவளால் ஒரு தொறட்டியைக் கூடத் தூக்க முடியாதே, பண்ணையில் இவளிடமிருந்து எத்தகைய உதவியை எதிர்பார்க்க முடியும் என்று நான் நினைத்ததும் எனக்கு நினைவிருக்கிறது. என் மூளை வேலை செய்தது; ஆனுல் என் நாக்கோ வாயின் மேலண்ணத் தோடு ஒட்டிக்கொண்டு விட்டது. நாங்கள் இவ்வாறே நெடு நேரம் இருந்தோம்; இறுதியில் அவள் பொறுமையிழந்து போய் விட்டாள். என் காதருகே மெல்லக் குனிந்து, 'நீங்கள் என்ன ஊமையா?' என்று கிசுகிசுத்தாள். நான் தலையை ஆட்டினேன்; எனினும் மீண்டும் பேச முடியவில்லை. முயன்று பார்த்தேன்; எனினும் பயனில்லை. பின்னர் அவள் முகத்தைச் சுழித்தாள்; என்னைப் பார்த்து இவ்வாறு கடுமையாக சொன்னுள்: 'உங்கள் நாக்கைக் காட்டுங்கள். ஒரு வேளை இங்கு வரும் வழியில் வண்டி தூக்கிப் போட்டதால், நீங்கள் உங்கள் நாக்கைக் கடித்திருக்கலாம்.' நானும் ஒரு முட்டாளைப் போல் அவள் சொன்னபடி நாக்கை வெளியே நீட்டினேன்....ஓ! பரிதாபமே! அந்தச் சமயத்தில் நான் எத்தகைய முட்டாளாகக் காட்சியளித்திருப்பேன் என்பதை நினைக்கும் போது நான் இன்றும்கூட வெட்கப்படுகிறேன். அவள் தனது கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வரும் அளவுக்கு அத்தனை பலமாகச் சிரித்தாள். சிரித்ததால் அவளுக்கு மூச்சே திணறி விட்டது; அவள் தனது கைகளை மார்பின் மீது வைத்து அழுத்திக் கொண்டு, தனது திணறல்களுக்கிடையிலும் இவ்வாறு கூச்சலிட்டாள்: 'அம்மா அம்மா, இங்கு வாயேன்! இவரைப் பாரேன்! ஏனு? இவர் ஒரு சுத்த அசடு! இவரை நான் எப்படி மணந்துகொள்ள

முடியும்?' இப்படித்தான் மோசமான காரியங்கள் நிகழ்ந்து விட்டன.

''எனக்கு அவள் மீது கோபம் பொத்துக் கொண்டு வந்தது, என்றாலும் நானும் சிரிக்க விரும்பினேன். ஆனால், நான் அவளது சிரிக்கும் வாயையே பார்த்துக் கொண்டிருந்தேன்; அப்போது என் இதயம் மீண்டும் குன்றிப் போய்விட்டது. அவளது பற்கள் வெள்ளையாக இருந்தன; வெள்ளை என்றால் அத்தனை வெள்ளையான, பலமும் கூர்மையும் பெற்ற, ஒழுங்கு குலையாமல் நெருக்கமாகக் கூடியமைந்த பற்கள் அவை. ஓர் ஓநாய்க் குட்டியைப் போல், அந்தப் பற்களே நிறைந்திருந்த வாயைக் கொண்டிருந்தாள் அவள். அந்தப் பல்லைத்தான் இப்போது பாரேன் என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். இத்தகைய பற்களைக் கொண்டு, இவள் ஒரு வயதான கன்றுக் குட்டியைக் கூட இரண்டு துண்டாக எளிதில் கடித்துப் போட்டுவிட முடியுமே. அப்படியென்றால், இவளை நான் திருமணம் செய்து கொண்டால், என் கதி என்னவாகும்? எங்களுக்குள் ஏதாவது தகராறு ஏற்பட்டால், இவள் தன் கைகளைக் கொண்டு என்னை ஒன்றும் செய்துவிட மாட்டாள்; ஏனெனில் சண்டை போடுவதற்கு முடியாத அளவுக்கு இவள் கைகள் அத்தனை சிறியவை. ஆனால் இவள் தனது பற்களைக் கொண்டு என்மீது பாய்ந்து விட்டால்? பிறகு கடவுள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். அப்படி இவள் பாய்ந்தாள் இவள் என் தோலை நார் நாராகக் கிழித்தெறிந்து விடுவாள். ஏன், அவ்வாறு இவள் கிழித்தெறிவதை நான் கண்டுணரும் முன்பே, இவள் குறைந்தபட்சம் இரண்டு காலுறை நாடாக்களுக்குத் தேவையான தோலை என் உடம்பிலிருந்து கிழித்திருப்பாள்.

''பின்னால், பயத்தினால்தானே என்னவோ, அல்லது கோபத்தினால்தானே என்னவோ, என் நாக்கு எப்படியோ மீண்டும் அசையத் தொடங்கி விட்டது. நான் அவளை நோக்கி இவ்வாறு கூறினேன்: 'இப்போது நீ சிரித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், கவனம் இருக்கட்டும். நீ என்னைக் கல்யாணம் செய்து கொண்ட பிறகு, அழாமல் இருப்பாயா என்பதைப் பார்த்துக் கொள்.' இதற்கு அவளும் சட்டென்று இவ்வாறு பதில் சொன்னாள்: 'பார்ப்போமே என்றாலும் குருடன். நம் இருவரில் யார் அழப் போகிறார்கள் என்பதை இனிமேல் அல்லவா பார்க்க வேண்டும்.'

''நாங்கள் அத்தோடு பேச்சை நிறுத்தி விட்டோம். பிறகு அவள் தனது பற்களைக் கொண்டே என்மீது மேலாதிக்கம் செலுத்தி வந்திருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

இல்லே. அதுதான் இல்லே. பற்களால் மேலாதிக்கம் செலுத்த வில்லே. நல்லவேளையாக கடவுள் அதிலிருந்து என்னைக் காப்பாற்றினர். இப்போது அவளுக்கு வயதாகி விட்டாலும் கூட, இன்றும் வாய் நிறைய அந்தப் பற்களைக் கொண்டவளாகத் தான் அவள் இருக்கிறாள். அந்தப் பாழாய்ப்போன கிழட்டு ஜென்மம் இன்னும்கூட கடினமான செர்ரிப் பழக் கொட்டைகளை சூரியகாந்தி விதைகளைக் கொறிப்பது போல் தனது பற்களால் உடைத்தெறிந்து விடுவாள். மாறாக, அவள் தனது சிறு கைகளால்தான் என்னைக் கட்டிப்போட்டு விட்டாள். சிறுகச் சிறுக, ஆண்டுக்காண்டு, அவள் கடிவாளங்களை மேலும் மேலும் பலமாக இறுக்கிக் கொண்டே வந்துவிட்டாள். அவற்றைத் தளர்த்தி விடுபட வேண்டும் என்று நான் கருது வதற்குள்ளாகவே காலம் கடந்து போய் விட்டது. இப்போதோ அந்தக் குதிரைக் கழுத்துப் பட்டியைத் தரித்திருப்பது எனக்கும் பழகிப்போய் விட்டது. ஒரு சொறி பிடித்த குதிரை தன் முதுகின் மீதுள்ள சேணத்தை ஏற்றுக் கொள்வதுபோல், நானும் இந்தத் துர்ப்பாக்கியத்தை இப்போது ஏற்றுக் கொண்டு விட்டேன். நான் குடித்திருக்கும்போது என்னைக் கையாள்வது சுலபம்; சுயபுத்தியோடு இருக்கும்போதோ என்னைக் கையாள்வது இன்னும் சுலபம். எனவே, அவள்—அந்த மாயக்காரி—என்னைத் தான் விரும்பியவாறெல்லாம் ஆட்டிப் படைக்கிறாள்.

''சில சமயங்களில், வயதான கோஸாக்குகளான நாங்கள் ஒன்று கூடி ஜாலியாகப் பொழுதைப் போக்குவதுண்டு. நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு லிட்டர் குடிப்போம்; யாரார் எங்கே வேலை பார்த்தார்கள், எங்கெங்கே சண்டை போட்டார்கள் என்ற பழைய கதைகளைப் பற்றியெல்லாம் பேசுவோம்; ஒன்றிரண்டு பாட்டும் பாடுவோம்.....ஆஞல், பாருங்கள். குதிரைக்குட்டி புல்வெளியில் எவ்வளவுதான் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தாலும், தன் தாயை நாடி வீடு தேடி ஓடிவர வேண்டிய நேரம் அதற்கு எப்போதும் வரத்தான் செய்யும். நல்லது. அதுபோல் நானும் மெல்ல மெல்ல ஊர்ந்து வீடு வந்து சேர்வேன்; அங்கோ என் மனைவி வாணலிச் சட்டியைத் துப்பாக்கியைப் போல் தயாராகக் கையில் ஏந்திக் கொண்டு, எனக்காக வாசலில் காத்துக் கொண்டு நிற்பாள். இயல்பாகவே, அதெல்லாம் ஒரு நீண்ட கதை. அதையெல்லாம் நான் சொல்லப் போவதில்லே...ஒரு விஷயத்தை மட்டும் உங்களிடம் சொல்கிறேன்: என் முதுகைக் கொண்டு கதவைத் திறப்பது எப்படி என்பதை அவள்தான் எனக்குக் கற்றுக் கொடுத்தாள். இதை நான் ஒப்புக் கொள்கிறேன். நான்

எவ்வளவுதான் குடித்திருந்தாலும், 'திரும்பி நில்!' என்று எனக்கு நானே உத்தரவிட்டுக் கொள்வதற்கு நான் என்றுமே மறப்பதில்லை. அப்படித்தான்—அதாவது முதுகைக் காட்டிக் கொண்டுதான்—நான் வீட்டுக்குள் நுழைவேன். இந்த மாதிரிப் போவது சற்றுப் பாதுகாப்பானது; இதனால் எனக்குக் குறைந்த சேதமே ஏற்படும். மறுநாள் காலையில் நான் கண் விழித்து எழுந்திருக்கும்போது, யாரோ என் முதுகில் பட்டாணிப் பருப்புச் செடிகளைச் சூடடித்துத் துவைத்த மாதிரி, என் முதுகெல்லாம் ஒரே வலியெடுக்கும். பின்னர் படுக்கைக்கு அருகில் ஒரு கோப்பையில் உப்புப் போட்டுக் கொதிக்க வைத்த முட்டைக்கோஸ் தண்ணீர் இருக்கும்; என் மனைவியும் போயிருப்பாள். எனது குடி மயக்கம் தெளிவதற்கு முன்பே, நான் எனது கோபத்தை அவள் மீது தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுவதுண்டு. என்றாலும் இரவு வரையிலும் அவள் என் கண்ணில் படுவதே அரிதாகத்தான் இருக்கும். பிசாசுகூட, தன் கையில் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு தேடிப் பார்த்தாலும்கூட, அவளை அது கண்டுபிடித்து விடாது. இதனால் இயல்பாகவே என் கோபம் பகற்பொழுது முடிவதற்கு முன்பே ஆறிப்போய் விடும். பிறகு அவள் திரும்பி வரும்போது, என்னை இனிமையாகப் பார்த்தவாறே இவ்வாறு கேட்பாள்: 'எப்படி இருக்கிறீர்கள், இக்னத் புரோக்கோ ஃபியேவிச்?' அதற்கு நான் இவ்வாறு பதில் கூறுவேன்: 'நன்றாகத்தான் இருக்கிறேன். உன்னை இன்று காலையிலேயே பிடிக்காமல் போய் விட்டேனே என்றுதான் வருத்தமாக இருக்கிறது; பிடித்திருந் தால், உன்னை நெருப்புக்கு விறகாகத் துண்டு துண்டாக வெட்டித் தள்ளியிருப்பேன்.'

''அவள் அந்த வாணலிச் சட்டிக்கு ஓக் மரக் கட்டையில் ஒரு கைப்பிடி செய்து தருமாறு என்னிடம் எப்போதும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால், நான் மட்டும் சாமானியப் பட்டவனா என்ன? எனவே நான் வேண்டுமென்றே மிகவும் உளுத்துப்போன சிறு மரத்தைத் தேர்ந்தெடுத்து, ஒடிந்து போகாத அளவுக்கு அந்த வாணலிச் சட்டியைத் தாங்கிக் கொண்டிருக்கும் கனத்துக்கு, மரக்கட்டையைச் செதுக்கிக் குறைத்துக் கொடுத்து விட்டேன்....நல்லது. எங்கள் விவகாரம் இப்படித்தான் நடக்கிறது.

''இதையெல்லாம் நான் உங்களிடம் ஏன் சொல்கிறேன் என்று நினைக்கிறீர்கள்? ஏனென்றால், பாருங்கள், நான் கல்யாணம் செய்து கொண்டபோது, என் மனைவியின் பற்களைக் கண்டுதான் பயந்தேன்; ஆனால் நான் படுகின்ற துன்பங்களோ

அவளது கைகளால்தான் நேர்கின்றன. இப்போதும் அதே நிலை தான்: நான் கூட்டுப் பண்ணையில் சேர்வதற்குப் பயப்படுகிறேன். ஆனால், யாருக்குத் தெரியும்? ஒருவேளை என் சொந்தப் பண்ணையை நான் நிர்வகிப்பதே, என்னைத் தனிமையில் தவிக்கும் ஓநாயைப் போல் ஊளையிட வைத்து விடலாம். தனியார் பண்ணைத் தொழிலையே பற்றிப் பிடித்துக் கொண்டிரு. அதைப்பற்றி அறிந்து கொள்வதற்கு முன்னால், நீ நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். என்ன, நான் சொல்வது சரிதானே?''

தனது தாடிக்குள்ளேயே சிரித்தவாறே, அவர் என்னை நோக்கிக் கண்ணைச் சிமிட்டினார்; தமது குறும்புத்தன பார்வையோடு தமது கண்களை ஏறச் சொருகினார். பார்வைக்குத் தோற்றிய மாதிரி, அவர் ஒன்றும் அத்தனை சாதாரணமான, அப்பாவியான நபர் அல்ல என்பதையும், அவர் என்னிடம் கூறிய எல்லாவற்றையும், நான் விரும்பிய வண்ணமே—அதாவது வெறும் வேடிக்கையாகவோ, அல்லது மனப்பூர்வமாகவோ—நான் எடுத்துக் கொள்ளும் பொறுப்பை, அவர் என்னிடமே விட்டுவிட்டார் என்பதையும் அந்தக் குறும்புப் பார்வை எனக்கு உணர்த்தியது.

அவர் பல நிமிட நேரம் மௌனமாக இருந்தார்; பிறகு எந்தவிதமான விளையாட்டுத் தோரணையும் இல்லாத வருத்தம் தோய்ந்த தொனியில் இவ்வாறு கூறினார்: ''என்ன செய்ய வேண்டும் என்பதை நான் எப்படித் தெரிந்து தொலைப்பது?... நல்லது. நாம் வாழத்தான் போகிறோம்; வாழ்ந்து எல்லா வற்றையும் பார்ப்போம்.''

திடீரென்று அவர் தமது ஆசனத்திலிருந்து துள்ளியெழுந்து, வண்டிக் குதிரைகளை எதிர்பாராத மூர்க்க வெறியோடு சவுக்கால் அடித்தார்; அத்துடன் அவற்றை நோக்கி இவ்வாறு கத்தவும் செய்தார்: ''ஏ, பாழாய்ப் போன தனிப்பட்ட விவசாயிகளே! இவ்வளவு நேரம் நீங்கள் ஓட்டுக் கேட்டுக் கொண்டுதானே இருந்தீர்கள். இல்லையா? இனி உங்கள் வால்களை எப்படிச் சுழற்ற வேண்டும் என்பதை உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறேன், பாருங்கள்.''

அற்ப சொற்பமான பனித்துகள்களாக இறங்கிக் கொண் டிருந்த வெண்பனி, விரைவிலேயே கனத்து விழத் தொடங்கியது; காற்றும் பனிப்படிவங்களை ரோட்டின் மீது வாரிக் கொட்டிய வாறே, மேலும் மூர்க்கமாக வீசிற்று; தமது தொடைப் பிட்டி களில் சுருள் சுருளாகப் படிந்திருந்த உறைபனியோடு களைத்துப்

போயிருந்த குதிரைகள், தமது கனத்த துள்ளல் நடையை விடுத்து, வெறுமனே நடந்து செல்லத் தொடங்கின.

நாங்கள் நிஜ்னியாப்லோன்ஸ்கோயிக் கிராமத்துக்குப் போய்ச் சேரும்போது நள்ளிரவாகி விட்டது. அங்கிருந்த குடிசைகள் ஒன்றின் மூடப்படாத, பனிக்கட்டித் துகள்கள் படிந்த ஜன்னல் களின் வழியே தெரிந்த ஒரே ஒரு மங்கிய விளக்கொளியைத் தவிர, மற்றப்படி அந்தப் பெரிய கிராமம் முழுவதுமே இருளில் மூழ்கியிருந்தது.

நாங்கள் அந்த குடிசைக்குச் சென்று, இரவில் அங்குத் தங்கிச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டோம். நான் உள்ளே சென்றேன்; புரோக்கோ ஃபியேவிச் குதிரைகளை வண்டியிலிருந்து அவிழ்த்துவிட்டுக் கொண்டிருந்தார். உள்ளே படுக்கைக்கு அருகே கிடந்த தணிவான, ஒரு பக்கம் சாய்ந்த பெஞ்சின்மீது கந்தைத் துணிகள் குவிந்து கிடந்தன; அதன் மீது ஒரு கிழவர் அகல விரித்து வைத்த கால்களோடும், சோர்வோடு குனிந்த முதுகோடும் அமர்ந்திருந்தார். அவரது காலடியில் ஒரு சிறு கறுப்பு ஆட்டுக்குட்டி, பரப்பப்பட்ட வைக்கோல் படுக்கையின் மீது சுருண்டு படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. அங்கிருந்த மெழுகுவத்தி விளக்கின் மங்கிய ஒளியில், அதன் சுருள் சுருளான ரோமம் லேசாகப் பளபளத்தது. அந்தக் கிழவர் எனது வணக்கத்துக்கு வேண்டா வெறுப்பாகப் பதில் வணக்கம் தெரி வித்தார்; பின்னர் என்னை சர்வசாதாரணமாகப் பார்த்து விட்டுத் தமது தலையை மீண்டும் தொங்கவிட்டுக் கொண்டார். அவரது பெரிய, சொரசொரப்பானக் கரம், அந்த ஆட்டுக் குட்டியை மெதுவாகவும் அன்போடும் தடவிக் கொடுத்தது; அவரது தடித்த விரல்கள் அதன் பளபளக்கும் சுருள் சுருளான ரோமத்தை மிகவும் லேசாகவே தொட்டன.

அந்தக் கிழவி—அவள் அவரது மனைவியாகத்தான் இருக்க வேண்டும்—கணப்புப் படுக்கையிலிருந்தவாறே பேசினாள்: "நீங்கள் போய் குதிரைகளை எங்குக் கட்டுவது என்பதை அவருக்குக் காட்டுங்கள்."

அந்தக் கிழவர் தமது ஆட்டுத்தோல் கோட்டைத் தோளின் மீது தொங்க விட்டவாறே, எதுவும் பேசாமல் வெளியே சென்றார்.

"நீங்கள் எப்போதுமே இவ்வளவு நேரம் கழித்துத்தான் படுக்கச் செல்வீர்களா, அல்லது உங்கள் பண்ணையில் ஏதாவது கோளாறு நேர்ந்து விட்டதா?" என்று நான் அந்த மூதாட்டி யிடம் கேட்டேன்.

அயலார் ஒருவரிடம் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிட்டதத மகிழ்ச்சியில் அவள் உடனே பதிலளித்தாள்:

''என் அருமை விருந்தாளியே, எங்களிடம் என்ன பண்ணை இருக்கிறது? எங்கள் பண்ணைத் தொழிலெல்லாம் முடிவு கண்டு விட்டதாகவே தோன்றுகிறது. இப்போது இங்கு காற்றுத்தான் தொடர்ந்து ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறது. எங்களிடம் மிஞ்சியிருப்பதெல்லாம் இரண்டு ஆடுகளும், இதோ இந்தச் சின்ன ஆட்டுக்குட்டியும்தான். எங்களிடமிருந்த நாயும்கூட, எங்களது காலியான முற்றத்திலிருந்து ஓடிப்போய் விட்டது; இங்கு காவல் காப்பதற்கு அதற்கு இனியும் ஏதும் இல்லை.''

முனகிக் கொண்டும், ஈழை மூச்செறிந்து கொண்டும் அவள் எழுந்து உட்கார்ந்தாள்; காலுறை தரித்த தனது கால்களைக் கணப்பு அடுப்பின் பக்கவாட்டில் தொங்கவிட்டுக் கொண்டாள்; பின்னர் விளக்கின் சிம்னிக்குள் எரியும் மஞ்சள் நிறமான சுடரைத் தனது கண்களை நெருக்கிச் சுருக்கிப் பார்த்தவாறே மேலும் தொடர்ந்து பேசினாள்:

''கடவுள் அறியச் சொல்கிறேன். எனது கிழட்டுக் கணவர் இப்போதெல்லாம் அவராகவே இல்லை. அவர் தூக்கமே இல்லாமல் தவிப்பது இது நாலாவது இரவு. இரவில் அவர் படுக்கப் போவார்; கொஞ்ச நேரம் படுத்துக் கிடப்பார்; பிறகு அவர் எழுந்திருந்து விளக்கை ஏற்றுவார்; மேஜை முன் அமர்வார்; ஒரு பெரிய சிகரெட்டைத் தாமே சுருட்டித் தயார் செய்வார்; அதனைப் புகைத்துக் கொண்டே, இரவு பூராவும் எதுவுமே கூறாமல், அங்கேயே அமர்ந்திருப்பார். அவரது குரல் கூட எனக்கு மறந்து போய் விட்டது. காலையில் பார்த்தால், வீடெல்லாம் ஒரே புகை மண்டிக்கொண்டிருக்கும். நம்பினால் நம்புங்கள். அந்தப் புகையினால் என் தலையே கிறுகிறுத்துப் போய் விடும். நான் மூச்சு விடுவதற்கே திணறுவேன். ஆனாலும் நான் அவரிடம் எதுவும் சொல்லத் துணிவதில்லை; அவர் என்னை மிருகத்தனமாக வெறித்துப் பார்ப்பார்; பிறகு கதவைத் தடாரென்று சாத்திவிட்டு, ஒரு வார்த்தைகூடப் பேசாமல் முற்றத்துக்குப் போய் விடுவார்.''

ரஷ்ய விவசாயிப் பெண்கள் எல்லோருக்கும் பொதுவான அந்த அனுதிகால பாவனையோடு அவள் தன் மோவாயைத் தன் கையைக் குவித்து ஏந்திக் கொண்டு, வருத்தத்தோடு இவ்வாறு கூறினாள்: ''இவர் சென்ற நான்கு நாட்களாகச் சரியாகவே சாப்பிடவில்லை. இவர் சாப்பாட்டுக்கு உட்காருவார்; கரண்டியையும் கையில் எடுப்பார்; பிறகு மீண்டும் அதனைக் கீழே வைத்து விட்டு, தமது மறுகையினால் புகையிலைப் பையை

எட்டியெடுப்பார். இந்தச் சிகரெட்டுகளைப் புகைத்துக் கொண்டே இருப்பது இவருக்கு எப்படி வெறுக்கவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. சாப்பிடாததால் இவரது முகம் எல்லாம் வற்றி வாடிப்போய் விட்டது; என்றாலும் இவர் புகைத்துக் கொண்டே இருக்கிறார். இவருக்கு மனசுதான் சரி இல்லையே தவிர, உண்மையில் இவர் ஆரோக்கியமாகத்தான் இருக்கிறார்; இந்த மனநோய்தான் இவரை அரித்துத் தின்று கொண்டிருக்கிறது...''

''என்னவிதமான நோய் அது?'' என்று நான் அந்த நோயின் காரணத்தை ஏற்கெனவே எனக்குள் ஊகித்துவிட்டு, அவளிடம் கேட்டேன்.

அந்த மாது எனது சந்தேகங்களையே உறுதிப்படுத்தினாள்.

''நாங்கள் சென்ற வாரம் கூட்டுப் பண்ணையில் சேர்ந்தோம். அதுதான். வேறென்ன? குதிரையை இவரே அங்கு கொண்டு போய் விட்டு விட்டார்; எங்களிடமிருந்த இரண்டு ஜோடி எருதுகளையும் மற்றும் பசுவையும் பொதுக் கால்நடைக் கொட்டிலுக்கு விரட்டிக் கொண்டு போய் அங்கு விட்டுவிட்டார். ஆடுகள் மட்டும்தான் எங்களிடம் இப்போது இருக்கின்றன. அந்தப் பிராணிகள் இல்லாமல் இந்த இடமே ஒரு இடுகாடு மாதிரி இருக்கிறது.''

பிறகு அவள் முன் பக்கமாகக் குனிந்தவாறு மிகவும் ரகசியமாகப் பின் வருமாறு கிசுகிசுத்தாள்: ''நேற்று இவர் வெளியே சென்று என்ன செய்தார் தெரியுமா? இவர் விறகுக்காக ஓர் ஆப்பிள் மரத்தையே வெட்டித் தள்ளி விட்டார். ஆமாம். அது ஒரு நல்ல மரம். இதை அறிந்ததும் நான் அப்படியே திணறிப் போனேன்—என் கணவருக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்க வேண்டும்! இந்த மரம்தான் எங்களுக்கு எத்தனை இனிமையான ஆப்பிள் பழங்களைப் பருவத்துக்கு முந்தியே கொடுத்துக் கொண்டிருந்தது! ஆனால் இவரோ இனிமேலும் எதைப் பற்றியும் வருந்துவதாகத் தோன்றவில்லை; அவருக்கு எதுவுமே தேவையாகவும் இல்லை; இவையெல்லாம் வேறு யாருக்கோ சொந்தமாக இருந்தாலும் கூட, இவருக்கு அதைப் பற்றிக் கவலையே இல்லை. கூட்டுப் பண்ணையில் சேருமாறு எவரும் இவரை நிர்ப்பந்திக்கவில்லை; இவராகவே இவரது சொந்த விருப்பின் பேரிலேயே, இவரது பெயரைப் பதிவு செய்தார். என்றாலும், இது இவரை என்ன கோலத்துக்கு ஆளாக்கி விட்டது, பாருங்கள். அந்தக் கூட்டத்திலிருந்து இவர் மிகவும் மகிழ்ச்சிகரமான மனநிலையோடுதான் இங்கு வந்தார். வந்து என்னிடம் இவ்வாறு

கூறினார்: 'நல்லது, மனைவியே, இப்போது நீயும் நானும் கூட்டுப் பண்ணை விவசாயிகள். நான் என் பெயரை இன்று பதிவு செய்து விட்டேன். நாம் எல்லோரும் சேர்ந்து கூட்டுறவுச் சங்கத்தில் உழைக்கப் போகிறோம். அந்தக் கூட்டுப் பண்ணையில் நாம் வயிறு புடைக்க உண்டுவிடப் போவதில்லை. என்றாலும் குறைந்த பட்சம் நாம் இனிமேல் அத்தனை அரும்பாடுபட்டு அடிமை மாதிரி உழைக்க வேண்டியிராது. நாமும் ஓய்வு பெற வேண்டிய நேரம் வந்து விட்டது.' நான் அழத் தொடங்கினேன். இவரோ, 'அசட்டுப் பெண்ணே, இனி முதியவர்களான நமது பாடு சுலபமாகத்தான் இருக்கும். எனவே கண்ணீரைத் துடைத்துக் கொள்' என்று கூறினார். ஆனால், இவர் எங்கள் கால்நடைகளைக் கொண்டு விட்டு விட்டு வந்த பிறகு, ஆளே மாறிவிட்டார்.....அவர்கள் எங்களது பசுக்களை எங்களிடம் திருப்பிக் கொடுத்து விடுவதாக உறுதி கூறினார்கள். என்றாலும், அவர்கள் திருப்பிக் கொடுப்பார்களோ, மாட்டார்களோ? யாருக்குத் தெரியும்?...''

முன் வாசல் பக்கம் பனித்துகள் நொறுங்கும் சத்தத்தையும், ஆடவர்கள் பேசும் குரல்களையும் நாங்கள் கேட்டோம். அந்தக் கிழவி பேசுவதை நிறுத்திவிட்டு, தனது கிழிந்த போர்வையைத் தலை முதல் கால் வரையிலும் முழுக்கச் சட்டென்று இழுத்து மூடிக் கொண்டாள்.

தமது உறைந்து போன கம்பளி பூட்சுகளை ஓசையெழும்ப மிதித்துக் கொண்டு, புரோகோஃபியேவிச் வீட்டுக்குள் நடந்து வந்தார்; அவருக்குப் பின்னால் அந்தக் கிழவரும் வந்தார்.

இரவு உணவு உண்ணும் போது, புரோகோஃபியேவிச் அந்த வீட்டுக்காரரை உரையாடலில் ஈடுபடுத்த என்னவெல்லாமோ செய்து பார்த்தார்; ஆனால் அந்தக் கிழவரோ உம்மென்று மௌனமாக இருந்தார்; அல்லது 'ஆம்' 'இல்லை' என்று சுருக்கமாகப் பதிலளித்தார். இதன் மூலம் தம்மிடம் விடாப் பிடியாகப் பேச்சுக் கொடுக்கும் அந்த விருந்தாளி தமக்கு ஒரு தொல்லையாக இருப்பதைத் தெளிவு படுத்தினார். இதனால் மனம் புண்பட்டவர் போல் காட்டிக் கொண்ட புரோகோஃபியேவிச் தமது ஆட்டுத்தோல் கோட்டைப் பெஞ்சின் மீது விரித்துப் படுத்துத் தூங்கப் புறப்பட்டு விட்டார். அந்தக் கிழவியும் தூங்கத் தொடங்கியிருக்க வேண்டும். கிழவர் மட்டும் தான் இன்னும் விழித்துக் கொண்டிருந்தார். அவர் முற்றத்துக்குச் சென்று, கைநிறைய விறகை அள்ளிக் கொண்டு வந்தார். பின்னர் அவர் தமது படுக்கைக்கடியில் கட்டியமைத்திருந்த சிறிய கணப்பு அடுப்பைப் பற்ற வைத்து, நெருப்பின் முன்னால்

குந்தியமர்ந்து கொண்டார். கதகதப்பை உணர்ந்து கொண்ட அந்த ஆட்டுக்குட்டி மேலும் நெருங்கி வந்தது. அது சோர்ந்து வலைந்த தனது கால்களில் ஆடிக்கொண்டே நின்றவாறு, தனது தாயை மெதுவாக அழைத்துக் கத்தத் தொடங்கியது; இறுதியில் அது அந்தக் கிழவரின் காலடியில் மீண்டும் படுத்து, தனது புடைத்த மஞ்சள் நிறக் கண்களால் நெருப்பையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்த நீண்ட, சாய்ந்த, உண்மையிலேயே பயங்கரமான கண்களில் நெருப்புத் தழல்களின் வர்ணஜாலப் பிரதிபலிப்புக்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

''இந்தப் பூச்சியைத்தான் பாருங்களேன். இது இப்போது தான் பிறந்தது; எனினும் அதற்குள் இதற்கு எங்கே இருந்தால் நல்லது என்பது தெரிகிறது'' என்று அந்தக் கிழவர் அந்த ஆட்டுக்குட்டியைத் தலையசைப்பால் சுட்டிக் காட்டியவாறு மெல்லப் புன்னகை புரிந்தார்.

இப்போது அவரது நெடிய மௌனம் குலைந்து போய் விட்டதால், நான் அவரிடம் இவ்வாறு கேட்கத் துணிந்தேன்: ''நீங்கள் ஏன் படுக்கையில் போய்ப் படுத்துத் தூங்க முற்பட வில்லை?''

''எனக்குத் தூக்கம் வரவில்லை. அதனால்தான்.''

அவர் தம் மனத்துக்குள் சுமந்து கொண்டிருந்த துயரம் பொங்கி வழியத் தொடங்கியது போலத் தோன்றியது. இனியும் அவரால் அதனை மௌனமாகத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே அவர் அடிக்கொருதரம் தமது வருத்தம் தோய்ந்த குழிந்த கண்களால் என்னைப் பார்த்தவராய் தமது மனப் பாரத்தை என்னிடம் இறக்கி வைத்தார்.

''கிழவர்கள் எப்போதுமே ஆழ்ந்து தூங்குவதில்லை; அதிலும் இப்போது இருந்து வரும் நிலைமைகளில், அவர்கள் தூங்குவதே கிடையாது. எங்களது விவசாய வாழ்க்கையைப் பற்றிக் கமாஸ்தாக்களும், நகரவாசிகளும் மிகவும் அநாயாசமாக நினைத்து விடுகிறார்கள். ஆனால் அவர்கள் அப்படி நினைக்கக் கூடாது. அன்றொரு நாள் ஒருவர் எங்கோ போகிற வழியில் இங்கு வந்திருந்தார்; அவர் வட்டாரக் கேந்திரத்தைச் சேர்ந்த பிரதிநிதி. அப்போதுதான் நான் எருதுகளையும் பசுவையும் கூட்டுப் பண்ணைக்குக் கொண்டு சென்றிருந்தேன். அப்போது அவர் என்னிடம் இவ்வாறு கூறினார்: ''தாத்தா, இனிமேல் நீங்கள் நிம்மதியாக இருக்கலாம். உங்களுக்கு உலகில் ஒரு கவலையும் இராது. தொழுவங்களையெல்லாம் நீங்கள் கழுவிச்

சுத்தம் செய்ய வேண்டுமே என்றோ, மாடுகளுக்குத் தீனி வைக்க வேண்டுமே என்றோ கவலைப்படவே தேவையில்லை. மாரிக்காலம்தான் வரட்டுமே, வந்தால் நீங்கள் பாட்டுக்கு உண்டுவிட்டு உறங்கலாம். வசந்த பருவத்தில் அல்லது அறுவடைக் காலத்தில் மட்டும் நீங்கள் உங்களால் முடிந்த அளவுக்குக் கூட்டுப் பண்ணைக்கு உதவினால் போதும்.'

''எதையும் அநாயாசமாகக் கருதும் நபர் அநாயாசமாகத் தான் பேசுவார். நான் சோம்பேறியாயிருக்க விரும்புவதாலா கூட்டுப் பண்ணையில் சேர்ந்தேன்? என் கைகளில் பலம் இருக்கும் வரையில், என் கால்களால் நான் எழுந்து நிற்க முடிகிற வரையில், நான் நிச்சயம் உழைக்கத்தான் செய்வேன். அப்போதுதான் நான் சடைவு தட்டிப் போய்ச் சாக மாட்டேன். ஆனால் அவரது கருத்தோ இப்படித்தான் இருந்தது: அதாவது இப்போது நான் என் கால்நடைகளைக் கை கழுவி விட்டதால் நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டாக வேண்டும். அவை கையை விட்டுப் போன வரையில் நல்லது என்பதுதான் அவரது கருத்து. ஆனால் உண்மையில், அவர் எப்படி நினைத்தாரோ அப்படி அது இருக்கவே இருக்காது. நான் எனது குதிரை, எனது எருதுகள், எனது வண்டி, இரும்புச் சக்கரங்களைக் கொண்ட குதிரை வண்டி, இரண்டு குதிரைக் கழுத்துப் பட்டிகள், மற்றும் என்னிடமிருந்த சேணங்கள் எல்லாவற்றையும் கொடுத்து விட்டேன். இப்போதோ நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேனா இல்லையா என்றே எனக்குத் தெரியவில்லை. இந்தப் பரந்த உலகம் முழுவதுமே எனக்கு இருண்டு போனது போல் தோன்று கிறது....என் இதயமே நொந்து போய் விட்டது; இந்நிலையில் நான் செய்யக் கூடியது ஒன்றுமே இல்லை; இதுவே என்னைச் சோர்வடையச் செய்கிறது. சிறுபிள்ளையாயிருந்த காலத்தி லிருந்தே நான் குதிரைகளுக்கும் எருதுகளுக்கும் அருகிலேயே வளர்ந்தேன்; என் வாழ்க்கை முழுவதுமே அவைதான் எனக்கு உணவளித்து வந்துள்ளன; அவற்றோடு சேர்ந்தே எனக்கும் முதுமைதட்டி வந்திருக்கிறது; இப்போதோ நான் எந்த இழுவைக் கால்நடைகளும் இல்லாமல் இருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்க்கும்போது, நான் காட்டிலுள்ள ஒரு பழைய அடிமரக் கட்டையைப் போலவே உணர்கிறேன்....எனக்காக இப்போது முற்றத்தில் எதுவும் காத்துக் கொண்டிருக்கவில்லை. அந்த முற்றம் காலியாகக் கிடக்கிறது, பார்த்தீர்களா?..இதை உங்களால் புரிந்து கொள்ள முடியுமா? முற்றத்தில் எனக்காக யாரும் காத்துக் கொண்டிருக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியுமா? அல்லது இந்த மாதிரியான வருத்தம் ஒரு

மனிதனின் இதயத்தில் ஒரு சுமையாகவே இருப்பதில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

"உதாரணமாக, எருதுகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றுக்கு எவ்வளவு பராமரிப்பு தேவை என்பதை அறிந்தால். நீங்கள் வியந்து போவீர்கள். கோடைப் பருவத்திலும், அறுவடைக் காலத்திலும் அவற்றை இரவெல்லாம் இரைமேய விடவேண்டும்; அப்போதுதான் அவற்றுக்கு ஏராளமான பலம் இருக்கும்; மேலும், அவை பொழுது விடிவதற்குள் எங்காவது வழி தவறிப் போய்விடக் கூடாதே அல்லது வேறு யாருடைய கோதுமை வயலையேனும் பாழ்படுத்திவிடக் கூடாதே என்ற பயத்தால் இரவெல்லாம் எங்களுக்குக் கண்ணை மூடாது' என்றாலும், நாங்கள் பகல் நேரத்திலும் உழைத்தாக வேண்டும். இவ்வாறு சேர்ந்தாற்போல் பல இரவுகள் நாங்கள் தூங்காது இருந்தால், எங்களுக்குக் குடிகாரன் போல் தள்ளாட்டம்தான் ஏற்படும்; அதனால் கையிலுள்ள கவட்டைக் கம்பும் கூடக் கீழே விழுந்து விடும். அது அத்தனை கனமாக இருப்பதாகத் தோன்றும். இலையுதிர்காலம் வரும்போதோ, நாங்கள் இந்த எருதுகளோடு ஓய்வொழிச்சல் இல்லாது உழைக்க வேண்டி யிருக்கும்; மாரிக்காலம் முழுவதிலும் கூட இப்படித்தான். அப்போது இரவில் இரண்டு அல்லது மூன்று முறை எழுந்திருந்து, அவற்றைப் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும். தொட்டியில் நிறைய வைக்கோலைப் போட்டு வைக்க வேண்டும்; ஏனெனில் மாரிக்காலத்தில் இரவுகள் எல்லாம் நீண்ட இரவுகள். இதற்காக மாலையிலேயே அவற்றுக்கு ஏராளமான தீனியை வைத்து விடவும் முடியாது; ஏனெனில் அவை அவற்றைத் தமது காலடியில் சிந்திச் சிதறி, ஏராளமான தீனியை வீணடித்து விடும். மேலும் எங்களிடம் இருக்கும் வைக்கோல், வசந்த பருவம் வருகிற வரையில் கையிருப்பு இருக்க வேண்டும். மாரிக்காலத்துக்குப் பிறகு எருதுகள் எவ்வளவுதான் திடகாத்திர மாக இருப்பதாகத் தோன்றிய போதிலும், வசந்த பருவத் திலும் அவற்றுக்கு நாங்கள் சரிவரத் தீனி கொடுத்து வர வேண்டும். இல்லாவிட்டால், முதல் வெப்பக் காற்று வீசியதுமே அவை தடத்தில் படுத்துக் கொண்டு அசையாமல் சண்டித்தனம் பண்ணும். அப்போது அவற்றோடு எங்களுக்குப் பெரிய தொல்லைதான். இதை நான் நிச்சயமாக உங்களுக்குச் சொல்ல முடியும்.

"குதிரை விஷயத்திலும் இப்படித்தான். அதற்கும் இதே மாதிரி நல்ல பராமரிப்புத் தேவை. அதற்கும் நீங்கள் உரிய காலத்தில் தண்ணீர் காட்ட வேண்டும்; அதை நன்றாகத்

தேய்த்துவிட வேண்டும். மேலும், இரவில் எங்கேனும் போவதற்கு முன்னால் நாங்கள் அதற்குத் தின்பதற்குத் தானியமோ அல்லது அரிந்து போட்ட தீவனமோ கொடுத்தாக வேண்டும்.. ஒரு நல்ல விவசாயி தனது இரவை இப்படித்தான் —அதாவது பராமரிப்பிலும் வேலையிலும்தான்—கழிக்கிறான். எனவேதான் அவன் ஒரு முயல் மாதிரி தூங்கக் கற்றுக் கொள்கிறான்: அவன் தூங்குவதுபோலத்தான் தோன்றும்; என்றாலும் அவன் காதுகள் மட்டும் எப்போதும் உஷாராகவே இருக்கும்; முதல் சேவலின் குரல் கேட்டதுமே அவன் படுக்கையிலிருந்து எழுந்து வேலைகளைத் தொடங்கிவிட வேண்டும்; படுக்கையில் சோம்பிக் கிடக்க அவனுக்கு நேரமே கிடையாது.

''எனக்கு நானே எஜமான் ஆன காலந்தொட்டு இந்த ஐம்பது ஆண்டுகளில் நான் இரவு முழுவதும் தூங்கும் பழக்கத்தையே விட்டு விட்டேன். இப்போதோ நான் தூக்கத்தையே அறவே இழந்து விட்டேன். முதலில் நான் லேசாகக் கண்ணயர்வேன்; ஆனால் நடுராத்திரி வாக்கில் விழித்துக் கொள்வேன். என் தூக்கமே போய்விட்டது. நான் இப்போது விழித்துக் கொண்டே இருக்கிறேன். நேற்றிரவிலும்கூட நான் சற்றே கண்ணயர்ந்தேன்; என்றாலும் திடுக்கிட்டு விழித்தெழுந்து விட்டேன்; ஏனெனில் எருதுகளுக்கு இன்னும் கொஞ்சம் வைக்கோல் போட வேண்டிய நேரம் வந்துவிட்டது. நான் எனது வெற்றுக் கால்களைக் கம்பளிப் பூட்சுகளுக்குள் திணித்துக் கொண்டு, ஆட்டுத்தோல் கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டு, முற்றத்துக்குச் சென்றேன். தானியக் குதிர் இருக்கும் இடத்துக்கு அருகில் போனபோதுதான், எனது எருதுகள் பொது மாட்டுக் கொட்டிலில் இருந்தன என்பதும், இறுதியாக எனக்கு நிம்மதியான வாழ்க்கை வந்து விட்டது என்பதும் எனக்கு நினைவு வந்தது...இந்த நிம்மதியான வாழ்க்கையினால் எனது இதயமே நோயுற்று விட்டதை நான் உணர்ந்தேன். இது மோசமான நோயைக் காட்டிலும் படுமோசமாக இருந்தது!''

நான் நிம்மதியற்றுத்தான் தூங்கினேன். இரவில், நெடு நேரம் கழித்து அந்தக் கிழவரின் புலம்பும் ஊமைக்குரலும் அவரது வறண்ட இருமலும் கேட்டன. புரோக்கோஃபியேவிச் என்னைச் சூரிய உதயத்துக்கு முன்பே எழுப்பி விட்டார். சின்னக் கணப்பு அடுப்பில் கரித்துண்டுகள் சாம்பல் படர்ந்து மங்கிச் சுடர் விட்டன; அவற்றின்மீது சின்னஞ்சிறிய நீல நிற நெருப்புத் தழல்கள் குதூகலத்தோடு ஆடிக் கொண்டிருந்தன. அந்தக் கிழவர் தமது தணிவான பெஞ்சின் மீது அமர்ந்து, தமது படுக்கையில் முதுகைச் சாய்த்தவாறே தூங்கிக் கொண்டிருந்தார்.

அவரது கை முன்னைப்போலவே அந்த ஆட்டுக்குட்டியைத் தொடுவதற்காகக் கீழே தொங்கிக் கொண்டிருந்தது; அவரது பெரிய, தடித்த, முடிச்சு விழுந்த விரல்கள் நடுங்கின; அவை அந்த ஆட்டுக்குட்டியின் சுருண்ட ரோமத்தை லேசாகத் தடவிக் கொடுத்தன.

புரோக்கோஃபியேவிச்சின் காலடியோசையிலும் தூக்கம் கலைந்த அந்தக் கிழவர் தூக்கத்திலேயே அசைந்து கொடுத்தார்; என்றாலும் அவர் தம் கைகளை மட்டும் அவை எங்கிருந்தனவோ அங்கேயே வைத்திருந்தார்; அதாவது அவருக்குச் சொந்தமாக விருந்த அந்தக் கடைசி அப்பாவிப் பிறவியான அந்த ஆட்டுக் குட்டியைத் தூக்கத்தில்கூட விட்டுப் பிரிவதை எண்ணி அவர் பயந்து நடுங்குவதுபோல் தோன்றியது. அந்த ஆட்டுக் குட்டியின் ஜீவனுள்ள அன்புதான், ஒரு தனிப்பட்ட விவசாயி என்ற முறையில் அவரது அண்மைக் கடந்த காலத்தோடு அவருக்கு மிஞ்சிய ஒரே தொடர்பாக இருந்தது.

* * *

சென்ற இலையுதிர் பருவத்தில் நான் ஸ்டாலின் கிராடி விருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது, இந்தக் கிழவரை நினைவு கூர்ந்தேன்.

கலாச்சுக்குச் சற்று அருகிலிருந்த கூட்டுப் பண்ணைகள் ஒன்றுக்கு நாங்கள் நள்ளிரவில் போய்ச் சேர்ந்தோம். அப்போது, 1930-ல் நாங்கள் செய்ததைப் போலவே இப்போதும் ஜன்னலில் விளக்கு வெளிச்சம் தெரிந்த அந்த ஒரே வீட்டுக்கே காரை ஓட்டிச் சென்றோம். இந்த வீடு புல்மண்டி வளர்ந்திருந்த ஓர் அகலமான தெருவின் கோடியிலிருந்த சிறு குடிசையாகும்.

அந்த நிலவொளிக் காட்சியில் உள்ளத்தைத் தொடும் அருமை யான ஏதோ ஒரு சுகம் இருந்தது. நான் புதிதாக வெள்ளை யடிக்கப்பட்ட குடிசைகளைக் கொண்ட ஒரு வீதியையும், அவற்றுக்குக் காவல் காத்து நிற்பது மாதிரித் தோன்றிய நெட்டையான லொம்பார்டி பாப்லார் மர வரிசைகளையும் கண்டேன். காரோட்டி காரை நிறுத்தினார்; உடனே அருகிலுள்ள புல்வெளியிலிருந்து வரும் காஞ்சிரைச் செடியின் கசப்பு மணம் என் நாசித் துவாரங்களைத் தாக்கியது.

காரின் விளக்கொளி அந்தத் தாழ்ந்த கபிலநிற வேலியின் மீதாகப் பாய்ந்து சென்றபோது, தமது தோள்மீது ஒரு கம்பளிக் கோட்டைத் தொங்க விட்டுக் கொண்டிருந்த ஒரு மனிதர் வெளி முற்றத்தில் காட்சியளித்தார். கண்ணைக் கூச வைக்கும் அந்த வெளிச்சத்துக்கெதிராக அவர் தமது கண்களைச் சுருக்கி நெரித்துக் கொண்டு முற்றத்தின் படிகளில் கெந்திக் கெந்தி

இறங்கி வந்தார்; வரும்போதே அவர் இவ்வாறு குரல் கொடுத்தார்:

''யாரது? கொலஸ்னிச்செங்கோவா?'' வாசலுக்கு வந்ததும் அவர் ஏமாற்றத்துடன் இவ்வாறு கூறினர்: ''இல்லே. இது ஒரு பயணிகள் கார். சரி, யார் நீங்கள்? எங்கிருந்து வருகிறீர்கள்?''

''பார்த்தீர்களா? உங்களுக்கு ஒரு வீட்டுச் சொந்தக்காரர் வந்து விட்டார். ஆனால் வரும்போதே கடுமையாகத்தான் வருகிறார்'' என்று காரோட்டி வேடிக்கையாகக் கூறினர்: ''நாம் இன்னும் வாசலில் வந்துகூட நிற்கவில்லே; அதற்குள் இவர் நம்மைக் கேள்விகள் கேட்கத் தொடங்கி விட்டார். மேலும் நாம் எதுவும் தெரிந்து கொள்வதற்கு முன் இவர் நம்மிடம் நமது சான்றுப் பத்திரங்களைக் காட்டுமாறு உத்தர விடுவார் போலிருக்கிறது. இங்கு எல்லோருமே இவ்வளவு கண்டிப்புத்தானு?''

கம்பளிக் கோட்டணிந்த அந்த மனிதர் எங்களது காரின் கதவருகே வந்தார்; வந்து நல்ல சுமுக பாவத்துடனேயே இவ்வாறு கூறினர்:

''நல்லது. உங்கள் சான்றுப் பத்திரங்களைக் காட்டுமாறு, நான் உங்களிடம் கேட்கவும் கேட்கலாம். நீங்கள் இரவு இங்கே தங்க உத்தேசிக்கிறீர்கள் என்று கருதுகிறேன், அப்படித்தானு? நல்லது. அதுதானே விஷயமெல்லாம். இப்போது அகாலமாகி விட்டது; நான் யோசனை சொல்லக் கூடிய இடமும் வேறில்லே. எனவே, நீங்கள் என்னுடுதான் தங்க வேண்டியிருக்கும். கேள்விகள் கேட்டதைப் பொருட்படுத்தாதீர்கள். அது ஒரு போர் முனைப் பழக்க வாசனை...மேலும், கூட்டுப் பண்ணையின் தலைவராக நான் இருப்பதால், கேட்பதற்கு எனக்கு அதிகாரமும் உள்ளது.''

அவர் வீட்டுக்குள் அழைத்துச் சென்றார். அங்கு ஒரு விசாலமான படுக்கையில் ஒரு முதிய மாதும் இரு பிள்ளைகளும் தூங்கிக் கொண்டிருந்தனர். அவள் ஒரு கணம் தன் கண்களைத் திறந்தாள்; உடனேயே மீண்டும் கண்களை மூடி, படுமோசமாகக் களைத்துப் போய்விட்ட ஒரு நபரின் தன்னை மிஞ்சி வரும் ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கி விட்டாள். எங்களை வரவேற்றவர் மெழுகு வத்தி விளக்கின் திரியைச் சற்றுத் திருகி மேலேற்றினர்; பிறகு எங்களை உட்காரச் சொன்னர்.

''நீங்கள் என்னை மன்னிக்கத்தான் வேண்டும். ஆனால் நான் என் மனைவியை இந்நேரத்தில் எழுப்பப் போவதில்லே'' என்று தமது குரலைக் கிட்டத்தட்ட ரகசியம் பேசுவதுபோல்

தாழ்த்திக் கொண்டு கூறினர் அவர்: ''அரசாங்க ஸ்டோருக்குத் தானியத்தை சப்ளை செய்யும் வேலையினால் அவள் மூன்று இரவுகளாகப் படுத்துறங்கவே இல்லை.''

சூரிய வெப்பத்தால் காய்ந்து கறுத்த அவரது முகத்தின் பக்கவாட்டுக்களில் தெரிந்த நரை மயிரும், அவரது நெற்றியில் ஆழமாகக் கோடிட்டுத் தோன்றிய வரிக்கோடுகளும், அந்த மனிதரின் வாழ்க்கையொன்றும் சுலபமானதாக இருந்ததில்லை என்பதை எங்களுக்கு உணர்த்தின.

அவர் தமது கால் விரல் மூளைகளால் அரவமில்லாமல் நடந்து சென்று, ஒரு பால் ஜாடியைக் கொண்டு வந்து, மேஜை மூன் எங்களோடு அமர்ந்து கொண்டார்.

''இதனை நீங்கள் அருந்துங்கள், இப்போது என்னால் கொடுக்க முடிந்த உணவெல்லாம் இது மட்டும்தான்.''

''நீங்கள் நெடுநாட்களாகத் தலைவராக இருந்து வருகிறீர்களா?'' என்று அவரிடம் கேட்டேன்.

''1943 முதற்கொண்டு. எனது காலில் பட்ட காயத்தின் விளைவாக, நான் மருத்துவக் காரணத்தினால் படையிலிருந்து விடுவிக்கப்பட்டு போர் முனையிலிருந்து இங்கு திரும்பி வந்தேன். வந்தபின் விரைவிலேயே இந்தப் பண்ணையின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.''

அவரது தோற்றத்திலிருந்து அவருக்குக் குறைந்தபட்சம் அறுபது வயதாவது இருக்க வேண்டும் என்று தெரிந்தது; எனது காரோட்டி அவரிடம் சற்று வியப்புடனேயே இவ்வாறு கேட்டார்:

''நீங்கள் போர் முனைக்கு எப்படிப் போக முடிந்தது? உங்களைப் போன்ற வயசாளிகளைப் படையில் சேர அழைக்கவில்லையே.''

அந்த வீட்டுக்காரர் கருமயிரும் நரைமயிரும் கலந்திருந்த தமது மீசையைக் குதூகலமிக்க அநாயாச பாவத்தோடு தடவிக் கொடுத்தவாறு பல்லைக் காட்டிச் சிரித்தார்:

''நீ அங்கு எப்படிப் போய்ச் சேர்ந்தாயோ, அப்படித்தான் நானும் போய்ச் சேர்ந்தேன், மகனே. என் வயதுக்கொத்த நபர்களைப் படையில் சேர்க்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், என்னால் இனியும் தாங்கிக் கொண்டிருக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டபோது, நான் 1942 கோடைப் பருவத்தில் ஒரு தொண்டர் படை வீரனாகச் சேர்ந்தேன். எங்கள் வட்டாரக் கட்சிக் கமிட்டியின் செயலாளர் என்னைப் பார்த்துச் சிரித்து விட்டு, இவ்வாறு கூறினர்: 'உங்கள் வயதில் நீங்கள்

அங்கு போய் என்ன செய்ய முடியும்? அவர்கள் உங்களைக் காலாட்படைக்குத்தான் அனுப்பி வைக்கக் கூடும். தெரியுமா? அவ்வாறு சென்றால், அங்குள்ள இளைஞர்கள் முன்னால் நீங்களே உங்களை அவமானப்படுத்திக் கொள்வீர்கள். நீங்கள் இங்கேயே ஒரு கோஷ்டித் தலைவராக வேலை பார்க்கலாமே. நமக்குப் பின்னணியிலும் ஆட்கள் தேவைப்படுகிறது.' இதற்கு நான் இவ்வாறு அவரிடம் பதில் சொன்னேன்: 'தோழர் செயலாளரே, ஜெர்மானியர்கள் எவ்வளவு பெரிய ஆக்கிரமிப்பைப் புரிந்திருக்கிறார்கள் என்பதைக் கண்ட பிறகு, இது சிரிப்பதற்குரிய நேரமல்ல. என்னைப் பற்றியே எனக்கு நிச்சயமில்லாவிட்டால், நான் இவ்வாறு சேர முன்வந்திருக்க மாட்டேன். கோஷ்டித் தலைவர் வேலையைப் பொறுத்த வரையில், புத்திசாலிகளான நமது பெண்களில் எவரேனும்கூட அதனைச் செய்துவிட முடியும். இப்போதே அவர்கள் நம்மை அதிகாரம் செய்து வரும் தோரணையைத்தான் பாருங்களேன்.' நல்லது, கடைசியாக நான் படையில் சேர்ந்தே விட்டேன். முதலில் அவர்கள் என்னை ஒரு ஸாப்பர் கம்பெனியில் டிரைவராக நியமிக்க விரும்பினர்; ஆனால் நான் என்னைக் காலாட்படைக்கு மாற்றுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். என் வயதுக்கு அது ஒன்றும் எளிதான வேலையல்லதான். ஆமாம், நான் சொல்கிறேன், அது எளிதான வேலையே அல்ல. என்றாலும், அதில் சேர்வதற்கு நானே விருப்பம் தெரிவித்ததால், நான் பல்லைக் கடித்துக் கொண்டு அதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. நான் ஸ்டாலின்கிராடில் போரிட்டேன்; குர்ஸ்க் வரையிலும்கூட வந்தேன்; புரோக்கோரோவ்காவுக்கு வந்தவுடன் என்னைப் பொறுத்த வரையில் போர் முடிந்து விட்டது—மருத்துவக் காரணங்களால் நான் வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டேன். துரதிருஷ்டம்தான். போனால் போகிறது, எனவே நான் படையில் ஒரே ஒரு வருஷம்தான் இருந்தேன்; எனினும் மூன்று முறை காயமடைந்து விட்டேன். மேலும் நான் முன்னைப்போல் இளமைமிக்கவனுகவும் இல்லை. தெரிந்தா?''

தமது கதையின் இந்தப் பகுதிக்கு அவர் வந்ததும், அவர் கண்காண மிகவும் உற்சாகம் மிக்கவராக மாறி, சற்று உரத்த குரலில் பேசத் தொடங்கி விட்டார்:

''இளைஞர்களுக்குக் காயம் பட்டால், இளம் மரங்களில் வெட்டுப் பட்டால் அவை எப்படி விரைவில் ஆறிவிடுகிறதோ அப்படி அந்தக் காயங்கள் விரைவிலேயே ஆறி விடுகின்றன. ஆனால் கிழவன் விஷயத்தில் அவை அப்படி ஆறுவதே இல்லை. இதனை நான் என் அனுபவத்திலிருந்தே அறிவேன். இரண்டாம்

முறை நான் காயம் பட்டபோது, என்னைத் தாம்போவிலுள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு தமது கால்களை இழந்துவிட்ட சில மனிதர்களும் இருந்தனர். அங்கு வயதான வர்கள்தான் சோர்ந்து போய்க் கிடந்தார்கள். அவர்கள் மஞ்சள் நிறம் பாரித்துச் சுருக்கம் விழுந்த தமது முகங்களோடு இரவெல்லாம் வலியால் முனகிக் சொண்டும், அழுது கொண்டும், நிலை கொள்ளாமல் துள்ளிப் புரண்டுக் கொண்டும், இனி தமது குடும்பங்களை எவ்வாறு காப்பாற்றப் போகிறோம், நொண்டிகளாக எவ்வாறு வாழ்க்கையை எதிர்நோக்கப் போகிறோம் என்றெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டும் அங்கு படுத்துக் கிடந்தனர். அவர்களது அசைவினால் அவர்களது படுக்கைகள் இரவெல்லாம் கிரீச்சிட்டன. இயல்பாகவே, அந்தத் தூக்கமில்லா இரவுகளில் அவர்களது சிந்தனைகளும் நொம்பலப் பட்டவையாகவே இருந்தன. ஆனால் அங்கிருந்த ஓர் இளைஞன்– அவன் அலட்டிக் கொள்ளவே இல்லை. அவனும்தான் பயங்கர மாக வருந்தினான் என்பது உண்மை. ஆனால் அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டான். காலையில் அவன் கண் விழித்து எழுந்ததும், தன் ஊன்றுகோல்களை யாரே எடுத்துக் கொண்டுபோய் விட்டார்கள் என்று அறியும் போது–அந்த ஆஸ்பத்திரியில் இருந்த அத்தனை பேருக்கும் போதுமான ஊன்றுகோல்கள் அங்கிருக்கவில்லை–அவன் கவலைப்பட மாட்டான். தான் எங்கு போக விரும்புகிறானோ, அங்கே எப்படி யாவது போய் விடுவான். அதாவது ஒற்றைக் காலால் துள்ளித் துள்ளி நொண்டியடித்துக் கொண்டும், கட்டில்களின் முதுகுச் சட்டங்களையோ அல்லது தனக்கு ஆதரவாகக் கிட்டக்கூடிய எதையாவது பிடித்துக் கொண்டும் அவன் போய்விடுவான். அவ்வாறு அவன் நொண்டியடித்துச் செல்லும்போது, அவன் காதலைப் பற்றிய ஒரு சிறு பாட்டையும் கூடப் பாடுவான். இளமை என்றால் அப்படித்தான்! அவனைப் பார்க்கும்போது நமக்கு வருத்தம் ஏற்படும்; பொறுமையும் கூட ஏற்படும். நானும் இருபது அல்லது முப்பது வயது குறைந்தவனாக இருந்திருந்தால் நானும் ஒரு குருவியைப் போலத் தத்தித் தத்தி நடக்கவும் செய்வேன் என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டிருக்கவும் கூடும்.

''சில சமயங்களில் ஓர் இளம் போர் வீரனை அந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து சேர்க்கும் நேரத்தில் அவன் மிகவும் மோசமான நிலையில்கூட இருப்பான். ஆனால் இரண்டே வார கால அளவுக்குள்ளாகவே அந்தப் பீரங்கிக்குப் பிறந்த பயல் நர்சுகளை நோக்கிக் கண்ஜாடைகள் காட்டவும், குதிரையைப்

போல் உஸ்யென்று மூக்கை உறிஞ்சிப் பெருமூச்சு விடவும், முகத்தைப் பல விதத்திலும் கோணலாக்கி வக்கணைகள் காட்டவும் தொடங்கி விடுவான். உதாரணமாக, அந்த மாதிரிக் கோரணிகளை என் வயதில் நானும் கூட ஜென்மத்தில் செய்ய முடியாது. நாம் அவனைப் பார்த்து வியந்து கொண்டே இருக்கலாம்! ஆனால் மிகவும் லேசான காயம்பட்ட வயதான போர் வீரனை, எந்நேரமும் படுக்கையிலே படுத்துக் கிடப்பதன் மூலம் மனம் புளித்துப் போய் விடுவான்; அவன் டாக்டர் களையும் நர்சுகளையும் நச்சரிப்பான்; தன்னையே நொந்து கொள்ளத் தொடங்கி விடுவான். என்றாலும், தான் பல நாட்களுக்கு முன்பே குணமாகி எழுந்து நடக்கத் தொடங்கி விட்ட போதிலும் கூட, மற்றவர்களுக்கு மிகவும் தேவைப்படும் கட்டிலை விடாமல் பிடித்துக் கொண்டு அதில் படுத்துக் கொண்டு, முகட்டையே வெறித்து நோக்கி முகத்தைச் சுளித்துக் கொண்டே கிடப்பான்.

"ஆயினும், நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், வயதானவர்களான நாங்களும் இந்தப் போரில் ஈடுபட்டோம் என்றால், அதற்குக் காரணம் எதிரி நமது சோவியத் ஆட்சியின் கீழ் நாம் அடைந்திருந்த ஆதாயங்கள் எல்லாவற்றையும் நம்மிடமிருந்து முழுமையாகப் பறிக்கப் போவதாக அச்சுறுத் தியதுதான். எனவேதான் நாங்களும் படையில் சேர வேண்டி யிருந்தது. நீங்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்....

"எனக்கும் கூட குண்டுச் சிதறலால் ஓர் எலும்பு நொறுங்கிப் போய்விட்டது; என்ன செய்தும், அவை ஒன்று சேரவே இல்லை. இது ஆறுவதற்கு ஏன் இவ்வளவு காலம் பிடிக்கிறது, ஒரு வேளை, பிளாஸ்டர் கட்டைச் சரியாகப் போடவில்லையா என்று டாக்டரிடம் நான் கேட்டபோது, அவர் உங்களுக்கு என்ன வயதாகிறது என்று என்னிடம் கேட்டார். ஐம்பத்தாறு என்று அவரிடம் சொன்னேன். இதைக் கேட்டதும் அவர் சிரித்தார்; பிறகு இவ்வாறு சொன்னார்: 'இன்னும் இருபது ஆண்டுகள் கழித்து நீங்கள் காயமடைந்தால், பிறகு உங்கள் எலும்புகள் என்றைக்குமே பொருந்திச் சேராது.' அப்படி யென்றால், இன்னும் இருபதாண்டுக் காலத்துக்கு நான் போரிட்டுக் கொண்டே இருப்பேனா என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். நல்ல தொழில்தான்!

"நான் அவரிடம் இவ்வாறு கூறினேன்: 'இல்லை, டாக்டர் தோழரே! நான் இந்த நாஜிகளைச் சீக்கிரமே தீர்த்துக் கட்டியாக வேண்டும். முதலாவதாக, அவர்கள் என்னை மிகவும் வேதனை யடையச் செய்து விட்டார்கள்; இரண்டாவதாக, நானும்

அவர்களோடு எல்லா நேரமும் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்க முடியாது. மேலும், இருபதாண்டுக் காலம் போனால், நான் ஒரு போர் வீரனாக இருந்து என்ன பிரயோஜனம்? அப்போது, நான் கெந்திக் கெந்தி நடக்கும் அவமானத்துக்கு உள்ளாகியிருப்பேனே தவிர, போர் வீரனாக இருக்க மாட்டேன். அப்போது நான் சொல்லாமல் கொள்ளாமல் எங்கேனும் போய் விட்டாலும் கூட, எனது படைப்பிரிவின் தளபதிக்கு ஒன்றும் தூக்கம் கெட்டுப் போகாது. அந்தக் காலத்துக்குள் என் உடம்பிலிருந்து உதிர்ந்து விழும் செதில் துகள்களின் தடத்தைப் பின்பற்றியே அவர் என்னை விரைவில் கண்டுபிடித்து விடுவார்.'

''அந்த டாக்டர் ஒரு குஷியான பேர்வழி. எனவே அவர் வெறுமனே சிரித்துக் கொண்டே இவ்வாறு கூறினார்: 'கவலைப் படாதீர்கள், எல்லாவற்றையும் டாக்டர்களான எங்களிடம் விட்டு விடுங்கள். அவசியம் ஏற்பட்டால், இருபது ஆண்டு களுக்குப் பின்னரும் கூட, உங்கள் உடம்பிலிருந்து ஒரு செதில்துகள் கூடக் கீழே விழாத அளவுக்கு நாங்கள் அத்தனை சுத்தமாக உங்களுக்கு ஒட்டுப் போட்டு விடுவோம். அப்புறம், தலையையும் வாலையும் மேலே உயர்த்திக் கொண்டு திரியும் இளம் சேவற் கோழியைப் போல் நீங்களும் பீடுநடை போட்டுத் திரியலாம்!' நான் அந்த ஆஸ்பத்திரியில் சுமார் இரண்டு மாத காலம் தங்கியிருந்தேன். அவர்களும் உண்மையில் மிக நன்றாகவே என்னை ஒட்டுப் போட்டு ஒன்று சேர்த்து விட்டார்கள். ஆனால், குர்ஸ்சில் எனக்கேற்பட்ட காயம் தான் உண்மையிலேயே என்னை விழத்தட்டி விட்டது.''

சற்று நேரம் கழித்து, அவர் ஏதோ நியாயம் கற்பிக்கும் தொனியில் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்: 'அந்த மாதிரியான ஒரு எதிரிக்கு எதிராக, இனி நான் போய் எப்படிப் படையில் சேர முடியும்? அந்தப் பாழாய்ப் போன நாஜிகள் நாசமாக்கி விட்ட வாழ்க்கையை நினைத்துப் பாருங்கள்! போர் தொடங்குவதற்கு முன்னால் எங்கள் கூட்டுப் பண்ணைக்கு மூன்று டிரக் வண்டிகளும், இரண்டு பள்ளிக்கூடங்களும், ஒரு மன்றமும், ஒரு மாவு மில்லும் சொந்தமாக இருந்தன. உணவு மற்றும் எங்களுக்குத் தேவையான எல்லாமே ஏராளமாக இருந்தன. பிறகு ஜெர்மானியர்கள் இந்தப் பகுதிகளின் வழியே சூறையாடிச் சென்றனர்; ஊர்ந்து நெளியும் புழுக்களான அந்தக் கயவர்கள் எல்லாவற்றையும் அழித்து, தாம் சென்றவிடமெல்லாம் பாழ் நாசத்தையே விட்டுச் சென்றனர்.

''நான் 1943-ல் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, அப்படியே திடுக்கிட்டுப் போனேன். அந்த ரத்தவெறி பிடித்த

வேசி மகன்கள் பண்ணைச் சொத்தில் சரி பாதியைச் சுட்டுப் பொசுக்கியிருந்தனர்; எஞ்சிமிஞ்சியிருந்த கட்டிடங்களையும் நிலவறைகளைக் கட்டுவதற்காகப் பேர்த்துப் பிடுங்கி இடித்துத் தள்ளியிருந்தனர்; பள்ளிக்கூடங்களுக்குத் தீ வைத்து விட்டனர்; எங்களிடமிருந்த நூற்றி எண்பது ஜோடி எருதுகளில் இரண்டு ஜோடிகள் மட்டுமே மிஞ்சியிருந்தன; குதிரைகளோ எதுவும் மிஞ்சியிருக்கவில்லை; எங்களிடமிருந்த டிராக்டர்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டு முடமாகிக் கிடந்தன. எனவே நாங்கள் எல்லாவற்றையும் அடியாரம்பத்திலிருந்தே தொடங்க வேண்டியிருந்தது.

''வயல்களில் வேலை பார்க்க எங்களிடமிருந்த மனித சக்தி எல்லாம் பெண்களும் பிள்ளைகளும்தான். டிராக்டர்களை ஓட்டவும் சிறுவர்களையும் சிறுமிகளையும் தவிர வேறு யாருமில்லை. அப்போது ஒரு முறை ஒரு வேடிக்கையான விஷயம் நிகழ்ந்தது: அது வசந்த காலம். நான் வயல் வழியாக நடந்து சென்ற போது, அங்கு ஒரு டிராக்டர் நின்று கொண்டிருப்பதையும், எனினும் அதன் இஞ்சின் மட்டும் ஓடிக் கொண்டிருப்பதையும் கண்டேன். சுற்று முற்றும் யாரும் கண்ணில் தென்படவில்லை. டிராக்டர் டிரைவருக்கும், அவரது டிரெய்லர்—வண்டிக்கான கையாளுக்கும் என்னதான் நேர்ந்திருக்கக்கூடும் என்று நான் அதிசயித்தேன். நான் அந்த வயலின் கோடியிலிருந்த மரங்களின் வரிசைக்குச் சென்றேன். அங்கு அவர்கள் இருவரும் வில்லோ மரங்களில் உயர ஏறி அமர்ந்து கொண்டு, காக்கைக் கூடுகளில் முட்டைகளைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். அந்த இரண்டு பேருக்கும் பதினைந்து வயதுதான் இருக்கும். அதற்கு மேல் இருக்காது. எனவே அவர்களிடமிருந்து நாம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? என்றாலும், அவர்கள் பெரியவர்களான இரு ஆடவர்கள் செய்யக்கூடிய வேலையைத் தாமே செய்தனர். உண்மையைச் சொன்னால், அந்த வேலை சகிக்க முடியாத அளவுக்குக் கடினமான வேலைதான். குளிர் மிகுந்த ஓர் இரவுக்குப் பின்னர், நீங்கள் டிராக்டருக்கு எவ்வளவுதான் சூடேற்ற முயன்றாலும், அதனைச் சூடாக்கி 'ஸ்டார்ட்' செய்வது என்பது என்றுமே எளிதான காரியம் அல்ல. மேலும் பல சமயங்களில் யுவதிகளான இந்த டிராக்டர் டிரைவர்களில் ஒருத்தி, மண்கட்டிகளின்மீது தடுமாறிக் கொண்டும், கைகளைப் பரிதாபகரமாக ஆட்டிக் கொண்டும், வயலின் வழியாக இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலிருந்தும் கூட, என்னை நோக்கி வருவதை நான் பார்த்திருக்கிறேன். 'கோர்னி வாசிலியேவிச், தயவு செய்து நீங்கள் வந்து அந்தக் கைப்பிடியைச் சுழற்றுங்

களேன். எனக்கு அதற்கான பலமே இல்லை!' என்று கூறு வதையும் கேட்டிருக்கிறேன். மென்மையான வயிறு படைத்த ஒரு யுவதி எப்படி அந்தக் கைப்பிடியைச் சுழற்ற முடியும், நான் தான் கேட்கிறேன்! அவ்வாறு செய்தால் அவளது நரம்பே மிக எளிதாக அறுபட்டு விட்டுப் போய் விடும். ஆடவர்களான நாம் நல்ல உறுதியான உடம்பு படைத்தவர்கள்; என்றாலும் நமக்கும் கூட, அதில் படும் சிரமத்தால் நமது முதுகு சொடுக்கு விட்டுப் போகும்...

''மேலும் பெண் மக்களோ? அட, கடவுளே, பண்ணையில் ஒரு பெண் செய்ய வேண்டியிருக்கும் வேலைகளைப் பார்க்கும் போது நமது இதயமே உடைந்து விடும். வீட்டிலும் அவள்தான் எல்லா வேலையையும் செய்ய வேண்டும்: சூரியன் உதயமாகும் முன்பே, சமையல் வேலையை முடிக்க வேண்டும்; பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும்; மற்றும் வீடு சம்பந்தப்பட்ட சில்லறை வேலைகள் அனைத்தையும் அவளே செய்ய வேண்டும். அத்துடன் போர் வீரனான தனது கணவனை நினைந்து எந்நேரமும் கவலைப்பட்டு நோகவும் வேண்டும். அவளுக்கு அவளால் சமாளிக்க முடிந்த அளவுக்கும் அதிகமாக வேலையும் உள்ளது; அவளால் சிந்திக்க முடிந்த அளவுக்கும் மேலாக, தொல்லை தரும் சிந்தனைகளும் அதிகமாக உள்ளன....

''ஒருமுறை நான் இன்னும் பொழுது விடியாதிருந்த நேரத்தில் வயல் வழியாகப் புறப்பட்டுச் சென்றேன். அப்போது என் அண்டை வீட்டுக்காரி அங்கு தனது பசுவுக்கு வைக்கோல் வெட்டிக் கொண்டிருந்தாள். நான் அவளருகே சென்றேன்; அவளுக்கு உதவும் நோக்கத்துடனேயே சென்றேன்; அப்போது அவள் என்னைப் பார்த்த பார்வை இருக்கிறதே, அதைக் கண்டு நான் உண்மையில் நடுங்கிப் போய் விட்டேன். வயல் முகாமுக்கு நான் வந்து சேர்ந்ததும் நான் செய்த முதல் காரியம் ஒரு சிகரெட்டைப் புகைத்துத் தள்ளியதுதான். நான் சிகரெட் பிடிப்பதை முன்னமேயே நிறுத்தி விட்டேன். போர்முனையிலும் நான் புகை பிடித்ததில்லை. ஆனால் இப்போதோ நானே ஒரு சிகரெட்டை உருட்டித் தயார் செய்து அதனைப் புகைத்தேன். அவள் என்னைப் பார்த்த அந்தப் பார்வை என் இதயத்திலேயே கத்திபோல் பாய்ந்து விட்டது.''

அவர் ஒருகணம் எதையோ சிந்தித்தவராய்த் தமது கைவிரல்களால் மேஜையில் தாளம் போட்டார்; பின்னர் இவ்வாறு கூறினார்:

''எங்களிடம் ஒரு பழைய பாட்டு உண்டு. அது உங்களுக்குத் தெரியுமா? பெண்கள் அதைப் பாடுகிறார்கள்:

''காதலரோ போர் அவரைக்
கடுமையாய்த் தாக்கியதால்,
மோதும் பல கவலை
மூண்டெழுந்த மனத்தோடு
துப்பாக்கி தூக்கியங்கு
சுடுவதற்குப் போய்விட்டார்!
அப்பாவி எனையிங்கு
அலைக்கழிய விட்டுவிட்டார்!...''

அவரது முகம் ஒரு குதூகலமான இளம் புன்னகையால் பிரகாசம் அடைந்தது.

''நமது பெண்கள் இருக்கிறார்களே, அவர்கள் தம்மைப் பற்றித் தமக்குத் தாமே மிகவுயர்ந்த அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் அவ்வாறு கொண்டிருப்பதும் சரியே! போரின்போது நாங்கள் அவர்களை இரவும் பகலும் நினைந்து கொண்டிருந்தோம் என்பது உண்மைதான். போர் உண்மையிலேயே மிகவும் மும்முரமாக மாறும்போது மட்டும், நாம் எல்லாவற்றையும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் மறந்திருப்போம்; பிறகோ நமக்கு வீட்டு நினைவின் ஏக்கம் முன்னையும் விட அதிகமாகி விடும்.

''நான் வீடு திரும்பி, பெண்கள் எப்படி வேலை பார்க்கிறார்கள் என்பதைப் பார்த்தபோது, அவர்கள் எத்தகைய பாரத்தைச் சுமந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டுணர்ந்தேன்—நாங்கள் அங்கு போர்க்களத்தில் கஷ்டங்களுக்கு உள்ளதைப் போலவே அவர்களும் இங்கு கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

''நான் போர்முனையிலிருந்தபோது எனக்கு ஒரு பரிசு கிடைத்தது. பாருங்கள். அது வழக்கமான சாமான்கள்தான்—பூத்தையல் போட்ட ஒரு புகையிலைப் பை, பிஸ்கட்டுகள் முதலிய பொருள்கள்தான். அவற்றோடு, மாஸ்கோவிலுள்ள தொழிற்சாலையொன்றில் பணியாற்றிவந்த ஒரு பெண் எழுதிய கடிதமும் இருந்தது. 'அன்பார்ந்த போர்வீரரே, உங்களுக்கு நான் ஒரு பார்சலையும், எனது உளமார்ந்த வணக்கங்களையும் அனுப்புகிறேன். எதிரிக்குச் சரியான அடி கொடுங்கள். நாங்கள் இங்கு தற்காப்புக்காக இரவும் பகலும் உழைத்து வருகிறோம்; எங்களது எண்ணங்கள் யாவும் உங்களுடனேயே உள்ளன' என்று எழுதியிருந்தாள் அவள். நல்லது. எனக்கு நல்லாரோக்கியம் நிலவ வாழ்த்துக் கூறுவது போன்று, வழக்கமாக எழுதுவதற்கு மக்களுக்கு எவ்வளவோ விஷயங்கள் இருந்தன.

''நாங்கள் அப்போதுதான் குர்ஸ்க் போரில் ஈடுபட்டிருந்தோம். நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. ஜெர்மன் டாங்கிகள் ஒரு கருமேகம்போல் திரண்டு வந்தன; நாங்கள் ஒரு கணம்கூட ஓய்வின்றி எங்களால் முடிந்த மட்டிலும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு முறையும் நாம் எப்படி உயிர் பிழைத்து வந்தோம் என்றே நாங்கள் அதிசயித்தோம். இந்தச் சமயத்தில்தான் அந்தப் பார்சல் வந்தது. நான் பதுங்கு குழிகளில் இருக்கும்போது, அங்கேயே அது என்னிடம் தரப்பட்டது. நீங்கள் நம்புவீர்களோ, மாட்டீர்களோ? அதைப் பெற்றதும் நான் அதனை வைத்துக் கொண்டு அழுது விட்டேன். நான் புகை பிடிக்கவில்லை; எனவே அந்தப் புகையிலைப் பை எனக்குப் பயன்படவில்லை; என்றாலும், பிஸ்கட்டுகளைத் தின்றேன்; அதன்மீது நான் கண்ணீர் சிந்தினேன்...இதோ ஒரு உழைக்கும் பெண்மணி, எங்களைப்போலவே இரவும் பகலும் ஓய்வின்றி, போர்முனையில் இருக்கும் எங்களுக்காக உழைக்கும் பெண்மணி இருக்கிறாள், மேலும் இவள் என்னைப்பற்றி நினைத்திருக்கிறாள் என்று நான் எண்ணமிட்டேன். ஒருவேளை அவள் தனக்கு வைத்திருந்த பிஸ்கட்டுகளையே துறந்து, அவற்றை எனக்கு அனுப்பியிருக்கவும் கூடும். அவளைப் பற்றி நான் இவ்வாறு எண்ணமிட்டவுடன், அந்த பிஸ்கட்டுகள் இன்னும் இனிய சுவையோடு இருந்தன...''

அவர் தமது நரையோடிய மீசையைத் தமது கைவிரல்களால் தொட்டுப் பற்கள் தெரியப் புன்னகை புரிந்தார்.

''அது வேடிக்கையாகவும் இருந்தது. அவள் அந்தப் பார்சலைத் தயார் செய்தபோது, ஒரு வாலிபப் போர் வீரனைப் பற்றியே மனத்தில் எண்ணியிருக்கக் கூடும். ஆனால் என்னைப் போன்ற ஒரு கிழட்டுப் பிறவிக்குத்தான் அது வந்து கிடைத்துள்ளது...

''நமது பெண்கள் போரின்போது ஒரு பெருஞ்சுமையைத் தாங்கிக் கொண்டார்கள். தமது முயற்சி சோவியத் அரசுக்கு எவ்வளவு அதிகமாகத் தேவைப்பட்டது என்பதைக் கண்டு கொண்ட அவர்கள், தம்மைப்பற்றிய எண்ணத்துக்கே இடம் கொடுக்கவில்லை. முதுமை தட்டிக் குழம்பிப்போன எனது மூளையின் மூலம் நான் இதனை எப்படி உருவகப்படுத்திப் பார்க்கிறேன் தெரியுமா?—அவர்கள் தமக்குத் தாமே ஒரு நினைவுச் சின்னத்தைப் பெற்று விட்டார்கள்.''

நான் சரியாக ஒரு மணி நேரம்தான் தூங்கியிருப்பேன்; அதற்குள் ஒரு மோட்டார் காரின் ஹாரன் சத்தம் என்னைத்

திடுக்கிட்டு விழிக்கச் செய்து விட்டது. அந்த வீட்டுக்காரரின் குரல் சமையற்கட்டிலிருந்து கேட்டது:

''கொலெஷ்னிசெங்கோ! நீங்கள் இங்கு வருவதற்கு இவ் வளவு நேரமாஞுல் எப்படி? நீங்கள் பலமணி நேரத்துக்கு முன்பே இங்கு வந்திருக்க வேண்டும். உங்கள் சௌகரியத்துக்காக, டிராக்டர் வேலை செய்யாமல் சும்மா கிடக்க வேண்டுமா? உங்களுக்குப் பொறுப்புணர்ச்சி சற்றும் இல்லை. என் பார்வைக்கு அப்படித்தான் தோன்றுகிறது. டயர்கள் ஒன்றும் நன்முக இல்லை என்பதை நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் சொல்லாமலே அது எனக்கு நன்முகத் தெரியும். நல்ல டயர்கள் உள்ள காரை யாரும் ஓட்டிவிட முடியும். மோசமான டயர்களை வைத்துக் கொண்டே, நீங்கள் நன்முக வேலை செய்தால்தான் உங்களுக்குப் பெருமை. சரி, இனி சுறுசுறுப்பாக நடந்து கொள் ளுங்கள்; பெட்ரோலை எடுத்துக் கொண்டு வயலுக்குப் போங் கள்; பொழுது விடிந்து வெளிச்சம் வந்ததும் நான் விரைவிலேயே அங்கு வந்து விடுவேன் என்று செம்யோனிடம் சொல்லுங்கள்.''

அவர் அறைக்குள் வந்தார்; விளக்கை ஏற்முமலே அவரது படுக்கையின் மீது அமர்ந்தார்; பின்னர் ஒரு கிழவரைப்போல் மொறுமொறுத்துக் கொண்டு அவர் தமது பூட்சுகளை இழுத்துக் கழற்றத் தொடங்கினர். நான் மீண்டும் தூங்கத் தொடங்கி னேன்; எனினும் சிக்கிரத்திலேயே யாரோ ஜன்னல் கதவைப் பலமாகத் தட்டியதால் விழித்துக் கொண்டு விட்டேன்.

''கோர்னி வாசிலியேவிச், உங்களைத்தான்!'' என்று ஒரு மனிதர் உரத்த, கரகரத்த குரலில் அழைத்தார்: ''இரண்டாம் கோஷ்டியிடமிருந்து வண்டிகள் வந்து சேர்ந்து விட்டன. நாங்கள் தானியத்தை இப்போதே பாரம் ஏற்றத் தொடங்கி விடலாமா அல்லது காலை வரையில் காத்திருக்கவா? எருதுகள் மிகவும் களைத்துப் போயிருக்கின்றன.''

அந்த வீட்டுக்காரர் ஜன்னலுக்கருகே சென்று, தணிந்த குரலில் இவ்வாறு உத்தரவிட்டார்:

''தானியத்தை இப்போதே பாரம் ஏற்றிக் கொண்டு, புறப் பட்டுப் போக வேண்டும் என்று அவர்களிடம் கூறுங்கள். ஒரு நிமிஷம் பொறுங்கள். தானியக் கிடங்குகளுக்கு நாமிருவரும் சேர்ந்தே போகலாம்.''

அவர் திரும்பி வந்த சத்தத்தை நான் கேட்கவில்லை. என்முலும், மீண்டும் யாரோ வந்து அவரை எழுப்பியபோதும் பொழுது இன்னும் இருட்டாகவே இருந்தது; என்முலும் அவர் எழுந்திருந்து, எந்திரம் மற்றும் டிராக்டர் நிலையத்தோடு தொடர்பு கொள்வதற்காகப் பண்ணை அலுவலகத்துக்குச் செல்ல

வேண்டியிருந்தது; ஏனெனில் டிராக்டர்களில் ஒன்று பழுதடைந்து விட்டது. பொழுது விடிவதற்குள் அவரை மேலும் மூன்று முறை எழுப்பி விட்டார்கள்.

பாவம், என்னைப்போலவே நிம்மதியில்லாமல் புரண்டு புரண்டே தூங்கிய எங்களது டிரைவர் காலையில் எழுந்ததும் அந்த வீட்டுக்காரரை நோக்கி, அழுதுவடியும் பெருமூச்சோடு இவ்வாறு கூறினார்: "சே! என்ன வாழ்க்கை இது! இங்கே தூங்குவது என்பது பாண்டு வாத்தியங்கள் கொட்டி முழக்கிக் கொண்டிருக்கும் ஒரு மன்றத்தில் தூங்குவது போலத்தான்."

"ஆமாம், இங்கு எங்களுக்கு அமைதியோ நிம்மதியோ கிடையாது" என்று அதற்குள்ளாகவே முழுமையான உடை தரித்து முடித்துவிட்ட வீட்டுக்காரர் கனிவுப் மிகுந்த புன்னகை யோடு பதில் கூறினார்: "இது ஒரு பெரிய பண்ணை; இங்கு செய்ய வேண்டிய வேலைகள் ஏராளமாக உள்ளன; எனவே நாங்கள் இரவுகளையும்கூடப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது இப்போது நீங்கள் மீண்டும் தூங்கப் போகலாம். இனி யாரும் உங்களுக்குத் தொல்லைதர மாட்டார்கள். நான் புறப்படுகிறேன்; இன்னும் அரைமணி நேரத்தில் பண்ணையின் நிர்வாகக் குழுக் கூட்டம் கூடுகிறது."

நான் என் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன்; மணி நாலரை ஆகியிருந்தது.

"அதிகாலை ஐந்து மணிக்கு யார் கூட்டத்தை நடத்துவார் கள்?" என்று எங்கள் டிரைவர் சிரித்துக்கொண்டே கேட்டார்."

"இது ஒன்றும் வேடிக்கையான விஷயமல்ல, மகனே! ஏன் என்றால், பகல் நேரத்தில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஒன்று கூடுவதே சிரமம்: ஒருவர் தானியத்தைப் பாரம் ஏற்றிக் கொண்டிருப்பார்; இன்னொருவர் வயலுக்குச் சென் றிருப்பார்; மூன்றாமவரோ ஏதாவது உதிரிப் பாகங்களை வாங்கி வருவதற்காக ஸ்டாலின் கிராடுக்குப் புறப்பட்டுப் போயிருப்பார். நானும்கூட, பொழுது விடிவதற்கு முன்பே வயலுக்குச் சென்று விடுவேன். எனவேதான் நாங்கள் கூட்டத்தை அதிகாலையிலேயே நடத்தி, விஷயங்களை விரைவில் முடிவு செய்யத் தீர்மானித் தோம். நாங்கள் எல்லோரும் ஒரே விஷயத்துக்காகவே பாடு பட்டு வருகிறோம்: எங்களால் முடிந்த வரையில் வெகு சீக் கிரத்தில் இந்தப் பண்ணையை மீண்டும் மேம்படுத்திவிட வேண்டும் என்பதுதான் அந்த விஷயம். இது ஏனைய பண்ணை களைக் காட்டிலும் வளம் குறைந்த பண்ணையாக இருக்க நாங்கள் விரும்பவில்லை.

''அரசாங்கம் எங்களுக்கு எவ்வளவு அதிகமாக உதவி வருகிறது என்பதைக் கருதிப் பார்க்கும்போது, நாங்கள் வளம் குறைந்தவர்களாக இருந்தால், அது எங்களுக்கே அவமானம். இந்த ஆண்டில் நாங்கள் முப்பதுக்கு மேற்பட்ட புதிய டிராக்டர்களைப் பெற்றோம்; ஏனைய எந்திரங்கள் எவ்வளவு வந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதே இல்லை. பாருங்கள். நாங்கள் குறைப்பட்டுச் சிணுங்கிக் கொள்வதற்கு எதுவுமே கிடையாது! இங்கு எங்கள் விஷயத்தில் காரியங்கள் யாவும் ஏறுமுகமாகவும், மிகவும் துரிதமாகவுமே நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு அறுவடையும் நன்றாக இருந்தது; முந்திய ஆண்டில் உழுததைக் காட்டிலும் அதிகமான நிலப்பரப்பைச் சென்ற இலையுதிர் பருவத்தில் நாங்கள் உழுதோம்; மேலும் நானூறு ஹெக்டர் பரப்பளவுக்கு அதிகமாக நாங்கள் மாரிக்காலப் பயிர்களைப் பயிர் செய்தோம்.

''சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டில் நிலவிய படுபயங்கரமான வறட்சியிலும்கூட, நாங்கள் தப்பிப் பிழைத்துத் தலை தூக்கி நிற்க முடிந்தது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இப்போது எதுவுமே எங்களைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. அது மட்டும் நிச்சயம்.''

''வறட்சி உங்களை உண்மையிலேயே மிகவும் பாதித்து விட்டதா?'' என்று கேட்டுத் தெரிந்து கொள்ள முனைந்தார் டிரைவர்.

''பாதிக்கத்தான் செய்தது, மகனே, அதுவும் எப்படிப் பாதித்தது தெரியுமா? என்றாலும் நாங்கள் உறுதியாக நின்றோம். இது எங்களது சொந்த நிலம்; இதன் மீது நாங்கள் உறுதியாக நிற்கிறோம். பழைய காலமாக இருந்தால், அந்த மாதிரியான ஒரு வறட்சியின் போது மக்களில் பாதிப்பேர் பட்டினியால் செத்திருப்பார்கள் என்றே நான் நினைக்கின்றேன். முற்காலத்தில் விவசாயிகள் எப்படி வாழ்ந்தனர்? ஒருவர் பசியால் வாடிக் கொண்டிருப்பார்; அதே சமயம் பணக்காரரான மற்றொருவரின் தானியக் கிடங்குகளிலோ தானியம் நிரம்பி வழியும்; என்றாலும் அவர் தமது அண்டை வீட்டுக்காரருக்கு உதவத் தமது சுண்டு விரலைக்கூட அசைக்க மாட்டார். மேலும் அதிகாரிகளுக்கும் இதைப்பற்றிக் கவலை கிடையாது. ஆனால் இந்தக் காலத்திலோ நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. அந்த வறட்சியினால் நாங்கள் பாதிக்கப்பட்ட பொழுது, அரசாங்கம் எங்களுக்குத் தானியத்தையும் விதைகளையும் வழங்கி உதவியது. நாங்களும் எங்களால் முடிந்த மட்டிலும் மக்களுக்கு ஆதரவளித்தோம்; தொல்லையிலிருந்து அவர்கள் மீண்டு

வருமாறு பார்த்துக் கொண்டோம்; இதனால் எல்லோரும் பிழைத்துக் கொண்டனர்.

"அடேயப்பா! அந்த வசந்த பருவத்தில்தான் நாங்கள் எவ்வளவு கடினமாகப் பாடுபட்டோம்! சிலர் வெறும் எலும்பும் தோலுமாகத்தான் இருந்தனர்; சிறு காற்று வீசினாலும்கூட, அது அவர்களைக் கீழே பிடித்துத் தள்ளி விடும். என்னுடனும் அவர்களும் மற்றவர்களோடு சேர்ந்து வேலை பார்ப்பதற்காக வந்தனர்; தம்மால் முடிந்தவரையில் உழைக்கவும் செய்தனர். நமது மக்கள் தங்கம் என்றால் பத்தரை மாற்றுத் தங்கம்தான். தெரியுமா? அது மட்டும் நிச்சயம்."

சூரியன் மேலெழுந்தவுடன் நாங்கள் அந்தக் கிராமத்தை விட்டுக் கிளம்பினோம். வெளியே வீதியில் வாடிப்போன வாத்துக் கால் இலைச் செடியின் காரமான இளம் மணம் வீசியது. டான் நதிப் பக்கமிருந்து பரபரத்த காற்று வீசிற்று. வானத்தின் வழியாக மிதந்து சென்று கொண்டிருந்த கனத்த மேகங்கள், இளஞ்சிவப்பான வரிவடிவத்தைக் கொண்ட கிளைகளோடு கூடிய உயரமான பாப்லார் மரங்களின் மொட்டையான உச்சி களில் சிக்கிக்கொள்ளும் அபாயத்துக்கு உள்ளாவதைப்போல் அத்தனை தாழ்வாக இறங்கித் தொங்கின.

அந்த அதிகாலை நேரத்திலும்கூட, தானியக் கிடங்குகளைச் சுற்றிலும் ஆரவாரமும் கூட்டமுமாக இருந்தது. இரு கிழவர்கள் தானியத்தைப் புடைத்துக் கொண்டிருந்தனர்; சுமார் ஒரு டஜன் வண்டிகள்—அவை கதிரடிக்கும் களத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று தெளிவாகத் தெரிந்தது—கடைசியிலிருந்த தானியக் கிடங்கில் தானியத்தை இறக்கிக் கொண்டிருந்தன. அங்கு ஒரு சிறு டிரக் வண்டியும் நிறுத்தப்பட்டிருந்தது. தனது பஞ்சு வைத்துத் தைத்த சட்டையைத் திறந்து போட்டுக் கொண்டும், தனது கம்பளிக் குல்லாயைத் தலைக்குப் பின்னால் தள்ளி வைத்துக் கொண்டுமிருந்த நெட்டையான வாலிபனை அந்த டிரக் வண்டியின் டிரைவர், தரைதட்டிப் போன டயருக்குக் கோபாவேசத்தோடு காற்று அடித்துக் கொண்டி ருந்தான்; அவனது வாய் ஓசையற்ற, எனினும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வசை மொழிகளை முணு முணுத்துக் கொண்டி ருந்தது.

நாங்கள் எங்கள் வழியே காரை ஓட்டிச் சென்றோம். சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் சென்ற பின்னர், ரோட்டுக்கு அருகிலேயே ஒரு புத்தம் புதிய எஸ்டி இஸட்—என் ஏ டி ஐ டிராக்டர் கடகடத்துக் கொண்டே வந்து கொண்டிருந்தது. அதன் மீது பூசப்பட்டிருந்த பெயிண்ட் வர்ணமும்கூட இன்னும்

மங்காத அளவுக்கு அது அத்தனை புதிதாக இருந்தது. அதன் பின்னல் ராணுவக் கம்பளிக்கோட்டை அணிந்த ஒரு மனிதர், சில அடிகள் நடந்ததும் ஒவ்வொரு முறையும் கீழே குனிந்து, டிராக்டர் உழுதுள்ள ஆழத்தை ஒரு குச்சியினால் அளந்து பார்த்தவாறு, கெந்திக்கெந்தி நடந்து வந்தார்.

''அதோ அவர் நமது பண்ணைத் தலைவர்தான்; அவர்தான் அப்படி காக்கை மாதிரி கொத்திக் கொத்திப் பார்க்கிறார்!'' என்று எங்கள் கார் டிரைவர் முகமெல்லாம் நகை தவழ, மகிழ்ச்சியோடு அவரைச் சுட்டிக் காட்டினார்: ''கெந்தி நடக்கும் பேர்வழியான அவர் இங்குள்ளவர்களுக்கு ஒரு கிலி! நான் பந்தயம் கட்டுகிறேன். தமது டிராக்டர் ஓட்டிகள் எங்காவது ஆழமாக உழத் தவறி விட்டால், அவர் அதைச் சகித்துக் கொள்ளவே மாட்டார்; அதைப்போல் கவனக் குறைவையும் அவர் பொறுத்துக் கொள்ள மாட்டார். நாம் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு, நாம் போக வேண்டிய பாதையைத் தெரிந்து கொள்வதற்காக நான் அவரிடம் சென்று அதுபற்றிக் கேட்டேன்; அப்போது குறுகுறுப்புணர்ச்சியின் காரணமாக, நான் அவரது தானியக் கிடங்குகளையும் சற்று எட்டிப் பார்த்தேன். அவற்றில் உண்மையில் தானியம் பிதுங்கி வழியத்தான் செய்கிறது! இங்குள்ள மக்களும் இவர் விஷயத்தில் மனநிறைவோடு மகிழ்ச்சியோடுதான் இருக்கிறார்கள். 'இந்தக் கிழவர் மிகவும் கண்டிப்பானவர்தான். என்றாலும் இவர் ஓர் அற்புதமான பண்ணைத் தலைவர். இவர் எல்லாவற்றிலும் நியாயமான முறையிலேயே செயல்படுகிறார். நாங்களும் நன்றாகவே வேலை பார்க்கிறோம். ஏனெனில் அவரும் எங்களை மதிக்கிறார்; நாங்களும் அவரை மதிக்கிறோம்' என்று அவர்கள் கூறுகின்றனர். அவரது வீட்டில் எங்களால் ஒரு நிமிஷம்கூடத் தூங்க முடியாது போய்விட்டது, இரவெல்லாம் அவர் தமது பண்ணை வேலை காரணமாக எழுந்து நடமாடிக் கொண்டேயிருந்தார் என்று நான் அவர்களிடம் கூறினேன். அங்கிருந்த கிழவர்களில் ஒருவர் சிரித்துக் கொண்டே இவ்வாறு பதில் சொன்னார்: 'எங்கள் தலைவர் இருக்கிறாரே, அவருக்கு ''ஓய்வு'' என்ற சொல்லுக்கே அர்த்தம் தெரியாது! ஆயினும் பாடுபடாமல் பலன் கிடையாது என்பதல்லவா பழமொழி. நாங்கள் குறைவாகப் பாடுபட்டிருந்தால், இரண்டே வருட காலத்தில், நாங்கள் மீண்டும் எங்கள் பண்ணையை நிமிர்ந்து நிற்கச் செய்திருக்க முடியுமா, என்ன?' ''

மாரிக்கால வயல்வெளி பரந்த, பசிய அலைவீச்சோடு தூர தொலைக்குள் உருண்டோடி அலை பரப்பியது; அதன் எழில் எங்கள் டிரைவரை வியப்பினால் வாய் பிளந்து நோக்கச் செய்தது.

''அந்த மாரிக்கால வயலும் கூட, இந்தப் பண்ணைக்குத்தான் சொந்தம்'' என்று கூறினார் அவர். ''அவர்கள் எத்தகைய பயிரை வளர்த்திருக்கிறார்கள் என்று பாருங்களேன்! கோர்னி வாஸிலியேவிச் இரவெல்லாம் மக்காளைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டேயிருந்தார்; ஆனால் நல்ல மக்களுக்கு ஒரு நல்ல தலைவனும் இருந்தால்தான், காரியங்கள் உண்மையிலேயே நல்லவிதமாக நடைபெறும் என்றே நான் சொல்லுவேன். அது மட்டும் நிச்சயம்'' என்று அந்தப் பண்ணைத் தலைவருக்குப் பிடித்தமான அதே சொற்றொடரைத் தாமும் கூறி, ஒரு கெக்கலிச் சிரிப்போடு கூறி முடித்தார் அவர்.

* * *

குர்ஸ்க் பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்தாரி ஓஸ்கோல் வட்டாரத்திலுள்ள நோவி மிர் கூட்டுப் பண்ணையின் மிகவும் வயது முதிர்ந்த கோஷ்டித் தலைவியான பெலாஜியா வாஸிலியேவ்னா மார்த்தினோவா தமது கண் முன்னாலேயே மூளைத்து வந்த கோதுமைப் பயிர் நாற்றுக்கள் அழிந்துபட்ட காலமான 1946 ஆம் ஆண்டின் வறட்சிக் காலத்தின் கொடிய நாட்களை நினைவு கூர்ந்தார்.

''முயற்சியெல்லாம் வீணாகப் போய் விட்டதைக் காண்பது பரிதாபமாகத்தான் இருந்தது'' என்றார் அவர்: ''ஆயினும் எங்கள் முயற்சியை விட்டுத் தள்ளுங்கள். அந்த வறட்சி கூட்டுப் பண்ணைக்கும், நாடு முழுவதற்குமே தீங்கிழைத்து விட்டது! அந்த வறண்டு சாய்ந்து வெடித்துப் போன பூமியைக் காண்பதே வேதனையாக இருந்தது; என் சொந்தக் கண்ணீரையே நான் அதற்கு நீராகப் பாய்ச்சத் துணியும் அளவுக்கு அந்த வேதனை இருந்தது!''

குர்ஸ்க் பிரதேசத்தைச் சேர்ந்த கூட்டுப் பண்ணை விவசாயி களின் ஒரு பெரிய கோஷ்டிக்கு, அவர்கள் 1947-ல் விளைவித்த அமோக விளைச்சலுக்காக அரசாங்கம் விருதளித்துக் கௌர வித்தது. அந்தக் கோஷ்டியில் பெலாஜியா மார்த்தினோவாவும் ஒருவர்; அப்பெண்மணிக்கு சோஷலிச உழைப்பு வீரர் விருது வழங்கப்பட்டது. அந்த விருதளிப்பு விழாவில் அவர் இவ்வாறு பேசினார்:

''இன்று நான் என் வாழ்க்கை முழுவதையும் ஒவ்வொரு நாளாக நினைவு கூர்ந்து பார்த்தேன். நான் என் பிள்ளைப் பருவத்தையும், எனது இல்லற வாழ்வையும் நினைவு கூர்ந்தேன். என் வாழ்வில் நான் சில நல்ல, ஆனந்தமயமான நாட்களை அறிந் துள்ளேன்; என்றாலும், நான் இன்று உணர்கின்ற ஆனந்தம் போல் வேறு ஆனந்தம் எதையும் நான் என்றுமே உணர்ந்த

தில்லை....இது நம்மை இன்னும் அரும்பாடுபட்டு உழைக்க வேண்டும் என்று விரும்பச் செய்கிறது; என்றாலும், நாம் எவ்வளவுதான் அதிகமாக வேலை பார்த்தாலும் என்னைப் போன்ற சாதாரண மக்களின்பால் அரசு காட்டிவரும் அற்புத மான அக்கறைக்குப் பிரதிப்பலன் என்று பார்த்தால், அந்த உழைப்பு மிகமிகக் குறைவானதாகவே தோன்றும்.''

லட்சோப லட்சக் கணக்கான சோவியத் மக்கள், தமது மகோன்னதமான நாட்டுக்குப் பணி புரிய வேண்டும் என்ற தமது ஒரே விருப்பத்தால் தூண்டப் பெற்று, எல்லா முயற்சித் துறைகளிலும் அரும்பாடுபட்டு உழைத்து வருகின்றனர்.

பேரன்புக்குரிய அருமைத் தாயகமே! எங்களது எல்லையற்ற பிள்ளைப் பாசம் அனைத்தும் உனக்கே உரியது; எங்களது சிந்தனை கள் எல்லாம உன்னோடுதான் உள்ளது!

1948

சமாதான வீரர்களின் அகில-யூனியன் மாநாட்டுக்கு ஆற்றிய உரையிலிருந்து

பிரதிநிதித் தோழர்களே,

மனிதகுல வரலாற்றில் மிகமிக உன்னதமான கருத்தினால் வழிநடத்தப் பெற்று ஒன்றுபட்டு நிற்கும் எனது அருமை நாட்ட வர்களே! தோழர்களே!

தோழமைமிக்க அயல்நாட்டு நண்பர்களே; இதயத்திலும் எண்ணத்திலும் எங்களுக்கு நெருக்கமான மக்களே!

உங்களுக்கு உரையாற்றுவது ஒரு சொற்பொழிவாளன் அல்ல; மாறாக, சாதாரண மக்களோடு பேசிப் பழகிவிட்ட ஓர் எழுத்தாளன்தான்.

எனது எளிமையான மொழிக்காக என்னை மன்னித்து விடுங்கள்; என்றாலும், வாய்மொழியில் திறமையில்லாத ஒரு நபரும்கூட, வாழ்க்கையின் பேரால் வாழ்க்கை அவனிடம் முறையிடும்போது, வாய்திறந்து பேசத் தொடங்கி விடுகிறான் என்பதைப் புரிந்து கொள்ள முயலுங்கள்....

எங்களது மாபெரும் நாடு, உலகிலேயே மிகப் பெரிதான நாடு—ஒரு தாய்க் கழுகைப்போல், 111 தேசிய இனங்களைத் தனது வலிமைமிக்க இறக்கையின்கீழ் அரவணைத்துக் கொண்டுள்ள எங்களது தாயகம்—ஒரு புதிய யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட விரும்புவோரை, மக்களின் சார்பாக, கோபாவேசத்தோடும் உறுதியோடும் கண்டித்து நாம் பேசியாக வேண்டும் என்பதற் காக, நம்மை இங்கு ஒன்று திரட்டியுள்ளது. இங்கே கூடியுள்ள

நமது மத்தியில், யுத்தத்தினுல் பேரிழப்புக்கு உள்ளாகாத, தமது இதயத்தில் சென்ற யுத்தத்தினுல் ஏற்பட்ட காயங்களைத் தாங்கிக் கொண்டிராத நபர் ஒருவர்கூட இல்லை எனலாம்....

முதலாளித்துவ வாதிகளும் அவர்களது சேவகர்களும் ஒரு புதிய யுத்தத்துக்குத் தயாராகி வருகின்றனர். அவர்கள் தமது லாபக் கொள்ளைகளுக்காக, தமது சொந்த மிருகத்தனமான நல்வாழ்வுக்காக, நமது பிள்ளைகளையும், நம்மையும் பலி கொடுக்க விரும்புகிறார்கள்...

அவர்கள் அவ்வாறு செய்ய முடியாது!

தமது நேர்மையான உழைப்பைக் கொண்டு, ஓர் ஒளிமய மான வருங்காலத்துக்கான தமது உரிமையைச் சம்பாதித்து வரும் மக்கள், ''நாங்கள் சமாதானத்தை விரும்புகிறோம்!'' என்று உறுதியோடு கூறுகின்றனர்.

இதனை அவர்கள் சமாதான மாநாடுகளில் கூறியுள்ளனர்.

உழைக்கும் மனிதகுலத்தின் ரத்தத்தைக் கொண்டு தமது வளவாழ்வைக் கட்டியமைக்கலாம் என்று இன்னும் நம்பிக் கொண்டிருக்கும் எல்லோருக்கும் இது ஓர் எச்சரிக்கையாக அமையட்டும்.

ஒரு நேர்மையான பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கப் போர் வீரன், எந்தவொரு நாட்டின் ராணுவச் சீருடையையும் தரித்திருக்கும் ஒரு போர்வீரன், தனக்கு ஒரே ஒரு விஷயம்— அதாவது ஓர் ஆனந்தமான மனித வாழ்க்கை—வாய்க்க வேண்டும் என்று விரும்பும் தன்னைத்த இன்னெரு போர் வீரனுக்கு எதிராகப் போரில் இறங்க மாட்டான்.

மக்களின் தீர்ப்பே தீர்ப்புக்களிலெல்லாம் மிகமிகக் கடின மான தீர்ப்பாகும் என்பதை ஒரு புதிய போரைக் கட்டவிழ்த்து விட விரும்புவோர் நினைவில் கொள்ளட்டும்.

நாம் வருங்காலத்தைத் தெள்ளத் தெளிவான கண்களோடு உற்று நோக்குகிறோம்; நமது வருங்காலத்தில் நாம் மிகப்பெரும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

மூன்ரு உழைப்புக்கும் உடல்உழைப்புக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லாத எங்கள் நாட்டில் மக்கள் சமமானவர் களாகக் கலந்து பழகுகின்றனர். முடிவாக, நான் ஒரு ''சாதாரண மனித''னோடு நடத்திய ஓர் உரையாடலைப்பற்றி உங்களிடம் கூற விரும்புகிறேன்...

அவர் ஒரு சாதாரண டிராக்டர் டிரைவர்; ஏராளமானவர் களில் அவரும் ஒருவர். அவர் போரில் கௌரவத்தோடு போரிட்டு, அதனை பெர்லினில் முடித்துக் கொண்டார்; அவர்

நான்குமுறை காயமடைந்தார்; ஆயினும் ஒவ்வொரு முறையும் தாம் குணமானவுடனே அவர் மீண்டும் ராணுவ அணிகளுக்கே திரும்பி வந்தார் நாங்கள் பொதுவாக வாழ்க்கையைப்பற்றி விவாதித்தோம்; வருங்காலம் பற்றிப் பேசினோம்; அவர் கூறிய விஷயம் இதுதான்:

''எனக்கு விசாலமான தோள்கள் உள்ளன; சோவியத் யூனியனுக்கும் அவ்வாறே உள்ளன. நாம் தாங்கிக் கொள்வோம்...!''

1949

நமது மாபெரும் நிர்மாணத் திட்ட நிலையங்களின் தலைச்சன் பிள்ளை

(என்ற கட்டுரையிலிருந்து)

ராஸ்தாவ்-ஆன்-டானிலிருந்து திசிம்லியான்ஸ்கி வரையில், வழியெங்கணும் ரோட்டின் இருமருங்கிலும், வசந்த பருவத்து வெள்ள நீரைப்போல் அலைபாய்ந்து கொண்டு, தானிய வயல்கள் பரந்து கிடக்கின்றன. எங்களது மகிழ்ச்சி ததும்பும் கண்ணின் பார்வை எட்டும் தூரத்துக்கு அப்பாலும், அவை அலைவீசி உருண்டோடுகின்றன. நாங்கள் எங்களது முன்னூறு கிலோ மீட்டர் தூரக் கார்ப் பயணத்தின் போது வழியெல்லால் கண்டு களித்தது, நாட்டின் அமோக விளைச்சலில் ஒரு துளி மட்டுமே என்பதையும், இன்னும் நம்முன் காட்சியளிக்கும் இந்த வயல்கள் எல்லை காணுதாகவே உள்ளன என்பதையும், நாங்கள் அறிவோம்—என்பது உண்மைதான். நாங்கள் ஒரு குழந்தையாக வாழ்ந்த உலகின் சிறிய மூலையும் கூடத்தான், மிகப் பரந்ததாகவும் முடிவற்றதாகவும் தோன்றியது....

ஜூலை மாதத்தில் வழக்கமாகவே மிகவும் பளீரென்று ஒளிர்ந்து அத்தனை பிரகாசமாக விளங்குவதும், மட்டுக்கு மிஞ்சிய தாராள மனோபாவத்தோடு இயற்கைத்தாயினுல் வாரியிறைக்கப் பட்டதுமான வர்ண ஜாலங்கள், சூரிய ஒளி மிகவும் அரிதாகவே அவ்வப்போது பளிச்சிட்டு வெளிப்படும் அந்தச் சற்றே மப்பும் மந்தாரமுமான பகற்பொழுதில், இதமும் மிதமும் பெற்று எழிலோடு தோற்றுகின்றன. வடகிழக்கில் கல்லறை மேடுகளின் வரிசைகளுக்குப் பின்னல், ஒரு மழை மேகம் பாதி வானத்தை நிறைத்துள்ளது. ஒரு வானவில் தரையிலிருந்து மேல் நோக்கி நீண்டு செல்கிறது; என்றாலும், மேகங்களின் இருளார்ந்த அடர்த்தியைத் துளைத்துக் கொண்டு செல்ல அதற்குச் சக்தியில்லை; எனவே அது மிகவும் உயரமான தூண்கள் போலல்லாமல்,

மங்கலாகவும் அநேகமாக வண்ணங்களே இல்லாமலும் அடி வானத்தில் நேராக நிற்கிறது.

ரோட்டின் இரு மருங்குகளிலும், ஒரு காலத்தில் டான் ஸ்டெப்பி வெளியின் ராணியாக விளங்கிய, காஞ்சிரைச் செடிகளின் சாம்பல் நீல வர்ணம் படைத்த வரிசை கோடு இழுத்தாற்போல் நெடுகிலும் செல்கிறது. தானியப் பயிர்கள் அதனைத் தனியுரிமையின் அகந்தையோடு ரோடு வரையிலும் தள்ளிக் கொண்டு வந்து, கிட்டத்தட்ட எங்கணுமே அதனை வெளியேற்றி விட்டன; பரிதாபத்துக்குரிய அந்தக் கசப்பான காஞ்சிரைச் செடிகளை, கூட்டுப் பண்ணையின் மேய்ச்சல் நிலங் களிலும், காடுகளிடையே தென்படும் வெட்டவெளிகளிலும், பள்ளத்தாக்குகளின் சரிவுகளிலும் மட்டுமே ஒரு நிச்சயமற்ற சுதந்திரத்தை அனுபவித்துக் கொள்ளுமாறு அவை விட்டு விட்டன. அந்தக் காஞ்சிரைச் செடிவரிசைக்குப் பின்னல், அதனை ஓட்டியே முற்றி வரும் ஓட்ஸ் தானியக் கதிர்களின் பசிய நீல நிறமான சுவர் எழுந்து நிற்கிறது; அந்தப் பயிர்கள் நூறு ஹெக்டர் பரப்புக்குப் பரந்துள்ளன; அதற்கும் பின்னல், மங்கிய திட்டுக்களோடு கூடிய ஒரு கரும் மஞ்சள் நிறமான வயலைக் காண முடிகிறது; அது முற்றுவதற்குத் தாமதமான கோதுமை அல்லது பார்லிப் பயிராகத்தான் இருக்க வேண்டும். அதற்கும் அப்பால் குத்திட்டு நிற்கும் சூரியகாந்திச் செடிகளின் பெரிய பாத்தி ஒன்று உள்ளது; அதற்கும் தள்ளி, மாரிக்காலக் கோதுமைப் பயிரின் பரப்பை நாங்கள் காண்கிறோம்; அது காற்றினுல் வளைந்து, மங்கிய பொன்னொளியோடு பளபளக்கும் கதிர் உச்சிகளோடு, கனத்து இறுகிப்போன அலைப்பரப்பாகக் கிடக்கிறது. இரண்டு அறுவடைக் கம்பைன் எந்திரங்கள் வயலின் குறுக்கே ஊர்ந்து செல்கின்றன; அவற்றின் கருங்கபில நிறப் பக்கங்களில் சூரியன் சற்றே பிரதிபலிக்கிறது.

ஸ்டெப்பிவெளி இங்கு சம சீராக இல்லை; எனினும் காணும் காட்சி மட்டும் எல்லையற்றதாக உள்ளது; மேலும் அடிவான விளிம்பும் புலனுகவே காணும்...

நீல நிறப் பனிமூட்டம் அகன்ற பள்ளத்தாக்கின் ஆழங்களில் கனத்து வருகிறது; அது சரிவின் மறுபக்கத்தின் மீது இள நீலப் பனித் திரையாகக் கரைகிறது; ரோட்டிலிருந்து சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவில் அது வானத்தோடு தந்திரமான முறையில் ஒன்று கலக்கிறது. அடிவானத்தின் மங்கலான வரி வடிவத்தை எடுத்துக் காட்டுவதற்கு, தனது உறுதியான அஸ்தி வாரத்தைக் கொண்ட தன்னந்தனியான காவல் குன்று ஒன்று மட்டுமே உள்ளது.

மத்திய டான் நதியின் வலது கரையில் காவல் குன்றுகளும் கல்லறை மேடுகளுமாக, அத்தகைய மேடுகள் பல உள்ளன. அவை டான் நதிக்கரையின் மலைப் பாங்கான இடத்தில் நின்று, முன்னைப் பழங்காலத்தில் ரஷ்யாவின் மீது போர் தொடுக்கவோ அல்லது அதனைக் கொள்ளையடிக்கவோ படைமூண்டு வந்த கோஜர்கள், பெச்செனெக்குகள், பொலோவ்ஸ்தியர்கள் ஆகிய கும்பல்கள் வந்த வழியான சமவெளிப் பரப்புக்களை, நதிக்கு அப்பாலும் பார்வையைச் செலுத்திக் காவல் காத்து நிற்கின்றன. அந்தப் படையெடுப்பாளர்கள் தென்கிழக்கிலிருந்து தனுய்ஸ் நதியின் (இதுதான் டான் நதியின் புராதனப் பெயராகும்) இடது கரையின் வழியாகவே சென்றார்கள்; அவர்கள் இந்த அழிக்க முடியாத நினைவுச் சின்னங்களையும் தாம் சென்ற வழியெல்லாம் விட்டுச் சென்றனர்.

பத்தாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஸ்வியாதோஸ்லாவும், அவரது புரவலரும் சேர்ந்து நிலைகுலையச் செய்த சர்க்கெல் என்னும் புராதனமான கோஜார் கோட்டை, இப்போது திசிம் லியான்ஸ்கோயி கடல் என அழைக்கப்படும் செயற்கை ஏரிக்குள் மூழ்கியுள்ளது. கும்ஷாத் மலையிலிருந்து நாம் கீழ் நோக்கிப் பார்க்கும்போது, காடுகளின் பசுமைக்கு மத்தியில், விசித்திரமாக நெளிந்தும் திரிந்தும் செல்கின்ற, நமக்கு மிகவும் பழக்கமான, டான் நதியின் ஒடுங்கிய நீர்ப்பிரவாகத் தடத்தைக் காணுகையில், பரந்து விரிந்து செல்லும் ஒரு நீல நிறக் கடலையே நாம் காண நேர்கின்ற வேளையில், ஏதோ ஒரு விசித்திரமான உணர்ச்சி நம் இதயத்தைக் கவ்விப் பிடிக்கிறது; நம் தொண்டையிலும் ஏதோ எழுந்து வந்து அடைக்கிறது...

போல்ஷிவிக் கட்சியின் உறுதிப்பாட்டின் மூலம்,—நமது மக்களின் இதயங்களில் கட்சி உருவேற்றியதும், அதன் மூலம் தமது வீரஞ்செறிந்த முயற்சியில் ஈடுபடும் உத்வேகத்தை மக்களுக்கு ஊட்டியதுமான அந்த உறுதிப்பாட்டின் மூலம்—உருவாக்கப்பட்டுள்ள எனது சொந்த நாட்டைச் சேர்ந்த டான் கடலே, உன் கீர்த்தி ஓங்குக!

சோவியத் மக்களது மேதத்துவத்தின், உழைப்பின் அற்புதமான படைப்பான வால்கா—டான் கால்வாயே! நின் கீர்த்தி நிரந்தரமாகுக!

வால்கா—டான் கால்வாய்க்கு, நமது கட்சியின், நமது சோவியத் அரசின் நிறுவனரான விளதிமிர் இலியிச் லெனினது பெயர் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கால்வாயின் வழியாக, நிலக்கரி, வெட்டு மரம், தானியம், எந்திரங்கள், காகிதம் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு, பல கப்பல்கள் செல்கின்றன—

நமது நாட்டின் செல்வம் இந்தப் புதிய நீர்மார்க்கத்தின் வழியே கப்பல்களில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

* * *

இயற்கையை வெற்றி கொள்வதற்கான இந்தப் பிரம்மாண்டமான திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்களும், இதனைக் கண்ணுரக் கண்டவர்களுமான நாம், நாம் கண்டுள்ளவற்றைச் சுருக்கமாக வருணித்துக் கூறுவதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது. காலப் போக்கில் இந்த மாபெரும் நிர்மாணத்துக்குத் தகுதியான ஒரு தலைசிறந்த நூலை எழுத்தாளர் ஒருவர் படைக்கவே செய்வார்.

வால்கா—டான் கால்வாயின் கதை வீரத்தின், துணிவாற்றலின், தியாகத்தின் கதையாகும். இந்த அணையின் மாபெரும் பரிமாணம், இந்தக் கால்வாய், இதன் மதகுகள், மற்றும் இங்குள்ள ஏனைய எல்லாக் கட்டமைப்புக்கள் ஆகியவற்றின் நிர்மாணத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூக்கமிழந்த இரவுகளையும், அறிவார்ந்த ஆராய்ச்சிகளையும், ஆற்றலையும் எண்ணிப் பார்த்தால்! வால்கா—டான் கால்வாய்க்குத் தேவையான கட்டுமான அமைப்புக்களையும் எந்திரங்களையும் உற்பத்தி செய்வதில் நமது பல—தேசிய இன நாடு முழுவதுமே தனது பங்கை ஆற்றியது; மேலும் இதனை நிர்மாணித்து முடிக்கும் பணியை சோவியத் யூனியனின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து வந்த மக்களே செய்து முடித்தனர்.

ரஷ்யர்களின் பன்நூற்ருண்டுக் காலக் கனவின் நிறைவேற்றமாக நாம் வால்கா—டான் கால்வாயைக் குறிப்பிடத் தொடங்கியுள்ளோர். மாமன்னர் பீட்டர் இதனைக் குறித்துச் சிந்தித்தார்; ரஷ்யாவிலிருந்த ஏனைய முற்போக்கான மனம் படைத்த மனிதர்களும் அவ்வாறே சிந்தித்தனர்; ஆயினும் அவர்களது கனவுகள் நிறைவேறவில்லை. மாமன்னர் பீட்டர் கால்வாயைத் தோண்டும் பணியை மேற்பார்வையிடும் பொறுப்பை வழங்கியிருந்த அஸ்த்ரகானின் கவர்னரான இளவரசர் கோலித்சின் இந்தப் பிரம்மாண்டமான பணியைச் சாதித்து முடிக்கும் சாத்தியப் பாட்டில் நம்பிக்கை இழந்துபோய், ஜார் மன்னருக்கு இவ்வாறு கடிதம் எழுதினர்: ''கடவுள்தான் நதிகளின்மீது ஆட்சி செலுத்தி வருகிறார்; சர்வ வல்லமை படைத்த கடவுள் பிரித்து வைத்துள்ள ஒன்றை, ஒன்றுபடுத்துவது என்பது மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டதாகும்.''

ஆனல் ஒரு காலத்தில் மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகவும், காரிய சாத்தியமற்றதாகவும் தோற்றிய ஒரு

காரியத்தை, கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுதிப்பாட்டினால் ஒன்று பட்ட மக்கள் சாதித்து முடித்துள்ளனர்.

ரஷ்யர்களின் பன்னூற்றாண்டுக் காலக் கனவு, சகல சோவியத் மக்களின் கனவாகவும் மாறிவிட்ட அக்கனவு, போல்ஷிவிக் கட்சியினால் நனவாக்கப்பட்டு விட்டது; மேலும், மாபெரும் தேசபக்தப் போரின்போது முன்னணியில் நின்றதைப் போலவே, இந்த நிர்மாணப் பணியின் ஒவ்வொரு பகுதியிலும் நூற்றுக் கணக்கான கம்யூனிஸ்டுகள் முன்னணியில் நின்றனர். இயற்கைச் சக்திகளை வசக்கி வழிக்குக் கொண்டுவந்து, இந்த மாபெரும் திட்டத்தைச் சாதித்து முடிப்பதில் அவர்களே மக்களை முன்னடத்திச் சென்றனர்.

* * *

தோழர் ஸ்டாலினின் இந்த வாசகத்தை நாம் நினைவு கூர்கிறோம்: "ஒரு மாபெரும் நோக்கத்திலிருந்தே மாபெரும் ஆற்றல் பிறக்கிறது." கம்யூனிச நிர்மாணத்தின் மாபெரும் நோக்கங்களுக்குப் பணியாற்றும் மக்கள் மாபெரும் ஆற்றலையும் புலப்படுத்தினர்.

திசிம்லியான்ஸ்கி நீர்மின் நிலையத் திட்டத்தின் நாலாவது பகுதியின் தலைவரான இஞ்சினீயர் ரெஜ்சிகோவ், கார்க்கி நகரிலிருந்து வந்தவர்; அவரது முகச் சாடைகள் அல்லது ஒரு வேளை அவரது உழைப்பாளிக்குரிய உடற்கட்டு, அந்த நகரம் யாருடைய பெயரைத் தாங்கி நிற்கிறதோ, அந்த மாபெரும் சகப் பிரஜையின் ஜாடைகளை ஓரளவுக்கு ஒத்ததாக உள்ளன.

"அல்யாகினைத் தலைவராகக் கொண்ட ஒரு கோஷ்டி என் வசம் இருந்தது; அந்தக் கோஷ்டியில் சுமார் இருபது பேர் இருந்தனர்" என்று ஓரளவு உள்ளப் படபடப்பு உணர்வோடும் புன்னகையோடும் என்னிடம் கூறத் தொடங்கினார் ரெஜ்சிகோவ்: "அல்யாகினே மோல்தாவியாவிலிருந்து வந்தவர்தான்; அந்தக் கோஷ்டியில் பலரும் அவ்வாறு வந்தவர்களே. அவர்கள் மிகமிக நல்ல உழைப்பாளிகளாக இருந்தனர்; ஆனால் அது மட்டும் அல்ல: சென்ற வசந்த பருவத்தில் உடைந்துவரும் பனிக்கட்டிப் பாறை தாற்காலிகமாகக் கட்டப்பட்டிருந்த ரயில் பாலத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்துவிடக்கூடிய ஆபத்தை ஏற்படுத்திய போது, அந்தப் பாலத்தைக் காப்பாற்றுவதற்காக, அவர்கள் நகர்ந்து வந்து கொண்டிருந்த அந்தப் பனிக்கட்டிப் பாறைகள் மீதே குதித்து, அதனைக் கோடரிகளால் வெட்டித் துண்டு துண்டாக்கினர்; போர் முனையில் ஸாப்பர்கள் உழைப்பதுபோல் அவர்கள் உழைத்தனர்.

''மாரிப்பருவத்தின் தொடக்கத்தில் நான் ஒரு நாள் அதிகாலையில் நதியின் பக்கம் சென்றேன். அப்போது மிக மிக வயது முதிர்ந்த ஒரு கோஸாக் கிழவர் என்னருகே வந்து இவ்வாறு கேட்டார்:

'' 'நீங்கள் ஒரு அணை கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படித்தானே, மகனே? இது சரிவர நிறைவேறி முடியும் என்று நினைக்கிறீர்களா?'

'' 'நிச்சயமாக' என்று பதிலளித்தேன் நான்: 'போல்ஷிவிக்குகள் ஒன்றைத் திட்டமிட்டால், அது சரிவர நிறைவேறி முடிவதும் நிச்சயமே?'

'' 'வேலை நடக்கட்டும், மகனே' என்று அந்தக் கிழவர் கவலையோடு முகத்தைச் சுழித்தவாறே கூறினார்: 'அதோ பாருங்கள், வில்லோ மரங்கள் சிவந்து போயிருப்பதை—மாரிப் பருவம் சற்று வெது வெதுப்பாகவே இருக்கும் என்பதுதான் இதற்கு அர்த்தம்; ஆனால் வசந்தம் வரும்போது கவனமாக இருங்கள். பனிக்கட்டி உடைபட்ட பிறகு, ஆற்றில் வெது வெதுப்பான தண்ணீர்தான் வரும். நீங்கள் கவனமாக இருக்கா விட்டால், அது எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு போய் விடும். புத்தகங்களில்தான் டான் நதி மிகவும் அமைதியானது என்று கூறப்பட்டுள்ளது; ஆனால் உண்மையில் அது வசந்த பருவத்தில் மிக மிக மூர்க்கமானது; அது தன் வழியில் எதிர்ப் படும் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்துவிடும். எனவே நீங்கள் கட்டிவரும் அணையை அது தகர்த்துவிடாமல், நீங்கள் உங்கள் கண்களை நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டு பார்த்துக் கொள்ளுங்கள்.'

''இதன்பின் அவர் திரும்பிப் போய் விட்டார்.

''நதியின்மீது பனிக்கட்டிப் பாறை உடைபடுவது எங்களுக்குப் பெருத்த தொல்லையும் கவலையையும் கொடுத்தது. எல்லா நிலைமைகளுக்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்றுதான் எவரும் நினைத்திருக்கக் கூடும். ஆனால் நீர்மட்டமோ மிகமிக உயர்ந்துவிட்டது; கடந்த எழுபது ஆண்டுகளில் அது இந்த அளவுக்கு என்றுமே உயர்ந்ததில்லை; வலிமைமிக்க எந்திரங்களும், மக்கள் புலப்படுத்திய அரும்பெரும் வீரமும் சேர்ந்துதான், படுநாசம் நிகழவிருந்ததைத் தவிர்த்து விட்டன. மக்கள் அணையையும் தாற்காலிகமான ரயில் பாலத்தையும் காப்பாற்றுவதற்காக, பல இரவுகள் தூக்கமே இல்லாமல், இரவும் பகலும் உழைத்தனர். தண்ணீர் அஸ்திவாரத்தின் மேல்தளம் வரையிலும் மேலேறி வந்துவிட்டது;

அஸ்திவாரங்கள் வெடிப்புக் கண்டு உடைபடும் சத்தம் கேட்பதற்கே பயங்கரமாக இருந்தது. அந்தக் கிழவர் எல்லாவற்றையும் உணர்ந்துதான் சொல்லியிருந்தார்: புதுவெள்ளப் பெருக்கு டான் நதியின் வெள்ளக் காட்டு நிலங்களில் வெட்டிச் சாய்க்கப் பெற்ற மரங்களையும், மரக்கட்டைகளையும், மற்றும் குப்பை கூளங்களையும் வாரிக் கொணர்ந்து, அவற்றைப் பாலத்தின் கட்டுமானத் தூண்களின்மீது கொண்டு வந்து குவித்து, அவற்றையே இடித்துத் தள்ளிவிடுவதைப்போல் பயமுறுத்தியது. பனிக்கட்டிப் பாறையை உடைத்தெறிய டினாமைட் வெடி மருந்து பயன்படுத்தப்பட்டது; என்றாலும், குப்பை கூளங்களும் மரங்களும் வந்து குவிவதை இதனால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அப்போதுதான் அல்யாகினின் நிர்மாணக் கோஷ்டியைச் சேர்ந்த நபர்கள் கைகளில் கோடரிகளையும் ரம்பங்களையும் ஏந்திக் கொண்டு, பாலத்திலிருந்து கீழே குதித்தனர்; வெறித்தனமாகச் சுழித்தோடிக் கொண்டிருந்த நீரில் இடுப்பளவு ஆழத்தில் நின்று கொண்டு, பாலத்தின் தூண்களுக்கிடையில் தண்ணீர் பாய்ந்து செல்வதற்கான ஒரு வழியை ஏற்படுத்துவதற்காக, அடிமரங்களையும், குப்பை கூளங்களின் குவியல்களையும் துண்டு துண்டாக வெட்டித் தள்ளினர்.''

அல்யாகினும் சரி, அவரது கோஷ்டியைச் சேர்ந்த வேறு எவரும் சரி, இதன்பின் அந்த நிர்மாணத் தலத்தில் இருக்கவில்லை; என்றாலும், அவர்கள் யாரோடு, யாருக்காகத் தமது உயிர்களைப் பணயம் வைத்துப் பாடுபட்டார்களோ, அவர்கள் அந்தக் கோஷ்டியினர் புரிந்த அபாரமான சாதனையை நெடுங்காலம் நினைவில் வைத்திருப்பார்கள்.

அந்த நிர்மாணப் பணிக்கு மிகவும் நவநவீனமான எந்திரங்களும், எந்திரக் கருவிகளும், தேவைக்கும் அதிகமான விதத்தில் மிகவும் ஏராளமான அளவில் வழங்கப்பட்டிருந்த போதிலும், கடினமான உடல் உழைப்புக்கும், பல சமயங்களில் மிகவும் இடர்ப்பாடுகள்மிக்க உடல் உழைப்புக்கும், அங்கு எந்த விதத்திலும் இடமில்லாமல் போய்விடவில்லை. வசந்தத்துக்கு முந்திய புது வெள்ளப் பெருக்கின்போது, வெள்ள நீர் மதகுகளுக்கும் நீர்மின் நிலையத்துக்குமான அஸ்திவாரக் குழிகளுக்குள்ளேயே புகுந்து, தளவரிசைகளின் மீது போடப்பட்டிருந்த கற்களை அடித்துக்கொண்டு போய்விட்டது; அணைகளுக்கான மண்ணை வாரிக்கொணரும் எந்திரக் கருவிகளின் குழாய்வழிகளையும் நாசப்படுத்தியது. இந்தக் குழாய்வழிகளைக் காப்பாற்றுவதற்காகத் தொழிலாளர்கள் தமது கழுத்து வரையிலும் ஏறி நின்ற பனிக் குளிர்மிக்க நீரினுள் நின்று

பாடுபட்டனர். ஏற்பட்ட இடர்ப்பாடுகளையெல்லாம் அவர்கள் தமது சொந்த முன்முயற்சியின்மூலமே துணிகரமாக நின்று சமாளித்தனர்; அது வெறுமனே உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்யும் காரியமாக இருக்கவில்லை. மேலும், அணையின் வலது கரைப் பகுதியையும், திசிம்லியான்ஸ்க் நீர்மின் நிலையத்தின் அடிநீர் வடிப்புக்கான அணையையும் அவர்கள் காப்பாற்றியே முடித்தனர்.

டான் நதியின் பிரதானப் பிரவாகத்தைத் தடுப்பு மதில் எழுப்பி வேறுபக்கமாக மேலேறிப் பாய வகை செய்யப் பட்டிருந்தாலும், மூல நதியின், இப்போது குறுக்கப்பட்டுவிட்ட டான் நதிக் கால்வாயை அணையிட்டுத் தடுப்பதொன்றும் எளிதான வேலையாக இருக்கவில்லை. அதில் ஆயிரக்கணக்கான மக்களும், மண்ணை வாரிக்கொட்டும் எண்ணற்ற டிரக் வண்டிகளும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. மேலும், கட்டுமானத் தொழிலாளர்களைத் தவிர, அந்த வட்டாரத்தைச் சேர்ந்த கிராமங்கள் மற்றும் ஸ்தானித்ஸாக்களில் வசித்து வரும் மக்களும், தம்மால் முடிந்த மட்டிலும் எந்த வகையிலாவது அதற்கு உதவவும் முன்வந்தனர். அது ஓர் இருள் சூழ்ந்த இரவு; எண்ணிறந்த மின்சார விளக்குகளும், பேரொளி பாய்ச்சும் விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. இந்தப் பகுதிக்குப் பொறுப்பு வகித்து வந்த ஃபியோதர் இவானேவிச் ரெஜ்கோவ், மேற்பார்வையிடும் பணிக்கென்றே பலகைகளைக் கொண்டு கட்டப்பட்டிருந்த குடிசையான தமது மேற்பார்வையிடும் நிலையத்திலிருந்து கீழ் நோக்கிப் பார்த்தவாறே, இத்தனை படு வேகத்தில் டிரக் வண்டிகளில் கற்களை ஏற்றி வருபவை மண்வாரி எந்திரங்களின் வாளிகளா, அல்லது ஆயிரக்கணக்கான மனிதக் கரங்களா என்று தம்மால் கூற முடியவில்லை என்று என்னிடம் கூறினார்.

இந்த அணைகட்டும் வேலையைத் திரைப்படம் எடுக்க வந்திருந்த செய்திப்படத் தயாரிப்பாளர்களுக்கு மிக மிக வேடிக்கையான அனுபவம் ஏற்பட்டது. அவர்கள் அந்த நிகழ்ச் சியையே காணத் தவறிவிட்டனர். ஏனெனில், டான் நதியில் அணைபோட்டு முடிப்பதற்கு அறுபது மணி நேரம் ஆகும் என்று அவர்கள் கணக்குப் போட்டிருந்தனர்; ஆனால், உண்மையில் அந்த வேலை எட்டே மணி நேரத்தில் பூர்த்தியாகி விட்டது. அவர்கள் அதிகாலையில் அங்கு வந்து சேர்ந்தபோது, எல்லாமே முடிந்து போயிருந்தது. அவர்கள் இன்னது செய்வதெனத் தெரியாமல், நதிக்குச் செல்லும் வழியையே மறித்துக் கொண்டி ருந்த கற்களாலான மதிலை வியப்போடு வெறித்து நோக்கிக்

கொண்டிருந்தனர். அந்த நிர்மாணப் பணியின் அரசியல் பிரிவின் தலைவரான அலெக்சி கவ்ரிலோவிச் செர்க்காஸோவ், ஏமாந்து மனம் சோர்ந்துபோன அநதக் காமிராக்காரர்களோடு சேர்ந்து தாமும் வருத்தப்பட்டார்; எனினும் அவர் பின்வருமாறு அவர் களிடம் கூறியபோது, அவரது கண்களில் ஒரு குதூகலமிக்க ஒளி மினுமினுத்தது: "உண்மையிலேயே இது அவமானம் தான்! இந்த வேலை முடிய அறுபது மணி நேரம் ஆகும் என்று தான் கருதப்பட்டது. ஆனால், படுபாவிகளான இந்தக் கட்டு மானத் தொழிலாளர்கள் வேலையில் முழு மூச்சுடன் இறங்கி, இதனை எட்டே மணி நேரத்தில் முடித்து விட்டனர். நான் உங்களுக்கு உதவ வேண்டும் என்றுதான் விரும்புகிறேன்: எனினும் எப்படி உதவ முடியும் என்பதுதான் எனக்குப் புலனுக வில்லை. வேண்டுமென்றால், நாங்கள் இந்த அணையைத் தகர்த் தெறிந்து விட்டு, மீண்டும் அதனை ஆரம்பத்திலிருந்து கட்டத் தொடங்கலாமா? இது நிலைத்து இருக்கவேண்டும் என்பதற்காகக் கடடப்பட்டுள்ளது; எனவே இதனைத் தகர்த்தெறிவது பரிதாபத் துக்குரிய செயலாக இருக்காதா? உங்கள் ஏமாற்றத்தைக் கண்டு நானும் உங்களோடு அனுதாபம் கொள்கிறேன்; என்றாலும், உங்களுக்கு உதவக்கூடிய விதத்தில் நான் எதுவும் செய்ய முடியாது என்றே அஞ்சுகிறேன்."

அந்தத் திட்ட நிலையத்தின் டைரக்டர் வாஸிலி அர்செந்தி யேவிச் பராபனேவ், ஏனைய இஞ்சினியர்களோடு சேர்ந்து கரை மீது நின்று கொண்டிருந்தார்; அவர் தமக்கு ஏற்பட்ட இயல் பான உணர்ச்சிப் பரவசத்தை, மனோவுறுதியின் தலையாய பலத்தின் மூலமே கட்டுப்படுத்தி வைத்திருந்தார். கிராமவாசி களில் முதியவர்கள், தாம் எக்காலமும் கண்டு வந்துள்ள தொல்லை கொடுக்கும் டான் நதியைத் தம் முன்னால் காணுமல், இனிமேல் மக்களின் தேவைகளுக்குப் பயன்படப் போகும் ஒரு வசப்படுத்தப்பட்ட அமைதியான நதியைக் கண்டதால், ஆனந்தக் கண்ணீர் வடித்து அழுதனர்.

லெனின் கிராடு நகர இஞ்சினியரான செர்ஜி கிரிகோரியேவிச் பெத்ரோவையும் நான் சந்தித்தேன்; ஒரு விரும்பத்தக்க, வெளிப்படையான உழைப்பாளியின் முகத் தோற்றத்தைக் கொண்ட மிகவும் அருமையான நபர் அவர். நமது நாட்டின் தொலை வடக்குக்கும், மற்றும் தொலை தெற்கு, கிழக்கு மேற்குத் திசைகளுக்கும் புறப்பட்டுச் சென்று, அங்கு பதினைறு நீர்மின் நிலையங்களை நிர்மாணித்ததில் அவருக்கும் பங்கு இருந்தது. ஒரு திட்ட நிலையத்திலிருந்து மற்றொரு நிலையத்துக்கு என்று அவர் எப்போதும், எங்காவது போய்க் கொண்டே

இருந்தார்; இதனால் அவருக்காக நாம் ஓரளவு வருத்தப்படவும் செய்கிறோம். தமது சொந்த ஊருக்கும், தமது குடும்பத்துக்கும் ஆண்டுக்கு ஒரு முறைதான் அவரால் சென்று வர முடிகிறது; என்றாலும், இந்த நிர்ப்பந்தவசமான பிரிவிலிருந்து அவர் மீள்வதற்கில்லை. பள்ளி செல்லும் ருவத்தினரான அவரது குழந்தைகளை, அவர்களது தந்தையின் நாடோடி வாழ்க்கை முறை அவரை எங்கெங்கே கொண்டு சென்ற போதிலும், எப்போது பார்த்தாலும் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக் கென்று மாற்றிக் கொண்டே இருக்க முடியாது. பெத்ரோவ் ஒவ்வொரு புதிய திட்ட நிலையத்தின் மீதும் காதலே கொண்டு விடுகிறார். தாம் இயங்க வைக்கும் ஒவ்வொரு டர்பைனின் மூலமும் அவர் சொந்த முறையில் மிகப் பெரும் மன நிறைவைப் பெறுகிறார். அவர் கழிவுத் துணிகளில் தமது கைகளைத் துடைத்துக் கொண்டிருந்த சமயத்தில் நான் அவரைக் கவனித் தேன். அவர்—தக்கியா—தாஷிலோ அல்லது வேறு எங்கேயோ—தாம் அடுத்து மேற்கொள்ளவிருக்கும் வேலையைப் பற்றி இப்போதே நினைக்கத் தொடங்கி விட்டார் என்று நான் கருதிக் கொண்டேன்.

*　　*　　*

வால்கா-டான் கால்வாய் மக்களின் மிகப் பெரிய படைப்புக் களில் ஒன்றாகும். உலகிலேயே மிகப் பெரியதான* இந்த முப்பது கிலோ மீட்டர் நீளமுள்ள மண் அணை, டான் நதியின் வெள்ளக் காட்டு நிலங்களுக்கு மேலாக ஒரு மலைத் தொடர்போல் எழுந்து நிற்கிறது. அங்குள்ள நீர்மின் நிலையம் டான் பிரதேசத்தைச் சேர்ந்த தொழிற் கேந்திரங்களுக்கும் ஸ்தானித்ஸாக்களுக்கும் மின்விசையை அனுப்பி வருகிறது; டான்நதிக் கால்வாயின் வழி யாகப் பாய்ந்து வரும் நீர் வறண்ட ஸ்டெப்பி நிலங்களுக்குள் அதிதூரம் பாய்கிறது.

டான் நதியிலிருந்து வால்கா நதிக்குச் செல்வதற்கு, உயர மான மதகு-அணையின் மீது ஓர் அற்புதமான படிக்கட்டு கட்டப் பட்டுள்ளது; அதன் வழியாகச் சரக்குகள் முடிவற்ற பிரவாக மாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

இங்கு வால்கா-டான் கால்வாயின் மீது நாம் காணும் காட்சியானது, மக்களின் நன்மைக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் நமது நாட்டில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் அல்லது நிர்மாணிக்கப்படவிருக்கும் பல மகத்தான திட்டங்களில் ஒன்றே ஒன்று மட்டுமேயாகும்.

---

* இதனை எழுதிய காலத்தில்—பதிப்பாசிரியர்.

மக்களின் நன்மைக்காக இத்தகைய பெருமளவில் நிர்மாணப் பணியைத் தொடங்குவதுபற்றி எந்தவொரு முதலாளித்துவ நாடும் கனவுகூடக் காண முடியாது. மத்திய தரைக்கடலின் ஒரு பகுதியை மாற்றியமைப்பதற்கான பிரம்மாண்டமான திட்ட மொன்றை அயல்நாட்டு இஞ்சினீயர்கள் ஒரு காலத்தில் தீட்டி னார்கள். அவர்கள் ஜிப்ரால்டர் ஜலசந்தியையும் டார்டனெல்ஸ் ஜலசந்தியையும் அணைகட்டித் தடுத்து, கடலின் நீர் மட்டத்தைக் குறைத்து, மிகப்பரந்த செழிப்பான நிலப்பகுதிகளை வெளிக் கொணர வேண்டும் என்று யோசனை கூறினர். ஜிப்ரால்டர் அணையின்மீது கட்டப்பெறும் ஒரு மின்விசை நிலையம், சகாரா பாலைவனத்தின் 6,000,000 சதுரக் கிலோமீட்டர் பரப்பையும் பூத்துக் குலுங்கும் மலர்த் தோட்டமாக மாற்றும் அளவுக்குச் சக்தி படைத்த வலிமைமிக்க மின்னுற்றல் வளமாக விளங்கும். இதற்காகும் மொத்தச் செலவும் முதலாம் உலகப் போருக்கு ஆன செலவைக் காட்டிலும் பதினைந்து மடங்கு குறைவாகவே இருக்கும். ஆனால் முதலாளித்துவ நிலைமைகளின் கீழ், மனித குலத்துக்கு மிகப்பெரும் பயன் விளைவிக்கக்கூடிய இத்தகைய திட்டங்கள் நிறைவேற இயலாதவையாகவே உள்ளன. முற் போக்கான மனம் படைத்த நபர்களின் விஞ்ஞான மற்றும் இஞ்சினீயரிங் சிந்தனையின் பயன்களை, முதலாளித்துவம் தனது "திட்டங்களின் கல்லறை"களிலேயே புதைத்து விடுகிறது.

விளதிமிர் இலியிச் லெனின் இவ்வாறு எழுதினார்: "ஒருவர் எல்லாப் பக்கங்களிலும், ஒவ்வொரு கட்டத்திலும் மனிதனுல் உடனடியாகத் தீர்வுகாண முற்றிலும் சாத்தியமான பிரச்சினை களையே சந்திக்கிறார்; ஆனால் முதலாளித்துவம்தான் அதன் வழியில் குறுக்கே நிற்கிறது. அது ஏராளமான செல்வத்தைக் குவித்து வைத்துள்ளது—அதே சமயம், மனிதர்களை இந்தச் செல்வத்தின் அடிமைகளாக மாற்றி வைத்துள்ளது. அது மிகவும் சிக்கலான தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளது—அதே சமயம், லட்சோப லட்சக் கணக்கான மக்களின் வறுமை மற்றும் அறியாமையின் காரணமாகவும், விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில கோடீசுவரர்களின் முட்டாள்த் தனமான பேராசையின் காரணமாகவும், அது தொழில்நுட்ப அபிவிருத்திகளைப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்தியுள்ளது."

நமது வால்கா—டான் கால்வாய் சமாதானத்துக்காகவும் மக்களின் மகிழ்ச்சிக்காகவும் கட்டப்பட்டுள்ளது. அதன் மூலம் 2,750,000 ஹெக்டர் பரப்புள்ள வறண்ட நிலங்களுக்கு நீர்ப் பாசனம் செய்யப்படும். மிக மும்முரமாக வளர்ந்து வரும் நமது

சோஷலிசத் தொழில்துறைக்குப் புதிய சக்தி ஊட்டப்படும்; நூற்றுக் கணக்கான மின்விசை டிராக்டர்கள் செயல்படத் தொடங்கும்.

* * *

வால்கா–டான் கால்வாயின் நிர்மாணத்தினால், வெள்ளப் பெருக்குக்குள் மூழ்கிவிடக்கூடிய பிரதேசத்தில் அமைந்துள்ள பல கோஸாக் கிராமங்கள் மற்றும் பண்ணை வீடுகளைச் சேர்ந்த மக்களை வேறிடங்களில் மீண்டும் குடியமர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனினும் இந்த இடப்பெயர்ச்சியினால் மக்கள் எதையும் இழந்துவிடவில்லை...சோவியத் அரசாங்கம் கோஸாக் கூட்டுப்பண்ணை விவசாயிகளின்பால், ஒரு தந்தையின் உண்மையான அக்கறையைக் காட்டியது; அவர்களது உடனடித் தேவைகளுக்கும், அவர்களது வருங்காலத்துக்கும் ஏராளமான வசதிகளைச் செய்து கொடுத்தது.

தமது வீடுகள், கால்நடைக் கொட்டில்கள், கிணறுகள், ஆப்பிள் மற்றும் செர்ரிப் பழத் தோட்டங்கள் ஆகியவற்றுக்காக கோஸாக்குகள் தாராளமான நஷ்ட ஈட்டுத் தொகையை ரொக்கமாகப் பெற்றார்கள். இடப் பெயர்ச்சிக்கான போக்கு வரத்து வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுத்தது; இடம் மாறிக் குடியேறியவர்களுக்குக் கட்டுமானப் பொருள்களும் கிட்டச் செய்தது; மேலும், மற்றும் பல சலுகைகளோடுகூட, வருங்கால செயற்கைக் கடலின் கரைகளில் அவர்களுக்கு நிலப்பகுதிகளையும் ஒதுக்கிக் கொடுத்தது.

உண்மையில், முதியவர்களுக்குத் தமது சொந்த ஊர்களை விட்டுப் பிரிந்து செல்வது பெரும் வேதனையாகத்தான் இருந்தது அவர்கள் புறப்படத் தயாரான சமயத்தில் அவர்களில் பலர் தாமும் தமது தந்தையரும், மூதாதையரும் பிறந்து வளர்ந்த அந்த மண்ணைத் தரையில் விழுந்து முத்தமிட்டார்கள்.

என்றாலும், தமது புதிய இல்லங்களில் குடியமரவும், புதிய கடலுக்குத் தாம் பழகிப் போகவும் மக்களுக்கு நெடுங்காலம் பிடிக்கவில்லை.

சோலெலேவ்ஸ்கி கிராமவாசிகளின் விஷயத்தில் இவ்வாறு தான் நிகழ்ந்தது; அவர்கள் தமது கிராமத்தின் பூர்வமான இடத்திலிருந்து அத்தனை தொலைவில் இல்லாத அந்தச் செயற் கைக் கடலின் கரையிலேயே புதிதாகக் குடியேறியுள்ளனர்; அந்தக் கிராமம் இருந்த இடத்தில்தான் நீர்மின் நிலையத்தின் அணை கட்டப்பட்டுள்ளது.

சோலெலேவ்ஸ்கி கிராமத்துக்கென ஒரு தனி வரலாறு உண்டு. 1918-ல் அங்கிருந்த கோஸாக்குகள் அனைவரும் ஒரு

செஞ்சேனைக் கொரில்லாப் படைப் பிரிவில் சேர்ந்தனர்; பின்னர் அவர்கள் முதன் முதலில் கூட்டுப் பண்ணைகளை நிறுவியவர்களின் வரிசையிலும் இடம் பெற்றனர்; அந்தப் பண்ணைக்குப் போரில் கொல்லப்பட்டுவிட்ட தமது கொரில்லாப் படைத் தளபதியான சொர்னிகோவின் பெயரையே அவர்கள் சூட்டினர். மாபெரும் தேசபக்தப் போரிலும் சோலெலேவ்ஸ்கியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் போரிட்டனர்; இப்போது அவர்களிற் பலர் வால்கா-டான் நிர்மாணத் திட்டத்தில் பங்கெடுத்து உழைத்து வருகின்றனர்.

அவர்கள் திசிம்லியான்ஸ்காயா துருஷ்னை கூட்டுப் பண்ணைக்கு அருகிலேயே மீண்டும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்; இந்தப் பண்ணையைச் சேர்ந்த பழைய கைதேர்ந்த தொழிலாளர்களான தச்சு வேலைக்காரர்களும், கூரை வேய்பவர்களும், கொல்லுலைத் தொழிலாளிகளும் தமது புதிய அண்டைக் கிராமத்தார்களுக்கு உண்மையான சோதர அன்போடு உதவி செய்தனர்.

அலெக்சி சொர்னிகோவ், வாஸிலி தெர்ஸ்கோவ், மோய்சி எர்மகோவ், வாஸிலிஃபுரோலோவ் ஆகிய நான்கு புகழ் பெற்ற சோலெலேவ்ஸ்கி கொரில்லாப் படைவீரர்களின் அஸ்தியும், புதிய கிராமத்தின் மத்தியில் மீண்டும் புதைக்கப்பட்டுள்ளது.

போர் வீரரின் விதவை மனைவியான எவ்தோகியா குர்பதோவா, மற்றும் பழைய கிராமத்தில் மோசமான குடிசைகளில் வசித்து வந்த முடமான நபர்களான தெரென்தி குரோச்கின், அலெக்சாந்தர் ஸ்கோர்பதோவ் ஆகியோருக்குக் கூட்டு முயற்சியின் மூலம் புதிய பரப்பலகைகளாலான குடிசைகள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

புதிய இடத்தில் சோலெலேவ்ஸ்கிக் கூட்டுப் பண்ணை வேரூன்றி விட்டது. பழ மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன; காலக் கிரமத்தில் அவையும் ஏராளமான பழங்களை வழங்கத் தொடங்கி விடும்.

கிழக்கிலிருந்து வீசும் காற்று இளம் ஆப்பிள் மற்றும் பேரிக்காய் மரங்களின் சிகரங்களை அலைக்கழிக்கும்; டான் ஸ்டெப்பிவெளியின் நீர்ப்பாசனம் பெற்ற வயல்களின் மீது கனத்த கோதுமைப் பயிர்கள் அலைபாய்ந்து தலையசைக்கும்; நமது தாய் நாட்டின் இதயம் மகிழ, இங்கு கம்யூனிச நிர்மாணிகளின் ஒரு புதிய தலைமுறையே வளர்ந்து வரும்.

வால்கா-டானையும் காட்டிலும் மகோன்னதமான, பெருமிதம் மிக்க திட்டங்களும் சாதித்து முடிக்கப்படும், என்றாலும் மக்களது மனத்தில், வால்கா-டானே மாபெரும் திட்ட நிலையங்களின் தலைச்சன் பிள்ளையாக என்றென்றும்

நினைவில் இருந்து வரும். மேலும் தாய்மார்கள்—அவர்கள் இதனை ஒப்புக் கொள்ள விரும்பா விட்டாலும்கூட—எப்போதும் தமது தலைக் குழந்தையை மிகவும் சிறப்பாகவே நேசிப்பார்கள்.

மக்களே, நமது ஞானமிக்க போல்ஷ்விக் கட்சியின் சிந்தனைகள் யாவும் யார்மீது குவிந்திருக்கிறதோ, அந்த எனது அருமை நாட்டு மக்களே, சமாதானத்துக்காகவும் மகிழ்ச்சிக் காகவும் நீங்கள் கட்டியமைத்து உருவாக்கியுள்ள உங்களது மாபெரும் படைப்புக்களைக் குறித்து நீங்கள் பூரித்து மகிழ எவ்வளவோ காரணம் உண்டு!

ரஷ்யாவை மின்சார மயமாக்குவதற்காக லெனினது மேதத் துவத்தில் பிறப்பெடுத்த திட்டத்தை, சோவியத் மக்கள் உள் நாட்டு யுத்தம், ஏகாதிபத்தியத் தலையீடு, பொருளாதாரச் சீர்குலைவு ஆகியவை நிலவிய, நம்புதற்கே அரிய மிகவும் சிரமமான நிலைமைகளின்கீழ் தொடங்கி வைத்தனர். முதல் ஈராண்டுகளில் வெறுமனே 12,000 கிலோ வாட் திறன் அளவைக் கொண்ட மின் நிலையங்களே இயக்கி வைக்கப்பட்டன. அது வரையில் எய்தப்பட்டிருந்த விளைவுகளும் மிகமிகக் குறைவாகவே இருந்தன. என்றாலும், தமது வீரஞ்செறிந்த குடிமைக் கடமையை நிறைவேற்றுமாறு சோவியத் மக்களுக்கு அறைகூவல் விடுத்த லெனின் இவ்வாறு கூறினார்:

''பன்னிரண்டாயிரம் கிலோ வாட் என்பது மிகவும் குறைந்த தொடக்கம்தான். அமெரிக்காவில், ஜெர்மனியில் அல்லது ஸ்வீடனில் நிகழ்ந்துள்ள மின்மயமாக்கம் பற்றித் தெரிந்து வைத்துள்ள அயல் நாட்டினர் ஒருவருக்கு இது வேடிக்கையாகக்கூடத் தோன்றலாம். என்றாலும், கடைசியில் சிரிப்பவனே நன்றாகச் சிரிப்பான்.''

நாம் நமது மாபெரும் நிர்மாணத் திட்ட நிலையங்களைக் கண்டு களிப்படையத்தான் செய்கிறோம்; மேலும் நாம் புன்னகையும் புரிகிறோம்; எனினும் எந்தவிதமான குறுகிய மனப்பான்மையோடும் அல்ல; வெற்றியாளர்களின் புன்னகையையே, மனித குலத்தின் வருங்கால மகிழ்ச்சியில் திட நம்பிக்கை கொண்ட மக்களின் புன்னகையையே நாம் பூக்கிறோம்.

1952

எனது கட்சியே! நீ நீடூழி வாழ்க!

ஆழமான விசுவாச உணர்வோடும் நன்றியுணர்வோடும் நமது நாட்டு உழைக்கும் மக்கள் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 50ஆவது பிறந்தினை விழாவைக் கொண்டாடு

கின்றனர். 1917-ல் மக்கள் மாபெரும் லெனினால் நிறுவப்பட்ட இந்தக் கட்சியிடம் தமது வருங்காலத்தைத் தன்னம்பிக்கையோடு ஒப்படைத்தனர்; தாம் நெடுங்காலமாகப் போற்றி வரும் தமது கனவுகளையும் நம்பிக்கைகளையும் நிறைவேற்றி வைக்கும் திறன் படைத்த தமது ஒரே உண்மையான ஆதரவாளனை அவர்கள் அதில் கண்டனர்; அது மேம்படுத்தி வந்த லட்சியத்தின் நியாயத்திலும், தம்மோடு, மக்களோடு அது கொண்டுள்ள பிரிக்க முடியாத ரத்த பந்தங்களிலும் எல்லையற்ற நம்பிக்கை வைத்தனர்.

ரஷ்யப் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்தின் அடியாழத்தில் பிறப்பெடுத்த தமது சொந்தக் கட்சியில் அவர்கள் வைத்திருந்த இந்த நம்பிக்கை, உள்நாட்டுப் போரும் ஆயுதந்தாங்கிய அன்னியத் தலையீடும் நிகழ்ந்த ஆண்டுகளில், ஈடிணையற்ற வீரச் செயல்களைப் புரிய சோவியத் மக்களுக்கு உத்வேகம் ஊட்டியது. யுத்தப் பிற்காலப் புனர் வாழ்வின் மிகப்பெரும் சிரமங்கள், கஷ்டங்கள் ஆகிய அனைத்தையும் வெற்றி கொள்வதற்கும் இந்த நம்பிக்கையே அவர்களுக்குத் தன்னம்பிக்கையையும் பலத்தையும் கொடுத்தது.

சோவியத் ஆட்சிக் காலத்தின் போதும், கட்சியின் வழி காட்டலின் கீழும், தமது நாட்டுக்குத் தாமே உண்மையான எஜமானர்களாக மாறி, ஒரு புதிய மனோபாவத்தையும் பெற்று விட்ட மக்கள், தமது சமுதாய, அரசியல், கலாசார வளர்ச்சியில் மிகப் பெரும் முன்னேற்றங்களைக் கண்டனர். அவர்களது சோஷலிசத் தாயகம் இன்னும் மேலான தேசபக்தியார்வத்தை அவர்களது உள்ளத்தில் எழுப்பியது; அவர்கள் அதனை ஒரு புதிய முறையில் நேசிக்கத் தொடங்கினர்; மாபெரும் தேசபக்தப் போரில் நாஜி ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்தடிப்பதற்கு மட்டு மல்லாமல், அவர்களை உண்மையில் மரணத்துக்கும் இரையாக்க வும் அவர்களுக்கு உதவிய பலத்தையும் பெற்றனர்.

கட்சியினால் வளர்க்கப்பட்டும் பதப்படுத்தப்பட்டும் வந்திருந்த சோவியத் மக்கள், எதிரியோடு நடத்திய மூர்க்க மான, ரத்த பயங்கரமான சண்டைகளின்போது, 1919-ல் லெனின் கூறிய தீர்க்கதரிசனமான பின்வரும் வாசகங்களை உறுதிப்படுத்தினர்: "தாம் தமது சொந்த சோவியத் அதிகாரத்துக்காகவும், உழைக்கும் மக்களின் ஆட்சிக்காகவும், எந்த லட்சியத்தின் வெற்றியானது தமக்கும் தமது பிள்ளை களுக்கும் கலாசாரத்தின் சகல அனுகூலங்களையும், மனித உழைப்பால் உருவாக்கப்பட்டுள்ள அனைத்தையும் உறுதி செய்யுமோ, அந்த லட்சியத்தின் வெற்றிக்காகவும்தான் தாங்கள்

போராடி வருகிறோம் என்பதைத் தேர்ந்து தெளியும், உணரும், காணும் பெரும்பான்மையான தொழிலாளர்களையும் விவசாயி களையும் கொண்ட ஒரு நாடு—அத்தகைய நாட்டை என்றுமே தோற்கடித்துவிட முடியாது.''

பல்லாண்டுக் கால ஆக்கப் பூர்வமான முயற்சியின் மூலமும், நாட்டின் விடுதலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் நடைபெற்ற போர்களில் சிந்திய ரத்தத்தின் மூலமும், கட்சியும் மக்களும் இரண்டற ஒன்று கலந்துள்ளனர். இப்போது எதுவும் அவர்களைப் பிரித்துவிட முடியுமா? இல்லை. அத்தகையதொரு சக்தி உலகில் இல்லை; என்றும் இருக்கவும் போவதில்லை.

மாபெரும் தேசபக்தப் போரின் வெற்றிகரமான முடிவுக்குப் பின்னர், மிகவும் குறுகிய காலத்திலேயே, கட்சியினால் வழிநடத்தப்பெற்ற சோவியத் யூனியன் தனது தேசப் பொருளா தாரத்தை முற்றிலும் புனரமைத்தது; யுத்தம் அதன் உடம்பில் ஏற்படுத்தியிருந்த ரத்தக் காயங்களை ஆற்றியது; முற்போக்கான மனிதகுலம் அனைத்துக்கும் மேலும் பெரியதொரு கவர்ச்சிச் சக்தியாக விளங்கி, முன்னெப்போதைக் காட்டிலும் மேலும் வலிமை மிக்கதாக மாறியது.

அந்த யுத்த ஆண்டுகளின்போது நமது தோல்வியைப்பற்றி ஆரூடம் கூறியும், அதனை மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக் காத்திருந்தும் வந்த, ஏகாதிபத்திய முகாமைச் சேர்ந்த அந்தப் பெரிய அரசியல் தலைவர்களுக்கும், அட்டுப் பிடித்த செய்தித்தாள் குட்டிக் கும்பலுக்கும் என்ன நேர்ந்தது? ஜெர்மன் நாஜிசத்தை முறியடித்த பிறகு, சோவியத் யூனியன் போரினால் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது என்றும், சீர்குலைந்துபோன அதன் பொருளாதாரத்தை மீண்டும் சீரமைக்கப் பல்லாண்டுகள் ஆகுமென்றும், அதற்கு முதலாளித்துவ வல்லரசுகளின் உதவியும் தேவைப்படும் என்றும் கரகரத்த குரலில் உரக்கக் கத்திய அந்தத் தீர்க்கதரிசிகளுக்கும் என்ன நேர்ந்தது? அவர்கள் கண்ணிலேயே காணவில்லை, அவர்களது சத்தமே கேட்கவில்லை என்பதுதான் விசித்திரம்; சோஷலிச நாட்டின்மீது கொண்ட பகைமையால் இருண்டு மங்கிப்போன தமது வெட்கங்கெட்ட கண்களை அவர்கள் எங்கே மறைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எவருக்குமே தெரியாது. சமாதானத்தை நேசிக்கும் சோவியத் மக்களின் தெளிவான, பகிரங்கமான, நிலையான பார்வை, இந்த மானிடக் கழிசடைகளின் அலைபாயும் பார்வைகளைச் சந்திக்க விரும்ப வில்லை. சோவியத் மக்கள் வருங்காலத்தையே, தமது பிரகாச மான எதிர்காலத்தையே, தன்னம்பிக்கையோடும் அமைதி யோடும் உற்று நோக்குகின்றனர்.

இன்று கட்சி மற்றும் அதன் மத்தியக் கமிட்டியின் சிந்தனைகள் செயல்கள் யாவும், நாட்டின் பொருளாதார மற்றும் தற்காப்பு ஆற்றல் வளத்தை மேலும் வலுப்படுத்தும், உலகில் சமாதானத்தைப் பாதுகாக்கும், வலுப்படுத்தும், உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை இடையருது உயர்த்திவரும் நோக்கத்தையே கொண்டுள்ளன. நாட்டின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதன் மூலமும், மிகப் பெருமளவில் மிகவும் புதிதான எந்திர சாதனங்களைப் புகுத்துவதன்மூலம் தொழிலாளரது செய்முறைகளது தொழில் நுட்பத் திறனை அதிகரிப்பதன் மூலமும், கட்சியானது எப்போதுமே விசாலமாகவும் வலுவாகவும் இருந்து வந்துள்ள தோள்களின்மீது அண்மைக்காலம் வரையிலும் ஒரு கனமான சுமையைச் சுமத்தி வந்த உடல் உழைப்பிலிருந்து மக்களை விடுவிக்க விரும்புகிறது.

ஐம்பது ஆண்டுக் காலமாகத் தமது ஜீவாதார நலன்களைப் போற்றியும் பாதுகாத்தும் வந்துள்ளதும், ஆபத்துக்கு எதிராகத் தம்மை எச்சரித்து வருவதும், தமது நடவடிக்கைகளை விவேகத்தோடு வழிநடத்துவதும், தமக்கு விழிப்புணர்வைப் போதிப்பதும், தம்மோடு எப்போதுமே ஒளிவு மறைவற்ற, துணிவாற்றல்மிக்க சத்தியத்தின் மொழியிலேயே பேசி வருவதுமான இந்தக் கட்சியை மக்கள் எவ்வாறு நேசிக்காம்லும் பின்பற்றுமலும் இருக்க முடியும்? தமது நல்வாழ்வையும் மகிழ்ச்சியையும் பற்றிய அக்கறையையே, தனது நடவடிக்கைகள் அனைத்தையும் கொண்டு செலுத்திவரும் தலையாய நியதியாகக் கொண்டுள்ள ஒரு கட்சியை மக்கள் எவ்வாறு நேசிக்காமலும் பின்பற்றுமலும் இருக்க முடியும்? மக்கள் தமது கட்சியை எல்லையற்ற விசுவாசத்தோடு நேசிக்கத்தான் செய்கின்றனர்; அவர்கள் கட்சியின் தெள்ளத் தெளிவான, கூட்டு ஞானத்தில் நம்பிக்கை வைக்கின்றனர்; அதன் நடவடிக்கைகள் யாவற்றுக்கும் பூரண ஆதரவை வழங்கவும் அவர்கள் எப்போதும் தயாராகவே உள்ளனர்.

சோவியத் மக்கள் தாம் பெற்றுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க வெற்றிகளின் ஒளிமயமான சிகரங்களிலிருந்து, தமது பதாகையை ஏந்திச் செல்லும் கட்சியின் தலைமையின் கீழ் தாம் நடந்து கடந்து வந்துள்ள பாதையை நியாயமான பெருமித உணர்வோடு ஏறிட்டுப் பார்க்கின்றனர். ஒரு கம்யூனிச சமுதாயத்தை நிறுவும் தமது மாபெரும் குறிக்கோளைத் தாம் அடைய முடிவதற்கு முன்னால், தாங்கள் இன்னும் எவ்வளவோ சாதிக்க வேண்டும் என்பதையும், பல பின்னடைவுகளையும்

சிரமங்களையும் வெற்றிகொள்ள வேண்டும் என்பதையும் மக்கள் அறிவார்கள். ஆயினும், தமது கூட்டுத் தலைவனும், முன்னணிப் படை வீரனுமான கம்யூனிஸ்டுக் கட்சியின் அசுர பலத்திலும், வற்றாத ஆற்றலிலும் பூரணமாக நம்பிக்கை வைத்து, அவர்கள் தமக்கு வெற்றிதரக் காத்துக் கொண்டிருக்கும் வருங்காலத்தைப் பெருமிதத்தோடு ஏறிட்டு நோக்குகின்றனர்.

உழைப்பிலும் வீரமிக்க சாதனைகளிலும் முதுமை தட்டாத சிரஞ்சீவியாக விளங்கும் எனது அஞ்சா நெஞ்சம் படைத்த கட்சியே, நீ நீடுழி வாழ்க!

1953

நமது உக்ரேனியச் சோதரர்களுக்கு

உக்ரேனில் சோவியத் ஆட்சி ஏற்பட்டதன் நாற்பதாவது ஆண்டு விழாவின்போது, நமது உக்ரேனியச் சோதரர்களுக்கு நான் எனது மிக மிக உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

சோவியத் ஆட்சிக் காலத்தின்போது, எனது இனத்தவர்களான உக்ரேனிய மக்கள், மிகவும் திறமை படைத்த, கடந்த காலத்தில் நெடுங்காலம் மிகவும் துன்பப்பட்டு வந்த மக்களில் ஒருவரான அவர்கள், தமது பொருளாதாரத்தையும் விஞ்ஞானத்தையும் கலையையும் பெருவலிமையைப் பிரயோகித்து முன்னேற்றிச் சென்றனர். நமது நாட்டின் கீர்த்திக்கு, விஷயஞானம் மற்றும் கைத்திறன்கள் சம்பந்தப்பட்ட சகல துறைகளிலும் உக்ரேன் எத்தனை அற்புதமான பெயர்களை ஆக்கிப் படைத்துத் தந்துள்ளது! அதன் வற்றாத மூலாதாரங்களிலிருந்து இன்னும் எத்தனை பேர்கள் முன்னணிக்கு வந்து சேர்வார்கள்!

எனது அன்புக்குரிய உக்ரேனுக்கும், அதன் அற்புதமான புத்திர புத்திரிகளுக்கும் எல்லா வெற்றியும் கிட்ட எனது இதயத்தின் அடியாழத்திலிருந்து நான் வாழ்த்துக் கூறுகிறேன்.

1957

வியப்பும் பெருமிதமும்

(உலகின் முதல் விண்வெளி வீரரான யூரி ககாரினது விண்வெளிப் பறப்பைப் பற்றி)

இப்போது இது உண்மையிலேயே ஏதோ ஓர் அற்புதம்தான்!

இதற்கு மேல் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. நமது சொந்த சோவியத் விஞ்ஞானம் பெற்றுள்ள இந்த அதியற்புதமான

வெற்றியினால் ஏற்பட்ட வியப்பினாலும் பெருமிதத்தாலும் எனக்குப் பேச்சே வரவில்லை.

ஏப்ரல் 12, 1961

* * *

மனித குலத்தின் தீபஸ்தம்பம்

மனித குலத்தின் வருங்காலத்தைப் பற்றி அக்கறை கொள்ளும் ஒவ்வொருவரும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் நகல் திட்டத்தைக் கவனமாகப் படித்திருக்கத்தான் வேண்டும்; இப்போது நம்மில் ஒவ்வொருவரும் இந்த வரலாற்று பூர்வமான தஸ்தாவேஜியைப் பற்றி அவரவர் தம் சொந்த வார்த்தைகளில் பேசுகிறோம்.

சிந்தனைப் படிமங்களிலேயே எண்ணிப் பார்க்கும் கடமையைக் கொண்ட ஓர் எழுத்தாளனாக இருக்கும் நான், அதைப் பற்றி இவ்வாறே கூற விரும்புகிறேன்: ''முற்காலத்தில் இவ்வாறு நிகழ்ந்தது: அதாவது ஒரு வழிப்போக்கரான நீங்கள் போகும் வழியில் இரவு வந்து பொழுது இருண்டு விட்டால், அந்நேரத்தில் தொலைவில், அடிவானத்துக்கருகே வெகு தொலைவில், ஆடு மேய்ப்பவர் ஏற்றி வைத்த கணப்புத் தீயின் மினுக்கொளியை நீங்கள் கண்டால், அவ்வளவு தூரம் போக வேண்டுமா என்று நீங்கள் நினைப்பீர்களேயானால், நீங்கள் அதனைப் போய்ச் சேரும் முன்பே, களைப்பினால் செத்து விழுந்துவிடுவீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்...''

இப்போது நகல் திட்டமும் நம் அனைவருக்கும் அத்தகைய பிரகாசமான தீபஸ்தம்பத்தின் ஒளியாகவே விளங்குகிறது; நாம் அனைவரும் செய்ய வேண்டியது என்னவெனில், அதனை நோக்கி உறுதியோடு நடைபோட்டுச் செல்ல வேண்டும்; அவ்வாறு சென்றால், செல்லும் வழியும்கூட அத்தனை தொலை நீளமாக இராது...போவது என்பது சற்றுக் கடினமானது என்பது உண்மையே. ஆயினும் போற்றி வளர்க்கப்படும் எந்தவொரு லட்சியமும் எளிதில் அடையக் கூடியதாக என்றேனும் இருந்திருக்கிறதா?

வெஷென்ஸ்காயா,
ஆகஸ்ட் 4, 1961

மிகப்பெரும் சாதனை

(இரண்டாவது விண்வெளி வீரர் ஹெர்மன் தித்தோவின் விண்வெளிப் பறப்பைப் பற்றி)

ஏனைய ஒவ்வொரு சோவியத் பிரஜையையும் போலவே, நானும் தித்தோவின் சாதனை பற்றிய எனது ஆழமான வியப் புணர்ச்சியை இரு சம பங்குகளாகப் பிரித்துக் கொள்கிறேன்: நான் ஹெர்மன் தித்தோவின் முன்பும், அவரது விண்வெளிக் கப்பலைக் கட்டியமைப்பதில் பங்கெடுத்த எல்லோர் முன்பும் தலை வணங்குகிறேன்.

மேலும், பொன்னைக் காட்டிலும் மதிப்பில் மிகவும் உயர்ந்த படைப்பாக்கச் சிந்தனைகளையும், திறமை வாய்ந்த கரங்களையும் கொண்ட விண்வெளி வீரர்கள், விஞ்ஞானிகள், பூனைவு நிபுணர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் இத்தகைய ஒளிமயமான தாரகை மண்டலத்தையே பேணி வளர்த்து ஆளாக்கியுள்ள கட்சியின் முன்னால், இன்னும் பணிவாகத் தலை தாழ்த்தி வணங்க வேண்டும் என்றே நாம் நிச்சயமாக விரும்பு கிறோம்.

இதோ இந்த நிமிடத்தில் நாடு முழுவதும், அரசாங்கமும், மாஸ்கோவும், நமது தாயகத்தின் உண்மையான புதல்வனைக் கௌரவித்துக் கொண்டிருக்கின்றன என்பதையும், இன்றிரவில் நமது ராணுவம் தனது கீர்த்தி வாய்ந்த பீரங்கிகளின் இடி முழக்கங்களோடு இந்தக் கொண்டாட்டங்களுக்கு ஒரு முத்தாய்ப்பை வழங்கும் என்பதையும் நினைத்துப் பார்ப்பது அற்புதமாக இல்லையா?

ஆகஸ்ட் 9, 1961

பிராவ்தாவே! நாடு முழுவதும் உனக்கு வணக்கம் செலுத்துகிறது

பிராவ்தாவுக்கு அதன் ஐம்பதாவது பிறந்த நாளில் எனது மிகமிக இதயங்கனிந்த வாழ்த்துக்கள்! இனிமையற்றது என்று சொல்லக்கூடிய எந்தவொரு குறிப்பினாலும் பங்கப்பட்டு விடாது, இப்போது கடந்த முப்பதாண்டுக் காலத்துக்கும் மேலாகவே பலமாக இருந்து வரும் நமது பரஸ்பர அன்பைக் கண்டு, திருமணமான தம்பதிகள் பலரும்கூடப் பொறுமைப்படக் கூடும் என்பதை எண்ணி நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். மானசீகமாக நான் ஊழியர்கள் அனைவரையும் மார்போடு தழுவிக்கொள்கிறேன்.

மே 5, 1962

நான் உங்களைத் தந்தையின் பாசத்தோடு அரவணைக்கிறேன்

(வாலந்தினா தெரெஷ்கோவா மற்றும் வாலெரிபைகோவ்ஸ்கி ஆகியோரின் விண்வெளிப் பறப்பைப் பற்றி)

இந்த மகிழ்ச்சிகரமான நாளில் நான் சொல்லப் போவது சுருதி விகாரமாக ஒலிக்கக் கூடும் என்பதை நான் உணர்கிறேன். என்றாலும் நான் எப்படி அதனைத் தவிர்க்க முடியும்? இந்த எனது முதிர்ந்த வயதில், அதிலும் ஓரளவுக்கு மிதவாத மனப்பான்மையும் கொண்ட நான், சில நாட்களுக்கு முன்பு வரையிலும் கூட, ஆண்களான நாம்தான் ''மனங்களை ஆட்சி செலுத்தி வருபவர்கள்'', நாமே போராளிகள், நமது இந்த மண்ணுலகில் முழுக்க முழுக்க நாமே அதன் தவப்புதல்வர்கள் என்றே எண்ணிக் கொண்டிருந்தேன்.

ஆனால் இப்போது நமக்குக் கிட்டியிருப்பது என்ன? விண்வெளியில் ஒரு பெண்ணும்! நீங்கள் என்ன சொன்னாலும் சரி, இது நினைத்தே பார்க்க முடியாதது. உலகைப்பற்றியும் அதன் சாத்தியப்பாடுகளைப்பற்றியும் எனக்குள் நிலைபெற்று விட்ட கருத்துக்கள் அனைத்துக்கும் இது மாறுக உள்ளது. நான் வாலெரி பைகோவ்ஸ்கியை அவர் புரிந்த சாதனைக்காக மகிழ்ச்சியோடு தழுவிக்கொள்வேன். என்னதான் இருந்தாலும், சாதனைகள் புரிவதற்கென்றே ஓர் ஆடவனைப் பிறந்தவர் அவர். ஆனால் வாலந்தினா தெரெஷ்கோவா விஷயத்திலோ, இது முற்றிலும் வேறு விஷயம்.

திருமணம் செய்துகொள்ளக் கோரி அவளுக்கு ஆயிரக் கணக்கான கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. திருமண வாழ்க்கைச் சிலுவையை நாற்பதாண்டுக் காலமாகச் சுமந்து கொண்டிருக்கும் நான், அவளுக்கு எனது இதயத்தையோ அல்லது கரத்தையோ வழங்க முடியாது; நான் செய்யக் கூடியதெல்லாம் அவளை ஒரு தந்தையின் பாசத்தோடு அரவணைத்துக் கொள்வதும், அவளுக்கு வாழ்வில் தலைசிறந்த பேறுகள் யாவும் கிட்டவேண்டும் என்று வாழ்த்துவதும்தான். நான் வாலெரி பைகோவ்ஸ்கியையும் அரவணைக்கிறேன் என்பது சொல்லாமலே விளங்கும்.

1963

கம்யூனிச உழைப்பின் அதிரடிப்படைத் தொழிலாளர்களுக்கு

அன்பார்ந்த தோழர்களே,

உங்களது மாநாட்டின் பயன்மிக்க பணி வெற்றி காண வாழ்த்துரைக்க என்னை அனுமதியுங்கள். இது ஒரு சம்பிரதாய பூர்வமான ஆரம்பம்; எனவேதான் இது அத்தனை சம்பிரதாய பூர்வமாகவும் வறட்டுத்தனமாகவும் ஒலிக்கிறது.

இங்கு, ராஸ்தாவில், வெற்றிகரமாகவும் பயன் மிக்கதாகவும் வாய் ஓயாமல் ஏதேதோ பேசிக் கொண்டே போகலாம் என்பதும், வீட்டுக்குள், குழப்படிகள் செய்து கொண்டிருக்கலாம் என்பதும் உண்மைதான். எனவே உள்ளூரிலும், கூட்டுப் பண்ணைகளிலும், அரசாங்கப் பண்ணைகளிலும், விவசாயத்தின் ஒவ்வொரு பிரிவிலும் உங்களது உண்மையான உழைப்பு என்று வரும்போது நான் வறட்டுத்தனமாகப் பேசிக் கொண்டிருக்க முடியாது. எனது இதயத்தின் அடியாழத்திலிருந்து நீங்கள் வெற்றிபெற நான் வாழ்த்துக் கூறுகிறேன். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்; எனது அருமை நாட்டின் ஆடவர்களே, பெண்களே, தயவு செய்து எங்களை ஏமாற்றமடையச் செய்து விடாதீர்கள்.

உங்களால் முடிந்த மட்டும் கடினமாகப் பாடுபட முயலுங்கள்; தயவு செய்து நமது கீர்த்தி வாய்ந்த பிரதேசத்தை இழிவுபடுத்தி விடாதீர்கள்!

உங்களது வருங்கால வெற்றிகளில் நம்பிக்கையும் தன்னம் பிக்கையும் கொண்டு, உங்களோடு நான் கை குலுக்குகிறேன்.

1964

நான் அழைப்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன்

ஜெர்மன் ஜனநாயக் குடியரசுக்கு வருமாறு விடுத்த அழைப்பை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன். நான் ஒரு முறை, முப்பது ஆண்டுகளுக்கும் முன்னால், 1930-ல் ஜெர்மனிக்குப் போயிருக்கிறேன். ஸொர்ரென்டோவிலிருந்த கார்க்கியைப் பார்ப்பதற்காக நான் போய்க் கொண்டிருந்தேன்; எனினும் நான் அங்கு போய்ச் சேரவே இல்லை. ஏனெனில் இத்தாலிய அதிகாரிகள் நான் அங்கு செல்வதற்கான பிரவேச

விசாவை எனக்குத் தர மறுத்து விட்டார்கள். இந்த விசாவுக் காகக் காத்துக் கொண்டிருந்த வேளையில், நான் ஜெர்மனிக்குச் சுற்றுப் பயணம் செய்தேன்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் நான் புத்தினமை பெற்ற நகரங்களையும் கிராமங்களையும் கான்பேன்; தொழிலாளர்களையும் விவசாயிகளையும் சந்திப்பேன். மூத்த, மற்றும் இளம் ஜெர்மன் எழுத்தாளர்களையும் நான் சந்தித்துப் பேசுவேன் என்பது சொல்லாமலே விளங்கும். அவர்களது படைப்புக்களையும் நான் சாத்தியமான அளவுக்குத் தொடர்ந்து கவனித்து வர முயல் கிறேன். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் வடதிசை வட்டாரங்கள் ஒன்றில், என் பெயரைச் சூடி என்னைக் கௌர வித்துள்ள ஒரு கூட்டுறவுக் கழகம் உள்ளது: இந்தக் கூட்டுறவுக் கழகத்தின் உறுப்பினர்களோடு நான் முறையாகக் கடிதப் போக்குவரத்து வைத்திருக்கிறேன்; அவர்கள் அங்கு எவ்வாறு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காண நான் அங்கு போய் அவர்களைச் சந்திக்கவும் முயல்வேன்.

உக்ரேனில் நடைபெறும் ஷெவ்செங்கோ நினைவு நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள எனக்கு இயலாத நிலைமைக்காக நான் பெரிதும் வருந்துகிறேன். வெற்றிகளும், நல்லாரோக்கியமும், மகிழ்ச்சியும் கிட்டுவதற்கு நான் தெரிவிக்கும் எனது மிகச்சிறந்த வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுமாறு எனது உக்ரேனிய நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1964

அமைதியான டான் நதிக் கூட்டுப் பண்ணையின் கம்யூனிஸ்டுகள் தமது இலக்குகளை நிர்ணயிக்கின்றனர்

(ஒரு கூட்டுப் பண்ணைக் கட்சிக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து)

மத்தியக் கமிட்டியின் மார்ச் பிளீனம் கூட்டம் நமது கூட்டுப் பண்ணைகள் மற்றும் அரசாங்கப் பண்ணைகள் ஆகிய வற்றுக்கு மிகப் பரந்த வாய்ப்புக்களை வழிதிறந்து விட்டுள்ளது. உங்களில் முதியவர்கள், நாம் 1930 ஆம் ஆண்டுகளில் எவ்வாறு தானியத்தை உற்பத்தி செய்தோம், மில்லிரோவோவிலிருந்து எவ்வாறு எருமை மாட்டு வண்டிகளில் விதைப்பதற்கான விதைகளைக் கொண்டு வந்து சேர்த்தோம், வசந்த காலத்தில்

அந்தக் கடக்க முடியாத ரோட்டுப் பாதைகளில் நாம் எப்படி அந்த வண்டி மாடுகளின் கால்களை முறித்து முடமாக்கினேம், பின்னர் எவ்வாறு அதே எருதுகளையே உழவுக்கும் விதைப்புக்கும் பயன்படுத்திக் கொள்ளுமாறு நம்மிடம் எதிர்பார்க்கப்பட்டது என்பதையெல்லாம் ஒருவேளை நினைவு வைத்திருக்கக் கூடும். இதெல்லாம் இப்போது மிகவும் கடந்த கால விஷயமாகப் போய் விட்டது. பண்ணைத் தொழிலில் ஏராளமான சிரமங்களும், ஏராளமான தீர்க்கப்படாத பிரச்சினைகளும், ஏராளமான தவறுகளும் இருந்து வந்தன. இவையெல்லாம் இப்போது தீர்ந்து போய் விட்டதாகவே தோன்றுகிறது. இங்கிருந்து முன்னேறுவது இனி நமது பொறுப்புத்தான்.

சென்ற ஆண்டில் நான் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்குச் சென்றிருந்தேன்; அங்கு எனக்கு இரண்டு பண்ணைகளைச் சுட்டிக் காட்டினார்கள். இந்த இரண்டு பண்ணைகளும் அந்தக் குடியரசில் மிகவுயர்ந்த நிலையை எட்டியுள்ளன. ஜெர்மன் சோஷலிஸ்டு ஐக்கியக் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினரான தோழர் உல்ப்பின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வரும் ஒரு பண்ணை மிகப் பெரிய, எந்திரமயமாக்கப் பட்ட பண்ணையாகும்; அந்தப் பண்ணையிலிருந்து ஒருவர் எவ்வளவோ கற்றுக் கொள்ள முடியும். மற்றொரு பண்ணை அத்தனை வளமிக்க பண்ணையல்ல; அது அமைந்துள்ள நிலப்பகுதி மிகவும் செழிப்பானது அல்ல. அங்குள்ள மண் இங்கு, வெஷென்ஸ்காயாவுக்கு வெளியே உள்ளதைப் போலவே, மணற் பாங்காக உள்ளது. எனவே அவர்கள் அங்கு கால்நடை வளர்ப்பிலேயே பிரதானமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆண்டு நமது ஜெர்மன் நண்பர்கள் வெஷென்ஸ்கி வட்டாரத்தில் நம்முடன் தங்கியிருப்பதற்காக வரப் போகிறார்கள். தோழர் உல்ஃப், மற்றும் இரண்டாவது பண்ணையின் தலைவர் லோதெர் கோச் ஆகிய இருவரும் வருகிறார்கள். அவர்கள் தமது தலைசிறந்த உழைப்பாளிகளையும் தம்மோடு கூட்டி வருவர் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நாம் விருந்தோம்பும் பண்பு மிக்க மக்கள்; எனவே நாம் அவர்களுக்கு உளமார்ந்த வரவேற்பை அளிப்போம்.

உங்கள் கட்சி ஸ்தாபனம் ஒரு நல்ல காலாட்படைக் கம்பெனியாகவே விளங்கும் என்று நீங்கள் என்னிடம் கூறுகிறீர்கள். உங்கள் மத்தியில் நூறு முழுமையான உறுப்பினர்களும், முப்பது பரீட்சார்த்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இதுவே ஒரு

பெரும் படையாகும். இந்த எண்ணிக்கையோடு காம்சொமால் உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்; பின்னர் இத்தகைய பலத்தைக் கொண்டு, நீங்கள் மலைகளையே புரட்டி விட முடியும்!

வாய்ப்புக்கள் போதுமான அளவுக்குத் தெளிவாகவே உள்ளன. நமது கடமைகளும் மிகத் தெளிவாகவே உள்ளன. உங்களது பண்ணை, எந்திரங்களோடு நல்ல சாதன வசதிகளைப் பெற்ற பண்ணையாகும். நல்லது. தோழர் மக்கயேவ் பேசிய போது குறிப்பிட்ட இரண்டு அல்லது மூன்று லாரிகள் பற்றிய விஷயத்தை ஒரு பெரிய பிரச்சினையாகக் கொள்ள வேண்டிய தில்லை. அவற்றை நாம் பெற்று விடுவோம் என்றே நான் கருது கிறேன். இப்போது என் கருத்தில் இடம் பெற்றுள்ளவை எந்திரங் களே அல்ல. இது விஷயத்தில் உங்களுக்கு என்றுமே உதவி மறுக்கப்பட்டதில்லை. இந்த ஆண்டு இந்த வட்டாரத்துக்கும், பல பண்ணைகளுக்கும், உண்மையாகச் சொல்லப் போனால், சோவியத் யூனியனிலுள்ள எல்லாப் பண்ணைகளுக்கும் ஒரு திரும்பு முனையாக அமையும் என்றே நான் கருதுகிறேன். ஏனெனில் பிளீனம் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள், நமது சாத்தியப்பாடுகள், நமது தேவைகள் ஆகிய இரண்டையும் முழுமையாகக் கணக்கில் எடுத்துக் கொண்டு நிறைவேற்றப் பட்ட மிகவும் உறுதியான முடிவுகளாகும். உதாரணமாக, கொள்முதல் விலைகளை உயர்த்துவது ஓர் அற்புதமான கருத் தாகும். அத்தனை பெரிய சுமையாக இருக்காது என்று வெளிப் பார்வைக்குத் தோன்றக் கூடிய திட்டத்தை நிறைவேற்றி முடிக்க நாம் முதன்மையாக முயன்றுக வேண்டும் என்பதும் முற்றிலும் இயல்பானதேயாகும். கூட்டுப் பண்ணையின் பணப் பெட்டிகளை நிரப்ப வேண்டுமாயின், நீங்கள் திட்ட இலக்குக்கும் மேலாக ஓரளவு உற்பத்திப் பொருளை அரசுக்குக் கூடுதலாக விற்பனை செய்யவும் முயன்றுக வேண்டும்....

உங்கள்மீது எனக்குள்ள நம்பிக்கையையும், பண்ணைத் தொழில் வேலைகள் முழுவதையும் வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டு வருவதற்கான எனது தலைசிறந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள்; எல்லாவற்றுக்கும் மேலாக, நீங்கள் நல்ல வசந்த பருவ விதைப்பை நடத்தவும் நான் உங்களை வாழ்த்துகிறேன். வசந்தம் கிட்டத்தட்ட நம்மை நெருங்கி வந்து விட்டது. எனவே மிகவும் குறைந்த அவகாசமே உள்ளது. நீங்கள் இதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதால், இதனை என்னைக் காட்டிலும் நன்றுகப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நிச்சய மாக நம்புகிறேன். நிச்சயமாக, நீங்கள் சற்றுக் கஷ்டப்பட்டுப்

பாடுபடவும், துக்கத்தை ஓரளவு இழக்கவும் வேண்டியிருக்கும். ஆயினும் நீங்கள் சாத்தியமான அளவுக்கு மிகமிகக் குறுகிய காலத்துக்குள் விதைப்பை முடிக்கவும், அதனையும் மிகவும் உயர்ந்த வேலைத்திறனோடு செய்து முடிக்கவும், நீங்கள் எல்லாவற்றையும் செய்தாக வேண்டும்.

1965

கிளெஜோஸ் மீது கை வைக்காதே !

கிரேக்க மக்களின்மீது ஆழமான மதிப்பு வைத்திருக்கும் ஓர் எழுத்தாளன் என்ற முறையில், கிரீஸிலுள்ள ராணுவ ஆட்சிக் கும்பலுக்கு நான் இவ்வாறு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்: மனோலிஸ் கிளெஜோஸ் மீது கை வைக்காதே. இதனால் பின்னர் உனக்குத்தான் சங்கடம். அதை நினைத்துப் பார்த்துக் கொள்!

ஏப்ரல் 29, 1967

ஆத்மாவின் மகத்துவம்

உலகில் வசித்து வரும் மக்களது வரலாறும் சரி, அவர்களது தேசீயக் கலாசாரங்களின் வளர்ச்சியும் சரி, கொடூரமான, சோகமயமான சம்பவங்களுக்கும் மத்தியில், உன்னதமான நோக்கங்களின் பெயரால் மக்கள் ஒன்றுபட்டதற்கான சில மதிப்புமிக்க சான்றுகளை, மானிட உணர்வின் வலிமை மிக்க எழுச்சிக்கான சான்றுகளைத் தம்முட் கொண்டுள்ளன. நாடுகளின் வரலாற்றிலும், தேசங்களது தலைவிதிகளைப்பற்றிய செய்திக் குறிப்புக்களிலும் உள்ள மிக அருமையான பக்கங்கள், முன்னேற்றத்துக்காகவும் விடுதலைக்காகவும் சிறந்த வருங்காலத்துக்காகவும் நடத்தப் பெற்ற போராட்டம் பற்றியவையேயாகும்.

ஒவ்வொரு தேசத்தின் விஷயத்திலும் இந்தப் போராட்டம், அதாவது வருங்காலத்தை உருவாக்கவும், தேசீயக் கலாசாரத்தை வளர்க்கவும் நடைபெறும் இந்தப் போராட்டம், மிகவும் பல்வேறான நிலைமைகளில் நிகழ்ந்தது; நிகழ்ந்தும் வருகிறது. எனவே இன்றைய உலகிலுள்ள மக்கள் மேலும் சிறந்த மேலும் பயன் மிக்க பரஸ்பர நல்லிணக்கத்தை நாடமுற்படுவது மிகவும் இயல்பானதே.

தமது சொந்தச் சுயலாப நோக்கங்களுக்காக, தேசங்களின் ஒற்றுமையைக் குலைக்க விரும்பும் சக்திகள் சூழ்ச்சிகளையும் நிர்ப்பந்தத்தையும் கையாண்டு வந்த போதிலும்கூட, வேகமாக இயங்கி வரும் நமது வாழ்க்கையானது, தேசங்களின் வரலாறுகள் வெவ்வேறாக இருந்த போதிலும், எல்லாத் தேசங்களுக்கும்

பொதுவான, அவற்றின் உன்னதமான முயற்சிகளை ஒன்றுபடுத்தவும் வலுப்படுத்தவும் உதவுகின்ற அம்சத்தை, மேலும் மேலும் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்தியே வருகிறது.

ஒரு தேசத்துக்காக அதன் மாபெரும் புதல்வர்கள் மேற் கொண்ட முயற்சியையும், அவர்களது போராட்டத்துக்கு உத்வேக மூட்டிய லட்சியங்களையும், அவர்களது தியாக வாழ்க்கையையும் மனித சிந்தனை ஆழமான மதிப்போடு கூர்ந்து ஆராய்கிறது. மனிதகுல வரலாற்றில் அத்தகையதொரு தனிச்சிறப்பு மிக்க நபராக விளங்கியவர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி (மகாத்மா காந்தி).

இந்திய தேச விடுதலைப் போராட்டத்தில் தனிச் சிறப்பு மிக்க நபராக விளங்கிய இவரது பிறந்தநாள் நூற்றாண்டு விழாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த நூலில், சோவியத் எழுத்தாளனும், இந்நூலுக்குக் கட்டுரைகள் எழுதியுள்ள பலரில் ஒருவனுமான நான், காந்தியின் வாழ்க்கையையும் அவரது செழுமையான இலக்கியப் பாரம்பரியத்தையும் பற்றியோ அல்லது அவரது இடையறாத ஆன்மத் தேட்டங்களையும், அவரது கருத்துக்களின் சிக்கலான பரிணாம வளர்ச்சியையும் பற்றியோ, இயல்பாகவே இந்திய வாசகர்களுக்குக் கூறப்போவதில்லை. இந்த விஷயம் பற்றிய விசேட விஷய ஞானத்தைக் கொண்டுள்ளவர்களான, இந்நூலுக்குக் கட்டுரைகள் எழுதியுள்ள ஏனைய ஆசிரியர்கள் இதனைப் பற்றி எழுதுவர். என்னைப் பொறுத்த வரையில், சோவியத் மக்கள் மிகப் பலரையும் கவர்வதைப் போலவே என்னையும் மிகவும் பலமாகக் கவர்ந்துவரும் காந்தியின், அந்தச் சமுதாய, அரசியல் தலைவரின் அந்த அம்சங்களைப்பற்றி மட்டுமே நான் இந்திய வாசகர்களோடு பேச விரும்புகிறேன். எனவே நான் எந்த விதத்திலும் காந்தியைப்பற்றி ஒரு சர்வாம்சமான ஆராய்ச்சியை மேற்கொள்ளவில்லை; அத்தகைய ஆராய்ச்சியை மேற்கொள்ள நான் என்றும் துணியவும் மாட்டேன்; அதனால், அவரது பலதிறப்பட்ட நடவடிக்கையின் அம்சங்கள் சிலவற்றைப் பற்றிய எனது எண்ணங்களை மட்டுமே இந்த நூலின் வாசகர்களோடு நான் பகிர்ந்து கொள்கிறேன்.

காந்திக்கும் ரஷ்யாவின் மாபெரும் எழுத்தாளர் டால்ஸ்டாய்க்கும் இடையே நிலவிய நெருக்கம்பற்றிய விஷயத்தை உண்மையை எவரேனும் காணுதிருக்க முடியுமா? இந்திய மக்களும் ரஷ்ய மக்களும் வாழ்ந்துவந்த வரலாற்று பூர்வமான நிலைமைகளில் மிகப்பெரும் வேற்றுமை நிலவியபோதிலும்கூட, அவர்களுக்குள் முன்னேற்றத்தின் பெயரால் ஒரு தொடர்பு ஏற்படக்கூடிய சாத்தியப்பாடு, ஒரு கூட்டணி அமையக்கூடிய

சாத்தியப்பாடு, அப்போதே தோன்றியது என்பதைப் புலப் படுத்தும் ஒரு துடிப்பான உதாரணமே இதுவாகும். காந்தியினுல் மிகவுயர்வாகப் பாராட்டப்பெற்ற டால்ஸ்டாயின் "இந்தியா வுக்கு ஒரு கடிதம்" என்ற படைப்பைப்பற்றி மட்டுமே நான் இங்கு குறிப்பிடுகிறேன். காந்தி மற்றும் டால்ஸ்டாயின் தத்து வார்த்தக் கொள்கைகளின் சாராம்சத்தையும் முக்கியத்துவத் தையும்பற்றி நான் பேசவில்லை; தத்துவத்திலும் சரி, தமது நடைமுறை நடவடிக்கையிலும் சரி, இரண்டிலும் போராட்டத் துக்கான வழிவகைகளைத் தேடுமாறு அவர்களை வற்புறுத்தியது எது என்பதைப்பற்றி மட்டுமே நான் கூற விரும்புகிறேன். ஒடுக்குமுறைக்கு எதிரான கண்டனம், தமது சொந்த மக்களின்- அதேபோல் ஓர் அயல்நாட்டு மக்களின் துன்ப துயரங்களை உணர்ந்தறியும் திறமை—இதுதான் அவர்களது ஆன்மத் தேட்டங் களைத் தூண்டியது; இந்தியாவின் விடுதலைக்குத் தம்மை அர்ப் பணித்துக் கொண்ட போராளியும், மாபெரும் ரஷ்ய மனிதாபி மான எழுத்தாளரும் ஆன இந்த ஜாம்பவான்களையும் இதுவே ஒன்றுக இணைத்தது.

இந்திய வாசகர்கள் என்னைத் தவறுக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இதோ ஒரு கம்யூனிஸ்டு எழுத்தாளர் தமது சொந்தக் கண்ணோட்டத்தை நம்மீது திணிக்க முயன்று கொண்டிருக்கிறார், தமது நோக்கங் களுக்கேற்ப உண்மைகளைத் திரித்துக் கூறுகிறார் என்று அவர்கள் கருத மாட்டார்கள் என்றும் நான் நம்புகிறேன். நான் எதையும் எவர்மீதும் திணிக்க முயலவில்லை. நான் வெறுமனே எனது எண்ணங்களை, எனது சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளவே செய்கிறேன்.

எனது காலத்தின் அதியவசரமான கோரிக்கையை உணர்ந்து பார்க்கும் நான், நிறவெறியையும், சில தேசங்கள் பிறவற்றின் மீது மேலாண்மையுரிமை கொண்டாடுவதற்கான நிற-இன வெறிக் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளாமை போன்ற காந்தி யின் ஆளுமையில் தென்படும் இத்தகைய தெள்ளத் தெளிவான போக்குகளையும், அல்லது நிறவெறி ஒடுக்குமுறையையும் காலனி ஒடுக்குமுறையையும் சகித்துக் கொள்ளாமை போன்ற அவரது உன்னதமான போக்குகளையும், எவ்வாறு மிகக்கூரிய கவனத் தோடு கூர்ந்து பார்க்காமல் இருக்க முடியும்? ஏனைய நாடுகளின் துயரங்களையும் அல்லது அவற்றைச் சுரண்டிப் பிழைப்பதையும் பயன்படுத்தி மேலோங்க முயலும் அத்தகைய தேசபக்தியைத் தாம் மறுப்பதாக காந்தி கூறியுள்ள கூற்று மதிப்புக்கும் ஆழ்ந்த கவனத்துக்கும் உரியதாகும்.

பல்வேறு மதக் கோட்பாடுகளும் தோற்றுவித்துள்ள பகைமையையும் வேற்றுமையையும் எதிர்த்து, காந்தி பல ஆண்டுகளாகப் போராடினார். நன்னெறி பற்றிய அவரது கருத்து எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருந்ததோ அந்தக் கோட்பாடுகளும், மற்றும் நல்லொழுக்கத்தின் பொது நியதிகள் பற்றிய அவரது கருத்துக்களும்தான் இந்தப் போராட்டத்தையும் நடத்தத் தூண்டி விட்டுள்ளன. என்ற போதிலும், நடைமுறையில் இந்தப் போராட்டம் ஒரு புதிய, மிகப் பெரிய, அதியவசர ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த, தேசபக்த மற்றும் அரசியல் அர்த்தபாவத்தைப் பெற்றது: ''பிரித்தாள வேண்டும்'' என்பதையே தமது கோட்பாடாகக் கொண்டிருந்த தமது முன்னைப் பழங்கால முன்னோர்களின்—நாடுகளை அடிமைப் படுத்திய புராதனகால ரோமானிய மன்னர்களின்—ஆணைகளுக் கேற்பச் செயல்பட விரும்பிய காலனியாதிக்கவாதிகளின் விருப்பத்தை அது எதிர்த்தது.

அவரது வாழ்க்கையின் பிரதான லட்சியங்களில், ''தீண்டாமைக் கொடுமை'' என்று காந்தியே வருணித்ததும், இந்தியாவின் வாழ்வில் அந்தப் பயங்கரமான காட்சியுண்மையைத் தோற்றுவித்ததுமான அந்தப் பன்னூற்றாண்டுக் கால, வழி வழி வந்த வறட்டுக் கோட்பாடுகளை ஒழிப்பதும் ஒன்றாகும். பறையர்கள், ''தீண்டத் தகாதார்'' என்ற ஜாதி மக்கட் தொகையில் கிட்டத்தட்ட இருபது சதவீதம் இருந்தனர் என்பதை நாம் நினைவு கூர்வோம். இந்தக் குடிமைக் கடமைச் சாதனையை நிறைவேற்றுவதில் காந்தி வெற்றி பெறுதிருந்தால், காலனியாதிக்க நுகத்தடியிலிருந்து இந்தியாவை விடுதலை செய்வதற்கான தேசியப் போராட்டத்திலிருந்து ஒரு மாபெரும் சமூகப் பகுதியினர் விலக்கி வைக்கப்பட்டிருப்பர். மேலும் காந்தி சுயராஜ்யம் (தன்னாட்சி) எனக் குறிப்பிட்ட குறிக் கோளும் எய்தப்பட்டிருக்காது.

மேலும், இந்திய மாதர்களின் விடுதலைக்காக, காந்தி நடத்திய போராட்டம் பற்றியும் கூற வேண்டாமா? மக்கட் தொகையில் செம் பாதியாகவிருந்த மாதர்களிலும், அவர் மிகப் பெரும் விளைவை ஏற்படுத்தக்கூடிய உள்ளாற்றல் படைத்த ஒரு சமூக சக்தியைக் கண்டார். சுயராஜ்யம் என்ற அந்த நெடுங் காலமாக விரும்பித் தவித்துக் கொண்டிருந்த குறிக்கோள் எதார்த்தமாக வேண்டும் என்பதற்காக, அவர் தமது நாட்டின், தமது தேசத்தின் சகல சக்திகளையும், விடுதலைப் போராட்டத் துக்காக ஒன்று திரட்ட முயன்றார்.

காந்தி ''மக்களின் நாடித்துடிப்பை உள்ளுணர்வோடு தொட்டுணர்ந்தார்'' என்று கூறி, ''சுதந்திரம் அடைய இந்தியா கொண்டிருந்த உறுதிப்பாட்டின் சின்னம்'' என்ற பெருமித மிக்க புகழ்மாலையை ஜவாஹர்லால் நேரு அவருக்கு வழங்கினர் என்றால் அதில் வியப்பேதும் இல்லை.

கைராட்டையின் இசை ஒவ்வோர் இந்தியரின் வீட்டிலும் ஒலிக்க வேண்டும் என்று காந்தி விரும்பினர். அவரது இந்த நிலையில், ஒவ்வொருவருக்கும் வேலை கொடுக்கப் பாடுபட வேண்டும் என்பது ஒரு புறமிருக்க, நாட்டின் தொழில் வளர்ச்சியினது முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் ஒரு சாத்தியப்பாடும் இருந்தது. என்றாலும், லட்சோப லட்சமான கரங்களால் நெய்யப்பட்ட துணிகளை மக்கள் போதுமான அளவுக்குப் பெற்றிருந்தால், பஞ்சாலைகளின் ''ஊடுருவ''லின் உதவியோடு தமது ஆட்சியை வலுப்படுத்திக் கொள்ள முயன்ற காலனியாதிக்கவாதிகளின் முயற்சிகளுக்குப் பதிலடியாக, அவர்களுக்கு மக்கள் அதற்கு இடம் ''இல்லை'' என்று கூற முடியும் என்று அவர் நம்பினர் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே, அநேகமாகத் தாம் செய்தவை எல்லாவற்றிலுமே, தாம் விடாப்பிடியாகவும், தமது சொந்த வழியிலேயே, உறுதியாகவும் காலனியாதிக்க ஆதிக்க அமைப்புக்கு எதிராக இருந்து வந்ததையும், தாம் தமது நாட்டைப் பேரார்வத்தோடு நேசித்து வந்த மனிதர் என்பதையும், அந்நாட்டின் விடுதலையும் சுதந்திரமுமே தமது வாழ்க்கை லட்சியம் என்பதையும் காந்தி புலப்படுத்தினர்.

ஆம். காந்தி அஹிம்சை முறைகளின் மூலம் ஓர் ''அமைதிப் புரட்சி''யை நிறைவேற்றி முடிக்கப் பாடுபட்டார். எங்கள் நாட்டில் நாங்களும்கூட புரட்சியை ஒரு உள்நாட்டுப் போர் இல்லாமலும், சாத்தியமான அளவுக்கு மிகக் குறைந்த இழப்புக்களோடுமே நிறைவேற்றி முடிக்க முயன்றோம். சுதந்திரத்தை ஒடுக்குவதையும், எங்களது புரட்சிச் சுடரை அணைப்பதையுமே நோக்கமாகக் கொண்டிருந்த உள்நாட்டு எதிர்ப்புரட்சிக் சக்திகளும் மற்றும் ஆயுதந்தாங்கிய தலையீட்டை மேற்கொண்ட பதினொரு ஏகாதிபத்திய வல்லரசுகளும்தான், எங்களது புரட்சியினது வளர்ச்சியின் சமாதான பூர்வமற்ற மார்க்கத்தை, எங்களது உழைக்கும் மக்களின்மீது நிர்ப்பந்தமாகத் திணித்தன.

அவை இரு வெவ்வேறு மார்க்கங்களாகவே இருந்தன. என்றாலும்கூட, பரந்த வெகுஜனங்களின் பலத்தில் காந்தி வைத்திருந்த நம்பிக்கையை நாங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. புரட்சி என்பது எப்போதுமே மிகப் பரந்த வெகு

ஜனங்களின் இயக்கமேயாகும். அதேபோல், போராட்டத்தின் தர்க்கவியலானது, ''இந்தியாவை விட்டு வெளியேறு!'' என்று காலனியாதிக்கவாதிகளை நோக்கிச் சவுக்கடி கொடுத்தாற் போல் கோஷித்த கோஷத்துக்குக் காந்தியைக் கொண்டு வந்து சேர்த்தது என்ற உண்மையையும் நாம் உணர்ந்து பாராட்டத் தவற முடியாது.

இரண்டாம் உலகப் போர் வெடித்தபோது, காந்தி பாசிசத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தார், சோவியத் மக்களோடு தாம் கொண்டிருந்த ஆழ்ந்த பரிவுணர்ச்சியை வெளியிட்டார் என்பதையும் மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள். ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் அணு குண்டுகளை வீசியதை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பியவர் களிலும், அணு ஆயுதங்களைத் தடை செய்யவும், முக்கியமான பிரச்சினைகளுக்குச் சமாதான பூர்வமாகத் தீர்வு காணவும், பொதுவான படைக்குறைப்பைக் கொண்டு வரவும் வேண்டும் என்று கோரியவர்களிலும் அவரும் ஒருவராக விளங்கினர்.

காந்தியின் வாழ்க்கை ஓர் இடையறுத தேட்டமாக, சத்தியத்தையும், நல்லொழுக்கம் பற்றிய தமது சொந்தக் கருத்தையும், அரசியல் போராட்டத்துக்கான திட்டவட்டமான முறைகளையும், தத்துவார்த்தக் கோட்பாடுகளையும் தேடும் தேட்டமாகவே இருந்தது. அவரது தேட்டங்களின் சிக்கல் தன்மையும் நாளுவிதத் தன்மையும், இந்தியாவின் வரலாற்று பூர்வமான வளர்ச்சியின் சிக்கல் தன்மையைப் பிரதிபலித்தன.

இந்திய மக்கள் ''ஒரு பெரிய ஆன்மா'' எனப் பொருள்படும் அழகிய சொல்லான ''மகாத்மா'' என்ற பெயரால் காந்தியைக் குறிப்பிட்டுள்ளனர். மக்களின் இந்தத் தகுதி வாய்ந்த புதல்வரான இவரது ஆன்மா, அது இந்திய மக்களின் தேட்டங்களை— விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமான அவர்களது தாகங்களைக்— கிரகித்துக் கொண்டும் பிரதிபலித்துக் கொண்டும் எங்கெங்கே தன்னை வெளிப்படுத்திக் கொண்டதோ, அந்த வெளிப்பாடு களிலெல்லாம், அது மிக மிக உயர்ந்து விளங்கியது என்றே நான் கருதுகிறேன்.

அத்தகையதோர் ஆன்மா உண்மையிலேயே மகத்தானது தான்.

1968

பகுதி-2

எழுத்தாளர்

எழுத்தாளரும் விமர்சகரும் நேர்மையாகச் செயல்பட வேண்டும்

சோவியத் எழுத்தாளர்களில் பலர் (அவர்களில் இந்த வரிகளை எழுதும் ஆசிரியரும் ஒருவர்) வட்டாரப் பேச்சு வழக்கு மொழியை மிதமிஞ்சிப் பயன்படுத்த முனைகின்றனர். நம்மில் மிகப் பலர் ஏனைய இலக்கியப் பிழைகளுக்கும் அதிக அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ உள்ளாகிறோம். ஆயினும், எஃப். பான்ஃபெரோவ் மட்டுமே மோசமாக எழுதுவதற்கான தமது உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள முனையும் ''துணிவை''ப் பெற்றிருக்கிறார்; மேலும் என்னவென்றால், இதே போல் செய்யுமாறு அவர் அரும்பி வரும் இளம் எழுத்தாளர்களையும் தூண்டி வருகிறார்.

புருஸ்கி பற்றிய விவாதத்தின்போது, தாம் ஆற்றிய முடிவுரையில், பான்ஃபெரோவ் தாம் ''கோடிக் கணக்கான மக்களின் மொழி''யில் எழுதுவதாக விவேகமற்ற முறையில் கூறியபொழுது அவருக்கு ஏற்பட்ட தோல்வியைப் பற்றி எல்லோரும் அறிவர். தமது கலைநய-விரோதமான, மொழி வழக்கற்ற, சுவையற்ற எழுத்துக்களை இலக்கியத்துள் கொண்டு வந்து மானுங்காணியாய்க் குவித்து வரும் ஏராளமான சீடர்களை அவர் கொண்டிராவிட்டால், ''இலக்கியத் துறைத் தலைவர்'' என்ற பாத்திரத்துக்கு உரிமை கொண்டாடி வரும் பான்ஃபெரோவ், இந்த இலக்கியக் குளறுபடியாளர்களின் கும்பலுக்குத் தலைமை தாங்க முயலாதிருந்தால், ''நூறு வார்த்தைகளில் ஐந்து மட்டுமே நல்லவையாக இருந்து, மீதி தொன்னூற்றி ஐந்தும் மோசமானவையாக இருந்தாலும், அதுவே போதுமே'' என்ற கோட்பாட்டுக்குக்கேற்பவே, பான்ஃபெரோவும் எழுதாதிருந்தால், கார்க்கியினால் போதுமான அளவுக்குக் கடுமையாகவே விமர்சிக்கப்பட்டுள்ள

பான்ஃபெரோவைப் பற்றி மேலும் எதுவும் கூற வேண்டிய அவசியமே ஒருவேளை நேராது போயிருக்கலாம்.

என்றாலும், இப்படித்தான் அவரது புருஸ்கி எழுதப்பட்டுள்ளது. எனது கருத்தை நிரூபித்துக் காட்டுவதற்கு, பான்ஃபெரோவிடம் கலாசாரத் துறை நபரிடம் இருக்க வேண்டிய மொழியறிவு இல்லாமை, வார்த்தைகளை அவர் கவனமே இல்லாமல் பயன்படுத்துவது, அவரது அறியாமை ஆகியவை சம்பந்தமாக, கார்க்கி மேற்கோள் காட்டிய உதாரணங்களைப் பெருக்கிக் கொண்டு செல்ல வேண்டியதும் அவசியமில்லை. புருஸ்கியின் மூன்று பாகங்களையும் கவனமாகத் திரும்பப் படித்துப் பார்ப்பதன் மூலம் எவரும் இதனைத் தாமே கண்டு கொள்ளலாம்.

பான்ஃபெரோவின் நூலைப் பற்றி ஒரு விமர்சன பூர்வமான ஆய்வுரை செய்வது எனது நோக்கம் அல்ல; எனது கவலையெல்லாம் இதுதான்: கார்க்கியின் கட்டுரை வெளிவருவதற்கு முன்னால், புருஸ்கியில் மலிந்து கிடக்கும் இந்த அப்பட்டமான குறைபாடுகளை விமர்சகர்கள் எவருமே எப்படிப் பார்க்காது போக முடிந்தது என்பதுதான். உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பரவலாகத் தெரிய வந்துள்ள ஒரு நூலாசிரியர் ஒன்றன் பின் ஒன்றாய் அடுத்தடுத்து நூல்களை வெளியிட்டு வந்துள்ளார், ஆயினும் அந்த நூல்கள் அனைத்திலும் இலக்கிய வழுக்கள் நிறைந்துள்ளன என்றால் அது எப்படி நிகழ முடியும்?

சந்தேகமின்றி, விமர்சகர்கள் இந்தத் தவறுகளைக் காணத் தான் செய்தனர்; என்றாலும் இவற்றைப் பற்றி அவர்கள் ஏதாவது குறிப்பிட்டாலும்கூட, அதனைத் தெளிவற்ற, உள்ளடங்கிப் போன பம்மிய குரல்களில்தான் குறிப்பிட்டனர்; அதே சமயம் பெரும்பாலோர் வெறுமனே தங்கு தடையற்ற புகழ்மாலைகளையே தொடர்ச்சியாகப் பாடிக் கொண்டிருந்தனர்; இந்தப் புகழ்ப்பாக்களை இயற்றுவதில் அவர்கள் அத்தனை கற்பனை வளம் படைத்தவர்களாக இல்லாத காரணத்தால், புருஸ்கியில் எல்லாவிதமான சிறப்புக்களும் அப்படியே ததும்பி வழிகின்றன என்று எப்பாடுபட்டேனும் வாசகர்களுக்கு உணர்த்திவிட வேண்டும் என்பதற்காக, வெறுமனே பான்ஃபெரோவை மற்றொரு பால்ஸாக்காகவும், மற்றொரு உஸ்பென்ஸ்கியாகவும் புகழ்ந்து பாராட்டும் மிகவும் எளிய உத்தியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

லித்தரத்துர்னி ஜிரிடிக், எண் 4, 1933 சஞ்சிகையில் வெளி வந்த வாசில்கோவ்ஸ்கியின் கட்டுரை இத்தகைய புகழாரம் சூட்டும் விமர்சனத்துக்கு ஒரு சரியான உதாரணமாகும். இந்தக்

கட்டுரையின் ஆசிரியர், இலக்கியச் சிரஞ்சீவித் தன்மைக்கு பான்ஃபெரோவ் உரிமை கொண்டாடி வருவதை நிலைநாட்டவே முயன்றிருக்கிறார். புருஸ்கியின் மூன்றாவது பாகத்தில் எது நல்லது அல்லது எது கெட்டது, பான்ஃபெரோவின் பலம் எதில் அடங்கியுள்ளது அல்லது அவரது பலவீனம் எதில் அடங்கியுள்ளது என்பவை பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளத் தமது கட்டுரை வாசகருக்கு எதையும் கூறவில்லையே என்ற கவலையே கட்டுரை யாசிரியருக்கு இல்லை. அதைப் படித்துப் பார்த்தால், அந்தக் கட்டுரை வாசகர்களுக்காக எழுதப்படவில்லை, மாறாக, பான்ஃபெரோவுக்காக மட்டுமே எழுதப்பட்டது என்ற எண்ணமே ஒருவருக்கு ஏற்படுகிறது. அது வசனத்தில் எழுதப் பட்ட ஒருவிதமான காதல் பாட்டுத்தான்.

தமது குறைபாடுகளை பான்ஃபெரோவ் வெற்றி கொள் வதற்கு உதவும் எந்த முயற்சியையும் வாசில் கோவ்ஸ்கி மேற் கொள்ளவில்லை. பான்ஃபெரோவின் மொழி விஷயத்தில் எல்லாமே நன்றாக இருந்துவிடவில்லை என்று எவரேனும் சொன்னார்களா? இதற்கு வாசில்கோவ்ஸ்கி ஒரு சூடான, வசதியான பதிலை வழங்கி விடுகிறார்: ''பான்ஃபெரோவின் மொழி கடினமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. நல்லது, வால்கா நதிப்பிரதேச விவசாயிகளின் மொழி அப்படித்தானே உள்ளது. நிகிதா குர்யானேவ் நாகரிகப்படுத்தப்பட்ட மொழியில் பேசினால் அது வேடிக்கையாகத்தானே இருக்கும்.''

எத்தனை ஈடிணையற்ற வெகுளியாக இருக்கிறார் இவர்! பான்ஃபெரோவின் கதா பாத்திரங்களின் மொழியைப்பற்றி யாரோ குறிப்பிட்டு விட்ட மாதிரி.

கதையின் சம்பவம் பற்றியும் எல்லாமே நன்றாக இருந்து விடவில்லை என்று யாரேனும் கூறினார்களா? இங்கும்கூட, புருஸ்கியின் ஆசிரியரைப் பாதுகாப்பதற்காக, கடமையுணர்ச்சி மிக்க வாசில்கோவ்ஸ்கி அந்த ஆட்சேபணையையும் இவ்வாறு கூறித் தடுத்து நிறுத்துகிறார்: ''இந்த நூலில் கதைச் சம்பவம் எதுவும் இல்லைதான். என்றாலும், இது ஓர் அனுகூலம், ஒரு பிரதிகூலம் ஆகிய இரண்டும்தான். பால்ஸாக்கின் விவசாயிகளைப் படித்துப் பாருங்கள். அதிலும் கதைச் சம்பவம் என்று எதுவுமே இல்லை.''

இதன்பின், பான்ஃபெரோவ் சமயங்களில் தமது கதா நாயகனை நிகிதா குர்யானேவைப் போலவே நடந்து கொள் கிறார் என்று அவர் கூறும்போது—இந்தக் கதாநாயகன் கிராம மன்றத்திலிருந்து ஒரு பெஞ்சை வீட்டுக்கு எடுத்து வந்துவிட்டு, ''இது உட்கார்வதற்காவது அல்லது வேறு எதற்காவது சமயங்

களில் பயன்படும்'' என்று தனக்குத்தானே சொல்லிக் கொள் கிறான் என்பது எல்லோரும் அறிந்ததுதான்—வாசில்கோவ்ஸ்கி இவ்வாறு எழுதுகிறார்:

''பான்ஃபெரோவ் இதேபோல் ஏராளமான உண்மைகளைத் தம் நூலுக்குள் கொண்டு வந்து, தமது நூலை மேன்மேலும் கனமாக்கி விடுகிறார்.''

இது குறை கண்டுபிடிக்கும் விமர்சகர் ஒருவரிடமிருந்து வரும் கண்டனம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை. இதற்கு மூன்று வரிகள் கீழே சென்றால், வாசில்கோவ்ஸ்கி இந்த விவசாயச் சிக்கனத் தன்மையை மூற்றிலும் நியாயப்படுத்து கிறார்; இதற்கும் மேலாக, அவர் தமது வாதத்துக்கு ஓர் உறுதி யான அஸ்திவாரத்தையும் வழங்குகிறார்.

அவர் இவ்வாறு எழுதுகிறார்: ''நாம் ஹீன் கூறுவதை மீண்டும் ஒருமுறை பார்ப்போம், 'கதேயின் மிகப்பெரும் சிறப்பானது, உண்மையில் அவர் சித்திரித்துக் காட்டிய அனைத்தின் பரிபூரணத் தன்மையில்தான் அடங்கியுள்ளது. அவர் மிகவும் செம்மையான விவரங்களை மோசமான விவரங் களோடும், முற்றிலும் பூர்த்தி செய்யப்பெற்ற ஒரு சித்திரத்தை, பென்சிலால் வரையப் பெற்ற வரைபடத்தோடும் இணைப்ப தில்லை. அவரிடம் எந்தவிதமான பயந்த சுபாவமுமே கிடையாது... அவர் தமது நாடகங்களிலும் நாவல்களிலும் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் அதுவே பிரதானமான பாத்திரமாக இருப்பதுபோல் முழுமையாக விவரிக்கிறார். ஹோமர் விஷயத்திலும் ஷேக்ஸ்பியர் விஷயத்திலும் இதே மாதிரிதான்' என்று ஹீன் எழுதினார்.''

பரவாயில்லையே! நமது விமர்சனம் இன்னும் முழுமையாக இல்லை என்று இப்போது சொல்ல முயலுங்களேன்....

உண்மை. வாசில்கோவ்ஸ்கியின் மதிப்புரையில் ஓரளவுக்கு ''எதார்த்தத் தன்மை'' இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. 54 ஆம் பக்கத்தில் அவர் இவ்வாறு கூறுகிறார்:

''வருங்கால விமர்சகர் புருஸ்கியின் மூன்றும் பாகத்தை மீண்டும் மீண்டும் புரட்டிப் பார்க்கின்றபோது, சந்தேகமின்றி அவர் அதனை வேறுவிதமாகத்தான், ஒருவேளை மிகவும் கண்டிப்பாகவும் கூடத்தான், தீர்மானிப்பார்.''

''அதனை வேறுவிதமாகத் தீர்மானிக்கும்'' விஷயம் வருங்கால விமர்சகர் பாடு; அதற்கிடையில் வாசில்கோவ்ஸ்கி, புருஸ்கி நமது மாபெரும் புரட்சிகர சகாப்தத்துக்கு ஒரு

கருத்தைக் கவரும் நினைவுச் சின்னமாகும் என்ற கூற்றோடு கட்டுரையை முடிக்கிறார்; அத்துடன் கொஞ்சங்கூட வெட்கமின்றி இவ்வாறு எழுதி முடிக்கிறார்:

''பான்ஃபெரோவ் தமது நாவலின் நான்காவது பாகத்தை எழுதி வருகிறார். அவர் மேலும் பல பாகங்களை எழுதுவார் (அது பதினேந்தோ அல்லது இருபதோ, அதெல்லாம் விமர்சகரின் கற்பனை வீச்சுக்கு அப்பாற்பட்டது); அதன்பின் கூட்டுடைமையாக்கம் தனது சொந்த ஹ்யூமன் காமெடியைப் பெற்று விடும்.''

ஓ! நல்லது. நினைவுச் சின்னத்தைப் பொறுத்தவரை, எத்தனை எத்தனையோ நினைவுச் சின்னங்கள் உள்ளன என்பது எல்லோருக்கும் தெரியும். வாசில்கோவ்ஸ்கியின் கட்டுரையும் வருங்காலத் தலைமுறையினரால், விமர்சகர்கள் பொறுப்பற்ற கட்டுரைகளை எழுதி வந்த கடந்த காலத்துக்குச் சான்றான ஓர் உறுதியான நினைவுச் சின்னமாகவே கருதுவார்கள் என்று நான் ஆழமான திடநம்பிக்கை கொண்டுள்ளேன். தமது நல்வாழ்த்துக்களை ஒவ்வொருவரும் தாராளமாகத் தெரிவித்துக் கொள்ளலாம் என்பது உண்மைதான். ஆயினும், பான்ஃபெரோவ் வாசில்கோவ்ஸ்கியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து, தாம் புருஸ்கியின் முதல் மூன்று பாகங்களை எழுதியதைப் போலவே, மேலும் 15 அல்லது 20 தொகுதிகளை எழுதுவராயின், அது இனியும் இலக்கிய விவாதத்துக்கான ஒரு விஷயமாக இருக்காது, மாறாக அது ஒரு பெரும் இயற்கையின் உற்பாதமாகவே இருக்கும் என்று கூறி, பான்ஃபெரோவை வெளிப்படையாகவும் நேர்மையாகவும் உச்சரிப்பதே, ஒரு விமர்சகர் என்ற முறையில் வாசில்கோவ்ஸ்கியின் கடமையாகும்.

லித்தரத்துர்னி கிரிட்டிக் சஞ்சிகையின் அதே இதழில், ''தொழிலின் நலன்கள்'' என்ற தலைப்பில் கோர்னெலி ஜெலின்ஸ்கி எழுதிய ஒரு கட்டுரையும் இருந்தது. அதில் வாழ்க்கையை பற்றிய ஞானத்தை விமர்சகர்கள் பிரதானமாகப் பத்திரிகைகளிலிருந்தே சேகரித்துக் கொள்கின்றனர் என்ற உண்மையைக் குறித்து வருந்தும் ஜெலின்ஸ்கி இவ்வாறு எழுதுகிறார்:

''உதாரணமாக, நீப்பர் நதிமீது நிர்மாணிக்கப்பட்டு வரும் நிலையத்தை நேர்முகமாகக் கண்டு விஷயஞானம் பெறுமல், கிளாத்கோவின் எரிபொருள் என்ற நூலைத் திறம்பட அலசி ஆராய்வது சாத்தியமா? மொழியியல் சம்பந்தப்பட்ட பல யோசனைகளை கிளாத்கோவுக்கு வழங்குவது மிகவும் சுலபம். ஆயினும், கலா பூர்வமான கற்பனை வடிவத்தை எதார்த்தத்தோடு

இணைக்கப்பட்ட பிறகு மட்டுமே, கலாபூர்வமான கற்பனை வடிவம், அதன் போதனை மற்றும் அரசியல் பாத்திரம் ஆகிய வற்றின் தாக்கத்தை முழுமையாக நிலைநாட்ட முடியும்.''

அவர் மேலும் இவ்வாறு கூறுகிறார்:

''பான்ஃபெரோவ் எழுதிய புருஸ்கியின் மூன்றும் பாகம் வெளிவந்துள்ளது. இது விஷயத்தில் ஒரு ரசிகரோ அல்லது மதிப்பீட்டாளரோ எதுவும் செய்வதற்கில்லை. இந்த நூலை அலசி ஆராயும் உரிமையைப் பெறுவதற்கு, விமர்சகர் கூட்டுடைமை யாக்க இயக்கத்தையும், கிராம வாழ்க்கையையும், கூட்டுப் பண்ணை விவசாயியையும் பற்றிய நல்ல விஷய ஞானத்தையும் பெற்றிருக்க வேண்டும்; அவர் கட்சியையும், அது கிராமப் புறத்தில் ஆற்றிவரும் பணியையும் அறிந்திருக்க வேண்டும். தொழில் முறை விமர்சகர்களான நமது மத்தியில் அத்தனை சர்வ பரிபூரணமாகக் கல்வி கற்ற நபர்கள் பலர் உள்ளனரா?''

மொழி அத்தகைய அற்ப முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் தான் என்றும், மொழியைப்பற்றி மட்டும் எழுதுவதே சுயமரியாதையுள்ள ஒரு விமர்சகரின் கௌரவத்துக்கு அப்பாற் பட்டதாகும் என்றும் நிச்சயமாக ஜெலின்ஸ்கி இதய பூர்வமாகக் கூற முடியாது. வெளிப் பார்வைக்கு ''ஒரு–தரப்பானதாக''த் தோன்றக்கூடிய ஒரு சிறிய, காரியார்த்தமான கட்டுரையும்கூட, வார்த்தைகள் மலிந்த, சகல விஷயங்களையும் தொடுகின்ற, மிகப் பல சமயங்களில் போலி–அறிவுமிக்க விமர்சனக் கட்டுரையைக் காட்டிலும் நூலாசிரியருக்கும் வாசகருக்கும் மிகவும் உதவிகரமாக இருக்கும். மேலும் புத்தகங்களை அவற்றின் ஆசிரியர்களது சொந்த விஷயமாக மதிப்பதையும், விமர்சகரின் பணியை, அவர் மதிப்புரை செய்யும் நூலின் வெற்றியினாலோ அல்லது தோல்வியினாலோ, லாபமோ அல்லது நஷ்டமோ அடைவதற்கில்லாத ஓர் இடைத்தட்டு நபரின் பணி யாக மதிப்பதையும், நாம் நிறுத்தியாக வேண்டியதற்குக் காலம் வந்து விட்டது. ''சர்வ பூரணமாகக் கல்வி கற்ற'' பிரிவினரில் சேராத ஒரு விமர்சகரது பணியைப் பற்றி நான் வேறுவிதமான கருத்தை மேற்கொள்ளவே முனைகிறேன். அவர் எதார்த்தத்தை நன்கு தெரிந்து கொண்டிருந்தால், வாழ்க்கையைத் தமது சொந்தக் கண்களாலேயே பார்த்திருந் தாலும் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆனால் அவ்வாறு தெரிந்து கொண்டிராவிட்டால், அவர் குறைந்தபட்சம் நூலின் மொழி பற்றியாவது எழுதட்டும்: இந்த ஒரு வகையில்தான் என்றாலும், நூலாசிரியரது நூல்கள்

மேலும் முழுமையான, மேலும் அருமையான ஓவியோடு ஒலிப்பதற்கு அவர் நூலாசிரியருக்கு உதவட்டும்.

நூலாசிரியர் இந்த உதவிக்கும் கூட நன்றியுடையவராக இருப்பார். மேலும், இவ்வாறு கூறுவதற்குக் காரணம், பழமொழி கூறுவதுபோல், ஒன்றுமில்லாததைக் காட்டிலும், ஒரு சொறி பிடித்த ஆட்டிடமிருந்து ஒரு குத்து ரோமத்தைப் பிடுங்குவது மேல் என்பதனால் அல்ல; மாறாக, எழுத்தாளர் களான நம்மில் மிகப் பெரும்பாலோர் மொழியில் ஒரு செம்மை யான சொல்லாட்சித் திறனை இன்னும் எட்டிப் பிடிக்கவேயில்லை என்பதனால்தான். மேலும், இலக்கியத்துக்கும் நிர்மாணம்பற்றிக் கூறும் அதே வார்த்தை பொருந்தும்: அதாவது, எவரும் எதுவும் செய்யாமல், சும்மா நின்று வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. முக்கியமாக, விமர்சகர்கள் அவ்வாறு இருக்க முடியாது. உங்களுக்குத் தேவையான விஷயஞானம் இல்லாவிட்டால், போங்கள்; போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; அதற்கிடையில், உங்களால் அதிகமாக வேலை செய்ய முடியாது என்றால், செங்கல்களையாவது பொறுக்கிக் கொடுங்கள்.

இலக்கியக் குப்பைகள் அதிகரித்து விடுவதற்கான பிரதான மான காரணங்களில், நேர்மையான, இதயபூர்வமான, பொறுப்பு மிக்க விமர்சனம் இல்லாமையும் ஒன்றாகும். இந்த அத்தியாவசியமான தன்மைகளை விமர்சகர்கள் நெடுங்காலத்துக்கு முன்பே உருவாக்கிக் கொண்டிருக்க வேண்டும்; தமது தரக்குறை வான படைப்புக்கு எழுத்தாளர் ஏற்கவேண்டிய பொறுப்பில் ஒரு பகுதியையாவது அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். விமர்சகர்களின் குற்றம் சார்ந்த உடந்தைப் போக்கினால்தான் ஒரு தரக்குறைவான நூல், பல பதிப்புக்களாக வெளிவர முடியும்; இதற்கும் மேலாக, அது இலக்கிய உலகில் புதிதாகக் காலடி வைத்துள்ளவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகப் பயன் பட்டுவிடும்.

இலக்கியக் குப்பையின் வளர்ச்சிக்கான இரண்டாவது காரணம், ஏப்ரல் 23-ல் எடுக்கப்பட்ட மத்தியக் கமிட்டியின் முடிவுக்குப் பிறகும்கூடத் தொடர்ந்து செழித்து வளரும் ''கோஷ்டி'' மனப்பான்மையாகும். கலைக்கப்பட்டு விட்ட பாட்டாளி வர்க்க எழுத்தாளர்களின் ரஷ்யக் கழகத்தை உதைத்துக் கொண்டே இருப்பதில் எப்போதுமே சளைக்காத பான்ஃபெரோவ், அவரே தலைமை வகித்து இயக்கி வரும் படைப்பாளர் கோஷ்டி விஷயத்தைத் தீவிரமாக மறுபரிசீலனை செய்வது, அவருக்கு ஒரு நல்ல யோசனையாக விளங்கக்கூடும். இந்தக் கோஷ்டி ஒரு பரஸ்பரப் பாராட்டுக் கழகக் கொள்கையை

மேற் கொண்டிராவிட்டால், அவரது புருஸ்கி இன்னும் மேலான கலைநயத் தரத்தோடு எழுதப்பட்டிருக்கக் கூடும். எவ்வாறு யினும், அந்த நூலாசிரியரின் கவனத்துக்கு கார்க்கி கொண்டு வந்துள்ள அந்த ''அறியாப் பிழைகள்'' அதில் இடம் பெற்றிருக்காது.

பான்ஃபெரோவின் தரக்குறைவான படைப்பை நியாயப் படுத்த முனையும் ஓர் அவசரமான விருப்பத்தோடு துடிதுடித்துக் கொண்டிருக்கும் ஏ.எஸ். செராஃபிமோவிச் எழுதியுள்ள ''எழுத்தாளர்களைப் பற்றி—அழகுப்படுத்தப்பட்டுள்ளவர்களையும், அழகுபடுத்தப் படாதவர்களையும் பற்றி'' என்ற கட்டுரை, லித்தரத்தூர்னயா கெஜட்டா சஞ்சிகையின் தலையங்கத்திலும், மற்றும் கார்க்கியின் பகிரங்கக் கடிதத்திலும் தகுதியான முறையில் கண்டிக்கப்பட்டது. புருஸ்கியின் மூன்றுவது பாகத்தில் வரும் கற்பனை வடிவத்தை, செராஃபிமோவிச் வியந்து பாராட்டு வதைக் கண்டால், ஒருவருக்கு கலக்க உணர்ச்சியைத் தவிர வேறு ஏற்படாது. அவர் அதனை அந்தப் பேர்போன ''மூஜிக் பல''த்துக்குச் சான்றுக மேற்கோள் காட்டுகிறார்; செராஃபிமோவிச்சின் கருத்துப்படி, அந்தப் பலம் பான்ஃபெரோவிடமே வேரூன்றியுள்ளது:

'' 'ஏ, மனிதா! தனது பிருஷ்ட பாகத்தின்மீது குந்தியிருக்கும் ஒரு குதிரையை ஏன் வேலிக்கு அருகில் வைத்திருக்கிறாய்? அது வேலியையே அசை போட்டுக் கொண்டிருக்கிறது!' சற்று நில்லுங்கள்; இந்தக் கற்பனை வடிவத்தின் அர்த்தத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். எவ்வளவு விஷயம் சொல்லப்பட்டு விட்டது! அதுவும் எவ்வளவு கச்சிதமாக! தனது பிருஷ்ட பாகத்தின் மீது குந்தியிருக்கும் ஒரு குதிரை? ஏன், இதை நீங்கள் என்றுமே, என்றென்றும், மறக்க மாட்டீர்கள். இது பயங்கரமாக உள்ளது!'' என்று வியப்புற்றுப் போகிறார் செராஃபிமோவிச்.

இதுவல்ல, இந்தக் கற்பனை வடிவம்தான் அசம்பாவிதமான முறையில், சுத்த அறிவில்லாத முறையில் பயங்கரமாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது. ஒரு வற்றி மெலிந்த குதிரை குந்தியமர்வதில்லை; அது படுத்து விடுகிறது; மேலும் அது அமரும்போது (அதுவும் அது எழுந்து நிற்க முயலும் போதுதான் அவ்வாறு செய்கிறது), அது தின்பதில்லை. ஒரு குதிரை எழுந்திருக்கவும் எழுந்து நிற்கவும் சக்தியற்றுப் போய் விட்டால், அது தூக்கி நிறுத்தப்படுகிறது; மேலும் அதற்குத் தானியமும் கொடுக்கப் படுகிறது. எனவே, இது ஒரு கற்பனை வடிவம் அல்ல; இதுவும் மற்றொரு ''பேனைப் பிழை''தான். குதிரை வேலியை ''அசை

போடுகிறது'' என்ற கருத்தும், ''கறும்பித் தின்பது'', ''அசை போடுவது'' என்ற சொற்களுக்கிடையே எந்த வித்தியாசத்தையும் காணுதவர்களைத் தவிர, மற்றவர்களைத் திணற வைக்கத்தான் செய்கிறது.

கார்க்கி பின்வருமாறு சொன்னார் என்றால், அவர் கூறியது ஆயிரம் முறை சரியானதே: ''யாரோ ஒருவர் பதிப்பாசிரியராக இருக்கிறார்; எவரோ ஒருவர் இந்த வார்த்தைக் குப்பைகளை உன் கணக்கில் பிரசுரிக்கிறார்; யாரோ சில பொறுப்பற்ற நபர்கள் இந்தப் பொறுப்பற்ற அரைவேக்காட்டுப் பேர்வழிகளின் படைப்புக்களைப் பாராட்டுகிறார்கள், அவர்கள் இவ்வாறு பாராட்டுவதற்கு, அவர்களுக்கு எதுவும் சரியாகத் தெரியவில்லை அல்லது அவர்களுக்குச் சொந்தக் காரணங்கள் உள்ளன என்பதுதான் காரணம் என்பது தெளிவு.''

பான்ஃபெரோவின் தரக்குறைவான நூலைப் பாராட்டவும், நியாயப்படுத்தவும், அலெக்ஸாந்தர் செராஃபிமோவிச்சைத் தூண்டியது அவரது ''கோஷ்டி'' அனுதாபங்களே தவிர, அவரது நட்புறவுத் தொடர்புகள் அல்ல என்றே நான் கருதுகிறேன். அவர் தமது முதிய வயதில் மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயல்பட்டு விட்டார். அவர் அப்படிச் செய்திருக்கக் கூடாது.

இலக்கியத்தைப்பற்றி ஒரு நேரான, அச்சமற்ற முறையில் பேச வேண்டிய, குப்பையைக் குப்பை என்று சொல்ல வேண்டிய காலம் வந்து விட்டது. நமக்குப் புரட்சியினால் உருவாக்கப்பட்ட அத்தாட்சி பூர்வமான புதிய வார்த்தைகள் தேவை; நமக்குப் புதுமையான வடிவங்களும், மனிதகுல வரலாற்றில் மிகப் பெரும் சகாப்தத்தை வருணித்துக் கூறும் புதிய புத்தகங்களும் தேவை. ஆனால், எழுத்தாளர்களான நாம், புதிய வார்த்தைகளை இலக்கியத்துக்குள் கொண்டு வரவும், பான்ஃபெரோவின் சமையல் குறிப்புக்கு ஏற்றாற்போல் இல்லாமல், அதற்கு மாறான முறையில் புத்தகங்களை எழுதவும், கற்றுக்கொள்ளும்போதுதான், இந்தச் சகாப்தத்துக்குத் தகுதியான புத்தகங்களைப் படைக்க நம்மால் முடியும்: ஒவ்வொரு நூறு வார்த்தைகளிலும் 95 வார்த்தைகள் அற்புதமானவையாக இருக்க வேண்டும்; மீதியுள்ள ஐந்தும் நல்லவையாக இருக்க வேண்டும்; மேலும், ஓர் அத்தியாயத்தை அத்தியாயம் என்று கூறாமல், ''அதிர் வேட்டு'', ''கண்ணி'' என்றெல்லாம் கூறும் இத்தகைய ஆரம்ப கால எத்துசித்து வேலைகளையெல்லாம் தாண்டி, புதுமை காண்பது மிகவும் முன்னேறியாக வேண்டும்.

நமது விமர்சகர்கள் ஓர் எழுத்தாளரின்மீது தாராளமாகத் தமது பாராட்டுரைகளை வாரிப் பொழிவதையும், அவர்பால் ஒரு

மாமாத்தனமான போக்கோடு (அதாவது ''அவன் ஒரு சிணுங்கிக் கொண்டிருக்கும் சிறுபிள்ளையாக இருக்கலாம்; இருந்தாலும் அவன் என்னவன்'' என்பது போன்று) ஆதரவு காட்டுவதையும் நிறுத்தும்போதுதான், விமர்சனமானது உண்மையிலேயே புரட்சிகரமானதாகவும், ஈவிரக்கமற்றதாகவும் கண்டிப்பானதாகவும், உண்மையை நேர்நின்று நோக்குவ தாகவும் மாறும்போதுதான், இது நிகழும் போதுதான் இந்தக் ''கோஷ்டி''க் கும்பல், ''தமது சொந்த'' எழுத்தாளர்களையே புகழ்ந்து கொண்டும், தமது கொள்கையை சாராத பிறர்மீது அவதூறு பொழிந்து கொண்டும், இலக்கிய முச்சந்திகள் அனைத் திலும்தான் ஓலமிட்டுக் குலைத்துக் கொண்டும் இருப்பதை நிறுத்தும்.

இந்த நிலைமைகள் நிலவும் போதுதான், நமது சோவியத் வாசகர்களுக்கு நாம் வழங்கிய எண்ணற்ற, பரவலாக விளம்பரப் படுத்தப்பட்ட வாக்குறுதிகளை நம்மால் நிறைவேற்ற இயலும். இல்லாது போனால், ''நேர்மையான சளசளப்புப் பேச்சாளர் களாக'', மட்டமான இலக்கியத்தைப் படைப்பவர்களாக நாம் இருந்து வருகிறோமே, அப்படியே இருந்து வருவோம்.

1934

ஆங்கில வாசகர்களுக்கு

(''டான் நதி அமைதியாக ஓடுகிறது''* நாவலின் ஆங்கில வெளியீட்டுக்கு எழுதிய முன்னுரை)

டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற எனது நாவலை ஆங்கில வாசகர்களும் பத்திரிகைகளும் உளங்கனிந்து வரவேற்றுள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இது எனக்கு விசேட மகிழ்ச்சியை அளிக்கிறது; ஏனெனில் இங்கிலாந்து உலக இலக்கியச் செல்வக் களஞ்சியத்தில் பல மதிப்புமிக்க படைப்புக் களைச் சேர்த்துள்ள மாபெரும் எழுத்தாளர்களின் தாயகமாகும்; அவர்களது அமர இலக்கியங்கள் ஆங்கில வாசகர்களின் ரசனைச் சுவையை வளர்க்க உதவியுள்ளன.

இங்கிலாந்தில் எனது நாவல் ஓர் ''அன்னியமான'' கதை யாகப் புரிந்து கொள்ளப்படுகிறது என்பது எனக்கு ஓரளவு கவலை தருகிறது. ஐரோப்பியர்களுக்கு மிகவும் அன்னியமானதாகத் தோன்றும் டான் கோஸாக்குகளின் வாழ்க்கையைப் பற்றிய

* நான்கு பாகங்கள் கொண்ட இந்த நாவலின் முதற்பாகம் ''ஆற்றங் கரையினிலே'' என்ற தலைப்பிலும், இரண்டாம் பாகம் ''வெற்றி முரசு'' என்ற தலைப்பிலும் தமிழில் வெளிவந்துள்ளன. வெளியீடு: புதுமைப் பதிப்பகம்.

வருணனையில், முதல் உலகயுத்தம் மற்றும் புரட்சி ஆகியவற்றின் விளைவாக வாழ்க்கையிலும், அன்றாட நடவடிக்கைகளிலும், மனித மனோபாவத்திலும் நிகழ்ந்துள்ள பிரம்மாண்டமான மாற்றங்களை ஆங்கில வாசகர்கள் கண்டுணர்ந்து கொண்டால் நான் மகிழ்ச்சியடைவேன்.

நான் என்முன் நிறுவிக் கொண்டுள்ள பணியானது முதலாம் உலக யுத்தம் மற்றும் புரட்சி ஆகியவை நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்த டான் பிரதேச மக்கட் தொகையின் பல்வேறு சமூகப் பகுதியினரை வெறுமனே இனம் காட்டுவது மட்டுமோ அல்லது 1914-க்கும் 1921-க்கும் இடையே நிகழ்ந்த சம்பவங்களின் வலிமைமிக்க சுழுவளிக்குள் சிக்கிய ஆடவர் பெண்டிரின் துன்பமயமான வாழ்க்கைகளை வெறுமனே தொட்டுக் காட்டுவது மட்டுமோ அல்ல; அது சோவியத் ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான நிர்மாண ஆண்டுகளிலும் இந்த மக்களை இனம் காட்டுவதும் ஆகும். கன்னி நிலம் உழப்பட்டது* என்ற எனது கடைசிப் புத்தகத்தை இந்தப் பணிக்குத்தான் ஈடுபடுத்தியுள்ளேன்.

இறுதியாக நான் பின்வருவனவற்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்: ஆங்கிலப் பத்திரிகை மதிப்புரைகளில், எதார்த்தத்தை நான் ''கொடூரமாக''ச் சித்திரிப்பதற்காகக் கண்டிக்கப்படுகிறேன் என்று நான் பலமுறை கேள்விப் படுகிறேன். சில விமர்சகர்கள் பொதுவாக ''ரஷ்யப் பழக்க வழக்கங்களின் கொடூர''த்தைப் பற்றியும் கூறியுள்ளனர்.

இதில் முதலாவது விஷயத்தில், நான் அந்தக் கண்டனத்தை ஏற்றுக் கொள்கிறேன்; ஏனெனில் உண்மைக்குக் குந்தகமான விதத்தில் எதார்த்தத்தைப் பூசிமெழுகி எழுதும், வாசகர்களுக்கேற்பத் தன்னைச் சுதாரித்துக் கொள்ள விரும்பும் காரணத்தினால், தனது வாசகர்களின் உணர்ச்சிகளை உலுக்காது விட்டு விடும் ஓர் எழுத்தாளன் மோசமான எழுத்தாளனேயாவான் என்றே நான் கருதுகிறேன். எனது நாவல் சிலபோர் தமது சாப்பாட்டுக்குப் பின்னர் சிறு தூக்கம் போடுகின்ற நேரத்தில் வாசிக்கின்ற அத்தகைய புத்தகங்களில் ஒன்றல்ல; அவற்றைப் படிப்பதன் ஒரே நோக்கம் உண்டது செரிக்க அவை உதவும் என்பதுதான்.

---

* இந்நாவலின் முதற்பாகம் ''நிலம் எனும் நல்லாள்'' என்ற தலைப்பில் தமிழில் வெளிவந்துள்ளது. வெளியீடு: புதுமைப் பதிப்பகம்.

இதன் இரண்டாம் பாகம் ''கன்னி நிலம்'' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், தமிழாக்கம்: தா. பாண்டியன்.

ரஷ்யப் பழக்க வழக்கங்களைப் பொறுத்த வரையில், ஏனைய எந்தவொரு நாட்டின் பழக்க வழக்கங்களைக் காட்டிலும் அவை மிகவும் கொடூரமானவையா என்று நான் சந்தேகிக்கிறேன். மேலும், 1918–1920-ல் சித்திரவதைக்குள்ளாகியிருந்த எனது தாயகத்துக்கு எதிராகத் தமது படைகளைச் சாடச் செய்து, ஆயுத பலத்தின்மூலம் ரஷ்ய மக்களின்மீது தமது விருப்பத்தைத் திணிக்க முயன்ற அந்தப் பண்பட்ட நாடுகள் மிகவும் கொடூர மாகவும் மனிதத்தன்மையற்ற முறையிலும் நடந்து கொள்ள வில்லையா?

1934

இலக்கியம் பொதுவான பாட்டாளி வர்க்க லட்சியத்தில் ஒரு பகுதியாகும்

(லென்ஜாவோடுத் தொழிற்சாலை மற்றும் ராஸ்தாவ் ரயில்வே ஐங்ஷன் ஆகியவற்றின் தொழிலாளர்களது அதிரடிப் படையினரின் கூட்டமொன்றில் ஆற்றிய உரையிலிருந்து)

தோழர்களே, முதலாவதாக, ரஷ்யாவின் விடுதலைக்கான புரட்சிகரப் போராட்ட வரலாற்றில் மிகவும் அற்புதமான பக்கங்களில் ஒன்றை எழுதியுள்ள லென்ஜாவோடுத் தொழிற் சாலை மற்றும் ராஸ்தாவ் ரயில்வே ஐங்ஷன் ஆகியவற்றைச் சேர்ந்த பாட்டாளிகளுக்கு, சோவியத் எழுத்தாளர் யூனியனது மிகமிக உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள்.

இன்று, லென்ஜாவோடுத் தொழிற்சாலையின் மு தி ய தொழிலாளர்களைச் சந்தித்துப் பேசிய போது, தோழர் லெனினது தனிச்சிறப்பு மிக்க சிந்தனைகளில் ஒன்று, ''இலக்கியம் பொதுவான பாட்டாளிவர்க்க லட்சியத்தின் பகுதியாக மாற வேண்டும்'' என்ற ஒரு விருப்பத்தின் வடிவில் அவர் ஒருமுறை தெரிவித்த கருத்து, எனக்கு நினைவு வந்தது. இந்த விருப்பம் இப்போது உண்மையாகி வருகிறது. மேலும் இதற்கு மிகவும் துடிப்பான எடுத்துக்காட்டு, கார்க்கியின் கட்டுரையின் மூலம் தொடங்கப் பெற்ற மொழி பற்றிய விவாதத்தைத் தொடர்ந்து கவனித்து வருவதில், தொழிலாளி வர்க்கம் காட்டிய மிகப் பெரும் கூரிய கவனமேயாகும். மேலும், நமது காலத்தில், நமது சகாப்தத்தில் இலக்கியம் உண்மையில் பொதுவான பாட்டாளிவர்க்க லட்சியத்தின் பகுதியாக மாறிவிட்டது என்ற உண்மையை இன்னும் தெள்ளத் தெளிவாக உறுதிப்படுத்தும் சான்றை, ஒரு மாதத்துக்கு முன்னால் நடைபெற்ற எழுத்தாளர் களின் அகில–யூனியன் காங்கிரசின் பணியில், தொழிலாளி

வர்க்கமும் சோவியத் மக்கள் அனைவரும் காட்டிய மிகப்பெரும் ஆர்வமே வழங்கியது.

வெளியிடப்படும் எங்களது புத்தகங்களது பிரதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதானது—காங்கிரசில் கலந்து கொண்ட அயல்நாட்டு நூலாசிரியர்களுக்கு, பதிப்புக்களின் அளவே முற்றிலும் நம்புதற்கரியதாகத் தோற்றியது—நமது வாசகர்களின் கலாசார முன்னேற்றத்துக்கான ஒரே அறிகுறி யாக இருந்துவிடக் கூடாது என்று நான் கருதுகிறேன்.

எழுத்தாளர்களான எங்களோடு வாசகர்கள் அன்றுடத் தொடர்பைக் கொண்டுள்ளனர்; வேறு எதைக்காட்டிலும் இதுவே அவர்களது கலாசாரத் தரத்துக்கு மிகவும் ஆணித்தர மாகச் சான்று பகர்கின்றது. இதனை நான் எனது சொந்த அனுபவத்திலிருந்தே அறிவேன் என்றே கூறவேண்டும்: **கன்னி நிலம் உழப்பட்டது** என்ற நூலைப் பற்றியும், அதில் வரும் கதா பாத்திரங்களைப் பற்றியும் கூறுவதற்கு ஏதேனும் விஷயமுள்ள வாசகர்களிடமிருந்து எனக்கு ஒவ்வொரு நாளும் குறைந்த பட்சம் பத்துக் கடிதங்களாவது வருகின்றன. நன்கு பிரபலமாகி யுள்ள விமர்சகர்களின் கட்டுரைகளைக் காட்டிலும் இந்தக் கடிதங்களில் சில, தொழிலில் ஏறத்தாழ நல்ல தேர்ச்சி பெற்று விட்ட எழுத்தாளனை எனக்கு, மிகவும் உதவிகரமாயுள்ளன.

டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற நாவலை நான் எழுதிக் கொண்டிருந்த காலத்தில், உலோகத் தொழிலாளர்களின் லெனின்கிராடுப் பிராந்திய யூனியனோடு நான் நெருங்கிய தொடர்பை மேற்கொண்டிருந்தேன்; நூற்றுக்கணக்கில் அவர் களிடமிருந்து வந்து சேர்ந்த கருத்துரைகள், நான் எனது முதல் புத்தகங்களை எழுதிக் கொண்டிருந்தபோது இழைக்க நேர்ந்த பிழைகளைப் புரிந்து கொள்ளவும் அவற்றைத் திருத்திக் கொள்ளவும் எனக்கு மிகவும் உதவின. சோவியத் யூனியனது எழுத்தாளர்களுக்கும் தொழிலாளி வாசகர்களுக்கும் உள்ள தொடர்பானது, நமது இலக்கியம் உலகின் தலையாய இலக்கிய மாகத் தொடர்ந்து நிலவிவரும் என்பதற்கான ஒரு பலமான உத்தரவாதமாகும் என்பது எனது ஆய்ந்து தெளிந்த அபிப் பிராயமாகும்.

உங்களிற் பலர்—நிச்சயமாகப் பெரும்பான்மையானவர்கள்—காங்கிரசின் பணியைக் கவனமாகத் தொடர்ந்து கவனித்து வந்திருப்பீர்கள், அதன் பிரதான அறிக்கைகளையும் நன்கு தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நான் கருதுவதால், எழுத் தாளர்களது காங்கிரசில் என்ன நடந்தது என்பதைப் பற்றி உங்களிடம் சொல்லிக் கொள்வதோடு மட்டும் நான் நின்றுவிட

விரும்பவில்லை. இலக்கியம் பொதுவான பாட்டாளி வர்க்க லட்சியத்தின் பகுதியாக மாறி விட்டதால், நான் பேச விரும்புவது இலக்கியத்தைப் பற்றித்தான்.

லென்ஜாவோடும், ராஸ்தாவ் ரயில்வே ஜங்ஷனும் பத்திரிகைகளுக்கு முறையாக எழுதி வரும் ஏராளமான பேர்களைக் கொண்டுள்ளது—ஏறத்தாழ அவர்கள் அறுநூறு பேர்கள் இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். மொத்தத்தில் தொழில்துறைக்கும், குறிப்பாக உங்களது தொழிற்சாலை மற்றும் ரயில்வே ஆகியவற்றுக்கும் குறைபாடுகளைப் போக்கத் தமது பேனாவினால் உதவி வரும் இந்தத் தொழிலாளி, நிருபர்கள் மத்தியிலிருந்து, எங்களையும் முந்திக் கொண்டு, எங்களை மிகவும் பின்தங்கி விடவும் செய்யக்கூடிய, தனிச்சிறப்பு மிக்க எழுத்தாளர்களும் கவிஞர்களும் டஜன் கணக்கில் தோன்றுவர் என்று நான் ஆழமான திட நம்பிக்கை கொண்டுள்ளேன்.

காங்கிரசின் முன்னால் தொடங்கப் பெற்ற மொழி பற்றிய விவாதமானது, பத்தாண்டுகளுக்கும் குறைவான முந்திய காலத்தோடு, 1926-27 ஆம் ஆண்டுகளோடு ஒப்பிடும்போது தொழிலாளி வாசகர்கள் மிகப் பெரும் முன்னேற்றங்களை எய்தியுள்ளனர் என்பதையும், நடை விஷயத்தில் அவர்கள் குறிப்பாக மிகவும் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர் என்பதையும், எழுத்தாளர்களான நாங்கள் அவர்களது தேவைகளைப் பல சமயங்களில் பூர்த்தி செய்யத் தவறி விடும் அளவுக்கு, அவர்கள் நூல்களை வாசிப்பதில் அத்தகைய ரசனைச் சுவையை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பதையும் புலப்படுத்தியது. இங்கு நான் கூற விரும்புவது இதுதான்: தொழிலாளி வர்க்கத்தின் கலாசாரத் தரம் மிகப் பெரும் அளவில் உயர்ந்துள்ளது என்பதைக் கருதிப் பார்க்கும்போது, அவர்கள் எங்களுக்கு எழுதும் கடிதங்களிலும், சஞ்சிகைகளுக்கு அவர்கள் அனுப்பி வைக்கும் விமர்சனக் கட்டுரைகளிலும், கூட்டங்களில் அவர்கள் பேசும் பேச்சுக்களிலும், தொழிலாளர்கள் மிகவும் தரமுயர்ந்த நூல்களையே அத்தியாவசியமான பிரச்சினையாகக் கொண்டு பேசுவதையும் கருதிப் பார்க்கும்போது, இலக்கிய விவாதங்கள்—விவாதங்கள் என்றால் பொதுப்படையான அர்த்த பாவத்தில் அல்ல; மாறாக, சோவியத் இலக்கியத்தின் தலையாய படைப்புக்கள் என்று இந்தத் தருணத்தில் கருதப்பட்டு வரும் புத்தகங்களைப் பற்றிய விவாதங்கள்—முக்கியமாக சில எழுத்தாளர்களுக்கும், எங்களது வாசகர்களான உங்களுக்கும் மிகமிகப் பயன்மிக்கதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

சோவியத் மற்றும் உலக உழைக்கும் பொதுமக்களின் பிரத்தியேகமான கவனத்தைப் பெற்றிருந்த சோவியத் எழுத்தாளர் காங்கிரஸ், இன்று வரையிலான நமது சாதனைகளைத் தொகுத்துக் கூறியது. உலக இலக்கியத்தைப் பிரித்துக்காட்டும் எல்லைக்கோடு அந்தக் காங்கிரசில் மிகவும் தெளிவாகப் புலப்படுத்தப்பட்டது என்பதைக் கூறியாக வேண்டும். மேலும் நமது சோவியத் இலக்கியம் இடையருது உயர்ந்து வருவதற்கும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் ஏகமனதாகக் குறிப்பிட்ட முதலாளித்துவ இலக்கியத்தின் சீரழிவுக்கும் அங்கு சான்றுகள் வழங்கப்பட்டன. மேலை நாட்டில் கலையின் சீரழிவைச் சுட்டிக் காட்டும் உதாரணங்கள் எதையும் நான் மேற்கோள் காட்ட விரும்பவில்லை; ஏனெனில் நமது தினசரிப் பத்திரிகைகளில் உங்களுக்குத் தேவையான உதாரணங்கள் அனைத்தையும் நீங்கள் காணமுடியும். பாசிஸ்டு நாடுகளில் புத்தகங்கள் எரிக்கப்படுகின்றன என்பதையும், ஆஸ்திரிய அரசாங்கத்தின் புதிய சட்டத்தின்கீழ் ஆயிரக்கணக்கான புத்தகங்கள்—அவற்றில் சோவியத் எழுத்தாளர்களது நூல்களின் மொழிபெயர்ப்புக்களும் உண்டு—அழிக்கப்படவிருக்கின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள். காங்கிரசில் சீன நாட்டு நூலாசிரியை பேசிய பேச்சிலிருந்து, தமது மிகப் பரந்த நாட்டை அடிமைப்படுத்துவோருக்கு எதிராகப் போராடுமாறு தொழிலாளிகளும் விவசாயிகளுமான வெகுஜனங்களுக்கு அறை கூவல் விடுக்கும் சீனப் புரட்சிகர எழுத்தாளர்களின் நூல்கள், அவர்களுக்குத் தண்டனை வழங்கும் விதத்தில் நூலகங்களிலிருந்து வெளியே தூக்கி வீசி எறியப்பட்டுள்ளன என்பதையும், இதற்கும் மேலாக, இந்த எழுத்தாளர்கள் சிறையில் தள்ளப்படுகின்றனர், தூக்குமரத்தில் தமது உயிரை இழக்கின்றனர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

காங்கரசில் மிகவும் துடிப்பாகப் புலப்படுத்தப்பட்ட இந்த எல்லைக்கோடு, கலைத்துறையில் இரு உலகங்கள் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாய் மோதி நிற்கின்றன என்பதையே காட்டுகிறது. மேலும் நமது சோவியத் இலக்கியம் உலகில் எங்கணும் வெற்றி கண்டு வருகிறது என்பதும் இப்போதே முற்றிலும் தெளிவாகியுள்ளது. இதற்குக் காங்கிரசில் பேசிய மேற்கு ஐரோப்பிய எழுத்தாளர்களே, மிகவும் குறிப்பாக, ஜெர்மானியக்கம்யூனிஸ்டு எழுத்தாளரான பிரான்ஸ் வீஸ் காஃப் சான்று பகர்ந்தனர். பாசிஸ்டு ஆதிக்கத்தின் கீழ் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கம் வர்க்கப் போராட்டத்தின் அர்த்தத்தையும், உலகப் புரட்சியும் உலகில் எங்கணும் கம்யூனிசத்தின் உன்னதமான லட்சியங்களும் வெற்றி

பெறுவதற்கு, எதிரிகளை எதிர்த்து எவ்வாறு போராட வேண்டும் என்பதையும், சோவியத் எழுத்தாளர்களின் படைப்புக் களிலிருந்தே கற்றுக் கொள்கிறது என்று அவர் கூறினார். வீஸ்காஃப் மேலும் கூறுகையில், விவசாயிகளைப் பற்றிய சோவியத் ஆசிரியர்களின் நூல்களிலிருந்துதான், நாயை நாய் அடித்துத் தின்னும் மனப்பான்மையைக் கொண்ட சிறு தனியார் பண்ணைத் தொழிலுக்குப் பதிலாக, பெருமளவிலான கூட்டுப் பண்ணைத் தொழிலைப் புகுத்துவதற்கு, நமது கட்சியும் நமது தொழிலாளி வர்க்கமும், விவசாயிகளில் முற்போக்கான பகுதியினரும் எத்தகைய போராட்டத்தை நடத்தினர் என்பதை ஜெர்மானிய வாசகர்கள் கற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில்—இதுவே கடைசிக் கூட்டமாக இராது என்று நான் நம்புகிறேன்—நாம் வாசகர்—எழுத்தாளர் உறவுகள் சிலவற்றை நிறுவவும், இன்று வரையில் தீர்க்கப்படாது இருந்து வரும் சில பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதில் ஒருவருக்கொருவர் உதவவும் முடிந்தால், அது ஒன்றும் நிச்சய மாக மோசமாக இராது.

பான்ஃபெரோவின் புருஸ்கி சம்பந்தமாகத் தொடங்கிய இலக்கிய மொழி பற்றிய விவாதம் எங்களது பலவீனமான அம்சங்களை வெளிக்காட்டியது; முக்கியமான கருப்பொருளின் பால் நாங்கள் காட்டும் ஆர்வத்திலும், எங்களது நூல்களில் நமது வியக்கத்தகும் சகாப்தத்தைப் பிரதிபலிக்க எங்களுக்குள்ள விருப்பத்திலும், நாங்கள் பல சமயம் தரத்தைப் பற்றி மறந்து விடுகிறோம், தரக்குறைவான படைப்புக்களையும் படைக்கிறோம் என்பதையும் அது அம்பலப்படுத்தியது. கார்க்கி இவ்வாறு முற்றிலும் சரியாகவே சொன்னார்: ''தொழில் துறையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒரு தொழிலாளி மோசமாக வேலை பார்த்து, உதவாக்கரையான பொருளை உற்பத்தி செய்தால், அது குற்றமாகக் கருதப்படுகிறது; பத்திரிகைகளில் அவர் அவமானத்துக்குள்ளாக்கப்படுகிறார்; பொதுஜன அபிப்பிராயத் தால் கண்டிக்கப்படுகிறார். அப்படியிருக்கும்போது, தரக்குறை வான சரக்குகளை உற்பத்தி செய்யும் ஓர் எழுத்தாளரின் விஷயத்தில் மட்டும் நாம் ஏன் ஒரு லேசான விமர்சனக் குட்டு குட்டுவதோடு, எந்த விதத்திலும் எழுத்தாளர்களுக்கு உறைக்காத ஒரு தண்டனையோடு, நிறுத்திக் கொள்கிறோம்? நமது படைப்பு விஷயத்தில் மிகவும் சிரமம் எடுக்கக்கூடிய, எனினும் எடுக்க வேண்டாத, ஓர் எழுத்தாளர் விஷயத்தில், மேலும் வலுவான நடவடிக்கைகளை நாம் ஏன் மேற்கொள்வ தில்லை?''

இந்த வலுவான நடவடிக்கைகள் என்பவைதான் என்ன?

முதலாவதாகவும் முதன்மையாகவும் உங்களது உறுதியான அபிப்பிராயம்தான், எழுத்தாளரை இதே பிரச்சினைகளை ஆயிரம் முறை சிந்தித்துப் பார்க்கவும், ஒவ்வொரு வாக்கிய அமைப்பையும் பற்றியும் யோசனை செய்யவும், தமது நாவல் அல்லது கதையின் செய்தி மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றைப் பற்றி நன்கு சிந்திக்கவும், மக்கள் போராட்டத்துக்குக் கிளர்த்தெழவும், தீரமும் கௌரவமும் வீரமும் மிக்க செயல்களைப் புரிய அவர்கள் உத்வேகம் கொள்ளவும் செய்யக்கூடிய ஒரு வலிமைமிக்க தூண்டுதல் தன்மையைத் தமது நூலில் உருவேற்ற முயலவும் நிர்ப்பந்திக்கும். இது விஷயத்தில் உங்களது குரலே, வாசகர்களான தொழிலாளர்களின் குரலே, திட்டவட்டமானதாக இருக்கும் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்.

இலக்கியத்தைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கும் போது, நான் வேறொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது சில காலமாக வாசகர்கள் மத்தியில் ஒரு விசித்திரமான போக்கு நிலவி வந்துள்ளது; அது சாராம்சத்தில் தவறானது; அது எழுத்தாளர்களைக் குழப்புகிறது. உதாரணமாக நீங்கள் இல்பெங்கோவின் பிரதான அச்சு என்ற நாவலைப் படிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். ஒரு ரயில் இஞ்சின்—கட்டுமான ஆலையின் ஏராளமான தொழிலாளர்களின் வாழ்க்கையை எடுத்துக்காட்ட முயலும் அது ஒன்றும் ஒரு மோசமான நாவல் அல்ல. கார்க்கி அதன் ஆசிரியருக்குச் சுட்டிக் காட்டிய தவறுகளை அந்த நாவல் கொண்டுள்ளது என்பதும் உண்மை. அது வெளிவந்த காலத்தில், அது பற்றி இலக்கிய வட்டாரங்களில் சூடாக விவாதிக்கப்பட்டது; என்றாலும், சோவியத் வாசகப் பொதுமக்கள் அனைவராலும் அது இன்னும் சரிவர உணர்ந்து பாராட்டப்படவில்லை என்றே நான் கூறுவேன், நல்லது. நீங்கள் இந்த நாவலை வாசிக்கிறீர்கள்; பிறகு இவ்வாறு கூறுகிறீர்கள்: ''நம்மைப்பற்றி, ரயில் இஞ்சின்—கட்டுமான ஆலைத் தொழிலாளர்களைப் பற்றித் தாம் எழுதுவது நல்லது என்று கருதிய எழுத்தாளர் ஒருவர் இதோ இருக்கிறார் என்ற விஷயம் அற்புதமாக இல்லையா! இவர் கட்சி செல்லை வருணிக்கிறார்; ஒரு முதிய தொழிலாளி தமது குடும்ப வாழ்விலும் ஆலையிலும் நடந்து கொள்ளும் விதத்தை விவரிக்கிறார்; என்றாலும், இவர் ஏன் நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையே நிலவும் உறவுகளைப் பற்றி எதுவுமே கூறவில்லை?'' பல வாசகர்களும் விமர்சகர்களும் வெளிவரும் ஒவ்வொரு புத்தகத்தைப் பற்றியும் இதே மாதிரியான கோரிக்கையைத் தெரிவிக்கவே முற்படுகின்றனர்.

அது ஒரு கூட்டுப் பண்ணையைப்பற்றிய கதை என்றூல் அவர்கள் இவ்வாறு கூறுவார்கள்: ''கட்சி லெல், காம்சொமால் மற்றும் கட்சியின் நடவடிக்கைகள், பெண்களின் வளர்ந்தோங்கி வரும் சமூக நிலை ஆகியவற்றைப் பற்றியெல்லாம் இந்த நூலாசிரியர் ஓர் உண்மையான சித்திரத்தை வழங்கியுள்ளார்; என்றூலும், இவர் எப்படி கூட்டுறவைப் புறக்கணிக்க முடியும்? அதைப்பற்றி இவர் ஏன் ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை?''

மக்கள் உண்மையிலேயே மனத்தில் கொள்ள வேண்டிய நல்ல பழமொழி ஒன்றுண்டு: மிகவும் எழில்வாய்ந்த குமரி தன்னிடம் இருப்பதற்குமேல் எதையும் தர முடியாது. இன்னொரு பழமொழியும் உண்டு: ஒரு மனிதன் ஒரே சமயத்தில் விசில் அடிக்கவும், குடிக்கவும் முடியாது.

என்றூலும், மக்கள் அடிக்கடி எழுத்தாளர்கள் மீது விவேகமற்ற கோரிக்கைகளைச் சுமத்துகிறார்கள்; நமது நாட்டில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும் நிகழ்ந்து வரும் எல்லா நிகழ்ச்சிகளையும், எல்லா மாற்றங்களையும், எல்லா வளர்ச்சிகளையும் அரவணைத்துக் கொள்ளக்கூடிய, அவற்றை அவற்றின் மிகப் பெரும் நாணுவிதமான அம்சங்களோடும் எடுத்துக்கூறக் கூடிய ஓர் எழுத்தாளர் உலகில் இருக்கவில்லை என்பதையே அவர்கள் மறந்து விடுகின்றனர். இன்று நீங்கள் விவரித்துக் கூறுகிற ஒரு தொழிற்சாலை ஒரு வருடம் போனால் அடையாளமே தெரியாத அளவுக்கு மாறிவிடும். **பொதுவான திசைவழி** என்ற பெயரில் வெளிவரவிருந்த தமது திரைப்படத்தின் விஷயத்தில் ஈசென்ஸ்டீன் மாட்டிக்கொண்ட அதே சங்கடமான நிலைமையிலேயே எழுதுகின்ற ஒவ்வொரு நபரும் மாட்டிக் கொள்ளக் கூடும். 1928–29, அதாவது விவசாயப் பண்ணை வீடுகளை, குட்டிக் கூட்டுப் பண்ணைகளாக ஒன்று கூட்டுவதற்குக் கட்சி சகல முயற்சியும் செய்து வந்த காலத்தில், அவர் இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்கும் வேலையைத் தொடங்கினர். இந்த முயற்சியின்போது பணம் செலவிடப்பட்டது; கடன்கள் வழங்கப்பட்டன; விவசாயக் கழகங்களும் நிறுவப்பட்டன; தனித்தனிச் சம்பவங்கள் என்ற முறையில் இவை யாவும் உண்மைதான். இதுதான் அந்தக் குறிப்பிட்ட கால கட்டத்தின் ''பொதுவான திசைவழி'' யாக இருந்தது. 1930-ல், ஈசென்ஸ்டீன் தமது திரைப்படத்தை இன்னும் எடுத்துக் கொண்டிருந்த பொழுது, பெருவாரியான அளவில் கூட்டுடைமை யாக்கம் தொடங்கப்பட்டு விட்டது. எனவே அந்தத் திரைப்படம் காலத்துக்குப் பின்தங்கி விட்டது; அதனைத் தயாரிப்பதில் இதன் பின் எந்த அர்த்தமும் இருக்கவில்லை.

இதே மாதிரியான நிலைமை எழுத்தாளர்களான எங்களுக்கும் சம்பவிக்கிறது. கிராமப்புற உலகை அடிப்படையிலேயே மாற்றியமைத்த நிகழ்ச்சிகளின்—ஒரு வர்க்கம் என்ற முறையில் குலாக்குகளின் ஒழிப்பு, பெருவாரியான கூட்டுடைமையாக்கம், கூட்டுப் பண்ணைகளில் ஒன்றுபடுவதற்கான விவசாயிகளின் வெகுஜன இயக்கம் ஆகியவற்றின்—சுவட்டின் சூட்டிலேயே, 1930-ல் நான் எனது கன்னி நிலம் உழப்பட்டது என்ற நாவலை எழுதத் தொடங்கினேன்.

இந்த அனுபவங்களை நினைவில் பசுமையாக நிறுத்திக் கொண்டு நான் எனது நாவலை எழுத உட்கார்ந்தேன். ஆனால் முதல் பாகத்தை எழுதி முடித்த பிறகு, நான் எதை விவரித்துக் கொண்டிருந்தேனோ அது இனியும் அந்தத் தருணத்தின் அடிப் படையான அக்கறையாக இருக்கவில்லை என்பதையும், எனது வாசகர்களின், முக்கியமாக நான் யாரைப்பற்றி எழுதிக் கொண்டிருந்தேனோ அந்தக் கூட்டுப் பண்ணை வாசகர்களின் மனத்தில் அப்போது வேறு பிரச்சினைகள் மேலோங்கி நின்றன என்பதையும் உணர்ந்தேன். சம்பவங்களோடு நேரினையாகப் போய்க் கொண்டிருப்பது என்பது எங்கள் பணியை மிகவும் சிரமமாக்கி விடுகிறது.

சரி, இப்போது இலக்கியப் படைப்பின் தரத்தைப்பற்றி ஒரு வார்த்தை. காங்கிரசுக்குப் பின்னால் எங்களில் ஒவ்வொரு வரும் இந்தக் கேள்வியை அதியவசரமாக எதிர்நோக்க நேர்ந்தது: சிறந்த புத்தகங்களை எழுதுவது எப்படி? காங்கிரசில் எழுத்தாளர்களைத் தவிர, வாசகப் பெருமக்களையும், கூட்டுப் பண்ணை விவசாயிகளையும், ஆலைத் தொழிலாளர்களையும், செஞ்சேனையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களும் கலந்து கொண்டனர். அவர்களும் பேசினர்; ஒருவர்பின் ஒருவராக வந்து தமது கோரிக்கைகளைச் சமர்ப்பித்தனர்; உண்மையாகச் சொன்னால், அவர்கள் கொடுத்த கணக்கு, நாங்கள் எட்டின மட்டும் பார்க்கக் கூடிய எதிர்காலத்துக்குள் எங்களால் பைசல் செய்யவே இயலாது போகும் அளவுக்கு, அத்தனை பெரும் அளவில் இருந்தது. நாங்கள் நன்முக வேலை செய்யவில்லை யென்றும், எங்கள் மொழி விஷயத்தில் நாங்கள் போதிய சிரமங்களை எடுத்துக் கொள்ளவில்லையென்றும், ஆரம்ப எழுத்தாளர்கள்—அவர்களும் பெரும் அளவிலேயே இருக் கின்றனர்—ஏதாவது கற்றுக் கொள்வதானால், எங்களது நூல்களி லிருந்து எதையும் கற்றுக் கொள்வது என்பது மிகவும் கடினம் என்றும் அவர்கள் கூறினர். மேலும் உண்மையில் ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்தும், ஒவ்வொரு கூட்டுப் பண்ணையி

லிருந்தும் இளம் எழுத்தாளர்கள் தோன்றிக் கொண்டிருக் கின்றனர்; அவர்கள் எங்களது உதவியோடும் ஆதரவோடும் எங்கள் இடத்துக்கு வரப்போகும் நபர்களாதலால், எழுதும் கலை யில் அவர்கள் திறமை பெற வேண்டுமே என்று நாங்கள் கவலை கொள்கிறோம். அவர்களது வளர்ச்சிக்கு நாங்களே பெரிதும் பொறுப்புள்ளவர்கள், ஆயினும் நாங்கள் என்ன செய்கிறோம்? நாங்கள் வெறுமனே இலக்கியச் சிறப்புக்களே இல்லாத தரக் குறைவான புத்தகங்களை உற்பத்தி செய்கிறோம்; அதன்மூலம் இளம் எழுத்தாளர்களின் வளர்ச்சியைக் குன்றச் செய்கிறோம்; அதுமட்டுமல்ல; இதன் மூலம் உண்மையில் நாங்கள் நமது இளம் தலைமுறையினரின் கல்வியின் மீது ஒரு பாதகமான விளைவையே ஏற்படுத்துகிறோம்.

வசைமொழிகளை எழுத்தாளர்கள் மிதமிஞ்சிப் பயன்படுத்து வதையும் வாசகர்கள் முற்றிலும் நியாயமாகவே ஆட்சேபித் தனர்; இந்த வார்த்தைகள் தொழிலாளர்கள் மத்தியில் இப்போது அவ்வளவு அதிகமாகப் பேச்சு வழக்கில் இல்லை என்பதைக் கண்டும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்; உண்மையில் அவை கடந்த காலத்தின் ஓர் அவமானகரமான மிச்ச சொச்சம் தான். மிகப்பல சமயங்களில் நமது எழுத்தாளர்கள் (என்னையும் சேர்த்துத்தான்), இவை உரையாடல்களை வாழ்க்கைக்கு மிகவும் ஒட்டியதாக ஆக்கிவிடுகின்றன என்று கருதினார்கள்; என்றாலும் அவர்கள் தமது புத்தகங்களைப் படிப்பவர்கள் இத்தகைய பச்சைத்தனத்தை ஒரு புன்னகையோடு படித்துவிட்டுப் போகும் வயது வந்த பெரியவர்கள் மட்டுமல்ல, மாறாக, புத்தகங்களில் கண்டறியும் சொற் பிரயோகங்களையும், ''கெட்ட வார்த்தை களையும்'' தாமும் பயன்படுத்தத் தொடங்கிவிடும் பதின்மூன்று அல்லது பதினைந்து வயதான சிறுவர் சிறுமியரும் படிக்கிறார்கள் என்பதை மறந்து விட்டனர். இந்தப் பிரச்சினையைக் குறித்து ஒவ்வொரு எழுத்தாளரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

தொழிலாளி வர்க்கத்துக்கும் நமது கட்சிக்கும் நாம் எவ்வாறு மிகச்சிறந்த முறையில் பாடுபட முடியும், நமது மாபெரும் சகாப்தத்தை நாம் எந்தெந்த வழிகளில் சித்திரித்துக் காட்ட வேண்டும், நமது புத்தகங்கள் மேலும் முயற்சிகளில் ஈடுபடுமாறு நமது சோவியத் வாசகர்களுக்குச் சக்தியை உருவேற்றுவதோடு, முதலாளித்துவ நுகத்தடியிலிருந்து தம்மைத் தாமே விடுவித்துக் கொள்வதற்கு, காலனி மற்றும் அரைக்காலனி நாடுகளைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், மற்றும் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த பாட்டாளிகளுக்கும்

உதவவும் கூடிய விதத்தில், அவை நமது நாட்டிலுள்ள வாசகர் களுக்கு மட்டுமல்லாது, வெளிநாடுகளிலுள்ள வாசகர்களுக்கும் ஓர் எச்சரிக்கை மணியோசையைப் போல் ஒலிக்கும் விதத்தில், நமது புத்தகங்களின் தாக்கத்தை நாம் எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பதையெல்லாம் பற்றி நாம் அனைவரும் திரும்பத் திரும்பத் தீவிரமாகச் சிந்தனை செய்தாக வேண்டும்.

இந்தப் புதிய பணிகள் மற்றொரு பிரச்சினையையும் எழுப்பு கிறது; ஓர் இளம் தொழிலாளி வர்க்க எழுத்தாளர் நமது மத்தியிலிருந்து உதயமாகிறார்; அவரிடம் நாம் பேரிலக்கியங்களி லிருந்து கற்றுக் கொள்ளுமாறு கூறுகிறோம்; ஆனால் அவர் எழுதும் முறையை நம்மிடமிருந்தும் கிரகித்துக் கொள்வார். இங்கு, புதிய, சிறந்த புத்தகங்களைப்பற்றிக் கூறும்போது, குறிப்பாக அரும்பிவரும் இளம் எழுத்தாளர்கள் சம்பந்தமாகக் கூறும்போது, நான் இதனைக் கூற விரும்புகிறேன்: ஆரம்ப எழுத்தாளர்கள், அனுபவமிக்க எழுத்தாளர்கள் ஆகிய நம் அனைவரையும் எதிர்நோக்கியுள்ள முதன்மையான தேவை, நமது கதைப் பொருளை ஐயந்திரிபற ஆராய்ந்து கற்றறிவதே யாகும்.

இது தலையாய முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும்; தற்போதைய கூட்டத்தில் நாம் இதன்மீது நமது கவனத்தைக் குவித்தாக வேண்டும் என்று நான் கருதுகிறேன்; ஏனெனில் நீங்கள், எங்களது தொழிலாளி வாசகர்களான நீங்கள், எதார்த்த உண்மைகள் சம்பந்தப்பட்ட பிழைகளைத் தவிர்க்க எழுத்தாளர்களுக்கு உதவியாக எவ்வளவோ செய்ய முடியும்.

அன்றொரு நாள் நான் ஆலைத் தொழிலாளியாகவுள்ள ஓர் எழுத்தாளர் எழுதிய ஒரு கதையைப் படித்துப் பார்த்தேன். அதில் அவர் பஞ்சுபோன்ற மென்மையான இறகுகளைக் கொண்ட மஞ்சள் நிற வாத்துக் குஞ்சுகள் ஆகஸ்டு மாத மத்தியில் தத்துநடை பழகித் திரிந்தன என்றும், கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு, அவர்கள் கதிரடிப்பைத் தொடங்கு வதற்கும் முன்பே ஊதியம் தானியமாகக் கொடுக்கப்பட்டது என்றும் கூறுகிறார். இதனை எழுதிய நபர், கணக்கில் கொடுக்கப் படும் ஊதியம், முதன் முதலில் முற்றும் தானியப் பயிரான ரை தானியக் கதிர்கள் கதிரடிக்கப்படுவதற்கு முன்னால் கொடுக்கப்படுவதில்லை என்பதையும், மஞ்சள் வாத்துக் குஞ்சுகள் ஆகஸ்டு மாதத்தில் தத்துநடை பழகித் திரிவதில்லை என்பதை யும் தெரிந்து கொள்ளவில்லை. இத்தகைய இலக்கியத்தைப் படிக்கும் கூட்டுப் பண்ணை விவசாயி ஒருவர் "அட, என்ன

எழுத்தாளர்கள் இவர்கள்! இவர்களை நாம் நம்பவே முடியாது!'' என்றுதான் நினைப்பார்.

நாம் படித்துள்ள புத்தகங்களை நினைவு கூரும்போது, இங்குள்ள நம்மில் ஒவ்வொருவரும், உற்பத்தியையும் தொழிலாளர்களது உலகையும் வருணித்துள்ள ஒரு நூலாசிரியர், அவற்றைப் பற்றி ஒரு மேலோட்டமான விஷய ஞானத்தை மட்டுமே அவர் பெற்றிருந்தார், அவற்றின் நுணுக்கங்களையும் அருமையான அம்சங்களையும் பற்றித் தெரிந்து கொள்ளவே அவர் சிரமம் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ளக்கூடியது போன்ற பல உதாரணங்களை நினைவு படுத்தலாம். ஆசிரியர் தமது கதைப் பொருளை முதன்முதலில் ஐயந்திரிபற ஆய்ந்து அறிந்து கொள்ளாவிட்டால், அவரது புத்தகம் ஓர் உண்மையான இலக்கியப் படைப்பாக இருக்காது.

நீங்கள் தொழிற்சாலையில் ஓர் இலக்கியக் குழுவைக் கொண்டிருக்கிறீர்கள்; அத்துடன் தமது குறிப்பிட்ட திறமையில் சிகரங்களை எட்டிப்பிடித்தவர்களும், தமது கருவிகளைப் பயன்படுத்துவதில் அபாரமான திறமை படைத்தவர்களுமான தரப்பரிசீலனை இன்ஸ்பெக்டர்கள் கல்லூரியையும் பெற்றிருக்கிறீர்கள். ஏதாவதொரு நுணுக்க விவரத்தை வருணிக்கும் விஷயத்தில், உங்களது இளம் எழுத்தாளர்கள், படைக்கப்படும் புத்தகங்களின் தரத்தையும் நிச்சயமாகக் கவனித்துக் கொண்டிருக்கும் அந்த அனுபவமிக்க முதிய நபர்களின் உதவியை நாடவேண்டும். எங்கள் பங்குக்கு, எழுத்தாளர்களான நாங்கள் அந்த முதுபெரும் தொழிலாளர்களிடம் இவ்வாறு விண்ணப்பித்துக் கொள்கிறோம்: தயவு செய்து எங்களுக்கு ஒரு பெரிய சகாயம் செய்யுங்கள்; உங்கள் இளம் எழுத்தாளர்களுக்கு உதவுங்கள்; நாங்களும் எங்கள் பங்கை நிறைவேற்றுகிறோம்.

தொழிலாளி வாசகர்களுக்கும் சோவியத் எழுத்தாளர்களுக்கும் இடையே நிறுவப்பட்டுள்ள தொடர்பு பலப்படுத்தப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்; இந்தத் தொடர்பு இருந்து வந்தால் மட்டுமே சோவியத் இலக்கியமானது மேலும் மேலும் சிறந்த புத்தகங்களை உருவாக்கும் என்று நான் மேலும் நம்புகிறேன்...

1934

லட்சக்கணக்கான மக்களுக்கு அவர் ஒரு முன்னுதாரணமாக விளங்குவார்

சோவியத் எழுத்தாளர்களின் அணிகளிலிருந்து, அவர்கள் அனைவரிலும் மிகவும் துணிவு படைத்த, மிகவும் உறுதிப்பாடு

வாய்ந்த போராளியை மரணம் பறித்துக் கொண்டு விட்டது. அவர் உடலளவில் நோயினால் தோற்கடிக்கப்பட்டுப் பயங்கர மாகத் துன்பப்பட்டு வந்த போதிலும், தமது கடைசி உயிர் மூச்சு இருக்கும் வரையிலும், ஒரு கம்யூனிஸ்டு எழுத்தாளரின் ஆயுதத்தோடு தமது கட்சியின் உன்னதமான கருத்துக்களின் வெற்றிக்காகத் தொடர்ந்து போராடி வந்தார். லட்சோப லட்சக் கணக்கான மக்கள் ஆஸ்திரோவ்ஸ்கியின் உதாரணத்தி லிருந்து எப்படி வாழ்வது, எப்படிப் போராடுவது, எவ்வாறு வெற்றி காண்பது, எவ்வாறு ஒருவரது தாயகத்தை நேசிப்பது என்பதைக் கற்றுக் கொள்வர்.

இத்தகைய அற்புதமான நபரை உருவாக்கி வளர்த்தமைக் காக நாம் நமது நாட்டையும், நமது கட்சியையும், காம்சொ மாலையும் குறித்துப் பெருமைப்படுகிறோம். பாசத்தோடும் நன்றியுணர்வோடும் பாராட்டோடும் அவர் நினைவுகூரப்பட்டு வருவார்.

நாம் சுமக்க நேர்ந்துள்ள இழப்பு பெரிதுதான்.

டிசம்பர் 23, 1936

சோவியத் எழுத்தாளரைப் பற்றி

ஸ்பானியப் பிரதிநிதிக் குழுவின் உறுப்பினரான காப்டன் ஏஞ்செல் ஆன்டெம், சோவியத் எழுத்தாளர்கள் தமது படைப்புக்களுக்கு எவ்வாறு சன்மானம் பெற்று வருகின்றனர் என்று தெரிந்து கொள்ள விரும்பினார்.

மேற்கு ஐரோப்பாவுக்கு நான் மேற்கொண்ட பயணங் களின்போது இந்தக் கேள்விக்கு நான் திரும்பத் திரும்பப் பதிலளிக்க வேண்டியிருந்தது. மேலும் ஒவ்வொரு முறையும் நான் சோவியத் எழுத்தாளர்களுக்கும் முதலாளித்துவ எழுத் தாளர்களுக்கும் உள்ள அடிப்படையான வேற்றுமையை விரிவாக விளக்கிக் கூற வேண்டியிருந்தது. கூலிக்கு மாரடிக்கும் எழுத் தாளர்களைத் தட்டிக் கொடுத்து வளர்ப்பதன் மூலம், முதலாளித்துவம் நேர்மையான எழுத்தாளர்களையும் கூடக் கெடுத்து விடுகிறது. ஜனநாயகத்துக்கும் முன்னேற்றத்துக்கு மான போராட்டத்தோடு தமது தலைவிதியைப் பிணைத்துக் கொண்டுள்ள அத்தகைய பாசிஸ்டு-எதிர்ப்பான எழுத்தாளர்களை நான் இங்கு இயல்பாகவே குறிக்கவில்லை.

ஒரு முதலாளித்துவ எழுத்தாளர் எந்த நிலைமைகளில் இருந்துவர நேர்கிறதோ அந்த நிலைமைகள், இலக்கியப் படைப்பின் சமுதாய முக்கியத்துவத்தைப் பின்னணிக்குத் தள்ளி

விட்டு, அவரிடத்தில் தனிமனிதவாதப் போக்குகளை உருவாக்கி வளர்க்கின்றன. மேலும், இதில் அவர் ஒரு சோவியத் எழுத்தாளருக்கு எதிர்மறையாக விளங்குகிறார்.

ஒருவர் ஒரு சோவியத் எழுத்தாளரை சோவியத் போஷாக்குச் சாதனத்திடமிருந்து தனிமைப்படுத்திப் பார்க்க முடியாது. புரட்சிக்கு முந்திய எங்கள் எழுத்தாளர்கள் சிலரது பேராசைகள் இப்போது எங்களுக்கு மிகவும் எளிமையானவையாகத் தோன்றுகின்றன, அதாவது கருங்கடற்கரையில் சொந்தமாக ஒரு தோட்ட வீட்டைப் பெறுவது, ஒரு சொகுசுக் காரைச் சொந்தமாகப் பெற்றிருப்பது போன்றவை... உண்மையில் இவை யாவையும் எங்களது கனவுகள், எங்களது லட்சியங்கள் ஆகியவற்றோடு எந்தச் சம்பந்தமும் கொண்டவையல்ல.

சோவியத் எழுத்தாளருக்கும் சோவியத் பொது மக்களுக்கும் இடையே நிலவும் உறவுகளை எனது சொந்த வாழ்க்கை வரலாற்றைக் கொண்டே இனம் கண்டறியலாம்.

மேல் டான் நதிப் பிரதேசத்தைச் சேர்ந்த வெஷென்ஸ்காயா ஸ்தானித்ஸாவாசியான நான், சோவியத் ஆட்சியின் வெற்றிக்காக உள்நாட்டுப் போரில் போரிட்டேன். நான் சோவியத் ஆட்சியிலும் போல்ஷ்விக் கட்சியிலும் பிறந்தேன்; வளர்த்து ஆளாக்கப்பட்டேன். நான் சோவியத் மக்களின் ஒரு புதல்வன். மேலும், சோவியத் ஆட்சி என்மீது வாரிப் பொழிந்த அக்கறையை, ஒரு தாய் தன் மகனின்மீது காட்டும் அன்புமிக்க அக்கறைக்கே ஒப்பிட முடியும்.

சோவியத் எழுத்தாளர்களது யூனியன் ஏன் 'பென் கிளப்'பில் ஓர் உறுப்பினராகச் சேரவில்லை என்றும் காப்டன் ஆன்டெம் தெரிந்து கொள்ள விரும்பினார். இதற்குரிய பதில் எளிதானது. பென் கிளப்பின் உறுப்பினர்களிடையே பாசிஸ்டுகளும் உள்ளனர். பாசிஸ்டுகள் தமது சொந்த வீடுபோல் ஆட்சி செலுத்தி வரும் ஓர் இலக்கிய ஸ்தாபனத்தில் சோவியத் எழுத்தாளர்கள் சேர முடியாது.

இது சம்பந்தமாக, பாசிசத்தையும் பிற்போக்குக் கும்பலையும் எதிர்த்து ஸ்பானிஷ் மக்கள் நடத்தி வரும் வீரஞ்செறிந்த போராட்டத்தின்பால் சோவியத் எழுத்தாளர்கள் கொண்டுள்ள மனப்போக்கைப் பற்றியும் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தலையிடாமைக் கமிட்டி மேற்கொண்டுள்ள கேவலமான நிலையைக் குறித்துப் பேசவந்த காமன்ஸ் சபை உறுப்பினர்

ஒருவர், இந்தக் கமிட்டியின் நடவடிக்கையில் தாம் ஏமாற்ற மடைந்து விட்டதாகக் கூறியுள்ளதை நான் நினைவு கூர்கிறேன்.

''ஏமாற்றமடைதல்'' என்பது எங்கள் காதில் விசித்திரமாக ஒலிக்கும் ஒரு வினைச் சொல்லாகும். இன்றைய உறவு நிலையில், இது எங்களது சொற் பிரயோக வழக்குக்கே முற்றிலும் அன்னிய மானதாகும். தலையிடாமையை எதார்த்தத்தில் ஸ்பெயின் குடியரசுக்கு எதிரான முற்றுகைக்கோர் மூடுதிரையாக மாற்றி யுள்ள லண்டன் கமிட்டியின் கொள்கையைக் கண்டு நாங்கள் அதிர்ச்சியடைந்துள்ளோம். ''மனிதாபிமானம் மிக்க'' முடிவுகள் என்ற முகமூடியின் கீழ், தலையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முடிவேயில்லாத சலுகைகள் என்ற தந்திரத்தை நாங்கள் காணும் போது எங்கள் இதயங்கள் கோபாவேசத்தால் பொங்கிக் குமுறு கின்றன.

ஸ்பெயின் குடியரசின் வீரஞ்செறிந்த போராட்டத்தை நாங்கள் இடையறாத கவனத்தோடு கவனித்து வருகிறோம். சிறிது காலத்திற்கு முன்னால், காட்டலோனியாவில் டிராட்கிஸ்டு-பாசிஸ்டுக் கும்பல்கள், அராஜகவாதக் கோஷ்டிகள் சிலவற்றைச் செயல்படத் தூண்டிவிட்டதன் மூலம், பொதுஜன முன்னணியைத் தகர்க்கும் நோக்கத்தோடு குடியரசுக் கட்சி முனையின் பின்னணியில் ஒரு கலகத்தை உருவாக்க முயன்ற சம்பவம் போன்ற நிகழ்ச்சிகளைக் கண்டு நாங்கள் பெரிதும் மனம் கலங்கியுள்ளோம்.

இங்கு எங்களது சொந்தப் புரட்சியையும் ஒருவர் நினைந்து பார்க்காமல் இருக்க முடியாது. சோவியத் ஆட்சி தொழிலாளி வர்க்கத்தின் எதிரிகளுக்கு எதிராக ஒரு விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடத்தியது என்பதையும், நாங்கள் வெற்றி பெற்றோம் என்றால், அதற்குக் காரணம் நாங்கள் லட்சியத்துக்குத் துரோகம் இழைத்த துரோகிகள் அனைவரையும் ஈவிரக்கமற்று அடித்து நொறுக்கி முறியடித்தோம் என்பதையும் எல்லோரும் அறிவர்.

ஸ்பானிய மக்களின் பிரதிநிதிக் குழு தாம் சோவியத் யூனியனில் தங்கியிருக்கும் காலத்தில், சோவியத் நாட்டின் எந்தெந்த மூலைக்குச் செல்ல நேர்ந்தாலும், ஸ்பெயினில் நிகழ்ந்து வரும் நிகழ்ச்சிகளின்பால் ஆழமான அக்கறை கொண்ட மனப்பான்மையும், குடியரசுக்காகப் போராடி வருபவர்களின் பால் உண்மையான, உளமார்ந்த பரிவும் நிலவுவதை உங்களது வீரமிக்க தோழர்கள் எங்களுமே காண்பார்கள். நான் வெஷென்ஸ்காயாவில் வசித்து வருகிறேன்; தமது சுதந்திரத்துக் காகப் போராடி வரும் ஸ்பானிய மக்களின் உன்னதமான

போராட்டம், தமது இதயங்களுக்கு மிகவும் நெருங்கியதாகும் என்று தமது கள்ளங்கபடற்ற, உளமார்ந்த முறையில் கோஸாக் ஆடவர்களும் பெண்களும் கூறுவதை நான் பலமுறை கேட்டிருக் கிறேன்.

எங்களது மக்கள் அந்தத் தற்கால நர மாமிச பட்சணி களான பாசிஸ்டுகளை, கொடிய பகைமையுணர்ச்சியோடு வெறுக்கின்றனர்.

பாசிஸ்டுப் பிற்போக்குக் கும்பலை எதிர்த்துப் போராடும் முன்னணியில் நிற்கும் தமது சோதரர்களின்பால் எங்களது மக்கள் பாசமிக்க அக்கறையுணர்ச்சியைக் கொண்டுள்ளனர். தோழர்களே, உங்களது வெற்றியில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு! எங்களது இதயங்களும் எங்களது பரிவுணர்ச்சிகளும் எப்போதும் உங்களுடனேயே உள்ளன.

1937

மக்களுக்கான ஒரு பிரதிநிதி

சுலெய்மான் ஸ்தால்ஸ்கி மக்கள் கவிஞர் என்ற சொல்லின் அர்த்தபாவத்துக்கே இலக்கணமாக, மக்களிடையே உருவாக்கி வளர்க்கப்பட்ட மக்கள் கவிஞர்களின் ரகத்தைச் சேர்ந்தவராக இருந்தார்; எனினும் அவர் சோவியத் ஆட்சி நிறுவப்படும் வரையிலும் அங்கீகாரம் பெறுமலே இருந்தார்.

அவரது நாட்டு மக்களின் எண்ணங்கள், அவர்களது இன்பங்கள், துன்பங்கள் ஆகியவை எல்லாம் இனிமையும், மயக்கும் புதுமையும், எளிமையும் மிக்க பாடல்-கவிதைகளின் வடிவத்தைப் பெற்றன. அக்கவிஞரின் திறமையால் வளம்பெற்ற அக்கவிதைகள், என்றென்றும் சிரஞ்சீவியாக வாழ்வதற்காக, மக்கள் மத்திக்கே திரும்பவும் போய்ச் சேர்ந்தன.

என்றாலும், ஸ்தால்ஸ்கியின் கவிதைகள் மலைகளின் மீது அமைந்துள்ள அவரது தாய்நாட்டில் மட்டுமே பாராட்டப்பட வில்லை. மொழிபெயர்ப்பில் தமது மதிப்பை ஓரளவு இழந்து விட்டபோதிலும் கூட, அவரது கவிதை வரிகளைப் படித்த நம்மில் யார்தான், அவற்றின் வியத்தகும் எழிலையும் சொல் லாட்சியையும் கண்டு புளகிக்கவில்லை? எனவேதான் அவரது மரணம்பற்றிய செய்தி நமது இதயங்களையும் அவ்வளவு தூரம் பிழிந்தெடுக்கிறது.

ஏனைய எல்லா சோவியத் எழுத்தாளர்களோடும், சுலெய்மான் ஸ்தால்ஸ்கியின் எண்ணிறந்த வாசகர்களோடும் சேர்ந்து, மக்களுக்கான உண்மையான பிரதிநிதியாக விளங்கிய,

இந்த மிகவும் திறமை படைத்த கவிஞரின் சடலத்தின் முன்னால் நான் தலை வணங்குகிறேன்.

1937

ஒரு போல்ஷ்விக் எழுத்தாளர்

ஜனவரி 19ஆம் தேதியன்று நாம் அலெக்ஸாந்தர் செராஃபிமோவிச்சின் 75ஆவது பிறந்த நாளைக் கொண்டாடப் போகிறோம். செராஃபிமோவிச்சுக்கு 75 வயதாகிவிட்டது என்பதை நினைத்துப் பார்த்தால்! அவர்தான் எத்தகைய கவர்ச்சிகரமான, ஆண்மைமிக்க முதுமையைக் கொண்டிருக்கிறார்! நீங்கள் அவரோடு இருக்கும்போது, இந்த மனிதர் 75 வயதின் அருகே சற்றேனும் நெருங்கிவிட்டவராக உங்களால் நம்பவே முடியாது. அவர் அவ்வளவு திடகாத்திரமும் ஆரோக்கியமும் சுழுக பாவமும் மிக்கவராக இருக்கிறார்! அவருடன் சேர்ந்து இருக்கும்போது நீங்கள் எப்போதும் உங்களுக்கு இளமை திரும்பிவிட்டதுபோல் உணர்வீர்கள்.

இந்த முதியவரின்மீது நான் மிகவும் பிரியம் கொண்டவன். அவர் ஓர் உண்மையான கலைஞர்; ஒரு பெரிய மனிதர்; அவரது புத்தகங்களை நாம் அனைவரும் அறிவோம்; அவற்றை நாம் மிகவும் நன்றாக விரும்பவும் செய்கிறோம். இளம் எழுத்தாளர்களான நாங்கள், எந்த எழுத்தாளர்களிடமிருந்து கற்றுக் கொண்டோமோ, அந்த எழுத்தாளர்களது பரம்பரையைச் சேர்ந்தவர் செராஃபிமோவிச். நான் சொந்த முறையில் அவருக்குப் பெரிதும் கடன்பட்டிருக்கிறேன்; ஏனெனில் எனது இலக்கிய வாழ்வின் தொடக்கத்தில் ஓர் எழுத்தாளர் என்ற முறையில் அவர்தான் முதன் முதலில் எனக்கு ஆதரவு கொடுத்தார்; ஊக்கமும் அங்கீகாரமும் வழங்கும் ஒரு சொல்லை என்னிடம் முதன் முதலில் சொன்னவரும் அவர்தான்.

1925-ல் செராஃபிமோவிச் எனது முதல் சிறுகதைத் தொகுதியைப் படித்துப் பார்த்த பின்னர், அதற்கு அவர் மிகவும் உளங்கனிந்த முகவுரை ஒன்றை எழுதியதையும், அதற்கும் மேலாக, தாம் என்னைப் பார்க்க விரும்புவதாகக் கூறியதையும் நான் என்றுமே மறக்க மாட்டேன். நாங்கள் சோவியத்துக்களின் மாளிகையில்தான் முதன் முறையாகச் சந்தித்தோம். ஓர் எழுத்தாளன் ஆவதற்கான அம்சங்கள் என்னிடம் இருந்ததாக செராஃபிமோவிச் எனக்கு உறுதி யளித்தார். தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்குமாறும், நான் எழுதும் ஒவ்வொரு பகுதியிலும் மிகவும் அக்கறையோடு

கவனம் செலுத்தி எழுதக் கற்றுக் கொள்ளுமாறும், எப்போதுமே அவசரப்படாதிருக்குமாறும் அவர் எனக்கு ஆலோசனை கூறினார்.

நான் எப்போதும் அவரது அறிவுரையின்படி செயல்பட்டு வரவே முயன்றுள்ளேன்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னால் கட்சியும், அரசாங்கமும், சோவியத் பொது ஜன ஸ்தாபனங்களும் செராஃபிமோவிச்சின் 70 ஆவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடின. ஒரு நபர் முதியவராக வளர்வது ஒரு வருத்தமான உண்மையாகும் என்றும், முதுமை கொண்டாட்டதுக்கு உரியதல்ல என்றும் கூறி, செராஃபிமோவிச் நம் எல்லோரையும் தடுத்து நிறுத்த முயன்றார். ஆயினும் சோவியத் எழுத்தாளர்களான நாம் இது விஷயத்தில் செராஃபிமோவிச்சோடு மாறுபடுகிறோம்; அதற்கான ஒரே காரணம் அவரது இரும்பு வெள்ளம்தான் உள்நாட்டுப் போரைப் பற்றிய முதல் முக்கியமான நாவல் என்பதேயாகும். அந்த ஆண்டுகளில் நமக்கு வேறு எதுவுமே இருக்கவில்லை. மேலும் அவரது இரும்பு வெள்ளம் சோவியத் இலக்கியத்தின் தலைசிறந்த நூல்களில் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

என்றாலும், தமது இரும்பு வெள்ளம் ஒன்றினால் மட்டுமே செராஃபிமோவிச் தம்மை நமது அன்புக்குரியவராக ஆக்கிக் கொள்ளவில்லை. செராஃபிமோவிச் மூத்த தலைமுறையைச் சேர்ந்த போல்ஷ்விக் எழுத்தாளர்களில் ஒருவராவார்; பிற்போக்குக் கும்பலின் அந்தகார இருளினூடே அவர் தமது கொள்கைத் தீபத்தை, அதன் சகல புனிதத்துவத்தோடும் ஏந்தி எடுத்துச் சென்றார்; பாட்டாளி வர்க்கத்தைப் பல பேர் காட்டிக் கொடுத்து வந்த அந்த மிக மிகக் கடுமையான ஆண்டுகளில், அவர் புரட்சிக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் விசுவாசமாக இருந்து வந்தார். அவரது ஸ்டெப்பி வெளியில் ஒரு நகரம் என்ற நாவலும் சரி, அல்லது அவரது எண்ணிறந்த சிறு கதைகளும் சரி, நமக்குப் பழைய ரஷ்யாவின் அத்தாட்சி பூர்வமான சித்திரத்தை வழங்கவில்லையா என்ன?

செராஃபிமோவிச் ஒரு நீண்ட, பெரிய வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளார். அவர் ஜாரிஸ்டுச் சிறைக் கூடங்களிலும் இருந்திருக்கிறார்; நாடு கடத்தப்பட்டும் வாழ்ந்திருக்கிறார். மூன்றும் அலெக்சாந்தரைக் கொலை செய்ய முயன்ற லெனினது மூத்த சகோதரரோடும் அவர் பழகியிருந்தார். பிராவ்தா நிருபர் என்ற முறையில், செராஃபிமோவிச் உள்நாட்டுப் போரின் எல்லாப் போர்முனைகளுக்கும் சென்று வந்தார்.

ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்கு முன் அவர் இருந்ததைப் போலவே, இன்றும் அவர் அத்தனை சுறுசுறுப்பும் துறுதுறுப்பும் மிக்கவராக இருக்கிறார். உணர்வில் இத்தனை இளமை மிக்கவராக விளங்கும் இந்தக் கிழப்பே அறியாத வயதான மனிதரை, காலத்தால் ஊடுருவ முடியாத பிறவியாக ஆக்கும் ஏதோ ஒன்று இருக்கத்தான் வேண்டும்.

வெஷென்ஸ்காயாவுக்கு செராஃபிமோவிச் வருகை தந்ததை நான் நினைவு கூர்கிறேன். அவர் என்னோடு பல நாட்கள் தங்கினார். டான் நதியில் தண்ணீர் எவ்வளவு குளிர்ச்சியாக இருந்த போதிலும் சரி, செராஃபிமோவிச் தாம் அதில் அன்றாடம் நீந்துவதை என்றுமே ரத்துச் செய்ததில்லை. எப்போதும் கவனத்தோடு முகச் சவரம் செய்து கொண்டும், குளித்த பின்னர் புத்துணர்வு பெற்றவராக மாறிக் கொண்டும் இருந்த இந்த மனிதரின் அலுப்புச் சலிப்பே அறியாத வற்றாத ஆற்றலைக் கண்டு நான் அதிசயித்தேன்.

அவர்தான் எத்தனை இளமைமிக்க ஆன்மாவைப் பெற்றிருக்கிறார்!

1938

18 ஆவது கட்சிக் காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து

தோழர்களே,

இந்த மேடை மீது ஏறிவரும்போது எனக்குச் சற்று நடுக்கம் கண்டது. எனக்கு ஏற்பட்ட இந்த நடுக்கவுணர்ச்சிக்குக் காரணம், பெரிய பெரிய தொகுதியான—நானே வருந்தும் விதத்தில்—முற்றுப் பெறாத நிலையிலுள்ள நாவல்களை எழுதி வரும் ஓர் எழுத்தாளர் என்ற அவப்புகழை நான் பெற்றிருப்பதுதான். எனவே அடுத்த பேச்சாளராக எனது பெயரைத் தலைவர் அறிவித்தவுடனேயே நீங்கள் இவ்வாறு பேசிக் கொள்வீர்கள் என்று நான் நினைத்துக் கொண்டேன்: ''ஓஹோ! இவர்தான் ஷோலகோவா? சீக்காது எழுதிக் கொண்டே செல்லும், எனினும் தமது நூல்களை என்றுமே பூர்த்தி செய்து முடிக்காத நபர் இவர்தானே? ஒருவேளை இங்கும் தலைவர் கொடுத்த கால வரம்பு முடிந்து விட்டது என்று இவருக்கு நினைவூட்டும் வரையிலும், இவர் தொடர்ந்து பேசிக்கொண்டே இருப்பாரா?'' நீங்கள் இவ்வாறு நினைத்துப் பார்த்துவிட்டால், பிறகு இங்கிருந்து நீங்கள் அரவம் காட்டாமல் மெல்ல வெளியே நழுவிச் செல்லவும் தொடங்கி விடுவீர்கள். நல்லது. நீங்கள் உங்கள் ஆசனங்களை

விட்டெழுந்து கிளம்பிச் செல்லுமுன் நான் அவசரம் அவசரமாக உங்களுக்கு ஓர் உறுதி கூறிக் கொள்கிறேன்: நான் சுருக்கமாகவே பேசுவேன்; மணி அடிக்கப்படுவதற்கும் முன்பே பேச்சை முடித்தும் விடுவேன். எனது இந்தச் சிறிய உரையும் கூட நீளமாக இருப்பதாகத் தோன்றினால், தயவு செய்து ஆசனத்திலேயே சற்று நெளிந்து கொடுத்துக் கொண்டிருங்கள்; நான் சீக்கிரமே முடித்து விடுகிறேன்....

''நான் இலக்கியத்தைப் பற்றியும் ஒரு சிறிதே காகிதத்தைப் பற்றியும்—அறிவது கலை மற்றும் தொழில்துறையின் இந்த ஒன்றோடொன்று இணைந்த இரு துறைகளையும் பற்றிப்—பேசப் போகிறேன்.

''எனக்கு முன்னால் பேசியவர்களின் பேச்சை நான் பொறுமை யோடு கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் எதைப்பற்றிப் பேசிய போதிலும், அது நிலக்கரி, தானியம், எண்ணெய் அல்லது சர்க்கரை வள்ளி போன்ற எதுவாக இருந்த போதிலும், அவர் கள் புள்ளி விவரங்களையும், சதமான வீதங்களையும் மேற்கோள் காட்டிப் பேசினர்; இதிலிருந்து எவ்வளவு வேலை நடந்துள்ளது என்பதை ஒவ்வொருவரும் கண்டுகொள்ள முடிந்தது. ஆனால் இலக்கியம் என்று எடுத்துக் கொண்டாலோ, அது புள்ளி விவரங் களோடும் சதமான வீதங்களோடும் காத தூர உறவை மட்டுமே கொண்ட ஒரு விஷயமேயாகும். மேலும், நான் இங்கு உங்கள் முன்னால், வெறும் கைகளுடனேயே, ஆதரவாக எட்டிப் பிடித்துக் கொள்ளக் கண்ணில் எதுவும் தட்டுப் படாமலே, நிற்கிறேன்....

''தோழர்களே, நான் இங்கு எங்களது மொத்த உற்பத்தி யளவைப் பற்றி—கடந்த ஐந்தாண்டுக் காலத்தின் போது வெளி வந்த புத்தகங்களைப் பற்றிப்—பேச வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். அதற்கு அவசியமே இல்லை; ஏனெனில் நல்ல புத்தகங்களையெல்லாம் நீங்கள் எல்லோரும் படித்திருக்கிறீர் கள்; மோசமான புத்தகங்களைப் பற்றிச் சொல்லாமல் விட்டு விடுவதே நல்லது.

"நாம் இன்னும் குறைவாகத்தான் எழுதுகிறோம். காங்கிரசில் இடம் பெற்றுள்ள புத்தகக் கடைகளில் கதைப் புத்தகங்கள் மிகவும் பரிதாபகரமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதே இதற்குச் சான்று பகரும். இந்தக் காங்கிரசுக்குப் பிரதிநிதிகளாக வந்துள்ள எனது சகோதர—எழுத்தாளர்கள் எவ்வாறு உணர்கி றார்களோ, அது எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நான் இந்தப் புத்தகக் கடைகளின் பக்கம் போகா மல் தூர விலகியிருக்கவே முயல்கிறேன். மேலும் அவற்றின்

பக்கம் போவதைத் தவிர்க்க முடியாத நிலைமை ஏற்படும்போது, பிரதிநிதிகளில் ஒருவர் எனது சட்டைக் கையைப் பிடித்து என்னைத் தடுத்து நிறுத்தி, ''ஏன் புத்தகங்களையே காணோம்? எழுத்தாளர்களின் பேனாக்கள் வறண்டுபோய் விட்டனவா?'' என்று கேட்பதற்கு முன்னால் நான் அங்கிருந்து அவசரம் அவசர மாக நகர்ந்து வந்து விடுகிறேன்.

''தோழர்களே, இத்தகைய பேச்சு ஓர் எழுத்தாளன் கேட்ப தற்குரிய அத்தனை இனிமையான பேச்சல்ல. இதனை நீங்களே நன்கு புரிந்து கொள்ள முடியும்.

''தோழர்களே, இது ஒரு புறமிருக்க, துர்ப்பாக்கிய வசமாக, நாம் எப்போதுமே நன்றாக எழுதி விடுவதும் இல்லை. சோவியத் இலக்கிய வாழ்வின் இருபதாண்டுக் காலத்தில் நாம் ஏதோ கொஞ்சம் சாதித்திருக்கிறோம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்த வெற்றிகளை அங்கீகரிக்கும் முகமாக, அரசாங்கம் நமது எழுத்தாளர் பலருக்கு விருதுகளைப் பரிசாக அளித்துள்ளது.

இதுவரையில் ரஷ்ய மக்களுக்குத் தெரிய வராதிருந்த, நமது சோதரத் தேசியக் குடியரசுகளைச் சேர்ந்த கவிஞர்கள் மற்றும் வசன இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்கள் இப்போது நாடு தழுவிய அளவில் அங்கிகாரத்தைப் பெற்றுள்ளன. இந்த எழுத்தாளர்களின் புதிய குரல்கள் ரஷ்ய இலக்கியத்தின் குரலோடு ஒன்று கலந்து அதனை வளப்படுத்தியுள்ளன; அதனை ஓர் உண்மையான சர்வதேச இலக்கியமாக ஆக்கியுள்ளன.

''தமது எளிமையால் உள்ளத்தை அத்தனை தூரம் கவரும் ஜாம்புல்லின் காவியப் பாடல்களால் இதயம் நெகிழாதார் நம்மில் யாரேனும் உண்டா? ஜார்ஜியக் கவிதைகளின் மயக்கும் இனிமையால் நாம் கவரப்பட்டதில்லையா? சுலெய்மான் ஸ்தால்ஸ்கியின் புதுமையான, இனிய நாதமிக்க பாடல் வரிகளின் கவர்ச்சிக்கு நாம் ஆட்பட்டதில்லையா? இவை மொழி பெயர்ப்பில் தமது மூலத்தின் எழில் வனப்பை ஓரளவு இழந்து விட்ட போதிலும்கூட, இந்த எழுத்தாளர்களின் வார்த்தைகள் நமது இதயத்துக்குள் நேராகப் புகத்தான் செய்தன....

''தோழர்களே, சோவியத் எழுத்தாளர்களுக்கும் வாசகர் களுக்கும் இடையே நிலவும் உறவுகள், முதலாளித்துவ நாடுகளில் நிலவும் உறவுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் நமது கலையின் மூலம் எந்த மக்களுக்குப் பணி புரிகிறோமோ, அந்த மக்கள் நம்மைப் பற்றிய தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க என்றுமே தயங்குவதில்லை. நாம் விமர்சிக்கப்படுகிறோம்; அவசியம் நேரும்போது

கண்டிக்கப்படுகிறோம்; நாம் தோல்வியைச் சந்திக்கும்போது ஆதரவு காட்டப்படுகிறோம்; நாம் பாராட்டுக்குத் தகுதியாகும் போது பாராட்டப்படுகிறோம்; நம்மில் ஒவ்வொருவரும் மக்களின் வழிகாட்டும் அன்பு கனிந்த கரத்தை எப்போதும் கண்டுணர்ந்தே வருகிறோம். எனவே மக்கள் எழுத்தாளரை நோக்கி அவர் மிகவும் குறைவாகவே எழுதுகிறார் என்றோ, அல்லது அவரது எழுத்துக்கள் தரத்தில் தாழ்ந்தவையாக உள்ளன என்றோ, கூறும்போது, அந்த எழுத்தாளர் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக என்ன கூற முடியும்? அவர் வெறுமனே இனிமேல் தாம் நன்றாக எழுத முயல்வதாகத் தெளிவற்று வாய்க்குள் முணு முணுத்துக் கொண்டு, முகத்தில் அசடு வழியத்தான் நிற்பார். சில சமயம் அவர் சொன்னவாறே செய்கிறார்; ஆனால் எப்போதுமே அல்ல. அவர் ஒரு சிறந்த புத்தகத்தையே எழுத விரும்புவார்; என்றாலும் அவர் எவ்வளவு தான் முயன்று பார்த்தாலும், அவரால் அவ்வாறு எழுதவே முடிவதில்லை. அதற்கு என்ன தேவையோ, அது அவரிடம் இருப்பதில்லை. அவரிடம் திறமை குடியோடிப் போய்விட்டது.

''இந்தப் பிரச்சினைக்கு இன்னொரு பக்கமும் உள்ளது. அதனைக் குறித்து நாம் உரக்கவும் தெளிவாகவும் பேச வேண்டியுள்ளது— அதுதான் காகிதம் பற்றிய பிரச்சினை. கதைப் புத்தகங்களுக்காக ஒதுக்கப்படும் காகிதத்தின் சதவீதம் மிகமிக, மிகமிகக் குறைவு; அது கையைக் கடிக்கிற அளவுக்கு அவ்வளவு குறைவு. கோஸ்லித்திஸ்தாத் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள், விருது பெற்ற ஒவ்வொரு நூலாசிரியரின்—அத்தகைய விருது பெற்ற ஆசிரியர்களே 172 பேர் உள்ளனர்—ஒரே ஒரு புத்தகத்தைத் தாங்கள் இந்த ஆண்டில் வெளியிடுவது என்றாலும்கூட, அவர் களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காகிதத்தில் எதுவும் மிஞ்சாது என்று கூறுகின்றனர்; ஆயினும் என்னதான் இருந்தாலும், ஏற்கெனவே விருது பெற்றுள்ள ஆசிரியர்களின் நூல்களை மட்டுமே வெளி யிட்டாக வேண்டும் என்பதில்லை; வருங்காலத்தில் விருதுகளைப் பெறவிருக்கும் எழுத்தாளர்களின் நூல்களையும் வெளியிடத்தான் வேண்டும்.

''மேலும், இன்னொரு வகையான எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். அதாவது முன்னைப் பழங்காலத்தில் தமது மேதத்துவத்துக்குப் பிரதிபலனாக, சைபீரியாவில் கடின உழைப்புத் தண்டனையையும் நாடு கடத்தலையுமே பரிசாகப் பெற்றவர்களே அவர்கள்; அவர்கள் கட்டி வைக்கப்பட்டுக் கசையடித் தண்டனை பெற்றனர்; ராணுவத்தில் சாதாரணச் சிப்பாய்களாகப் பலவந்தமாகச் சேர்க்கப்பட்டனர்; அரசாங்க

எந்திரம் மற்றும் திருச்சபையின் மடத்தனமான பலத்தினால் நசுக்கப்பட்டனர்; அல்லது கொடுமையிழைக்கச் சற்றேனும் தயங்காத அதிகாரிகளின் கைகளால் வெறுமனே கொல்லப்பட்டனர். இந்த அவமானத்துக்கான, இந்த வெங்கொடிய வெட்கங்கெட்ட தன்மைக்கான பொறுப்பு, 1917-ல் நமது மக்களும் நமது கட்சியும் ஒழித்துக் கட்டிய பழைய சாபக்கேடான ஆட்சிக்கே உரியதாகும். அந்த ஆட்சி இதற்குச் சரித்திரத்தின் முன்னால் நின்று பதில் சொல்லட்டும். நாம் நமது முன்னேப் போரிலக்கியங்களை நமது இதயங்கள் எல்லாவற்றையும் கொண்டு மதிக்கிறோம்; நேசிக்கிறோம். இப்போது தான், சோவியத் ஆட்சியின் கீழ்தான், அந்த எழுத்தாளர்களின் நூல்கள் வெகுஜன வாசகர்களுக்குக் கிட்டுமாறு செய்யப் பட்டுள்ளன. இந்தப் புத்தகங்கள் லட்சக் கணக்கான பிரதிகளாக வெளியிடப்படுகின்றன; எனினும் இன்னும் அவை போதாததாகவே உள்ளன. கதைப் புத்தகங்களை வெளியிட அதிகமான காகிதத்தை ஒதுக்கீடு செய்யவேண்டும். காகிதம் தயாராகக் கிடந்து நல்ல புத்தகங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கவேண்டும். இதற்கு நேர்மாறாக, தலைகீழாக நிகழக்கூடாது. இதனை இவ்வாறுதான் ஒழுங்குபடுத்தி ஆகவேண்டும். புஷ்கின் நூல்களுக்கு வாசகர்களிடமிருந்து, பத்து லட்சம் பிரதிகளுக்கான ஆர்டரும், ஷெவ்செங்கோவின் நூல்களுக்கு ஐந்து லட்சம் பிரதிகளுக்கான ஆர்டரும் வந்து குவிந்திருக்கும்போது, இந்நூல்களை நாம் இந்த ஆண்டில் வெறுமனே சில பத்தாயிரம் பிரதிகளையே வெளியிடப் போகிறோம் என்றால், அது ஒரு சகிக்கமுடியாத நிலைமையே யாகும்.

"ஒரு காலத்தில் புதிய புத்தகங்கள் போதிய அளவுக்கு இல்லாத காரணத்தால், கோஸ்லித்திஸ்தாத் ஸ்தாபனம் பழைய புத்தங்களை மறுபடியும் வெளியிடுவதுடனேயே நின்று கொள்ள வேண்டியிருந்தது. எனவே அதனை அரசாங்க மறுவெளியீட்டுப் பதிப்பகம் என்றுகூட, எழுத்தாளர்கள் கேலியாகக் குறிப்பிட்டனர். இப்போதைய காகித நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால், கோஸ்லித்திஸ்தாத் ஸ்தாபனம் அரசாங்க—வெளியிடாத பதிப்பகம் என்றே குறிப்பிடப்படும் என்று நான் அஞ்சுகிறேன். எனினும், கதைப்புத்தகங்களை வெளியிடுவதற்கான காகித ஒதுக்கீடுகளை அதிகரிக்கும் பிரச்சினை, தமக்குச் சாதகமாகத் தீர்க்கப்படும் என்றே எழுத் தாளர்கள் இன்னும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

''தோழர்களே, பாசிஸ்டுகள் நம்மீது பலவந்தமாகத் திணித்து வரும் போர் விஷயத்தில் சோவியத் எழுத்தாளர்களின் மனப்போக்குப் பற்றியும் சில வார்த்தைகள், வருங்காலத்தில் அளவிலும் சரி, தரத்திலும் சரி, நாம் உற்பத்தியின் சில பிரிவுகளில் தலையாய இடத்தை எட்டிப் பிடிப்போம் என்று நம்பும் அதே சமயத்தில், எழுத்தாளர்களாகிய நாம் விஞ்சிச் செல்ல எந்த விதத்திலும் விரும்பாத ஒரு பிரிவு உண்டு—தற்காப்புத் தொழில் துறையைத்தான் நான் இவ்வாறு குறிப்பிடுகிறேன். காரணம், முதலாவதாக அதனை எந்தவிதத்திலும் மிஞ்சிவிட முடியாது என்பது; இரண்டாவது காரணம், அது அத்தகைய தொரு நல்ல ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரிவாகும்; அதனை மிஞ்ச முயல்வது முற்றிலும் கண்ணியமற்றதாகும். அது நம் அனைவரின் நன்மைக்காகவும், நமது எதிரிகளின் அழிவுக் காகவும் வளரட்டும்; செழித்தோங்கட்டும்.

''சோவியத் எழுத்தாளர்கள் உணர்ச்சி மேலீடு மிக்க மேற்கு ஐரோப்பிய அமைதிவாதிகளின் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. எதிரி நமது நாட்டைத் தாக்கினால், சோவியத் எழுத் தாளர்களான நாம் நமது பேனாக்களைக் கீழே வைத்துவிட்டு, கட்சி மற்றும் அரசாங்கத்தின் அறைகூவலுக்குச் செவி சாய்த்து, வேறேதர் ஆயுதத்தைக் கையில் ஏந்துவோம்; தோழர் வொரோஷிலோவ் பேசியபடி, துப்பாக்கிப்படை பிரிவு சுட்டுத் தள்ளும் தோட்டாக்கள் மழையில், நமது தோட்டாக்களின் ஈயமும் இருக்கும்; அவை பாசிசத்தின்பால் நாம் கொண்டுள்ள பகைமையைப் போலவே கனமாகவும் சூடாகவும் இருந்து, எதிரியைத் தாக்கி அவனை வெட்டி வீழ்த்தும்.

''செஞ்சேனையின் அணிகளில், அதன் மகோன்னதமான செம்பதாகைகளின் கீழ், நமக்கு முன்னால் எவருமே இதுவரை செய்திராத விதத்தில், நாம் எதிரியை அடித்து நொறுக்குவோம். பிரதிநிதித் தோழர்களே, நாங்கள் எங்களது வரைபடப் பேழைகளைக் கைவிடப் போவதில்லை என்றும் நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன்— இவ்வாறு கைவிடும் இந்த ஜப்பானியப் பழக்கம் எங்களுக்கு ஒவ்வாததாகும். மாறாக, நாம் மற்றவர் களின் வரைபடப் பேழைகளைப் பொறுக்கியெடுத்து வருவோம்; ஏனெனில் அவற்றில் உள்ள விஷயங்கள் பின்னால் நமது இலக்கியத் தொழிலில் நமக்கு மிகவும் பயன்மிக்கவையாக இருக்கும். எதிரியை முறியடித்த பின்னால், நாம் அதனை எப்படிச் செய்து முடித்தோம் என்பதை வருணிக்கும் புத்தகங் களை நாம் எழுதுவோம். இந்தப் புத்தகங்கள் நமது மக்களுக்கு ஆற்றும் சேவையாக விளங்கும்; எஞ்சிமிஞ்சியுள்ள ஆக்கிர

மிப்பாளர்கள் எவரேனும் இருந்தால் அவர்களுக்கும் அவை ஓர் எச்சரிக்கையாக இருக்கும்.

''தோழர்களே, உங்களிற் பலரையும் போலவே, என் வாழ்க்கையில் முதன்முறையாக நான் ஒரு கட்சிக் காங்கிரசில் பிரசன்னமாகியிருக்கிறேன். கட்சியால் வளர்க்கப்பட்ட சோவியத் அறிவுத் துறையினரின் முதல் குருத்துக்கள் நாம் என்று நாம் பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ள முடியும். நமக்குப் பின்னால், லட்சோப லட்சக்கணக்கான மக்கள் வருவார்கள். அவர்களுக்குக் கலாசாரம் அவர்களது வாழ்க்கையின் பகுதியாகவே இருக்கும்.

1939

மிகப்பெரிய கலைஞர்

அலெக்சி டால்ஸ்டாய் பெரிய ரஷ்ய உள்ளமும், நாணுவிதமான பெருந்திறமையும் படைத்த எழுத்தாளராக இருந்தார். லட்சக்கணக்கான வாசகர்கள் மத்தியில் அவர் அடைந்துள்ள பிரபலம், அலுப்புச் சலிப்பேயறியாத பல்லாண்டுக்கால உழைப்பின்மூலம் அவர் சம்பாதித்த அன்பு, எழுதப்படும் வார்த்தைகளைச் சரியானபடி வேலை வாங்கும் அவரது முறை ஆகியவையெல்லாம் உண்மையிலேயே மிகப்பெரியவை; நல்ல தகுதியும் பெற்றவை.

ஒரு குழந்தைக் கதையாகட்டும், சரித்திர நாவலாகட்டும், அல்லது யுத்த காலக் கதையாகட்டும், அவை யாவையும், அவரது பலமும் வேலை வாங்கும் திறனும் மிக்க கரங்களால் உயிர்த்துடிப்போடு ஜொலிக்கும் வர்ண ஜாலங்களையும், அதே போல் ஒரு சிற்பவடிவின் வியத்தகும் பிரத்தியட்சத் தன்மையையும் பெற்றன. இதனை உண்மைக் கலைஞரால் மட்டுமே சாதிக்க முடியும்.

மாபெரும் தேசபக்தப் போர்க்காலத்தில் தாம் எழுதிய கட்டுரைகளில், அலெக்சி டால்ஸ்டாய் ஒரு மக்கட் பிரதிநிதியின் கோபாவேசமான மொழியில் பேசினார்; அவரது குரலைப் போர் முனையில் இருந்த போர்வீரர்களும், அந்த மாபெரும் போரில் வெற்றி பெறுவதற்காகப் பின்னணியிலிருந்து பாடுபட்டுச் செஞ்சேனைக்கு உதவிவந்த மக்களும் கூர்ந்த கவனத்தோடு கேட்டனர்.

ஜெர்மானியர்கள் மாஸ்கோவை நோக்கி முன்னேறி வந்து கொண்டிருந்த அந்த மோசமான நாட்களில், தமது நாட்டு மக்களிடம் எல்லையற்ற நம்பிக்கை கொண்டிருந்த ஓர் உண்மை

யான ரஷ்ய புத்திரன் என்ற முறையில், டால்ஸ்டாய் சோவியத் மக்களின் முன்னுல் ரஷ்யாவின் கடந்தகால வரலாற்றுப் புகழைப் புத்துயிர் பெற்று எழச் செய்து, நமது மாபெரும் மூதாதையரின் ஆணைகளை அவர்களுக்கு நினைவூட்டினுர். அவரது கட்டுரைகளின் மூலமந்திரம் ''நாம் உறுதியோடு நிற்போம்!'' என்பதாகவே இருந்தது. ''அரும்பெரும் சாதனைகளைப் புரிய, கீர்த்தியடைய வீறுகொண்டெழுங்கள்!'', ''உறுதிப்பாடு'', ''தியாகம்'', ''வெற்றியில் திட நம்பிக்கை'', ''ரஷ்யா கோபம் கொண்டு எழுந்து விட்டது'', ''வெல்லற்கரிய கோட்டை'', ''நமது சோவியத் தாயகத்துக்காக'', ''எதிரியை வெறுத்துப் பகையுங்கள்'' ஆகிய தலைப்புக்கள் போர்க்கோஷங்கள் போலவே ஒலித்தன.

1941 ஜூன் 27 அன்று ''நாம் எதைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம்?'' என்ற தலைப்பில் தாம் எழுதிய கட்டுரையில், டால்ஸ்டாய் தமது சோவியத் தாயகத்தின்பால் தாம் கொண்டுள்ள அன்பை, உளமார்ந்த தன்மையினுல் உள்ளத்தைக் கிளரும் எளிமையான வார்த்தைகளில் வெளியிட்டார். அவர் இவ்வாறு கூறினுர்:

''என் நாடே, நான் பிறந்த மண்ணே, எனது தாயகமே, நின்பால் நான் கொண்டுள்ள அன்பைக் காட்டிலும் மிகவும் ஆர்வமிக்க, ஆழமான, புனிதமான உணர்ச்சி வேறு எதுவும் வாழ்க்கையில் இல்லை...''

இன்னெரு கட்டுரையில் அவர் சோவியத் மானிடனைப்பற்றி, ''ஜெர்மானிய ஏகாதிபத்தியத்தின் இனப்படுகொலை பற்றிய புள்ளி விவரங்களைத் தவிர, இந்த உலகில் மிகவும் மேலான தொரு நீதி இருந்தது என்பதை....தமது தந்தையர் மற்றும் மூதாதையர்களின் நாடான, தமது புதல்வர்கள் மற்றும் பேரன் மார்களின் ஆனந்த சொர்க்க பூமியான சோவியத் யூனியன் இருந்தது என்பதை, சுதந்திரம் எனப்படும் அமுதத்தை நன்முக மாந்திக் குடித்த பின்னர் உணர்ந்த சோவியத் மானிடனின், முதன்மையாக ரஷ்ய மானிடனின் மனப்பான்மை'' யைப்பற்றிய இந்த உத்வேகமான வரிகளை எழுதினுர்.

மிகவும் சிரமமயமான நாட்களில் எழுதிய இந்த அன்பும் நம்பிக்கையும் மிக்க வார்த்தைகள் மக்களின் நன்றியுணர்வு மிக்க நினைவிலிருந்து தூர்ந்து போய்விடாது.

டால்ஸ்டாய் ரஷ்ய இலக்கியத்தின் மிகமிக அருமையான மரபுகளை விசுவாசத்தோடு தொடர்ந்து பின்பற்றி வந்தார்; ரஷ்ய மொழியின் புனிதத் தன்மைக்கு ஆர்வமிக்க பாதுகாவலராக இருந்தார். டால்ஸ்டாயை எப்போதுமே ஓர் உண்மையான

நண்பராக இனங்கண்டறிந்த சோவியத் எழுத்தாளர்களின் இவ்விய தலைமுறை அவருக்குப் பெரிதும் கடன்பட்டுள்ளதாகும்.

போர் நடந்து வந்த காலத்தில், டால்ஸ்டாய் உலக நடப்புப் பற்றிய தமது கட்டுரைகளோடு கூடவே, முதலாம் பீட்டர் * என்ற தமது தலைசிறந்த நாவலையும், பயங்கர இவான் என்ற தமது பரபரப்பூட்டும் கதையையும் எழுதி முடிப்பதில் அரும்பாடு பட்டு உழைத்தார்.

ரஷ்யத் திறமையோடு அப்படியே பிரகாசித்து வந்த அந்த வாழ்க்கையை நேசிக்கும் மனிதரான டால்ஸ்டாய் நமக்கு அருகிலேயே வாழ்ந்தும் உழைத்தும் வந்தார் என்பதை அறிவது, நம் அனைவருக்கும் இதயத்தை மகிழ்விக்கும் இன்ப உணர்ச்சியைக் கொடுத்தது. நாம் அவரது படைப்புக்களை அன்போடும் நம்பிக்கையோடும் தொடர்ந்து படித்து வந்தோம்; அவர் எழுதியது ஏதேனும் வெளிவந்திருக்கிறதா என்று பார்ப்பதற்காகச் சஞ்சிகைகளின் பக்கங்களை நாம் ஆவலோடு புரட்டினோம். எனவே நமது இழப்பு உணர்ச்சி மிகவும் கடுமையாகவும் மிகவும் வேதனை தருவதாகவும் இருக்கிறது.

போரின் ஆரம்ப நாட்களிலேயே டால்ஸ்டாய் இவ்வாறு எழுதினார்: "மூன்றாவது ரீச்சின் படைகளை முறியடிப்பது, எல்லா நாஜிகளையும் அவர்களது மிருகத்தனமான ரத்தபயங்கரச் சூழ்ச்சிகளோடு உலகிலிருந்தே துடைத்தெறிவது, நமது தாய நாட்டுக்குச் சமாதானத்தையும், அமைதியையும், நிரந்தரமான சுதந்திரத்தையும், அமோக வளத்தையும், மற்றும் மிக உயர்ந்த மானிட சுதந்திரத்துக்குச் செல்லும் மார்க்கத்தின் வழியாக மேலும் வளர்ச்சி பெற்று முன்னேறுவதற்கான சகல வாய்ப்பையும் வழங்குவது—இதுவே ரஷ்யர்களான நாமும், நமது யூனியனின் சகல சோதர தேசங்களும் சாதித்து முடித்தாக வேண்டிய தலையாய, மேன்மையான பணியாகும்."

எனவே நமக்கு மிகவும் அருகில் நெருங்கி வந்துவிட்ட வெற்றியைக் காண்பதற்கு அவர் உயிரோடு இல்லையே என்று நாம் ஆறுத வருத்த உணர்வை அடைகிறோம்.

1945

அலெக்சி டால்ஸ்டாயின் அந்திமக் கிரியையின்போது ஆற்றிய உரையிலிருந்து

....நமது மக்கள் ஒரு பயங்கரமான இழப்பைச் சுமந்து கொண்டுள்ளனர். இழப்பின் கொடுமை வேதனை மிக்கது. தமது

* இந்நாவல் "சக்ரவர்த்தி பீட்டர்" என்ற தலைப்பில் தமிழில் வெளிவந்துள்ளது வெளியீடு: ஸ்டாலின் பிரசுரம், தமிழாக்கம்: எஸ். ராமகிருஷ்ணன்.

வாழ்க்கை முழுவதையும், தமது வலிமைமிக்க திறமையையும் மக்களுக்கே அர்ப்பணித்திருந்த ஒரு பெரிய எழுத்தாளர் காலமாகி விட்டார்.

அலெக்சி டால்ஸ்டாய் ஒரு தாராளமான ரஷ்ய உள்ளத்தையும், தெள்ளத் தெளிந்த, பலதிறப்பட்ட திறமையையும் கொண்டிருந்த எழுத்தாளர். தமது சோவியத் தாயகத்தின்பால், சோவியத் மக்களின்பால், ஒரு ரஷ்யரின் இதயத்துக்கு அருமையான எல்லாவற்றின்பாலும், தாம் கொண்டிருந்த அன்பை வெளியிடுவதற்கு அவர் இதயத்தை நெகிழ வைக்கும் எளிமையான சொற்களைக் கண்டறிந்தார். ரஷ்ய மானிடனின்மீது, சோவியத் மக்களின்மீது அடிமையின் நுகத்தடியைப் பூட்ட முயன்ற பாசிஸ்டு அரக்கப் பிறவிகளைச் சாடுவதற்கு அவர் உணர்ச்சி வேகமிக்க, கட்டெரிக்கும் கோபாவேசமிக்க சொற்களைக் கண்டறிந்தார்.

நமது நாடு அனுபவிக்க நேர்ந்த அந்த இருண்ட நாட்களில் இந்த எழுத்தாளர் எழுதிய அன்பும் நம்பிக்கையும் மிக்க சொற்கள் மக்களின் நன்றிவுணர்வுமிக்க நினைவிலிருந்து என்றுமே அழிக்கப்பட்டு விடாது.

1945

இலக்கியத்தின் மாபெரும் நண்பர்

சோவியத் மக்கள் ஆழமாக நேசித்து வருந்தும் மிக்கேல் இவானோவிச் கலினின் மரணத்தினால், நமது இலக்கியம் அதன் மிகப்பெரும் நண்பரை, எழுத்தாளரது முயற்சியின் திறமை வாய்ந்த, கண்டிப்பான தீர்ப்பாளரை இழந்துவிட்டது.

ஒரு புனிதமான, இளமை ததும்பும் புதிய காதலோடு தமது வாழ்நாள் முழுவதும் தாம் நேசித்தும், அற்புதமாகக் கற்றறிந்தும் வந்த ரஷ்யப் பேரிலக்கியங்களால் வளர்த்து ஆளாக்கப்பட்ட மிக்கேல் இவானோவிச், தற்கால எழுத்தாளர்களின் படைப்புக்களிலும் மிகமிக உற்சாகமிக்க அக்கறையை எப்போதுமே கொண்டிருந்தார்.

நான் இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் அவரோடு உரையாடிக் கொண்டிருந்தேன். அப்போது மிக்கேல் இவானோவிச் நான் என்ன எழுதத் திட்டமிட்டுக் கொண்டிருந்தேன் என்பதையும், அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற எனது நாவலை எழுதுவதில் நான் எவ்வாறு முன்னேறியிருக்கிறேன் என்பதையும் பற்றி என்னிடம் கேட்டார். பிறகு இவ்வாறு சொன்னார்:

''உங்கள் புத்தகத்தைப்பற்றி உங்களோடு பேச வேண்டு மென்று நான் நெடுநாட்களாக விரும்பி வந்துள்ளேன். வெளிப் படையாகச் சொன்னால், மாபெரும் தேசபக்தப் போரைப்பற்றி ஒரு நாவலை எழுதும்போது, நீங்கள் ஒரு விஷயத்தை, எனது கருத்தின்படி, மிகமிக முக்கியமான விஷயத்தைக் காணத்தவறி விடக்கூடாதே என்று நான் கவலைப்பட்டேன்.'' இதன்பின் எனது வருங்கால நூலில் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்று தாம் கருதிய விஷயம்பற்றி மிக்கேல் இவானேவிச் என்னிடம் கூறத் தொடங்கினர்.

நான் பதிலளிக்கையில் என் மனத்தில் இருந்த கருத்தைக் கூறி, அதைப் பற்றி என்னால் முடிந்த அளவுக்கு மிகவும் சிறப்பாகவே எழுத முயல்கிறேன் என்று கூறினேன். நான் இவ்வாறு கூறும் போது, அந்த நேரத்தில் தமக்குத் தாமே ஒரு சிகரெட்டை உருட்டித் தயார் செய்து கொண்டிருந்த மிக்கேல் இவானேவிச், தமது பளபளக்கும் மூக்குக் கண்ணாடி யின் வழியாக என்னைக் களி பொங்கும் பார்வையோடு பார்த்தார்; முதியவரின் இனிய புன்னகையொன்றையும் புரிந்தார்; அந்தப் புன்னகை அவரது முகம் முழுவதையுமே ஒளிரச் செய்வதுபோல் தோன்றியது.

''அப்படியென்றால் சரிதான், மிகவும் நல்லது. எனவே நான் கவலைப்பட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை'' என்று கூறிவிட்டு, பின்னர் மிகவும் காரியார்த்தமிக்க முறையில் இவ்வாறு கூறத் தொடங்கினர்: ''பாருங்கள், வாசகர்களான நாங்கள் எழுத்தாளர்களான உங்களிடமிருந்து விரும்புவது வெறுமனே புத்தகங்கள் அல்ல; நமது வாழ்க்கையைப் பற்றிய முழுமையான சித்திரத்தை வழங்கும் நல்ல புத்தகங்களையே விரும்புகிறோம். எனவேதான் உங்கள் திட்டங்களில் தலையிடுகிறேன் என்று கூறலாம். மேலும், முக்கியமாக, எடுத்துக்கொள்ளப்படும் கருப் பொருள், நமது மக்கள் வெற்றி யோடும் கீர்த்தியோடும், கடந்து கரையேறிய, கடந்த போர் போன்ற வெல்லற்கரிய போர் நிகழ்ச்சியாக இருக்கும்போது, நாங்கள் உண்மையான புத்தகங்களை, அதாவது நூற்றாண்டுக் கணக்கில் இல்லாவிட்டாலும் சில பத்தாண்டுகளுக்காவது வாழ்ந்து வரக் கூடிய அத்தகைய புத்தகங்களைப் படிக்கவே விரும்புகிறோம். சில நூலாசிரியர்கள் விஷயத்தில் இதெல்லாம் எப்படியிருக்கிறது என்பதை நீங்களே அறிவீர்கள்: அவர்கள் கதை நிகழ்ச்சி தமது மனத்தில் சரிவர உருப்பெறுவதற்கே கால அவகாசம் கொடுப்பதில்லை; அதைப் பற்றி நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவே அவர்கள் சிரமம் எடுத்துக் கொள்வதில்லை.

அதற்குள் அவசரக் கோலத்தில் தமது புத்தகத்தை எழுதி, வெளியிட்டும் விடுகிறார்கள்; இன்னும் மோசமானது என்ன வென்றால் ஒரே ஆண்டில் இரண்டு புத்தகங்களையும் கூட வெளிக் கொணர்ந்து விடுகிறார்கள். அந்தப் புத்தகங்கள் ஒவ்வொன்றின் ஆயுட் காலமும் ஒரு நாளுக்கு மேல் நீடிப்பதில்லை. நாம் இன்று அதைப் படித்துப் பார்ப்போம். ஆனால் நாளையே அதன் பிரதானப் பாத்திரங்கள்—அவை யாரோ கார்டினல்களாக, லெப்டினெண்டாக, அல்லது ஒரு யுவதியாக இருக்கலாம்—அவர் களின் பெயர்களையும் நாம் மறந்து விடுகிறோம்; அந்தப் புத்தகம் எதைப் பற்றியது என்பதும் கூட நமக்கு மறந்து போய் விடுகிறது. அதில் வருகின்ற நபர்கள் உண்மையானவர்கள் அல்ல; அவர்கள் மங்கலான, பூத உடலற்ற ஆவியின் நிழல்களாகவே உள்ளனர்; பின்னர் அவற்றை ஒருவர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? மேலும் இதனோடு ஆசிரியரின் வளமற்ற மொழியும், நாவலின் செம்மையே இல்லாத வடிவமும் சேர்ந்துக் கொண்டால், பிறகு அதனை நினைவில் வைத்திருப்பதில் அர்த்தமே இல்லை. இதன் விளைவாக, அச்சகம் மற்றும் பதிப்பகத்தின் ஊழியர்களது முயற்சிகள், காகிதம், பணம் எல்லாமும் வீணாகின்றன. இதே போல் வாசகர்களின் பொன்னான நேரமும் வீணாகிறது.

''அன்றொரு நாள் எனக்கு ஒரு நூலாசிரியரிடமிருந்து ஒரு கடிதமும், பிரதேசப் பதிப்பகம் ஒன்றினால் வெளியிடப்பட்டுள்ள அவரது தடியான புத்தகம் ஒன்றின் பிரதியும் வந்து சேர்ந்தன. அந்த நூலாசிரியர் தமது கடிதத்தில் எழுத்தாளர் யூனியன் தமக்கு அநீதியிழைத்து விட்டதாகவும், ஏனெனில் அது அவரது புத்தகத்தை ஸ்டாலின் பரிசுக்குச் சிபாரிசு செய்யவில்லை என்பதாகவும், ஆனால் உண்மையில் அது அந்தப் பரிசுக்குத் தகுதி யானதாகவும் எழுதியிருந்தார். என் கண்கள் சரியாக இல்லை; என்றாலும் அந்தப் பெரிய புத்தகத்தை நான் முழுக்கப் படித்துப் பார்த்தேன். நான் அதனைப் படித்துப் பார்த்தேனே தவிர, அந்த நூலாசிரியருக்குப் பதிலே எழுதவில்லை.'' மிக்கேல் இவானெவிச் விரக்தியோடு கையை அசைத்தார்; பிறகு புன்னகை புரிந்தார். ''நான் அப்படிச் செய்திருக்கக் கூடாது என்பது எனக்குத் தெரிகிறது. ஆனால் நான்தான் என்ன செய்வது? ஸ்டாலின் பரிசு கிடக்கட்டும். அந்தப் புத்தகம் வெளியிடுவதற்கே தகுதியற்றதாகவே இருந்தது. எனவே எந்த விதத் திறமையும் இல்லாத, என்றாலும் தற்பெருமைக்கு மட்டும் பஞ்சமே இல்லாத அந்த ஆசிரியருக்கு நான் என்ன பதில் எழுத முடியும்? என்னையும்கூட அவர் நம்புவார் என்று நான் எண்ண

வில்லை. எனினும் அதே சமயம் எனக்குச் சில நாட்களுக்கு முன்னால் தமது புதிய புத்தகத்தை அனுப்பி வைத்திருந்த ஒரு முதிய புத்திசாலியான எழுத்தாளருக்கு நான் பதில் எழுதத் தயங்கவில்லை. அவரது புத்தகம் சப்பென்று மோசமாக இருக்கிறது என்று நான் அவருக்குப் பதில் எழுதினேன். 'புத்தகம் மோசம்!' என்று அவரிடம் நான் நேரிடையாகவே கூறிவிட்டேன்.''

மிக்கேல் இவானோவிச் மௌனமானார்; பின்னர் தமது கைவிரல் நுனிகளால் மேஜைமீது தாளமிட்டவாறே, தமது சொந்தச் சிந்தனை எதிலோ மூழ்கிப் புன்னகை புரிந்தார்.

பிறகு அவர் மேலும் பேசத் தொடங்கினார்: ''சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் நான் திபிலிஸியில் சிறையில் இருந்த காலத்தில், பிரபல நூலாசிரியர் ஒருவரின் புத்தகம் ஒன்று என் கைக்குக் கிட்டியது. நான் சிறைக் கொட்டடியில் தனியாக இருந்தேன்; மேலும் இந்த ஒரே ஒரு புத்தகம்தான் என்னிடம் இருந்தது. எனவே அந்தப் புத்தகத்தைத் திரும்பத் திரும்ப எண்ணற்ற முறைகள் படித்தேன். எனவே நான் அதனை வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்திருக்கத்தானே வேண்டும். இல்லையா? ஆனால் என்னை விடுதலை செய்த மறுகணமே நான் அதனை முற்றிலும் மறந்து விட்டேன். அதன்பின் அதனை மீண்டும் படிக்க வேண்டும் என்ற உணர்வும் எனக்கு என்றுமே தோன்றவில்லை. அது உண்மையான இலக்கியம் அல்ல; எனவேதான் அப்படி... ஆனால் டால்ஸ்டாயாகவோ அல்லது செகாவாகவோ இருந்தால், நாம் அவர்களது கதையை ஒரே ஒரு முறை படித்தாலும், அதை எப்போதும் நினைவில் வைத்திருக்கிறோம்; அது நமது நினைவிலேயே சித்திரமாகப் பதிந்து தங்கி விடுகிறது. மேலும், நாம் அந்தக் கதையை நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் படித்தது போல் இல்லாமல், ஏதோ நேற்றுத்தான் அதனைப் படித்ததுபோல் கதை முழுவதும் நமக்கு நன்கு தெரிந்தே இருக்கிறது...நிச்சயமாகச் சொல்லப் போனால், 'அமரத்துவம்' வாய்ந்த எழுத்தாளர்களின் நூல்களும்கூட, அவை உருவத்தில் மிகவும் செம்மையாக எழுதப்பட்டிருந்த போதிலும், அவை ஈடுபாடில்லாத கையால் எழுதப்பட்டுள்ளன; எனவே நாம் ஏதோ தண்ணென்று குளிர்ந்த ஒரு சலவைக் கல் பாளத்தின் மீது கை வைத்து விட்டது போல், அவை நமது இதயத்தில் ஒரு சில்லிட்ட உணர்ச்சியையே ஏற்படுத்துகின்றன...''

மிக்கேல் இவானோவிச் தமது சிறிய, வறண்ட கையை மேஜை மீது வைத்துத் தமது கருத்தை ஒரு சிறிய சைகையின் மூலம் புலப்படுத்திக் காட்டினார்; அந்தச் சைகை அங்குக் கூடி

யிருந்த நாங்கள் அனைவருமே அந்த உயிரற்ற சலவைக் கல்லின் சில்லிட்ட தன்மையை உணர்வதுபோல் அத்தனை தூரம் மனத்தில் பதிவதாகவும் விளக்கமாகவும் இருந்தது.

"நமது தோலுக்கடியில் ரத்தம் துடிப்பது போல், புத்தகத்தின் கட்டமைப்புக்குக் கீழ் எங்கே உயிர் நாடி துடிக்கிறதோ, எந்தவொரு புத்தகத்தை நாம் என்றென்றைக்கும் இல்லாவிட்டாலும் நெடுங்காலத்துக்கு நினைவில் வைத்திருப்போமோ, எதனை என்றாவது ஒரு நாள் திரும்பவும் படித்துப் பார்க்க வேண்டுமென்று விரும்புவோமோ, அதனையே நான் நல்ல புத்தகம் என்று கூறுகிறேன். செகாவின் ஸ்டெப்பிவெளி உங்களுக்கு நினைவிருக்கிறதா?" என்று மிக்கேல் இவானை விசாரித்தார்; பின்னர் அவர் செகாவையும், டால்ஸ்டாயையும், கார்க்கியையும் பற்றி வியந்து பாராட்டிப் பேசத் தொடங்கி விட்டார்.

பின்னர் அவர் என்னிடம் டான் பிரதேசத்துக் கூட்டுப் பண்ணை விவசாயிகளின் வாழ்க்கையைப் பற்றி ஆழ்ந்த அக்கறையோடு கேட்டார்; அவர்களது வாழ்க்கையை அவர் உள்நாட்டுப் போரின் போர்முனைகளுக்குச் சென்று வந்ததன் மூலம் முன்னமேயே அறிந்திருந்தார்; எனவே அவர் பழைய நினைவுகளை நினைவு கூர்ந்து இவ்வாறு கூறினார்:

"நமது நாட்டில் வேறு எங்கணும் உள்ளதைப் போலவே, நீங்களும் அங்கு நல்லவிதமான மக்களைக் கொண்டிருக்கிறீர்கள். நமது மக்களைப் போன்ற மக்கள் இருந்தால், நாம் ஒரு போரிலும் பத்திரமாகப் போர் புரிய முடியும் அல்லது நிர்மாணப் பணியையும் ஏற்று நடத்த முடியும். எனக்கு உங்கள் டான் பிரதேசத்து மாதர்களை மிகவும் பிடித்தது. அவர்கள் அத்தனை கடினமாக உழைக்கிறார்கள்; அத்துடன் அவர்கள் பண்பும் மிக்கவர்கள். அவர்கள் என்னோடு பேசியபோது, துணி கிடைக்கவில்லை, சோப்பு கிடையாது என்றெல்லாம் முறையிட்டுச் சிணுங்கவும் இல்லை; நச்சரிக்கவும் இல்லை. ஏதாவதொரு பொருளின் பற்றுக்குறை உண்மையில் அவர்களை மிகவும் பாதித்த சமயங்களில் மட்டும்தான், அவர்கள் சற்றே என்னைத் திட்டினார்கள் என்று நினைக்கிறேன்..உண்மையில் அவர்கள் சரமாரியாகத் திட்டித் தீர்த்து விட்டார்கள்..." இவ்வாறு கூறிவிட்டு அவர்களுக்கென்று சிரித்தார்; பின்னர் ஒரு விவசாயியின் எல்லாமுணர்ந்த தந்திர பாவத்தோடு தமது கண்களைச் சுருக்கிப் பார்த்துவிட்டு மேலும் கூறினார்: "நல்லது. அழுது சிணுங்குவதையும் நச்சரிப்பதையும் காட்டிலும் நன்றாகத் திட்டித் தீர்த்து மனப்பாரத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது

தான் என்று நான் நினைக்கிறேன். இதை ஒப்புக் கொள்கிறீர்கள் இல்லையா?''

நமது மக்களின் அழிக்க முடியாத ஜீவசக்தியைப்பற்றிக் கூறிய அவர் என்னிடம் பின்வரும் செய்தியைக் கூறினார்:

''ஒரு முறை நான் உங்கள் பிரதேசத்துக்கு வந்திருந்த பொழுது—அதுவும் இருபதாம் ஆண்டுகளில்தான்—நான் போகிற வழியில் ஒரு தேனீ வளர்ப்புத் தோட்டத்தில் இறங்கினேன். உள்நாட்டுப் போர் அப்போதுதான் முடிந்திருந்தது; அந்தத் தேனீ வளர்ப்புப் பண்ணை நாசமாக்கப்பட்டிருந்தது; அதற்குக் காரணம் வெள்ளைப் படையினருக்கும் சரி, நமது சொந்த மக்களுக்கும் சரி, இனிப்பு என்றால் மிகவும் பிடித்தமாக இருந்திருக்க வேண்டும்...அந்தத் தேனீ வளர்ப்புப் பண்ணையின் உரிமையாளரான அந்தக் குஷியான கிழவர் என்னைச் சந்திப்பதற்காக வந்தார். 'என்ன, வாழ்க்கையெல்லாம் எப்படி இருக்கிறது?' என்று நான் அவரிடம் கேட்டேன். 'அருமையாக இருக்கிறது, மிக்கேல், இவானோவிச்!' என்று கூறினார் அவர். அதில் அத்தனை அருமையென்று கூறுவதற்கு என்ன இருந்தது? அவர் மட்டும் போரினால் நாசமடையவில்லையா? இதனை நான் அவரிடம் கேட்டதும், அவர் இவ்வாறு பதில் கூறினார்: 'அது எனக்கு நாசம் விளைவிக்கத்தான் செய்தது; என்றாலும் முழுமை யாக அல்ல. எனது நாற்பது தேனீக் கூடுகளில் ஒன்று தப்பிப் பிழைத்து விட்டது. இதற்குக் கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அந்தத் தேனீக் கூட்டில் உள்ள தேனீக்கள் நல்ல வலுவானவை. எனவே எனது அருமை விருந்தினருக்கு இப்போதேகூட நான் கொஞ்சம் தேனை வழங்கி உபசரிக்க முடியும், மூன்றாண்டுகளுக்குப் பின்னால் திரும்பவும் இங்கு வாருங்கள்; உங்களால் இந்தத் தோட்டத்தை அடையாளமே கண்டு கொள்ள முடியாது!' ''

விடைபெறும்போது நான் எனது நாவலின் முதல் பாகத்தை எப்போது முடிக்கக் கூடும் என்று எண்ணுகிறேன் என்பதைப் பற்றி மிக்கேல் இவானோவிச் என்னிடம் கேட்டார்; நான் உத்தேசமான தேதியை அவரிடம் சொன்னேன்.

''அப்படியென்றால், அதனைப் படிப்பதற்கு நான் உயிரோடிருப்பேன்'' என்றார் அவர்: ''என்றாலும், நீங்கள் அவசரப்பட்டு எழுத வேண்டாம்; மேலும் வாசகர்களான நாங்கள் எதை விரும்புகிறோம் என்பதையும் நம்பவும் கண்டு கொள்ளாதீர்கள். ஓர் எழுத்தாளரின் புத்தகம் சீக்கிரமே வெளிவர வேண்டும் என்று அவரை வற்புறுத்துவது எங்கள் வேலை; ஆனால் நீங்கள் எந்த மக்களுக்காக எழுதுகிறீர்களோ,

அந்த மக்களின் கவனத்துக்கு உரியதாகும் தகுதியைக் கொண்ட புத்தகத்தை உருவாக்க வேண்டியது உங்கள் வேலை. என்னதான் இருந்தாலும், அந்தப் புத்தகத்துக்குப் பதிலளிக்கக் கடமைப் பட்டவர்கள் நீங்கள்தானே தவிர, வாசகர் அல்ல! இதை என்றும் மறந்து விடாதீர்கள்!''

இன்று, இழப்பினால் ஏற்பட்ட துக்கமும் வேதனையும் என் இதயத்தில் இன்னும் குன்றுதிருக்கும் இந்த வேளையில், கலினினுடன் நான் நடத்திய கடைசி உரையாடல், என் மனத்தில் மீண்டும் தெள்ளத் தெளிவாக நினைவுக்கு வருகிறது. அந்தத் தேனீவளர்ப்புப் பண்ணைக் கிழவரோடு அவர் நடத்திய சந்திப்பு என் சிந்தனையைத் தூண்டியது: நமது நாடே ஒரு பெரிய தேனீக்கூடு போலத்தான் உள்ளது; யுத்தத்தால் நாசமான தனது பொருளாதாரத்தை மும்முரமாகப் புனரமைத்துக் கொண்டு, மகிழ்ச்சியோடு ஆக்கபூர்வமான நடவடிக்கையில் சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருக்கும் தேனீக் கூடு போலத்தான் உள்ளது...ஆண்டுகள் பல கடந்து செல்லும்; நமது வம்சாவளியினர் செஞ்சதுக்கத்துக்கு வந்து, நமது சகாப்தத்தின் மிகப் பெரும் மனிதரின் சமாதியின் முன்னால் தமது தலைகளைத் தாழ்த்தி வணங்கிச் செல்லும்போது, அவர்கள் தமது நாட்டின் சேவைக்கே தமது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தவரும், உலகில் மக்களின் ஆனந்த வாழ்க்கைக்கான லெனினது போராட்டத்தில் அவரது விசுவாசமிக்க தோழராக இருந்தவருமான மிக்கேல் இவானோவிச் கலினினின் சமாதி முன்பும் அன்பும் நன்றியுணர்ச்சியும் மிக்க உணர்ச்சிகளோடு கடந்து செல்வார்கள்.

1946

இலக்கியத்தில் இருபத்தைந்து ஆண்டுகள்

(இந்தச் சந்தர்ப்பத்தைக் கௌரவிக்கும் முகமாக
நடந்த கூட்டத்தில் ஆற்றிய உரை)

சோவியத் இலக்கியத்தில் இரண்டு போக்குகள் உள்ளன. சில எழுத்தாளர்கள் நடப்பு நிகழ்ச்சிகளைக் குறித்து மிகவும் துரிதமாக எழுதி விடுகிறார்கள்; அதேசமயம் மற்றவர்களோ நிலையான மதிப்புமிக்க படைப்புக்களை உருவாக்கப் பாடுபட்டுத் தமது புத்தகங்களை எழுதி முடிப்பதில் ஒப்பு நோக்கில் நெடுங் காலம் எடுத்துக் கொள்கின்றனர்.

மாபெரும் தேசபக்தப் போரின் போது, நாம் அனைவருமே நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்து மிகவும் துரிதமாக எழுதினோம்.

வாழ்க்கை நம்மிடம் அத்தகைய விரைவைக் கோரியது. நானும்கூட அப்போது விரைவாகத்தான் எழுதினேன். எனினும்கூட, வாசகர்கள் நான் எவ்வாறு எழுத வேண்டும் என்று விரும்பக் கூடுமோ அதைக் காட்டிலும் மிகவும் மெதுவாகவே எழுதும் உரிமையை நான் எனக்கு நானே வைத்துக் கொள்கிறேன்; ஏனெனில் இந்த மெதுவான போக்கு தரத்தினுல் ஈடுகட்டப்படும் என்று நான் நம்புகிறேன்.

எனது புத்தகங்கள் பல பதிப்புக்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன என்ற உண்மையே, முக்கியமான சமுதாய வளர்ச்சிப் போக்குகளை ''மெதுவான'' பணியின் மூலம் பிரதிபலித்துக் காட்ட முடியும் என்பதையே நிரூபிக்கிறது.

விரைவாக எழுதுவதன்மூலம் ஒருவர் மோசமான புத்தகங்களை உருவாக்கக்கூடும்; மெதுவாக எழுதுவதன் மூலம் நல்ல புத்தகங்களை உருவாக்க முடியும்.

சோவியத் இலக்கியத்தின் இடையருது வளர்ந்து வரும் செல்வாக்கையும் பிரபலத்தையும் பின்வரும் ஒரே உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம். அண்மையில் போலந்தில் விராக்லோவில் நடந்த கலாசார ஊழியர்களின் உலக சமாதான மாநாட்டில், அன்டிலெஸ்லிலிருந்து வந்திருந்த ஒரு பிரதிநிதி தம்மிடம் மிஞ்சியிருந்த கடைசி இரண்டு பவுன் நாணயங்களையும், டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற எனது நாவலின் மொழி பெயர்ப்பொன்றை வாங்குவதற்குப் பயன்படுத்தியதாக என்னிடம் கூறினர். நமது சோவியத் இலக்கியம் உலகின் தூராதொலை மூலைகளிலும் கூடப் புகுத்து விட்டது என்பதையே இந்தச் சம்பவம் காட்டுகிறது.

என்னதான் இருந்தாலும், சோவியத் யூனியனில் மட்டும்தான் எழுத்தாளர்களான நாம் படைப்பாக்கப் பணிக்குத் தேவையான எல்லா நிலைமைகளையும் பெற்றிருக்கிறோம். எனவே நாம் நன்முக எழுதித்தான் ஆக வேண்டும்.

நான் என் வாழ்க்கை முழுவதும் சோவியத் மக்களுக்குப் பணியாற்றியுள்ளேன்; இனியும் நான் எனது சர்வத்தையும் ஈடுபடுத்தி இந்த மக்களுக்கு என்றென்றும் பணியாற்றி வருவேன்.

செப்டம்பர், 1948

ஒரு வாழ்நெறி உரை

சோவியத் நூலாசிரியர்கள் தமது வாசகர்களுக்குச் செலுத்த வேண்டிய ஒரு நீடித்த கடனுக்கு ஆட்பட்டுள்ளனர்.

இரண்டு முற்றுப்பெறுத நாவல்களின் ஆசிரியரான நானும் கூட, அந்தக் கடனுளிகளில் ஒருவன் என்பதை மிகுந்த வருத்தத் தோடும் அந்தரங்கமான மனச்சங்கடத்தோடும் உணர்கிறேன்; எனினும் நான் கடனுளிகளில் ஒருவனே தவிர, கடனைச் செலுத்தத் தவறுபவர்களில் ஒருவனல்ல.

எங்கள் வசமுள்ள கலா சாதனத்தைக் கொண்டு நாங்கள் வாழ்க்கை வேகத்தோடு எட்டி நடை போட்டு வரவே முடிய வில்லை. எங்களது அதிக நேரம் பிடிக்கும் நுணுக்கமான வேலையின் காரணமாக நாங்கள் பின்தங்கி நிற்பதைத் தவிர வேறு வழியில்லாத வகையில், நமது நாடு கம்யூனிசத்தை நோக்கிச் செல்லும் அதன் முன்னேற்றத்தில், அத்தனை படு வேகத்தைப் பெற்றுள்ளது, அத்தகைய ராட்சச அடிகளை எடுத்து வைத்து முன்னேறிச் செல்லுகிறது என்பதே எங்களது ஒரே சால்ஜாப்பும் ஆறுதலும் ஆகும்.

நாங்கள் எங்களால் முடிந்தவரையில் அவசரம் அவசரமாகத் தான் வருகிறோம்; என்றாலும் முடிவு வரையிலும் மூச்சு வாங்கிக் கொண்டே ஓடி வர எங்களால் முடியவில்லை.

எனவே நிகழ்வது இதுதான்: எழுத்தாளர் மார்ச் மாதத்தின் மொட்டையான மரக்கிளைகளையும், வசந்த காலத்துக்காக முற்றி வீங்கி வரும் புதிய தளிர்களையும் மிகவும் சிரமப்பட்டு வருணித்துக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், அந்த மரமானது அதற்குள் தனது முதல் பசை பிடித்த சிறு இலைகளை வெளிக் காட்டிவிடும். இந்தக் காட்சியைக் கண்டு மலைப்பும், தமது சொந்த மந்தப் போக்கைக் கண்டு அதிர்ச்சியும் அடையும் அந்த எழுத்தாளர் அவசரம் அவசரமாக இலைகளை வருணித்து எழுதத் தொடங்குகிறார்; ஆனால் அதனை எழுதி முடிப்பதற்குள், அந்த மரமானது தனது அழகிய வசந்த கால மலர்களையெல்லாம் உதிர்த்து விட்டுக் காய் காய்க்கத் தொடங்கி விடுகிறது...

பெரிய நாவல்களை எழுதி வரும் எங்கள் விஷயத்தில் இப்படித்தான் நிகழ்ந்து விடுகிறது. சிறுகதைகள் விஷயத்தில் இப்படி நிகழ்வதில்லை; ஏனெனில் அவற்றுக்கு இயல்பாகவே குறைந்த முயற்சியே தேவைப்படுகிறது; அத்துடன் அவற்றை எழுதி முடிப்பதற்கு ஒப்புநோக்குக்கே இடமில்லாத வகையில் மிகவும் குறைந்த நேரமே பிடிக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில், தற்போது நான் கன்னி நிலம் உழப்பட்டது என்ற எனது நாவலின் கடைசிப் பாகத்தையும், அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற நாவலின் முதல் பாகத்தையும் ஏககாலத்தில் எழுதி வருகிறேன்.

உங்கள் அனுமதியோடு சொல்கிறேன்—நான் வாக்குறுதிகள் எதையும் வழங்கவில்லை. நாம் எதைப்பற்றி, எப்படி எழுதி வருகிறோமோ, அது பற்றிய நமது பொறுப்புணர்ச்சி நம்மை விட்டுப் போகாத வரையில், நாம் எழுதி முடிப்பதற்குரிய ஒரு காலக் கெடுவை நமக்கு நாமே நிர்ணயித்துக் கொள்ள முடியாது என்பதை நான் எனது சொந்தக் கசப்பான அனுபவத்திலிருந்தே அறிவேன்.

ஒரு நாவலை உருவாக்குவது என்பதைக் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பிடலாம். ஆனால் கட்டிட நிர்மாணத்தில் ஒவ்வொரு கட்டிட நிர்மாணியின் வேலைகளும் கடமைகளும் கண்டிப்போடு வரையறுக்கப்பட்டுள்ளன; ஆனால் ஓர் எழுத்தாளர் விஷயத்திலோ அவர் தம்மைத் தாமேதான் நம்பியிருக்க வேண்டியதாகிறது. கட்டிட நிர்மாணம் பொருள்களைச் சேகரித்துக் கொண்டு வர வேண்டியவரும் அவர்தான். மேலும் அவர்தான் மனைச்சிற்பியாகவும், கொத்தனாராகவும், இஞ்சினீயராகவும் இருக்கிறார். மேலும் துர்ப்பாக்கிய வசமாகப் பல சமயங்களில், கட்டிடத்தைக் கட்டி வரும்போதே, மனைச் சிற்பியின் திட்டங்களை ஏதோ காரணத்தினால் மாற்றியமைக்கவும் நேர்ந்து விடுகிறது; அவ்வாறு நேரும்போது கொத்தனார் ஏற்கெனவே கட்டி முடித்ததையெல்லாம் இடித்துத் தள்ள வேண்டியதாகி விடுகிறது. எனவே இத்தகையதொரு வேலையில் எவர்தான், எப்படித்தான், எந்தவொரு காலக் கெடுவை நிர்ணயிக்க முடியும்?

நான் கூறுவது தவறாக இருக்கலாம்; ஆனால் எந்த விதத்திலும் சுலபமான உழைப்பாக இல்லாத எழுத்தாளனின் பணியைப் பற்றி நான் நினைத்துப் பார்க்கும்போது நான் இவ்வாறே கருதுகிறேன்: நாம் நமது அறிவினாலும் நமது கரத்தினாலும் உருவாக்கப்பட்டு வரும் ''கட்டிடம்'' நம்பகமானதாக, உறுதியானதாக, நெடுங்காலத்துக்குப் பயன்படத் தக்கதாக இருக்கும் வரையிலும், அதைக் கட்டி முடிக்க எவ்வளவு காலம் பிடிக்க வேண்டுமோ அதைக் காட்டிலும் அதன் நிர்மாணத்துக்கு அதிகமான காலம் ஆகிவிட்டுப் போகட்டுமே.

மேலும், நமது புத்திக்கூர்மை படைத்த வாசகர் நமது புத்தகத்தை மறுநாளே மறந்து விடாமல் இருந்தால் (அவ்வாறு மறந்து விடும் நிகழ்ச்சிகளும் நிகழத்தான் செய்கின்றன), பின்னொரு சமயத்தில் அதனைத் திரும்பவும் படித்துப் பார்க்க வேண்டும் என்று உணர்வாரேயானால், மேலும் அதனைப் பற்றி இன்னும் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும் அவர் விரும்புவாரேயானால், ''பாரேன். இந்தப் பயல் நன்றாகத்தான்

எழுதியிருக்கிறான்; இது ஒரு நல்ல புத்தகம்தான்!'' என்று அவர் நூலாசிரியரைப் பற்றிக் கூறுவாரேயானால்—இதுதான் எழுத்தாளருக்கு மிகவுயர்ந்த தார்மிகமான மனநிறைவையும் கைம்மாறையும் கொடுக்கும்; ஏனெனில் அவருக்கு வாசகர் தான் தலையாய நீதிபதியாவார்.

அருகிலும் தொலைவிலும் உள்ள நமது வாசகர்கள், சோவியத் இலக்கியம் மற்றும் அதன் வளர்ச்சி ஆகியவற்றின் வருங்காலத்தைப் பற்றிச் சிந்தனை செய்து பார்க்கும்போது, சோவியத் எழுத்தாளர்கள் ஒரே ஒரு நோக்கத்தைத்தான்—நமது மக்களின், நமது மாபெரும் கட்சியின் நலன்களுக்காகப் பணிபுரிவது என்ற நோக்கத்தைத்தான், கொண்டுள்ளனர் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது.

1952

உக்ரேனிய மக்களே! உங்களுக்கு ஆனந்தம் கிட்ட வாழ்த்துகிறேன்!

தனது நினைவுச் சின்னங்கள், பூங்காக்கள், தோட்டங்கள், தனது எழில் மிக்க கட்டிடங்கள் மற்றும் வீதிகள் ஆகியவற்றோடு விளங்கும் புராதனமான கீவ் நகரத்தின் கம்பீரமான தோற்றத்தைக் கண்டு நான் மயங்கியுள்ளேன். கார்களும் மக்களும் தங்கு தடையற்ற பிரவாகம் போல் செல்லும் அந்நகரின் பிரதான வீதியான கிரெஷ்சத்திக் வீதி வியத்தகும் எழில் மிக்கதாக உள்ளது. புதிதாக வருபவரின் வியப்புற்ற பார்வையின் முன்னால், இரண்டு கீவ் நகரங்கள்—ஸ்லாவ் மக்களின் பிள்ளைத் தொட்டிலான கீவ், மற்றும் நமது கண் முன்னாலேயே அற்புதமாக விரிவடைந்து வரும் புதிய சோவியத் நகரமான கீவ் ஆகியவை—எழுந்து வருவது போல் தோற்றுகின்றன.

நமது இதயத்தின் அடியாழத்தையே தொட்டுலுப்பும் மந்திரக் கவர்ச்சியைக் கொண்ட இந்த நகரத்தின் மீது நாம் எவ்வாறு காதல் கொள்ளாமல் இருக்க முடியும்!

நீப்பர் நதிக்குச் செல்லும் சரிவுகளிலும், நதிக்கரைப் படிக்கட்டிலும், ஆற்றுக்கு மறுபுறத்தில், மிகமிகத் தொலைவில், அடிவானத்தையொட்டி எழுந்து நிற்கும் கானகத்தின் அந்த இருண்ட வரி வடிவங்களிலும்தான் எத்தனை இயம்பப்படாத எழில் குடி கொண்டிருக்கிறது! எனது சொந்த அமைதியான டான் நதியைப் போலவே, மாபெரும் நீப்பர் நதியும் என் இதயத்துக்கு அருமை மிக்கதேயாகும்.

இப்போதோ, திறமைமிக்க கடின உழைப்பாளிகளான உக்ரேனிய மக்களின்பாலும், சோவியத் சோதரத் தேசங்களின்

நேசக் குடும்பத்தில் சேர்ந்து, தமது வருங்காலத்தை உருவாக்கி வரும், வாழ்க்கை, சமாதானம், உலகின் ஆனந்தம் ஆகியவற்றின் பேரால் உழைத்து வரும் அந்த மக்களின்பாலும், என்னுள் இன்னும் மேலான பாசம் வளர்வதை நான் உணர்கிறேன்.

உக்ரேனியர்கள் உள்ளார்ந்த நகைச்சுவையின் ஒளியோடு கூடிய அன்பும் பாச உள்ளமும் படைத்தவர்கள்; அதே சமயம் அவர்கள் பலமும் துணிவும் மிக்கவர்கள். உக்ரேனின்பால் எனக்குள்ள பற்றுனது, என் தாய் ஓர் உக்ரேனியன், சேர்னி கோவ் பிராந்தியத்தைச் சேர்ந்த ஒரு விவசாயப் பெண்மணி என்ற உண்மையால் வலுவடைந்துள்ளது.

தன்மையில் சுயம்புவானதும் பலதிறப்பட்டதுமான உக்ரேனிய இலக்கியம், தன் வளர்ச்சியில் கணிசமான முன்னேற்றங்களைக் கண்டுள்ளது; நமது நாட்டில் மட்டுமல்லாது, அதன் எல்லைகளுக்கு அப்பால் மிகவும் தொலைவிலும் கூட அது தகுதி வாய்ந்த புகழைச் சம்பாதித்துள்ளது. இது நான் ஒரு விருந்தினனாகக் கலந்து கொண்ட உக்ரேனிய எழுத்தாளர்களின் மூன்றாவது காங்கிரஸில் தெள்ளத் தெளிவாகப் புலனாகியுள்ளது.

கீவ் நகரில் நான் சந்தித்த அந்த உக்ரேனிய எழுத்தாளர்கள் என்னை மிகவும் இனிய விதத்தில் கவர்ந்து விட்டனர். முக்கியமாக, ஒப்பு நோக்கில் இளம் எழுத்தாளர்களாக இருப்பவர்களில், தமக்கே உரிய தனித்தன்மையோடு கூடிய பல நம்பிக்கையூட்டும், திறமை படைத்த எழுத்தாளர்கள் உள்ளனர். உண்மையான நாவலாசிரியரான ஓலெஸ் கொஞ்சார், வாதிம் சோப்கோ, திறமை படைத்த நாடகாசிரியரான வாஸிலி மிங்கோ, மிகவும் இளம் கவிஞரான திமித்ரி பாவ்விச்கோ, சக்திமிக்க நகைச்சுவை எழுத்தாளரான ஓஸ்தாப் விஷின்யா ஆகிய பல எழுத்தாளர்களை நான் பெயர் சொல்லிக் குறிப்பிட முடியும்.

உக்ரேனிய இலக்கிய விமர்சனத்தைப் பொறுத்தவரையில், அது குறைபாடுகள் உள்ளதாகவே இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு கூற வேண்டியுள்ளது. உக்ரேனிய விமர்சகர்கள் தமது ரஷ்யச் சகாக்கள் புரிந்து வரும் அதே தவறுகளுக்கு உள்ளாகிறார்கள். எனது பார்வையின்படி இதற்கான காரணம், விமர்சகர்களிற் பலர் மேலோட்டமான மதிப்புரையாளர்களின் போக்கை வளர்த்துக் கொள்ளவே முனைகின்றனர், அதற்கு மேல் செல்ல அவர்கள் முற்படுவதில்லை என்பதுதான்.

நம்பிக்கைக்கு இடமுள்ள விமர்சகர்களைத் திறமையோடு தேர்ந்தெடுத்து அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்; அவர்களது

பணிக்குத் தேவையான எல்லா நிலைமைகளும் உருவாக்கப்பட வேண்டும். உதாரணமாக, ஒவ்வொரு சோவியத் கட்டிட நிர்மாண ஸ்தாபனமும் பல்வேறு வேலைகளுக்கும் அத்தியாவசிய மான சகல வசதிகளையும் தன் வசம் கொண்டுள்ளது என்பதை எல்லோரும் அறிவோம். அவ்வாறு இருக்கும்போது, சோவியத் இலக்கிய விமர்சகர்கள் உண்மையிலேயே பயன்மிக்க, காரி யார்த்தமிக்க பணியைச் செய்யக்கூடிய விதத்தில், அவர்களுக் குத் தேவையான நிலைமைகளை ஏன் வழங்கக் கூடாது? இந்த நெடுங்காலப் பிரச்சினையைத் தீர்த்தாக வேண்டிய காலம் வந்து விட்டது என்று நான் கருதுகிறேன். எனது அபிப்பிராயத்தின் படி, நாடக ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியங்களைக் குறைத்து, அதன் மூலம் மிச்சமாகும் தொகையைக் கொண்டு ஓர் உறுதியான நிதியை விமர்சகர்களுக்காகத் திரட்டி உருவாக் கலாம்.

ரஷ்ய மொழியிலும் சோவியத் யூனியனது மக்களின் பிற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படும் உக்ரேனிய இலக்கியங் களின் மொழி பெயர்ப்புக்கள் விஷயத்திலும் எல்லாம் நன்முக இருந்து விடவில்லை. எங்களுக்கு வழங்கப்படும் மொழி பெயர்ப் புக்களில் உக்ரேனியப் பேச்சு வழக்கின் இனிமை இல்லாமற் போய்விடுகிறது.

உக்ரேனிய எழுத்தாளர்கள் நமது நாட்டுக்கும் முற்போக் கான மனிதகுலம் அனைத்துக்கும், பல அற்புதமான புதிய நாவல்களை இன்னும் வழங்கி வருவார்கள் என்று உங்கள் எல்லோரையும் போலவே நானும் திடமாகக் கருதுகிறேன்.

இந்த வருகையின்போது நான் கீவையும் அதன் சுற்றுப் புறங்களையும்தான் பார்த்தேன்; ஆனால் ஏனைய உக்ரேனிய நகரங் களையும் நான் சுற்றிப் பார்க்க இயலாமற் போய் விட்டதே என்பது குறித்து எனக்குப் பெரிதும் வருத்தம்தான். என்றாலும் கீவ் நகரம்தான் உக்ரேனின் அச்சாணி என்பதும் உண்மைதான். உக்ரேனிய மக்களின் செழித்தோங்கி வளரும் வாழ்க்கையையும் கலாசாரத்தையும், மற்றும் அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பின்னால் கடந்த முப்பத்தி ஏழு ஆண்டுகளில் அது கடந்து வந்துள்ள மகோன்னதமான மார்க்கத்தையும், அந்நகரம் நீலக் கண்ணாடியில் பிரதிபலிப்பதுபோல் பிரதிபலித்துக் காட்டுகிறது

உக்ரேனே! உனக்கு எனது ஆழ்ந்த மரியாதை வணக்கங்கள். உக்ரேனிய மக்களே! உங்களுக்கு ஆனந்தம் கிட்ட வாழ்த்து கிறேன்.

1954

சோவியத் எழுத்தாளர்களின் இரண்டாவது அகில-யூனியன் காங்கிரசில் ஆற்றிய உரை

பாய்ந்தோடும் ஆறுகள் மலிந்த மலைநாட்டில் பிறந்த மிகவும் தொன்மையான பழமொழி ஒன்று இவ்வாறு கூறுகிறது: ''ஆழமில்லாத ஆறுகள்தான் அதிகச் சத்தம் போடும்.''

விவாதங்கள் கடுமையாகவும், பேச்சுக்கள் சவால் விடுவதாகவும் இருந்த பிராந்திய மற்றும் வட்டார எழுத்தாளர்களது கூட்டங்களின் ஆரவாரமும் பரபரப்பும் முடிந்து விட்டன. குடியரசு மட்டத்தில் நடந்த கூட்டங்கள் மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்தன. இப்போது நடைபெறும் நமது இந்த அகில-யூனியன் காங்கிரசை, ஏராளமான பெரிய, சிறிய உபநதிகளையெல்லாம் தன்னுட் கிரகித்துக் கொண்டு, உண்மையிலேயே கம்பீரத்தோடு—எனது கருத்தின்படி, கள்ளத்தனமான அமைதியோடு—செல்கின்ற ஒரு மகாநதிக்கு ஒப்பிடலாம்.

பேச்சாளர்களின் முகங்கள் நிர்விசாரமாக உள்ளன; அறிக்கைகள் முற்றிலும் சம்பிரதாய பூர்வமாக உள்ளன; நமது எழுத்தாளர்கள் மிகப் பெரும்பாலோரின் பேச்சுக்கள் கவனத்தோடு அளந்து பேசுபவையாக உள்ளன; வாதப் பிரதிவாதங்களில் ஆண்களைக் காட்டிலும், பொதுவாக மிகவும் ஆத்திரமடைந்து பேசக்கூடிய நமது பெண் எழுத்தாளர்களும் பெண் கவிஞர்களுக்கும் கூட—ஒரு சில மிகவும் அரிதான விதிவிலக்குகளைத் தவிர—பெரும்பாலும் வாய்மூடி மௌனியாகவே இருக்கின்றனர். சண்டை பிடிப்பதில் கெட்டியான நமது அருமைப் பெண்மணிகள் தமது வாய்ச் சொற்களின் ஆற்றலையெல்லாம் பூர்வாங்கக் கூட்டங்களிலேயே செலவழித்துத் தீர்த்து விட்டு, இப்போது பேசுவதற்கு எதுவும் இல்லாது போய் விட்ட உணர்வைப் பெற்றிருக்கிறார்களா? அல்லது காங்கிரசின் முடிவுவாக்கில் ஒரு புதிய வார்த்தைத் தாக்குதலைத் தொடுப்பதற்காகத் தமது சக்தியைப் பாதுகாத்து வருகிறார்களா? தெரியவில்லை. நமது பெண்களை,—அவர்கள் எழுத்தாளர்களாக இருந்தாலும் கூட—நம்மால் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. அவர்கள் அடுத்தாற்போல் என்ன செய்யக் கூடும் என்று சொல்லவே முடியாது. குறைந்த பட்சம் என்னால் அதை என்றுமே சொல்ல முடியாது.

இது காங்கிரசின் ஏழாவது நாள்; என்றாலும் இன்னும் சூழ்நிலை மாறுமலே இருந்து வருகிறது. வாலெந்தின் ஓவெச்கின்னின் பேச்சு ஒன்று மட்டும்தான் ஏதோ சிறிய,

எனினும் செத்துப் பிறந்த உற்சாகத்தை எழுப்பியது. இருபது ஆண்டுகளாக நம்மைத் தொல்லைப்படுத்தி வந்த பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு விட்டன என்றோ, இப்போது நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமது சாதனைகளையும் தவறுகளையும் தொகுத்துக் காண்பதுதான் என்றோ, இந்தத் தவறுகளைக் கருத்தில் ஏற்றுக்கொண்டு விட்டு, புதிய விதிகளை ஏகமனதாக நிறைவேற்றி முடித்துவிட்ட காரணத்தால், நாம் மனப்பாரம் ஏதும் இல்லாமல் இனி பேனுவை மீண்டும் எடுத்து எழுதத் தொடங்க வேண்டியதுதான் என்றோதான் இதற்கு அர்த்தமா என்ன? நிச்சயமாக இல்லை.

இந்தக் காங்கிரசில் நிலவி வரும் பேரமைதியை—இரண்டு அல்லது மூன்று பேச்சாளர்களால் மட்டும் சற்றே கலைக்கப்பட்ட பேரமைதியைச்—சீர்குலைப்பதை நான் வெறுக்கிறேன்; என்றாலும் கூட, நமது இலக்கியத்தைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பதையும், நம் அனைவரும் கவலைப்பட வேண்டிய விஷயம் என்ன என்பதையும் பற்றி, உங்கள் அனுமதியோடு, சுருக்கமாக வேனும் பேச விரும்புகிறேன்.

நமது பொதுவான சாதனைகளைப்பற்றி இங்கு எவ்வளவோ கூறப்பட்டுள்ளது. நமது பல—தேசிய இன இலக்கியம் கடந்த இருபது ஆண்டுகளில் உண்மையிலேயே பெரும் பயன்களை ஈட்டியுள்ளது என்பதையும், இலக்கிய அரங்கில் பல திறமை மிக்க எழுத்தாளர்கள் பிரவேசித்துள்ளனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. இவ்வாறெல்லாம் இருந்த போதிலும், கவர்ச்சியற்ற, மட்டமான, சுவையற்ற இலக்கியப் பிரவாகம் இலக்கியச் சஞ்சிகைகளின் பக்கங்களிலிருந்து தொடர்ந்து பொங்கி வழிந்து, சந்தையில் பெருக்கெடுத்து ஓடத்தான் செய்கிறது.

ஓர் உறுதியான அணையைக் கட்டுவதன் மூலம் இந்த இருண்ட சேற்றுப் பிரவாகத்தைத் தடுத்து நிறுத்த நாம் கூட்டாக முயற்சிகளை மேற்கொள்வதற்குக் காலம் வந்து விட்டது; இல்லாவிட்டால், நமது காரியார்த்தமிக்க எழுத் தாளர்கள் அதிகமான காலத்தையும் முயற்சியையும் செல விட்டுச் சம்பாதித்து வைத்திருக்கின்ற நமது வாசகர்களின் மதிப்பை, நாம் இழந்துவிடக்கூடிய ஆபத்திலேயே இருப்போம்.

இலக்கியத் துறையில் இப்போதுதான் பிரவேசித்துள்ள, ஒவ்வொரு புத்தகத்தோடும் நன்கு முன்னேறி வருகின்ற இளம் எழுத்தாளர்கள் விஷயத்தில் இது இயல்பாகவே எந்தவிதத் திலும் பொருந்தாது. மாறாக, தமது படைப்பின் பாலும், தமது வாசகர்களின்பாலும் கொண்டிருந்த மதிப்பை இழந்து

விட்டு, சண்காண வாடி வதங்கிக் கொண்டும் கீழ்நோக்கிச் சரிந்து கொண்டும், திறமை வாய்ந்த விற்பன்னர்கள் என்ற நிலையிலிருந்து வெறும் கூலிக்கு மாரடிக்கும் எழுத்தாளர்களாக மாறி வரும் பிரபல நூலாசிரியர்களுக்கே இது பொருந்தும்.

கடந்த ஆண்டுகளை—கடந்த ஆண்டுகள் என்பதை, நாம் யுத்தத்துக்குப் பின்னால் கழிந்துள்ள கால கட்டத்தைத்தான் அர்த்தப்படுகிறோம் என்றால் அந்தக் கால கட்டத்தை—நாம் திரும்பிப் பார்ப்போம். யுத்த காலத்தில் இயல்பாகவே எழுத்தாளர்களில் பெரும்பாலோர், நெடுங்காலம் சிரமப்பட்டுச் சிந்தித்து உருவாக்கக்கூடிய கதை நிகழ்ச்சிகளைக் கொண்ட பெரிய நாவல்களை, கஷ்டப் பிரசவத்தின் மூலம் பெற்றெடுக்கும், மாசு மருவற்ற நடையழகும், செம்மையாக மெருகூட்டப் பெற்ற மொழிநயமும் மிக்க புத்தகங்களைப் பற்றிச் சிந்திக்கவும் கூட முடியவில்லை. போர்க் காலத்தில் எழுத்தாளரின் பேனா ஓர் ஆயுதமாக விளங்கியது: உருவச் செம்மையைப் பற்றிக் கவலைப்படுவதற்கே நேரம் இருக்கவில்லை. எழுத்தாளர்களுக்கு ஒரே ஒரு கடமை மட்டும்தான் இருந்தது; அதாவது எதிரியை நேராகச் சென்று தாக்கவும், நமது போர் வீரர்களுக்கு ஆதரவு வழங்கவும், எதிரியின்பால் கொண்டிருந்த சுட்டெரிக்கும் பகைமையுணர்வையும், தமது தாயகத்தின்பால் கொண்டுள்ள உணர்ச்சி வேகமிக்க அன்பையும் சோவியத் மக்களின் இதயங்களில் கொழுந்துவிட்டு எரியச் செய்யவும் கூடிய அத்தகைய உண்மையான நோக்கத்தைத் தமது பேனாவுக்கு வழங்குவதுதான் அந்தக் கடமையாக இருந்தது. இந்தக் கடமையை எழுத்தாளர்கள் நன்முகச் சமாளித்து முடித்தனர் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் போருக்குப் பின்னால், நமது எழுத்தாளர்களில் மிகப் பலர், தாம் அதற்கு முன் மேற் கொண்டிருந்த அதே வேகத்திலேயே தொடர்ந்து செயல் பட்டனர்; கவனமே இல்லாமலும், அவசர கோலத்திலும் தொடர்ந்து எழுதித் தள்ளினார்கள்; இதன் விளைவாக ஏராளமான புத்தகங்களின் கலைத்தரம் பெரிதும் குறைந்து போய் விட்டது. யுத்த காலத்தில் நம்மை மன்னிப்பதற்கு வாசகர் தயாராயிருந்ததற்கான விஷயம், போருக்குப் பின்னரும் செல்லுபடியாகாது. மேலும், ஃபதயேவ், ஃபெதின், ஆயுஜோவ், பாவ்லெங்கோ, கிளாத்கோவ், லியானோவ், பவுஸ்தோவ்ஸ்கி, உப்பித்ஸ், துவர்தோவ்ஸ்கி, யாகுப் கோலாஸ், கொஞ்சார், நெக்ரசோவ் ஆகியோரும் மற்றும் சிலரும் எழுதிய நூல்களான, உண்மையிலேயே திறமைவாய்ந்த, யுத்தப் பிற்கால இலக்கியங்கள், இலக்கியக் கருச்சிதைவுகள் என்றே சரியாகச் சொல்லக்

கூடிய முயற்சிகளின் படுமோசமான, தரக்குறைவான தன்மையை மேலும் துலாம்பரமாக எடுத்துக் காட்டின.

நமது புத்தகங்களின் தரம் பொதுவாக வீழ்ச்சியடைந்துள்ளதற்கு, யுத்தக் காலத்தில் வளர்க்கப்பட்டுவந்த அவசர கோலப் பழக்கம் ஒன்று மட்டுமே காரணம் அல்ல அல்லது பிரதானக் காரணம் அல்ல என்பதைச் சொல்லத் தேவையில்லை.

எழுத்தாளர்கள் மத்தியில், தரங்களின் விஷயத்தில் திகைப் பூட்டுவதாகவும், முற்றிலும் விவேகத்துக்குப் பொருந்தாத தாகவும் ஏற்பட்ட வீழ்ச்சியும், விமர்சகர்கள் மத்தியில் கையாளப் பட்ட அளவுகோல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் பிரதானக் காரணங்களில் ஒன்று என்பதே என் கருத்தாகும். எழுத்தாளர்கள் தமது தோழர்களின்—சுமாரான நாவல்கள் இருக்கட்டும்—நிச்சயமாகப் படுமோசமான நாவல்கள் வெளிவந்த சமயத்திலும்கூட, வியப்பூட்டும் அலட்சியத்தோடும், முற்றிலும் உணர்ச்சியற்ற முகபாவத்தோடும், அவற்றைக் கண்டும் காணாததுபோல் ஒதுங்கிச் சென்றனர். நமது கண்டிப்புக் குறைந்த வாசகர்களின் உள்ளத்தில் மட்டமான ரசனைச் சுவைகளை வளர்க்கும், நமது இளம் மக்களைக் கெடுக்கும், தமது மதிப்பீடுகளில் கண்டிப்பானவர்களாகவும் விட்டுக் கொடுக்காதவர்களாகவும் உள்ள தகுதிமிக்க வாசகர்கள் மத்தியில் இலக்கியத்துக்கு ஒரு கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொடுக்கும் குப்பைகள் வெளிவருவதை எதிர்த்து, அவர்கள் கோபாவேசத்தோடு வாய்திறந்து பேசவில்லை.

நல்லது. சில விமர்சகர்கள் விஷயத்திலோ, நிலைமைகள் இன்னும் மோசமாகவே இருந்தன. மதிப்புமிக்க எழுத்தாளர்—அதிலும் பரிசு வேறு பெற்ற எழுத்தாளர்—ஒருவரால் எழுதப் பட்ட ஒரு கழிசடையான புத்தகம் வெளியிடப்பட்டால், விமர்சகர்களில் மிகப் பலர், இந்தக் கீழ்மையைக் கண்டும் முகம் கோணுமல் இருந்தனர்; மிகப் பல சமயங்களில் அவர்கள் பெரும் மனச் சங்கடத்தோடு வெறுமனே முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டனர். வாசகப் பெருமக்கள் சமயங்களில் உண்மையிலேயே ஒரு நம்புதற்கரிய திடீர் மாற்றத்தை—அதாவது ''உக்கிரமான விஸ்ஸாரியன்''*களாக இருந்த இவர்கள், திடீரென்று வெட்கத்தால் சிவந்து போகும் ஆரஞ்சுகளாக மாறிவிட்ட அற்புதத்தைக்—கண்டனர். சிலர் அவமானத்தால் மௌனமாக உள்ளுக்குள் எரிந்து கொண்டிருந்தனர்; அதே சமயம் மற்றவர்களோ, தமது தூய பண்பை

* இங்கு குறிப்பிடப்படுவது தமது விட்டுக் கொடுக்காத விமர்சனப் போக்குகளுக்குப் பெயர் பெற்ற பிரபல ரஷ்ய விமர்சகரான விஸ்ஸாரியன் பெலின்ஸ்கி (1811—1848) ஆவார்.

யெல்லாம் மறந்துவிட்டு, கொஞ்சம் ''ஆதாயம்'' தேடிக் கொள்ளத் தீர்மானித்து, அந்தப் புகழ்பெற்ற எழுத்தாளரைப் புகழ்ந்து தள்ளவும், சற்றேனும் தகுதியற்ற அளவுக்கு மீறிய புகழ்மாலைகளை அவர்மீது வாரிப் பொழியவும் முற்பட்டனர். மேலும், ஒரு தரக்குறைவான புத்தகத்தை எழுதியதற்காக ஓர் இலக்கிய விற்பன்னருக்குக் கிடைக்கவேண்டிய உரிய மரியாதையோடு கூடிய, ஒரு முழுமையான, எந்தவிதமான சலுகைகளோ அல்லது கட்டுப்பாடுகளோ காட்டாத, ஒரு விமர்சன ரீதியான சரியான கட்டுரையையேனும், நமது பத்திரிகைகள் என்றேனும் வெளியிட்டதுண்டா? இல்லவே இல்லை. இது ஒரு பரிதாபத்துக்குரிய விஷயம். பாதிக்கப்பட முடியாத உரிமையை அனுபவிக்கும் எந்த நபர்களையும் நாம் கொண்டிருக்கவும் முடியாது; கொண்டிருக்கவும் கூடாது.

அத்தகைய கட்டுரைகள் எழுதத்தான் பட்டன என்றும், ஆனால் விமர்சகர்களின் கட்டுப்பாட்டுக்கு மீறிய காரணங்களால் அவை வெளியிடப்படவில்லை என்றும் சிலர் ஆட்சேபித்துக் கூறலாம். உள்நாட்டுப் போர் ஆண்டுகளின்போது, தொழிலாளர் விவசாயிகள், ''சோவியத் ஆட்சி எங்கள் கைகளில் உள்ளது'' என்று கூறுவது வழக்கம். இன்று நாமும் இவ்வாறு கூறுவதற்கு நமக்கு எல்லா உரிமையும் உண்டு: ''சோவியத் இலக்கியம் எங்கள் கைகளில்தான் உள்ளது.'' மேலும், ரையூரிகோவ் போன்ற பயந்தாங்கொள்ளிப் பிறவிகள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக இருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு விட்டுக் கொடுக்காத, துணிவுமிக்க, நமக்கு அவசரமாகத் தேவைப்படுகின்ற விமர்சனக் கட்டுரைகளும், அதிக அளவில் வெளிவரும்.

வாசகர்களின் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குமாறு லித்தரத்துர்னயா கெஜத்தா பத்திரிகைக்குப் பணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பத்திரிகை நமது இலக்கியத்துக்கு ஒரு திறவுகோல்; அதனை ஒரு தலையான விருப்பு-வெறுப்பு இல்லாத முறையில் பரிசயம் செய்து கொள்வதற்கான சாதனம் அது. ஆனால், இலக்கிய விமர்சனத் துறையில் தாம் பெற்றுள்ள இந்தப் பதவி உயர்வுக்காகத் தோழர் சிமனேவுக்குப் பெரிதும் கடன் பட்டுள்ளவரும், தமது போஷகரை ஏதோ சூரியன் போலக் கருதியே அவரைப் பார்ப்பவரும், அந்தக் கண்ணைப் பறிக்கும் ஒளியை ஏறிட்டுப் பார்க்கமாட்டாமல் உண்மையில் தமது கண்களை மூடிக் கொள்பவருமான ஒரு நபரின் தலைமையில், அந்தப் பத்திரிகை இருந்து வரும்போது அது எவ்வாறு ஒரு தலையான விருப்பு—வெறுப்பற்று இருக்க முடியும்?

வருங்காலத்தைப்பற்றி நினைத்துப் பார்த்து, நமது யூனியனுக்கு எத்தகைய அரசியல் தலைவர் அமைய வேண்டும் என்று நாம் பேச முனையும்போது, நம்மில் பலரும் தோழர் பொலிக்கர்ப்போவை நன்றியுணர்வோடு வருத்தத்தோடும் நினைவு கூர்கிறோம்: நன்றியுணர்வோடு நினைவு கூர்வதற்குக் காரணம், எந்தவிதமான கோஷ்டிகளோடும் தாம் சேராதிருந்த தன்மையினால் அவர் நமது இலக்கியத்தின் ஒட்டு மொத்தமான வளர்ச்சிக்கு எவ்வளவோ பணியாற்றினார் என்பதேயாகும்; அவரை வருத்தத்தோடு நினைவுகூர்வதற்குக் காரணம், நமது பெரும் துர்ப்பாக்கிய வசமாக, நமது மௌன சம்மதத்தோடு, எழுத்தாளனின் திறமை, சதிகாரனின் திறமை ஆகிய இரு திறமைகளையும் மனமுவந்து ஒருங்கிணைக்கும் அந்த இலக்கிய ஆண் பெண் இளவட்டப் பிள்ளைகளால், அவர் இறுதியாக ''உயிரோடு தின்று தீர்க்கப்பட்டார்'' என்பதேயாகும். இந்த இளவட்டங்கள் எழுதிக் கனைத்து ஓய்வு பெறும் சமயங்களில் சூழ்ச்சிகளில் இறங்குகிறார்கள். அந்தோ! அவர்கள் பெரும்பாலும் தமது முதல் திறமையில் பெறும் வெற்றியை காட்டிலும், இரண்டாவது திறமையிலேயே அபார வெற்றி காண்கின்றனர்.

லீத்தரத்துர்னயா கெஜத்தாவுக்கு, எந்தவொரு கோஷ்டியையும் அல்லது கோஷ்டிச் சேர்க்கைகளையும் சேராத ஓர் ஆசிரியரே, சோவியத் இலக்கியத்துக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள, அதன் தலைமைப் பூசாரிகளுக்கு—அவர்கள் சிமனேவ், ஃபதயேவ், இரென்பர்க் அல்லது ஷோலகோவ் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும், அவர்களுக்குத்—தம்மை அர்ப்பணித்துக் கொள்ளாத ஒரு நபரே தேவை. நமது பத்திரிகையின் ஆசிரியர் இலக்கிய விஷயங்களில் துணிவும் உறுதிப்பாடும் மிக்கவராக, அதற்கும் மேலாக அவர் முற்றிலும் நேர்மை மிக்கவராக இருந்தாக வேண்டும். தோழர்களே, அத்தகைய ஆசிரியரைப்பற்றி நாம் கனவு கண்டால் மட்டும் போதாது. அத்தகைய ஆசிரியர் ஒருவரை நாம் கோரியாக வேண்டும். அவ்வாறு கோருவதற்கான சட்டபூர்வமான, மறுக்க முடியாத உரிமை நமக்கு உண்டு.

மீண்டும் விமர்சகர்கள் விஷயத்துக்கு வருவோம்; இவர்கள் ஒரு நடுத்தர எழுத்தாளர், அல்லது பிரபலமடையாத அல்லது அரும்பி வரும் எழுத்தாளர் ஒருவரின் பலவீனமான கதையொன்று அச்சில் வெளிவரும்போதே மீண்டும் உயிர்த்தெழுகிறார்கள் என்றே கூறலாம். இவ்வாறு நிகழும்போது, நமது விமர்சகர்கள் தமது சக எழுத்தாளர்களின் ஆடைகளை மீண்டும் உரிந்து விடுகின்றனர்—இந்த உருவகத்தைப் பயன்படுத்துவதற்காக என்னை மன்னித்து விடுங்கள்—பின்னர் அவர்களது

உணர்ச்சிமயமான உச்சஸ்தாயிக் குரல்கள் உடனடியாக் அத்தாட்சிமிக்க கனத்த, காத்திரமிக்க குரல்களாக மாறி விடுகின்றன. இதன்பின் அவர்கள் தமது வலிமையையெல்லாம் காட்டி ஆடிப்பாடித் தீர்த்து விடுகிறார்கள்; இதனால் ரையூரிகோவும் கூட, வொரோவ்ஸ்கி வீதி*யிலிருந்து வரும் குரல் தம்மை அதட்டிக் கேட்குமே என்ற அச்சம்கூட இன்றி, அவர்களது கட்டுரைகளை மகிழ்ச்சியோடு அச்சிடவும் செய்வார்; இதன்பின் விமர்சகரும் உண்மையிலேயே தமது ஆத்திரத்தையெல்லாம் கொட்டித் தீர்த்து, தயவு காட்டும் கேலி வார்த்தைகளையும் விஷமத்தனமான நையாண்டிகளையும் பிரயோகிக்கும் தமது திறமையையும் அற்புதமாகக் காட்டித் தீர்த்துவிட முடியும்.

புகழ் பெற்ற எழுத்தாளர்களுக்கு அப்போதுதான் பூசிவிட்ட வாசனைத் தைலத்துக்கும் களப கஸ்தூரிகளுக்கும் பதிலாக, விமர்சகர்கள் வேறெருரு பாத்திரத்திலிருந்து நறுமணமே இல்லாத வேறெருரு திரவத்தை அள்ளி எடுத்து, அதனைப் பரிசு பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படாத, அதனால் புகழ்பெற்ற எழுத்தாளர்களாக இல்லாத, அந்த அப்பாவிப் பிறவிகளின் தலைமீது தாராளமாகக் கொட்டித் தீர்த்து விடுகின்றனர். சமயங்களில் அந்த அப்பாவிப் பிறவி தமக்குக் கிடைத்த முதல் அடியிலேயே தலை கிறுகிறுத்து மயங்கிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், அடுத்த விமர்சகர் அவரை மீண்டும் தாக்குவதற்காக, அவருக்குப் பின்னால் கையில் தடியோடு அவரை நெருங்கியும் வந்து கொண்டிருப்பார்.

மேலும், இங்கு பேசிய பலரும், நமது ''இலக்கியத் தோட்டா உறை''யைப் பற்றி—நமது ஐந்து அல்லது பத்து தலையாய எழுத்தாளர்களைப் பற்றிப்—பேசினார்கள். தோழர்களே, பழைய போர் வீரர்களான நாம் நமது ஆயுதத் தளவாடங்களைச் சரிபார்த்துக் கொள்வதற்கு நேரம் வந்துவிடவில்லையா? தோட்டா உறையிலேயே தோட்டாக்களை நெடுங்காலம் வைத்திருந்தால், அதிலும் முக்கியமாக, மழைக் காலத்தில், அல்லது பனியுருகும் காலம் எனப்படும் சேறும் நீரும் மிக்க பருவத்தில், அவ்வாறு வைத்திருந்தால், அவை நீறிப்போய்த் துருப்பிடித்துப் போய்விடும் என்பதை அறியாதவர்கள் நம்மில் யாரேனும் இருக்க முடியுமா? அப்படியென்றால், நாம் கெட்டுப் போன பழைய தோட்டாக்களை அகற்றிவிட்டு, தோட்டா உறைக்குள் புதிய, கெட்டுப் போகாத தோட்டாக்களை நிரப்பி

* வொரோவ்ஸ்கி வீதி: இங்குதான் சோவியத் எழுத்தாளர் யூனியனின் நிர்வாகக் குழு அலுவலகம் உள்ளது.

வைப்பதற்கும் காலம் வந்துவிடவில்லையா? இதனால் நான் பழைய தோட்டாக்களைத் தூக்கியெறிந்துவிட வேண்டும் என்று சொல்ல வரவில்லை; அவையும் பயன்படக்கூடும்; எனினும் அவற்றை ஒரு காரச் சத்துள்ள திரவத்தில் கழுவி எடுக்கவோ, அல்லது இதுவும் பயன்தராவிட்டால், அதனை உப்புத் தாளினால் தேய்த்துச் சுத்தம் செய்யவோ வேண்டியது அவசியம். கவலைப் படாதீர்கள். இதனால் அவற்றின் மேலுறை ஒன்றும் கழன்று வந்து விடாது. இந்தப் பழைய தோட்டாக்களையும் எக்காரணம் கொண்டும் புறக்கணித்துவிடக் கூடாது. ஏனெனில், என்னதான் இருந்தாலும், நம்மில் ஒவ்வொருவருமே தவருகச் சுட்டுவிடப் போவதில்லை. இதையும் நாம் உணர்ந்தாக வேண்டும்.

ஒரே ஒரு தோட்டா உறையை மட்டும் கொண்டுள்ள போர் வீரன் பரிதாபத்துக்குரிய போர்வீரன்தான். இத்தகைய அற்பமான ஆயுதத் தளவாடத்தைக் கொண்டு, அவன் போரில் என்றுமே வெற்றிபெற முடியாது. உங்கள் எல்லோரையும் போலவே, நானும் நமது தோட்டா உறைகளில் ஏராளமான தோட்டாக்கள் இருக்க வேண்டும் என்றும், அவசியம் ஏற்படும்போது எடுத்துக் கொள்வதற்கு வசதியாகப் பெட்டி களிலும் அதிகமான தோட்டாக்கள் இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். அவற்றைப் பாதுகாத்து வருவது நமது வாசகர் களின் பொறுப்பாகும். அவர்கள் ஒன்றும் கஞ்சப் பிறவிகள் அல்ல; எனினும் அதே சமயத்தில் அவர்கள் வீண்விரயத்தையும் அங்கீகரிப்பதில்லை.

மேலும் இங்கு இன்னொரு விஷயத்தையும் கூற விரும்பு கிறேன். "தலையாய" என்ற சொல், உண்மையிலேயே பிறருக்குத் தலைமை தாங்கிச் செல்லும் ஒருவருக்குப் பிரயோகிக்கும்போது அது முற்றிலும் சரியான பிரயோகமே. ஆனால், ஒரு காலத்தில் தலையாய எழுத்தாளராக இருந்த ஒருவர், இனியும் யாருக்கும் தலைமை தாங்கிச் செல்லாமல், வெறுமனே அவர் காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கும்போதும் இந்தச் சொல் பிரயோகிக்கப்படுகிறது. மேலும், அவர் ஏதோ ஒரு மாதம் அல்லது ஓராண்டு என்று இல்லாமல், உதாரணமாக, என்னைப்போல் அல்லது என்னையொத்த வேறு யாரையோபோல், பத்தாண்டுகள் அல்லது அதற்கு மேலும் என்றும் காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கிறார்.

தோழர்களே, ஒருவரைப்பற்றி இத்தகைய விஷயங்களைப் பேசுவது அத்தனை மகிழ்ச்சிக்குரிய விஷயமல்ல என்பதை நீங்கள் சட்டென்று புரிந்து கொள்வீர்கள்; என்றாலும், ஒருவர் பேசித் தானே ஆக வேண்டும்: சுயவிமர்சனம் என்பதுதான் உங்களுக்குத்

தெரியுமே. நல்லது, இப்படிப்பட்ட எழுத்தாளர் ஒரு புதிய வாசலின் முன்னால் ஓர் ஆட்டுக்கடா மாதிரி சட்டென்று நின்று, அங்கேயே நின்று கொண்டிருப்பார். எனவே அவர் ஒரு ஸ்தம்பித்து நின்றுவிட்ட எழுத்தாளராக இருக்கும்போது, அவரை எப்படி ஒரு தலையாய எழுத்தாளர் எனக் கூற முடியும்?

கட்சிப் பணியில் காரியங்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதை எல்லோரும் அறிவர். மற்றவர்களின் மதிப்பைப் பெற்ற ஒருவர், ஒரு தலையாய நபர், பிராந்தியக் கட்சிக் கமிட்டியின் செயலாளராக நியமிக்கப்படுவார். அவர் முதலாண்டில் ஏறத்தாழத் திருப்திகரமான முறையிலும், இரண்டாம் ஆண்டில் சுமாராகவும் பணியாற்றுகிறார். இவ்வாறு அவர் செய்தால், அவரைப் பதவியிலிருந்து நீங்கித் தமது வேலையைக் கற்றுக் கொண்டு வருமாறே, அவரிடம் பவ்வியமாகக் கூறப்பட்டு வருகிறது.

பழமொழி கூறுவதுபோல், ஒரு புனிதமான இடம் விரைவிலேயே பூர்த்தி செய்யப்பட்டுவிடும். அதே போல் இலக்கியத் ''தோட்டா உறை''யும் நிரப்பப்பட்டுவிடும். எழுத்தாளர்கள் அதனை நிரப்ப விரும்புகிறார்கள் என்ற காரணத்தினால் மட்டுமே, அவர்களே அதனை நிரப்பி விடுவார்கள் என்று அர்த்தம் அல்ல. இது விஷயத்தில் வெறும் விருப்பம் மட்டும் போதாது; அதற்கு மேலும் ஒன்று தேவை. தமது கலாசாரத்துக்காகவும், தமது மகிழ்ச்சிக்காகவும், கம்யூனிசத்துக்காகவும் போராட விரும்புகின்ற மக்களே, அதனை உண்மையான திறமை சாலியின் கைத்திறனோடு நிரப்பி முடிப்பார்கள்.

நமது புத்தகங்களின் தரம் வீழ்ந்து போயுள்ளதற்கு மற்றுமொரு காரணம், இலக்கியத்துக்குப் பரிசுகள் வழங்கும் முறையாகும்; வருந்தக்கூடிய விதத்தில் இன்றுவரை நிலைத்து நீடித்து வந்துவிட்ட ஒரு முறையாகும். இந்தப் பிரச்சினையைப் பற்றித் தோழர் ஓவெச்கின் விரிவாகப் பேசியுள்ளார். எனவே நான் மேற்கொண்டு சில வார்த்தைகள் கூறினாலே போதும். நேர்மையாகச் சொன்னால், இலக்கியப் படைப்புக்களை, பல பிரிவுகளாக, முதல்தர, இரண்டாம்தர, மூன்றாம்தரப் பிரிவுகளாகப் பிரிப்பது, எனக்கு ஒரு விலைப்பட்டியலைத்தான் நினைவூட்டுகிறது.

நல்லது. இந்த விலைப் பட்டியலில் இடம்பெறத் தகுதியற்றவையாகக் கொள்ளப்பட்ட நூல்களின் கதி என்ன? எந்தவொரு பரிசையும் பெறத் தவறிவிட்ட அத்தகைய நூல்களை நாம் என்னவென்று குறிப்பிடுவது? அவை என்ன குப்பையா? அல்லது அவை வேறென்ன? இது அபத்தமானது; இவ்வாறு

செய்தால் எழுத்தாளர்கள் தமக்குப் பெரும் தீங்கிழைக்கப்பட்டு விட்டதாக உணர்வார்கள். எனவே இந்த முறையே பயனற்றது; அதிலும், முக்கியமாக, பல நல்ல புத்தகங்கள் — திறமையும் அறிவாற்றலும் மிக்க புத்தகங்கள்—ஒரு பரிசை என்றுமே பெற்றதில்லையென்றாலும், சில சமயங்களில் பரிசு பெற்ற புத்தகங்களைக் காட்டிலும் அவற்றுக்கே, பெரும் கிராக்கி இருந்து வருவதைக் கருத்தில் கொண்டு பார்த்தால், இந்த முறை பயனே அற்றது என்பது விளங்கும்.

மேலும் இப்படியும் நிகழலாம். உதாரணமாக, ஓர் எழுத்தாளர் ஒரு சுமாரான நடுத்தரமான புத்தகத்தை எழுதுகிறார். தமது சொந்தத் திறமைகளைக் குறித்து அவருக்கு எவ்விதப் பிரமைகளும் இல்லை; எனவே அது ஓர் அபாரமான வெற்றியைப் பெறப்போகிறது என்றும் அவர் எதிர்பார்க்கவில்லை. தமது அடுத்த புத்தகம் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று அவர் கருதுகிறார். ஆனாலும் திடீரென்று அவரது புத்தகத்துக்கு அவர் ஒரு பரிசைப் பெற்று விடுகிறார். அது ஓர் இரண்டாம் பரிசுதான் என்பதும் உண்மையே. என்றாலும், அவர் முற்றிலும் நேர்மையான உள்ளத்தோடு, பரிசு வழங்கியவர்களைப் பார்த்து, ''சகோதரர்களே, என்ன காரியம் செய்கிறீர்கள்? எனக்கு அந்தப் பரிசைத் தர வேண்டாம். எனது புத்தகத்துக்கு அந்தத் தகுதி இல்லை'' என்று கூறுவார் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? இல்லவே இல்லை. ஒரு பேதைதான் அவ்வாறு கூறத் துணிவான். எனவே, அந்த எழுத்தாளர் பரிசை ஏற்றுக்கொள்கிறார். மேலும் விரைவிலேயே அவர் தாமும் சரி, பரிசுகளை வழங்கிய நபர்களும் சரி, தமது புத்தகத்தின் தகுதியைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டதாகவும், அதற்கு இரண்டாம் பரிசை வழங்கியிருக்கக் கூடாதென்றும், முதல் பரிசையே வழங்கியிருக்க வேண்டும் என்றும் எண்ணத் தொடங்கி விடுகிறார்.

இவ்வாறுதான் நாம் எழுத்தாளர்களையும் சரி, வாசகர்களையும் சரி, தவறான வழியில் செலுத்தி வருகிறோம்.

இந்த விஷயம் பற்றி நான் திட்டவட்டமாக எந்தவொரு யோசனையையும் இந்தக் காங்கிரசின் முன்வைக்கத் துணியவில்லை. என்றாலும், ஒரு விஷயம் தெளிவானது—கலை இலக்கியத்துக்கான பரிசுகள் பற்றிய இந்த முறையை, மறு பரிசீலனை செய்யக் கோரும் வேண்டுகோளாடு நாம் அரசாங்கத்தை அணுகியாக வேண்டும்; ஏனெனில், இப்போது நடைபெற்று வருவதைப் போலவே, காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றுவரக் கூடாது.

இந்த முறையின்கீழ்—இது தொடர்ந்து நீடித்து வருமானால்—நாமே விரைவில் தங்கத்துக்கும் பித்தளைக்கும் வித்தியாசம்

கண்டு கூற இயலாதவர்களாகி விடுவோம்; மேலும், முற்றிலும் குழம்பிப் போயுள்ள வாசகர், பரிசு பெற்ற எழுத்தாளர்களின் புத்தகங்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முனைந்து விடுவார்.

ஓர் உயர்ந்த பரிசை அசட்டையாக, அநாயாசமாக வழங்கி விடக் கூடாது; ஏனெனில் அவ்வாறு வழங்கினால், அது ஓர் உயர்ந்த பரிசாகவும் இல்லாது போய்விடும்.

இப்போதுள்ள பரிசளிப்பு முறை தொடர்ந்து இருந்து வந்தால், இன்னும் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர், நமது திறமையாளர்கள் சிலருக்கு என்ன நேரும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! கீர்த்தி மிக்க திறமைக்காக நாம் எல்லோரும் நேசித்து வரும் ஒரு பெண்மணி (நான் அல்லா கான்ஸ்தாந்தினோவா தரசோவாவைத்தான் குறிப்பிடுகிறேன்), யாராவது கைத்தாங்கலாகத் துணைக்கு வராமல், நடந்து செல்லக்கூட முடியாது; அவர் ஏற்கெனவே பெற்றுள்ள, இன்னும் பெறப் போகின்ற அத்தனை மெடல்களையும் அவர் சுமந்து கொண்டிருப்பார். தோழர் சிமனோவைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. கவிதை, சிறுகதைகள் போன்ற சில்லறை விஷயங்களைக் கணக்கில் சேர்க்காமல், அவர் ஆண்டொன்றுக்கு ஒரு நாடகத்தையும் ஒரு நெடுங் கவிதையையும் ஒரு நாவலையும் உற்பத்தி செய்து வருவார் என்று நாம் நிச்சயமாக அவரிடம் எதிர்பார்க்கலாம். இத்தனை மெடல்கள் என்ற கணக்கில் மாற்றினால், ஆண்டொன்றுக்கு மூன்று மெடல்கள் என்று அர்த்தம். ஏற்கெனவே சிமனோவ் இலக்கிய உலகின் பட்டத்துக்குரிய இளவரசனின் பெருமிதமிக்க அமுத்தலோடு, இந்த மண்டபத்தில் நடந்து திரிந்து கொண்டிருக்கிறார். பதினைந்தாண்டுக் காலத்தில் அவர் புகழை மிதமிஞ்சி உண்டு பெருத்து விடுவதன் காரணமாக, இரண்டு பக்கத்திலும் யாரேனும் கைத்தாங்கலாகத் துணைக்கு வந்தாலும் கூட, அவரால் நடந்து வரவே முடியாது; மாறாக, அவரை ஒரு சக்கர வண்டியில் வைத்துத்தான் தள்ளிக் கொண்டு வரவேண்டும்!

உண்மையிலேயே, இது பயங்கரமானது!

இப்போதே நமது பரிசுபெற்ற எழுத்தாளர்கள் பலரும், நம்மில் அச்சத்தை எழுப்பாவிட்டாலும், நடுக்கத்தை எழுப்பி வருகின்றனர். இதே நிலைமை நீடித்துக் கொண்டு போனால் என்ன நேரும்?

அன்றொரு நாள் நான் சிவிலியன் உடைகளை அணிந்திருந்த ஒரு மனிதரைக் கண்டேன்; அவரது மார்பு முழுவதிலும் தங்கமும் மெடல்களுமே நிறைந்திருந்தன. அட, கடவுளே,

இவான் பொதுப்னிதான் கல்லறையிலிருந்து உயிர்பெற்று எழுந்து வந்து விட்டாரா என்று நான் நினைத்தேன். இல்லை. அவருக்கு ஒன்றும் ஒரு மல்யுத்த வீரரின் கட்டுமஸ்தான உடற்கட்டு இருக்க வில்லை. பிறகுதான் அந்த மனிதர் ஒரு திரைப்பட டைரக்ட ராகவோ அல்லது காமிரா நிபுணராகவோ இருந்தார் என்று தெரிய வந்தது. நேர்மையாகச் சொன்னால் இது ஒரே குழப்பம் தான்! இது கூடாது, எழுத்தாளர் தோழர்களே, நாம் நமது மெடல்களைக் காட்டிலும் நமது புத்தகங்களைக் கொண்டே பிரகாசிப்போம்.

மெடல் என்பது ஒரு பெறப்பட்ட பொருள்; புத்தகம் என்பதோ உங்களின் அறிவுக் குழந்தை.

இலக்கியத்தின்பால் நான் கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறை தான், சில சமயங்களில் எனது சக எழுத்தாளர்களுக்கு மகிழ்ச்சி யற்ற விஷயங்களைக் கூறுமாறு என்னை நிர்ப்பந்திக்கிறது.

நமது எழுதப்படாத நியதியின்பால் தாம் கொண்டுள்ள விசுவாசத்தோடும், தமது இயல்பான தன்னடக்கத்தோடும், தோழர் சிமனோவ் தமது அறிக்கையில் தம்மைப் பற்றி எதுவுமே கூறவில்லை. அந்தக் குறையைப் பூர்த்தி செய்ய என்னை அனுமதியுங்கள்.

அவரது நூல்களைப் பற்றிய ஒரு விரிவான ஆய்வுரையை மேற்கொள்ள இது சமயமும் அல்ல; இடமும் அல்ல. நான் ஒட்டு மொத்தமாக அவரது படைப்பு முழுவதையும் பற்றியே பேச விரும்புகிறேன்.

கான்ஸ்தாந்தின் சிமனோவ் இலக்கியத்தில் எந்தவிதத்திலும் ஒரு புதிய மனிதர் அல்ல; அவர் போதுமான அளவுக்கு முதிர்ச்சி யும் அனுபவமும் மிக்க போர்வீரர் ஆவார். மேலும் அவர் இலக்கியத்துக்குப் பொதுவான எல்லாத் துறைகளிலும் ஏராளமாக எழுதியுள்ளார். என்றாலும், அவரது புத்தகங்களை நான் திரும்பப் படித்துப் பார்க்கும்போது, அவர் அவற்றை எழுதிய காலத்தில் மிக உயர்ந்த மதிப்பெண்களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு பாடுபட்டு எழுதவில்லையோ என்று என்னுள் எழும் சந்தேகத்தை என்னால் விலக்க முடிய வில்லை. என்றாலும் கூட, அவர் ஒரு திறமை மிக்க எழுத்தாளர் என்பதை மறுப்பதற்கில்லை; ஆயினும் தமது புத்தகத்தில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொள்ள அவர் மறுப்பது (திறமையின்மை என்ற பேச்சுக்கே இடமில்லை), சஞ்சலமான சிந்தனைக்கு இட மளிக்கிறது. இளம் எழுத்தாளர்கள் சிமனோவிடமிருந்து என்ன கற்றுக் கொள்ள முடியும்? ஒருவேளை அது வெறும் வேகமாகவே,

ஓர் எழுத்தாளனுக்கு அத்தியாவசியமேயற்ற ராஜதந்திரச் சாமர்த்திய மனப்போக்காகவே இருக்கலாம். நான் முற்றிலும் பட்டவர்த்தனமாகவே கூறுகிறேன். ஒரு பெரிய எழுத்தாளருக்கு இந்தத் திறமைகள் மட்டுமே போதாது. அவரது கடைசிப் புத்தகம் என்னை மிகவும் சஞ்சலத்துக்குள்ளாக்குகிறது: அதனை மேலோட்டமாகப் பார்த்தால், அதில் எல்லாம் சரியாக இருக்கின்றன; எல்லாம் அதனதன் சரியான இடத்தில் அமைந்துள்ளன; என்றாலும் நாம் புத்தகத்தைப் படித்து முடிக்கும் போது, பசியால் வாடும் மனிதரான நம்மை ஒரு விருந்துக்கு அழைத்துவிட்டு, அங்கு நமது பசியைத் தணிக்கக்கூடப் போதிய அளவில் இல்லாத, ஏதோ ஒரு நீரில் நனைத்த ரொட்டித்துண்டை நமக்குப் படைத்து விட்டது போன்ற உணர்வுதான், நமக்கு மிஞ்சி நிற்கிறது. நாம் ஏமாற்றமடைகிறோம்; பசியோடு தவிக்கிறோம்; நம்மை விருந்துக்கு அழைத்தவர் ஒரு கஞ்சப் பிறவியாக இருப்பதை அறிந்து கோபப்படுகிறோம்.

தோழர் சிமனோவ் பல ஆண்டுகளாக எழுதி வருகிறார்; அவர் தமது இலக்கிய வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கவும், ''அதோ பார்! அரசர் நிர்வாணமாக நிற்கிறார்!'' என்று ஒரு சின்னஞ் சிறுவன் தம்மைச் சுட்டிக் காட்டிக் கூறக் கூடிய ஒருநாள் வரத்தான் போகிறது என்பதை அவர் சற்றே நின்று சிந்தித்துப் பார்க்கவும் வேண்டிய தருணம் வந்து விட்டது. கான்ஸ்தாந்தின் மிக்கேலோவிச், உங்களது நிர்வாணக் கோலத்தைக் காண நாங்கள் விரும்பவே மாட்டோம். எனவே எங்களது நட்புறவான ஆலோசனையை, அது என்ன உணர்வோடு வழங்கப்படுகிறதோ, அந்த உணர்வோடு ஏற்றுக் கொள்ளுங்கள்: அவசரப் படாதீர்கள்; மேலும் அதிகமான ஆடைகளைத் தரித்துக் கொள்ளுங்கள்; என்றுமே நைந்து கிழிந்து போகாத ஆடைகளைத் தரித்துக் கொள்வது மிகவும் நல்லது.

நாங்கள் பழைய நண்பர்கள் என்பதைப் பார்க்கும்போது, நான் இரென்பர்கைப் பற்றியும் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். கவலைப்படாதீர்கள். எழுத்துப் பிரச்சினைகளைக் குறித்து நான் மீண்டும் ஒரு வாதத்தைத் தொடங்கப் போவதில்லை. அவ்வாறு தொடங்காது கடவுள் தவிர்க்கட்டும்! தமது கட்சியை மூர்க்கமாக நிலைநாட்டி வாதாட முற்படும் ஒருவரோடு வாதாடுவது மிகவும் நன்முகத்தான் இருக்கும்; என்றாலும், இரென்பர்க் லேசாக விமர்சனம் செய்தாலே மனம் புண்பட்டுப் போய் விடுகிறார்; அது தம்மை முற்றிலும் எழுதாமலே தடுத்து விடுகிறது என்று அவர் கூறுகிறார். நமது எதிராளியைப்பற்றி நாம் பேசத் தொடங்கிய தருணத்திலேயே, அவர் தமது

முதுமையை நமக்குச் சுட்டிக் காட்டி, அவர் மீது நம்மைப் பரிவு கொள்ளச் செய்தால், அப்புறம் அந்த விவாதம்தான் எப்படிப் பட்டதாக இருக்கும்? இல்லை. ஒரு நபர் பணிந்து போகும்போது, அவரை நாம் அடிப்பதில்லை; அது நம் வழியும் அல்ல. நான் இரென்பர்கை எழுதுவதினின்றும் தடுத்து நிறுத்த விரும்பவில்லை... சமாதானத்துக்கான நமது பொதுப் போராட்டத்தில் செயலூக்க மாகப் பங்கெடுத்து வருவதன் மூலம் அவர் ஒரு பெரிய, மிகவும் பயன்மிக்க பணியை ஆற்றி வருகிறார். ஆயினும் நாம் ஒரு எழுத்தாளர் என்ற முறையில்தான் அவரை விமர்சிக்கிறோம்; சமாதானப் போராளி என்ற முறையில் அல்ல; இது நமது உரிமை, உதாரணமாக, உருகும் பனி* என்ற நூலைப்பற்றி சிமனேவ் எழுதிய கட்டுரைக்காக அவர் சிமேனவ் மீது குறைப்பட்டுக் கொண்டார். அவர் இத்தகைய போக்கை மேற்கொண்டிருக்கக் கூடாது; ஏனெனில், சிமனேவ் தமது கட்டுரையை உரிய தருணத்தில் எழுதியிருக்காவிட்டால், வேறொரு விமர்சகர் உருகும் பனி பற்றி வேறு விதமாக எழுதியிருப்பார். உண்மையில், சிமனேவ் கடுமையான விமர்சனத்திலிருந்து இரென்பர்கைக் காப்பாற்றித்தான் இருக்கிறார். என்றாலும், இரென்பர்க் தமக்குப் பாதகம் இழைக்கப்பட்டு விட்டதாக எண்ணுகிறார். இந்தக் காங்கிரசில் அன்றொரு நாள் இரென்பர்க் எல்லா எழுத்தாளர்களுக்கும் இருப்பதாகக் கூறினாரே, அந்த ''மிகை யான மெல்லுணர்ச்சி''யைத்தான் இதற்கும் காரணமாகக் கூற முடியும் என்று நான் கருதுகிறேன்.

என்றாலும், இரென்பர்குக்கும் சிமனேவுக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட சூடான வார்த்தைகளைப் பற்றி, நாம் அதிகமாகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அவர்கள் சமரசமாகி விடுவார்கள்.

தோழர் இரென்பர்க் விஷயத்தில் நான் ஒரே ஒரு விஷயத்தை மட்டுமே குறிப்பிட வேண்டுகிறேன். அவரது உரையின் போது அவர் இவ்வாறு கூறினார்: ''இன்னொரு புத்தகத்தையும் என்னால் இன்னும் எழுத இயலுமானால், எனது கடைசிப் புத்த கத்தைக் காட்டிலும் நான் ஒரடி முன்னே சென்று அதனை நான் நன்றாக எழுதவே முயற்சி செய்வேன்.'' உருகும் பனியைத்தான் அந்தக் கடைசிப் புத்தகமாக அவர் குறிப்பிட்டார். புயல் மற்றும் டெக்குமான் அலை ஆகியவற்றோடு ஒப்பிடும்போது, இது ஒரு பின்னடைவுதான் என்பதில் சந்தேகமில்லை. இப்போது இரென்பர்க் ஒரடி முன்னே செல்வதாக வாக்களிக்கிறார். இந்த

* இந்த நாவல் ''வசந்தமே வருக'' என்ற தலைப்பில் தமிழில் வெளிவந் துள்ளது. வெளியீடு: ஸ்டார் பிரசுரம். தமிழாக்கம்: ரகுநாதன்.

நடன அடிகளைப் பிற மொழிகளில் எவ்வாறு குறிப்பிடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது; ஆனால் ரஷ்ய மொழியில், அவற்றைப் ''புரட்டாட்டம்'' என்றே கூறுவர். எனவே, இலியா கிரிகோரியேவிச், இதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்; நீங்கள் ஒன்றும் எங்களுக்கு அதிகமாக வாக்களித்து விடவில்லை.

வெளிநாடுகளிலுள்ள பகைமையுணர்ச்சி கொண்ட நமது எதிரிகள், சோவியத் எழுத்தாளர்களான நாம் கட்சியின் கட்டளைப்படியே எழுதுவதாகக் கூறுகின்றனர். இந்த விஷயத்தில் உண்மையோ முற்றிலும் மாறுனது. ஏனெனில் நம்மில் ஒவ் வொருவரும் நமது சொந்த இதயத்தின் கட்டளைப்படியேதான் எழுதுகிறோம்—நமது இதயங்களோ கட்சிக்கும், நாம் நமது கலையின் மூலம் யாருக்குப் பணியாற்றுகிறோமோ அந்த மக்களுக்குமே சொந்தமாக உள்ளன.

சில சமயங்களில் நாம் அநாவசியமான முறையில் ஒருவருக் கொருவர் எதிராக முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறோம்; சில சமயங்களில் நாம் புத்தகங்களைப் பற்றிய நமது அபிப் பிராயங்களில் சகிப்புத்தன்மை அற்றவராகவும் நடந்து கொள் கிறோம்; என்றாலும், நாம் இவ்வாறு நடந்து கொள்வதற்கு, பகைமையுணர்வோ, அகங்காரமோ அல்லது பேராசையோ நிச்சயமாகக் காரணம் அல்ல; கம்யூனிச உணர்வில் வெகுஜனங் களைப் பயிற்றுவிக்கும் காரியத்தில், கட்சிக்கு மேலும் நல்ல உதவியாளனாக இருக்கும் விதத்தில், நமது இலக்கியத்தை ஆக்கவும், நமது மாபெரும் மக்களுக்கும், எந்தக் கடந்தகால மாபெரும் இலக்கியப் பாரம்பரியத்துக்கு நாம் உரிமை படைத்த வாரிசுகளாக உள்ளோமோ, அந்த நமது நாட்டின் மாபெரும் இலக்கியப் பாரம்பரியத்துக்கும் அதனை மேலும் தகுதி மிக்கதாக ஆக்குவதற்கும் நாம் கொண்டுள்ள விருப்பமே அதற்குக் காரணம் ஆகும்.

நாம் நமது மூன்றாவது காங்கிரசில் மீண்டும் சந்திப்பதற்கு முன்னால், நம்மிற் பலர் புதிய, தனிச்சிறப்புமிக்க படைப்புக்களை உருவாக்கித் தருவார்கள் என்று நான் எனது இதயபூர்வமாக நம்புகிறேன்.

எழுத்தாளர் தோழர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் புதிய படைப்பாக்க வெற்றிகளையும், ஒரு நல்ல வேலை நல்ல முறையில் செய்யப்பட்டுள்ளது என்று அறிவதனால் ஏற்படும் ஆனந்தத்தை யும்—அதாவது ஒவ்வொரு உழைப்பாளிக்கும் நன்கு தெரிந்த அந்த நிம்மதியான இதய ஆனந்த உணர்ச்சியையும்—பெற

வேண்டும் என்று எனது இதயத்தின் அடியாழத்திலிருந்து உங்களை வாழ்த்துகிறேன்.

1954

உணர்ச்சிப் பெருக்கோடும் உண்மையோடும்

வரும் ஆண்டில் ஆனந்தமும் மகிழ்ச்சியும் வெற்றியும் பெற, இஸ்வெஸ்தியா வாசகர்களுக்கும், சோவியத் மக்கள் அனைவருக்கும் நான் உளமார வாழ்த்துக் கூறுகிறேன்.

நமது நாடு ஒரு புதிய, மேலும் வலிமைமிக்க பாய்ச்சலுக்காக, புதிய முன்னேற்றத்துக்காக, புதிய சாதனைகளுக்காகப் பலத்தைச் சேகரித்து வருகிறது. எனவே, சோவியத் மக்களின் செயல்களைப்பற்றி, சோவியத் மானிடனின் பெருந்தன்மையையும் மேன்மையையும் பற்றி, தனது தாயகத்தின்பால் அவன் கொண்டுள்ள விசுவாசத்தைப்பற்றி, நாம் எத்தனை உணர்ச்சிப் பெருக்கோடு, உள்ளத்தைக் கிளறும் வகையில் உண்மையோடு எழுதவேண்டும் என்பதை எண்ணிப் பார்த்தால்! சோவியத் எழுத்தாளர்களான நாங்கள், ரத்த பந்தங்களால் யாரோடு கட்டுண்டு இருக்கிறோமோ, அந்த சோவியத் மக்களுக்குப் பணியாற்றுகிறோம். மக்களின் மனச்சாட்சியாக விளங்கும் கட்சியின் குரலை, நாங்கள் மகன் தந்தைக்குக் காட்டும் மதிப்போடு கேட்கிறோம்; எங்களது பணியில் மேலும் கடுமையாக, மேலும் அரும்பாடுபட்டு உழைக்கும் கண்ணோட்டத்தைப் பெறுவதை எங்களது கௌரவமிக்க கடமையாக உணர்கிறோம்.

தமது கடுமையான எனினும் கௌரவமிக்க பணியில் வெற்றிபெற, எனது சோதர எழுத்தாளர்களுக்கு நான் வாழ்த்துக் கூறுகிறேன். நாம் எழுதும் ஒவ்வொரு வார்த்தையும், மக்களது அன்றாட உழைப்பையும் பொறுப்புக்களையும் சமாளிக்க அவர்களுக்கு உதவும் விதத்தில், அந்த வார்த்தைக்குள் உத்வேகத்தை உருவேற்ற, நாம் சகல சக்தியோடும் வரும் புத்தாண்டில் முயற்சி செய்வோமாக.

1954

எனது இதயத்தின் அடியாழத்திலிருந்து

அன்பார்ந்த நண்பர்களே, சோவெஸ்த்ஸ்கி சோயுஸ் வாசகர்களே!

சென்ற ஆண்டில் சோவியத் இலக்கியம், நமது நாட்டு வாசகர்கள் மத்தியில் தகுதிமிக்க முறையில் அங்கீகாரம் பெற்றதும், வெளிநாடுகளிலுள்ள நமது நண்பர்களிடமிருந்து

மிகமிக உற்சாகம்மிக்க வரவேற்பைப் பெற்றுதுமான ஏராள மான புத்தகங்களை உருவாக்கித் தந்தது. என்றாலும், வருங் காலத்தில் அளவிடற்கரிய விதத்தில் நாம் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது.

எப்போதும் போலவே, புத்தாண்டு நாளில் நமது சிந்தனை கள் நம்பிக்கைகள் யாவும் வருங்காலத்தை நோக்கியே திரும்பியுள்ளன.

வாழ்க்கையில் நமது பணியும் நோக்கமும், நமது மாபெரும் சகாப்தத்துக்கும் மாபெரும் சோவியத் மக்களுக்கும் தகுதி படைத்ததாக விளங்கும் உன்னதமான சித்தாந்தச் செய்தியை யும், மிகவுயர்ந்த கலைநயத் தகுதிகளையும் கொண்ட இலக்கியப் படைப்புக்களைப் படைப்பதும், சமாதானத்தைப் பாதுகாப்பது மேயாகும்.

உங்களது ஆக்கபூர்வமான முயற்சியில் (எல்லாவிதமான வேலையும் எப்போதும் ஆக்கபூர்வமானவையே) எல்லா வெற்றி யும் பெறவும், அதேபோல் உங்களது சொந்த வாழ்வில் மகிழ்ச்சி பெறவும், நாங்கள் உங்களுக்கு மகிழ்ச்சிகரமான புத்தாண்டு வாழ்த்துக் கூறுகிறேன்.

1955

''இலைஸ்த்ரன்னயா லித்தரத்துரா'' சஞ்சிகை ஆசிரியர்களுக்கு ஒரு கடிதம்

அன்பார்ந்த ஆசிரியத் தோழரே,

உங்கள் சஞ்சிகையின் முதல் இதழை நான் இப்போதுதான் படித்து முடித்தேன்; அது தனக்குத்தானே நிறுவியுள்ள பணிகள் தகுதியானவை என்றே நான் கருதுகிறேன். ஏனைய தேசங்களின் இலக்கியங்களை நன்கு அறிந்து பாராட்டுவதில் சோவியத் மக்களுக்கு உதவ இந்தச் சஞ்சிகை முன்வந்துள்ளது.

இது சம்பந்தமாக, எனக்கு அத்தியாவசியமாகத் தோற்றும் சில விஷயங்களை நான் எழுப்ப விரும்புகிறேன்.

நான் நமது சர்வதேசக் கலாசார உறவுகளையும், சோவியத் எழுத்தாளர்களுக்கும் அயல்நாட்டு எழுத்தாளர்களுக்கும் இடையே நிகழ்ந்துவரும் பரந்துபட்ட அனுபவப் பரிவர்த் தனையையும் கருத்தில் கொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு தேசமும், அது பெரிதாயினும் சிறிதாயினும், தனது சொந்தக் கலாசார மதிப்புக்களைக் கொண்டுள்ளது.

மனிதனின் ஆன்மிகச் செல்வம் இந்த மதிப்புக்களைக் கொண்டு உருவானதுதான்.

நமது தேசம் உலகக் கலாசாரச் செல்வக் களஞ்சியத்துக்குத் தனது கணிசமான பங்கினை ஆற்றியுள்ளது. தனது தேசியக் கலாசார மதிப்புக்களை, மனித குலம் முழுவதன் உடைமையாக்கு வதற்கான தனது விருப்பத்தில் நமது தேசம் தாராளமாகவும் தன்னலமற்றும் இருந்தது.

அதே சமயத்தில் நாம் பிற தேசங்களின் கலாசார சாதனை களின்பாலும், எப்போதும் பெரும் மதிப்புக் காட்டி வந்துள்ளோம். நமது கலாசார ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு அடிக்கடி மேற்கொள்ளும் எண்ணற்ற பயணங்களின் மூலமும், நமது அயல்நாட்டு விருந்தினர்களுக்கு நாம் எப்போதும் அளித்து வரும் வரவேற்பின் மூலமும் இது தெள்ளத் தெளிவாகப் புலனாகியுள்ளது.

சான்றுகளும் புள்ளி விவரங்களும் பொதுவாக எல்லோ ருக்கும் தெரிந்தவையாதலால், நான் அவற்றை மேற்கோள் காட்ட விரும்பவில்லை. சென்ற ஆண்டான 1954-ல் மட்டுமே நாம் பத்தாயிரம் அயல் நாட்டு விருந்தாளிகளை வரவேற்றோம் என்பதை மட்டும் வாசகர்களின் நினைவுக்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

ஏனைய தேசங்களின் கலாசாரத்தின்பால் நாம் கொண் டுள்ள பெரும் மதிப்புக்கான கண்கண்ட சாட்சியத்தை, அயல் நாட்டு எழுத்தாளர்களின் நூல்கள்—வெறுமனே பேரிலக்கி யங்கள் மட்டுமல்ல—சோவியத் யூனியனில் வெளியிடப் படுகின்றன என்ற உண்மையிலேயே கண்டுகொள்ள முடியும்.

சோவியத் மக்கள் நமது அயல் நாட்டு உறவுகளைச் சாத்திய மான அளவுக்கு மிகப் பரந்த அளவில் வளர்த்துக் கொள்ள விரும்பினர். இந்த விருப்பம்தான் சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத்தை, பிப்ரவரி 9 அன்று நடந்த அதன் இரண்டாவது கூட்டத்தில், சர்வதேச நிலைமையைச் சகஜமாக்குவதற்கு உகந்த ஒரு முக்கியமான அம்சமாக, சர்வதேசத் தொடர்புகளைப் பலப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் பிரபலமான பிரகடனத்தை நிறைவேற்றத் தூண்டியது.

நான் பிரதிநிதிகளில் ஒருவனாக இருந்தேன்; அந்தப் பிரகடனத்துக்கு நான் மகிழ்ச்சியோடு வாக்களித்தேன்.

இப்போது ஜெனீவா மாநாடு ஒரு வரலாற்றுப் பூர்வமான உண்மையாக மாறி விட்டதால், அயல் நாடுகளோடு கலா சாரப் பரிவர்த்தனையைக் கணிசமான அளவுக்கு விஸ்தரிப்பத

னின்றும் சோவியத் மக்களைத் தடுத்து நிறுத்தியது எது என்பதை எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை.

''கெடுபிடிப் போர்'' என்பது நல்ல நோக்கங் கொண்ட கலாசார ஒத்துழைப்புக்குப் பொருந்தாததாகும் என்பதைத் திரும்பவும் எடுத்துக் கூற எந்த அவசியமும் இல்லை.

அமெரிக்கா போன்ற ஒரு நாட்டோடு நமது கலாசார உறவுகள் வலுவடையவும், வளரவும் தொடங்கிய காலமும் ஒன்று இருந்தது. அமெரிக்க, சோவியத் மக்களின் ராணுவ ஒத்துழைப்பு, நமது நட்புறவான தொடர்புகளைப் போருக்குப் பின்னரும் விஸ்தரிப்பதற்கு அவசியமான முன்தேவைக் கூறுகள் அனைத்தையும் உருவாக்கியது.

அந்தோ! ஆனால் நிகழ்ந்தது இதுவல்ல.

அமெரிக்காவோடு கலாசார உறவுகளை அபிவிருத்தி செய்து கொள்ள நாம் மேற்கொண்ட முயற்சிகள், முற்றிலுமாக இல்லாவிட்டாலும், அநேகமாக வெற்றி பெறாமல் போய் விட்டன.

சோவியத் யூனியனுக்குச் சுற்றுப் பயணிகளாகவோ விருந் தினர்களாகவோ வந்த ஆயிரக்கணக்கான அயல் நாட்ட வர்கள் மத்தியில் பல அமெரிக்கர்களும் இருந்தனர் என்பது உண்மையே. என்றாலும் கூட, சிறிது காலத்துக்கு முன்னர் வரையிலும், நமக்குப் பதிலுக்கு அத்தகைய விருந்தோம்பல் வழங்கப் படவில்லை.

ஆயினும் நான் இன்று பேச விரும்புவது வருங்காலத்தைப் பற்றித்தானே ஒழிய, கடந்த காலத்தைப் பற்றியல்ல என்பதைத் திரும்பவும் கூறுகிறேன்.

''ஜெனீவா உணர்வு'' சர்வதேச விவகாரங்களின் சகல துறைகளுக்குள்ளும் புகுந்து விடுமானால், கலாசார உறவுகளின் அபிவிருத்திக்கு நல்ல வருங்கால வாய்ப்புக்கள் உண்டு என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

உலக எழுத்தாளர்கள் தமது சொந்த வட்டமேஜையைப் பெற்றிருக்க வேண்டும். நாம் பல்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டிருக்கலாம்; என்றாலும், மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற விருப்பத்தினால் நாம் ஒன்றுபட்டிருப்போம்.

சோவியத் எழுத்தாளர்களான எங்களைப் பொறுத்த வரையில், உலகிலுள்ள எல்லா எழுத்தாளர்களோடும் எங்களுக் குள்ள உறவுகள் மிகவும் நெருக்கமாகவும் முழுமையாகவும் இருக்க வேண்டும் என்றும், மேலைய உலகையும் கீழைய உலகையும் சேர்ந்த பல நாடுகளிலுள்ள எங்களது சக எழுத்

தாளர்களோடுள்ள எங்களது தொடர்புகள் மேன்மேலும் வலுப்பட்டு வரவேண்டும் என்றும் நாங்கள் உளமாரவே விரும்புகிறோம்.

இது பற்றி எனது அமெரிக்க, ஆங்கிலேய, மேற்கு ஜெர்மானிய, ஜப்பானியச் சகாக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைவேன்.

இந்த எழுத்தாளர்களையே நான் முதலாவதாகக் குறிப்பிடுகிறேன்; ஏனெனில் இவர்களது நாடுகளோடுதான் எங்களது யுத்தப் பிற்காலக் கலாசார உறவுகள் அவ்வளவு விரும்பத் தக்கதாக இல்லை.

எனது கடிதத்தில் நான் எழுப்ப விரும்பிய முதல் விஷயம் இதுதான்.

இரண்டாவது விஷயத்தைப் பொறுத்தவரையில், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள உங்களது சஞ்சிகையின் வருங்கால நடவடிக்கை சம்பந்தமாக சில யோசனைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் புரிந்து கொண்ட வரையில், உங்களது சஞ்சிகை, உண்மையான திறமையின் முத்திரையைத் தாங்கிய எல்லாவற்றையும், மனிதனுக்குத் தகுதியான ஒரு வாழ்க்கையை வாழ, மக்களுக்கு உதவும் அனைத்தையும் வெளியிட்டு வர முன் வந்துள்ளது.

நவீன இலக்கியத்தின் நலன்களை இதயத்தில் கொண்டுள்ள மக்கள், தமக்குள் ஒருவருக்கொருவர் கருத்தைப் பரிமாறிக் கொள்ளக்கூடிய ஒரு மேடையாக உங்கள் சஞ்சிகை மாறுமானால் நான் மகிழ்ச்சியடைவேன்; என்னைப் போலவே பலரும் அவ்வாறு உணர்வார்கள் என்றும் நான் நிச்சயமாகக் கூறுவேன். சோவியத் வாசகர்களுக்கும் (எழுத்தாளர்களும் கூடத்தான்), நீங்கள் வெளியிடும் நாவல்கள் மற்றும் கதைகளின் ஆசிரியர்களுக்கும் இடையே கடிதங்களின் பரிவர்த்தனை ஒன்றுக்கு, உங்கள் சஞ்சிகை ஏற்பாடு செய்யுமானால் நாங்கள் பெரிதும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

இந்தப் படைப்புக்களைப் படித்து, அவற்றின் மூலம் பல்வேறு தேசங்களின் போராட்டங்களையும் நம்பிக்கைகளையும், அவற்றின் அந்தரங்க உலகத்தையும் பற்றித் தெரிந்து கொண்ட பின்னால், சோவியத் எழுத்தாளர்கள் அயல்நாட்டு எழுத்தாளர்களின்பால் அக்கறை காட்டும் சிந்தனைகளைப் பெறுவது சாத்தியமாகும். உலகில் எந்தவொரு எழுத்தாளரும் தமது வாசகர்

களின் அபிப்பிராயத்தை அலட்சியப்படுத்துவதில்லை. டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற நாவலைப் பற்றி அயல்நாட்டு வாசகர்கள்—அமெரிக்கர்களும் கூடத்தான்—கூறியிருந்த யாவற்றையும் படிப்பதில் நான் எவ்வளவு ஆர்வம் காட்டினேன் என்பது என் நினைவுக்கு வருகிறது. அந்த அபிப்பிராயங்கள் முரண்பட்டதாக இருந்தன; அவற்றில் எல்லாவற்றையும் நான் ஏற்றுக் கொண்டு விடவும் இல்லை; இருந்தாலும்கூட, அவை மிகவும் போதனை தருவனவாக இருந்தன.

நான் யோசனை தெரிவித்துள்ளதைப் போன்ற கடிதப் போக்குவரத்தானது, நமது பரஸ்பரக் கலாசாரச் செழுமையையும் நல்லிணக்கத்தையும் மேலும் வளர்க்கும் என்று நான் கருதுகிறேன்.

நல்லெண்ணமும் பரஸ்பர மதிப்பும் இருந்தால்—முயற்சியும் பரஸ்பர முயற்சியாக இருந்தால்—கலாசார உறவுகளின் அபிவிருத்தியை, மேலும் பரந்த அளவில் தொடங்க முடியும் என்று கூறுவதற்கான தருணம் வந்து விட்டது என்ற உணர்வோடுதான் நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

இயல்பாகவே நான் இந்த விஷயங்கள் அனைத்தையும் மிகவும் பொதுவான முறையிலேயே எழுப்புகிறேன்; ஏனெனில் பிரதானமான விஷயம், கோட்பாட்டளவில் உடன்பாடு வேண்டும் என்றே நான் கருதுகிறேன்; அவ்வாறு இருந்தால் மற்றவை தானுகவே நிறைவேறும்.

இது விஷயமாக எனது அயல்நாட்டுச் சகாக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைவேன்.

நாம் ஒரு பொதுவான மொழியைக் கண்டறிவோம்; இது விஷயத்தில் எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு.

1955

புத்தாண்டு வாழ்த்துக்கள்

புத்தாண்டு பிறக்கவிருக்கும் தருணத்தில், நமது கலையின் நோக்கத்தையும் குறிக்கோள்களையும் பற்றிய பழைய உண்மைகளையெல்லாம் திரும்பவும் கூற வேண்டும் என்ற விருப்ப உணர்வை ஒருவர் பெறுவதில்லை. அது ஒரு புத்தாண்டு விருந்துக்கு மிகவும் ஊசிப்போன உணவாகவே அமைந்து வரும்! நாம் அனைவரும், அவரவர்தம் சொந்தக் கலைத்துறையில் ஒவ்வொருவரும், போதுமான அளவுக்கு விஷயம் தெரிந்தவர்கள் தான் என்றே நான் கருதுகிறேன். எனவே, நமது நாடு நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது, நாம் என்ன செய்ய வேண்டும்

என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். வரும் ஆண்டில் நமது வலிமைமிக்க சோவியத் கலையும் இலக்கியமும் புதிய, அற்புதமான சாதனைகளைப் புரிய வேண்டும் என்று வாழ்த்தவே நான் விரும்புகிறேன். இளம் கலைஞர்களுக்கும் எழுத்தாளர் களுக்கும் அவர்கள் வெகு விரைவில் படைப்பாக்கப் பரிபக்கு வத்தை எய்தவும், பரிபக்குவமடைந்தவர்கள் செம்மைபெறப் பாடுபடும் தமது முயற்சியில் இளமைமிக்க ஆர்வத்தையும் இடை விடாத முயற்சியையும் பெறவும் நான் வாழ்த்துகிறேன்.

1956

20 ஆவது கட்சிக் காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து

பிரதிநிதித் தோழர்களே!

நமது கட்சிச் செயலாளர் தோழர் சுர்கோவ் ஏற்கெனவே உங்களுக்குத் தெரிவித்துள்ளபடி, ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான எந்தத் திட்டவட்டமான இலக்குகளையும் சோவியத் இலக்கியம் கொண்டிருக்கவில்லை. இதற்குமேல் நான் கூறக் கூடியது என்னவெனில், நாம் ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தாலும் கூட, அது எவ்விதத்திலும் நிறைவேற்றப்பட மாட்டாது; ஏனெனில் நமது வேலையின் தன்மை அப்படி; மேலும், உண்மையைச் சொல்லப் புகுந்தால், எழுத்தாளர்களான நாம்தான், நமது நாட்டில் மிகவும் ஒழுங்கமைக்கப்படாத நபர்களாக இருக்கிறோம் என்பதும் இதற்குக் காரணமாகும்.

சோவியத் எழுத்தாளர்களது யூனியனில் 3,247 உறுப்பினர் களும், 526 பரீட்சார்த்த உறுப்பினர்களும் உள்ளனர்; அதாவது மொத்தத்தில் பேனுக்களை ஆயுதங்களாகத் தாங்கியவர்களும், கூடுதலான அளவுக்கோ குறைந்த அளவுக்கோ இலக்கியத் திறமையைப் பெற்றவர்களுமான 3,773 பேர் உள்ளனர். இது ஒரு பெரும் படைதான் என்பதை நீங்கள் கண்டு கொள்ள முடியும்; என்றாலும் இந்தப் புள்ளிவிவரம் உங்களுக்கு மலைப்பையோ, மகிழ்ச்சியையோ தராதிருக்கட்டும். இது கேட்பதற்குத்தான் கவர்ச்சிகரமாக உள்ளது; ஆனால் உண்மையில் இந்த எழுத்தாளர்களது பட்டியலில் ''இறந்துபோன ஆத்மாக்கள்'' தான் பெரிதும் அடங்கியுள்ளன.

நமது காலத்தில் சிச்சிக்கோவ்கள்* யாரும் இல்லாதது ஒரு பரிதாபம்தான்; இல்லாவிட்டால், காரியார்த்த மதிநுட்பத்திறன்

* சிச்சிக்கோவ்—கோகோலின் ''இறந்துபோன ஆத்மாக்கள்'' என்ற பிரபலமான கதையின் பிரதானப் பாத்திரம்.

தமக்கு இல்லாத போதிலும் கூட, சுர்கோவ் ஒரே ஒரு பெரிய ஆப்பரேஷனின் மூலம் சோவியத் எழுத்தாளர்களது யூனியனுக்கு ஒரு புதையலையே தேடிக் கொடுத்திருப்பார்.

எனது சொந்தக் கட்சியோடு நேரடியாகப் பேசுகின்றபோது, நான் நமது இலக்கியத்தைப் பற்றி உண்மையைத்தான்—அது எவ்வளவுதான் கசப்பாக இருந்தாலும் கூட—உண்மையைத் தான் கூறியாக வேண்டும். எனது கட்சிக் கடமை அவ்வாறு செய்யுமாறு என்னை நிர்ப்பந்திக்கிறது; எனது எழுத்தாளனின் மனச்சாட்சியும் கௌரவமும் கூட அவ்வாறே செய்ய நிர்ப்பந்திக் கின்றன.

தோழர் சுர்கோவ் கடந்த சில ஆண்டுகளின் சாதனை களைக் குறித்து ஓரளவுக்கு மென்று விழுங்கித்தான் பேசினார்; நிலைமையை விளக்கிக் கூற வந்த அவர், 1953, 1954, 1955 ஆகிய ஆண்டுகளில் சோவியத்ஸ்கி பிஸாத்தெல் வெளியிட்ட புத்தகங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளதைப் பற்றிக் குறிப்பிட்டார். பட்டவர்த்தனமான வார்த்தைகளில் சொன்னால், இதைத்தான் கண்துடைப்பு என்று சொல்வார்கள்.

இலக்கியத்தின் முன்னேற்றம் நிச்சயமாக ஓர் ஆண்டில் வெளியிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிடப்படுவதில்லை. கடந்த இருபது ஆண்டுகளில் வெளியிடப் பட்ட நல்ல, விவேகம் மிக்க புத்தகங்களை நாம் விரல் விட்டு எண்ணிவிட முடியும், ஆனால் மட்டமான புத்தகங்களோ எண்ணில் அடங்காதவை என்றுதான் அவர் கூறியிருக்க வேண்டும். ஆயிரம் எழுத்தாளர்களின் பேனாக்கள், இருபது ஆண்டுகளில் சில பத்து நல்ல புத்தகங்களை உருவாக்கின. இது ஒன்றும் மிகவும் நல்ல சாதனையல்ல என்று நீங்கள் நினைக்க வில்லையா? இது உங்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான் என்றாலும், தோழர் சுர்கோவ் இதைத்தான் கூறியிருக்க வேண்டும்.

சோவியத் மக்கள் உலகிலேயே மிக மிகப் பெரியதான நீர்மின் நிலையங்களைக் கட்டியமைத்துக் கொண்டிருக்கும் காலமான இன்று, நமது பிரசாரகர்கள், யார் என்ன சொன்ன போதிலும் சரி, நாம் 1932 ஆம் ஆண்டுலேயே நீப்ரோஜெஸ் அணையைக் கட்டினோம் என்பதைப் பற்றி ஒவ்வொருவரிடமும் சொல்லிக் கொண்டேயிருந்தால், அது விசித்திரமாகத்தான் இருக்கும்.

என்றாலும், எழுத்தாளர்களான நாம் இதைத்தான் செய்திருக்கிறோம்: அதாவது இருபது அல்லது மூப்பது ஆண்டு

என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். வரும் ஆண்டில் நமது வலிமைமிக்க சோவியத் கலையும் இலக்கியமும் புதிய, அற்புதமான சாதனைகளைப் புரிய வேண்டும் என்று வாழ்த்தவே நான் விரும்புகிறேன். இளம் கலைஞர்களுக்கும் எழுத்தாளர் களுக்கும் அவர்கள் வெகு விரைவில் படைப்பாக்கப் பரிபக்கு வத்தை எய்தவும், பரிபக்குவமடைந்தவர்கள் செம்மைபெறப் பாடுபடும் தமது முயற்சியில் இளமைமிக்க ஆர்வத்தையும் இடை விடாத முயற்சியையும் பெறவும் நான் வாழ்த்துகிறேன்.

1956

20 ஆவது கட்சிக் காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து

பிரதிநிதித் தோழர்களே!

நமது கட்சிச் செயலாளர் தோழர் சுர்கோவ் ஏற்கெனவே உங்களுக்குத் தெரிவித்துள்ளபடி, ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான எந்தத் திட்டவட்டமான இலக்குகளையும் சோவியத் இலக்கியம் கொண்டிருக்கவில்லை. இதற்குமேல் நான் கூறக் கூடியது என்னவெனில், நாம் ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தாலும் கூட, அது எவ்விதத்திலும் நிறைவேற்றப்பட மாட்டாது; ஏனெனில் நமது வேலையின் தன்மை அப்படி; மேலும், உண்மையைச் சொல்லப் புகுந்தால், எழுத்தாளர்களான நாம்தான், நமது நாட்டில் மிகவும் ஒழுங்கமைக்கப்படாத நபர்களாக இருக்கிறோம் என்பதும் இதற்குக் காரணமாகும்.

சோவியத் எழுத்தாளர்களது யூனியனில் 3, 247 உறுப்பினர் களும், 526 பரீட்சார்த்த உறுப்பினர்களும் உள்ளனர்; அதாவது மொத்தத்தில் பேனாக்களை ஆயுதங்களாகத் தாங்கியவர்களும், கூடுதலான அளவுக்கோ குறைந்த அளவுக்கோ இலக்கியத் திறமையைப் பெற்றவர்களுமான 3,773 பேர் உள்ளனர். இது ஒரு பெரும் படைதான் என்பதை நீங்கள் கண்டு கொள்ள முடியும்; என்றாலும் இந்தப் புள்ளிவிவரம் உங்களுக்கு மலைப்பையோ, மகிழ்ச்சியையோ தராதிருக்கட்டும். இது கேட்பதற்குத்தான் கவர்ச்சிகரமாக உள்ளது; ஆனால் உண்மையில் இந்த எழுத்தாளர்களது பட்டியலில் ''இறந்துபோன ஆத்மாக்கள்''தான் பெரிதும் அடங்கியுள்ளன.

நமது காலத்தில் சிச்சிக்கோவ்கள்* யாரும் இல்லாதது ஒரு பரிதாபம்தான்; இல்லாவிட்டால், காரியாற்த்த மதிநுட்பத்திறன்

* சிச்சிக்கோவ்—கோகோலின் ''இறந்துபோன ஆத்மாக்கள்'' என்ற பிரபலமான கதையின் பிரதானப் பத்திரம்.

தமக்கு இல்லாத போதிலும் கூட, சுர்கோவ் ஒரே ஒரு பெரிய ஆப்பரேஷனின் மூலம் சோவியத் எழுத்தாளர்களது யூனியனுக்கு ஒரு புதையலையே தேடிக் கொடுத்திருப்பார்.

எனது சொந்தக் கட்சியோடு நேரடியாகப் பேசுகின்றபோது, நான் நமது இலக்கியத்தைப் பற்றி உண்மையைத்தான்—அது எவ்வளவுதான் கசப்பாக இருந்தாலும் கூட—உண்மையைத் தான் கூறியாக வேண்டும். எனது கட்சிக் கடமை அவ்வாறு செய்யுமாறு என்னை நிர்ப்பந்திக்கிறது; எனது எழுத்தாளனின் மனச்சாட்சியும் கௌரவமும் கூட அவ்வாறே செய்ய நிர்ப்பந்திக் கின்றன.

தோழர் சுர்கோவ் கடந்த சில ஆண்டுகளின் சாதனை களைக் குறித்து ஓரளவுக்கு மென்று விழுங்கித்தான் பேசினார்; நிலைமையை விளக்கிக் கூற வந்த அவர், 1953, 1954, 1955 ஆகிய ஆண்டுகளில் சோவியத்ஸ்கி பிஸாத்தெல் வெளியிட்ட புத்தகங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளதைப் பற்றிக் குறிப்பிட்டார். பட்டவர்த்தனமான வார்த்தைகளில் சொன்னால், இதைத்தான் கண்துடைப்பு என்று சொல்வார்கள்.

இலக்கியத்தின் முன்னேற்றம் நிச்சயமாக ஓர் ஆண்டில் வெளியிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிடப்படுவதில்லை. கடந்த இருபது ஆண்டுகளில் வெளியிடப் பட்ட நல்ல, விவேகம் மிக்க புத்தகங்களை நாம் விரல் விட்டு எண்ணிவிட முடியும், ஆனால் மட்டமான புத்தகங்களோ எண்ணில் அடங்காதவை என்றுதான் அவர் கூறியிருக்க வேண்டும். ஆயிரம் எழுத்தாளர்களின் பேனாக்கள், இருபது ஆண்டுகளில் சில பத்து நல்ல புத்தகங்களை உருவாக்கின. இது ஒன்றும் மிகவும் நல்ல சாதனையல்ல என்று நீங்கள் நினைக்க வில்லையா? இது உங்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான் என்றாலும், தோழர் சுர்கோவ் இதைத்தான் கூறியிருக்க வேண்டும்.

சோவியத் மக்கள் உலகிலேயே மிக மிகப் பெரியதான நீர்மின் நிலையங்களைக் கட்டியமைத்துக் கொண்டிருக்கும் காலமான இன்று, நமது பிரசாரகர்கள், யார் என்ன சொன்ன போதிலும் சரி, நாம் 1932 ஆம் ஆண்டுலேயே நீப்ரோஜெஸ் அணையைக் கட்டிவிட்டோம் என்பதைப் பற்றி ஒவ்வொருவரிடமும் சொல்லிக் கொண்டேயிருந்தால், அது விசித்திரமாகத்தான் இருக்கும்.

என்றாலும், எழுத்தாளர்களான நாம் இதைத்தான் செய்திருக்கிறோம்: அதாவது இருபது அல்லது முப்பது ஆண்டு

களுக்கு முன்னுல் எழுதப்பட்ட புத்தகங்களைக் கொண்டு, நமக்கு நாமே ஒரு இலக்கிய ''நீப்ரோஜெஸ்'' அணையைக் கட்டியுள்ளோம்; யாராவது நம்மிடம் அழுத்திக் கேட்டால், நாம் அந்தக் கணமே அந்த அணையின் பின்னுல் விரைவாக மறைந்து, அங்கிருந்து கொண்டு தன்னம்பிக்கை குன்றுத அழுத்தலோடு இவ்வாறு கூறுகிறோம்: ''புத்தகங்களே இல்லே என்று நீங்கள் சொன்னுல் அதற்கு என்ன அர்த்தம்? நாங்கள் எழுதுவதே இல்லே என்று நீங்கள் சொன்னுல் அது எப்படி? இளிம் சாம்கினின் வாழ்க்கை என்னவாயிற்று? செர்கியேவ்—திஸென்ஸ்கியின் நாவல்கள்தான் என்னவாயின? செராஃபிமோவிச்சின் இரும்பு வெள்ளம் எங்கே போயிற்று? கிளாத்கோவின் சிமெண்ட், ஃபதயேவின் முறியடிப்பு* ஆகியவை என்னவாயின? லியாஞ்வ், ஃபெதின் ஆகியோரின் நாவல்கள் என்னவாயின? ஃபர்மனேவின் சப்பயேவ்,** பான் ஃபெரோவின் புருஸ்கி ஆகியவையெல்லாம் என்னவாயின?'' மேலும், நாம் வாசகர்களுக்குப் பிடித்த, காலமும் தப்பிப் பிழைக்க விட்டுள்ள, மேலும் ஒரு டஜன் புத்தகங்களின் தலேப்புக்களேயும் படபடவென்று பொரிந்து தள்ளுகிறோம். இந்தச் சகல நிவாரணியான அணேயின் வரப்பிரசாதமான திரை மறைவுக்குப் பின்னுல் நாம் இன்னும் எத்தனே காலம் உட்கார்ந்து கொண்டிருக்கப் போகிறோம்?

முப்பதாம் ஆண்டுகளுக்குப் பின் கழிந்து போயுள்ள காலத்தில், வசனம், கவிதை, நாடகம் ஆகிய துறைகளில் புதிய அற்புதமான திறமையாளர்கள், நமது பல-தேசிய இன சோவியத் இலக்கியத்தின் அணிகளுக்கும் வந்து குவிந்துள்ளனர். நமது இலக்கியம் அதன் வாழ்நாட்காலம் முழுவதிலும், பல மதிப்பு மிக்க புத்தகங்களே உருவாக்கித் தந்து, உலகில் தலேயாய இலக்கியமாக உரிமையோடு இடம் பெற்றது என்பது சொல்லாமலே விளங்கும். என்றாலும், அது தலேயாய இலக்கியமாக மாறியதற்கு, அது கலாபூர்வமான பரிபூரணத்துவத்தில் இதுவரையில் எய்தப்படாத சிகரங்களே எட்டிப் பிடித்தது என்பது காரணமல்ல, மாருக நாம் அனேவரும்; நமது திறமைக்கேற்பச் சிறந்த முறையில், மனிதகுலத்தின் மிகப்பெரும் நம்பிக்கையான கம்யூனிசத்தின் சகலத்தையும் வெல்லும் கருத்துக்களேப் பரப்பி வருகிறோம் என்பதுதான் காரணம் என்பதை நாம் சகல நேர்மையுணர்ச்சியோடும் கூறித்தான் ஆக வேண்டும். நமது

* இந்நாவல் தமிழில் இதே தலேப்பில் மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளது.

** இந்நாவல் ''சுதந்திர தாகம்'' என்ற தலேப்பில் தமிழில் வெளிவந்துள்ளது. வெளியீடு: புதுமைப் பதிப்பகம்.

வெற்றியின் ரகசியம் இதில்தான் அடங்கியுள்ளது. நமது காலத்தில் ஓர் எழுத்தாளர், எந்த ஒரு எழுத்தாளரும், கம்யூனிச —விரோத நிலைகளிலிருந்து ஒரு புத்தகத்தை எழுத முயன்றால், அவரது பெயர் உடனடியாகவே ஏளனத்தோடு கூடிய மறதியில் புதையுண்டு போய்விடும்; படிக்கப்படாத அவரது புத்தகத்தின் பிரதிகளும் புத்தக அலமாரிகளில் பூசணம் பூக்கத் தொடங்கி விடும். எனவே பாருங்கள். பெருமை, புத்தகங்களை எழுதியவர் களுக்குச் சேர்வதைக் காட்டிலும், இந்த முயற்சியில் உத்வேகத்தோடு ஈடுபடச் செய்த நமது சொந்தக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குத்தான் அதிகமாகும். மேலும் எழுத்தாளர்களான நாம், இது விஷயத்தில் உளமாரவும், நமது இதயமெல்லாம் நிறைந்தும் மகிழ்ச்சியடைகிறோம்; நமது கடைசி மூச்சு இருக்கும் வரையில், லெனினது கட்சியின் லட்சியத்துக்கு, நமது எழுத்தினால் பணியாற்றவும், வாழ்விலும் சரி, இலக்கியத்திலும் சரி, அதன் உன்னதமான நலன்களை விசுவாசத்தோடு போற்றி வரவும் தயாராக இருக்கிறோம்.

கடந்த சில ஆண்டுகளில் நமது வசன இலக்கியம் மனவருத்தந்தரும் ஸ்தம்பித நிலையிலேயே இருந்து வந்துள்ளது என்றால், நமது நாடகக் கலையும் சீராக இல்லை. மிகமிக அரிதாகவே சில நல்ல நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன; கோர்னிசுக்கும், மற்றும் சில நாடகாசிரியர்களும் மேற்கொண்ட வீரமிக்க முயற்சிகளும் கூட, கடுமையாக நாடகப் பசியிலிருந்து நமது நாடக அரங்குகளைக் காப்பாற்ற முடியவில்லை. கோர்னிசுக் ஒரு முரட்டு நபர்தான்; என்றாலும், வேறு எந்தவொரு உக்ரேனியனும், ஏன் தாரஸ் புல்பாவும்கூட, இருபது ஆட்களின் வேலையைத் தான் ஒருவனே பார்க்க வேண்டுமென்று வந்தால், ஓட்டம்தான் பிடித்திருப்பான்.

தவறுதான் என்ன? நமது இலக்கியம் ஏன் பின் தங்கி நிற்கிறது?

தற்கால எழுத்தாளர்களான நம்மில் எவரும் தெரிந்து கொண்டிராத அளவுக்கு, ரஷ்ய விவசாயியின் ஆன்மாவை லெவ் டால்ஸ்டாய் தெரிந்து கொண்டிருந்தார் என்பதை எல்லோரும் அறிவர்; கார்க்கி ரஷ்யா எங்கணுமே கால் நடையாகப் பயணம் செய்துள்ளார்; லெஸ்கோவ் தபால் வண்டி மூலமே பயணம் செய்தார்; செகாவ் ஏற்கெனவே தாம் படுமோசமாக நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும், தமது நாட்டவரின்மீது தாம் கொண்டிருந்த மிகப்பெரும் அன்பினாலும், தமது தொழில் முறையான எழுத்தாளரின் குறுகுறுப்பினாலும் தூண்டப் பெற்று, சகாலினுக்குப் பயணம்

செய்வதற்கான பலத்தையும் பெற்றிருந்தார். என்றாலும், இன்றைய எழுத்தாளர்களில் பலரும், குறிப்பாக மாஸ்கோ வாசிகளான பலரும், மாஸ்கோ—கிராமப்புற இல்லம்—கடற்கரை வாசஸ்தலம் என்றே, அல்லது தலைகீழாக, கடற்கரை வாசஸ்தலம்—கிராமப்புற இல்லம்—மாஸ்கோ என்றே சென்று வசிக்கும் ஏதோ ஒரு மாயமந்திரமான முக்கோணத்திலேயே வசித்து வருகின்றனர். தமது வாழ்வையும் தமது திறமையையும் இந்த விதத்தில் வீணடித்து வருவதைக் குறித்து அவர்கள் வெட்கப்படவில்லையா?

சுமார் 1,200 எழுத்தாளர்கள் மாஸ்கோவில் வசிக்கிறார்கள். இது இயல்பானதே என்று நான் கருதுகிறேன்: மாஸ்கோ தலைநகரம்; நாட்டின் மிகப்பெரும் கலாசார, தொழில்துறைக் கேந்திரம். இதில் இயல்புக்கு மாறானது என்னவென்றால், தலைநகரில் வசித்துவரும் எழுத்தாளர்களும்கூட, வாழ்விலிருந்து தம்மை எப்படியோ தனிமைப்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். எனது உள்ளத்தின் அப்பாவித்தனத்தின் காரணமாக, நான் மாஸ்கோவில் வசித்து வந்த எனது சக எழுத்தாளர்கள் முக்கியமான தொழில்துறை ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களோடு இணைந்திருந்தார்கள், ஏதாவதொரு தொழிற்சாலையின் உற்பத்தியிலும் மற்றும் தொழிலாளர்களின் தேவைகள் திட்டங்கள் ஆகியவற்றிலும் உற்சாகமான அக்கறை காட்டி வந்தார்கள் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அப்படியெல்லாம் ஒன்றுமே இல்லை. அவர்கள் காட்டில் வசிக்கிறார்கள்; ஆனால் மரங்களை மட்டும் அவர்கள் காண்பதே இல்லை.

எழுத்தாளர்களில் யார் ஓர் ஆலைத் தொழிலாளி, ஓர் இஞ்சினீயர், அல்லது உற்பத்தியில் புதுமை காண்பவர், அல்லது ஏதோ ஒரு தொழிற்சாலையின் கட்சி ஊழியர் ஆகியோரோடு நண்பராகி, அவர்களது குடும்பத்தில் ஒருவராகக் கலந்து பழகியிருக்கிறார்? மிக மிகச் சிலரே; இல்லாவிட்டால், கோச்செத்தோவ் லெனின்கிராடில் ஜூர்பின்களைக் கண்டறிந்து கூறுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே, அவர்கள் மாஸ்கோவில் கண்டறியப் பட்டிருப்பார்கள். எனது சோதர எழுத்தாளர்கள் ஒவ்வொரு வரும் தமக்குள் தாமே ஒடுங்கியிருக்கிறார்கள்; அவர்கள் அன்னியர்கள்போல், தனிமையில் வாழும் பரிதாபத்துக்குரிய கிழட்டுப் பிறவிகளைப்போல் வாழ்கின்றனர். பெரிய மாஸ்கோ ஆலைகள் எதுவும், செர்ப் இ மொலோத், ஸ்டாலின் மோட்டார் கார் ஆலை, டைனமோ, அல்லது கிராஸ்னி புரோலிட்டரி ஆலைகள் ஆகியவற்றின் தொழிலாளர்கள் எவரும், ஒரு எழுத்தாளர் நண்பரைப் பெற்றிருக்கவில்லை என்பதைக் கண்டறிந்தபோது

நான் வருத்தமே அடைத்தேன். நினைப்பதுகூடத் தவறாக இருக்கலாம் என்று கருதுகிறேன். என்றாலும், இதுவே ஃபிரேஸர், திரெக்கோர்னயா மானுபாக்துரா, காலிபிர், பால்பேரிங் தொழிற்சாலை மற்றும் பிற ஆலைகளுக்கும் பொருந்துமோ என்றும் அஞ்சுகிறேன்.

எழுத்தாளர்கள் அவ்வப்போது பெரிய ஆலைகளில் விருந்தினர்களாக, அல்லது கௌரவ நடிகர்களாகச் சென்று காட்சியளிக்கிறார்கள் என்பதும், நமக்கெல்லாம் பெருத்த அவமானம் நேர்கிற விதத்தில், அவர்கள் சில சமயங்களில் தாம் அங்கு சென்று காட்சியளித்தமைக்காக, தொழிலாளர்களின் பணப்பெட்டிகளிலிருந்து சற்றேனும் கூச்சமின்றிப் பணமும் பெற்று வருகிறார்கள் என்பதும் உண்மைதான். பொதுநல நடவடிக்கை என்று முதற்கொண்டு சம்பளத்தோடு கூடிய வேலையாக மாறியது? சில எழுத்தாளர்கள் ராணுவப் பள்ளிகளுக்குச் சென்று காட்சியளிப்பதற்குக்கூடப் பணம் பெற்று வருகிறார்கள். இந்த அவமானத்துக்கு நாம் முடிவு கட்ட வேண்டிய வேளை எப்போதோ வந்து விட்டது. தனது குரலைக் கொண்டு தனது அன்றாட உணவைச் சம்பாதிக்கும் ஒரு கதம்ப நிகழ்ச்சிப் பாடகருக்கும், ஓர் எழுத்தாளருக்கும் இடையே ஓரளவு வித்தியாசம் உண்டு என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்கும், இலக்கியத் தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நேரம் வந்து விட்டது. இது கோட்பாட்டு ரீதியில் சகிக்க முடியாததாகும்; அதிலும் ஒரு கம்யூனிஸ்டு எழுத்தாளரின் கரம், ஒரு தொழிற்சாலை அல்லது வேறு எந்தவொரு தொழில் நிறுவனத்திடமிருந்தாவது சன்மானம் பெறுவதற்கு நீள்கிறது என்றால், அது இன்னும்கூடச் சகிக்க முடியாததாகும்.

பின் ஏன் 1,200 எழுத்தாளர்கள் மாஸ்கோவில் வசிக்க வேண்டும்? டிராக்டர்களும்கூட அவர்களை வெளியே இழுத்துப் போட முடியாதவாறு, அவர்கள் ஏன் அத்தனை உறுதியாக மாஸ்கோவைப் பற்றிப் பிடித்துக் கொண்டு வாழ வேண்டும்? இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பது எனக்குச் சிரமமாகத் தோன்றுகிறது. ஒருவேளை இந்தப் புதிருக்கு நீங்களே விடை கண்டுபிடிக்க முயல்வீர்களோ, என்னவோ? எனக்கு ஒன்று மட்டும் தெரியும். படைப்பாக்கச் சக்திகளின் இத்தகைய விரயோகமானது தவறானது; நியாயமற்றதும்கூட. அந்தோ! லெனின்கிராடு, கீவ், மின்ஸ்க், அல்மா–அதா மற்றும் எல்லாப் பெரிய நகரங்களிலும்கூட இதே நிலைமைதான். எங்கு பார்த்தாலும் எழுத்தாளர்கள் நகரங்களில்தான் வசிக்கிறார்கள்; ஒரு தொழிலாளர் குடியிருப்பிலோ அல்லது ஒரு கிராமத்திலோ

தனது வீட்டைக் கொண்டுள்ள ஓர் எழுத்தாளரை நீங்கள் காண்பது அரிதினும் அரிதுதான்.

தோழர்களே, நீங்கள் புதிய புத்தகங்களை எதிர்பார்க் கிறீர்கள். நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்: யாரிட மிருந்து? எந்தக் கூட்டுப் பண்ணை விவசாயிகளையும் அல்லது தொழிலாளர்களையும் பற்றிச் சரிவரத் தெரிந்து கொள்ளாத எழுத்தாளர்களிடமிருந்தா? தமது பொந்துகளுக்குள்ளேயே அமர்ந்து கொண்டிருக்கும் அல்லது தமது நத்தைக் கூடு களுக்குள்ளேயே சுருண்டு முடங்கிக் கிடக்கும் எழுத்தாளர்களிட மிருந்தா? ஆயினும், எதையும் தேடாத நபர்கள் எதையும் கண்டுபிடிப்பதும் இல்லை என்பது நெடுங்காலமாகவே தெரிய வந்துள்ள செய்தியாகும். இலக்கியத் துறையில் நிலவும் நிலைமை அடியோடு மாறிஞலன்றி, தகுதி வாய்ந்த நல்ல புத்தகங்கள் எதுவும் அண்மை வருங்காலத்தில் வெளிவரப் போவதில்லை; கட்சி ஒன்றுதான் இந்த நிலைமையை மாற்ற முடியும். என்ருலும், இந்த விஷயம் பற்றி நான் பின்னல் பேசுகிறேன்.

இப்போது நான் தோழர் கஃபுரோவின் பேச்சுக்கு, சொல்லப்போனல் இலக்கியம் பற்றி அவர் தொட்டுப் பேசிய பேச்சின் பகுதிக்குப் பதிலாகச் சில வார்த்தைகள் கூற விரும்பு கிறேன். இலக்கியம் பின்தங்கி நிற்கிறது என்று கூற, தோழர் கஃபுரோவுக்கு முற்றிலும் உரிமை உண்டு. ஆனல், தோழர் கஃபுரோவ் படைப்பாக்க நடவடிக்கை குறைந்து போய் விட்டதுதான் அதற்குக் காரணம் என்று கூறுவது சரியல்ல. அதற்குக் காரணம் அதுவல்ல.

இலக்கியம் வாழ்க்கைக்கு ஓரளவு பின்தங்கி நிற்க வேண்டியது அவசியமேயாகும்; ஏனெனில் கனமான இலக்கியம் ஒரு செய்தித் திரைப்படச் சுருள் அல்ல; லெவ் டால்ஸ்டாய் வழக்கமாகக் கூறி வந்தது போல், மிகப்பெரிய திரைச்சீலை ஓவியங்களை உருவாக்குவதற்கு, உடம்பை முறிக்கும் உழைப்பும் ஏராளமான காலமும் பிடிக்கத்தான் செய்யும்.

அக்கினிப் பரீட்சை* என்ற தமது நாவலை அலெக்சி டால்ஸ்டாய் இருபத்தி இரண்டு ஆண்டுகளாக எழுதி வந்தார் என்பதும், தாம் எழுதி முடிப்பதற்கு முன்பே காலமாகிவிட்ட தமது முதலாவது பீட்டர் என்ற நாவலை அவர் பதினேந்தாண்டுக் காலமாக எழுதி வந்தார் என்பதும் தோழர் கஃபுரோவுக்குத் தெரியுமா?

* இந்நாவலின் மூன்று பாகங்களும் தமிழில் இதே தலைப்பில் மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பக வெளியீடாக வெளி வந்துள்ளன. தமிழாக்கம்: ரகுநாதன்.

இத்தகைய எத்தனையோ உதாரணங்களை மேற்கோள் காட்ட முடியும்; அவை யாவும் தோழர் கஃபுரோவுக்கும் தெரிந்தவைதான் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். என்றாலும், ''அவசரத்தில் உருவாக்கப்பட்ட குழந்தை குருடாகத்தான் பிறக்கும்'' என்ற இந்த உவர்ப்பான உக்ரேனியப் பழமொழி மட்டும் அவருக்குத் தெரியாது என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். அவசரத்தில் உருவாக்கப்பட்டு, குருடாகவோ அல்லது அரைக் குருடாகவோ பிறந்த புத்தகங்கள், எந்த வாசகர்களையும் என்றுமே காணுதுபோன எண்ணிறந்த உதாரணங்களைக் கொண்டு, இந்தப் பழமொழியின் ஞானவிசாலத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

நமது சோவியத் வாசகர்கள் நமது மந்தமான போக்கை மன்னித்து விடுவார்கள்; ஆனால் நமது மோசமான, உப்புச் சப்பில்லாத புத்தகங்களை என்றுமே மன்னிக்க மாட்டார்கள்.

தோழர் கஃபுரோவ் அவர்களே, நானும் உங்களைப்போல், அதாவது சாதாரண வாழ்வில், எருது இழுக்கும் வண்டியில் செல்லாமல், விமானத்திலேயே பயணம் செய்ய விரும்புவேன். ஆனால் இலக்கியத்திலோ நான் பல்வேறு நகம் தீட்டும் சிறு ரம்பங்களையும், பல வகைப்பட்ட சிறு பிரஷ்களையும், மற்றும் அழகு அலங்கார சாதனப் பொருள்களையும் கொண்ட, ஒருநாள் பாட்டுக்கான சிறு சுமையோடு, விமானத்தில் பறந்து செல்வதைக் காட்டிலும், மக்களுக்கு மிகவும் தேவைப்படும் பொருள்களைக் கொண்ட கனமான சுமையோடு, ஒரு வண்டியிலேயே பயணம் செய்வேன். நாம் ஒரு விஷயம் பற்றிப் பேசும்போது—இலக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசும்போதும்கூட — கவலையற்ற வண்ணத்துப் பூச்சிபோல் படபடத்துப் பறப்பதைக் காட்டிலும், சில சமயங்களில் அவசரப்படாமல் அடியெடுத்து வைத்து மெதுவாகச் செல்வதே நல்லது என்றே நான் கூறுவேன்.

அன்பார்ந்த தோழர் கஃபுரோவ் அவர்களே, தயவு செய்து நான் சொல்வதைத் தவருக எடுத்துக் கொள்ளாதீர்கள்; எனது மிதமிஞ்சிய வாதிடும் ஆர்வத்தையும் மன்னித்து விடுங்கள். ஆயினும், என்னதான் இருந்தாலும், நானும் உங்களைப்போல் ஒரு தெற்கத்தியான்தான்; எனது எதிராளிக்குப் பின்னால் பின்தொடர்ந்து செல்லாமல், அவரோடு சூடாக வாதிடுவது என்பது எனக்கு வழக்கமாகி விட்டது. நீங்கள் படைப்பாக்க நெருப்பு வேகம் பற்றிப் பேசினீர்கள். நல்லது. இத்தகைய விஷயத்தை ஒரு வெப்பமானியைக் கொண்டு அளந்துவிட முடியாது என்பதை நீங்களும் அறிவீர்கள். ஆனால் விவாதம் என்று வந்துவிட்டால், நீங்கள் ஒரு தாஜிக்காக இருந்தாலும்,

நான் ஒரு ரஷ்யனாக இருந்தாலும், எனக்கும் அதே வெப்பநிலை ஏற்பட்டு விடுகிறது. நீங்கள் ஒரு வாசகர்; நான் ஒரு எழுத்தாளன்; நீங்கள் என்னை எவ்வளவு பேரார்வத்தோடு நேசிக்கிறீர்கள், உங்களது உணர்ச்சிகளை நான் எவ்வளவு பேராவலோடு திரும்பப் பிரதிபலிக்கிறேன் என்பதை நாம் இருவரும் கண்காணும் காட்சியாகப் புலப்படுத்திக் காட்டி விட்டோம். என்றாலும், தமது வாசகர்கள் தம்பால் காட்டும் பாசத்தைத் திரும்பப் பிரதிபலித்துக் காட்டுவதில், எழுத்தாளர்கள் பின்தங்கியே நிற்கிறார்கள் என்று நீங்கள் இன்னும் சொல்லக்கூடும். ஒரு புல்டோஸரே வந்து எங்களைப் பிரிக்கக் கூடிய காலம் வரும் வரையில், நாங்கள் பின்தங்கியே நிற்கிறோம் என்பது உண்மைதான்! நல்லது, போகட்டும். தோழர் கார்புரோவ், இப்போது நாம் இருவருமே நிரபராதிகள் என்றே நான் நம்புகிறேன். இல்லையா? அப்படியானால் நல்லது.

அண்மைக் காலத்தில் எந்தப் புத்தகங்களுமே வரவில்லை; பரந்த வாசகப் பெருமக்களின் இதயங்களையும் மனத்தையும் கவர்ந்து ஈர்க்கக்கூடிய புத்தகங்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். இதற்கு யாரைக் குற்றம் கூறுவது? முதலாவதாக எழுத்தாளர்களைத்தான் என்பது உண்மைதான்; என்றாலும் கலாசாரப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட கட்சி ஸ்தாபனங்களும், வாசகர்களும்கூடத்தான், இந்தக் குற்றத்தில் பங்கு பெறுகின்றனர். வாசகர்கள் ஓர் ஓரமாக நின்று கவனித்துக் கொண்டு நிற்கக் கூடாது; இலக்கியத்தின் இன்றைய நிலைக்கு அவர்களும் ஓரளவுக்குப் பொறுப்பானவர்களே; ஏனெனில் எல்லோருக்கும் தெரிந்துள்ளபடி, இலக்கியம் என்பது எழுத்தாளர்களுக்கே உரியதான ஒரு தனிப்பட்ட தொழில் மட்டும் அல்ல; அது சகல மக்களின் அக்கறைக்கும், பிற எல்லாவற்றுக்கும் மேலாக கட்சியின் அக்கறைக்கும் உரிய விஷயமாகும்.

இலக்கியப் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களில் சித்தாந்தத் தவறுகள் இழைக்கப்பட்டபோது, கட்சிதான் பல முறை எழுத்தாளர்களது யூனியனை நேர்வழியில் செலுத்தி வந்துள்ளது; அதன் வலிமை மிக்க வழிகாட்டும் கரத்தை நாம் எப்போதும் உணர்ந்து வந்துள்ளோம்; இதற்கு நாம் அதற்கு உளமார நன்றி கூறத்தான் வேண்டும்.

ஆயினும் என்னை உண்மையில் வேதனைக்குள்ளாவது என்னவென்றால், எண்ணிக்கையில் கணிசமான அளவுக்குப் பல எழுத்தாளர்கள் நெடுங்காலமாக வாழ்க்கையிலிருந்து தனிமைப்பட்டு வாழ்ந்து வந்துள்ளதோடு, இலக்கியத்துக்கும் எவ்விதப் பங்கும் ஆற்றாமலும் இருந்து வந்திருக்கிறார்கள் என்ற உண்மையை

நாம் அனைவரும் காணத் தவறிவிட்டது எப்படி என்பதுதான்! நமது கூட்டுப்பண்ணைத் தலைவர்களும், எந்திர மற்றும் டிராக்டர் நிலையங்களின் டைரக்டர்களுமான சிலர்—கட்சியினால் கிராமப் புறத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட முப்பதாயிரம் பேர்களில் சிலர்—தாம் முன்னர் வேலை பார்த்து வந்த நகரங்களிலுள்ள தமது பழைய வீடுகளிலேயே வசித்துக் கொண்டும், கூட்டுப் பண்ணைக்கும் அல்லது எந்திர மற்றும் டிராக்டர் நிலையத்துக்கும் எப்போதாவது சென்று தலைகாட்டிவிட்டு வரவும் முயன்றபோது, என்ன நிகழ்ந்தது என்பதை நினைத்துப் பாருங்கள். இதற்காக நாடு தழுவிய அளவில் ஒரு முழுமையான இயக்கமே நடத்தப் பட்டது! பிராவ்தா இதனைக் குறித்துத் திரும்பத் திரும்ப எழுதியது; பத்திரிகைகள் அனைத்துமே உஷார்ப்படுத்தப்பட்டன. தாம் நிர்வகித்துவரும் நிறுவனத்திலிருந்து விலகி வாழ்ந்துவர விரும்பிய இந்த நபர்களைப் பொதுஜன அபிப்பிராயம் கடுமை யாகக் கண்டித்தது. ஆனால் இப்போதோ நமது எழுத்தாளர்கள் தமது இலக்கிய மூலாதாரங்களிலிருந்து பல்லாண்டுக் கணக்கில் விலகி வாழ்ந்து வருகின்றனர்; ஆயினும், இதெல்லாம் முற்றிலும் சரியானதுதான் என்பதுபோல், ஒரு போராளிக்கு இரண்டாவது அணி வரிசை ஒரு தாற்காலிகமான இடமாக இல்லாமல், அதுவே ஒரு சாஸ்வதமான வாசஸ்தலமாகக் கருதப்பட்டு விட்டதுபோல், இந்த நிலைமையைக் குறித்து அந்த எழுத்தாளர்களிடம் எவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே.

எழுத்தாளர் யூனியனின் பணி முழுவதையுமே உறுதியோடு புனரமைத்தாக வேண்டும். கார்க்கி இறந்து போனதற்குப் பின்னால், எழுத்தாளர்களில் எவரொருவரும் அவருக்குச் சரிநிகராக வளர்ந்தோங்கவில்லை என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லையா? தொழிலாளி வர்க்கத்தின் உள்ளத்தில், நமது நாட்டிலும், அதன் எல்லைகளுக்கு மிகவும் அப்பாலும் உள்ள உழைக்கும் மக்களின் உள்ளத்தில், அவர் உத்வேகங்கொண்டு எழச் செய்த அந்த எல்லையற்ற அன்பின் விஷயத்தில், தமது வாழ்க்கையினாலும் தமது எழுத்துக்களாலும் அவர் தகுதியோடு சம்பாதித்திருந்த அந்த அன்பு விஷயத்தில், கார்க்கிக்கு இணையாக நம்மில் எவருமே என்றுமே இருந்தது மில்லை; என்றும் இருப்பது சாத்தியமாகவும் தோன்றவில்லை.

கார்க்கியின் மரணத்துக்குப் பின்னர் நாம் என்ன செய்யத் தீர்மானித்தோம்? நாம் தோழர் ஃபதயேவைத் தலைவராகக் கொண்டு எழுத்தாளர் யூனியனில் ஒரு கூட்டுத் தலைமையை நிறுவத் தீர்மானித்தோம்; ஆனால் இதனால் விளைந்த பயன் ஏதுமில்லை. இதற்கிடையில் நமது யூனியன் படைப்பாக்க

ஸ்தாபனம் என்று சொல்லப்பட்டுவந்த நிலையிலிருந்து, நிர்வாக ஸ்தாபனம் என்ற நிலைக்குப் படிப்படியாக மாறிக் கொண்டிருந்தது; மேலும், செயற் குழுவும் வசனம், கவிதை, நாடகம், விமர்சனம் ஆகியவற்றுக்கான பிரிவுகளும், தமது கூட்டங்களை முறையாக நடத்தி வந்த போதிலும், தொழில் நுட்ப ஊழியர்கள் முழுநேரமும் பணியாற்றிய போதிலும், செய்தி கொண்டு செல்வோர் அங்கும் இங்கும் அவசரமாக அலைந்து திரிந்தபோதிலும்—புத்தகங்கள் மட்டும் எதுவுமே வெளிவரவில்லை. நமது நாடு போன்ற நாட்டுக்கு, ஆண்டொன்றில் ஒரு சில நல்ல புத்தகங்களே வெளிவருவது என்பது பரிதாபத்துக்குரிய விதத்தில் மிக மிக அற்பமானது.

எனக்கு மிகவும் விசித்திரமாகத் தோன்றும் பதப் பிரயோகங்கள், எழுத்தாளர்களது சொல் வழக்கில் புகுந்து கொண்டுள்ளன. உதாரணமாக, ''இன்னார் ஒரு படைப்பாக்க பயணத்தை மேற்கொண்டு சென்றிருக்கிறார்'' என்பதைச் சொல்லலாம். ஓர் எழுத்தாளரின் வாழ்க்கை முழுவதுமே ஒரு படைப்பாக்க யாத்திரையாகவே இருந்தாக வேண்டிய நிலையில், அவர் ஏன் ஒரு ''படைப்பாக்கப் பயணத்தை'' மேற்கொள்ள வேண்டும்? அல்லது இன்னொரு நல்ல உதாரணத்தையும் கூறலாம்: ''எழுத்தாளர் யூனியன் செயலாளருக்கு ஓராண்டுக் காலத்துக்குப் படைப்பாக்க விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது'' என்பதே அது. தமது ''படைப்பாக்க விடுமுறை''க்கு முன்னால், அந்த எழுத்தாளர் எதையுமே எழுதவில்லை, மாறாக அவர் வேறு காரியங்களில் ஈடுபட்டிருந்தார் என்ற உண்மையைப் பட்டவர்த்தனமாக ஒப்புக்கொள்வதைத் தவிர, இதற்கு வேறு என்ன அர்த்தம் இருக்க முடியும்? நல்லது. எனவே ஒன்றிலிருந்து இன்னொன்று விளைந்தது. ஃபதேயேவ் போதுமான அளவுக்குப் பேராசை பிடித்த பொதுச் செயலாளராக மாறி விட்டார்; கூட்டுத் தலைமைக் கோட்பாட்டை ஒத்துக் கொண்டுபோக அவர் மறுத்தார். ஏனைய செயலாளர்களுக்கும் அவரோடு சேர்ந்து வேலை பார்ப்பது அசாத்தியமாயிற்று. இந்த விவகாரம் பதினைந்து ஆண்டுகளாக இழுத்தடித்தது. கூட்டு முயற்சியின் மூலம் நாம் ஃபதேயேவிடமிருந்து அவரது படைப்பாக்க வாழ்வின் பதினைந்து சிறந்த ஆண்டுகளை பறித்தெடுத்துக் கொண்டோம்; இதன் விளைவாக நமக்கு இப்போது ஒரு பொதுச் செயலாளரும் இல்லை; அல்லது ஓர் எழுத்தாளரும் இல்லை. எழுத்துத் துறையில் அதிகார வேட்கை எந்தப் பயனும் அளிக்காது. எழுத்தாளர் யூனியன் ஒரு ராணுவப் படைப் பிரிவு அல்ல; அது ஒரு தண்டப் படையும் அல்ல; எனவே, தோழர் ஃபதேயேவ் அவர்களே, எழுத்தாளர்களில் எவரும் உங்கள் முன் நின்று சலாம் போட்டுக்

கொண்டிருக்கப் போவதில்லை. நீங்கள் புத்திக் கூர்மையும் திறமையும் மிக்க எழுத்தாளர்; மேலும் தொழிலாளர் பற்றிய கருப் பொருள் உங்களைக் கவர்ந்துள்ளது. எனவே நீங்கள் ஏன் மாக்னிதோ கோர்ஸ்க், ஸ்வெர்த்லோவ்ஸ்க், செல்யாபின்ஸ்க் அல்லது ஜபோரோழ்யி ஆகிய இடங்கள் ஏதாவது ஒன்றுக்குச் சென்று, அங்கு மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் வாழ்ந்து, தொழிலாளி வர்க்கத்தைப்பற்றி ஏன் ஒரு நல்ல நாவலை எழுதி முடிக்கக் கூடாது?'' என்று நாம் சரியான சமயத்தில் ஃபதயேவுக்கு எச்சரிக்கை செய்திருக்க முடியாதா, என்ன?

இதனால் ஃபதயேவ் பொதுச் செயலாளராக இருந்து வரும் சந்தர்ப்பத்தை நாம் இழக்க நேர்ந்திருந்தால், அது மிகவும் அற்பமான விஷயம்; ஏனெனில் நாம் எழுத்தாளரான ஃபதயேவை மீண்டும் பெற்றிருப்போம்; ஒரு புதிய புத்தகத்தோடு, அநேகமாக அவரது முறியடிப்பு போன்ற நல்லதொரு நூலோடு, நாம் அவரைத் திரும்பவும் மகிழ்ச்சியோடு வரவேற்றிருப்போம்.

கடந்த பதினைந்தாண்டுக் காலத்திய ஃபதயேவ் என்னதான் செய்தார்? அவர் சித்தாந்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் எழுத்தாளர் யூனியனுக்கு வழிகாட்டினாரா? இல்லை. கட்சிதான் நமக்கு வழிகாட்டுகிறது என்றுதான் நாம் எப்போதும் சரியான காரணத்தோடு கருதி வந்துள்ளோம். இலக்கிய விவாதங்களில் கலந்து கொள்வது, அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது, எழுத்தாளர்களுக்குக் குடித்தனப் பகுதிகளை ஒதுக்கீடு செய்வது முதலியவற்றில் தான் ஃபதயேவ் ஆண்டுக்கணக்காக மும்முரமாக ஈடுபட்டிருந்தாரேயன்றி, அவர் என்றுமே ஒரு வார்த்தைகூட எழுதியதில்லை. புத்தகங்களை எழுதுவது போன்ற ''உதவாக்கரை'' வேலையில் ஈடுபட அவருக்கு நேரமே இருக்கவில்லை. ஆனால் 1944 முதற் கொண்டு அவரை அவரது செயலாளர் வேலைகளிலிருந்து சில ஆண்டுகளுக்கு விடுவிக்கப்பட்ட போதோ, அவர் உடனே எழுத்துப் பணியில் ஈடுபட்டார்; மிகவும் குறுகிய காலத்தில் கிராஸ்னொதானைச் சேர்ந்த இளைஞர் படையைப்பற்றி ஓர் அற்புதமான புத்தகத்தையும் எழுதி முடித்தார். உள்ளத்தைக் கிளறும் உணர்ச்சியோடு இளம் மக்களைப் பற்றி எழுதுவதில் ஃபதயேவுக்குள்ள அற்புதமான திறமையைப் போன்ற எதையும், வசன இலக்கிய எழுத்தாளர்களான நம்மில் எவரும் பெற்றிருக்க வில்லை; இளைஞர் படை*யில் அவரது பெருந்திறமையின் இந்தப் போக்கு பூரணமாகப் புலனுயிற்று.

---

* இந்த நாவல் இதே தலைப்பில் தமிழில் வெளிவந்துள்ளது. வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். தமிழாக்கம்: டி. ஆர். கணேசன்.

ஆண்டுகள் சில கழிந்தன; மீண்டும் எழுத்தாளர் ஃபதயேவ் மறைந்து விட்டார்; இலக்கிய நிர்வாகியான ஃபதயேவ் மீண்டும் தோன்றினர். சில சமயங்களில் நாம் உண்மையிலேயே எத்தகைய அற்புதமான மாற்றத்தைக் காண நேர்கிறது! மேலும், இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்து வரும் அந்த அற்புத உலகம் கூப்பிடு தூரத்தில்தான்—வொரோவ்ஸ்கி வீதியில்தான்—உள்ளது.

இந்த நிர்வாகப் பதவிக்கு நமது கட்சியில் அந்தஸ்தில் குறைந்த ஒரு நபரைக் கண்டறிந்திருக்க முடியாதா? மேலும், எழுத்தாளர்களது சங்கீதக் கோஷ்டிக்கு ஃபதயேவ்தான் கலை இயக்குநராக இருந்தார் என்று எவரேனும் கூறினால், இதனை நான் இவ்வாறு குறிப்பிட்டால், அதுவும் உண்மையல்ல. ஃபெதின், கிளாத்கோவ், லியானேவ் ஆகியோரோ அல்லது பெரிய எழுத்தாளர்களில் வேறு எவருமோ, நாவல்கள் எழுதுவது எப்படி என்பது பற்றிய உத்தரவுகளைப் பெறுவதற்காக, ஃபதயேவை அணுகியதில்லை. நம்மில் ஒவ்வொருவரும் அவரவர் தம் சொந்த எழுத்து முறையை, சொந்த உலகப் பார்வையை, சொந்த நடையைப் பெற்றிருக்கிறோம்; கலாபூர்வமான திறமை பற்றிய பிரச்சினைகளில், ஃபதயேவ் நமக்கு ஒரு மறுக்க முடியாத அத்தாட்சியாளராக இருக்க முடியாது; அவ்வாறு அவர் என்றும் இருந்ததும் இல்லை. யாகுப் கோலாஸ், ரைல்ஸ்கி, திச்சினு, துவர் தோவ்ஸ்கி, திக்கனேவ், மார்ஷாக், கிஸோகோவ்ஸ்கி, ஷிச்சி பச்சேவ் ஆகியோரோ அல்லது ஏனைய பெரிய கவிஞர்களில் எவருமோ, பாடங்களைக் கற்றிக் கொள்ள இப்போது எவ்வாறு சுர்கோவை நாடி வருவதில்லையோ, அதேபோல் வசன இலக்கிய எழுத்தாளர்களும் ஃபதயேவை நாடிச் செல்லவில்லை. அவர்கள் அனைவரும், சுர்கோவும் கூடத்தான், ஒரு வாத்தியக் கோஷ்டியில் மேளங்கள், தாளங்கள், மற்றும் தட்டி இசை யெழுப்பும் ஏனைய கருவிகள் ஆகியவற்றைத் தவிர, ஏனைய விஷயங்களும் பலவுண்டு என்பதை நன்றாக அறிவர். எனவே சுர்கோவிடமிருந்து அவர்கள் என்ன கற்றறிந்து கொள்ள முடியும்? என்றாலும், கவிஞர்கள், வசன இலக்கிய கர்த்தாக்கள், விமர்சகர்கள், நாடகாசிரியர்கள் ஆகிய எல்லோரும் கார்க்கியை நாடித்தான் சென்றனர்...ஃபதயேவ், அல்லது சுர்கோவ் போன்ற இலக்கியத் தலைவர்களிடம் அவர்களது தோழர்களில் எவருமே தமது பிரச்சினைகளை என்றுமே கொண்டு வரவில்லை என்றால், அல்லது அவ்வாறு கொண்டுவரும் எண்ணம் எதையும் கொண்டிருக்கவும் இல்லையென்றால் அத்தகைய தலைவர்கள்தான் நமக்கு எதற்கு என்று எவரும் கேட்க மாட்டார்களா?

உதாரணமாக, ஷோலகோவ் அல்லது சிமனேவ் நமது யூனியனின் தலைவராக இருந்தால், நிலைமைகள் வேறுவிதமாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நிச்சயமாக இருக்காது. எல்லாம் அப்படி அப்படியேதான் இருந்து வரும். நமது எழுத்தாளர்களும் அதனால் எவ்விதத்திலும் மேம்பட்டுவிட மாட்டார்கள்.

அளவுக்கு மீறிய கூட்டங்களின் சந்தடியிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும், எழுத்தாளர்களின் சிந்தனையைப் புத்தகங்கள் எழுதும் அவர்களது பிரதான வேலையிலிருந்து பறித்துக் கொண்டு விடும் எல்லாவற்றிலிருந்தும், எழுத்தாளர்களை விடுவிப்பது அத்தியாவசியமாகும். இப்போதுள்ள நிலைமையில் நாம் மிகவும் இரங்கத்தக்க நிலையிலேயே இருக்கிறோம். ஏனெனில் லியானோவ், திக்கனோவ், ஃபெதின் போன்ற பெரும் திறமையாளர்களும் பிறரும், தமது மதிப்பிடற்கரிய நேரத்தில் மிகப் பெரும் பகுதியைச் சகலவிதமான கூட்டங்களிலும் கலந்து கொள்வதன் மூலமே வீணடித்து விட்டனர்; இதற்குப் பதிலாக, அவர்கள் வாழ்க்கையை ஆராயவும் எழுதவும் கூடிய விதத்தில், இதிலிருந்து விடுபட்டவர்களாக இருந்திருக்க வேண்டும். இதற்கு நாம் முடிவு கட்ட வேண்டிய தருணம் வந்து விட்டது. வாசகர்கள் நாம் அவர்களுக்குப் புத்தகங்களை வழங்க வேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர, கூட்டங்களில் ஆற்றும் உரைகளை அல்ல. வாழ்க்கையோடு நேரடியாகத் தொடர்பு கொள்ள எழுத்தாளர்களுக்கு உதவ வேண்டியது அத்தியாவசியம்; அவர்கள் வாழ்க்கையின்பால் முழுக்க முழுக்க நேர்முகமாகத் திரும்பியாக வேண்டும். இதனைச் செய்வதற்கு எந்தப் பிரத்தியேகத் தீர்மானங்களையும் நிறைவேற்ற வேண்டிய தில்லை.

எழுத்தாளர்கள் ஒவ்வொருவரோடும் பேசுவதன் மூலம், அவர்களது விருப்பங்களை நிர்ணயிக்க வேண்டும் என்று யூனியனிடம் கேட்டுக் கொள்வதே எளிதாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன். என்னதான் இருந்தாலும், நிச்சயமாக அவர்கள் எல்லோருமே ஒரு மாற்றத்துக்காக வெளியே செல்ல என்றுமே துணியாமல், பெரிய நகரங்களிலேயே வசித்து வர விரும்புகிறார்கள் என்று சொல்ல முடியுமா என்ன? கூட்டுப் பண்ணை அல்லது அரசாங்கப் பண்ணையைக் களமாகக் கொண்ட நாவல்களை எழுதச் சற்று மும்முரமாக ஈடுபட வேண்டும் என்று விரும்பும் எழுத்தாளர்களை, அவர்கள் தேர்ந்தெடுக்கும் எந்த வொரு கிராமப்புறத்துக்கேனும், மூன்று அல்லது நான்கு

ஆண்டுகள் அவர்கள் போய் இருந்து விட்டு வருவதற்கு, நாம் ஏன் உதவக் கூடாது? அவர்கள் வசிப்பதற்கு அங்கு நாம் வீடுகளும் கட்டிக் கொடுக்கலாம்; அதில் அமர்ந்து அவர்கள் தமது இதயம் நிறைவு காணும் விதத்தில் எழுதித் தள்ள முடியுமே. அவர்கள் தாம் விரும்பும் எந்தச் சமயத்திலும் மாஸ்கோவுக்கோ, மின்ஸ்க்குக்கோ, கீவுக்கோ அல்லது தாம் விட்டுச் சென்ற எந்தவொரு நகருக்கோ வரலாம் என்பதையும், என்றாலும் அவர்கள் பெரும்பகுதி நேரத்தில் தமது வருங்கால நாவல்களின் கதாநாயகர்கள் மத்தியிலேயே வாழ்ந்து வருவார்கள் என்பதையும், இதுவே வெற்றிக்கு ஓர் உத்தரவாதமாக விளங்கும் என்பதையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நாம் இஞ்சினியர்களுக்கும் தொழில் நுட்ப நிபுணர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். இல்லையா? எனவே, இதே காரியத்தை நாம் ஏன் எழுத்தாளர்களுக்கும் செய்து கொடுக்கக் கூடாது? இதைப்பற்றி நான் கூறுவதற்குக் காரணம், உண்மையில் ஓர் எழுத்தாளர் புரியும் வேலை, ஒரு வீட்டுக் கைத்தொழில் என்பதால்தான். அவர் விஷயங்களைச் சேகரிக்கும் வேட்டைக்காக வெளியே போகாத சமயங்களில், வீட்டுக்குள்ளே மேஜை முன் அமர்ந்து எழுதிக் கொண்டிருப்பார்; மேலும் அவரது வேலையைச் சாதாரண வேலைநாளின் மணிக்கணக்கில் கணக்கிட முடியாது. எனவேதான் ஒரு கூட்டுக் குடித்தனப் பகுதியில், உதாரணமாக ஓர் அரசாங்கப் பண்ணையின் கூட்டுக் குடித்தனப் பகுதியில், அவர் வசிப்பது என்ற கருத்து முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும். சமையலறையில் இரைந்து கொண்டிருக்கும் ஒரேயொரு மண்ணெண்ணெய் ஸ்டவ் அடுப்பும், ஒரே ஒரு மனைவியும்—அவள் பெரிய வாயாடியாக இருந்தாலும் கூட—மட்டும் வீட்டில் இருந்தால் நல்லது; ஏனெனில் தனக்குத் தேவையான அமைதியைப் பெறுவதற்குக் கணவனுக்கு ஒரு போராடும் சந்தர்ப்பமாவது கிட்டும்; ஆனால், சமையலறையில் எட்டு மண்ணெண்ணெய் ஸ்டவ் அடுப்புக்கள் இரைந்து கொண்டிருந்தால், எட்டுப் பெண்கள் ஒன்று கூடி ஒருவரையொருவர் பேச்சில் மிஞ்சும் காரியத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தால், அது முற்றிலும் வேறு விஷயம். அத்தகைய இடத்தில் வேலை பார்ப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

இந்த முயற்சியில் ஈடுபடத் தீர்மானிக்கும் எழுத்தாளர்கள் இந்தக் காரியத்தை மிகவும் கரிசனத்தோடு கருத்தில் கொள்ள வேண்டும்; தமது மனைவி, குழந்தைகள், தமது தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாவற்றோடும், தமது வீடு முழுவதையுமே காலி செய்து அங்கு செல்ல வேண்டும். இது ஒன்றும் "படைப்பாக்கப்

பயணம்'' அல்ல. அவர்கள் தமது வேலைக்குத் தேவைப்படும் விதத்தில் இங்கும் அங்குமாகப் பயணம் செய்யக் கூடியவாறு அவர்களுக்குக் கார்கள் வாங்கிக் கொடுத்து உதவுவதும்கூட நல்லதொரு யோசனையேயாகும்; இதன்மூலம் அவர்கள் நடு ரோட்டில் நின்று கொண்டு, ஏனைய கார்களைக் கை காட்டி நிறுத்த வேண்டிய சிரமத்திலிருந்தும், அல்லது உள்ளூர் எந்திர மற்றும் டிராக்டர் நிலையத்தின் டைரக்டர், வட்டாரக் கட்சிக் கமிட்டியின் செயலாளர் அல்லது பிராந்திய சோவியத்தின் தலைவர் ஆகியோரது தயவை என்றென்றும் சார்ந்திருக்கும் நிலையிலிருந்தும் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

எல்லா எழுத்தாளர்களுமே கிராமங்களுக்குக் குடிபெயர்ந்து விட வேண்டியதில்லை என்பதும் உண்மைதான். கூட்டுப் பண்ணை வாழ்க்கையைப் பற்றி நேர்முகமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் மட்டுமே போனால் போதும். தொழிலாளி வர்க்கத்தை அல்லது நகர்ப்புற அறிவுத் துறையினரைப் பற்றி எழுதத் திட்டமிடும் எழுத்தாளர்களுக்கு சோவியத் யூனியனி லுள்ள எந்தவொரு தொழில் துறை நகரத்திலோ அல்லது பிற நகரத்திலோ வரவேற்பு உண்டு.

கட்சி உறுப்பினரான எழுத்தாளர் ஒருவர், தாம் தேர்ந் தெடுத்துச் சென்ற கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தவுடனே, அங்குள்ள உள்ளூர்க் கட்சி ஸ்தாபனத்தில் சேர்ந்து விட வேண்டும்; மேலும் அவர் தமது பிரதானமான வேலைக்குக் குந்தகம் ஏற்படாத விதத்தில் அங்கும் ஏதாவதொரு பயன்மிக்க பணியை ஆற்றி வரவும் முடியும். கட்சி உறுப்பினரல்லாத எழுத்தாளரும் சில பொதுஜனக் கடமைகளை ஏற்றுக் கொள்ள மறுக்க மாட்டார். எழுத வேண்டிய விஷயங்களைப் பொறுத்த வரை, அங்கு அவை அவருக்கு ஏராளமாகவே கிடைக்கும். நம்மைச் சுற்றிலும் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைக் கூர்மையாகப் பார்த்து அதனைக் கிரகித்துக் கொண்டால் போதும்! ஓர் எழுத்தாளர் மக்களின் வாழ்க்கையையே தாமும் உண்மையாக வாழும்போது, அவர் களது துயரங்களோடு வருந்தி, அவர்களது இன்பங்களோடு சேர்ந்து மகிழ்ந்து, அவர்களது அக்கறைகளிலும் தேவைகளிலும் தாமும் சொந்த முறையில் சம்பந்தப்பட்டிருக்கும் உணர்ச்சியை யும் பெற்று உணரும்போது, அவர் எழுதும் புத்தகம் ஓர் உண்மையான புத்தகமாக, வாசகர்களின் இதயங்களைத் தொடு கின்ற புத்தகமாக இருக்கும்.

உதாரணமாக, வால்கா பிரதேசத்தைச் சேர்ந்த மனிதரான பான்ஃபெரோவ், வால்கா நதிக்கரைகளில் சில ஆண்டுகள் வசித்து, இந்த மாபெரும் நதி, ''வால்கா மாதா''வே தவிர, மூன்று முறை பிரிந்துபோன ஓர் அத்தைக்காரியல்ல என்று வாசகர்களும் உணரும் விதத்தில், ஒரு நாவலே ஏன் எழுதக் கூடாது? அப்பழுக்கற்ற ரஷ்ய மொழியில் அற்புதமான சொல்லாட்சித் திறனும், மிக மிக நுண்மையாகக் கூர்ந்து கவனிக்கும் ஆற்றலும் படைத்த எழுத்தாளரான பாஸ்தோவ்ஸ்கி, இங்கு தோழர் லாரியானோவ் மிகவும் மனத்தைக் கவரும் விதத்தில் வருணித்துக் கூறிய மெஷ்செரா சமவெளிப் பிரதேசத்துக்கு ஆண்டுதோறும் வந்து செல்வதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கிறார். ஓகா நதிக்கரையில் எங்காவது ஓரிடத்தில் பாஸ்தோவ்ஸ்கியைக் குடியமரச் செய்வதற்கு ஏன் உதவக் கூடாது? தூண்டில் போட்டு மீன் பிடிப்பதைப் பொழுது போக்காகக் கொண்டுள்ள பாஸ்தோவ்ஸ்கிக்கு நெடு நேரமாக மீன் எதுவும் சிக்காது போகுமாயின், அவர் தம்மைச் சுற்றியுள்ள கூட்டுப் பண்ணை உலகத்தை ஒரு கலைஞரின் அக்கறைமிக்க பார்வையோடு கூர்ந்து கவனிப்பார் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். இதனால் எழும் சிந்தனைகள் உண்மையிலேயே நல்ல தொரு புத்தகத்தைத் தோற்றுவிக்கும் வாய்ப்பை வழங்கும். பெர்வெந்த்சேவும் கூட, சிறிது காலத்துக்கு மாஸ்கோவை விட்டு வெளியேறி, தமது சொந்த நாடான கூபான் பிரதேசத்தில் மீண்டும் குடியேறலாம். திறமை வாய்ந்த கவிஞரான சொர்கி வாஸில்யேவ் குர்கா பிரதேசத்திலுள்ள தமது பிறந்த ஊருக்குச் சென்று, சிறிது காலம்தான் தங்கித் திரும்பினார்; எனினும் வரும்போது அவர் சில நல்ல கவிதைகளைக் கொண்டு வந்தார். அவர் அங்கு அதிகமான காலம் தங்கியிருப்பாரேயானால், அவர் ஒரு பெரிய கவிதைத் தொடரையே அல்லது ஒரு நெடுங் கவிதையையே உருவாக்குவார். அல்தாய் பிரதேசத்திலிருந்து வந்துள்ள பெர்மித்தினும் கூட தமது சொந்தப் பிரதேசத்துக்குத் திரும்பிச் செல்வதால், நன்மையே தவிர தீமை விளையாது; அவ்வாறு சென்றால், சில ஆண்டுகளுக்குள்ளாகவே அவர் மற்றொரு புத்தகத்தை எழுதும் விதத்தில் வளம் பெற்று விடுவார். தமது தங்கத் தாரகை தாங்கியவர் என்ற நூல் தமக்கு நாலாவது ஸ்டாலின் பரிசைக் கூடக் கொண்டு வராது என்று முற்றிலும் சரிவரவே தீர்மானித்துக் கொண்ட பாபாயேவ்ஸ்கி, மூன்றாண்டுகள் தங்கியிருந்து திரும்புவதற்குச் சீனாவுக்குப் போயிருக்கிறார் என்று வதந்தி. அதுவும் நல்லதுதான். நமது நண்பர்களான சீன விவசாயிகளைப் பற்றிய ஒரு நல்ல நாவலோடு

அவர் திரும்பி வந்தால், அது நம் அனைவருக்குமே ஓர் அற்புத மான பரிசாக விளங்கும்.

நாடுகளிலெல்லாம் மிகப் பரந்ததான நமது நாட்டில் எங்கேனும் சென்று குடியேற முடிவு செய்யும் எழுத்தாளர்கள் அனைவருக்கும் சரியான முறையில் உதவியாக வேண்டும்; ஏனெனில் தாராளமாகச் செலவு செய்வதற்கு எல்லா எழுத் தாளர்களிடமும் ஏராளமாகப் பணம் இருக்கிறது என்பது ஓர் அசட்டுத்தனமான கட்டுக்கதையே தவிர வேறல்ல.

தோழர்களே, இங்கு நான் இதனை உங்களிடம் கூறிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில், என் இதயம் மட்டும் சரியாக இல்லை: அதோ இரும்பு மனிதரான நமது நிதியமைச்சர் தோழர் ஜிவெரேவ் எனது அதீதமான திட்டங்களைக் கேட்டுக் கொண்டு அமர்ந்திருக்கிறார்; அவர் ஏற்கெனவே என்னைத் தமது வர்க்க எதிரியாகக் கருதத் தொடங்கிவிட்டார் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். அவரது மனத்தில் அமைதி நிலவ நான் என்ன கூற முடியும்? முதலாவதாக எனது திட்டம் நனவாவதற்கு முன்னால், எத்தனையோ 'ஆனால்'களுக்கும், 'அப்போதுதான்'களுக்கும் தீர்வு கண்டாக வேண்டும். இரண்டாவதாக, மறு குடியேற்றம் செய்யும் எழுத்தாளர்களில் மூவரில் ஒருவர் மட்டுமே ஒரு நல்ல, மிகவும் அவசியமான புத்தகத்தை எழுதி முடிப்பாராயினும்கூட, அது இந்தத் திட்டத்தைப் பெருமளவுக்கு நியாயப்படுத்தி விடும். மேலும், அன்பார்ந்த தோழர் ஜிவெரேவை அமைதிப்படுவதற்காக நான் இங்கேயே இப்போதே மனப்பூர்வமாக ஒரு சபதமும் செய்து கொள்கிறேன்: கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்குச் சொந்தமான பழமரங்கள் பற்றிய விஷயம் குறித்து, நான் உயிரோடுள்ளவரை, என்றுமே பிராவ்தாவுக்கு மீண்டும் எழுத மாட்டேன். என்னதான் இருந்தாலும், அதற்கும் எனது தொழிலுக்கும் என்ன சம்பந்தம்? இந்த விஷயத்தில் என்னைக் காட்டிலும் தோழர் ஜிவெரேவே மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த விஷய ஞானத்தைப் பெற்றிருப்பவர். விவசாயிகள் தமது பழ மரங்களை எப்போது வெட்டித் தள்ள வேண்டும், எப்போது புதிய கன்றுகளை நட வேண்டும் என்பதை அவர் நன்கறிவார். எனவே இதனை நான் அவருக்கே விட்டு விடுகிறேன்.

நமது இடத்தைக் காலக் கிரமத்தில் நிரப்பவிருக்கும் இளம் எழுத்தாளர்களின்பால், உங்களது விசேடமான கவனத்தைத் திருப்ப நான் விரும்புகிறேன். மூத்த தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்களைப் பற்றியும், அவர்களிற் சிலர் தமது சுற்றுச் சூழலை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் நான்

கூறியுள்ளவை, இளம் எழுத்தாளர்களில் மிகவும் திறமை படைத்தவர்களுக்கும் முற்றிலும் பொருந்தும்; ஒரே வித்தியாசம் என்னவெனில், அவர்களுக்கு மேலும் அதிகமான நிதியுதவி தேவைப்படும்; அத்துடன் அவர்களே மிகுந்த கவனத்தோடும் கையாண்டு வரவேண்டும். அவர்களில் அநேகமாக எல்லோருமே வாழ்க்கைச் செலவுக்காக ஏதாவதொரு வேலையைச் செய்து வருகிறார்கள்; தமது முதல் பெரிய நாவலை அல்லது சிறுகதைத் தொகுதியை எழுதி முடிப்பதற்காக, அவர்கள் தமது வேலையை விட்டு விலகினால், அவர்கள் மிகவும் சங்கடமான நிலைமை களுக்கே உள்ளாக நேரிடும். அவர்களிற் சிலருக்கு உதாரண மாக, பள்ளி ஆசிரியர்களுக்குத் தமது பள்ளியைவிட்டு விலக வேண்டியது தவிர்க்கொணாததாகிவிடும்; ஏனெனில் ஒரே சமயத்தில் பள்ளி ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் இருந்து வருவது அசாத்தியம். நமது பள்ளி ஆசிரியர்களின் வேலை நாள் எத்தனை பயங்கரமான அளவுக்கு வேலைப்பளு மிக்கதாக உள்ளது என்பதை ஓரளவுக்குத் தெரிந்தவர்கள் ஒவ்வொருக்கும் கூட, இது தெள்ளத் தெளிவாகப் புரியும்.

முதலாவது எழுத்தாளர் காங்கிரசுக்குப் பின்னால் கார்க்கி இவ்வாறு கூறினார்: ''அற்புதமான எழுத்தாளர்களின் ஒரு பெரும் பட்டாளத்தையே நாம் உருவாக்க வேண்டும்—ஆம். நாம் உருவாக்கியாக வேண்டும்!'' பிரதிநிதித் தோழர்களே, கார்க்கியின் இந்த வார்த்தைகளை நாம் என்றுமே மறந்துவிடக் கூடாது. கார்க்கி இறந்தபோது, செர்ஜியேவ்–திசென்ஸ்கி, பிரிஷ்வின், சொரஃபிமோவிச், யாகுப் கோலாஸ், கிளாத்கோ, ஓல்கா ஃபோர்ஷ், மரீத்தா ஷாகின்யான், வெரேசயேவ், அலெக்சி டால்ஸ்டாய், நோவிகோவ்–பிரிபோய், ஷிஷ்கோவ் போன்ற எழுத்தாளர்களும் பிறரும் இருந்து வந்தனர் என்பதை நினைவு கூருங்கள். அவர்கள் முதுபெரும் எழுத்தாளர்கள். ஏனையோர் பின்னர் இந்த அணி களில் சேர்ந்தனர்; அவர்களே இன்று மிகவும் பிரபலமாகவுள்ள எழுத்தாளர்கள்; எனினும் அவர்களில் மிகமிகக் குறைந்த வயதுடையவருக்கும் கூட, வயது ஏற்கெனவே ஐம்பதைத் தாண்டி விட்டது. நமது அணிகளில் புதிதாக வந்து சேர்வோர் மிக மிக மெதுவாகத்தான் வந்து சேர்கின்றனர். 1936-ல், கார்க்கி மரணமடைந்த ஆண்டில் இருந்ததைக் காட்டிலும், இன்று இளம் எழுத்தாளர்கள் குறைவாகத்தான் உள்ளனர். எனவே வருங்கால நூலாசிரியர்களைப் பயிற்றுவிப்பதில் நமக்குள்ள பொறுப்பு மிகமிகப் பெரிதாகும். எழுத்தாளர்கள் மெதுவாகத்தான் வளர்கின்றனர்; வெறுமனே ஆறுவது

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அல்ல, மாறாக இன்றிலிருந்து இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்த பின்னால், இன்று தலையாய எழுத்தாளர்களாக இருப்பவர்களில் எவருமே அநேகமாக மிஞ்சியிராத அந்தக் காலத்தில், இலக்கியத் துறையில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கும் என்பதைப் பற்றி நாம் இப்போதே தீவிரமாகச் சிந்தித்தாக வேண்டும்.

நாம் அனைவரும் நமது மாபெரும் கம்யூனிஸ்டுக் கட்சியின் குழந்தைகள். நம்மில் ஒவ்வொருவரும் கட்சியைப் பற்றி நினைக்கும்போது, மிகப் பெரும் உணர்ச்சிப் பெருக்கோடு மானசிகமாக இவ்வாறு எப்போதும் கூறிக் கொள்கிறோம்: ''நீ எங்களுக்கு ஒரு தாய் போன்றவள்; நீதான் எங்களைப் பேணி வளர்த்தாய்; எங்களை உருக்குப் போல் உறுதி பெறச் செய்தாய்; உண்மையான ஒரே மார்க்கத்தின் வழியாக நீதான் வாழ்க்கை முழுவதும் எங்களை வழிநடத்திச் செல்கிறாய்.'' இனி நான் முடிவுரையாக இவ்வாறு கூறுகிறேன்:

எனது கட்சியே! நீ பலம் வாய்ந்த, தெள்ளத் தெளிவாகச் சிந்திக்கும் கூட்டுச் சிந்தனையையும், கண்டிப்பாகவும் அன்பாகவும் இருக்கக்கூடிய ஒரு தாயின் கரங்களையும் கொண்டிருக்கிறாய். உனது எழுத்தாளர்களுக்கு உதவுவதற்கான மார்க்கத்தை நீ கண்டறிவாய்; உனது கவனத்தாலும் அக்கறையினாலும் உற்சாகம் பெற்று, அவர்கள் எங்களது கட்சியான உனக்கும் நமது நாட்டுக்கும் தகுதியான புதிய படைப்புக்களை வெளிக் கொணரும் போது, நன்றியுணர்வுமிக்க சோவியத் வாசகர்களும் அயல் நாட்டு வாசகர்களும் முதலாவதாக உனக்குத்தான் நன்றி செலுத்துவார்கள்.

1956

உக்ரேனின் மாபெரும் புதல்வர்

தமக்குப் பிறப்பளித்த மக்களுக்கே தமது இதயங்களையும், திறமைகளையும், சிந்தனைகளையும் அர்ப்பணித்த நமது தாயகத்தின் மாபெரும் புதல்வர்களது கீர்த்தி வாய்ந்த திருநாமங்கள் என்றென்றும் நினைவுகூர வேண்டியவையாகும். அத்தகைய திருநாமங்களில் ஒன்றே இவான் ஃபிராங்கோ.....

அன்னாரது 100 ஆவது பிறந்தநாள் விழா சோவியத் யூனியனது மக்களால், முதன்மையாக எனது இனத்தவர்களான உக்ரேனியர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

லட்சோப லட்சக் கணக்கான குரல்களின் கோஷ்டி கானத்தோடு நானும் எனது சொந்த அடக்கமிக்க குரலைச்

சேர்க்கவும். இந்த மாபெரும் எழுத்தாளருக்கு, உக்ரேனின் மாபெரும் புதல்வருக்கு எனது அன்பையும் நன்றியையும் தெரிவிக்கவும் விரும்புகிறேன்.

1956

ஹங்கேரிய எழுத்தாளர்களுக்கு

ஹங்கேரியில் நிகழும் நிகழ்ச்சிகள் ஒரு சோவியத் பிரஜையும், எழுத்தாளரும், கம்யூனிஸ்டுமான என்னை எனது ஆன்மாவின் ஆழத்தையே தொட்டுலுப்பும் அளவுக்கு மனம் கலங்கச் செய்துள்ளன. இந்தச் சம்பவங்கள் சோஷலிசத்தைக் கட்டியமைக்கவும், மக்களுக்கு மேலும் சிறந்த வாழ்வை உருவாக்கவும் கடமைப்பட்டிருந்த, மக்களது ஹங்கேரியின் முன்னுள் தலைவர்கள் இழைத்த படுமோசமான தவறு களாலேயே பெரிதும் விளைந்துள்ளன என்பதை அறிவதன் காரணத்தால், இவை மிகவும் வேதனையளிப்பவையாக உள்ளன.

இந்தச் சம்பவங்களை ஜீரணிப்பது மிகவும் கடினமாக இருப்பதற்கான மற்றொரு காரணம், இந்தத் தவறுகளுக்கு எதிராக மிகவும் துணிவோடு வாய்திறந்து பேசிய எனது சகாக்களான ஹங்கேரிய எழுத்தாளர்கள், படுகுழப்பம் நிலவிய போது சரியான தருணத்தில் பிற்போக்குக் கும்பலுக்கு எதிராகத் தமது குரல்களை எழுப்பத் தவறிவிட்டார்களே என்பதே யாகும்.

நிலைமையை மிகவும் பரபரப்புமிக்கதாக ஆக்குவது என்ன வெனில், நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான மார்க்கம் பல பேருக்கு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என்பதுதான். ஆயினும் நான் ஒரு நன்னம்பிக்கைவாதி என்றே கூறுவேன். மேலும் எனது நன்னம்பிக்கைக்கு ஆதரவாக, ஹங்கேரியில் நிகழ்ந்த சம்பவங்களுக்கும், உள்நாட்டுப் போரின்போது டான் பிரதேசத்தில் நிகழ்ந்தனவற்றுக்கும் இடையே ஒரு நேரிணையை வகுத்துக் கூறவே நான் விரும்புகிறேன். கடைந்தெடுத்த எதிர்ப் புரட்சியாளர்களைத்தவிர, குருட்டுத்தனமாக வெள்ளைப்படை இயக்கத்துக்குள் போய்ச்சேர்ந்த நபர்களும் இருந்தனர்; எனினும் காலக்கிரமத்தில் அவர்களில் மிகப் பெரும்பாலோர் தமது தவற்றை உணர்ந்து, சோஷலிசத்தைச் செயலூக்கமாகக் கட்டியமைக்கும் நிர்மாணிகளாக மாறினர்.

துணிவாற்றலும் கடின உழைப்பும்மிக்க ஹங்கேரிய மக்களின் தெளிந்த ஞானத்தில் நான் உளமார நம்பிக்கை வைத்திருக்

கிறேன்; வரும் ஆண்டில் ஹங்கேரிய உழைக்கும் மக்கள் ஹங்கேரிய சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் வழி காட்டலின்கீழ், உலகில் முன்னேற்றமும் சமாதானமும் ஏற்படு வதற்கான லட்சியத்துக்குத் தகுதிமிக்க பங்கினை ஆற்றுவார்கள் என்று நான் உளப்பூர்வமாக நம்புகிறேன்.

1956

கட்சியோடும் மக்களோடும் சேர்ந்து நடை போடுக

சோவியத் ஆட்சியின் 40 ஆவது ஆண்டு விழாக்கொண் டாட்டங்கள் வரவிருப்பதை எண்ணிப் பார்க்கும் போது, எழுத்தாளர்களான நாம் வாழ்க்கையிலிருந்து எவ்வளவு தூரம் பின்தங்கி நிற்கிறோம் என்பதை நினைவு கூர்வது மிகவும் மகிழ்ச்சியற்றதாகத்தான் இருக்கிறது. என்றாலும், நமது தொழில்ரீதியான கசப்புணர்வானது குடிமையுணர்வின் பெருமித உணர்ச்சியால் சமனப்பட்டு விடுகிறது: ஏற்கெனவே தீர்வு காணப்பட்டு விட்ட ஒரு மிகபெரும் பிரச்சினையிலிருந்து, இதைக் காட்டிலும் இன்னும் மிகப்பெரியதான இன்னொரு பிரச்சினைக்கு, தொழில்துறை நிர்வாகத்தையே அடியோடு புனரமைப்பது போன்ற பிரச்சினைக்கு, நமது கட்சியும் மக்களும் எவ்வாறு மாபெரும் அடியெடுத்து வைத்து முன்னேறி வருகிறார்கள் என்பதைப் பாருங்கள். எனவே நாமும் அவர்களுக்கினையாகச் செல்ல வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? மேலும், உண்மையில் நீங்கள் வாழ்வின் காரியார்த்தமான நோக்கிலிருந்து பார்த்தால், இதனால் குறிப்பிடத்தக்க தீங்கு எதுவும் நேர்ந்து விடவில்லை என்பதை நீங்களே ஒப்புக் கொள்வீர்கள்; ஏனெனில், நான் எனது கன்னி நிலம் உழப்பட்டது என்ற நாவலில், 1930 ஆம் ஆண்டுகளுக்கு அப்பால் செல்லவே இல்லை. ஆனால் நமது விவசாயத் துறையும் தொழில்துறையும் 1930 ஆம் ஆண்டின் தரத்திலேயே இன்னும் இருந்து வந்திருந்தால் அது எத்தனை பயங்கரமானதாக இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

என்றாலும் எழுத்தாளர்களான நாம் ஒவ்வொருவரும் கட்சி யோடும் மக்களோடும் சேர்ந்து நடைபோட்டுச் செல்லத்தான் விரும்புவோம். எனவேதான் நான் எனது கன்னி நிலம் உழப் பட்டது என்ற நாவலைக் கூடிய விரைவில் எழுதி முடிக்கவும், அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற எனது நாவலை எழுதுவதில் உண்மையிலேயே முழுமூச்சுமாக ஈடுபடவும் பெரிதும் ஆவலாக இருக்கிறேன்.

1957

பொது மக்களது மதியூகத்தின் செல்வக் களஞ்சியம்

ஒரு மக்களின் மிகப்பெரும் செல்வம் அவர்களது மொழி தான். மனித மனத்தின், மனித அனுபவத்தின் அளப்பரிய செல்வங்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சேகரிக்கப் பட்டு, வார்த்தைகளில் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றன. மேலும், பழமொழிகளைப்போல் வேறு எந்தவொரு வடிவத் திலுமே, மக்களின் மதியூகமானது அத்தனை வலிமையோடும் முழுமையோடும் பிரதிபலிக்கவில்லை என்றும், அவர்களது தேசிய வரலாறு, சமூக உறவுகள், வாழ்க்கை முறை, உலகக் கண் ணோட்டம் ஆகியவை அத்தனை ஸ்படிகத் திரட்சியோடு வேறு எதிலும் காணப்படவில்லை என்றும் சொல்லலாம்.

சொற்செட்டும் கற்பனை வளமும் மிக்க ரஷ்யமொழி பழ மொழிகளில் மிகவும் வளம் மிக்கதாகும். அவை ஆயிரம் ஆயிரமாக உள்ளன. அவை ஒரு நூற்றாண்டிலிருந்து மற்றொரு நூற்றாண்டுக்கு, ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு இறக்கை கட்டிப் பறந்து செல்வதுபோல் தோற்று கின்றன; இறக்கை கட்டிப் பறக்கும் இந்த மதியூகம் தனது பறப்பில் கடந்து செல்லும் தூரம் கண்ணுக்கே புலனாகாததாக உள்ளது....

பழமொழிகள் பல்வேறு சகாப்தங்களில் பிறப்பெடுத்தன; மக்களது இந்தத் தெள்ளத் தெளிவான செறிவுமான கூற்றுக் களிலும் பொன்மொழிகளிலும் மானிட உறவுகளின் மிகப்பரந்த நாணயமான தன்மை குடி கொண்டுள்ளது. காலமெனும் அதல பாதாளத்திலிருந்து அவை மக்களது இன்பத்தையும் துயரங்களை யும், கண்ணீரையும் சிரிப்பையும், அன்பையும் பகைமையையும், நம்பிக்கையையும் அவநம்பிக்கையையும், உண்மையையும் பொய்மையையும், நேர்மையையும் ஏமாற்றையும், விடா முயற்சியையும் சோம்பேறித் தனத்தையும், நியாயத்தையும் தப்பெண்ணத்தையும் பற்றிய கதைகளை நமக்குக் கொணர்ந்து தருகின்றன.

சோவியத் மக்கள் ரஷ்ய பழமொழிகளில் இடம் பெற்றுள்ள அருமை மிக்கவை அனைத்தையும் எடுத்துக் கொள்வர்; அவற்றில் காலாவதியாகிவிட்டவற்றையும், புதிய உலகைக் கட்டியமைப் பதில் தமக்கு எவ்விதத்திலும் பயன்படாதவற்றையும் அவர்கள் ஒதுக்கித் தள்ளிவிடுவர்.

நமது தேசபக்திப் பெருமிதம் பின்வருவன போன்ற பழ மொழிகளின் உருக்கு வார்த்தைகளில் வடிக்கப் பெற்றுள்ளது:

''ரஷ்ய மண்ணில் காலடி எடுத்து வைக்கத் துணியும் எவரும், தமது காலைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்''; ''இறுதி மூச்சு உள்ளவரையில் உனது சொந்த மண்ணின்மீது உறுதியாக நில்''; ''சரியான லட்சியத்துக்காகப் போராடுவதற்கு அஞ்சாதே.''

பொதுமக்களின் இந்த மதியூகப் பழமொழிகளையும் நாம் திரும்பவும் கூறலாம்: ''சோம்பேறிகளுக்கு மற்றவர்கள் செய்யும் வேலைதான் பிடிக்கும்''; ''பாரத்தைத் தூக்குவதற்கு முன்னால் உன் பலத்தை அளந்து பார்த்துக் கொள்''; ''வேறொருவன் முதுகில் இருக்கும்போது சுமை குறைவுதான்''; ''அடுத்தவர்கள் வேலை பார்ப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தால் மட்டும், உன் வீட்டு அடுப்பு எரிந்து விடாது''; ''ஒரு மணி நேரத் தாமதத்தை எட்டிப்பிடிக்க ஓராண்டு ஆகும்''; ''வார்த்தைகள் அம்புகள் அல்ல; என்றாலும் அவை இலக்கிலே சென்று தாக்கும்.''

ஆயினும், தேசியப் பகைமை, பண்ணையடிமைத்தன மனப்பான்மை, மாதர் உரிமைகளின்பால் ஏளனம், சமயச் சார்பான மூட நம்பிக்கை ஆகியவற்றின் முத்திரையைத் தாங்கிய பழமொழிகள்—சுருங்கச் சொன்னால், திருச்சபையின், மற்றும் வர்க்க, ஜாதியக் கருத்துக்களின் செல்வாக்குக்கு ஆட்பட்டிருந்த பழமொழிகள்—மக்களின் இயல்பான மதியூகத்தை வெளியிடாத பழமொழிகள், நமது காலத்தவருக்கு முற்றிலும் அன்னியமானவையாகும். இந்தச் செல்வாக்குக்கு எதிரான ஆட்சேபக் குரல் மிகவும் பொருத்தமான எண்ணற்ற கூற்றுக்களின் மூலம் எழுப்பப்பட்டுள்ளது; அவற்றில் சில கொல்லும் குத்தலான நையாண்டிமிக்க வார்த்தைகளைக் கொண்டவை; ஏனையவை வருத்தத்தோடு கூடிய கசப்புணர்ச்சியைக் கொண்டவை. இதோ அவற்றில் சில: ''ஏழை மனிதன் தனக்கு ரொட்டியை வழங்காவிட்டால் பணக்கார மனிதன் பணத்தைத் தான் தின்ன வேண்டியிருக்கும்''; ''தூய தீபங்களை ஜாக்கிரதையாக ஏற்று; இல்லாவிட்டால் நீ விக்கிரகங்களைக் கரியாக்கி விடுவாய்''; ''யாருக்கும் எந்தப் பயனும் இல்லாமல், பிரார்த்தனை கீதம் பாடப்பட்டது''; ''ரை தானியத்தை அதை அறுத்துப் போட்ட பின்னர் பாராட்டு; உன் எஜமானை அவர் நிரந்தரமாகத் தூங்கிப்போன பின்னர் பாராட்டு.''

பன்னூற்றாண்டுக் காலச் சமூக அநீதியும், மிருக பல வஞ்சகமும், மாய்மாலமும் மக்கள் மனத்தில் விபரீதமான கருத்துக்களையும் பொய்யான ஞானத்தையும் விதைத்து வளர்த்தன. ஓர் ஆரோக்கியமான உணர்ச்சியை அவமானப்

படுத்தும் ஏராளமான விஷயங்களும் பழைய பழமொழிகளில் உள்ளன. என்றாலும் விரைவாகச் சென்று கொண்டிருக்கும் நமது வாழ்க்கையினால் இவை யாவும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன; நமது புதிய சோஷலிச அனுபவம் புதிய உலக ஞானத்தைத் தோற்றுவித்து வருகிறது.

இவ்வாறாக, காலமானது பொதுமக்களது கூற்றுக்களின் தங்கம் கலந்த மணலைக் கழுவித் தெள்ளி எடுத்து, அதில் சிதறிக் கிடக்கின்ற தங்கத்துகள்களை, எண்ணிறந்த தலைமுறைகளின் வாழ்வையும் போராட்டத்தையும் மரபுகளையும் பிரதிபலிக்கும் வண்ணம் மெருகூட்டித் தருகிறது.

தனிச் சிறப்புமிக்க தர்க்கவியல் வாதியும் எழுத்தாளருமான வி. ஐ. தால் சென்ற நூற்றாண்டில் பல ஆண்டுக் காலமாகப் பாடுபட்டுத் தொகுத்தளித்துள்ள ரஷ்யப் பழமொழிகள் மற்றும் பொன்மொழிகள் என்ற வெளியீடு, நமது தேசியக் கலாசாரத்தின் வற்றாத செல்வம் பற்றிய நமது ஞானத்தை மேலும் விரிவடையச் செய்யும்; நமது மாபெரும் வலிமைமிக்க மொழியில் நாம் மேலும் சிறந்த சொல்லாட்சித் திறனைப் பெறவும் அது நமக்கு உதவும்.

1957

கடற்படையினருக்கு ஒரு கடிதம்

எனது அருமை மாலுமி நண்பர்களே,

உங்கள் கடிதத்துக்கும், எனது படைப்பில் நீங்கள் காட்டியுள்ள அக்கறைக்கும் நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

நான் எனது தாவிதோவை ஒரு பால்டிக் மாலுமியாக ஏன் ஆக்கினேன் என்பதைத் தெரிந்துகொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள்.

பாருங்கள், தாவிதோவுக்குப் பல முன்மாதிரியான நபர்கள் இருந்தனர். நான் பல மாலுமிகளைச் சந்தித்தேன்; அவர்களோடு உரையாடினேன்; கட்சி தம்மிடம் ஒப்படைத்துள்ள பணியை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றி வந்தனர் என்பதையும் பார்த்தேன். மேலும், அவர்கள் எங்கெங்கே இருந்தாலும் அங்கெல்லாம் அவர்கள் தமது அற்புதமான, புரட்சிகரமான கடற்படை மரபுகளை எப்போதும் புகுத்தி வந்தனர்.

விளதிமிர் இலியிச் லெனின் அக்டோபர் புரட்சியில் மாலுமிகள் புரிந்த சேவையை மிகவுயர்வாகப் பாராட்டினார். அவர்கள் உள்நாட்டுப் போரிலும் துணிவாற்றலோடு

போராடினர்; சோவியத் ஆட்சியைக் கட்டியமைப்பதிலும் செயலூக்கமாகப் பங்கெடுத்தனர்.

இதுதான் தாவிதோவை ஒரு மாலுமியாக்கும் கருத்தை எனக்கு வழங்கியது. ஒரு கிராமத்தின் முதல் கூட்டுப் பண்ணையை நிர்வகிக்க அந்தக் கிராமத்துக்கு வரும் ஒரு மனிதர் துணிவும், சகிப்புத் தன்மையும், நல்ல நகைச்சுவையுணர்ச்சியும், மக்களோடு பழகும் தன்மையும், அத்துடன் ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தில் வாழ்ந்த அனுபவமும் பெற்றிருக்க வேண்டியிருந்தது. இந்தக் குணநலன்கள் அனைத்தையும், அத்துடன் கட்சியின்பாலும், கம்யூனிச லட்சியத்தின்பாலும் கொண்டுள்ள எல்லையற்ற ஈடுபாட்டையும், சோவியத் கடற்படையில் தமது பயிற்சியைப் பெற்றிருந்த மாலுமிகளிடம் நான் கண்டேன்.

உங்கள் கடிதத்துக்குப் பதிலாக நான் இவ்வளவுதான் கூற முடியும் என்று எண்ணுகிறேன்.

நமது ராணுவத்தின் 40ஆவது பிறந்த தின விழாவன்று, நமது கீர்த்திமிக்க மாலுமிகளான உங்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1958

தாகன்ரோக் வாக்காளர்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து

அன்பார்ந்த தாகன்ரோக் வாசிகளே, அருமை நாட்டவரே!

நமது இந்த உரையாடல் எந்தவிதப் படாடோபமோ ஆசார அனுஷ்டானங்களோ இல்லாமல், சகஜமான முறையில் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நான் நான்கு மகா சபைகளுக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். நீங்கள் எனக்கு வாக்களிக்கப் போவது இது ஐந்தாவது முறையாகும். நான் தேர்ந்தெடுக்கப் பட்டால், சோவியத் யூனியனது சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவிடம் நான் என்ன யோசனையைத் தெரிவிப்பேன் என்பது தெரியுமா உங்களுக்கு? ருசியற்ற, சம்பிரதாய பூர்வமான சொற்பொழிவுகளுக்கு, அதாவது கிறுக்கி வைத்துள்ள குறிப்புகளிலிருந்து படித்துக் காட்டப்படும் பேச்சுக்களுக்கு, ஒரு தடை விதிக்க வேண்டும் என்றே யோசனை கூறுவேன்.

இங்கே எனக்கு அடுத்தாற்போல் அமர்ந்திருக்கும் நகரக் கட்சிக் கமிட்டிச் செயலாளரிடம், ''அதிகமான பேச்சாளர்கள் இருக்கிறார்களே!'' என்று நான் கூறினேன். அவரோ, ''உங்களைப் பற்றித் தாங்கள் எவ்வளவு நினைத்துக் கொண்டிருக்

கிறார்கள் என்பதை அவர்கள் சொல்லித்தானே ஆக வேண்டும்'' என்று பதிலளித்தார் அவர். நான் மீண்டும் இவ்வாறு கூறினேன்: ''கேட்பதற்குத் தகுதியாகக் கூறுவதற்கு ஒரு நபரிடம் எந்த விஷயமும் இல்லையென்றால், அவர் மௌனமாக இருந்து விடுவதே நல்லது.''

உங்களிடம் நான் என்ன கூற வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது? ஒரு பிரதிநிதி தாம் செய்துள்ள காரியங்களைக் குறித்துத் தமது வாக்காளர்களுக்கு விபரம் தெரிவிக்க வேண்டியது ஒரு சம்பிரதாய வழக்கம். எனினும் உண்மையில் எங்களது பணி விவரித்துக் கூறக் கூடியதா என்ன? சொல்வதைக் காட்டிலும் செய்து காட்டுவது எளிது என்பதை நீங்களே அறிவீர்கள். தற்போது வேட்பாளர்களான எங்களில் இரண்டு பேர் இங்கிருக்கிறோம். நிக்கொலாய் வாலிலியேவிச் கிசிலேவும், நானும் பல ஆண்டுகளாக நெருங்கிய நண்பர்கள்; ஆயினும் இதனால் எங்களுக்குள் அபிப்பிராய பேதமே என்றும் ஏற்படுவ தில்லை என்று அர்த்தமாகாது. விஷயம் அதியவசரமானதாக இருக்குமானால், இரவு முழுவதும் விழித்திருக்கத் தயாராக உள்ளவரும், அதிகாலை இரண்டு மணிக்கே வெஷன்ஸ்காயா வுக்குத் தொலைபேசி மூலம் கூப்பிட்டுப் பேசுபவருமான ஒரு பிராந்தியக் கமிட்டிச் செயலாளர் உண்மையில் நல்ல செயலாளர்தான்; இவரோடு வேலை பார்ப்பது எனக்கு எளிதாக வும் உள்ளது; இதன் விளைவாக, எங்களுக்குள் நாங்கள் சில வட்டாரப் பிரச்சினைகளை நன்முகச் சமாளிக்கவும் செய்கிறோம். மேலும் எங்களுக்கு எல்லாவிதமான பிரச்சினைகளும் உள்ளன.

ஒரு பிரதிநிதியாக இருப்பதோடுகூட, நான் ஒரு எழுத் தாளனுகவும் இருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். எழுத்தாளனுக இருப்பது எப்படி என்பதையும் நீங்கள் அறிவீர்கள்: சில சமயங்களில் ஓர் அத்தியாயம் எப்படி அமைய வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அந்த மாதிரி அது நமக்கு அமையவே அமையாது; நாம் எழுதியுள்ளதும் நமக்குப் பிடிக்காது; இதனால் நமக்குத் தூக்கமும் வராது. இதன்பின் நாம் சற்று நேரம் வெளியே போக வேண்டியிருக்கும்; ஒரு முறை புகை பிடிக்கவும், டான் நதியை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கவும், மீண்டும் எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்கவும் வேண்டியிருக்கும். ஒரு முறை இப்படித்தான் நான் சூரியன் எழுவதற்கு முன்பே, அதிகாலை நான்கு மணிக்கே வெளியே வந்தேன். அது கோடைக்காலம். என் வீட்டு வாசலுக்கு வெளியே ஒரு வண்டியையும், நுகக்கால்களிலிருந்து அவிழ்த்துவிடப் பெற்ற ஒரு ஜோடி எருதுகளையும், இரண்டு

காலியான பெட்ரோல் பீப்பாய்களையும் கண்டேன்; அத்துடன் ஒரு கோஸாக் மாதும் என்னை நோக்கி நேராக வந்தாள். ''நீங்கள் எங்கள் பிரதிநிதி என்பதால், உங்களிடம் நான் எனது பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றாள் அவள். நிகழ்ந்து விட்டது என்னவென்றால், அவளது வீட்டுத் தோட்டத்திலிருந்து அறுநூறு சதுர மீட்டர் நிலப்பகுதி துண்டாடப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது. அவ்வாறு துண்டாடுவது சட்டப்படி சரியல்ல. ஆயினும் நான் கூற வந்த விஷயம் அதுவல்ல. நான் அவளை நோக்கி அமைதியாகவும் மிருதுவான முறையிலும் இவ்வாறு கேட்டேன்: ''ஆயினும், என் அன்பார்ந்த பெண்மணியே, நீங்கள் ஏன் அதிகாலை நான்கு மணிக்கு இங்கு வர வேண்டும்?'' அதற்கு அவள் இவ்வாறு பதில் கூறினாள்: ''ஆனால் நான் என்ன உங்களை எழுப்பவா செய்தேன்? நீங்களே எழுந்து வெளியே வந்து விட்டீர்கள். நானும் உங்களைப் பார்த்து விட்டேன்....'' என்றாலும், நானும் விடாப்பிடியாக இவ்வாறு கூறினேன்: ''வட்டார நிர்வாகக் கமிட்டி அலுவலகத்தில், அவர்கள் ஒன்பது வரையிலும் தமது வேலையைத் தொடங்க மாட்டார்கள் என்பதை நீங்கள் தெரிந்திருந்தாலும், அங்கே நீங்கள் காலை ஏழு மணிக்கே சென்று விடுவீர்களா?'' இதற்கு அவள், ''ஆனால் நீங்கள் ஓர் அலுவலகம் அல்லவே. இல்லையா?'' என்று பதிலுக்குக் கேட்டாள். இது என் கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது. நான் ஓர் ''அலுவலகம்'' அல்ல என்பது உண்மை தானே. நல்லது. உங்கள் வழக்கைக் கூறுங்கள் என்றேன் நான்....

ரஷ்யர்கள் விடாப்பிடியான பிறவிகள்.

எனக்கும் போர்முனைச் சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறது. 1942-ல் கார்க்கோவுக்குச் செல்லும் வழிகளில், நமது ராணுவம் ''விக்டோரியா'' என்ற பெயர் படைத்த இத்தாலியப் படை டிவிஷன் ஒன்றுக்குப் பெருத்த தலைவலியைத் கொடுத்துக் கொண்டிருந்தது. நான் படைப் பிரிவோடு அந்தப் போரில் ஈடுபட்டிருந்தேன். அப்போது நமது போர் வீரர்கள் ஒரு படைப் பிரிவின் தளபதியைக் கைதியாகப் பிடித்துக் கொண்டு வந்தனர். அந்தக் கைதி ஒரு ரோமானியர்; மனைச் சிற்பி; அவர் அழகாக வெட்டிவிடப் பெற்ற சிறிய சதுர வடிவான தாடியைக் கொண்டிருந்தார். இந்த மனிதருக்குக் கழுத்தில் காயம் பட்டிருந்தது. நமது தகவல் சேகரிப்புப் பிரிவின் தலைவர் அவரிடம் ராணுவ விஷயங்களைக் குறித்துக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் எழுத்தாளனை நானே

ஏனைய விஷயங்களை—அதாவது அவர் என்ன ரகச் சிகரெட்டுகளைப் புகைத்து வந்தார்—ஆஹா! அவர் புகைத்து வந்தது பல்கேரியச் சிகரெட்டுகள் — இத்தாலியப் போர் வீரர்களுக்கு எத்தகைய உணவு அளிக்கப்படுகிறது, இத்தாலிய ராணுவ அதிகாரிகள் பொதுவாகக் கால்பட்டிகளையே அணிவது வழக்கமாக இருக்கும் போது, அவர் ஏன் பூட்சுகளை அணிந்திருந்தார் என்பன போன்ற விஷயங்களைத்—தெரிந்து கொள்வதில் உள்ளக் குறுகுறுப்போடு இருந்தேன். ''ரஷ்யர்களான நீங்கள் உண்மையிலேயே விசித்திர மான பிறவிகள்தான்'' என்று அவர் என்னிடம் கூறினார். ''ஏன்?'' என்று கேட்டேன் நான். ''தோட்டா என்னைத் தாக்கியவுடன் நான் கீழே விழுந்து விட்டேன். தரைமீதும் ஒரு ரஷ்யன், சிறு எந்திரத் துப்பாக்கியைத் தாங்கிய ஒரு சிப்பாய் நின்று கொண்டிருந்தான். நான் அவனை நோக்கி மூன்று முறை சுட்டேன். எனினும் குறி தவறிவிட்டது. அதன்பின் அந்தப் பயல் என்னை நோக்கி ஓடி வந்தான்; தனது கைத் துப்பாக்கியின் மட்டைப்பாகத்தினால் என்னை அடித்தான்; என் கால் பட்டி களையும் இழுத்துப் பிடுங்கிக் கொண்டான்; பின்னர் என்னை நன்றாக உலுக்கியெடுத்து, ஒரு குடிசையின் சுவரின்மீது சாய்த்து நிறுத்தினான். என் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. அவன் ஒரு சிகரெட்டைச் சுருட்டியெடுத்து அதனை என் வாய்க்குள் திணித்தான்; பிறகு தனக்கும் ஒரு சிகரெட்டைச் சுருட்டித் தயார் செய்து கொண்டான்; அதனைப் பற்ற வைத்தான்; பிறகு மீண்டும் போரிடுவதற்கு ஓடிப்போய் விட்டான்'' என்றார் அவர்.

கேட்டீர்களா கதையை? இது அருமையான குழப்பமாக இல்லை? ஒரு கைதியைத் தடியால் அடிப்பது, அவரது கால் பட்டிகளை இழுத்துப் பிடுங்குவது, அவருக்கு ஒரு சிகரெட் வழங்குவது, பிறகு மீண்டும் போரிட ஓடிப்போய் விடுவது! அதுதான் ரஷ்யத் தன்மை. அவர்தான் ரஷ்யப் போர்வீரர். எங்களது புத்தகங்களில் அவரது ஆன்மாவின் அந்தரங்க உள்ளோட்டங்கள் அனைத்தையும் புலப்படுத்திவிட எங்களால் என்றேனும் முடியுமா? அது மட்டும் எனக்குத் தெரிந்தால் நான் தொலைந்தேன், போங்கள்....

1958

தற்காலத்தைப் பற்றிய புதிய புத்தகங்களை வாசகர்கள் விரும்புகிறார்கள்

லித்தரத்துரா இ ஜிஸ்ன் பத்திரிகையானது அவ்வப்போது சில பக்கங்களையும், முழு இதழ்களையும், ரஷ்ய சமஷ்டியில் இடம்

பெற்றுள்ள பல்வேறு பிராந்தியங்கள் மற்றும் சுயாட்சிக் குடியரசுகளைச் சேர்ந்த எழுத்தாளர்களது படைப்புக்களுக்கு ஒதுக்கிவரும் என்ற செய்தியை எவரும் வரவேற்கத்தான் முடியும்.

சோவியத் ரஷ்யாவின் இலக்கிய வரைபடத்தை நாம் சற்றே பார்ப்போம். நாடு முழுவதிலும் நன்கு பிரபலமான புத்தகங்கள் எழுதப்படும் இடங்கள் மாஸ்கோவும் லெனின் கிராடும் மட்டுமே அல்ல. சில நூலாசிரியர்கள் தூரக் கிழக்கிலும், யூரல்ஸிலும், சைபீரியாவிலும், டான், கூபான், வால்கா, தெரெக் ஆகிய நதிக்கரைப் பிரதேசங்களிலும் வசித்து வருகின்றனர்; அவர்கள் அனைவருமே தமது உண்மையிக்க பேனுவைக் கொண்டு, கட்சி மற்றும் சோவியத் மக்களின் லட்சியத்துக்கே பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் இலக்கியத்துக்கு ஆற்றிவரும் பங்கின் தகுதியை அளப்பதற்கு வாசகர்கள் பயன்படுத்தி வரும் அளவுகோல், நிச்சயமாக அவர்கள் வசித்து வரும் இடங்கள் அல்ல. எழுத்தாளர்களைத் தலைநகரவாசிகள் நாட்டுப்புறவாசிகள் என்று பிரிக்க முடியாது.

அந்தப் பத்திரிகை ஒரு உழைலைக் கூடத் தவறவிடாமல், ரஷ்யாவின் இலக்கிய வயலை அடிக்கொருதரம் கண்ணோட்டம் விட்டுப் பார்த்து வரட்டும். புதிய பசுமையான இளங் குருத்துக்கள் தோன்றுவதை அது பார்க்கட்டும்; உழப்படாத திட்டு நிலங்களை விட்டுவைக்கும் மனப்போக்குக் கொண்ட நூலாசிரியர்கள் விஷயத்தில், அது தனது கண்டிப்பான கவனத்தைச் செலுத்த மறுக்காதிருக்கட்டும்.

இன்றைய பத்திரிகை எனது சொந்தத் தாய்நாட்டைச் சேர்ந்த நபர்களான டான் நதிப் பிரதேச எழுத்தாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்ற உண்மையின்பால், நான் இயல்பாகவே அலட்சியமாக இருக்க முடியாது. அவர்கள் உண்மையில் இந்தக் கௌரவத்தைத் தாமே சம்பாதித்துள்ளனர்; ஏனெனில் அவர்களது நூல்களில் வாழ்க்கையின் உயிர் மூச்சு குடி கொண்டுள்ளது. நமது இலக்கியத்தில், டான் பிரதேசத்தைச் சேர்ந்த படையினரை அவர்களது கம்பீரமான உறுதியான காலடியோசையினுலேயே சட்டென்று இனம் கண்டுகொள்ள முடியும்.

ஆயினும் இந்தக் கௌரவம் அவர்கள் மீது ஒரு பொறுப்பையும் சுமத்துகிறது. வாசகர்கள் தற்காலத்தைப் பற்றிய புதிய புத்தகங்களுக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதை நான் நினைவூட்டுவதற்கு, எனது சக எழுத்தாளர்கள் என்னை மன்னித்து விடுவார்கள் என்று நம்புகிறேன். அதேபோல் அவர்கள் தமது திறமையைத் தொடர்ந்து செம்மைப்படுத்தி வரவேண்டும்

எனக் கூறும் யோசனையையும் அவர்கள் தவறுக எடுத்துக் கொண்டுவிடக் கூடாது. வலிமை மிக்க ரஷ்ய மொழிச் செல்வத்திலிருந்து எழுத்தாளர் எடுத்தாளும் ஒரு வார்த்தையானது, வாசகரின் இதயத்துக்குள் நேராகப் புகுந்து பதியும் ஒரே வார்த்தையாகவே ஒவ்வொரு சமயமும் இருந்தாக வேண்டும்.

எனது டான் பிரதேச சக எழுத்தாளர்களுக்கு எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

1960

''பிராவ்தாவின்'' ஆசிரியர்களுக்கு

நான் எனது அருமைப் பிராவ்தா நண்பர்களுக்கும், ஆசிரியப் பகுதி மற்றும் அச்சகப்பகுதி ஊழியர்களுக்கும், அவர்கள் அனுப்பிய அன்பான தந்திக்காக உளமார நன்றி கூறுகிறேன். நீங்கள் சரிவரக் குறிப்பிட்டுள்ளபடி, நான் உண்மையில் உங்கள் பத்திரிகைக்கு ஏற்கெனவே முப்பது ஆண்டுகளாக எழுதித்தான் வந்திருக்கிறேன். இது ஒரு நபரின் வாழ்க்கைக் காலத்தில் ஒரு பெரிய பகுதிதான்; இதுவே லெனின் பரிசு பெற்றமைக்காக என்னைப் பாராட்டியுள்ள எனது நண்பர்கள் அனைவருக்கும்—போரிலும் சமாதான காலத்திலும் வாசகர்களாகவும் தோழர்களாகவும் இருந்துவரும் அனைவருக்கும்—நன்றி கூற உங்கள் பத்திரிகையில் சிறிதே இடம் பெறும் உரிமையை எனக்களிக்கிறது.

1960

''லித்தரத்துர்னயா கெஜத்தா'' பத்திரிகையின் நிருபருக்களித்த பேட்டி

உங்களது மேற்கு ஐரோப்பியப் பயணத்தின் நோக்கம் என்ன?

இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு நான் மேற்கொண்ட பயணம், பிரதானமாக எனது கன்னிநிலம் உழப்பட்டது என்ற நாவலின் இரண்டாவது பாகத்தின் வெளியீடு சம்பந்தப்பட்டதாகவே இருந்தது. மேலும் டால்ஸ்டாய் விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக நான் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டிருந்தேன். ஆயினும் துர்ப்பாக்கிய வசமாக நான் அந்த விழா நடந்த சமயத்தில் லண்டனுக்குப் போய்ச் சேர இயலாது போய் விட்டது.

கன்னிநிலம் உழப்பட்டது நாவலின் முதற் பாகம் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்பே வெளிவந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். உண்மையில் இது ஒரு தலைமுறைக் காலத்துக்கும்

முந்தி நிகழ்ந்ததுதான். இதன் இரண்டாம் பாகம் இங்கிலாந்திலும் இத்தாலியிலும் இப்போது மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதன் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு விரைவில் இந்த வசந்த பருவத்திலேயே வெளிவந்து விடும் என்று பாரீஸில் என்னிடம் கூறினர்.

எந்தப் பதிப்பகங்கள் இந்தப் புத்தகத்தை வெளியிட்டுள்ளன? இதனை ஐரோப்பிய வாசகர்கள் எவ்வாறு வரவேற்றனர்?

இங்கிலாந்தில் பிரபலமான புட்னம் பதிப்பகம்தான் இதை வெளியிட்டுள்ளது. இத்தாலியில் நான் எனது புத்தகங்கள் அனைத்தையும் உலக மார்க்கெட்டுக்காக வெளியிடும் உரிமையை எடிட்டோரியூனிட்டிக்கு வழங்கியுள்ளேன், பிரான்ஸில் கன்னி நிலம் உழப்பட்டது நாவலை, பாரீஸிலுள்ள மிகப் பெரும் பதிப்பகங்களில் ஒன்றான கல்லிமார்டு பதிப்பகம் வெளியிடும். கல்லிமார்டுதான் போருக்கு நெடுங்காலத்துக்கு முன்பே, 1930 ஆம் ஆண்டுகளிலேயே, என்னை பிரெஞ்சு வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்தது என்பதையும், 1940-ல் அதுவே டான் நதி அமைதியாக ஓடுகிறது நாவலின் கடைசிப் பாகத்தையும் வெளியிட்டது என்பதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும்.

கன்னிநிலம் உழப்பட்டது நாவலின் இரண்டாம் பாகம் விற்றுத் தீர்ந்த வேகமானது, வாசகர்கள் மத்தியில் அது பெற்றுள்ள வெற்றிக்குச் சான்று பகர்கின்றது என்று எனது வெளியீட்டாளர்கள் என்னிடம் கூறுகின்றனர். எனது நாவலைக் குறித்துப் பல பத்திரிகைகளில் பெருமளவில் எழுதப்பட்டதாகவும் அவர்கள் என்னிடம் கூறுகின்றனர்; மிகவும் வெவ்வேறான பல பத்திரிகைகளில் வெளிவந்த ஏராளமான மதிப்புரைகளையும் அவர்கள் என்னிடம் காட்டினர்; அந்தப் பத்திரிகைகளில் லண்டனிலிருந்து வெளிவரும் டைம்ஸ் பத்திரிகையும் ஒன்றாகும்; அதில் எனது புத்தகம் பற்றி அதன் இலக்கிய அனுபந்தப் பகுதியில் விமர்சனம் செய்யப் பட்டிருந்தது.

உங்கள் புத்தகத்தை வெளியிடத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் பிற நாடுகள் எவை?

அமெரிக்கா, கனடா, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, ஹாலந்து, ஸ்பெயின், போர்த்துகல், அர்ஜென்டினா, சிலி, பிரேஜில் மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த பல்வேறு வெளியீட்டாளர்களோடு, கன்னி நிலம் உழப்பட்டது நாவலை வெளியிடுவது பற்றிய ஒப்பந்தங்களை, எடிட்டோரி ரையூனிட்டி ஏற்கெனவே செய்து கொண்டுள்ளது. இந்தத் தருணத்தில் கிரீஸிலும், இஸ்ரேலிலும் உள்ள வெளியீட்டாளர்களோடு பேச்சு

வார்த்தைகள் நடை பெற்று வருகின்றன. இங்கிலாந்திலுள்ள பதிப்பகமான புட்னும் அண்டு கம்பெனி, எனது நாவலின் தமது பதிப்பின் பிரதிகளில் ஒரு கணிசமான பகுதியை ஆஸ்திரேலியாவிலும், நியூஜிலாந்திலும் ஆப்பிரிக்காவில் சில நாடுகளிலும் விற்றுள்ளது.

உங்களது நாவல்களில் வேறு எவை அண்மைக் காலத்தில் மேலைய உலகில் வெளியிடப்பட்டுள்ளன?

எனக்குச் சரியாக நினைவில்லை. என்றாலும், பிரான்ஸில் சென்ற ஆண்டு பிரபலமான ஜூலியார்டு பதிப்பகம் எனது டான் நதி அமைதியாக ஓடுகிறது நாவலின் நான்கு பாகங்களையும் வெளியிட்டது; இத்தாலியில்—இதுவும் சென்ற ஆண்டில்தான்—கன்னி நிலம் உழப்பட்டது நாவலோடு கூட, அவர்கள் தமது நாட்டுக்காகப் போரடினார்கள் என்ற நாவலின் அத்தியாயங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இத்துடன் எனது டான் கதைகள் தொகுதியும் வெளியிடப் பட்டுள்ளது; இதில் எனது ஒரு மனிதனின் தலைவிதி* என்ற கதையும் சேர்க்கப்பட்டுள்ளது.

நீங்கள் சென்ற இடங்கள், அங்குள்ள மக்கள் ஆகியவை பற்றிய உங்களது அனுபவங்களை எங்களுக்குக் கூறுவீர்களா?

நான் இங்கிலாந்துக்கு அங்கு கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் தொடங்கவிருந்த தருணத்தில் போய்ச் சேர்ந்தேன்; எனவே ஆங்கிலேய விடுமுறைகள் எவ்வாறு இருந்தன என்பதை—நகரங்கள் யாவும் ஆள் அரவமின்றி வெறிச்சோடிக் கிடக்கும் காலத்தைக்—காணும் ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நான் லண்டனிலும் எடின்பர்கிலும் இருந்தேன்; ஸ்காட்லாந்திலும் சற்றுச் சுற்றுப் பயணம் செய்தேன். இத்தாலியில், புத்தாண்டு பிறக்கும் தருணத்தில் நான் போய்ச் சேர்ந்தபோது, அங்கு உள் நாட்டு வழக்கத்துக்கேற்ப விடுமுறைகள் மிகவும் ஒரே ஆரவாரமாக இருந்த சமயத்தில், நான் ரோம், நேப்பிள்ஸ், சலெர்னே, பாலெர்மோ ஆகிய இடங்களில் இருந்தேன். நான் ஐரோப்பிய எழுத்தாளர் கமிட்டியின் தலைவரான திருவாளர் உங்காரெட்டியைச் சந்திப்பதாக இருந்தேன்; ஆனால் அவர் நோய்வாய்ப்பட்டிருந்ததன் காரணமாக இந்தச் சந்திப்பு நடைபெறவில்லை. எனது சிசிலிப் பயணம் ஒரு மறக்கொணாத அனுபவமாக அமைந்தது. பாலெர்மோவில், நான் சர்வதேச லெனின் பரிசைப் பெற்ற திறமை மிக்க எழுத்தாளரான டானிலோ டோல்சியையும், அவரது நண்பர்களையும் குடும்பத்

---

* இந்தக் கதை தமிழில் "அவன் விதி" என்ற தலைப்பில் மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளது.

தாரையும் சந்தித்தேன். திருவாளர் டோல்லியும் திருமதி டோல்லியும், மற்றும் எல்' ஓரா என்ற ஜனநாயகப் பத்திரிகையின் தலைமையாசிரியரான விட்டோரியா நிஸ்டிக்கோவும் எனக்களித்த விருந்தோம்பலுக்குப் பிரதியாக, அவர்களை நான் வெஷென்ஸ் காயாவில் வரவேற்று விருந்தோம்புவேன் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன்; இந்த இலையுதிர் பருவத்தில் இங்கு வந்து எனது விருந்தாளிகளாக இருக்குமாறு நான் அவர்களை அழைத் திருக்கிறேன்.

மொத்தத்தில் அது சுவையான பயணமாகத்தான் இருந்தது. எனது தொகுக்கப்பட்ட நூல்களின் [வெளியீடு சம்பந்தமாக 1962 ஆம் ஆண்டின் வசந்த பருவத்தில் பிரான்சுக்கு வருமாறு, லூயி அரகான் என்னை அழைத்திருக்கிறார் (டான் நதி அமைதி யாக ஓடுகிறது, கன்னி நிலம் உழப்பட்டது, ஒரு மனிதனின் தலைவிதி, அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் ஆகிய நூல்களைத் தான் குறிப்பிடுகிறேன். சுருங்கச் சொன்னால், பிரெஞ்சு வெளி யீட்டாளர்கள் வெளியிட்டுள்ள எனது புத்தகங்கள் யாவும்தான்). நான் அவரது அழைப்பை ஏற்றுக் கொண்டேன்.

1961

செம்யோன் தாவிதோவைப் பற்றி

(லெனின்கிராடிலுள்ள கிரோவ் ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து)

அன்பார்ந்த நண்பர்களே,

கன்னி நிலம் உழப்பட்டது நாவலின் பிரதானக் கதாபாத்திர மான செம்யோன் தாவிதோவ், கிரோவ் ஆலையைச் சேர்ந்த ஒரு தொழிலாளியாக இருப்பதும், அவர் கடந்த காலத்தில் பால்டிக் கடற்படையில் ஒரு மாலுமியாக இருந்ததும், ஏன் என்று மக்கள் என்னிடம் அடிக்கடி கேட்கின்றனர்.

முப்பது ஆண்டுகளுக்கும் முன்னால், நான் மிகவும் இளம் எழுத்தாளனாக இருந்து வந்த காலத்தில், பெத்ரோகிராடு நகரத் தொழிலாளி வர்க்கம், அதன் மகோன்னதமான புரட்சிகரச் செயல்கள், மரபுகள் ஆகியவற்றின்பால் நான் கொண்டிருந்த ஆழ்ந்த மதிப்பை, இவ்வாறு வெளியிட விரும்பி னேன். இது லெனின் கிராடுத் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக, கிரோவ் ஆலைத் தொழிலாளர்களுக்கு நான் அளிக்கும் பாராட்டுக் காணிக்கையாகும்.

எனது இரண்டாவது பாராட்டுக் காணிக்கை, பால்டிக் கடற்படையைச் சேர்ந்த மகோன்னதமான மாலுமிகளுக்குப்

போய்ச் சேர்கிறது; அவர்களது செயல்களும் புரட்சிகர மரபுகளும் கூட எனது ஆழ்ந்த மதிப்பைப் பெற்றுள்ளன.

கன்னி நிலம் உழப்பட்டது நாவலின் கதாநாயகரும், எங்களது டான் நாட்டில் அவர் உருவாக்கிய கூட்டுப்பண்ணையின் தலைவருமான செம்யோன் தாவிதோவ் உங்கள் மத்தியிலிருந்துதான் தோன்றினார், உங்களில் ஒருவராகவே இருக்கிறார் என்பதில் நான் பெருமையடைகிறேன்....

தமது அனுபவம், பயிற்சி ஆகியவை விஷயத்தில் செம்யோன் தாவிதோவுக்கும், அவரது வயது வந்த பிற நபர்களுக்கும் கடமைப்பட்டுள்ளவர்களும், அவர்களது அருமையான மரபுகளைச் சுவீகரித்துக் கொண்டு முன்னேறி வருபவர்களுமான தொழிலாளர்களின் புதிய தலைமுறையைக் காண்பது அற்புதமாகத்தான் இருக்கிறது.

நாங்கள் எங்களைப்பற்றி உங்களிடம் கூறுவதற்காக மட்டுமே டான் பிரதேசத்திலிருந்து இங்கு வரவில்லை; மாறாக, நீங்களும் அங்கு வந்து எங்களைக் காண வேண்டும் என்று அழைக்கவும் வந்திருக்கிறோம். தயவு செய்து வாருங்கள்; வந்து, செம்யோன் தாவிதோவின் வியர்வையும் ரத்தமும் பாய்ச்சப் பெற்ற மண்ணின்மீது வாழ்க்கை எவ்வளவு மும்முரமாக மலர்ந்து வருகிறது என்று பாருங்கள்.

1961

வலுப்படுத்தல், மீண்டும் வலுப்படுத்தல்!

தொல்லைகள் மிகுந்த நமது காலத்தில் சமாதானப் போராளிகளை வலுப்படுத்தலும், மீண்டும் மீண்டும் வலுப்படுத்தலும் இந்தத் தருணத்தின் ஜீவாதாரமான பணியாகும்.

இந்தக் காலத்தில் பொறுப்பில் மிகப் பெரும் பங்கை அறிவாளிகள்—கலாசாரத் துறையில் பணியாற்றிவரும் நபர்கள்—ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்று நான் உணர்கிறேன்.

அணுகுண்டைக் கண்டுபிடித்த நபரே அதற்குத் தடை விதிப்பதில் முதல் நபராக இருந்தாக வேண்டும். கலாசாரத்தின் உண்மையான ஆதரவாளர்கள், மனித குலத்துக்கு எதிரான நாசக் காரியங்களுக்கு அணுவைப் பயன்படுத்துவதை என்றுமே ஆதரித்ததில்லை; என்றும் ஆதரிக்கவும் போவதில்லை.

ஒரு கோபாவேசமிக்க கண்டனமானது, ஓர் அணு ஆயுதப் போரைக் கட்டவிழ்த்து விட விரும்புவோரின் திட்டங்களைத்



நான்காவது அகில—யூனியன் சோவியத் எழுத்தாளர் காங்கிரசுக்காக மாஸ்கோவுக்கு வந்திருந்த ஷோலகோவ்



நான்காவது அகில—யூனியன் சோவியத் எழுத்தாளர் காங்கிரசின் தலைமைக் குழுவில் ஷோலகோவ்

ஷோலகோவ் சோஷலிச உழைப்பு வீரர் விருதைப் பெற்ற போது என். வி. பொத்கோர்னி அவரைப் பாராட்டுகிறார்





ஐரோப்பாவுக்குச் செல்லும் வழியில் விமானத்தில்

ஜானஸ் காதர் ஷோலகோவை வரவேற்கிறார்





வால்ட்டெர் உல்பிரீச்ட் ஷோலகோவுக்கு நாடுகளின் 'நட்புறவுத் தராகை' என்ற விருதை வழங்குகிறார்



டிரெஸ்டெனில் ஷோலகோவ் வில்லி பிரிடெலுடன் உரையாடுகிறார்



ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் நூலாசிரியை அன்ன ஸெகர்ஸ் ஷோலகோவை விருந்தினராக வரவேற்கிறார்



ஷோலகோவின் அறுபதாவது பிறந்த தினத்தின்போது பின்லாந்து எழுத்தாளர் மார்ட்டி லார்னி ஷோலகோவுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறுகிறார்



ஸ்வீடன் நாட்டு மன்னர் ஷோலகோவைப் பாராட்டுகிறார்



பிராவ்தா பத்திரிகையின் ஊழியர்களோடு ஷோலகோவ்

வெஷென்ஸ்காயாவில் லீப்சிக் பல்கலைக் கழகம் வழங்கிய தத்துவவியலில் டாக்டர் என்ற கௌரவப் பட்டச் சான்றிதழை, பேராசிரியர் எபெர்ஹார்டு புரூனிங் ஷோலகோவிடம் வழங்குகிறார்





ஜார்ஜியாவில் துருஷ்பா (நட்புறவு) பழத் தோட்டத்தில் ஷோலகோவ் ஒரு மரக்கன்றை நடுகிறார்



ஜார்ஜியாவில் ஷோலகோவ் ஒரு தேயிலைத் தோட்டத்துக்குச் சென்று பார்வையிடுகிறார்

கஜாக் ஸ்டெப்பிவெளிப் பிரதேசமான இங்கிருந்தபோதுதான் ஷோலகோவ் தமக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை முதன் முதலாகத் தெரிந்து கொண்டார்





ஸ்வியா மாரெல் என்ற கப்பல் குர்க்கவிலிருந்து ஸ்டாக்ஹோமுக்குப் புறப்பட்டுச் செல்கிறது

நோபல் பரிசுச் சான்றிதழ்





ஸ்டாக்ஹோமிலுள்ள சோவியத் தூதரகத்தில், தமது இரு புதல்வர்கள் மற்றும் தமது இரு புதல்வியரோடு ஷோலகோவ் தம்பதிகள்

இடமிருந்து வலம்: அலெக்ஸாந்தர், ஸ்வெத்லெனு, ஷோலகோவ், அவரது மனைவி மரியா பெத்ரோவ்னு, மரியா, மிக்கேல் ஆகியோர்

Årets nobelpristagare

MICHAIL SJOLOCHOV



STILLA FLYTER DON

— en nobelpristagares mästerverk — ett av sovjetlitteraturens kraftfullaste verk. En levande och storslagen skildring av Donkosackernas liv under ryska revolutionens och inbördeskrigets dramatiska dagar. **Del 1—5 i presentband 150:—**

Övriga Sjolochov-böcker:

DEN AZURBLÅ STÄPPEN
ETT MÄNNISKOÖDE
Tidens Klassiker 7:50

NYPLÖJD MARK
Tidens Bokklubb Inb. 14:50

SKÖRD VID DON
27:50, Inb. 32:50

SE FILMEN I TV

Romanerna filmades 1957—58 av den kände regissören Sergej Gerasimov och visas som serieavsnitt i TV under december. Filmen sänds i omkortat skick för första gången i Sverige.

TIDEN • FIB

ஒரு ஸ்வீடிஷ் பத்திரிகையிலிருந்து



கபோரோவ்ஸ்கில் அந்நகரிலுள்ள கலைச் செல்வக் காட்சிக் கூடத்தின் டைரக்டரும், விஞ்ஞானியும், பிரபலமான புலி வேட்டை நிபுணருமான வெசிவொலோத் ஸைஸோயேவ் ஒரு மூலிகையின் வேரை ஷோலகோவுக்குப் பரிசாக வழங்குகிறார்

நகோத்கா வலுகுடாவுக்கு அருகிலுள்ள காட்டில்





ஹோன்ஷுவுக்குப் புறப்பட்டுச் செல்லும் பைகால் என்ற கப்பலில்

ஜப்பானிய வாசகர் ஒருவருக்கு ஷோலகோவ் ஆட்டோகிராப் கையெழுத்தைப் போட்டுக் கொடுக்கிறார்





டோக்கியோவில் ஷோலகோவ்



1966-ல் எடுத்த புகைப்படம்

தகர்த்தெறிந்தன என்பதைக் கண்டு தெளிய நமக்குப் பல சந்தர்ப்பங்கள் கிட்டி வந்துள்ளன.

எனவே நாம் நமது கண்டனக் குரலை இருமடங்கு வலுவோடு திரும்பவும் எழுப்புவோம்; அணுகுண்டுக்கு இடம் ''இல்லை'' என்று நமது காங்கிரசில் கூறுவோம்.

1962

கம்யூனிச லட்சியங்களுக்கு விசுவாசம்

சித்தாந்த மோதலானது இலக்கியத் துறையில் உள்ளதைப் போல் அத்தனை கடுமையாக வேறு எந்தவொரு கலைத்துறையிலும் இருந்து வரவில்லை என்றே கூறலாம். கதாபாத்திரங்களின் அந்தரங்க உலகையும் அரசியல் நிலையையும் புலப்படுத்தும் ஒரு நாவலில், நூலாசிரியர் தமது பரிவுணர்ச்சிகளையும் வெறுப் புணர்ச்சிகளையும் மறைக்கவோ அல்லது மழுங்கடிக்கவோகூட முடிவதில்லை.

எழுத்தாளர்களைப் பற்றித் தனிப்படக் கூறுவது என்பது இலக்கியத்தைப் பற்றிக் கூறுவதையே அர்த்தப்படுத்தும்; ஏனெனில் நாம் கலாபூர்வமான சிந்தனை மற்றும் இலக்கிய மரபுகள் ஆகியவற்றின் தொடர்ச்சியால் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளோம். எழுத்தாளர்களான நாம், உண்மையில் தனித்தனியான கண்ணிகளைக் கொண்டு உருவான ஒரே சங்கிலிதான்.

மக்களின் நலன்களுக்குப் பணிபுரியும் கலைதான் மக்களிடத்தில் வாழ்ந்து வரும், அது மேலும் வாழ்ந்து வருவதற்கான தனது உரிமையையும் நிலைநாட்டிக் கொண்டிருக்கும் என்பதை நமது காலத்தில் வாழ்க்கை நிரூபித்துள்ளது. மேலும், ஒரே ஒரு வர்க்கத்தின், அடிமைப்படுத்துவோரைக் கொண்ட வர்க்கத் தின், வரலாற்று அரங்கிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு புல்லுருவி வர்க்கத்தின் ஆன்மிகத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யும் கலையானது, இயல்பாகவே மறதிக்கும் மரணத் துக்கும் இரையாவது திண்ணம்.

இதனைத் தற்கால இலக்கிய வரலாற்றிலிருந்தே தெள்ளத் தெளிவாகக் கண்டுகொள்ள முடியும். வசனத்திலும் சரி, கவிதையிலும் சரி, புனின் எவ்வளவுதான் திறமை படைத்தவ ராக இருந்த போதிலும் அவர் ஏறத்தாழ மறக்கப்பட்டு விட்டார்; நமது வாசகர்களுக்கு, முக்கியமாக இளம் மக்களுக்கு அவரைத் தெரியவே தெரியாது. மேலும், புனினின் நூல்கள் சோவியத் யூனியனில் மறுபிரசுரம் செய்யப்படவில்லை என்ப

தல்ல இதற்குக் காரணம். அவரது நூல்கள் மறுபிரசுரம் செய்யத்தான் படுகின்றன. அதே சமயம் மறுபுறத்தில் கார்க்கியும் செராஃபிமோவிச்சும் மறக்கப்பட மாட்டார்கள். மேலும் அவர்களும் புனினின் சமகாலத்தவராகத்தான் இருந்தனர்; அவர்கள் ஒன்றுகத்தான் இலக்கிய அரங்கில் புகுந்தனர்; என்றுலும் அவர்கள் மக்களுக்கு வேறுவிதத்தில் பணியாற்றினர். அத்துடன் அவர்களது படைப்புக்களும் வேறு விதமாகவே மதிப்பிடப் படுகின்றன. புனினுக்கு அவரது ஆர்செனியேவின் வாழ்க்கை என்ற நூலுக்காக நோபெல் பரிசு வழங்கப்பட்டது; என்றுலும், கார்க்கியின் கிளிம் சாம்கினின் வாழ்க்கை என்ற நூலுக்கு, தனது முடிவில் செம்மை மிக்கதும், ஜாரிஸ்டு ரஷ்யாவின் சமுதாயப் பகுதிகள் மற்றும் சமுதாய அடுக்குகள் அனைத்தையும் விரிவாக வருணிப்பதில் உண்மையிலேயே அறிவுக் களஞ்சியமாக விளங்குவதுமான அந்த நூலுக்குப் பரிசு வழங்கி, கார்க்கியைக் கௌரவிக்க ஸ்வீடிஷ் அகாடெமி முன்வரவில்லை.

இதேபோல் ஸ்வீடிஷ் இலக்கிய ரசிகமணிகள் கார்க்கியின் அற்புதமான நாவலான ஆர்த்தமோனுவ் குடும்பத்தார்* என்ற நூலியும் காணத் தவறி விட்டனர். இதே நிலைமைதான் செராஃபிமோவிச்சின் இரும்பு வெள்ளத்துக்கும், சோவியக் வசன இலக்கியத்தின் ஏனைய பல முக்கியமான நூல்களுக்கும் ஏற்பட்டது.

சர்வதேச அரங்கில் கலைப்படைப்புக்கள் பற்றிய மதிப்பீடும், வர்க்க நலன்களாலேயே ஆட்சி செலுத்தப் படுகின்றன என்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள். மேலும், கலை அதன் இயல்பிலேயே வர்க்கத் தன்மை அற்றது எனக் கூறிவரும் முதலாளித்துவச் சித்தாந்திகளின் கூற்றுக்களோ இதுவே பொய்யாக்கி விடுகிறது. . .

நாடெங்கிலுமுள்ள சோவியத் மக்கள் ஒரு தனிச்சிறப்பு மிக்க எழுத்தாளரான அலெக்ஸாந்தர் செராஃபிமோவிச்சின் பிறந்ததின விழாவைக் கொண்டாடி வருகின்றனர்; கார்க்கி, மயாகோவ்ஸ்கி, அலெக்சி டால்ஸ்டாய், எசெனின், செர்கியேவ்—திசென்ஸ்கி ஆகியோரின் படைப்புக்களைப் போலவே, இவரது படைப்புக்களும் நமது நாட்டிலோ அல்லது உலகிலோ என்றைக்குமே மறக்கப்பட்டுவிட மாட்டா; அவற்றை வருங் காலத் தலைமுறையினர் ஒரு கலாசாரச் செல்வமாகச் சுவீகரித்துக் கொள்வர்.

---

* இந்நாவல் "மூன்று தலைமுறைகள்" என்ற தலைப்பில் தமிழில் வெளி வந்துள்ளது. வெளியீடு: ஸ்டார் பிரசுரம், தமிழாக்கம்: ரகுநாதன்.

இரும்பு வெள்ளம் சோவியத் இலக்கியத்தின் சொத்துக்களில் ஒன்றாக என்றென்றும் இருந்து வரும். செராஃபிமோவிச் எழுதியுள்ள நூல்களில், இந்த நாவல் நமக்கு மிகவும் மதிப்புமிக்கதாகும்; ஏனெனில், சோவியத் ஆட்சிக்காகவும், கம்யூனிசத்துக்காகவும் போராடிய போராளிகளின் முன்னணி அணிகளில் வீறுநடை போட்டுச் சென்ற அந்த வீரர்களின் கவர்ச்சிகரமான படப்பிடிப்பை, அதற்கும் மேலாக, புரட்சியின் இந்த முதல் போர்வீரர்களின் பால் அன்பையும் நன்றியுணர்வையும் எழுப்பிய சித்திரத்தை வழங்கிய முதல் இரண்டு புத்தகங்களில் இது ஒன்றாகும்; மற்றொன்று ஃபர்மனேவ் எழுதியுள்ள கிளர்ச்சியாகும்.

அலெக்ஸாந்தர் செராஃபிமோவிச்சின் வாழ்க்கை முழுவதும், அவரது படைப்புக்களைப் போலவே, சாராம்சத்தில் புரட்சிகரமானதாகவே இருந்தது. தமது இறுதிக்காலம் வரையிலும் அவர் முன்னேற்றத்துக்கும், புரட்சிக்கும், நமது கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் நேர்மையோடு பணியாற்றினர்.

டான் பிரதேசத்து மக்களான நாங்கள் செராஃபிமோவிச்சிடம் பிரத்தியேகமான நன்றியுணர்வையும் உளமார்ந்த மதிப்புணர்வையும் கொண்டிருக்கிறோம்; இதற்குக் காரணம் அவர் நாட்டின் எங்கள் பகுதியில் பிறந்தார் என்பது மட்டும் அல்ல; அங்கு வசித்து வந்த எல்லா மக்களையும்—அவர்கள் டான் கோஸாக்குகளாக இருக்கட்டும், டான் பிரதேசத்துக்குப் புதிதாக வந்தவர்களாக இருக்கட்டும், கூபான் கோஸாக்குகளாக இருக்கட்டும், அல்லது தெற்கு ரஷ்யாவில் சோவியத் ஆட்சியை நிறுவவும் வலுப்படுத்தவும் ஆயுதம் ஏந்திப் போராடி, அதன் பலத்தைத் தமது சொந்த ரத்தத்தால் வலுப்படுத்திய ஸ்தாவ்ரோபோல் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளாக இருக்கட்டும், அவர்கள் அனைவரையும்—ஒரேவிதமான தந்தையின் பரிவோடு மதித்து வந்தார் என்பதும் அதற்குக் காரணமாகும்.

முப்பது ஆண்டுகளுக்கும் முன்பே தோழர் செராஃபிமோவிச்சுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. 1925-ல் மாஸ்கோவ்ஸ்கி ரபோச்சி பதிப்பகத்தார் எனது சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளிக் கொணரத் தீர்மானித்தனர்; அத்தொகுதியின் காலி-புருபுகளை அவர்கள் செராஃபிமோவிச்சிடம் காட்டினர்; அவற்றைப் படித்துப் பார்த்த பின்னால் அவர் அந்த இளம் கதாசிரியரைச் சந்திக்க விரும்புவதாகக் கூறினர். இதன் பின் நாங்கள் ஒருவரையொருவர் அடிக்கடி சந்தித்துக் கொண்டோம். செராஃபிமோவிச் என்னோடு தங்குவதற்காக வெஷென்ஸ்காயாவுக்கு வந்தார்; நான் மாஸ்கோ

வுக்குச் செல்லும் போதெல்லாம் அவரைத் தவறுமல் சென்று சந்தித்தேன். 1930-ல் அவர் வெஷென்ஸ்காயாவில் எங்களோடு பத்துப் பன்னிரண்டு நாட்கள் வரை தங்கினார். நாங்கள் இருவரும் சேர்ந்து மீன் பிடிக்கச் சென்றோம்; டான் நதியில் படகிலும் பயணம் செய்தோம்; அந்தச் சமயத்தில் டான் பிரதேசத்தில் நிகழ்ந்து வந்தவை யாவற்றிலும் செராஃபிமோவிச் எப்போதும் மிக மிக உற்சாகமிக்க ஆர்வத்தைக் காட்டி வந்தார்.

எங்கள் இருவருக்குமிடையே பெரும் வயது வித்தியாசம் இருந்த போதிலும் கூட, எங்களது பழக்கம் நெருங்கிய நட்பாக வளர்ச்சியுற்றது. தமது கண்களில் கோஸாக்குக்கே உரிய ஒரு மினுமினுப்பைக் கொண்டிருந்த இந்த அருமையான, அடக்கமான மனிதரின், ஆரம்ப எழுத்தாளர்களுக்கு, அவர்களில் ஒருவனாகவிருந்த எனக்கு, எப்போதும் உதவிக் கரம் நீட்டி வந்த அந்த மாபெரும் எழுத்தாளரின் உருவத்தை நான் எனது உள்ளத்தில் ஆழப் பதித்துச் சுமந்து வருகிறேன்.

எங்களது டான் பிரதேசத்தில் இப்போது நிகழ்ந்து வரும் காரியமே, எங்களது அற்புதமான, புகழ் பெற்ற நூலாசிரியரும், எங்களது சக நாட்டினருமான அவருக்குத் தலைசிறந்த நினைவுச் சின்னமாகும்.

வெஷென்ஸ்காயாவில் ஒருமுறை ஒரு சிறிய நீராவிப் படகு தனது துருப்புக்களை நீரின் மீது உரக்க அடித்துக் கொண்டும், படகுப் பாலத்தைத் திறந்து விடுமாறு சமிக்கை காட்டிக் கொண்டும், எதிர் நீச்சல் போட்டுச் செல்வதை அவர் பார்த்தார். அப்போது அவர் இவ்வாறு கூறினார்: ''இந்த அற்புதமான சிறு கப்பல், அமைதியான டான் நதியின் உறங்கிக் கொண்டிருக்கும் கரைகளை, உயிர்த்தெழுந்து வாழுமாறு உசுப்பி எழுப்பிக் கொண்டிருக்கிறது. இல்லையா?''

அவர், அந்த முதியவர், தமது ''அமைதியான டானில்'' தற்போது வாழ்க்கை பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருப்பதைக் காண நேர்ந்தால், அப்படியே மகிழ்ந்து போய் விடுவார் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். வாசகர்களான நாம் இந்த நல்ல, கவர்ச்சிகரமான நபரின் நினைவை எப்போதும் போற்றி வருவோம்; கம்யூனிச லட்சியத்துக்குப் பணியாற்றும் அவரது நூல்களைப் பாதுகாத்து வருவோம்.

1963

சார்லஸ் பெர்ஸி ஸ்னோவுக்கு ஒரு கடிதம்

ராஸ்தாவிலுள்ள அரசாங்கப் பல்கலைக் கழகத்திடமிருந்து மொழியியலில் டாக்டர் என்ற கௌரவப் பட்டத்தைப் பெற்றுள்ளமைக்காக, நான் எனது அருமை நண்பரை உளமார வாழ்த்துகிறேன்.

ரஷ்யாவின் மிகப் பழமையான பல்கலைக் கழகங்களில் ஒன்றான ராஸ்தாவ் அரசாங்கப் பல்கலைக் கழகம், மொழியியலில் டாக்டர் என்ற கௌரவப் பட்டத்தைத் தங்களுக்கு வழங்கியமைக்காக, ராஸ்தாவ் பிரதேசத்திலுள்ள பொதுஜன ஸ்தாபனங்கள் உட்பட, சோவியத் பொதுஜன ஸ்தாபனங்கள் அனைத்தும், தங்களுக்கு, பிரசித்தமான ஆங்கில எழுத்தாளரும், சமாதானத்தையும் இங்கிலாந்துக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான நேய உறவுகளையும் செயலூக்கமாக ஆதரித்து வருபவருமான தங்களுக்கு, தமது மிகமிக உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றன.

இந்தப் பட்டப் பத்திரத்தைப் பெறுவதற்காக, தங்களையும் தங்கள் துணைவியார் பமேலா ஹன்ஸ்ஃபோர்டு–ஜான்ஸனையும், மற்றும் தங்கள் குடும்ப உறுப்பினர்களையும் இவ்வாண்டு மே மாதத்தில்—இது தங்களுக்கு வசதியாக இருக்குமானால்—இங்கு வருமாறு நாங்கள் அழைக்கிறோம்.

உலக சாதனைகளை மிஞ்சுவதில் பேரார்வம் கொண்ட நாங்கள், செயிண்ட் ஆண்ட்ரூஸில் நான் கண்டறிந்த அற்புதமான, உளமார்ந்த வரவேற்பை, இங்கு, டான் நதிக்கரையில், ஓரடி மிஞ்சிக் காட்டுவோம் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம்.

தங்கள் அன்புள்ள,

மிக்கேல் ஷோலகோவ்

1963

எழுத்தாளர்களின் ஐரோப்பியக் கமிட்டிக் கூட்டத்தில் ஆற்றிய உரை

சோவியத் எழுத்தாளர் யூனியனின் சார்பில் உங்களுக்கும், இந்தத் தற்போதைய மாநாட்டின் வெற்றிக்கும் வாழ்த்துரைக்கும் கௌரவம் எனக்குக் கிட்டியுள்ளது.

என் முன்னால் நான் காண்கின்ற பெரும்பாலோர்—நிச்சயமாக, நான் பெண்மணிகளைக் குறிப்பிடவில்லை—தமது இளமைப் பருவத்தைத் தாண்டியவர்களாகவே உள்ளனர். சந்தேகமன்னியில் அவர்கள் வாழ்க்கை மற்றும்

இலக்கிய அனுபவம் ஆகிய இரண்டும் நிரம்பப் பெற்றுள்ள எழுத்தாளர்களும் விமர்சகர்களுமாவர். எனவே நாம் ஒன்றும் கள்ளங்கவடற்றவர்களாக இருக்க வேண்டியதில்லை: எனது நரைத்த தலையின்பால் காட்டும் மரியாதையின் காரணமாக, உங்களுக்கு முதன் முதலில் வாழ்த்துக் கூறும் கௌரவம் எனக்கு அளிக்கப்பட்டுவிடவில்லை; மாறாக, எனது அருமை நண்பர் அல்யோஷா சுர்கோவும், மற்றும் சோவியத் எழுத்தாளர் யூனியனின் நிர்வாகக் குழுவைச் சேர்ந்த ஏனையோரும், வாதப் பிரதிவாதச் சண்டையில் ஆர்வம் கொண்டவன் நான் என்று அறிந்திருப்பதே அதற்குக் காரணமாகும். எனவேதான் அவர்கள் இவ்வாறு தீர்மானித்தார்கள்: ''சோவியத் எழுத்தாளர்களில் ஷோலகோவ் முதலில் பேசட்டும். அவரது வாழ்த்துரையான பேச்சுக்குப் பிறகு, மற்றப் பேச்சாளர்களைக் குறை கூறிப் பேசுவது என்பது அவருக்கே தர்ம சங்கடமான நிலைமையாகி விடும்...''

இது ராஜதந்திரம்தான்; இது எப்போதுமே தோல்வியுறுவ தில்லை. ஆயினும், என் நண்பர்கள் எப்படி உணர்கிறார்களோ அப்படித்தான் நானும் உணர்கிறேன்; மகிழ்ச்சியற்ற விஷயங் களைப் பேசுவதைக் காட்டிலும், மகிழ்ச்சிகரமான விஷயங்களைப் பேசுவது மிகவும் எளிதேயாகும்.

என்றாலும், நாவலைக் கல்லறையில் புதைப்பதற்காகப் பலகை களைச் செதுக்கி, ஒரு சவப்பெட்டியைச் சேர்க்க எவரேனும் தொடங்குவராயின், மீண்டும் மேடைக்கு வந்து பேசும் உரிமையை எனக்கு நானே வைத்துக் கொள்ளவே விரும்பு கிறேன்.

விவசாயி ஒருவருக்குத் தமது வயலில் விதைக்க வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வி எவ்வாறு எழுவதில்லையோ, அதே போல் நாவல் ''இருப்பதா அல்லது இறப்பதா'' என்ற கேள்வியே எனக்கு எழவில்லை.

விவசாயியின் விஷயத்தில் கேள்வியை இப்படித்தான் கேட்க முடியும்: ''மிகவும் சிறந்த அறுவடையைப் பெறுவதற்கு, எப்படி மிகவும் சிறந்த முறையில் வயலில் விதைப்பை நடத்தலாம்?''

என் விஷயத்திலும் இப்படித்தான். இங்குள்ள கேள்வி இதுதான்: எனது நாவல் நல்ல மதிப்போடு எனது மக்களுக்கும் எனது வாசகர்களுக்கும் உண்மையிலேயே பயன்படும் அளவுக்கு, அதனை எப்படி அவ்வளவு சிறந்ததாக்குவது?

என்றாலும் இதனைப் பற்றி நாம் நமது கூட்டத்தின் விஷயாலோசனைப் பகுதிக்கு வரும்போது பேசிக் கொள்வோம்.

நாம் நமது மாநாட்டை ஒரு மறக்கொணுத நாளில் தொடங்குகிறோம். அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தம் இன்று மாஸ்கோவில் கையெழுத்தாகும். பெரும் அரசியல் தலைவர்களுக்கும் ராஜதந்திரிகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட முடியுமானால், நிச்சயமாக எழுத்தாளர்களான நாமும், நமது கலையின் மூலம் மக்களுக்கும் சமாதான லட்சியத்துக்கும் எவ்வாறு சிறந்த முறையில் பணி புரிவது என்பது பற்றியும் ஓர் உடன்பாட்டுக்கு வரமுடியும். அவ்வாறு நாம் வராவிட்டால், நம்மால் என்றுமே நமது வாசகர்கள் முகத்தில் விழிக்கவும் முடியாது. நாம் ஒரு பொதுவான நிலையைக் கண்டறிய வேண்டும். அதனைக் கண்டறிந்தே ஆக வேண்டும்.

சோவியத் எழுத்தாளர்களான நாங்கள் எங்களது அன்பான விருந்தினர்களான உங்களைத் திறந்த மனத்தோடும், உண்மையான ரஷ்ய விருந்தோம்பலோடும் வரவேற்கிறோம்.

இந்த மாநாட்டின் பணிக்காக, தலைசிறந்த நிலைமைகள் உருவாக்கப் பட்டுள்ளன. இது லெனின்கிராடில் நடைபெறுவது ஒரு நல்ல விஷயம். ஏனெனில் மாஸ்கோவில் இருப்பது போல் இங்கு அவ்வளவு சூடாக இல்லை. என்றாலும், நமது விவாதங்களில் அளவுக்கு மீறிச் சூடேறி விட்டால், நாம் மாநாட்டை ஆர்க்கேங்கல்ஸ்கிலுக்கோ அல்லது மூர்மான்ஸ்க்குக்கோ எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். சுருங்கச் சொன்னால், நாவலைப் பற்றிய நமது விவாதம் ஒரு கௌரவமான, விவேகமான முறையில் நடைபெற்று, நல்ல பயன்களை விளைவிக்கும் வரையில், இதனை நீங்கள் விரும்புவது போல் எங்கு வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம்.

இந்த மாநாடு பயன்மிக்க ஒன்றாக விளங்கும் என்று நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம்; எங்கள் நாட்டில் நீங்கள் தங்கியிருக்கும் காலம் ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமாக உங்களுக்கு விளங்கும் என்றும் நம்புகிறோம்.

1963

எழுத்தாளர்கள் தமது கதாநாயகர்களோடு நண்பர்களாக இருக்கும்போது

தொழிலாளி வர்க்கம் என்ன கூறுகிறது என்பதைக் கேளுங்கள். முப்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், சரியாகச் சொன்னால் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், கன்னி

நிலம் உழப்பட்டது என்ற நாவலில் வரும் செம்யோன் தாவிதோவ், பண்ணைத் தொழிலைக் கூட்டுடைமையாக்கும் பணியை நிறைவேற்றுவதற்காக, கட்சி கிராமப்புறத்துக்கு அனுப்பி வைத்த இருபத்தையாயிரம் பேர்களில் ஒருவராக மட்டும் இருக்க வில்லை; அவர் புத்திலோவ் (இப்போது கிரோவ்) ஆலைத் தொழிலாளியாகவும் இருந்தார்.

நெடுங்காலத்துக்கு முன்பே தொடங்கிவிட்ட இந்த ஆன்மிக பந்தம் இப்போது பிரத்தியட்சப் பிரமாண நிலையை பெற்று வருகிறது. இங்குள்ள மக்கள் நட்புறவைப் பற்றி, எழுத்தாளர் களுக்கும் அவர்களது கதாநாயகர்களுக்கும் இடையே நிலவும் நட்பைப் பற்றி நன்முகப் பேசினர். ஓர் எழுத்தாளர் தொழிலாளர்களது குடும்பத்தில் ஓர் உறுப்பினராக மாறுவது உண்மையிலேயே குறிப்பிடத்தக்க விஷயம்தான்; இதன் மூலம் அவரது கற்பனையான இலக்கியக் கதாநாயகர் சதையும் ரத்தமும் கொண்ட மனிதராக அவரிடம் திரும்ப வந்து சேர்ந்து விடுகிறார். இத்தகைய சந்திப்புக்கள் மிகமிகப் பயன் மிக்கவை. இதனை நீங்களே அறிவீர்கள்.

எனது அருமை சாவிச், எனது அன்பிற் குறையாத லியானுவ் ஆகிய இந்த அற்புதமான வாலிபர்கள் அனைவரும் ராஸ்தாவ் விவசாய எந்திரத் தொழிற்சாலைக்குச் சென்றனர். அவர்கள் தமது தொழில் முறைகளைச் செய்து காட்டினர்; தமது சொந்தக் கண்டுபிடிப்புக்களையும், தமது சொந்த வெட்டுக் கருவிகளையும் தாங்கள் எப்படி உருவாக்கினார்கள் என்பதை, ராஸ்தாவ் முழுவதிலுமுள்ள மிகவும் தகுதித் திறன் மிக்க அரைவை எந்திர ஆப்பரேட்டர்களும் கண்டு களித்து வியக்கும் வண்ணம் விளக்கிக் கூறினர். இத்தகைய விஜயங்களை மேற் கொள்ளும் நடைமுறையை நாம் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால், உதாரணமாக கிரோவ் தொழிலாளர்கள் இலியா கோஸோலுஜ்கின்னையும் மற்றும் நமது தொழிலாளர்களில் சிலரையும் தமது ஆலைக்கு வரவழைப்பர்; இது நகர்ப்புறத்தை யும் கிராமப்புறத்தையும் சேர்ந்த தகுதி வாய்ந்த தொழிலாளர் களுக்கிடையே ஓர் உண்மையான அனுபவப் பரிவர்த்தனையைத் தொடங்கி வைக்கும். கிரோவ் தொழிலாளர்களிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய விஷயங்கள் எவ்வளவோ உள்ளன; நாம் நமது பங்குக்கு நமது டான் பிரதேசத்தில் அவர்களை எப்போதுமே மகிழ்ச்சியோடு வரவேற்போம்.

1964

தொழிலாளி வர்க்கத்தின் கீர்த்தி பற்றிய புத்தகங்கள் தேவை

லெனின் கிராடு கிரோவ் ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் இஞ்சினீயர்கள் ஆகியோரின் கோஷ்டி வெஷென்ஸ்காயாவுக்கு வருகை தந்திருப்பது, ஒரு மறக்கொணுத சம்பவமாக அமைந் துள்ளது. நாங்கள் இலக்கியம் பற்றி மிகவும் பயன்மிக்க உரையாடல்கள் சிலவற்றை நிகழ்த்தினேம்; அவை மிகவும் சுவை பயப்பனவாக இருந்தன; ஏனெனில் நமது விருந்தினர் களும் தமது ஆலையின் வரலாற்றை எழுதுவதன் மூலம் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்; இந்த வரலாறு சோவியத் ஆட்சியின் 50 ஆவது ஆண்டு விழாவின்போது வெளிவர விருக்கின்றது. தமது புத்தகத்துக்கு முகவுரை எழுதித் தருமாறு அவர்கள் என்னிடம் கேட்டனர்; நானும் அதனைத் தற்போது மகிழ்ச்சியோடு எழுதி வருகிறேன்.

புத்திலோவ் (கிரோவ்) ஆலையின் வரலாறு பின்வரும் நபர்களைப் போன்றவர்களால் உருவாக்கப் பட்டதாகும்: மிக்கேல் காவ்ரிலோவிச் அலெக்சியேவ்; இவர் அங்குள்ள மிகவும் முதுபெரும் பிரங்கி வீரராவார்; இவர் அந்த ஆலையின் தொழில் பட்டறைகளில் அறுபது ஆண்டுகளாக உழைத்திருக் கிறார்; நிக்கொலாய் வாஸிலியேவிச் ஸ்குவோர்த்சோவ்; இவர் பால்டிக் கடற் படையின் முன்னாள் மாலுமி; சுட்சி கிராமப் புறத்துக்கு அனுப்பி வைத்த இருபத்தையாயிரம் நபர்களில் ஒருவர்; இவர் கூட்டுப் பண்ணைத் தலைவராக இருந்தவர்; இப்போது மீண்டும் ஆலைத் தொழிலாளியாக இருந்து வருகிறார். அரைவை எந்திர ஆப்பரேட்டர்களான எவ்கெனி சாவிச்சும் இவான் லியானேவும்—இவர்கள் தமது துறையில் புதுமைகள் கண்டவர்கள். மற்றும் போரில் சிறந்த துப்பாக்கி வீரராக இருந்தவரும் சோவியத் யூனியன் வீரர் விருது பெற்றவருமான ஃபியோதர் தயாச்செங்கோ; மற்றும் இவர்களைப் போன்ற நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான நபர்கள். இந்த ஆலையின் வரலாறுனது புரட்சியைச் சாதித்து முடித்த, போரில் தமது நாட்டின் கௌரவத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொடுத்த, இப்போது கம்யூனிசத்தைக் கட்டி யமைத்து வருகின்ற பல தொழிலாளி வர்க்கத் தலைமுறை யினரது வரலாறேயாகும்.

நான்கு அரசாங்க விருதுகள் அளித்துக் கௌரவிக்கப் பட்டுள்ள கிரோவ் ஆலையின் வரலாறு போன்ற அதே வழி

முறையில் நமது தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் பற்றி எழுதப் படும் மேலும் அதிகமான புத்தகங்களைக் காணவே நாம் விரும்புவோம்.

தத்தம் தொழிற்சாலையின் வரலாறு ஒன்றைத் தொகுக்குமாறு தொழிலாளர்—நிருபர்கள் அனைவருக்கும் நான் பிராவ்தா மூலமாகவும் தொழிலாளர் செய்திப் பத்திரிகையான குரூத் மூலமும் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். தொழிலாளி வர்க்கத்தின் கீர்த்தி பற்றிய புத்தகங்கள் மிகமிகத் தேவை. இது விஷயத்தில் எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் தம்மால் முடிந்த விதத்திலெல்லாம் உதவ முடியும்.

1964

தொழில் துறைக்கும் கலைத் துறைக்கும் இடையே மேலும் வலுவான கூட்டணிக்காக

அன்பார்ந்த வெஷென்ஸ்காயா வாசிகளே,

எமது நல்ல நண்பர்களும், மிகவும் நல்வரவுக்குரிய விருந்தினர்களுமான கிரோவ் ஆலைத் தொழிலாளர்களே!

வெஷென்ஸ்காயாவில் நீங்கள் தங்கியிருக்கும் கடைசி நாள் இது; டான் பிரதேச மண்ணில் தங்கியிருக்கும் கடைசி நாள் இது. நாளை நீங்கள் மத்திய டான் பிரதேசத்துக்குச் சென்று விடுவீர்கள்; அங்கிருந்து டான் நதியின் முகத்துவாரத்துக்கும் செல்வீர்கள். எங்கணும் நீங்கள் அன்புக்குரிய கௌரவமிக்க விருந்தினர்களாகவே வரவேற்கப்படுவீர்கள் என்பதை நான் அறிவேன். ஏனெனில் டான் பிரதேசம் உங்கள் உருவில் லெனினது மாபெரும் நகரத்தின், பிரபலமான கிரோவ் ஆலையின் பிரதிநிதிகளைக் கௌரவிக்கும். என்றாலும், டான் நதிக்கரையிலுள்ள வேறு எந்தவொரு ஸ்தானித்ஸாவும், எந்தவொரு நகரமும், தாம் அளிக்கும் உளமார்ந்த வரவேற்பில் எங்களை மிஞ்சிவிட முடியாது. இதனை நான் உறுதியாகச் சொல்வதற்கும் சில காரணங்கள் உண்டு. முதலாவதாக, வெஷென்ஸ்காயா மக்களின் கோஷ்டி ஒன்று, 1961 தொடக்கத்தில் உங்கள் விருந்தினர்களாக லெனின்கிராடுக்குச் சென்றது; எனவே விருந்தோம்பல் விஷயத்தில் நாங்கள் உங்களுக்குக் கடன்பட்டுள்ளோம். இரண்டாவதாக, நமது நட்பு மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கவில்லை; மாறாக ஏறத்தாழ முப்பத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்னால், உங்களது தொழிற் சகாவான செம்யோன் தாவிதோவ், எனது புத்தகத்தின் பக்கங்களிலிருந்து வாழ்க்கையின் மத்தியிலேயே குதித்து வெளி

வந்து, பண்ணைத் தொழிலைக் கூட்டுடைமையாக்கும் பணியில் கட்சிக்கு உதவ முன்வந்தபோதே தொடங்கி விட்டது.

இதனை நான் அடிக்கடி குறிப்பிடுவதற்குக் காரணம் எனது இலக்கிய கர்வத்தைத் தட்டிக் கொடுத்துக் கொள்வதற்காக அல்ல; உங்களது நட்புறவின்மீது ஒரு முன்னுரிமை கோருவதற்கு வெஷென்ஸ்காயா மக்களுக்கு உரிமை உண்டு என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். மேலும், 1961-ல் எங்களுக்கு வழங்கப்பட்ட உங்களது உளமார்ந்த விருந்தோம்பலை, நாங்கள் இருமடங்கான உளமார்ந்த அன்போடு திருப்பிச் செலுத்தவும் முயன்றுள்ளோம்.

கடந்த சில ஆண்டுகளில் எனது இல்லத்துக்குப் பலர் விருந்தினர்களாக வந்திருக்கிறார்கள். அயல் நாட்டவரும் கூடத் தான். எவர்தான் நமது வெஷென்ஸ்காயா மண்ணில் நடக்க வில்லை! ஜெர்மானியர்கள், ஆங்கிலேயர்கள், நார்வீஜியர்கள், டேனிஷ்காரர்கள், பின்லாந்துவாசிகள் ஆகியோரும் மற்றும் பலரும்தான் நடந்துள்ளனர். எனது தொழில், உலகின் பல நாடுகளையும் சேர்ந்த எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் ஆகியோரின் கடிதங்களைப் பெறும் வாய்ப்பை எனக்கு அளிக்கிறது. எனது அரசியல் கருத்துக்களோடு நெருங்கிய கருத் தொற்றுமை கொண்டவர்களை நான் உண்மையிலேயே நல்ல நண்பர்களாக்கிக் கொண்டுள்ளேன். ஆயினும் கண்ணியமான வரவேற்பு வேறு; ஒருவரது இதயத்தின் அடியாழத்திலிருந்து அளிக்கப்படும் வரவேற்போ முற்றிலும் வேறுனது. அன்பார்ந்த கிரோவ் ஆலைத் தொழிலாளர்களே, உங்களை அப்படித்தான்— எங்களது இதயங்களின் அடியாழத்திலிருந்துதான்— நாங்கள் வரவேற்கிறோம்.

கிரோவ் ஆலை நமக்கு எத்தகைய அற்புதமான தொழிலாளி வர்க்கப் படைப் பிரிவை அனுப்பி வைத்துள்ளது என்பதைப் பாருங்கள்! இங்கு மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த நபர்கள் வந்துள்ளனர்; அவர்கள் அனைவரும், அவர்கள் ஒவ்வொருவரும் தனிச் சிறப்பு மிக்க பிரமுகர்களேயாவர்! அறிமுக உரைகள் எல்லாம் ஆற்றப்பட்டுள்ளன என்ற போதிலும் கூட, எனது சகக் கிராமவாசிகள் எல்லாப் பெயர்களையும் நினைவு வைத்துக் கொண்டிராது போகலாம். உதாரணமாக, நிக்கொலாய் வாஸிலியேவிச் ஸ்குவோர்த்சோவை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் ஒரு சரியான தாவிதோவ் இல்லையா? அவர்களது வாழ்க்கை வரலாறுகளும்கூட ஒத்துப் போகின்றன: ஸ்குவோர்த்சோவும் பால்டிக் கடற்படை மாலுமிகளில் ஒருவராகவே இருந்தவர்; 1930-ல் கட்சி கிராமப்புறத்துக்கு அனுப்பிவைத்த

இருபத்தையாயிரவரில் அவரும் ஒருவராக இருந்தார்; அவரும் ஒரு கூட்டுப் பண்ணையின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஒரே வித்தியாசம் என்னவெனில் அவர் இங்கு நியமிக்கப்படவில்லை; கலீனின் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பண்ணையில்தான் நியமிக்கப்பட்டார்.

நிச்சயமாக, இந்த முப்பத்தி நான்கு ஆண்டுகளும், அந்தப் புத்தகத்தின் ஆசிரியரான நான், இந்த இரண்டாவது தாவிதோவ் ஆகிய எங்கள் இருவரது தலைமயிரிலும் வெள்ளை நிறத்தைத் தடவி, எங்களைச் சற்றே முதுமையடையச் செய்துள்ளன. ஆயினும் நமது நாட்டுக்கு நாங்கள் தேவைப்படுவோமானால், நாங்கள் மீண்டும் ராணுவ அணிகளில் பணியாற்றவும் அல்லது தற்காப்புப் பணியில் பாடுபடவும் தயாராகவே இருக்கிறோம். மேலும், தொழில்துறைக்கும் கலைத் துறைக்கும் இடையேயுள்ள கூட்டணியை நாம் இவ்வாறுதான் புரிந்து கொள்கிறோம். நமது அருமை விருந்தினர்களில் மற்றொருவரான மிக்கேல் காவ்ரிலோவிச் அலெக்சியேவைப் பற்றியும் நான் கூற விரும்புகிறேன். அவர் இப்போதும் ஓர் இளைஞர் அல்ல; இதனை நீங்களே கண்டு கொள்ளலாம். ஆயினும், தொழில்துறையில் அறுபது ஆண்டுகள் உழைக்கும் ஒரு மனிதருக்கு அது என்ன செய்து விடுகிறது! இப்போதும் கூட அவர் முற்றிலும் பெண்கள் பிரியப்படக் கூடியவராகத்தான் இருக்கிறார் என்று என்னிடம் ரகசியமாகச் சொன்னார்கள்.

கிரோவ் ஆலைத் தொழிலாளிகள் என்னோடு தங்கியிருந்த அதே சமயத்தில், மாஸ்கோவிலிருந்தும் ராஸ்தாவிலிருந்தும் வந்திருந்த சில எழுத்தாள நண்பர்களும் என்னோடு தங்கியிருந்தனர். நாங்கள் மீன்பிடிக்கச் செல்வது, ஆற்றில் குளிப்பது, வாழ்த்துக்கூறி மது அருந்துவது ஆகியவை தவிர, முக்கியமான விஷயங்களைக் குறித்தும் உரையாடினோம். கிரோவ் ஆலைத் தொழிலாளர்கள் தமது முற்றிலும் சட்ட பூர்வமான கோரிக்கைகளை எங்களிடம் சமர்ப்பித்தனர்; அதாவது தற்காலத்தைப் பற்றியும் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றியும் நாங்கள் மிக மிக அரிதாகவே புத்தகங்கள் எழுதுவதாக எங்கள்மீது குற்றம் சாட்டினர்.

முதலில் எழுத்தாளர்கள் ஒரு சர்வாம்சமான தற்காப்பு நிலையை மேற்கொண்டு, தமது சொந்த நிலையில் முற்றிலும் உறுதியோடுதான் விடாப்பிடியாக நின்று கொண்டிருந்தனர். ஆனால் அதன்பின், யுத்தச் செய்தி அறிக்கைகளில் கூறப்படுவது போன்று, கிரோவ் ஆலைத் தொழிலாளர்களது வலிமைமிக்க படைகளின் நிர்ப்பந்தத்தால், அல்லது சரியாகச் சொன்னால் அவர்

களது விவேகமிக்க கோரிக்கைகளின் நிர்ப்பந்தத்தால், எழுத்தாளர்கள் பின்வாங்க வேண்டிய கட்டாயத்துக்கே உள்ளாயினர். தொழிலாளி வர்க்கத்தைப்பற்றி நாங்கள் மிகமிகக் குறைவாகத்தான் எழுதுகிறோம். ஆயினும் இந்தத் துறையில் முயன்று பார்க்காதவர்கள் கருதுவதுபோல், இது ஒன்றும் அத்தனை எளிதான காரியம் அல்ல. தொழிலாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையே நிகழ்ந்த இந்தச் சந்திப்பு நமக்கு எவ்வளவோ நன்மையை நல்கும் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். கலையைப்பற்றிய நமது கருத்துக்கள், நீடித்த மதிப்பும், அரசியல் ரீதியில் பரிபக்குவமும், தனது மிகவுயர்ந்த கலைநயத் தகுதிகளில் தனிச்சிறப்பும் மிக்க ஒரு புத்தகத்தைப் படைப்பது எப்படி என்பது பற்றிய நமது எண்ணங்கள் ஆகிய இரண்டையும் தொழிலாளர்களோடு பகிர்ந்து கொள்ள அனுமதிக்கும் இத்தகைய நட்புறவான சந்திப்புக்கள் மிகவும் அத்தியாவசியமானவை என்பதே எனது தீர்க்கமான அபிப்பிராயமாகும். நமது முன்முயற்சியை நமது ராஸ்தாவ் எழுத்தாளர்கள் மட்டுமன்றி, மாஸ்கோவாசிகளும், லெனின்கிராடுவாசிகளும், அநேகமாக நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள எழுத்தாளர்களும் ஏற்றுக் கொண்டு, இதனைப் பின்பற்றி நடப்பார்கள் என்றும் நான் எண்ணுகிறேன். நான் மிகுந்த தன்னம்பிக்கை கொண்டவனாகக் காட்டி கொள்ள விரும்பவில்லை; என்றாலும் நாம் இதனைத் தொடங்கியுள்ளோம் என்பதே ஒரு நல்ல விஷயம் என்றே கருதுகிறேன்; நமது பரஸ்பர விருப்பம், மற்றும் தொழிலாளி வர்க்கத்தோடு நாம் கொள்ளும் படைப்பாக்க ஒத்துழைப்பு ஆகியவற்றின் விளைவாக, நல்ல புத்தகங்கள் தோன்றும். கலைத்துறையில் அல்லது தொழில் துறையில் வேலை பார்த்து வருவோரான மக்களான நமது பொதுவான ஒற்றுமை, நமது அரசியல் ஒற்றுமை, மற்றும் நமது தார்மிக, ஆன்மிக ஒற்றுமை ஆகியவையே இதனை உத்தரவாதம் செய்யும். எனவே, அத்தகைய புத்தகங்கள் உண்மையிலேயே எழுதப்படும் என்று கிரோவ் ஆலைத் தொழிலாளர்களுக்கு உறுதி கூறுமாறு உங்களை நான் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

எனது விருந்தினர்களான கிரோவ் ஆலைத் தொழிலாளர்கள் எனக்கு வழங்கியுள்ள பரிசுகள் அனைத்திலும், கம்யூனிஸ்டு அதிரடித் தொழிலாளர் என்ற பட்டமும், கிரோவ் ஆலைக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதிச் சீட்டும்தான் மிகவும் மதிப்புமிக்க பரிசாகும். ஆயினும் கிரோவ் ஆலைத் தொழிலாளிகள் மிகவும் புத்திசாலிகள் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த அனுமதிச் சீட்டுப்

இருபத்தையாயிரவரில் அவரும் ஒருவராக இருந்தார்; அவரும் ஒரு கூட்டுப் பண்ணையின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஒரே வித்தியாசம் என்னவெனில் அவர் இங்கு நியமிக்கப்படவில்லை; கலினின் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பண்ணையில்தான் நியமிக்கப்பட்டார்.

நிச்சயமாக, இந்த முப்பத்தி நான்கு ஆண்டுகளும், அந்தப் புத்தகத்தின் ஆசிரியரான நான், இந்த இரண்டாவது தாவிதோவ் ஆகிய எங்கள் இருவரது தலைமயிரிலும் வெள்ளை நிறத்தைத் தடவி, எங்களைச் சற்றே முதுமையடையச் செய்துள்ளன. ஆயினும் நமது நாட்டுக்கு நாங்கள் தேவைப்படுவோமானால், நாங்கள் மீண்டும் ராணுவ அணிகளில் பணியாற்றவும் அல்லது தற்காப்புப் பணியில் பாடுபடவும் தயாராகவே இருக்கிறோம். மேலும், தொழில்துறைக்கும் கலைத் துறைக்கும் இடையேயுள்ள கூட்டணியை நாம் இவ்வாறுதான் புரிந்து கொள்கிறோம். நமது அருமை விருந்தினர்களில் மற்றொருவரான மிக்கேல் காவ்ரிலோவிச் அலெக்சியேவைப் பற்றியும் நான் கூற விரும்புகிறேன். அவர் இப்போதும் ஓர் இளைஞர் அல்ல; இதனை நீங்களே கண்டு கொள்ளலாம். ஆயினும், தொழில்துறையில் அறுபது ஆண்டுகள் உழைக்கும் ஒரு மனிதருக்கு அது என்ன செய்து விடுகிறது! இப்போதும் கூட அவர் முற்றிலும் பெண்கள் பிரியப்படக் கூடியவராகத்தான் இருக்கிறார் என்று என்னிடம் ரகசியமாகச் சொன்னார்கள்.

கிரோவ் ஆலைத் தொழிலாளிகள் என்னோடு தங்கியிருந்த அதே சமயத்தில், மாஸ்கோவிலிருந்தும் ராஸ்தாவிலிருந்தும் வந்திருந்த சில எழுத்தாள நண்பர்களும் என்னோடு தங்கியிருந்தனர். நாங்கள் மீன்பிடிக்கச் செல்வது, ஆற்றில் குளிப்பது, வாழ்த்துக்கூறி மது அருந்துவது ஆகியவை தவிர, முக்கியமான விஷயங்களைக் குறித்தும் உரையாடினோம். கிரோவ் ஆலைத் தொழிலாளர்கள் தமது முற்றிலும் சட்ட பூர்வமான கோரிக்கைகளை எங்களிடம் சமர்ப்பித்தனர்; அதாவது தற்காலத்தைப் பற்றியும் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றியும் நாங்கள் மிக மிக அரிதாகவே புத்தகங்கள் எழுதுவதாக எங்கள்மீது குற்றம் சாட்டினர்.

முதலில் எழுத்தாளர்கள் ஒரு சர்வாம்சமான தற்காப்பு நிலையை மேற்கொண்டு, தமது சொந்த நிலையில் முற்றிலும் உறுதியோடுதான் விடாப்பிடியாக நின்று கொண்டிருந்தனர். ஆனால் அதன்பின், யுத்தச் செய்தி அறிக்கைகளில் கூறப்படுவது போன்று, கிரோவ் ஆலைத் தொழிலாளர்களது வலிமைமிக்க படைகளின் நிர்ப்பந்தத்தால், அல்லது சரியாகச் சொன்னால் அவர்

களது விவேகமிக்க கோரிக்கைகளின் நிர்ப்பந்தத்தால், எழுத்தாளர்கள் பின்வாங்க வேண்டிய கட்டாயத்துக்கே உள்ளாயினர். தொழிலாளி வர்க்கத்தைப்பற்றி நாங்கள் மிகமிகக் குறைவாகத்தான் எழுதுகிறோம். ஆயினும் இந்தத் துறையில் முயன்று பார்க்காதவர்கள் கருதுவதுபோல், இது ஒன்றும் அத்தனை எளிதான காரியம் அல்ல. தொழிலாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையே நிகழ்ந்த இந்தச் சந்திப்பு நமக்கு எவ்வளவோ நன்மையை நல்கும் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். கலையைப்பற்றிய நமது கருத்துக்கள், நீடித்த மதிப்பும், அரசியல் ரீதியில் பரிபக்குவமும், தனது மிகவுயர்ந்த கலைநயத் தகுதிகளில் தனிச்சிறப்பும் மிக்க ஒரு புத்தகத்தைப் படைப்பது எப்படி என்பது பற்றிய நமது எண்ணங்கள் ஆகிய இரண்டையும் தொழிலாளர்களோடு பகிர்ந்து கொள்ள அனுமதிக்கும் இத்தகைய நட்புறவான சந்திப்புக்கள் மிகவும் அத்தியாவசியமானவை என்பதே எனது தீர்க்கமான அபிப்பிராயமாகும். நமது முன்முயற்சியை நமது ராஸ்தாவ் எழுத்தாளர்கள் மட்டுமன்றி, மாஸ்கோவாசிகளும், லெனின்கிராடுவாசிகளும், அநேகமாக நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள எழுத்தாளர்களும் ஏற்றுக் கொண்டு, இதனைப் பின்பற்றி நடப்பார்கள் என்றும் நான் எண்ணுகிறேன். நான் மிகுந்த தன்னம்பிக்கை கொண்டவனாகக் காட்டி கொள்ள விரும்பவில்லை; என்றாலும் நாம் இதனைத் தொடங்கியுள்ளோம் என்பதே ஒரு நல்ல விஷயம் என்றே கருதுகிறேன்; நமது பரஸ்பர விருப்பம், மற்றும் தொழிலாளி வர்க்கத்தோடு நாம் கொள்ளும் படைப்பாக்க ஒத்துழைப்பு ஆகியவற்றின் விளைவாக, நல்ல புத்தகங்கள் தோன்றும். கலைத்துறையில் அல்லது தொழில் துறையில் வேலை பார்த்து வருவோரான மக்களான நமது பொதுவான ஒற்றுமை, நமது அரசியல் ஒற்றுமை, மற்றும் நமது தார்மிக, ஆன்மிக ஒற்றுமை ஆகியவையே இதனை உத்தரவாதம் செய்யும். எனவே, அத்தகைய புத்தகங்கள் உண்மையிலேயே எழுதப்படும் என்று கிரோவ் ஆலைத் தொழிலாளர்களுக்கு உறுதி கூறுமாறு உங்களை நான் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

எனது விருந்தினர்களான கிரோவ் ஆலைத் தொழிலாளர்கள் எனக்கு வழங்கியுள்ள பரிசுகள் அனைத்திலும், கம்யூனிஸ்டு அதிரடித் தொழிலாளர் என்ற பட்டமும், கிரோவ் ஆலைக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதிச் சீட்டும்தான் மிகவும் மதிப்பு மிக்க பரிசாகும். ஆயினும் கிரோவ் ஆலைத் தொழிலாளிகள் மிகவும் புத்திசாலிகள் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த அனுமதிச் சீட்டுப்

பரிசுக்கு, மேலோட்டமாகத் தெரியும் அர்த்தத்தை விட, மிகவும் அதிகமான அர்த்தம் உண்டு. அவர்களது எண்ணங்களையே என்னால் கண்டறிந்து கூறிவிட முடியும். அதாவது, நீங்கள் எந்த நேரத்திலும் எந்த நாளிலும் எங்கள் ஆலைக்கு வரலாம்; எங்களைப் பற்றியும் எங்கள் வேலையைப்பற்றியும் மேலும் நல்ல முறையில் தெரிந்து கொள்ளலாம்; எனவே அவ்வாறு வந்தால் உங்களுக்கு எங்கள் வரவேற்பு உண்டு; இதன் பயனாக, நீங்கள் இயல்பாகவே எல்லாமே மிகவும் சுவர்ச்சிகரமாக இருப்பதைக் கண்டு, அதனைப்பற்றி உடனே அமர்ந்து எழுதித் தள்ளவும் விரும்பு வீர்கள் என்று இதன் மூலம் அவர்கள் சொல்லாமல் சொல் கிறார்கள். என் அருமைத் தோழர்களே, விவசாயத்துறை அல்லது போர் பற்றிய கருப்பொருள்களைப் பற்றி மட்டுமே எழுதி வருவேன் என்று நான் என்றும் எந்த விதமும் எடுத்துக் கொள்ளவில்லை! நான் அந்தப் பழைய நாட்களை மறந்து விட வில்லை; எனவே நான் ஏனைய கருப்பொருள்களைப் பற்றியும் இனி எழுதத் தொடங்கினாலும் தொடங்கி விடுவேன்.

நல்லது. இனி நாம் நமது அருமை விருந்தினர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான பயணம் வாய்க்க வாழ்த்துக் கூறுவோம்; இங்கு வெஷென்ஸ்காயாவிலும், ஏன், டான் பிரதேசத்தில் எங்களுமே அவர்களுக்கு எப்போதும் ஓர் உளமார்ந்த வரவேற்பு இட்டும் என்றும் அவர்களுக்கு உறுதியளிப்போம்.

1964

ரஷ்ய சமஷ்டி எழுத்தாளர்களது இரண்டாவது காங்கிரசில் ஆற்றிய தொடக்கவுரை

தோழர்களே,

ரஷ்ய எழுத்தாளர்களின் இரண்டாவது காங்கிரசைத் தொடங்கி வைக்கும் மிகவும் கௌரவமிக்க, பொறுப்புமிக்க பணி எனக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நமது மாபெரும் ரஷ்ய இலக்கியத்தையும், மற்றும் ரஷ்யா வின் பரந்த பிரதேசத்தில் வளர்ந்துகொண்டு வரும் பல அற்புதமான இலக்கியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் எழுத்தாளர்களது இந்தக் கூட்டத்தின்பால், சோவியத் யூனிய னிலும் வெளிநாடுகளிலும் உள்ள லட்சோப லட்சக்கணக்கான மக்களது கவனம் குவிந்துள்ளது என்பதை அறியும்போது, இந்தக் கடமையை ஆற்றுவது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது; அதே சமயம் சற்றே நடுக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

நமது காங்கிரசின் பணியை உலகப் பொதுஜன அபிப் பிராயம், குறிப்பாக, பத்திரிகைகள் கவனிக்காது விட்டு விடாது என்று நான் திடமாகக் கருதுகிறேன். நமது வெற்றி களைக் கண்டு உளமார மகிழ்பவர்களும், நமது பின்னடைவுகளைக் கண்டு நம்மோடு பரிவு காட்டுபவர்களுமான நமது நண்பர்கள், இந்த நிகழ்ச்சியை வரவேற்றுத் தமது கருத்துக்களைக் கூறுவார்கள் என்பதோடு மட்டுமன்றி, நமது எதிரிகளும் நமது பணியைப் பற்றி நிச்சயமாகக் கருத்துத் தெரிவிக்க விரும்பு வார்கள் என்பதை உணர்ந்து, அதற்கும் நாம் தயாராக இருந்தாக வேண்டும். நமது விவகாரங்களைப் பற்றி வம்பளப்பதில் அப்படியே மகிழ்ந்துபோய் விடும் அந்தக் கனவான்களைத்தான் நான் கருத்தில் கொண்டிருக்கிறேன்.

நல்லது; அவர்களைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. இந்தக் காங்கிரசில் நாம் பட்டவர்த்தனமாகவும், காரியார்த்த மிக்க முறையிலும் விவாதித்தாக வேண்டிய எவ்வளவோ பிரச்சினைகள் நமக்கு உள்ளன. ஏற்கெனவே நாம் அளவுக்கு மீறிய விதத்தில் அதிகமான கூட்டங்களை நடத்திவரும் வேளையில், இந்த எழுத்தாளர்கள் எல்லாம், வேறு எவ்வளவோ வேலைகளைத் தாம் செய்தாக வேண்டிய நிலையில், தமது எழுத்து வேலைகளை விட்டு விட்டு, இந்தக் கூட்டத்தை எதற்காக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நமது மக்கள், நமது லட்சக் கணக்கான வாசகர்கள் நினைக்கக் கூடாதே என்பதற் காகத்தான் நான் இதனைக் கூறுகிறேன்.

மக்களது அபிப்பிராயம் என்னவெனில், எழுத்தாளர் களான நாம், ஏனைய எல்லாவற்றையும் காட்டிலும் எதனை மதித்து வர வேண்டும் என்பதுதான். நாம் மக்களது நம்பிக்கையை யும், நாம் நமது சகலத்தையும் கட்சிக்கும் நமது நாட்டுக்குமே வழங்கி வருகிறோம் என்ற உண்மைக்கான அவர்களது அங்கீ காரத்தையும் பெறுவிட்டால், நம்மில் ஒவ்வொருவரது வாழ்வை யும் முயற்சியையும் வேறு எதுதான் நியாயப்படுத்த முடியும்?

நமது சமுதாயத்தின் வாழ்வில் கலைத்துறையைச் சார்ந்த அறிவுத்துறையினரின் பிரச்சினைக்கு—அத்தகையதொரு பிரச்சினை இருந்து வருமேயானால்—உரிய தீர்வை நாம் இதில்தான் காண வேண்டும் என்று நான் கருதுகிறேன்... வெளிப்படையாகச் சொன்னால், நாம் இந்தப் பிரச்சினையை அளவுக்கு மீறிப் பெரிது படுத்தி வருகிறோம் என்றே சில சமயங்களில் நினைக்கிறேன். நம்மை அக்கறையோடு மதித்து நடத்தி வரவும், எப்போதும் நமக்கு உதவி வரவும், அன்பான வார்த்தைகளால் நம்மை மகிழ்வித்து வரவும் வேண்டும் என்பதெல்லாம் அருமையான

விஷயம்தான்; என்றாலும், கட்சியாலும் மக்களாலும் பேணி வளர்க்கப்பட்டுள்ள சோவியத் அறிவாளிகளான நாம் ஒவ்வொரு வரும், நமது மக்களின், நமது கட்சியின், நமது சொந்த சோவியத் ஆட்சியின், சிரமமயமான, அரை நூற்றாண்டுக்காலப் போராட்டத்தின் மூலம் ஆதாயமாகப் பெற்றுள்ள அனைத்தை யும், பதிலுக்கு மிகுந்த அக்கறையோடும், மகன் தந்தைபால் காட்டும் அன்போடும் மதித்து நடந்து வருவது நமது கடமை யில்லையா?

எனது சொந்த தனிப்பட்ட அபிப்பிராயத்தைக் கேட்டால், அறிவுத் துறையினரின் பிரச்சினை நமது நாட்டில் மிக மிக எளிதாகத் தீர்க்கப்பட்டு விடுகிறது என்றே நான் கூறுவேன். அதாவது வெறுமனே லெனினது கட்சியின் விசுவாசமிக்க போர் வீரனாக இருந்து வாருங்கள்; நீங்கள் ஒரு கம்யூனிஸ்டாயினும் அல்லது கட்சி உறுப்பினர் அல்லாத நபராயினும், உங்களது சகலத்தையும், உங்களது பலம் அனைத்தையும், உங்களது ஆன்மாவையும் மக்களுக்கே வழங்கி விடுங்கள்; மக்களது வாழ்வில், அவர்களது இன்பங்களையும் சிரமங்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள் இதுவே ''பிரச்சினை''க்கு முடிவு கட்டி விடும்.

நாம் இங்கு, மாஸ்கோவில், சில நாட்களை ஒன்றாகச் சேர்ந்து கழிக்க வேண்டியிருக்கும். நாம் எல்லோரும் சேர்ந்து பணியாற்ற வேண்டியிருக்கும்; நாம் கடினமாகப் பணியாற்றவும் வேண்டும். மேலும், சோவியத் இலக்கியத்தின் நன்மைக்காக இந்தச் சில நாட்களை மிகவும் பயன்மிக்க முறையில் பயன் படுத்திக் கொள்வதற்காக, நாம் சோதரப் போர் வீரர்கள் நடந்துகொள்ள வேண்டியதைப்போல், நல்லெண்ணத்தோடு பாடுபடவும், எல்லா அற்பமான வேதனைகளையும் மனஸ்தாபங் களையும் மறக்க முயலவும் வேண்டும். நம் அனைவரையும் ஒன்று படுத்துகின்ற விஷயத்தைப் பற்றிய—நமது மாபெரும் சோவியத் இலக்கியத்தை மேலும் முன்னேற்றுவதற்கான நமது கவலையைப் பற்றிய—எண்ணமே நமது மனத்தில் மேலோங்கி நிற்குமாறு நாம் பார்த்துக் கொள்வோம். கட்சியும் நாடு முழுவதும் நம்மிடம் இதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நிச்சயமாகக் கருதுகிறேன்: நீங்கள் ஒருவருக்கொருவர் மற்றவர் மீது தாவிக் கழுத்தைக்கட்டி அரவணைத்துக்கொண்டு, எல்லாத் தவறுகளையும் மன்னித்துவிட வேண்டும் என்று நான் உங்களிடம் கோரவில்லை. நேயபாவ மெல்லாம் மிகவும் நல்லதுதான்; என்றாலும் நமது இலக்கியத் தொழிலில், நமது சித்தாந்தப் பணியில், கோட்பாடுகளும்

உள்ளன; அவற்றிலிருந்து வழுவிச் செல்லும் செயலாக இருந்தால், உங்களது உயிருக்குயிரான நண்பருக்கும்கூட, அந்தச் செயலுக்காக மன்னிப்பு அளித்துவிடக் கூடாது. நாம் ஒருவருக்கொருவர் மற்றவர் புரியும் தவறுகளைக் காணத் தவறுவதற்கு முடிவுகட்டி, தவற்றைத் தவறு என்று கூறக் கற்றுக் கொள்ளும்போதுதான் நமது ஒற்றுமை உண்மையிலேயே உறுதியானதாக இருக்கும். நமது சகஜமான பணியிலும், இலக்கியத்தின் சகஜமான வளர்ச்சியிலும் தலையிடக் கூடியது எதுவும் இன்னும் இருந்து வருமானால், அந்த ஏதோ ஒன்றை நமது பாதையிலிருந்து நாம் ஈவிரக்கமற்றுத் துடைத்தெறியவும் செய்வோம். தமது மிதவாதப் போக்கோடு அவ்வப்போது சரசமாடிக்கொண்டிருக்க விரும்பும், சித்தாந்தப் போராட்டத்தில் விட்டுக் கொடுக்கும் போக்கோடு செயல்பட விரும்பும் நபர்கள், நம் மத்தியில் இன்னும் இருந்து வருவார்களேயானால், அவர்களைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோம் என்பதை அவர்களது முகத்துக்கு நேராகவே அவர்களிடம் கூறி விடுவோம்.

இதற்கான நமது பொறுப்பு மிகப் பெரியது ஆதலாலும், நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள லட்சியம் மிகவும் முக்கிய மானது ஆதலாலும், நேருக்கு நேராகச் சரியான பதிலடி கொடுக்கும் பேச்சைத் தவிர்க்க நமக்கு உரிமையே கிடையாது.

இயல்பாகவே, நம்மில் ஒவ்வொருவரும் தமது வேதனைப் பிரச்சினைகளைக் கொண்டுள்ளனர்; எனவே பேச்சாளர்களில் ஒவ்வொருவரும் அவற்றையும் தொட்டுக் காட்டவும், தமது சொந்த இலக்கிய ஸ்தாபனத்தின் விவகாரங்களையும் கவலை களையும் பற்றி இந்தக் கூட்டத்தில் எடுத்துக் கூறவும் நிச்சய மாக விரும்புவர். என்றாலும் குறிப்பாக இந்த ஒரு விஷயத்தை வலியுறுத்திக் கூற என்னை அனுமதியுங்கள்: அதாவது மிக முக்கிய மான விஷயம், இலக்கியமும் மக்களது வாழ்க்கையும், இலக்கியமும் கம்யூனிச நிர்மாணமும் என்ற நமது பிரதானக் கருப்பொருளை, பிரதானத் திசைவழி நோக்கை நாம் காண மறந்துவிடக் கூடாது என்பதுதான் அது. இந்த ஆதார சுருதியை நீங்களும் நானும் ஆரோகண சுதியில் ஒலித்து வந்தால், நாம் பாடும் பாட்டும் நல்லவிதமாகவே அமைந்து விடும்; நமது காங்கிரஸ் வெறுமனே ஒரு நடப்பு இலக்கிய விவகாரமாக நடைபெறுமல், வாழ்க்கையைப் பற்றியும் நமது கலையைப் பற்றியும் தீவிரமாகச் சிந்தித்து வரும் நபர்களது பயன்மிக்க கூட்டமாக நடைபெறும்.

வெளி நாடுகளிலுள்ள நபர்கள்—அவர்களிற் சிலர் குரோத உணர்ச்சியோடும், ஏனையோர் புரிந்து கொள்ள வேண்டும் என்ற உண்மையான விருப்பத்தோடும்—நம்மை நோக்கி அடிக்கடி

இவ்வாறு கேட்கிறீர்கள்: சோஷலிச எதார்த்தவாதம் என்பது தான் என்ன? இது விஷயத்தில் நான் சித்தாந்திகளது விளக்கங்களை அவர்களிடமிருந்து பறித்தெடுத்து, அவற்றையே திருப்பிக் கூறத் துணியவில்லை. மேலும், விஞ்ஞான பூர்வமான சூத்திரங்கள் எனது பலம் வாய்ந்த வாதக் கூறு அல்ல. மாறாக இதற்குப் பதிலாக நான் இவ்வாறு கூறுவதே வழக்கம்: அதாவது சோஷலிச எதார்த்தவாதம் என்பது வாழ்வின் உண்மையை, லெனினியச் சார்பு நிலை நிலைகளிலிருந்து கலைஞன் ஒருவன் புரிந்து கொண்டு அர்த்தப்படுத்தும் உண்மையைச் சித்திரித்துக் காட்டும் ஒரு முறையேயாகும். இன்னும் கூட எளிதாகச் சொன்னால், அது ஒரு புதிய உலகைக் கட்டியமைக்க மக்களுக்குச் செயலூக்கத் தோடு உதவிவரும் ஒரு முறையேயாகும் என்றே நான் கருதுகிறேன்.

சோஷலிச எதார்த்தவாதம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள நேர்மையோடு விரும்பும் எவரும், சோவியத் இலக்கியம் அதன் ஐம்பதாண்டுக் கால வாழ்நாட் காலத்தில் சேகரித்துள்ள பரந்த அனுபவச் செல்வத்தைக் கூர்ந்து ஆராய வேண்டும். உண்மையில் இந்த இலக்கியத்தின் வரலாறுனது, அதன் கதாநாயகர்களின் கண்கண்ட வடிவங்களிலும், மக்களது முயற்சியின் கண்கண்ட சித்திரங்களிலும் குடிகொண்டுள்ள சோஷலிச எதார்த்தவாதமேயாகும்.

சோவியத் இலக்கியமும், குறிப்பாக அதன் பிரதானப் படைப் பிரிவுகளில் ஒன்றான ரஷ்ய இலக்கியமும் நடந்து கடந்து வந்துள்ள மகோன்னதமான மார்க்கமானது, வருங்காலத்தைப் பற்றி நான் விவாதிக்கப் புகும் இந்நாளில், நமது மனக் கண் முன்னால் கடந்து செல்லட்டும். நாம் சேகரித்துக் குவித்துள்ள செல்வம் மிகப் பெரியதாகும். நாம் பெருமைப்படுவதற்கும், உரத்த, எனினும் மலடு தட்டிப்போன சூட்சுமார்த்த வாதத்தை எதிர்ப்பதற்கும் நம்மிடம் விஷயம் உண்டு. மேலும், மக்களது நம்பிக்கையை நியாயப்படுத்துவதற்கு, நாம் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது என்பதை நாம் காண முடிந்த போதிலும், நமது பணியில் நாம் இன்னும் திருப்தியற்றவர்களாகவே இருக்கக்கூடிய போதிலும, மனித குலத்தின் ஆன்மிக மதிப்புக்களின் செல்வக் களஞ்சியத்துக்கு நமது இலக்கியம் ஆற்றியுள்ள பங்கையோ, அது உலகெங்கணும் அனுபவித்து வரும் மறுக்கொணாத செல்வாக்கையோ நாம் என்றுமே மறந்து விடக் கூடாது.

அன்பார்ந்த தோழர்களே!

ரஷ்ய சமஷ்டியின் எழுத்தாளர்கள்தான் தமது சொந்தக்

காங்கிரசை நடத்துவதில், சோவியத் யூனியனிலேயே முதலாவதாக விளங்குகின்றனர். குடியரசு மட்டத்தில் ஏனைய இத்தகைய காங்கிரசுகள் தொடர்ந்து நடைபெறும். ரஷ்யர்களான நாம் இதனை ஒரு தீவிரமான, காரியார்த்தமிக்க விவாதமாக நடத்திஞல் அது அருமையாக இருக்கும். நாம் அவ்வாறே செய்வோம் என்று நம்புகிறேன்.

இந்த நம்பிக்கைமிக்க வார்த்தையோடு, ரஷ்ய சமஷ்டி எழுத்தாளர்களின் இரண்டாவது காங்கிரஸ் தொடங்கி விட்டது என்று அறிவிக்க என்னை அனுமதியுங்கள்.

1965

ஒரு நன்றியுரை

முகஸ்துதிக்கு நான் பலத்த எதிர்ப்பைக் காட்டி வந்த போதிலும்கூட, இப்போது நான் அப்படியே பரவசப்பட்டுப் போயிருக்கிறேன்; இந்த மூன்று நாட்களும், மேலும் பத்து வயது மூத்தவனுக என்னை உணரும்படிச் செய்துள்ளன. எனவே இது எனது அறுபதாவது பிறந்த நாளாக இல்லாமல், எனது எழுபதாவது பிறந்த நாளாகவே அமைந்துவிட முடியும்...

ஆயினும் காரியார்த்தத்தோடு கூறிஞல், எனது பிறந்த நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு, என்னைக் கௌரவிக்கும் முகமாக இந்த மண்டபத்தில் கூடியுள்ள உங்கள் அனைவருக்கும், மற்றும் இங்கு பிரசன்னமாக இல்லாத எனது பல வாசகர்கள் அனைவருக்கும் நான் நன்றிகூற விரும்புகிறேன்.

இந்த நீண்ட நெடும் அறுபதாண்டுக்கால மார்க்கத்தில், தமது இதயங்களின் அன்பிஞல் எனக்கு உதவிய ஒவ்வொருவருக்கும் நான் நன்றிகூற விரும்புகிறேன். எனக்கு வழங்கப்பட்டுள்ள உயர்ந்த பரிசுக்காக நான் நமது சோவியத் அரசாங்கத்துக்கு எனது ஆழ்ந்த நன்றியுணர்ச்சியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உங்கள் அனைவருக்கும் நன்றி.

1965

ஸ்வீடிஷ் ராயல் அகாடமிக்கு

எனது இலக்கிய முயற்சியைப் பற்றிய உயர்வான மதிப்பீட்டுக்கும், நோபெல் பரிசு வழங்கப்பட்டதற்கும் நான் உங்களுக்கு உளமார நன்றி கூறுகிறேன். நோபெல் பரிசளிப்பு வைபவத்துக்

காக ஸ்டாக்ஹோம் வருமாறு நீங்கள் விடுத்துள்ள அன்பான அழைப்பையும் நன்றியறிதலோடு ஏற்றுக் கொள்கிறேன்.

1965

"பிராவ்தா"வுக்கு

நோபெல் பரிசு பெற்றுள்ளமைக்காக எனக்கு வாழ்த்துரைத்துள்ள எனது எல்லா சோவியத் மற்றும் அயல்நாட்டு வாசக நண்பர்களுக்கும், எல்லா ஸ்தாபனங்களுக்கும் தனிநபர்களுக்கும் நான் உளமார நன்றி கூறிக் கொள்கிறேன்.

1965

"பிராவ்தா" நிருபருக்களித்த ஒரு பேட்டி

நோபெல் பரிசு பெற்றது குறித்து நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள்?

எனக்கு நோபெல் பரிசு வழங்கப்பட்டுள்ளதைக் குறித்து நான் இயல்பாகவே மகிழ்ச்சியுறுகிறேன்; எனினும் எனது உணர்ச்சிகளைச் சரிவரப் புரிந்து கொள்ளுமாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன்: நான் உணர்வது ஒரு தனிநபரின், இந்த மிகவுயர்ந்த சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நூலைப் படைத்த ஒரு தொழில்முறையான எழுத்தாளரின் சுயமன நிறைவு உணர்ச்சி அல்ல. எனது உணர்ச்சிகளில் மேலோங்கி நிற்பது என்னவெனில், எனது நாட்டுக்கும், நான் எந்தக் கட்சியின் அணிகளில் எனது வாழ்க்கையின் செம்பாதிக் காலமாக இருந்து வந்துள்ளேனே அந்தக் கட்சிக்கும், நமது சோவியத் இலக்கியத்துக்கும்தான், மேலும் கீர்த்தியைச் சேர்ப்பதில், மிகவும் சிறிய அளவிலாயினும், நானும் ஏதோ பங்காற்றியிருக்கிறேன் என்ற எனது மகிழ்ச்சிகரமான பிரக்ஞையுணர்வேயாகும். எனது சொந்த உணர்ச்சிகள் அனைத்தையும் காட்டிலும், இதுவே எனக்கு மிகவும் முக்கியமானதாகும்.

தற்கால உலகில் சில இலக்கியப் பிரமுகர்கள் எதன் வாழ்வைக் குறித்து ஆட்சேபித்துள்ளார்களோ அந்த நாவல் இலக்கிய வகையும், அதன் தர்ம நியாயமும் நிர்த்தாரணம் செய்யப்பட்டுள்ளது என்று கூற முடியும் என்று அறிவதனால் ஏற்படும் மனநிறைவும் எனக்குண்டு. நன்முக எழுதப்பட்ட நூல் நெடுங்காலம் வாழ்ந்தே வருகிறது; வாழ்ந்து வரும் எதையும் எந்தவொரு தக்க காரணமும் இல்லாமல் ஏற்க மறுத்துவிட முடியாது.

நீங்கள் இந்தச் செய்தியை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?

ஸ்வீடிஷ் பத்திரிகையாளர்கள் எனக்கு அனுப்பிய ஒரு தந்தியின் மூலமாகத்தான். ஆயினும் இந்தச் செய்தி எனக்கு வந்து சேர்வதில் தாமதமாகி விட்டது: இந்தத் தந்தியை ஃபர்மஞெவ் வட்டாரக் கட்சிக் கமிட்டியின் செயலாளர் தோழர் மெந்தலியேவ் தான் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார்; இதற்காக அவர் வட்டாரக் கேந்திரத்திலிருந்து 140 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து என்னைக் காண ஓடோடியும் வந்து விட்டார். ஸ்வீடிஷ் ராயல் அகாடமிக்கு எனது பதில் தந்தியைக் கொடுப் பதற்காக, நான் சற்று மோசமான பருவ நிலையில் யூரல்ஸுக்குப் பறந்து செல்ல வேண்டியிருந்தது. மொத்தத்தில் அக்டோபர் 15-ம் தேதி எனக்கு மிகவும் அதிருஷ்டகரமான நாளாகவே இருந்தது: நான் அருணோதயப் பொழுதிலேயே படுக்கையை விட்டு எழுந்து, எனது நாவலின் முதற்பாகத்தில், எப்படியோ எனக்குச் சரிவர அமைந்து வராத அந்த அத்தியாயத்தை, விறுவிறென்று எழுதி முடித்தேன். (இந்த அத்தியாயத்தில் தான், ஜெனரல் லுகினின் குணும்சத்தை முன் மாதிரியாகக் கொண்டு நான் உருவாக்கிய பாத்திரமான ஜெனரல் நிக்கொலாய் ஸ்த்ரெல்த்சோவ் தம்மைக் காண வந்த தமது சகோதரரை வரவேற்கிறார்). பிற்பகலில் நெடுநேரம் கழித்துத்தான் நான் நோபெல் பரிசைப்பற்றித் தெரிந்து கொண்டேன்; அன்று மாலையில் நான் இரண்டே வேட்டுக்களில் (நான் சுட்டதே இரண்டே முறைதான்) இரண்டு அற்புதமான கபிலநிறக் காட்டு வாத்துக்களையும் சுட்டு வீழ்த்தினேன். மேலும் இதில் குறிப்பிடத் தக்கது என்னவென்றால், அவற்றை நான் வெகு தொலைவிலிருந்தே சுட்டு வீழ்த்தினேன்; அவ்வாறு அடிக்கடி நிகழ்வதில்லை என்பதை நீங்களே அறிவீர்கள்.

மேலும், இந்தப் பரிசு உங்களது வாழ்க்கையின் இப்போதைய நடைமுறையை எவ்வாறு பாதித்துள்ளது?

என்னை ஒன்றும் அவ்வளவு சுலபமாகக் கீழே தள்ளி வீழ்த்தி விட முடியாது என்பதை இதற்குள் நீங்களே தெரிந்திருக்க வேண்டும். வழக்கம்போலவே நான் வேலை செய்கிறேன்; ஓய்வு எடுக்கிறேன்; அருமையான கஜாக் கூமிஸ் பானத்தை அருந்து கிறேன்; சில சமயங்களில் காட்டு வாத்து வேட்டைக்கும் செல் கிறேன்; அதனால் எனது உடம்பே சில்லிட்டு விறைத்துப்போகும் போது, நான் ஒரு கோப்பை கஜாக் அராக்கா மதுபானத்தையும் அருந்துகிறேன். ஸ்டாக்ஹோம் வைபவத்துக்குப் பிறகு, நான் அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற எனது நாவலின் முதல் பாகத்தை எழுதி முடிப்பேன். நிச்சயம் முடித்து

விடுவேன் என்று உறுதியாக நம்புகிறேன். எனவே எல்லாம் ஒழுங்காய்த்தான் நடைபெற்று வருகின்றன!

கஜாக் ஸ்டெப்பிவெளி பாழ்வெளியாகக் காட்சியளிக்கலாம்; ஆனால் இங்கோ நாட்டில் வேறு எங்கணும் போலவே, வாழ்க்கை சுறுசுறுப்போடு பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருக்கிறது: இலேயுதிர்கால உழவுக்கான கடைசி ஹெக்டர் நிலங்கள்—இதுவே திட்ட இலக்குகளுக்கும் அதிகமானதாகும்—உழப்பட்டு வருகின்றன; கால்நடை மேய்ப்பர்கள் சிரமமான மாரிக்காலத்தைச் சமாளிக்கத் தயாராகி வருகின்றனர்; பண்ணை எந்திர ஆப்பரேட்டர்கள்—இந்தப் பிரதேசத்திலேயே இவர்கள் தான் தலைசிறந்தவர்கள்—அனுபவத்தைப் பரிமாறிக் கொள்வதற்காக ஒன்றுகூடிக் கலந்து பேசி வருகின்றனர். எனவே இங்கும் மக்கள், நாட்டின் பொருளாதார, கலாசார வளர்ச்சியின்பால் கட்சி கொண்டுள்ள அக்கறையினால் உத்வேகம் பெற்று, தமது திறமைக்கேற்ப மிகவும் சிறந்த முறையில் உழைத்து வருகின்றனர். கம்யூனிசத்தைக் கட்டியமைத்து வரும் இந்த வலிமை மிக்க மக்கள் கூட்டத்தில் ஒரு சின்னஞ்சிறிய துளியாக நானும் இருப்பதை உணர்வது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

அக்டோபர் 21, 1965

எதார்த்த வாதத்தின் ஜீவபலம்

இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில், எனக்கு நோபெல் பரிசை வழங்கியமைக்காக, ஸ்வீடிஷ் ராயல் அகாடமிக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறுவது எனது மகிழ்ச்சிகரமான கடமையாகும் என நான் கருதுகிறேன்.

இந்தக் கௌரவம் எனக்கு மனநிறைவு உணர்ச்சியை அளித்ததற்கு, இது எனது தொழில்முறையான தகுதிகளுக்கு அல்லது ஓர் எழுத்தாளன் என்ற முறையில் எனக்கேயுரிய தன்மைகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு சர்வதேச அங்கீகாரமாகும் என்பது மட்டும் காரணம் அல்ல என்பதைப் பகிரங்கமாகக் கூறும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்கெனவே கிட்டியுள்ளது. இந்தப் பரிசு ஒரு ரஷ்யருக்கு, ஒரு சோவியத் எழுத்தாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதில் நான் பெருமையடைகிறேன். எனது நாட்டில் பல எழுத்தாளர்கள் உள்ளனர்; அவர்களுள்ளிருந்தான் நான் இங்கு பிரதிநிதித்துவப்படுத்துகிறேன்.

நான் ஏற்கெனவே கூறியுள்ளதுபோல், இந்தப் பரிசு நாவல் இலக்கிய வகைக்கான—மறைமுகமானதுதான் என்றாலும்—மற்றொரு உறுதிச்சான்றாக விளங்குகின்ற காரணத்தாலும், நான்

மனநிறைவு பெறுகிறேன். நாவல் என்ற இலக்கிய வடிவம் காலாவதியாகி விட்டது, தற்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இனியும் அதனால் இயலாது எனக் கூறப்படும் கூற்றுக்களை அண்மைக் காலமாக நான் அடிக்கடி படித்தும் கேட்டும் வந்துள்ளேன். பட்டவர்த்தனமாகச் சொன்னால் இவை என்னைத் திகைக்கவே வைத்தன. எனினும் உண்மையில் நாவல்தான் ஒரு நூலாசிரியருக்கு, எதார்த்த உலகின் மிகவும் முழுமையான சித்திரத்தை வழங்குவதற்கும், இந்த எதார்த்தத்தின்பாலும் அதன் அதியவசரமான பிரச்சினைகளின்பாலும், தமது சொந்தக் கண்ணோட்டத்தையும், அதேபோல் தம்மையொத்த கருத்துக் கொண்ட மக்களின் கண்ணோட்டத்தையும் அவர் செலுத்திப் பார்ப்பதற்கும் இடமளிக்கிறது.

வேறு எந்தவோர் இலக்கிய வகையைக் காட்டிலும் நாவல் தான், ஒரு நூலாசிரியருக்கு, பிரபஞ்சத்தின் மையக் கேந்திர மாகத் தமது சிறிய சொந்த வாழ்க்கையையே எடுத்துக்காட்ட முயலும் முயற்சியில் ஈடுபடாதவாறு, நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கையின் பரந்துபட்ட தன்மையைக் கூர்ந்து கண்டறிய இடமளிக்கிறது. இந்த இலக்கிய வகை அதன் இயல்பிலேயே எதார்த்த எழுத்தாளருக்குச் செயல்முறைக்கான மிகப்பரந்த வாய்ப்பை அளிக்கிறது.

கலையுலகில் பல தற்காலப் போக்குகள் எதார்த்தவாதத்தை மறுத்தொதுக்கின்றன; ஏனெனில் அது காலங்கடந்த பத்தாம் பசலியாகிவிட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் நானோ, பழமை வாதி எனக் குற்றம் சாட்டப்பட்டு விடுவோமோ என்ற பயமே இல்லாமல் இதற்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களையே கொண்டிருக்கிறேன் என்பதையும், நான் எதார்த்தவாதக் கலையைத் தேர்ந்து தெளிந்து திடமாக ஆதரித்து நிற்பவன் என்பதையும் அறிவிக்கிறேன்.

புதுமை இலக்கியத்தைப்பற்றி எவ்வளவோ பேசப்படுகிறது; இது விஷயத்தில் அவர்கள் மனத்தில் கொண்டிருப்பதெல்லாம் பிரதானமாக வடிவத்துறையில் மேற்கொள்ளப்படும் சோதனை முயற்சிகளைத்தான். எனது அபிப்பிராயத்தில், இலக்கியத்தில் புதுமை இலக்கிய கர்த்தாக்கள் என்பவர்கள், நமது சகாப் தத்தின் வாழ்க்கைக்கே உரிய புதிய அம்சங்களையும், உறவுகளையும் மனப்போக்குகளையும் தமது புத்தகங்களின் மூலம் புலப்படுத்தி வரும் எழுத்தாளர்களேயாவர்.

எதார்த்தவாதமும் சரி, எதார்த்தவாத நாவலும் சரி, கடந்த காலத்திய மாபெரும் விற்பன்னர்களின் அனுபவத்தையே சார்ந்திருக்கின்றன. ஆயினும் அது தனது வளர்ச்சிப் போக்கின்

போது, சாராம்சத்தில் புதியதும் தெள்ளத்தெளிவாக நவீன மானதுமான அம்சங்களைக் கிரகித்துக் கொண்டுள்ளது.

வாழ்க்கையைப் புனருத்தாரணம் செய்து அதனை மனிதனின் நன்மைக்காகப் புனரமைக்கும் கருத்தைத் தன்னுட் கொண்டுள்ள எதார்த்த வாதத்தைப் பற்றியே நான் பேசுகிறேன். நாங்கள் சோஷலிச எதார்த்தவாதம் என்று குறிப்பிடுகிறோமே, அதைப் பற்றித்தான் பேசுகிறேன். அது ஊகமான சிந்தனைப் போக்கையோ அல்லது எதார்த்தத்திலிருந்து தப்பி ஓடுவதையோ அனுமதிக்காத, ஆனால் அதற்கு மாறாக, முன்னேற்றத்துக்கான போராட்டத்தில் ஈடுபடுமாறு மாந்தரை அறைகூவி அழைக்கின்ற, லட்சோப லட்சக் கணக்கான மக்களால் ஆசரிக்கப்பட்டு வரும் நோக்கங்களை அவர்கள் உணர்ந்து போராட்ட உதவுகின்ற, இந்தப் போராட்டத்தின் பாதைகளை அவர்களுக்கு வெளிச்சம் பாய்ச்சிக் காட்டுகின்ற ஓர் உலகக் கண்ணோட்டத்தை வெளியிடுகிறது என்ற முறையில், அது தனிச்சிறப்பு மிக்கதாகும்.

விண்வெளி வீரர்கள் பூமியின் ஈர்ப்புச்சக்தி எல்லையைத் தாண்டிச் சென்றவுடன், எடையற்ற ஒரு நிலையில் உலாவித் திரிவதுபோல், ஓர் எடையற்ற நிலையில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் தனிநபர்களின் கூட்டமாக மனித குலம் சிதறிப்போய் விடவில்லை. நாம் பூமியில்தான் வாழ்ந்து வருகிறோம்; புவியுலகின் நியதிகளுக்கே கீழ்ப்படிந்து நடக்கிறோம். உலக மக்கட் தொகையில் பெரும் பகுதியினர் பொதுவான நலன்களையே கொண்டுள்ளனர்; ஒரே குறிக்கோள்களை எய்தவேவேட்கை கொண்டுள்ளனர்; இந்தக் குறிக்கோள்களை எய்தும் முயற்சியானது அவர்களைச் சிதறவடிப்பதில்லை; மாறாக அவர்களை அது ஒன்றுப் படுத்தவே செய்கிறது.

இந்த மக்கட் பகுதியினர் தமது கரங்களாலும் தமது கருத்தாலும் சகலத்தையும் உருவாக்கிவரும் உழைக்கும் மக்களாவர். உழைக்கும் மகளுக்குத் தங்குதடையற்றுப் பணிபுரிய முயல்வதையே மிகப்பெரும் கௌரவமாகவும் மிகப்பெரும் சுதந்திரமாகவும் கருதிவரும் அத்தகைய எழுத்தாளர்களைச் சேர்ந்தவனே நான்.

எல்லாமே இதிலிருந்துதான் தோன்றுகிறது. இதிலிருந்தே சோவியத் எழுத்தாளனை நான் தற்கால உலகில் ஒரு கலைஞனின் ஸ்தானத்தை எவ்வாறு வகித்து வருகிறேன் என்பதை முடிவு கட்டிக் கொள்ளலாம்.

நாம் தொல்லைகள் மலிந்த ஒரு சகாப்தத்தில் வசித்து வருகிறோம். ஆயினும் உலகில் போரை விரும்பக்கூடிய தேசம்

எதுவும் இல்லை. ஆயினும் தேசங்களையே போர் நெருப்பில் தள்ளி விடும் சக்திகள் உள்ளன. இரண்டாம் உலகப் போரில் இடிந்து நாசமான பரந்த பிரதேசங்களின் கனன்றெரியும் இடிபாடுகளின் கூக்குரலைக் காதில் வாங்காமல் ஓர் எழுத்தாளனின் இதயம் இருந்து வர முடியுமா? மனிதகுலத்தைச் சுய நாசத்துக்கு உள்ளாக்க விரும்புவோருக்கு எதிராக, ஒரு நேர்மையான எழுத் தாளர் குரல் எழுப்பிப் பேசாதிருக்க முடியுமா?

ஒன்றோடொன்று மோதுகின்ற படைகளின் போரிலிருந்து விலகி, ஒலிம்பிய மலைச் சிகரங்களில் ஏறியமர்ந்து கொண்டு, மானிடரின் துன்ப துயரங்களைப் பற்றிக் கவலையே கொள்ளா திருக்கும் ஏதோ ஒரு தெய்வத்தைப்போல் தன்னைக் கருதிக் கொள்ளாமல், தன்னைத் தனது மக்களின் புதல்வனாக, மனித குலத்தின் ஒரு சின்னஞ் சிறு துளியாகக் கருதிக் கொள்ளும் ஓர் எழுத்தாளனின் புனிதப் பணிதான் வேறு என்ன?

அவனது புனிதப் பணி வாசகர் விஷயத்தில் நேர்மையாக இருந்து வருவதுதான்; உண்மையை, ஒருவேளை கடினமாகக் கூட இருக்கக்கூடிய உண்மையை, என்றாலும் எப்போதும் துணிவான உண்மையை மக்களுக்கு எடுத்துக் கூறுவதுதான். வருங்காலத் திலும், அந்த வருங்காலத்தைக் கட்டியமைக்கத் தமக்குள்ள திறமையிலும் மக்களுக்குள்ள நம்பிக்கையை, அவர்களது இதயங்களில் பலப்படுத்துவதுதான். உலகில் சமாதானத்துக்காகப் போராடுவதும், எங்கணும், தனது வார்த்தைகள் எங்கெங்கு எட்ட முடியுமோ அங்கெல்லாம், அத்தகைய போராளிகளை ஊக்குவித்து வருவதும் தான். மக்களை, முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் அவர்களது இயல்பான, கௌரவமிக்க முயற்சிகளில் ஒன்றுபடுத்துவதுதான்.

மனிதரின் மனங்களிலும் இதயங்களிலும் செல்வாக்கு வகிக்கும் சக்தி கலைக்கு உண்டு. இந்தச் செல்வாக்கை மனித குலத்தின் நன்மைக்காகவும், மனிதர்களது ஆன்மாக்களில் ஓர் எழிலுலகை உருவாக்கவும் பயன்படுத்துகின்ற எழுத்தாளர் களுக்கே, கலைஞன் என்று கூறிக் கொள்ளும் உரிமை உண்டு என்று நான் கருதுகிறேன்.

எனது சொந்த நாடு தனது வரலாற்று ரீதியான முன்னேற்றத்தில் நடந்து தடம்பதிந்த பாதையைப் பின்பற்றிச் செல்லவில்லை. எங்களது பாதைகள், புதுத்தடம் வகுப்போரின், முன்னோடிகளின் பாதைகளாகவே இருந்தன. எழுத்தாளன் என்ற முறையில் எனது பணியானது—அதனை நான் எப்போதுமே கண்டுணர்ந்து வந்துள்ளதுபோல்—நான் எழுதியுள்ளவை அனைத் தின் மூலமும், இனி எழுத இருப்பவற்றின் மூலமும், எனது

சொந்த சோவியத் மக்களுக்கு—எவரையும் என்றுமே தாக்காத, மாறுக, தாம் உருவாக்கியுள்ள அனைத்தையும், தமது சுதந்திரத்தையும் கௌரவத்தையும், தமது சொந்த விருப்பப்படியே வருங்காலத்தைத் தாமே கட்டியமைத்துக் கொள்ளும் உரிமையையும் எப்போதுமே பாதுகாத்துவர முடிந்துள்ள, கடின உழைப்பும், ஆக்க சக்தியும் வீரமும் செறிந்த மக்களுக்கு—மதிப்புமிக்க பாராட்டுரையை வழங்குவதேயாகும்.

மக்கள் தமது இதயத்தில் மேலும் மேம்படவும் மேலும் புனிதமடையவும் எனது புத்தகங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனது புத்தங்கள் அவர்கள் மனத்தில் அவர்களது சக மானிடர்களின் மீது அன்பையும், மனிதாபிமான மற்றும் முன்னேற்ற லட்சியங்களுக்காகப் போராடும் வேட்கையையும் தோற்றுவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதனை நான் ஓரளவுக்கேனும் எய்தியுள்ளேனுகில், நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கு பிரசன்னமாகியுள்ள ஒவ்வொருவருக்கும், மற்றும் நோபெல் பரிசு பெற்றமைக்காக எனக்குத் தங்களது வாழ்த்துக்களை அனுப்பியுள்ள மக்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

1965

புத்தாண்டு வாழ்த்துக்கள்

கடந்த ஆண்டு கழிந்து விட்டது. சோவியத் மக்களான நாம் அனைவரும், இந்த வரும் ஆண்டில் நாம் என்ன செய்தாக வேண்டும் என்பதைப் பற்றி ஏற்கெனவே சிந்தித்து வருகிறோம்.

நாம் நமது பெரிய, பொதுவான திட்டங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டிருக்கிறோம். மேலும், ஒவ்வொருவரும் தத்தம் புத்தாண்டு விருப்பங்களின் பட்டியலையும் கொண்டுள்ளோம்.

அவையனைத்துமே நனவாகுமாக! எனது அருமை நாட்டவர்கள் தமது பணியில் அதிகமான வெற்றியையும் உண்மையான ஆனந்தத்தையும் பெற நான் வாழ்த்துகிறேன். எனது சோதர எழுத்தாளர்களும் மற்றும் கலைத்துறைகளில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும், புதிய மானிடனைப் பயிற்றுவிக்கும் சிரமமான, உன்னதமான பணியில் நமது கட்சிக்கு உதவும் படைப்புக்களைப் படைக்குமாறு நான் வாழ்த்துக் கூறுகிறேன்.

உலகில் சமாதானம் நிலவவும், முன்னேற்றத்திலும் ஜனநாயகத்திலும் முன்னேறிச் செல்லவும், உலகிலுள்ள மக்கள்

அனைவருக்கும், பல்வேறு நாடுகளில் வசித்து வரும் நமது சம காலத்தவர் அனைவருக்கும், நான் வாழ்த்துக் கூறுகிறேன்.

மேலும் நான் எனக்கு நானே விரும்பிக் கூறிக் கொள்ளக் கூடிய தலைசிறந்த விஷயம், நான் எனது வாசகர்களுக்கு வாக்களித்துள்ளபடி, அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற எனது நாவலின் முதற் பாகத்தை நான் எழுதி முடிக்க வேண்டும் என்பதுதான். இந்தப் பாகத்தை எழுதி முடிப்பது அரைக் கிணறு தாண்டிய கதைதான். ஏனெனில் இரண்டாவது பாகத்தையும் எழுத வேண்டியுள்ளது.

இந்தப் பத்திரிகையின் வாயிலாக நான் பிராவ்தா வாசகர் களோடு விரைவிலேயே தொடர்பு கொள்வேன் என நம்புகிறேன்.

ஜனவரி 1, 1966

லீப்சிக்கிலுள்ள காரல் மார்க்ஸ் பல்கலைக்கழகம் வழங்கிய தத்துவவியலில் டாக்டர் என்ற கௌரவப் பட்டத்தின் சான்றிதழைப் பெற்றுக் கொண்டபோது ஆற்றிய உரை

அன்பார்ந்த தோழர் புரூனிங் அவர்களே,

அன்பார்ந்த தோழர் ஹோக்செல்ஷினீடர் அவர்களே,

லீப்சிக் பல்கலைக் கழகத்தின் மொழியியல் பிரிவின் பேரவைக் கவுன்சிலுக்கு, எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கு மாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

ஒரு முதலாளித்துவ நாடு எனக்கு வழங்கிய ஒரு கௌரவப் பட்டத்தையும், ஒரு சோதர சோஷலிச நாட்டிலிருந்து வரும் அதனையொத்த ஒரு பட்டத்தையும் பற்றி நான் வேறுவிதமாகத் தான் உணர்கிறேன் என்பதை நான் கூறியாக வேண்டும். முதலாவது பட்டமானது வெறுமனே எனது இலக்கியத் திறமைக்கும், இலக்கியத் துறையில் நான் சாதித்த சாதனை களுக்கும் கிட்டிய ஒரு சான்றிதழ் மட்டுமேயாகும். இரண்டாவது பட்ட விஷயமோ முற்றிலும் வேறுனது: இந்தப் பல்கலைக்கழகப் பட்டமானது, நான் கொண்டுள்ள அதே அரசியல் கருத்துக் களைக் கொண்டுள்ள, எங்களது சோவியத் மக்களைப் போலவே அதே குறிக்கோள்களை நோக்கியும், ஒரே லட்சியங்களுக்காகவும் பாடுபட்டு வருகின்ற மக்கள் எனக்களித்த பட்டமாகும். அவர்களது அங்கீகாரம் எனக்கு அளவிடற்கரிய விதத்தில் மிகவும் மதிப்புமிக்கதாகும்.

தோழர் புரூனிங் அவர்களே, தோழர் ஹோக்செல்ஷினீடர் அவர்களே, நான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, லீப்சிக் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது நன்றியையும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் மீண்டும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, அடுத்த முறை நான் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு வரும் போது, உங்கள் பல்கலைக் கழகத்துக்கு வருகை தருவதை, ஒரு கௌரவமாகவும், மகிழ்ச்சிகரமான கடமையாகவும் கருதுவேன் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

லீப்சிக்கிலிருந்து வெஷென்ஸ்காயாவுக்கு நீங்கள் இந்த நெடும் பயணத்தை மேற்கொண்டு வந்ததற்கும் உங்களுக்கு நன்றி கூற என்னை அனுமதியுங்கள். இது முற்றிலும் ஓர் அரிய சாதனைதான்; ஏனெனில் இந்தப் பயணம் ஒன்றும் எளிதானதல்ல.

தோழர் ஷிலெம் அவர்களே, ஜனநாயக ஜெர்மனியின் உழைக்கும் மக்களது பிரதிநிதி என்ற முறையில், உங்களுக்கும் நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

எனது வாழ்வின் இந்த மாபெரும் நாளில் இங்கு பிரசன்ன மாகி என்னைக் கௌரவித்துள்ள உங்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறிக் கொள்கிறேன்.

ஜனவரி 10, 1966

23 ஆவது கட்சிக் காங்கிரசில் ஆற்றிய உரை

தோழர்களே,

வால்கா நதியின் பல்வேறு உப நதிகளும் தமக்கே உரிய ஓர் அழகையும் ரஷ்யக் கவர்ச்சியையும் கொண்டிருந்த போதிலும் கூட, அவற்றைக் கொண்டு வால்கா நதியின் கம்பீரமான ஆற்றொழுக்கின் கவர்ச்சிகரமான பேரழகை எவ்வாறு ஒருவர் தீர்மானித்துவிட முடியாதோ, அதேபோல், நமது வேலை நாட்களையும் நமது தனித்தனியான சாதனைகளையும் பற்றிப் பத்திரிகைகளில் வெளிவரும் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற செய்தி அறிக்கைகளைக் கொண்டு, நமது நாட்டின் பிரமிப் பூட்டும் சாதனைகளையும் நிர்மாணத்தின் அளவையும் பற்றிய ஒரு முழுமையான சித்திரத்தையும் ஒருவர் உருவாக்கிவிட முடியாது.

ஆயினும் நமது கட்சியின் காங்கிரஸ் ஒன்றுக்காக நாம் ஒன்றுகூடி, பிரதான அறிக்கையைக் காதால் கேட்டு,

பரிசீலனைக்குரிய ஆண்டுகளில் கட்சியும் மக்களும் சாதித்துள்ள வற்றைத் தொகுத்துக் கூறும் புள்ளி விவரங்களைத் தெரிந்து கொள்ளும்போது, இந்த அசுர முயற்சியின் விளைவுகளை நாம் உண்மையிலேயே காண்கிறோம்; தமது வருங்காலத்தின் பெயரால் மக்கள் உருவாக்கி வருவதன் பெருமை எத்தகையது என்பதை உண்மையிலேயே கண்டுணர்கிறோம்.

இந்தக் கவிதாபூர்வமான முன்னுரைக்குப் பிறகு நான் சட்டென்று வசன நடைக்கு மாறினால், தொழில்துறை, விஞ்ஞானம் அல்லது கல்வி ஆகிய ஏதாவதொரு துறையில் தாம் பெற்றுள்ள வெற்றிகளைக் குறித்து, இந்த உயர்ந்த மேடையி லிருந்து காங்கிரசுக்கு எடுத்துக்கூறக்கூடிய நபர்களைக் கண்டு, நான் பொறுமைப் படுகிறேன் என்பதை நான் சகல நேர்மை யுணர்ச்சியோடும் அறிவிக்கத்தான் வேண்டும். நாம் இங்கு சோவியத் இலக்கியத்தின் ஒரு பிரதிநிதியாக நின்று பேசு கிறேன்; நாங்கள் பெற்றுள்ள வெற்றிகள், நாங்களும் எங்களது வாசகர்களான நீங்களும் எத்தனை பெரியவையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ, அத்தனை பெரியவையாக இருக்கவில்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

துலாவிலுள்ள எழுத்தாளர் ஸ்பானத்தின் செயலாளர் கூறியதாக ஒரு 'ஜோக்' உண்டு; அங்கு அவர்களது காரியங்கள் எவ்வாறு நடைபெற்று வருகின்றன என்று அவரிடம் கேட்ட போது, அவர் மிகவும் குதூகலத்தோடு இவ்வாறு பதிலளித் தாராம்: "நாங்கள் அருமையாகச் செயல்பட்டு வருகிறோம்! முற்காலத்தில் துலா குபெர்னியாவில் ஒரே ஒரு எழுத்தாளர் தான்—லெவ் டால்ஸ்டாய் மட்டும்தான்—இருந்தார்; இன்றோ எழுத்தாளர் யூனியனது துலா பிராந்தியக் கிளையில் இருபத்தி மூன்று உறுப்பினர்கள் உள்ளனர் என்று நாங்கள் பெருமைப் பட்டுக்கொள்ள முடியும்."

அவரைப் போல் நன்னம்பிக்கை கொண்டவனாக நான் இல்லை. நமது எண்ணிக்கைகள் அதிதரித்துக் கொண்டே போகின்றன என்பது உண்மைதான்; என்றாலும் நமது கூட்டுறவுத் துறையாளர்கள் கூறுவதுபோல், "உற்பத்தியான பொருள் மட்டும் விரும்பிய தரங்களை எப்போதுமே பூர்த்தி செய்து விடுவதாய் இருக்கவில்லை."

கடந்த சில ஆண்டுகளில் வசன நூல்களும் கவிதை நூல் களுமாக, சில நல்ல புத்தகங்கள் வெளிக்கொணரப்பட்டன என்பது உண்மையே; எனினும் அவை போதுமானதே அல்ல. இது லெனின் பரிசுக்காக அனுப்பப்பட்டிருந்த புத்தகங்களின்

பட்டியலின் மூலம், போதிய அளவுக்குத் தீர்மானமான முடிவாகவே நிரூபித்துக் காட்டப்பட்டுள்ளது. விதி விலக்காக இரண்டு அல்லது மூன்று புத்தகங்களைத் தவிர, இந்தப் புத்தகங்கள் பூர்வாங்க விவாதத்தின்போதும்கூட, பரிசீலனையில் தேறிக் கரையேற முடியாதவை. இது ஒரு ஸ்தம்பித நிலையல்ல. எழுத்தாளர்கள் கஷ்டப்பட்டுத்தான் உழைக்கிறார்கள் என்றாலும் தனிச்சிறப்பு மிக்க புத்தகங்கள் ஆண்டுதோறும் வந்து விடுவதில்லை; மேலும் அவை மிகவும் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் சரியல்ல. கிராஸ்ஸெதார் போன்ற வளமிக்க பிரதேசத்தைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். அங்கும்கூட மோசமான ஆண்டுகளும், அறுவடையில் தோல்விகளும் ஏற்பட்டுத்தான் வந்துள்ளது. எனவே இலக்கியத்திடமிருந்து மட்டும் நீங்கள் என்ன எதிர் பார்க்க முடியும்?

உதாரணமாக, யுத்தம் பற்றிய இலக்கியத்தை நீங்கள் எடுத்துக் கொண்டால், அதன் மெதுவான முன்னேற்றத்துக்கு அந்தக் கருப்பொருளின் சிக்கலான தன்மையே காரணமாகும் என்பதே என் கருத்தாகும். கடந்த சில ஆண்டுகளாகத்தான் யுத்தக் கால நினைவுக் குறிப்புக்கள் ஓரளவுக்கு அதிகமான அளவில் வரத் தொடங்கியுள்ளன; மேலும், ஒரு பெரிய நாவலை எழுதுவதைக் காட்டிலும், ஒருவரது சொந்த நினைவுகளை எழுதிவிடுவது மிகவும் சுலபமானதாக இருந்த போதிலும் கூட, நமது மதிப்புக்குரிய தளபதிகள் ராணுவப் பிரமுகர்கள் பலரும், தாம் கூற வேண்டியவற்றை இன்னும் கூறி முடிக்கவில்லை. நான் எனக்கு நானே சால்ஜாப்புக்களைத் தேடிக் கொள்கிறேன் என்று தயவுசெய்து எண்ணிக் கொள்ளாதீர்கள்: போரைப் பற்றி எழுதி வருபவர் நான் ஒருவன் மட்டுமே அல்ல. எங்களுக்குப் பிறகும் கூட, வேறு பலரும் அதைக் குறித்து எழுதவே செய்வர். நான் வெறுமனே ஓர் உண்மையைத்தான் கூறுகிறேன்.

நமது இலக்கிய விவகாரங்களைப் பற்றிய விரிவான ஆய்வுரையில் இறங்கி நான் உங்களைப் போரடிக்க விரும்பவில்லை, மேலும் அது ஒன்றுக்குமேற்பட்ட பலர் எடுத்துக் கொள்ளக் கூடிய விஷயமாகும். இந்த ஆண்டில் பின்னல் நடைபெற விருக்கும் எங்களது எழுத்தாளர் காங்கிரசினால், இந்த விஷயத்தை நாங்கள் முழுமையாக ஆராயப் புகுவோம்.

சமுதாய வாழ்க்கையில் எழுத்தாளரின் ஸ்தாபனம் என்று வழக்கமாகக் கூறப்படுவதைப் பற்றி மட்டும் சில வார்த்தைகள். நமது நிகழ்கால சமுதாய வாழ்வுக்கே உரிய தனித்த காட்சி

யுண்மைகள் என்ன? இந்தக் காட்சியுண்மைகள் சம்பந்தமாக எழுத்தாளர் மேற்கொள்ள வேண்டிய நிலை என்ன?

இன்றைய உலகின் நிகழ்ச்சிப் போக்குகள், அவை விஷயத்தில் ஒரு நேர்மையான எழுத்தாளர் அல்லது கலைஞர் ஒரு பாரபட்சமற்ற நிலையை மேற்கொள்வதை அசாத்தியமாக்கி விடுகின்றன என்பது ஒருதலைச் சார்பற்ற ஒவ்வொரு நபருக்கும் தெளிவான விஷயம் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். இது ஓர் எளிமையான உண்மைதானே என்று ஒருவர் நினைக்கலாம்; என்றாலும் அவ்வப்போது இதனை மக்களின் மனதுக்கு நினைவூட்டத்தான் வேண்டியுள்ளது. தற்கால மனித குலத்தின் வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களின் போக்கு ஒன்றும் சுமுகமானதாக இல்லை. சகல தேசங்களின், நாடுகளின் புராதனமான கதைகளிலும் கற்பனைக் கதைகளிலும் வருணித்துக் கூறப்பட்டுள்ளவையான, மனிதனை ஒரு மனித வடிவமும் மனித ஆன்மாவும் அற்ற ஓர் எதிர்மறைப் பிறவியாக மாற்றிவிடும் தீய சக்திகளைப் போலவே, பிற்போக்கான முதலாளித்துவக் கலையானது மக்கள் உள்ளங்களில் மிகவும் மிருகத்தனமான உணர்ச்சிகளைக் கிளறிவிடச் சகல காரியங்களையும் செய்து வருகிறது. அவை வேறுபட்ட அறிகுறிகள்தான்; என்றாலும் அவை யாவும் ஒரே ரகத்தைச் சேர்ந்த காட்சியுண்மைகளையே சுட்டிக் காட்டுகின்றன.

நமது நாடும் ஏனைய சோஷலிச நாடுகளும், பல்வேறு தேசிய இனங்களையும், பல்வேறு அரசியல் கருத்துக்களையும், பல்வேறு இனங்களையும் சேர்ந்த லட்சோப லட்சக்கணக்கான உழைக்கும் மக்களுக்கு, ஒரு நம்பிக்கைக் கோட்டையை, பிரகாசமான, நியாயமான வருங்காலத்தின்மீது வைக்கும் நம்பிக்கையின் கோட்டையை, உருவகப்படுத்தி நிற்கின்றன. நாம் நிர்மாணித்துவரும் யாவும், நமது தொழிலாளர்கள், விவசாயிகள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் ஆகிய அனைவரும் புரிந்து வரும் காரியங்கள் யாவும், நமது கட்சி நம்மை உருவாக்குமாறு உத்வேகமூட்டி வரும் யாவும், உலகில் சமாதானம் நிலவுவதற்காகவே, ஜனநாயகம், சோஷலிசம், மக்களுக்கிடையே சோதர நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் பெயரால் மேற்கொள்ளப்படும் சுதந்திரமான முயற்சிகளின் வெற்றிக்காகவே மேற்கொள்ளப் படுகின்றன. யாவும் மனிதனுக்காகவே, மனித குலத்துக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன.

எனவேதான் "கலாசார விற்பன்னர்களே, நீங்கள் யார் பக்கம் நிற்கிறீர்கள்?" என்று கார்க்கி எழுப்பிய கேள்வி, மூப்பது

ஆண்டுகளுக்குமுன் இருந்ததைப் போலவே, இன்றும் அதியவசர மான கேள்வியாக ஒலிக்கிறது. சோவியத் நூலாசிரியர்கள், மற்றும் பிறநாடுகளிலுள்ள முற்போக்கு எழுத்தாளர்கள் ஆகியோரில் மிகப் பெரும்பாலோர் தமது புத்தகங்களில் இந்தக் கேள்விக்கு ஒரு தெள்ளத் தெளிவான பதிலே வழங்குகின்றனர்.

சமுதாய வாழ்வில் எழுத்தாளனின் பாத்திரம் என்ன என்பதைப்பற்றி, பிரதிநிதித்துவம் வாய்ந்த பெரும் கூட்டங் களில் எழுத்தாளர்களோடும் பத்திரிகையாளர்களோடும் பத்திரிகை நிருபர்களோடும் விவாதிக்கும் சந்தர்ப்பம் எனக்குப் பல முறை கிட்டியுள்ளது. குறிப்பாக, சென்ற ஆண்டில் நோபெல் பரிசு வழங்கும் விழாவின்போது ஸ்டாக்ஹோம் டவுண் ஹாலில் நான் ஆற்றிய உரையில், இந்த விஷயம் ஒரு முக்கியப் பகுதியாக விளங்கியது. எனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சபை யோர், இப்போதைய சபையோரிடமிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டவர்களாகவே இருந்தனர். எனவே நான் எனது கருத்துக்களைப் பொதிந்து தெரிவிக்கப் பயன்படுத்திய உருவமும் அதற்கேற்ப மாறுபட்டதாகவே இருந்தது. நினைவிருக்கட்டும். உருவம்தான் மாறியது; உள்ளடக்கம் அல்ல.

கம்யூனிஸ்டுகள் எங்கெங்கே, என்னென்ன மொழியில் பேசினாலும், நாம் எப்போதும் கம்யூனிஸ்டுகள் என்ற முறை யிலேயே பேசுகிறோம். இது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம்; என்றாலும் அவர்கள் இதனைச் சகித்து விழுங்கிக் கொள்ளத்தான் வேண்டும். மேலும் இதே குணநலன்தான் எங்களும் மதிக்கவும் படுகிறது. ஒரு சோவியத் பிரஜை எங்கே ஒரு மேடைச் சொற்பொழிவை ஆற்றினாலும், அவர் ஒரு சோவியத் தேச பக்தர் என்ற முறையிலேயே உரையாற்ற வேண்டும். சமுதாய வாழ்வில் எழுத்தாளனின் பாத்திரத்தை விளக்கிக் கூறும்போது, நாம் கம்யூனிஸ்டுகளாகவே, நமது மாபெரும் தாயகத்தின் புதல்வர்களாகவே, கம்யூனிச சமு தாயத்தைக் கட்டியமைத்து வரும் ஒரு நாட்டின் பிரஜை களாகவே, நமது கட்சியின், மற்றும் நமது மக்களின் புரட்சிகர– மனிதாபிமானக் கருத்துக்களின் பிரதிநிதிகளாகவேதான் பேசுகிறோம்.

ஒரு நூலாசிரியர் சோவியத் யூனியனில் ஒன்றை எழுதுகிறார், வெளிநாட்டில் வேறொன்றை வெளியிடுகிறார் என்றால், அது மிகவும் வேறுபட்ட விஷயமாகும். அவர் இரண்டு சந்தர்ப்பங் களிலும் ஒரே ரஷ்ய மொழியைத்தான் பயன்படுத்துகிறார்; அன்றி முதல் சந்தர்ப்பத்தில் தம்மைச் சாமர்த்தியமாக மூடி மறைத்துக் கொள்வதற்கு அதனைப் பயன்படுத்துகிறார்; இரண்டா

வது சந்தர்ப்பத்திலோ, சோவியத் ஆன எல்லாவற்றுக்கும் எதிரான, நமக்கு மதிப்பிடற்கரியதும் புனிதமானதுமான எல்லாவற்றுக்கும் எதிரான, தமது மூர்க்கமான பகைமையையும் குரோத பாவத்தையும் வெளிக்காட்டி இந்த மொழியை இழிவுபடுத்துவதற்காகப் பயன்படுத்துகிறார்.

நான் மாபெரும் உன்னதமான சோவியத் மக்களின் சின்னஞ் சிறு தூசியாக இருப்பதில் பெருமை கொள்ளும் எழுத்தாளர்களைச் சேர்ந்தவன். நமது எழில்மிக்க, வலிமைமிக்க நாட்டின் புதல்வர்களாக இருப்பதில் நாம் பெருமைப்படுகிறோம். நமது நாடே நம்மை உருவாக்கியுள்ளது; தன்னால் வழங்க முடிந்ததையெல்லாம் அது நமக்கு வழங்கியுள்ளது. நமது சோவியத் தாயகம் உண்மையில் நமக்கு ஒரு தாய்தான். நாம் அனைவரும் ஒரே பெரிய குடும்பத்தின் உறுப்பினர்கள். எனவே நமக்கு மிகவும் புனிதமான ஒன்றை இழிவுபடுத்த முயலும் துரோகிகளின் நடத்தை விஷயத்தில் நாம் நடந்து கொள்வது எவ்வாறு இருக்க முடியும்? ஒவ்வொரு மந்தையிலும் ஒரு கறுப்பு ஆடு—ஓர் அயோக்கியன்—இருப்பான் என்று பழைய பழமொழி கூறுகிறது. ஆனால் கறுப்பு ஆடுகள் பல இருக்கின்றன. தனது சொந்தத் தாயின்மீது அவதூறு பொழிவதைக் காட்டிலும், அவளைக் குரோதபாவத்தோடு அவமானப்படுத்துவதைக் காட்டிலும், அவளை அடிப்பதற்காகக் கையை ஓங்குவதைக் காட்டிலும், மிகவும் நீசத்தனமான, மிகவும் இழிவான செயல் வேறொன்று இருக்க முடியாது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்.

நமது நாட்டின்மீது அவதூறு பொழிந்துள்ள, நமக்கு மிகவும் மதிப்புமிக்கதன்மீது சேற்றை வாரி இறைத்துள்ள எழுத்தாளர்களை எண்ணி நான் வெட்கப்படவில்லை. அவர்கள் ஒழுக்கங்கெட்ட பிறவிகள். ஆனால், இந்த எழுத்தாளர்களைப் பாதுகாக்க முயல்கின்றார்களே,—இவ்வாறு செல்வதற்கு அவர்களை எது தூண்டினாலும் சரி, அதைப்பற்றி அக்கறையில்லை—அந்த நபர்களுக்காகத்தான் நான் வெட்க உணர்ச்சி அடைகிறேன்.

மேலும், குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்பட்ட இந்தத் துரோகிகளுக்குத் தமது சேவைகளை வழங்கியும், அவர்களுக்காக ஜாமீன் கொடுக்க அனுமதிகோரி மனுச்செய்தும் வருகின்ற நபர்களைப் பார்க்கும்போது நான் இருமடங்கு வெட்கமடைகிறேன்.

நாம் ஆதாயமாக அடைந்துள்ள அனைத்துக்கும் நாம் மிகவும் அரிய விலை கொடுத்திருக்கிறோம்; நமது சோவியத் ஆட்சியை,

எவரும் தமது இஷ்டம்போல் சுதந்திரமாக அவதூறு செய்ய அனுமதியாதவாறு, அதனை நாம் பொன்னேபோல் போற்றிப் பாதுகாத்து வருகிறோம்.

ஆயினும், மனிதாபிமானத்தின் பெயரைக் கூறி, தீர்ப்பு கடுமையானது என்று ஒப்பாரி வைத்துவரும் சிலரும், இருக்கவே செய்கின்றனர். நமது சோவியத் ராணுவத்தின் கட்சி ஸ்தாபனத்திலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளின் கோஷ்டியொன்றை நான் இங்கு காண்கிறேன். அவர்களது படைப்பிரிவுகள் ஒன்றில், துரோகிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால், அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். மனிதாபிமானமும் மாய்மாலமான அழுகுணித்தனமும் முற்றிலும் வெவ்வேறான விஷயங்கள் என்பதை நமது போர் வீரர்கள் வேறு எவரைக் காட்டிலும் மிக நன்றாக அறிவர்.

நான் வேறொன்றைப்பற்றியும் சிந்தித்துப் பார்க்கிறேன். கண்டிப்பாக வரையறுக்கப்பட்ட கிரிமினல் சட்ட ஷரத்துக்களின்படி வழக்குகள் விசாரிக்கப்படாமல், புரட்சிகர நீதியின் மூலமே பெரிதும் விசாரிக்கப்பட்டுவந்த அந்த மறக்கொணாத 1920ஆம் ஆண்டுகளின்போது இந்தக் காரியம் நிகழ்ந்திருக்குமானால், அப்போது இந்தக் கட்சி மாறிகளுக்கு, ஓ! மிகவும் வேறுவிதமான தண்டனையல்லவா வழங்கப்பட்டிருக்கும்! ஆனால் இங்கோ—நீங்கள் நம்பினால் நம்புங்கள்—தீர்ப்பின் ''கடுமை''யைப் பற்றிச் சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள்!

அவதூறு பொழியும் இந்த நபர்களுக்கு ஆதரவாகப் பேசும் முதலாளித்துவ ஆதரவாளர்களுக்கும் நான் இதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்; எங்கள் நாட்டில் விமர்சனத்தின் பாதுகாப்பைக் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டும். நாங்கள் விமர்சனத்தை ஆதரித்து வருகிறோம்; வளர்த்து வருகிறோம். மேலும், இப்போதைய காங்கிரசிலும்கூட, மிகவும் கடுமையான விமர்சனங்கள் கூறப்பட்டுள்ளன. என்றாலும், அவதூறு விமர்சனம் ஆகாது; குட்டையிலிருந்து அள்ளிய சேறு, ஓவியரின் தூரிகையிலிருந்து வழித்த வர்ணமாகி விடாது.

தோழர்களே, இலக்கியம் சம்பந்தமான பிரச்சினைகளைப் பேசி நான் உங்கள் கவனத்தை நெடுநேரம் சோதித்துவிட்டேன். எழுத்தாளர்களான நமக்கு இலக்கிய விவகாரங்களே எல்லா விஷயங்களின் முதலும் முடிவும் ஆகும் என நீங்கள் கருதிவிடக் கூடாது என நான் விரும்புகிறேன். அவற்றைத் தவிர, நமக்கு வேறு பல அக்கறைகளும் உண்டு. உதாரணமாக, நூலாசிரியர் லியோனித் லியானோவ் தமது வாழ்வில் பல ஆண்டுகளைக் காடுகளைப் பாதுகாக்கும்—ரஷ்யக் கிராமப்புறத்தின் அழகையும்

செல்வத்தையும் பாதுகாக்கும்—போராட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளார். ஏனைய பிரச்சினைகளும் நமது மனத்தை ஆட்கொள்கின்றன. இப்போது நான் பேசப்போகும் விஷயம் இலக்கியத்தோடு எந்தச் சம்பந்தமும் கொண்ட விஷயம் அல்ல. நாம் பைகால் ஏரியின் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம், மேலும் நமது திட்டமிடுதலைப் பற்றியும் சில வார்த்தைகள் கூற என்னை அனுமதியுங்கள்.

மார்ச் 5 அன்று பிராவ்தா, வி. தித்தோவ் எழுதியுள்ள ''நிர்வாகத்துறையின் கற்பனாவாதிகள்'' என்ற கட்டுரையை வெளியிட்டிருந்தது. சுருக்கமாக, அந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருந்த விஷயம் இதுதான்; முன்னொரு காலத்தில் ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசின் உணவுத் தொழில் துறை அமைச்சகம், கல்யாஜின்னில் காய்கறிகளைக் காயவைக்கும் ஒரு தொழிற்சாலையைக் கட்டத் தீர்மானித்தது. உண்மையில் அந்தத் தொழிற்சாலை கட்டவும் பட்டது; ஆயினும் அதற்குத் தேவையான மூலப்பொருள்களை அதற்குப் போதிய அளவுக்கு வழங்க முடியவில்லை என்று தெரிய வந்தது. எனவே அதனை ஸோயாப் பருப்பு ஸாஸ் தயாரிக்கும் தொழிற்சாலையாக மாற்றி விடத் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு மாற்றவும் பட்டது. அதன் பிறகோ மாஸ்கோவிலும் செர்ப்புக்கோவிலுமுள்ள தொழிற்சாலைகள், மாஸ்கோவிலும் மாஸ்கோப் பிராந்தியத்திலும் வசிக்கும் அனைவரும் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு, எல்லா ஸோயாப் பருப்பு ஸாஸையும், தாமே சப்ளை செய்து வந்தன என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின் அதனை ஒரு பால் தொழிற்சாலையாக மாற்றுவதற்காக மிகவும் விலையுயர்ந்த வெளிநாட்டு ஆலைச் சாதனங்கள் வாங்கப்பட்டன; அந்த ஆலையை அங்கு நிறுவி முடிப்பதற்கு முன்னால், கோழிக்கறியைப் பாக்கிங் செய்யும் ஆலையாக அதனை மாற்றினால் நல்லது என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்காக வங்கியிலிருந்து ஒரு பெரிய கடன்தொகையும் வழங்கப்பட்டது. ஆயினும் இதன் பின்னர் மீண்டும் அந்த ஆலையின் உற்பத்தித் திறனைது, மூலப்பொருள் கிட்டக்கூடிய அளவைக் காட்டிலும் பல மடங்கு அதிகமானது என்று தெரிய வந்தது. இந்தத் தொழிற்சாலை பத்தாண்டுகளாக இருந்து வந்துள்ளது; மேலும், இதன் பல்வேறு உருமாற்றங்களுக்காகக் கிட்டத்தட்டப் பத்துலட்சம் ரூபிள்களும் செலவாகியுள்ளன. இந்த உண்மையின் பரிமாணம் ஒருவேளை அத்தனை மிகவும் பெரிதானதாக இல்லாதிருக்கலாம்; ஆயினும் இவ்வாறு கேள்வி கேட்க இடம் உண்டு என்றே ஒருவர் உணர முடியும்: ''என்ன விதமான திட்டமிடுதல் இது?''

சென்ற ஆண்டு வோல்கோகிராடில் சுத்தம் செய்யப்படாத கழிவு நீர், அலட்சியத்தினாலோ அல்லது பாதுகாப்பு அமைப்புக் கூடத் திட்டமிடுதலில் நேர்ந்த கவனக் குறைவினாலோ, ஏதோ ஒரு தொழிற்சாலையிலிருந்து வால்கா நதிக்குள் பாய அனுமதிக்கப்பட்டு விட்டது. இதனால் ஆற்றுநீர் அசுத்தப் படுத்தப்பட்ட இடத்திலிருந்து நானூறு கிலோ மீட்டர் வரை யிலும் நதியின்மீது செத்த மீன்கள் மிதந்து கொண்டிருந்தன. கட்டுப்பாட்டு நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட கணக்குப்படி இதனால் ஏற்பட்ட இழப்பு மொத்தத்தில் 842,000 ஸ்டர்ஜன் வகை மீன்களும் (பல்வேறு வகையான ஸ்டர்ஜன் மீன்களும்), 735,000 செதில் மீன்களும், கணக்கிட முடியாத அளவிலான சிறு மீன்களும், மீன்குஞ்சுகளும், மீன் சினைகளும் ஆகும். இதனால் நமது தேசப் பொருளாதாரத்துக்கு நேர்ந்த சேதம் 110 லட்சம் ரூபிள்கள் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், செத்துப்போன பின் ஸ்டர்ஜன் மீன்களில் ஒரு சரிபாதியளவு நீர்ப்பரப்பின்மீது மிதக்காமல், நீருக்கடியில் அடிமட்டத்துக்குத் தாழ்ந்து போய்விடுகின்றது என்பதைக் கருதிப் பார்க்கும்போது, நேர்ந்த சேதத்தைக் குறைந்தபட்சம் இருமடங்காகவே கொள்ள முடியும்.

சரி. நாம் பைகால் ஏரி விஷயத்துக்கு மீண்டும் வருவோம். இதனைக் குறித்து எவ்வளவோ பேசப்பட்டும் எழுதப்பட்டும் உள்ளது. ஆயினும் பத்திரிகைகளில் விடுக்கப்பட்ட கடுமையான எச்சரிக்கைகள் எப்போதுமே பொருட்படுத்தப்பட்டு விடவில்லை. வால்கா நதி விஷயத்தில் இப்போது நடந்துள்ளதைப் போல், இதே காரியம் பைகால் விஷயத்திலும் நிகழுமானால் என்ன நேரும்? பைகால் ஏரியைச் சுற்றிலுமுள்ள காடுகளை வெட்டித் தள்ளி, அங்கு காகிதக் கூழ் மற்றும் காகித ஆலைகளைக் கட்டி யமைக்கும் யோசனையைக் கைவிடவும், அதற்கான துணிவை நாம் பெறவும், அதற்குப் பதிலாக, இந்த ரஷ்ய இயற்கைச் செல்வக் களஞ்சியத்தின் உயிர் வாழ்க்கையை அச்சுறுத்தாத வகையிலான தொழிற்சாலைகளைக் கட்டியமைக்கவும், நாம் முனையத்தான் வேண்டுமா? எவ்வாறாயினும், பைகாலைக் காப்பாற்றுவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தே ஆக வேண்டும். ரஷ்யாவின் ''கீர்த்திமிக்க கடலான, புனித பைகாலை''ப் பத்திரமாக வைத்திருக்க நாம் தவறி விட்டால், வருங்காலம் நம்மை மன்னிக்காது என்றே நான் அஞ்சுகிறேன்.

தோழர்களே, ஒரு சொந்தப் பிரச்சினையையும் நான் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். அமைதியான டான் நதி அழியப்

போகிறது. நிபுணர்களின் கணக்குப்படி, அதனுள் ஆண்டு தோறும் தொழில்துறை ஆலைகளால். எழுபது லட்சம் கனமீட்டர் அளவுக்குக் கழிவுநீர் கலக்கப்பட்டு வருகிறது. இதனால் அஜோவ் நீர்நிலைக்கு மிகவும் உண்மையான அச்சுறுத்தலே தோன்றி யுள்ளது—அதன் மீன்வள இருப்புக்கள் அடுத்த சில ஆண்டுகளில் முற்றிலும் குறைத்த போய் விடும். முன்னுட்களில் அங்கு பிடிக் கப்பட்ட மதிப்புமிக்க மீன்களின் அளவு மட்டுமே ஆண்டொன் றுக்கு 150,000 டன்களுக்கும் அதிகமாக இருந்தது; இப்போதோ அந்த அளவு 15,000 டன்களே, அதாவது பத்தில் ஒரு பகுதியை எட்டிப் பிடிப்பதே அரிதாக இருக்கிறது.

தொழிற்சாலைகளின் கழிவு நீரை டான் நதியில் கலப்பது, டான் நதி நீரைத் திசிம்லியான்ஸ்காயா அணையின் மூலம் தடுத்து முறைப்படுத்துவது, இத்தனைக்கும் சிகரம் வைத்தாற் போல் சோவியத் யூனியனது மீன்பிடித் தொழில் துறை அமைச்சர் தோழர் இஷ்கோவின் தொலை நோக்கற்ற நிர்வாகம் ஆகியவை அஜோவ் நீர்நிலையைப் பெரு நாசத்தின் விளிம்புக்கு ஏற்கெனவே கொண்டு வந்து விட்டன. லித்தரத்துர்னயா கெஜத் தாவிலும், காம்சொமால்ஸ்காயா பிராவ்தாவிலும் வெளியிடப்பட்ட சட்டபூர்வமான தாக்குதல்களுக்கெல்லாம் பதிலளிக்காமல் நெடுங்காலமாக மௌனம் சாதித்து வந்த தோழர் இஷ்கோவ், இறுதியில் ''அஜோவ் கடல்: இன்றும் நாளையும்'' என்ற தெளிவு தரமுடியாத ஒரு கட்டுரையினுல் பதிலளித்தார். தோழர் இஷ் கோவ். அஜோவ் கடலை இன்று அவர் நிர்வகித்து வரும் அதே முறையிலேயே தொடர்ந்து நிர்வகித்து வருவாரானுல், அஜோவ் கடலுக்கு எந்தவிதமான ''நாளை''யும் இருக்கவே முடியாது. அவரது அனுமதியின் பேரில்தான் ஏறத்தாழ இருநூறு கப்பல்கள் அங்கு கோடைப் பருவத்தில் இரண்டே மாதங்கள் நீங்கலாக, மற்றப்படி ஆண்டு முழுவதிலுமே புல்ஹெட் வகை மீன்களையும் சார்டெல் வகை மீன்களையும் மும்முரமாகப் பிடித்து வருகின்றன. மேலும் அவரது உத்திரவுகளின்படியே, அங்கு எந்திரமயமாக்கப்பட்ட மீன்வலைகள் மட்டுமே, ஆண்டொன்றில் ஒரு கோடிக்கு மேற்பட்ட பைக் பெர்ச் சிறுமீன் வகைகளை அழித்து வருகின்றன; இதன் மூலம் அஜோவ் நீர்நிலைப் பகுதி யிலுள்ள மீன் சினை வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்புத் தொழில் நிறுவனங்களின் முயற்சிகளையெல்லாம் நாசமாக்கி வருகின்றன.

தமக்கு ஆதரவாக, மீன் பிடிப்பு மற்றும் ஆராய்ச்சி ஸ்தாபனங்களது மாநாட்டை மேற்கோள் காட்டும், தோழர் இஷ்கோவ், இப்போதும்கூட ஒவ்வோர் ஆண்டிலும் நாற்பது அல்லது ஐம்பதாயிரம் டன்னுக்குக் குறையாத அளவுக்கு

சார்டெல் வகை மீன்களைப் பிடித்து வரலாம் என்று அடித்துக் கூறுகிறார். ஆனால் அவர் குறிப்பிடாதது என்னவென்றால், சார்டெல் வகை மீன்களோடு மதிப்புமிக்க ஏராளமான சிறுமீன் வகைகளும் சேர்ந்தே பிடிக்கப்படும் என்ற விஷயம்தான்.

நேற்று எனது நோக்கம் தோழர் இஷ்கோவுக்கு முகத்தி லடித்தாற்போல் நேரடியாகப் பதில் கொடுப்பதாகத்தான் இருந்தது என்ற ரகசியத்தை இப்போது கூறிக் கொள்கிறேன்; ஆனால் மாலையில் எனது மிகப் பழைய தோழர்களான சில போர்முனை நண்பர்களை நான் சந்தித்தேன்; நான் தயாரித்து வைத்திருந்த உரையை அவர்களிடம் காட்டுமாறு ஏதோ ஒரு சைத்தான் உணர்ச்சி என்னைத் தூண்டி விட்டு விட்டது. அவர்கள் எனது முரட்டுத்தனத்துக்காக என்னைக் குற்றம் சாட்டினர்; தோழர் இஷ்கோவ் மோசமான நபரும் அல்ல, மோசமான உழைப்பாளியும் அல்ல என்றும் என்னிடம் கூறினர். அத்துடன் எனது உரையையும் நான் காரசாரமின்றிச் சாதுவாக்கிவிட வேண்டும் என்று என்னை வற்புறுத்தி, அதுபற்றி என்னை உறுதி மொழியும் கூற வைத்துவிட்டனர். ஒருவரது போர்முனை நண்பர்களுக்காக யார்தான் எதுதான் செய்யமாட்டார்கள்! நான் அந்த ஸ்டர்ஜன் மீனை—அதாவது அமைச்சரைக்—கண்டித்துப் பேச விரும்பினேன். மேலும், சார்டெல் மீன் வகையை—அதாவது ராஸ்தாவ் மீன் பிடி வாரியத்தை அல்லது வேறு மீன் பிடி வாரியத்தைக் கண்டித்துப் பேசுவதில்தான் என்ன பயன்; நல்லது. உறுதிமொழி கொடுத்து விட்டால், அது உறுதிமொழியே தான். எனவே நான் இதற்குமேல் எதுவும் சொல்ல மாட்டேன். அதனால் நான் தோழர் இஷ்கோவுக்குக் கூறும் வாழ்த்துரை யெல்லாம் இதுதான்: ''அவர் வாழட்டும்; வாழ்ந்து சார்டெல் வகை மீன்களை மேய்ந்து கொண்டிருக்கட்டும்!''

நமது மீன்வளத் துறை நிபுணர்கள் ஆற்றியுள்ள பங்கும் மிகவும் அற்பமானது, நமது தேசப் பொருளாதாரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாதது என்பதையும் நான் கூறியாக வேண்டும். ஜப்பான், ருமேனியா போன்ற நாடுகளி லும் பிற இடங்களிலும், ஒரு ஹெக்டேர் நீர்நிலைப் பரப்பில் பிடிக்கப்படும் மீன்களின் அளவு, நமது நாட்டில் பிடிக்கப் படுவதைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக உள்ளது. இந்த ஒப்பு நோக்கு நமக்கு ஒன்றும் சாதகமாக இல்லை என்பதை நீங்களே காணலாம்; எனவே பொருளாதாரத்தின் இந்தக் குறிப் பிட்ட துறையில் சிந்தனையைச் செலுத்த வேண்டியவர்கள், இது விஷயமாகவும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுபற்றி அவர்கள் விரைவாக சிந்தித்தாக வேண்டும்; ஏனெனில் நமது நதிகள்

விரைவாக வற்றிக் குறைந்து வரும் நிலையில், நீர் நிலைகளில் மீன் பிடிக்கும் பிரச்சினை, அதன் அதியவசரத் தன்மை அனைத்தோடும் நம்மை விரைவிலேயே எதிர் நோக்கி விடும்.

எனது பேச்சில் நான் இலக்கியத்துக்கு எவ்வளவு கவனம் செலுத்தினேனோ, அவ்வளவு கவனத்தை மீன்பிடி விவகாரத்துக்கும் செலுத்தி விட்டேன். எனினும் இது விஷயத்தில் நமது கண்ணுக்குத் தெரிவதைக் காட்டிலும் மேற்கொண்டு எதுவுமே இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நிச்சயமாக அப்படியல்ல. நாம் ஏராளமான மீன்களை—கடல்—ரோச், விம்பா—விம்பா, ஹெர்ரிங் போன்ற மீன்வகைகளைக்—கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால், கடல் பாசி மட்டும் நமக்கு வேண்டாம். கடல் பாசியின் ருசியை விரும்புபவர்கள் அதனைத் தின்றுவிட்டுப் போகட்டும். என்னைப் பொறுத்தவரையில் நான் மீன்களைப் பாதுகாத்து வருவதை எல்லாவிதத்திலும் ஆதரிக்கிறேன்; ஏனென்றால் அதில் ஏராளமான பாஸ்பரஸ் இருக்கிறது; அது மூளைக்கு நல்லது என்பதும், அது மூளையை மிகவும் தீவிரமாக வேலை செய்ய வைக்கிறது என்பதும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. மேலும், என்னதான் இருந்தாலும், மூளைக்கான இந்தப் பொருள், எழுத்தாளர்களுக்கு மட்டும்தானா தேவைப் படுகிறது?

நீங்கள் என்னை அனுமதித்தால், திட்டமிடுதலைப் பற்றியும் மேலும் சில வார்த்தைகள். நான் கூற வரும் விஷயத்தை நிரூபிக்க ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் மேற்கோளாகக் கூறுகிறேன். பெரும்பாலும் நான் திட்டமிடுதலுக்கு ஆதரவாளன் தான்; என்றாலும் நான் அமோக வளத்துக்கும் ஆதரவாளனாக இருக்கிறேன். ராஸ்தாவ் பிராந்தியத்திலுள்ள கூட்டுப்பண்ணைகள் மற்றும் அரசாங்கப் பண்ணைகளுக்கு அவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இன்னும் இரண்டாயிரம் டிராக்டர்கள் தேவை. நான் ஆதரிக்கின்ற திட்டமிடும் முறை என்னவென்றால், இந்த டிராக்டர்களை நேர்மையான வழிகளிலோ அல்லது நேர்மையற்ற வழிகளிலோ பெற்று வருவதற்காக, எங்களது பிராந்திய அதிகாரிகளை நாங்கள் மாஸ்கோவுக்கு அனுப்பி வைக்க வேண்டாத விதத்தில், விவசாயத் துறை அமைச்சர் தோழர் மத்ஸ்கேவிச் தாமாகவே இந்த டிராக்டர்களை இந்தப் பண்ணைகளுக்கு அனுப்பிவைக்க மூன்றாவது முறையாகும். ஆனால் இப்போது என்ன நடக்கிறது? இதனைப் பெறுவதற்காக இந்த நபர்கள் மாஸ்கோவுக்குப் புறப்பட்டுச் செல்வதைக் கவனித்துக் கொண்டிருக்கும் நானும், அங்கே புறப்பட்டுச் செல்கிறேன்.

இயல்பாகவே எனது கோரிக்கை அளவில் மிகவும் குறைந்தது தான்: நான் ஒரு புதிய பள்ளியைத் தொடங்க விரும்புகிறேன், அல்லது கூட்டுப் பண்ணைக்குக் கூரை வேய்வதற்காக கூரைத் தகடுகளோ அல்லது மரப்பலகைகளோ பெற்றுவர விரும்புகிறேன். நல்லது. இதனால் நான் அமைச்சரிடம் சென்று இவ்வாறு கூறுகிறேன்: ''தோழர் அமைச்சரே, கூட்டுப் பண்ணை மாட்டுத் தொழுவங்களின் மீது கூரை வேய்வதற்கு மூவாயிரம் கூரைத் தகடுகளை எங்களுக்குக் கொடுத்து உதவுங்கள்.'' அமைச்சர் இவ்வாறு பதிலளிக்கிறார்: ''ஆனால் நமது பொருளாதாரம் ஒரு திட்டமிட்ட பொருளாதாரமாயிற்றே. இதனை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டாமா? திட்டத்தின் கீழ் உங்களுக்கு என்ன கிட்ட வேண்டுமோ அவ்வளவையும் நீங்கள் ஏற்கெனவேயே பெற்றுக் கொண்டு விட்டீர்களே.'' இதற்கு நான் அவரிடம் இவ்வாறு கூறுகிறேன்: ''எனக்குப் புரியத்தான் செய்கிறது. ஆனால் பசுமாடுகளுக்கும், அதைக் காட்டிலும் கன்றுகளுக்கும், தாங்கள் ஏன் இலையுதிர்கால மழையில் நனையவும், மாரிக்காலப் பனியில் உறைந்து விறைத்துப் போகவும் வேண்டும் என்பதுதான் புரியவே மாட்டேன் என்கிறது.'' தகடுகளால் கூரைகளை வேய்வதற்கு, அவை பகட்டாகவோ அழகாகவோ இருக்கின்றன என்பது காரணம் அல்ல; மாறாக, அவை சிக்கனமாக இருப்பதே காரணமாகும். மேலும், மாட்டுத் தொழுவங்களின் மீது வைக்கோலைக் கொண்டு கூரை வேய்ந்தால், ஏராளமான கால் நடைத் தீவனத்தைச் சேகரித்து வைப்பதற்கான ஊக்கமே விவசாயி களுக்கு இருக்காது: ஒருவேளை கால் நடைத் தீவனம் குறைந்து போய்விட்டால், அவர்கள் பசுமாடுகளுக்குக் கூரையையே எப்போதும் தீவனமாகக் கொடுத்து வர முடியும்; ஆனால் தகட்டுக் கூரையாக இருந்தால், அது அப்படியே பத்திரமாக இருக்கும்.

மேலும், நாம் இடையறாது இவ்வாறு கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு வருவதன் காரணமாக, நமது குணத்திலும் நமது உருவத் தோற்றத்திலும்கூட விரசமான மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காண்கிறோம். அந்தோ, எழுத்தாளரின் பெருமிதமான கம்பீரத்துக்கும் பழைய போர் வீரரின் நிமிர்ந்த தோற்றத்துக்கும் என்ன கதி நேர்ந்து விட்டது! கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டே நமது முதுகு வளைந்து போய்விட்டதை நாம் காணத் தொடங்குகிறோம்; மேலும், இனியும் நாம் அந்த அமைச்சரைச் சம்பிரதாய பூர்வமான முறையில், ''தோழர் அமைச்சரே'' என்று விளிப்பதில்லை; மாறாக, அவரது தயவைக் கோரும்

விதத்தில் ''அன்பார்ந்த இவான் இவானோவிச்'' என்று சௌஜன்யமாகவே அழைக்கத் தொடங்கிவிடுகிறோம். வாழ்க்கையே நம்மை நிர்பந்தித்து, நமது திட்டமிடுதலில் நம்மைச் செய்யத் தூண்டுகின்ற திருத்தங்கள், சிறுகச் சிறுக நம்மில் அகப்பட்டதைச் சுருட்டும் கொள்ளை மனோபாவங்கள் சிலவற்றையும் வளர்த்து விடுகின்றன. இங்கும்கூட, இந்தக் காங்கிரசின்போது, நாம் இடைவேளை நேரத்தில் வெளி வராந்தாக்களில் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருக்கும் சமயத்தில், நாம் ஓர் அமைச்சரையோ அல்லது வேறு எவரையோ கழுகுக் கண்களோடு கவனித்துக் கொண்டும், அதே சமயம் ''அவர் மூலமாக நாம் என்ன காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம்'' என்று மனதுக்குள் வெகு மும்முர மாகச் சிந்தித்துக் கொண்டும் இருக்கிறோம். மேலும் நாம் அமைச்சரோடு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, அவரைச் சந்தித்துப்பேச நமக்கு ஒரு வாய்ப்பைத் தருமாறு அவரிடம் கேட்டுக் கொள்ளும்போது, நாம் நம்மை சுப்ரீம் சோவியத் பிரதிநிதி என்று என்றுமே சொல்லிக் கொள்வதில்லை; மாறாக நாம் ஓர் எழுத்தாளர் என்பதை மட்டுமே சொல்லிக் கொள்கிறோம். எழுத்தாளர்கள் கூறுவதை அமைச்சர்கள் மிகவும் செவிசாய்த்துக் கேட்கிறார்கள். சுருங்கச் சொன்னால், நாம் நம்மால் முடிந்த மட்டிலும், எந்த வகையிலாவது காரியங்களைச் சாதித்துக் கொள்ள முற்படுகிறோம். எனவே எழுத்தாளர்களின் வாழ்க்கையொன்றும் கேளிக்கையாகவே இருந்து விடுவதில்லை என்பதை நீங்களே காண்பீர்கள்.

இந்த உயர்வான மேடையில் நின்று பேசும்போது, நான் சற்றுச் சிரித்துப் பேசத் துணிந்ததற்கு, நீங்கள் என்னைப் பொறுத்தருளுமாற வேண்டிக் கொள்கிறேன். ஆழமாகக் கூறினால், நாம் நமது கட்சியின் மாபெரும் மதிநுட்பத்திலும், கட்சி நம்மைச் சாதித்து முடிக்குமாறு கோரும் எல்லாப் பணி களின் சாதனைகளிலும், நாம் அனைவரும் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

மேலும், அன்பார்ந்த பிரதிநிதித் தோழர்களே, நாட்டுக்கும் மக்களுக்கும் தம்மை உண்மையிலேயே அர்ப்பணித்துள்ள பல்லாயிரக் கணக்கான எழுத்தாளர்களைக் கொண்ட இந்தப் படையானது, கலை இலக்கியம் பற்றி நமது மத்தியக் கமிட்டியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை முற்றிலும் ஏற்றுக் கொள்கிறது; நமது லெனினியக் கட்சியின் கொள்கையை முழு மனதாக ஆதரிக்கிறது.

1966

போராடும் மனிதனே மனிதாபிமானி

(என்ற கடிதத்திலிருந்து)

அன்பார்ந்த நண்பர்களே, சோதர எழுத்தாளர்களே,

முதலாவதாக, இந்தக் கூட்டம், நாம் எந்த உன்னதமான லட்சியத்துக்காக இங்கு கூடியிருக்கிறோமோ, அந்த லட்சியத்தில் வெற்றிபெற நான் வாழ்த்துரைக்க விரும்புகிறேன்.

நமது அழைப்பை ஏற்றுக்கொண்டு, இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் பங்கெடுக்கவும் வெண்டி, கடினமான நெடுந் தூரப் பயணத்தை மேற்கொண்டு, பிற நாடுகளிலிருந்து இங்கு வந்துள்ள நமது விருந்தினர்களுக்கும், நமது சகாக்களுக்கும் என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

இது முற்றிலும் இலக்கிய விஷயங்களையே விவாதிக்கும் எழுத்தாளர்களின் சாதாரணக் கூட்டம் அல்ல. நாம் இங்கு பேசப்போவது, எழுத்தாளரின் புனிதப்பணி, நமது பணியின் நோக்கம், மற்றும் மனித குலத்துக்கு எழுத்தாளர்களுக்குள்ள பொறுப்பு ஆகியவைதாம்.

வடிவத்தில், இலக்கியத் தொழிலானது உலகில் மிகவும் தனி மனிதத்துவத் தன்மை வாய்ந்த தொழில்களில் ஒன்றாகும். இது தூரவுறவிலேபோன்ற தனிமையில் தமது மேஜை முன்னால் பல மணி நேரத்தைக் கழிக்குமாறு எழுத்தாளரைக் கோருகிறது மேலும் எழுத்தாளர் ஒருவர் இன்னொரு எழுத்தாளரை ஒத்திருப்பது போல் தோற்றுவதைப்போன்ற மிகவும் பேராபத்தான விஷயம் வேறு எதுவும் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. இது குடிமையுணர்ச்சிப் பொறுப்பின் மிகப்பெரும், சுமையைச் சுமந்து கொண்டிருக்கும் தொழிலாகும். நம்மில் ஒவ்வொருவரும், நமது வார்த்தைகள் எவ்வளவு அதிகமான பேர் அதனைக் கேட்க விரும்புவார்களோ, அவ்வளவு அதிகமான பேர்களைப்போய் அவை எட்டுப் என்ற நம்பிக்கையோடுதான் எழுதுகிறோம். நமது சொந்த ''ஆத்ம'' உலகான சின்னஞ்சிறிய உலகை வெளியிடாமல், லட்சோப லட்சக்கணக்கான மக்களின் இதயங்களையும் மனங்களையும் சிலிர்க்க வைக்கும் ஏதோ ஒன்றை வெளியிடுவதில் நாம் வெற்றி பெறும்போதுதான் நமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது.

உலகில் நிகழ்ந்து வரும் சம்பவங்களும், கழிந்து வரும் நாட்களும், நமது அதியவசரமான பிரச்சினைகளுக்குக் கூட்டாகத் தீர்வு காணவும், நமது முயற்சியின் மிகவும் அந்தரங்கமான சாராம்சம், எழுத்தாளனின் மனச்சாட்சி, மனிதாபிமானிகளின் மனச்சாட்சி ஆகியவை சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கான விடை

களைக் காணவும் வேண்டி, நாம் ஒன்றுகூட வேண்டியதை நமக்கு அவசியமாக்கி விடுகின்றன.

ஒரு தேசம் முழுவதன் போராட்டம் மற்றும் துன்பதுயரங்கள் சம்பந்தப்பட்ட விஷயமாக ஒன்று இருக்கும்போது, எழுத்தாளர் என்ன நிலையை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் கேள்வி.

மனிதாபிமானம்தான்; மனிதனின்பால், மனித குலத்தின் பால் கொள்ளும் அன்புதான்.... ஆயினும் பல்வேறுவிதமான நபர்கள், மனித சமுதாயச் சக்திகளில தாங்கள் எவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்களோ அதனைப் பொறுத்து, எத்தனை எத்தனை விதங்களில்தான் இந்தக் கருத்தை அர்த்தப் படுத்த முற்படுகிறார்கள்!

சோவியத் எழுத்தாளர்களான நாங்கள் எங்களது கம்யூனிசக் கருத்துக்களுக்கு ஏற்ப, ஒரு கொலைகாரன் அல்லது கொள்ளைக் காரன் ஒருவனை அடித்து வீழ்த்தத் தனது கையை ஓங்கும் காலத்தில், ஓர் உண்மையான மனிதாபிமானி அவ்வாறு தாக்கப் படவிருக்கும் அப்பாவி மனிதனின் மீது வெறுமனே பச்சாத்தாபம் கொள்ளவும், உலகில் கொலைகள் நடக்கத்தான் செய்கின்றன என்ற உண்மையை எண்ணி ஒப்பாரி வைக்கவும் முற்படாமல், அந்தக் கொலைகாரனின் கரத்தைத் தடுத்து நிறுத்தி, அவன் இழைக்கவிருந்த கொடுமையைத் தீங்கற்றதாக ஆக்கவும்தான் போராடுவான் என்றே கருதுகிறோம்.

இவ்வாறு இருக்கும்போது, தமது சுதந்திரத்துக்காக வீரத் தோடு போராடிக்கொண்டிருக்கும் ஒரு சிறிய நாட்டின் பெருமிதமும் துணிவாற்றலும் மிக்க மக்களை, ஒரு பெரிய, வலிமை மிக்க நாட்டின் ஏகாதிபத்தியவாதிகள் மிருகத்தனமான கொலை களுக்கும் கொள்ளைகளுக்கும் பலியாக்கி வரும்போது, மனிதாபி மானியின் பொறுப்பு மற்றும் கடமையின் அளவு எவ்வளவு பெரிதாகும்!

கலிஞனின் நிரந்தரமான கருப்பொருளே, நன்மைக்கும் தீமைக்கும், ஒளிக்கும் இருளுக்கும் இடையே நடைபெறும் போராட்டமேயாகும். நமது காலத்தில் இந்தப் போராட்டம் தெள்ளத்தெளிவான வர்க்க அர்த்தபாவத்தைப் பெற்றுள்ளது.

தனது சுதந்திரத்தையும் கௌரவத்தையும் தற்காத்துக் கொள்வதும், தான் விரும்புவது போலவே தனது வாழ்வையும் தனது வருங்காலத்தையும் கட்டியமைத்துக் கொள்வதும், ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய மீறவொண்ணாத, புனிதமான உரிமை யாகும். சுதந்திரத்தையும் வாழ்க்கையையுமே எங்களிடமிருந்து பறிப்பதற்காக, எதையும் செய்யத் தயங்காத ஓர் ரத்த வெறி

பிடித்த எதிரியை எதிர்த்து ஒரு போரை நடத்திப் போராடுவது என்றால், அதற்கு என்ன அர்த்தம் என்பதை சோவியத் மக்கள் கொடிய அனுபவத்தின் மூலம் அறிந்துள்ளனர். நாங்கள் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையாளர்களை எதிர்த்துத் தமது தேச விடுதலைக்காகப் போராடி வரும் மக்கள் பக்கமே எப்போதும் நிற்கிறோம்.

இன்று இந்த வட்டமேஜைக் கூட்டத்தில் கூடியுள்ள எழுத்தாளர்கள் தமக்குத்தாமே தெள்ளத் தெளிவாக வரையறுக்கப்பட்ட முடிவுகளைக் கண்டறிய வேண்டிய அவசியத்தை எதிர் நோக்கியுள்ளனர். இது விஷயத்தில் சோவியத் எழுத்தாளர்கள் தமது முடிவை நெடுங்காலத்திற்கு முன்பே தேர்ந்தெடுத்து விட்டார்கள். எங்களது நோக்கங்களைத் தத்தம் இலக்கியங்களின் பிரதிநிதிகளான எங்களது விருந்தினர்களும் உணர்ந்து பாராட்டுவார்கள் என்று நான் கருதுகிறேன். நமது சோதர வியட்நாமிய மக்களுக்கும், மற்றும் உலகம் முழுவதிலும் நிகழ்ந்து வரும் தேச விடுதலை இயக்கத்துக்கும், செயலூக்கமிக்க உதவியும் ஆதரவும் தேவைப்படுகின்றன.

மேலும், இன்று உலக மக்களுக்குக் கவலையளித்து வரும் நிகழ்ச்சிகள் யாவும், முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் பாசிசம் உலக ராணுவ மோதலுக்கு ஒரு பீடிகையாக, ஸ்பெயினில் தனது பலத்தைப் பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கிய காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை ஒத்திருக்கின்றன என்று உங்களுக்கு தோன்றவில்லையா? ''கடவுளர்கள் பானைகளைச் சூளையில் வைத்து சுட்டெடுத்துக்கொடுப்பதில்லை'' என்ற பழமொழியை எல்லோரும் அறிவர். அந்தத் தொன்னெடும் பழங்காலத்தில் கடவுளர்கள் பானைகளைச் செய்து அவற்றைச் சுட்டெடுக்கும் தொழிலைப் புரிய, கீழே இறங்கி வந்து அருள் பாலித்திருந்தால், அதனால் மனித குலத்துக்குத் தீங்கு எதுவும் நேர்ந்திருக்காது என்றே நான் கருதுகிறேன். ஆனால் இன்றைய அரசியல்-குயவர்கள் தம்மைக் கடவுளர்களாக எண்ணிக்கொண்டு, தமது ''புதிய முறைமையை'' எங்கணும் ஆயுத பலத்தின் மூலம் திணிக்கத் தொடங்கினால், அது முற்றிலும் வேறு விஷயமாகும். இது முதலாவதாக எழுத்தாளர்களான நம்மை விழிப்போடிருக்கச் செய்தாக வேண்டும். சிந்திக்கும் நபரிடம் இது நியாயமான ஆத்திரமும் கோபாவேசமும் கொண்ட உணர்ச்சியை எழுப்பாமல் இருக்க முடியாது. ''மக்களே! உங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தயாராக இருங்கள்!'' என்ற அமரர் ஜூலியஸ் ஃபூசிக்கின் வார்த்தைகளை நாம் என்றுமே மறந்து விடக்கூடாது. மேலும்,

எழுத்தாளர்கள் விஷயத்தில் ஒருவர் இவ்வாறே கூறலாம்: செயல்படுவதற்கான தருணம் வந்துவிட்டது.

நமது பலம், எழுத்தாளர்களின் பலமானது மக்களது இதயம் களையும் மனங்களையும் கவரும், அவர்களது ஆற்றலைத் தூண்டும், அவர்களது மன உறுதியை வலுப்படுத்தும், மனிதனுக்காகவும் மனித குலத்துக்காகவும், சுதந்திரம் மற்றும் சோதரத்துவத்தின் ஒளிக்காகவும், ஏகாதிபத்திய மிருகத்தனத்தின் இருளை எதிர்த்துப் போராடுமாறு அவர்களைக் கிளர்ந்தெழச் செய்யும், நமது வார்த்தைகளின் உணர்ச்சி வேகத்தில்தான் அடங்கியுள்ளது.

எனவேதான், உலகில் நிகந்து வரும் நிகழ்ச்சிகளைப் பற்றிய எங்களது அபிப்பிராயத்தைக் கூறி வரும் சோவியத் எழுத்தாளர் களான நாங்கள், ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் சேர்ந்த எழுத்தாளர்களுக்கும், சகல நாடுகளிலும் சகல கண்டங்களிலும் உள்ள எழுத்தாளர்களுக்கும், ஒருமைப்பாடும் ஒற்றுமையும் காணுமாறு வேண்டுகோள் விடுக்கிறோம். இது எழுந்தாளர்கள் என்ற முறையில் எங்களது கடமையாகும்; மனிதாபிமானிகள் என்ற முறையில் எங்களது கடமையாகும்; சர்வ தேசியவாதிகள் என்ற முறையில் எங்களது கடமையாகும்.

இதனை நோக்கி முன்னே எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும், குறிக்கோளை மேலும் அருகே கொண்டு வருகிறது. இன்றைய கூட்டம் அத்தகையதோர் அடியாக இருக்கட்டும்.

1966

''கிரோவ் ஆலையின் வரலாறு'' என்ற புத்தகத்துக்கு எழுதிய முகவுரை

கிரோவ் ஆலையின் வரலாற்றைத் தொகுக்கும் மிகப்பெரும் முக்கியமான பணி வெற்றிகரமாகப் பூர்த்தியடைந்துள்ளது.

இந்த ஆலையின் பிறப்பு, இதன் ஸ்தாபிதம், இதன் பல்லாண்டுக்கால வளர்ச்சி ஆகிய மிகவும் சிக்கலான, முழுமை யான வளர்ச்சிப் போக்கை, தொழிலாளர்கள், இஞ்சினீயர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியவர்களது பல தலைமுறைகளின் வாழ்வைத் தன்னுட்கொண்ட இந்த வளர்ச்சிப் போக்கை, எந்தவொரு நாவலும் முழுமையாகச் சித்திரித்துவிட முடியாது.

ஆயினும் வரலாறும் நாவலும் பரஸ்பரம் தனித்தனியான இலக்கிய வகைகளாக இருப்பதைக் காட்டிலும், பரஸ்பரம் ஒன்றுக்கொன்று அனுசரணையானவையாகவே உள்ளன. எனவே, கிரோவ் தொழிலாளர்களைப் பற்றி, அவர்களது வீரஞ்செறிந்த, பரபரப்பூட்டிக்க அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட கதை

நிகழ்ச்சியோடு கூடிய நாவல்களும் சிறுகதைகளும் எழுதப்படுமாயின், கதாசிரியர்கள் எழுதும் இந்தப் புத்தகங்களும், வரலாற்றுசிரியர்களின் இந்தப் புத்தகமும் வாழ்க்கையில் கையோடு கைகோத்துச் செல்லும்.

இந்த ஆலயின் வரலாற்றை ஒருவர் படித்துப் பார்க்கும் போது, இந்த நூலானது செயின்ட் பீட்டர்ஸ் பர்க்—பெத்ரோகிராடை—லெனின் கிராடைச் சேர்ந்த வீரஞ்செறிந்த தொழிலாளி வர்க்கம் எவ்வாறு துன்பப்பட்டது, போராடியது, வெற்றிகளை ஈட்டியது, வென்றது என்பது பற்றிய ஓர் உண்மையான விவரமாக, வருங்காலத் தலைமுறையினருக்கு (கிரோவ் தொழிலாளர்களது தலைமுறையினருக்கு மட்டும் அல்ல) அளவிடற்கரிய மதிப்புமிக்க நூலாகவே விளங்கும் என்று தாம் எண்ணமிடுவதை அவரே கண்டறிவார்.

1966

மாஸ்கோவிலுள்ள போலிஷ் தூதரகத்தில் ஆற்றிய உரை

தோழர் தூதர் அவர்களே,

ஜிலாத்தி க்ளாஸ் பரிசை எனக்கு வழங்கியுள்ளமைக்காக நான் பெரிதும் மனமகிழ்ச்சியடைகிறேன். இது எனக்கு இரு மடங்கு மதிப்புமிக்கதாகும்; ஏனெனில் நான் இதனை, இலக்கியத்திலும் கலையிலும் விஞ்ஞானத்திலும் மாமனிதர்களான பலரை உலகுக்குத் தந்துள்ள ஒரு நாட்டின் வாசகர்களிடமிருந்து பெறுகிறேன். இந்தப் போட்டியை நடத்தியவர்கள் அனைவருக்கும் நான் மிகவும் நன்றியுடையேன்; மேலும், எனது போலிஷ் வாசகர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்குமாறு நான் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1967

சர்வதேச இலக்கியக் கருத்தரங்குக்கு அனுப்பிய ஒரு தந்தி

அன்பார்ந்த சகாக்களே,

இங்கு, தாஷ்கெண்டில் கூடியுள்ள சர்வதேச இலக்கியக் கருத்தரங்கில் பங்கெடுக்கும் உங்களோடு, மானசீகமாக இருந்து வரும் ஒவ்வொருவரது சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும், தொன்மையான மதிநுட்பமும் இன்றைய பிரச்சினைகளும் ஆட்கொண்டுள்ளன.

இது ஒரு பத்தாவது ஆண்டு விழாக் கருத்தரங்காகும். பத்தாண்டுகளுக்கு முன்னால், இங்கு, தாஷ்கெண்டில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்களின் முதல் மாநாடு கூடியது; அப்போது உலகில் சமாதானம் நிலவுவதற்கும், மனிதகுலத்தின் முன்னேற்றத்துக்குமான உன்னதமான முயற்சியில், எழுத்தாளர் ஸ்தாபனங்களது வரம்புக்குள் ஒழுங்கமைக்கப்பட்ட, எழுத்தாளர்களது பயன்மிக்க ஒத்துழைப்புக்கான அஸ்திவாரம் இடப்பட்டது.

இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், ஒவ்வொரு இலக்கிய விற்பன்னரும் பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளித்தாக வேண்டும் என்று அதிகாரத்தோடு கோருகின்றன: அவர் யாரோடு நிற்கிறார்? அவர் தமது பேனாவினாலும், தமது படைப்பினாலும், தமது கலையினாலும் யாருக்குத் தொண்டாற்றுகிறார்? நமது சகாப்தமானது அதன் ஜீவாதாரமான பிரச்சினைகளைச் சமாளிப்பதிலும், அவற்றுக்குத் தீர்வு காண்பதிலும், நாம் அனைவரும் செயலூக்கமாகப் பங்கெடுக்க வேண்டும் எனக்கோருகிறது.

நவோயின் பிறந்த ஊரில் நடைபெறும் அவரது பிறந்ததின விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் நல்லவாய்ப்பும் உங்களுக்குக் கிட்டும். பல தேசங்கள் தமது மகாகவிகளை எண்ணிப் பெருமை கொள்கின்றன, என்றாலும் இந்த 525 ஆவது பிறந்த தின விழாவைப் போன்ற தினங்கள் அவ்வளவு அதிகமாகக் கொண்டாடப்படுவதில்லை. மனித உழைப்பையும் ஈகை மனப்பான்மையையும் பற்றிப் பாடிய பாடகரான நவோய், தமது நாட்டுமக்கள் பேணி வளர்த்து வந்த ஞானத்தை, பன்னூற்றாண்டுகளாக, பல்லாண்டுக் காலமாக வாழ்ந்துவரும் விதத்தில் உலகுக்கு விட்டுச் சென்றுள்ளார். தற்போதைய கருத்தரங்கில் உங்களுக்கு இந்த ஞானமும் வழியில் ஒளி காட்டட்டும்:

''எவரது சிந்தனைகள் எப்போதும் மக்களுடனேயே இருக்கின்றனவோ, அவர்தான் மனிதன் என்ற கௌரவமிக்க பெயருக்குத் தகுதியானவர்.''

இவ்வாறு நவோய் கூறினார். அவரது வாக்கைகளுக்கு நாம் செவி சாய்ப்போம்.

1968

24 ஆவது கட்சிக் காங்கிரசில் ஆற்றிய உரை

பிரதிநிதித் தோழர்களே,

சோவியத் எழுத்தாளர்களும் கலைத்துறையில் ஈடுபட்டுள்ள நபர்களுமான நமக்கு, கடந்த ஐந்து ஆண்டுகளும் கம்யூனிஸ்டுக்

கட்சியின் பதாகைகளின் பக்கமாக நாம் மேலும் நெருக்கமாக ஒன்று திரண்ட ஆண்டுகளாகவே, நமது அரசியல் கருத்துக் களுக்கும் நமது அழகியல் கலாசாரத்துக்கும், எல்லாவற்றிலும் மிக முக்கியமாக, படிப்பவர்களும் பார்ப்பவர்களும் கேட்பவர் களுமான சோவியத் மக்களுக்கு—இலக்கியமும் கலைகளும் யாருக்காகப் படைக்கப்படுகின்றனவோ அவர்கள் அனை வருக்கும்—கம்யூனிசக் கல்வியளிப்பதற்கும் நமக்குள்ள பொறுப்பில் மேலும் தெள்ளத் தெளிவான உணர்வைப் பெற்ற ஆண்டுகளாகவே விளங்கியுள்ளன.

நமது இலக்கியம் சோவியத் ஆட்சியின் ஆரம்ப நாட்களி லிருந்தே மக்களுக்கு விசுவாசத்தோடும் நேர்மையோடும் பணி யாற்றி வந்துள்ளது என்று நாம் பெருமிதத்தோடு உறுதிகூற முடியும்; நமது மாபெரும் ரஷ்யக் கவிஞரின் வாசகங்களில் சொன்னால், அதன் குரல் உண்மையிலேயே,

இனிமைமிக்க நாளிலும்
இன்னல்மிக்க நாளிலும்
மணியின்ஓசை போலவே
யாவருக்கும் ஒலித்ததே

கடந்த காலத்தைப் போல, அதன் குரல் நமது நாட்டுக்கு வெகுதொலைவுக்கு அப்பாலும் கேட்கப்படுகிறது; மேலும் அது முன்னைப்போலவே, உழைக்கும் மனிதகுலத்தைத் தட்டி எழுப்பு கிறது; உண்மையான முன்னேற்றத்துக்காகவும், சமாதானத்துக் காகவும், நமது உலகில் வாழும் சிந்திக்கும் மக்கள் அனைவரின் மிகவும் நம்பகமான நம்பிக்கையான கம்யூனிசத்துக்காகவும் போராடுமாறு ஒவ்வொரு உழைக்கும் மனிதன் இதயத்துக்கும் மனத்துக்கும் வேண்டுகோள் விடுக்கிறது.

கலைச் சாதனத்தின்மூலம் மக்களது தார்மிக, ஆன்மிக வளர்ச்சியைத் தூண்டுவதன் மூலம் அவர்களுக்கு மறு-கல்வி யளிப்பதில் நாம் கணிசமான அளவுக்கு முன்னேறியுள்ளோம் என்று பொய்யான தன்னடக்கம் எதுவுமில்லாமல் நம்மால் கூறவும் முடியும். நமது சித்தாந்தச் செய்தியைப் போன்ற மகத்தானதொரு செய்தியை, வேறு எந்த இலக்கியமுமே கொண்டிருக்கவில்லை என்பதும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட உண்மையாகும். இது விஷயத்தில் நமது இலக்கியத்தை மிஞ்சக் கூடிய இலக்கியத்தைக் கொண்ட வேறொரு நாட்டை நீங்கள் பெயர் சொல்லிக் குறிப்பிட முடியுமா? அத்தகைய நாடும் இல்லை, அத்தகைய இலக்கியமும் இல்லை என்று உறுதியாகக் கையடித்துக் கூற முடியும்.

கலாசார அபிவிருத்தியின் உலக வளர்ச்சிப் போக்கில் சோவியத் இலக்கியமும் கலையும் வகித்து வரும் போர்க்குணம் மிக்க பாத்திரத்தை, எல்லாவற்றுக்கும் முதன்மையாக, நமது கலைஞர்களின் தலைசிறந்த படைப்புக்களில் குடி கொண்டுள்ள கம்யூனிசச் சித்தாந்தம் மற்றும் சார்புநிலை ஆகிய வற்றின் வேகம்தான் தீர்மானிக்கிறது. இந்தத் தன்மைதான் நமது சித்தாந்த எதிரிகள் மத்தியிலும், அவர்களது கூட்டாளி களான திரிபுவாதிகள் மத்தியிலும் கோபாவேசத்தைக் கிளறி விடுகிறது. சோஷலிசத்துக்காகவும் கம்யூனிசத்துக்காகவும் திடமான உறுதியோடு போராடும் போராளிகளான நமது தெள்ளத் தெளிவாக வரையறுக்கப்பட்ட நிலைகளிலிருந்து விலகிச் செல்லுமாறும், கட்சி மற்றும் மக்களது நலன்களுக்குப் பணி யாற்றும் நமது அடிப்படைக் கோட்பாடுகளைக் கைவிடுமாறும் நம்மை தூண்டுவதற்கே அவர்கள் விரும்புவார்கள்.

சோஷலிச எதார்த்தவாதத்தைக் கவிழ்க்கப் போவதாகக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளவர்களில், பிரசித்தமானவர் முன்னாள் ஆஸ்திரியக் கம்யூனிஸ்டான ஃபிஷ்ஷெர் என்பவரா வார். ''பரிபூரணமான'', முற்றிலும் கட்டுப்பாடற்ற சுதந்திரம் பற்றிய பேர்போன நிபுணரான இவர், நமது சோவியத் கலையை மிகப்பெரும் ஆர்வவேகத்தோடு சபித்துத் தீர்க்கிறார். சோவியத் யூனியனில் கலையானது விலங்கிடப்பட்டு, ''கட்டுண்டு'' கிடப்பதாக அவர் கூறுகிறார்; இது அவரை மிகவும் வருத்த முறச் செய்கிறது. நமது கலையை விலங்கறுத்து, அதனைச் சார்பு நிலையிலிருந்து, சமுதாயத்துக்குப் பணியாற்றும் அதன் உன்னத மான கடமையிலிருந்து விடுவிப்பதையே அவர் பெரிதும் விரும்புவார்.

இந்த ஃபிஷ்ஷெரும் சரி, வெளிநாடுகளிலுள்ள ஏனைய 'ஃபிஷ்ஷெர்களும்' சரி, கங்குகரையறியாத எதார்த்தவாதம் எனப்படும் கலங்கிய சேற்று நீரிலிருந்து, அப்பாவியான உள்ளம் படைத்த கெண்டை மீன்களைத் தம்மால் எவ்வளவு அதிகமாகப் பிடிக்க முடியுமோ அவ்வளவு அதிகமாகப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, தூண்டில் முள்ளில் முடை நாற்றம் நாறும் இரையைச் சொருகித் தமது தூண்டில்களை வீசி வருகிறார்கள்.

ஆனால் இத்தகைய நம்பிக்கையூட்டும் கெண்டை மீன்கள் நம்மிடம் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றன; எனவே சாமர்த்தியசாலிகளான இந்த மீன் பிடிப்பாளர்கள் நடத்தும் மீன் வேட்டை மிகப்பெரும் ஏமாற்றமாகவே முடியும்.

ஆயினும், மிக மிக விறைப்பான சித்தாந்தப் போராட்டம் நிகழ்ந்து வரும் இன்றைய நிலைமைகளில், நாமும் திட்டவட்ட மான தாக்குதலைத் தொடுப்பதற்கும், ஒளி குன்றுத லெனினிய உண்மை என்றும், நமது என்றுமே தோல்வி காணுத ஆயுத பலத்தோடு, ஓடுகாலிகள் மற்றும் சகலவிதமான திரிவுவாதிகள் ஆகியோரின் முயற்சிகளை எதிர்த்து முறியடிப்பதற்கும் தருணம் வந்துவிட்டது. இதனைச் செய்வது நமது உடனடியான கடமையாகும்.

எனது பேச்சின் ஆரம்பத்தில் நான் கூறியவை, எழுத்தாளர் களான நாம் சாதித்துள்ளவற்றின் முக்கியத்துவத்தைப் பெரிது படுத்திக் காட்டும் நோக்கத்துக்காகக் கூறப்பட்டவை அல்ல. இந்தக் காங்கிரசுக்காக நம்மை இங்கு ஒன்று கூட்டியுள்ள கட்சி மட்டும் இல்லாது போயிருக்குமானால், இலக்கியத்தில் எந்தச் சாதனைகளுமே, நிகழ்ந்திருக்காது; சொல்லப் போனால், சோவியத் இலக்கியம் என்ற ஒன்றே இருந்திருக்க முடியாது.

கார்க்கியிலிருந்து தொடங்கி, இன்றைய இளம் எழுத்தாளர்கள் முடிய ஆயிரக்கணக்கான இலக்கியப் பிரமுகர் களை ஒன்றுக இணைத்து, அவர்களது திறமைகளை மக்களது சேவையிலும், மக்களின் நலன்களுக்காகவும் ஈடுபடுத்திய பணியானது, நமது கட்சியினால் மட்டுமே, அதனை வழிநடத்திச் செல்லும் உன்னதமான கருத்துக்களினால் மட்டுமே, சாதித்து முடிக்கக் கூடிய பணியாகும். தோழர்களே, இதனைப் பற்றி நாம் உண்மையிலேயே எண்ணிப் பார்க்கும் போது, அது உண்மையிலேயே அற்புதமாகத்தான் உள்ளது!

தோழர்களே, நான் நேர்மையோடு உங்களிடம் உண்மையைக் கூறிவிடுகிறேன். எனது சோதர எழுத்தாளர்களது கடந்த காலச் சேவைகளைப் பற்றி நான் ஆரம்பத்தில் ஏறத்தாழக் காவிய நடையில், பவித்திரம் மிக்க அறிமுகத்தோடு குறிப்பிட்டதெல்லாம், கடந்த ஐந்தாண்டுகளில் நமக்கு ஏற்பட்ட ஆதாயங்களையும் குறைபாடுகளையும் பற்றி நான் கூறப்புகுவதற்கு முன்னால், உங்களை மிகவும் தர்மசிந்தை மிகுந்த மனோநிலைக்கு ஆளாக்குவதற்காக, நான் செய்த ஒரு தந்திரம் தான். ஏனெனில் விவாதங்களின் போது சிலபேர் கூறிய வற்றிலிருந்து, நீங்கள் எங்களோடு முற்றிலும் சண்டை பிடிக்கும் உணர்விலேயே இருந்ததாக எனக்குத் தோன்றியது.

இலக்கியத்திலும் கலைகளிலும் நிலவிவரும் இன்றைய நிலைமைகளைப்பற்றி மத்தியக் கமிட்டியின் அறிக்கை ஒரு

விரிவான மதிப்பீட்டை வழங்கியது. இந்த மதிப்பீட்டை நாம் தங்குதடைகள் ஏதுமின்றி அப்படியே ஏற்றுக் கொள்கிறோம்.

நமது இலக்கியத் தொழிலில் நிலைமைகள் எவ்வாறு உள்ளன? பொதுஜன ஏளனத்துக்கே தகுதியான எழுத்தாளர் களைப்பற்றி நாம் பேசவேண்டாம். வெறுத்தொதுக்கும் நபர்களைப் பற்றி எவரும் பேசுவதில்லை. அப்படிப் பேசினால் அது அவரது கௌரவத்துக்கு இழுக்காகும். நமது நல்ல கவனத்துக்குத் தகுதி வாய்ந்த எழுத்தாளர்களைப்பற்றி நாம் பேசுவோம். காரியார்த்தமாகப் பேசுவோம். அண்மையில் நடந்த நகரக் கட்சி மாநாட்டில் பேசிய மாஸ்கோ எழுத்தாளர் ஸ்தாபனத்தின் செயலாளர் செர்கி நரோவ்சதோவ், நமது மத்தியில் துப்பாக்கிப்படை வீரர்கள் அதிகமான அளவில் இல்லை யென்றும், ஆயினும் இலக்கைச் சரியாகக் குறிபார்த்துச் சுடும் வொரோஷிலோவ் துப்பாக்கிப் பிரயோக நிபுணர்கள் பலர் இருப்பதாகவும், அவர்களே ஸ்தாபனத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றனர் என்றும் கூறினார். அவரது மிகவும் பொருத்த மான, கவிதாபூர்வமான ஒப்பு நோக்கின் சுமாரான அர்த்தம் இதுதான். என்றாலும் நரோவ்சதோவ் சொல்லாமல் விட்டு விட்டது என்னவெனில், துப்பாக்கிப் பிரயோகத்தில் நிபுணர்கள் எனப்படுவோர் மத்தியிலும்—இலக்கின் நடுமையத்தை விட்டு விடுங்கள்—என்றுமே இலக்கில் தவறுமல் சுட்டறியாத நபர் களும் பலர் இருக்கிறார்கள் என்பதுதான்.

இவ்வாறு சுடப்படும் தோட்டாக்களை, "தோட்டா பால் குடிக்கப் போய் விட்டது" என்று போர்வீரர்கள் கேலியாகச் சொல்வார்கள். உண்மையில் இலக்கியத் துப்பாக்கிப் பயிற்சிக் களத்திலும் விசித்திரமான காரியங்கள் நிகழத்தான் செய்கின்றன: இங்கோ இலக்கைச் சென்று தாக்கத் தவறிய தோட்டா, அவ்வாறு சரியாகச் சுடத் தெரியாதவரிடமே, சுவரில் அடித்த பந்துபோல் திரும்பி வருகிறது; ஆனால் அது அவரைத் தாக்குவதில்லை; மாறாக, அவருக்கு அது பாலைக் கொண்டு வந்து தராவிட்டாலும், அவரது சிறுபிள்ளைகளுக்கான பாலுக்காக, நூலாசிரியரான அவருக்கு ஒரு கொழுத்த சன்மானத்தை உண்மையில் கொண்டு வந்தே சேர்க்கிறது.

இவ்வாறு சரியாகச் சுடத் தெரியாத நபர்கள் குறைவாகச் சுட்டாலும், ஓடுகிற ஓட்டத்திலேயே சுடாமல் இருந்தாலும், நிலைமை இவ்வளவு மோசமாக இருந்திருக்காது. இதனால் விலையுயர்ந்த தோட்டாக்கள் எவ்வளவோ வீணாகி விடுகின்றன; சில சமயங்களில் ஏற்படும் இழப்பும்—முதலாவதாக நமது வாசகர்கள் ஏற்றுக் கொள்ளும் இழப்பும்—மிகவும் கணிசமான

அளவுக்கே உள்ளது. ஆனால் இவ்வாறு படுமோசமாகச் சுடும் பேர்வழியை, துப்பாக்கிப் பயிற்சிக் களத்தை விட்டு வெளியேற்று வதற்கு முயன்று பாருங்கள்! உடனே அவர் தாம் மும்முரமான இலக்கிய சேவையில் ஈடுபட்டுள்ளதாக வலியுறுத்திக் கூறுவார்; தாம் நன்றாகச் சுடக் கூடியவர்தான் என்றும், அடுத்த தடவை தாம் இலக்கின் நடுமையத்திலேயே நிச்சயமாகச் சுட்டுக் காட்டப் போவதாகவும் எல்லோருக்கும் உறுதி கூறுவார். அவர் அவ்வாறே செய்வார் என்று இதற்கு அர்த்தமாகாது. ஏனென்றால், இலக்கில் அவர் என்றுமே சரிவரச் சுட்டதில்லை யென்றாலும்கூட, அவர் அருமையாகத்தான் வாழ்ந்து வருகிறார். குறைந்த பட்சம் அவர் இறைச்சிக் கடையில் வசித்து வரும் பூனையைப் போல் நன்றாகத்தான் வாழ்ந்து வருகிறார்.

இது விஷயத்தில் நாம் என்ன செய்ய முடியும்? பிராந்திய மற்றும் மத்திய வெளியீட்டகங்கள் சஞ்சிகைகள் ஆகியவற்றின் ஆசிரியர்கள், தமது தேவைகளின் தரங்களைப் பெரிதும் உயர்த்தி விட வேண்டும் என்றே நான் கருதுகிறேன். ஏனெனில், பதிப்பகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், ஒரு மட்டமான புத்தகத்தை வெளிவரவொட்டாமல் வழி மறித்து நிற்பதில் முதன்மையாக நிற்காவிட்டால், பின் யார்தான் அதனைத் தடுத்து நிறுத்த முடியும்? அது பாராட்டப்பட முடியாத புத்தகமாக இருக்கும் போது, வாய்மூடி மௌனியாக இருந்து வரும் பழக்கத்தையும் இலக்கிய விமர்சகர்கள் கைவிட்டாக வேண்டும்: புத்தகத்தை அலசி ஆராய்ந்து அதன் உண்மையான தகுதி என்ன என்பதை மதிப்பீடு செய்வது அவர்களது கடமை யாகும். ஓர் உதவாக்கரையான புத்தகத்தை ஆரம்பத்திலேயே மடியைப் பிடித்து இழுத்து நிறுத்தாத குற்றத்துக்கு, எழுத்தாளர் ஸ்தாபனங்களும் பெருமளவுக்குப் பொறுப்பாளி யாகும்.

இந்த விஷயத்துக்கு இன்னொரு பக்கமும் உண்டு. நூலாசிரியருக்கு வழங்கப்படும் சன்மானத்தையே நான் குறிப்பிடுகிறேன். சோவியத் நூலாசிரியர்களான நமக்கு, எழுது வது என்பது இயல்பாகவே நமது செல்வ வளத்தைப் பெருக்கிக் கொள்ளக் கூடிய ஒரு சாதனமாக என்றும் இருந்ததில்லை; என்றும் இருக்கவும் முடியாது. இது நம் விஷயத்தில் ஒரு கோட்பாடாகவே உள்ளது. மேலை நாடுகளில் எழுத்தாளர் ஒருவர், தமது புத்தகத்தின் விற்பனையிலிருந்து தமது வெளியீட்டாளர்களுக்குக் கிடைக்கும் தொகையில் ஒரு குறிப் பிட்ட சதவீதத்தைத் தமது சன்மானமாகப் பெற்றுக் கொள்கிறார்; இந்த முறையானது ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர்

அல்லது வெறுமனே அமோகமாக விற்றுத்தள்ளும் புத்தகங்களை எழுதிவரும் ஒரு நாகரிகமான எழுத்தாளர், மிகவும் செல்வம் படைத்த ஒரு நபராக மாறுவதற்கு இடமளிக்கிறது. என்றாலும் அங்கு பல முற்போக்கான எழுத்தாளர்கள் தமது குறைந்தபட்ச வாழ்க்கைச் செலவுக்குச் சம்பாதிப்பதுகூட அரிதாகத்தான் உள்ளது. முற்றிலும் வர்த்தக ரீதியான இந்த முறை, நம்மால் முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும் என்பது தெளிவு. என்றாலும், நமது காப்பிரைட் உரிமைகள் விஷயத்திலும், நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய சில விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. நான் கூறும் விஷயம் முரண்பட்ட புதிராகக்கூட ஒலிக்கலாம்; அதாவது மிகவும் பரவலாகப் படிக்கப்படும் ஒரு புத்தகத்தின் ஆசிரியர்—அத்தகைய புத்தகம் என்றால் அது நமக்கு மிகவுயர்ந்த சித்தாந்த மற்றும் கலைநயத் தகுதிகளைக் கொண்ட புத்தகத்தைத்தான் குறிக்கும்—இறுதியாக அந்தப் புத்தகத்தை அவரது தொகுப்பு நூல்களில் சேர்த்துக் கொள்ளப்படும் வரையிலும், அந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு அடுத்த பதிப்புக்கும் மேலும் மேலும் குறைவான சன்மானத்தையே பெற்று வருகிறார்.

நமது எழுத்தாளர் யூனியனின் பணியில் கூர்ந்து நோக்கப்பட வேண்டிய வேறு விஷயங்களும் ஏராளமாக உள்ளன; என்றாலும், நான் உங்கள் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று உணர்கிறேன்; எனவே அவற்றைப் பற்றி நான் இப்போது பேசப் போவதில்லை. ஜூன் மாதத்தில் ஓர் அகில—யூனியன் எழுத்தாளர் காங்கிரஸ் நடைபெற விருக்கிறது; இலக்கிய ஆர்வமிக்கவர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு நாங்கள் மகிழ்ச்சியோடு அழைக்கிறோம். அங்குதான் நமது இலக்கியக் கம்பளி விரிப்புக்களை உண்மையிலேயே நாம் செம்மையாக அடிப்போம்! அதிலிருந்து கிளம்பும் தூசியினால் மூச்சும் திணறுவோம்.

நமது புத்தகங்கள் உண்மையிலேயே பிரம்மாண்டமான பதிப்புக்களாகத்தான் வெளி வருகின்றன. என்றாலும், கிராக்கியோ உற்பத்தியையும் மிஞ்சுவதாக உள்ளது. பொது நூலகங்களும் கூட ஒரு பட்டினி-ரேஷன் உணவில்தான் வாழ்ந்து வருகின்றன. அவற்றில் ஐந்தில் ஒரு நூலகத்துக்கு மிகவும் பிரபலமான புத்தகங்களில் ஒவ்வொரு பிரதி கிடைத்தாலே, அதுவே பெரிய விஷயம். மேலும், புத்தகங்களை விலைக்கு வாங்கி அவற்றை வீட்டில் வைத்துக் கொள்ளவும், அவற்றை என்றாவது ஒருநாள் திரும்பப் படித்துப் பார்க்கவும் விரும்பும் ஒரு தொழிலாளி, கூட்டுப் பண்ணை விவசாயி அல்லது ஓர் அறிவாளி

ஆகியோரின் நியாயமான விருப்பத்தையும் நாம் கணக்கிலெடுத்துக் கொண்டாக வேண்டும். அதாவது மிகவும் அத்தியாவசியமான பண்டங்களைப் பகிர்ந்து வினியோகிப்பதுபோல் புத்தகங்களை வினியோகிக்க வேண்டி, நகர அல்லது வட்டாரக் கட்சிக் கமிட்டிகளிலிருந்து வரும் தோழர்கள் மீது நீங்கள் அனுதாபம் கொள்ளத் தொடங்கும் போது, இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். என்றாலும் இவற்றுக்கெல்லாம் நம்மிடம் போதுமான காகிதம் இல்லாததே காரணமாகும்!

சென்ற காங்கிரசில் கான்ஸ்தாந்தின் இவானெவிச் கலான்ஷின் கதை இலக்கியத்தை எத்தனை உற்சாகத்தோடு ஆதரித்துப் பேசினார் என்பது எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்தச் சமயத்தில் அவர் பெர்ம் பிராந்தியக் கமிட்டியின் முதல் செயலாளராக இருந்தார். அப்போது அவர் நமக்கு உண்மையில் ஒரு காதல் பிரகடனத்தையே வழங்கி முடித்தார்! இப்போதோ அவர் காகிதக் கூழ் மற்றும் காகிதத் தொழில் துறை அமைச்சராக இருக்கிறார்; எனவே அவர் ஒரு வார்த்தைக் கூடப் பேச மறுக்கிறார்.

அன்பார்ந்த கான்ஸ்தாந்தின் இவானெவிச் அவர்களே, நாங்கள் உங்கள் காதலில் நம்பிக்கை வைத்திருக்கத்தான் செய்தோம்; இப்போதோ உங்களது சபல புத்திக்காக உங்கள் மீது குற்றம் சாட்டுகிறோம். பாருங்கள், ''சபல புத்தி'' என்ற வார்த்தையைக் கூறியதும் பெண் பிரதிநிதிகள் தமது செவிகளை எவ்வாறு தீட்டிக் கொண்டு கேட்கிறார்கள் என்பதைப் பாருங்களேன்! உலகிலுள்ள எல்லாப் பெண்களையும் போலவே, அவர்களும் இந்த வார்த்தையைக் கேட்டதும் சிலிர்த்துப் போய் விடுகிறார்கள். அவர்கள் மத்தியில் எனக்கு விசுவாசமிக்க கூட்டாளிகள் கிடைப்பார்கள் என்று எனக்குத் தெரியும். சரி. எவ்வாறுயினும் இது எந்த மாதிரியான காதல் விவகாரம்? காதல் விவகாரம் என்றால், எல்லோருக்கும் தெரிந்துள்ளபடி, அது சிங்காரமான பேச்சுக்கள், மற்றும் தியாகம் செய்யா விட்டாலும் ஏதோ ஒருவிதமான கைச்செலவு ஆகியவற்றைத் தான் அர்த்தப்படுத்தும். கான்ஸ்தாந்தின் இவானெவிச்! நாங்கள் உங்களிடமிருந்து எந்தவிதமான மலர்க்கொத்துக்களையோ, எந்த விதமான இனிமையான, ஆண்மை மிக்க புன்னகைகளையோ எதிர்பார்க்கவில்லை. எங்களுக்கு அதிகமான காகிதம் கொடுங்கள்! ஆம். காகிதம்தான்! அதிருஷ்டவசமாக திட்டத்தில் கண்டுள்ள காகித அளவை நீங்கள் எங்களுக்கு வழங்கிப் பூர்த்தி செய்துதான் வருகிறீர்கள்; அதுவும் நல்ல தரமான காகிதமாகவே தருகிறீர்கள். என்றாலும் திட்டத்துக்கு

மேலும் காகிதம் தாருங்கள். எங்களுக்குக் காகிதம் தாருங்கள்; அப்போதுதான் நீங்கள் எங்களைக் காதலிக்கிறீர்கள் என்பதை நாங்கள் உண்மையிலேயே நம்புவோம். மேலும், வசன இலக்கிய கர்த்தாக்களான நாங்கள் ஒரு தொப்பியைச் சுற்றுக்கு விட்டு, பளபளப்பான காகிதத்தில் சுற்றிய பளபளப்பான மலர்ச் செண்டு ஒன்றையும் உங்களுக்குப் பரிசளிப்போம்; மேலும் ஒருவேளை ஓர் இளம் பெண் கவிஞர்—மிகவும் விசித்திரமான காரியங்கள் எல்லாம் நிகழத்தானே செய்கின்றன! — உங்களைக் கௌரவிக்கும் முகமாக ஒரு காதல் கீதத்தையும் இயற்றுவார். ஒரு காதல் கீதத்தைப் பெறுவதைச் சற்றே கற்பனை செய்து பாருங்கள்! மனத்தைக் கொள்ளை கொள்ளும் விஷயம்தான் அது. நான் கூட எனது இந்த முதிர்ந்த வயதில் அதனைப் பெறுவ தற்குத் தயங்க மாட்டேன். உங்களைப் பொறுத்த வரையிலோ? அன்பார்ந்த கான்ஸ்தான்தின் இவானெவிச்! நீங்கள் உண்மையில் உங்களுக்கு இத்தகையதொரு வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

தோழர்களே, காகிதத்துக்காக நாம் எவ்வளவெல்லாம் பேச வேண்டியிருக்கிறது, பார்த்தீர்களா? இங்கு நான் காதலிடம் முறையிட்டுக் கொண்டேன்; என் கைகளை என் இதயத்தோடு சேர்த்து அழுத்திக் கொண்டு, எத்தகைய அசாத்தி யமான சரச சல்லாபத்தோடு ஏதேதோ வாக்குறுதிகளும் அளித்தேன், பார்த்தீர்களா?... ஆனால், வேடிக்கைப் பேச்சு ஒரு புறம் இருக்கட்டும். நம்மிடமுள்ள காகிதத்தைக் கூட நாம் சிக்கனமான முறையில் பயன்படுத்துவதில்லை என்பதை நான் கூறித்தான் ஆக வேண்டும். இதற்குத் தோழர் கலாஷினெ அல்லது எழுத்தாளர்களான நாமோ குற்றவாளிகள் அல்ல. காகிதம் அதன்மீது எதை எழுதினாலும் அதனைச் சகித்துக் கொள்ளும் என்பதை எல்லோரும் அறிவர். சற்றே நினைத்துப் பாருங்கள்: சென்ற ஆண்டில் நாட்டில் வெளியிடப்பட்ட புத்தகத் தலைப்புக்களில் கிட்டத்தட்டப் பாதி ''இலாகா இலக்கியங்கள்'' தான்; அவ்வாறுதான் அவை குறிப்பிடப் படுகின்றன. இந்தத் திரைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருப் பது எது? அது எதுவாகவும் இருக்கலாம். தடித்த அலுவலக அறிக்கைகள், அதே பெருத்த அளவிலான ஸ்தாபன அமைப் புக் குறிப்புக்கள், சகல விதமான இலவசக் கையேடுகள், ஏதாவது ஒரு தொழிற்சாலையைப் பற்றிய பட ஆல்பங்கள் ஆகியவைதான்; இவையெல்லாம் வெளிவந்தவுடனேயே, சுண்டெலிகள் கறும்பித் தின்பதற்காக ஆவணக் காப்பகங்களில் ஒப்படைக்கப்பட்டு விடும். மேலும், ஒவ்வொருவரும் தத்தம்

குறிப்பிட்ட வெளியீட்டை அழகான துணி பைண்டு செய்யவும், அதற்கு வர்ண ஜாலம் மிக்க மேலுறை ஒன்றை அணியவும், அந்த மேலுறையையும் வழுவழுப்பான காகிதத்தில் அச்சிடவுமே முயல்கின்றனர். பிரதிநிதித் தோழர்களே, இந்த விஷயத்தை ஒழுங்குபடுத்தியாக வேண்டும்; ஏற்கனவே இது மிகவும் கைகடந்துபோன விஷயமாகி விட்டது. இதனை ஒழுங்கு படுத்த வேண்டுமென்றால், இந்த விவகாரத்தில் கடுமையான அணுகுமுறையை மேற்கொண்டாக வேண்டும். ஏனெனில் இலாகா-இலக்கியங்களை வெளியிடும் போக்கு மிகவும் அதிகரித்துக் கொண்டு வருகிறது; எனவே கவலைப்படுவதற்கு எல்லாக் காரண மும் நமக்கு உண்டு.

இந்தப் பேச்சை முடிப்பதற்குமுன் நாம் மீண்டும் அதன் தொடக்கத்துக்குத் திரும்பிச் செல்வோம். தோழர் நரோவ் சதோவ், வொரோஷிலாவ் துப்பாக்கிப் பிரயோக நிபுணர்கள் என்று யாரைக் குறிப்பிட்டாரோ, அவர்கள்தான் இலக்கியத்தை உருவாக்கும் பிரதானச் சுமையைத் தாங்கிக் கொண்டிருப்பதாக அவர் கூறியது சரியானதே.

நமது இடத்தில் இடம் பெறுவதற்கு ஒரு வளர்ந்து வரும் திறமை வாய்ந்த இளம் தலைமுறையினரை நாம்பெற்றிருக்கிறோம். இந்தப் புதிய படைமீது மூத்த எழுத்தாளர்கள் பெரும் நம்பிக்கைகளை வைத்து வருகின்றனர். இலக்கியத்துறைக்குள் ஓர் உறுதியான புதிய படைபலம் சேர்ந்து வருகிறது என்று தாராளமாகச் சொல்ல முடியும். இந்த இளம் எழுத்தாளர்கள் நமது சமுதாயத்துக்குத் தேவை; நமது இலக்கியத்தின் வருங்காலத்தை அவர்களிடம் ஒப்படைப்பதில் நாம் மகிழ்ச்சி யடைகிறோம். அவர்கள் சிந்தனையில் தேசபக்திமிக்க, வாழ்க்கையின் ஆழங்களுக்குள் துருவிக்காணும் வேட்கை கொண்டுள்ள, சுவாரசியமான நபர்கள். இளைஞர்கள் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதில் ஆணவத்தோடு அல்லது ஓரளவு முரட்டுத்தனத்தோடு நடந்து கொள்ள முனைவது சகஜம்; என்றாலும் அவர்களிடம் அலட்சியம் கிடையாது; அவர்கள் உண்மையைத் தேடிக் காண்பதில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு அனுபவம் போதாது என்பது நிச்சயம்; ஆனால் அது தானாகவே வரும். நமது இலக்கியத்தின் வருங்காலம் இந்த இளம் எழுத்தாளர்களுக்கே உரியது; அவர்கள் தான் அதனைக் கட்டியமைப்பார்கள்; அதற்குப் பதிலளிக்க வேண்டியவர்களும் அவர்களே. நான் நமது இளைஞர்கள் அனைவரையும் பற்றியே, நமது புதிய படைபலத்தைப் பற்றியே, சோவியத் இலக்கியத்தின் புதிய சக்திகளைப் பற்றியே பேசு

கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். அவர்களைச் ''சுத்தமானவர்கள்'' ''அசுத்தமானவர்கள்'' என்று நான் பிரிக்கவில்லை.

மூத்த தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்களான நாமும் இன்னும் ஓரளவுக்குப் பயன்மிக்கவர்களாகத்தான் இருக்கிறோம் என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நமது மாபெரும் சோவியத் யூனியனது ஏனைய பிரஜைகள் அனைவரையும் போலவே, எழுத்தாளர்களும் ராணுவ சேவைப் பதிவேட்டில் இடம் பெற்றுள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் தோழர்கள் கிரெச்கோவும் எபிஷேவும் ரிசெர்வ் படையிலிருந்து நம்மை விடுவிக்காமலே இருந்து வருகிறார்கள்; எந்தவொரு அவசர நிலையிலும், எத்தகைய சந்தர்ப்பங்களிலும் நம்பியிருக்கக்கூடிய பழைய போர்வீரர்களான நாம், இப்போதும் பயனுள்ளவர்களாக இருந்து வருவதாகவே அவர்கள் கருதி வருகிறார்கள் என்பதுதானே இதற்கு அர்த்தம். உழைப்பில் மட்டுமல்ல, தற்காப்புப் பணியிலும்கூட, நாம் இன்னும் தேவைப்பட்டவர்களாகவே இருக்கிறோம் என்பதற்கு இது நமக்கு ஒரு போதிய சான்றுதான், மிகவும் முகஸ்துதியான சான்றுதான். இல்லையா?

புதிய ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது, புள்ளி விவரங்களையும் சதவீதங்களையும் குறிப்பிட்டுப் பேசும் மொழியை என்னால் பயன்படுத்த முடியாது என்பதை நீங்களே உணர்வீர்கள். அடுத்த ஐந்தாண்டுகளில் எத்தனை பெரிய, நடுத்தர, சிறிய புத்தகங்கள் வெளிவரக் கூடும் என எதிர்பார்க்கலாம் என்று நீங்கள் என்னிடம் கேட்டால், சோவியத் எழுத்தாளர் யூனியனின் செயற் குழு முழுவதும்கூட, இதனைப்பற்றி உங்களுக்குக் கூற இயலாது என்பதையே நான் பதிலாகத் தர வேண்டும்.

ஆயினும், என்னதான் இருந்தாலும், தரம்தான் மிக முக்கியமானதே தவிர, அளவு அல்ல. அடுத்து வரும் ஐந்தாண்டுகளில், நமது வாசகர்கள் இப்போது நிறுவியுள்ள மிகவுயர்ந்த கலைநயத் தரங்களுக்கும் சித்தாந்தத் தரங்களுக்கும் முற்றிலும் பதிலளிக்கக் கூடிய குறிப்பிடத்தக்க இலக்கியப் படைப்புக்களை, நாங்கள் படைத்துக் கொடுப்போம் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

கட்சி மற்றும் மக்களின் லட்சியத்துக்கு நாம் நம்மை அர்ப்பணித்துள்ளதும், நமது பூரணமான பலம் மற்றும் நமது

திறமைகள் ஆகியவற்றைக் கொண்டு மாபெரும் கம்யூனிசக் கருத்துக்களுக்குத் தொண்டாற்ற நாம் உளமார்ந்த விருப்பம் கொண்டிருப்பதுமே, நமது வாக்குறுதிக்கு உத்தரவாதமாக விளங்குகின்றன.

1971

பகுதி-3

இளம் மக்கள்

மாக்சிம் கார்க்கியைப் பற்றிய உரையிலிருந்து

...மனித குலத்தின் ஒளிமயமான வருங்காலத்துக்காகப் போராடி வந்த மக்களை, கார்க்கி உணர்ச்சிப் பெருக்கோடு நேசித்தார்; அவர் தமது கோபாவேசமான சுபாவத்தின் பலம் அனைத்தையும் கொண்டு, சுரண்டல்காரர்களையும், வர்த்தகர்களையும், மற்றும் நாகரிகம் பரவாத ரஷ்ய நாட்டுப்புறத்தின் அமைதியான சூழலிலே தூங்கி வழிந்து கொண்டிருந்த குட்டி பூர்ஷுவாக்களையும் வெறுத்தார்...

மிகவும் பல்வகைப்பட்ட விஷயங்களைப்பற்றி கார்க்கிக்கிருந்த மிகப் பெரும் விஷயஞான வளத்தையும், அவரது களைப்பே அறியாத விடாமுயற்சியையும், தமக்குத் தாமே அவர் ஏற்றுக் கொண்ட கடுமையான கடமைகளையும் கண்டு நான் எப்போதும் வியந்து போயிருக்கிறேன்.

அவரது நூல்கள் ஜாரிஸ்டு அரசாங்கத்தை எதிர்த்துப் போராட, ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்துக்குக் கற்றுக்கொடுத்தன நான் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த காலத்தில், மேலை நாட்டுப் பாட்டாளி வர்க்கத்தினர் கார்க்கியை எவ்வாறு நன்கறிந்துள்ளனர், அவரை எவ்வாறு விரும்பி வருகின்றனர் என்பதை நேரில் கண்டேன்; அவரது அமரத்துவம் வாய்ந்த படைப்புக்களிலிருந்து அவர்கள் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடக் கற்று வருகின்றனர்.

வளைந்து கொடுக்காத மனோதிடமும் அரிய திறமையும் படைத்த மனிதரான கார்க்கி இலக்கிய உலகில் பிரவேசிப்பதற்காக ஒரு கடுமையான போராட்டத்தையே நடத்த வேண்டியிருந்தது. ஜாரிஸ்டுக் காலத்தில் வெகுஜனங்களின் மத்தியிலிருந்து தோன்றிய திறமைசாலிகள் மூளையிலேயே கிள்ளியெறியப்பட்டு வந்தனர்; ஏனெனில் அறிவுச் செல்வங்களை நாடி அடையும் மார்க்கத்தில் போராடி முன்னேறிச் செல்வதற்கான பலம் அவர்களுக்கு இல்லை. பழைய ஆட்சி மக்களிடமிருந்து தோன்றும் திறமையின் வெளிப்பாடுகளையெல்லாம் தகர்த்து வந்தது. சோவியத் யூனியனில், இளம் மக்கள் கலாசார சிகரங்களை எட்டிப் பிடிப்பதற்கு, அதற்கு முன் எங்கும் எந்தக்காலத்திலும் தெரியவந்திருந்த எதனோடும் ஒப்பிடுவதற்கே இயலாத நிலைமைகள் உருவாக்கப்பட்டுள்ளன...

1936

வெஷென்ஸ்காயாவிலுள்ள கூட்டுப் பண்ணைக் கோஸாக் இளைஞர்களது நாடக அரங்கின் முதலாவது ஆண்டுவிழா

கூட்டுப் பண்ணைக் கோஸாக் இளைஞர்களது வெஷென்ஸ்காயா நாடக அரங்கு தனது வாழ்வின் முதல் ஆண்டில் எவ்வளவோ சாதித்துள்ளது. பரிசீலனைக்குரிய அந்த ஆண்டு நிச்சயமாக வீணுகிவிடவில்லை; இதனை அண்மைக்கால நாடகத் தயாரிப்புக் களைக் கொண்டே தீர்மானித்து விடலாம். நாடகக் காட்சிகளில் நடிகர்களுக்கிடையே நல்ல ஒத்துழைப்பு நிலவுகிறது; நடிப்பும் மேலும் பக்குவமடைந்திருப்பது கண்கூடாகத் தெரிகிறது. என்றாலும்கூட, நடிகர்களும் நடிகையரும் தாம் இனியும் மேற் கொண்டு முன்னேற இடமே இல்லை என்று தமக்குத் தாமே நினைத்துக் கொண்டு, தகுதிக்கு மீறிய இறுமாப்புக்கு இரை யாகாதிருந்தால், சுய திருப்தி என்ற படுமோசமான நோய் அவர் களைப் பற்றிக் கொள்ளாதிருந்தால், இந்த நாடக அரங்கு என்ன சாதித்திருக்கக் கூடுமோ அதனோடு ஒப்பிடும்போது இது மிகவும் அற்பமானதே. அவர்கள் தமது திறமையைச் செம்மையாக்கு வதற்கு முன்னெப்போதைக் காட்டிலும் அதிகமாகச் சிரமப் பட்டுக் கற்றுக வேண்டும்; கலையின் உண்மையான சிகரங்களை எட்டிப் பிடிப்பதற்கு முன்னால் அவர்கள் ஒரு நெடிய, கடுமை யான மலையேற்றத்தை ஏறி முடிக்கத்தான் வேண்டும். நாம் சரிவரவே எண்ணிப் பெருமைப் படுகின்ற நமது கூட்டுப் பண்ணைக் கோஸாக் இளைஞர்கள் இந்த முயற்சியில் வெற்றி பெற நான் வாழ்த்துக் கூறுகிறேன்.

1937

எங்கள் இதயங்கள் அனைத்தோடும் நாங்கள் உங்களோடு இருக்கிறோம்

அன்பார்ந்த சோவியத் யுவர்களே! யுவதிகளே!

காம்சொமால் தனது இருபதாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது; இது நான் தவற விட முடியாத ஒரு சந்தர்ப்பமாகும். குதூகலித்துக் களிக்கும் இளம் மக்களின் கூட்டமொன்றைக் கடந்து செல்லும் ஒரு வயதான மனிதர், ஒரு கணம் நின்று அதனைப் பார்ப்பார்; அக்கார்டியன் வாத்தியத்தில் வாசிக்கப்படும் கீதத்தை அவர் கேட்கும் போதும், அந்த மகிழ்ச்சி பொங்கும் இளம் முகங்களை அவர் புன்னகை

தவழ நோக்கும் போதும், தாமே பல ஆண்டுகள் இளையவராகி விட்டவர்போல் அவர் உணர்கிறார். என் விஷயமும் அப்படித் தான். என் அன்பார்ந்த வாசகர்களே, உங்களைப்பற்றி நினைப் பதன் மூலமே நானும் இளைஞனாகி விட்டதுபோல் உணர்கிறேன்; அதே சமயம் எனக்கு முப்பத்தி மூன்று வயது ஆகிவிட்டதாலும், உங்களது அற்புதமான திருநாளில் நான் ஒரு நல்ல கிழட்டுப் பிறவி போலவே தோற்றமளிப்பேன் என்பதாலும் நான் சற்று வருத்தமும் அடைகிறேன். உங்களது பிறந்த தின விழாவில், வியத்தகும் விதத்தில் இளமையும் எழிலும் மிக்க நமது நாடு முழுவதிலும் கொண்டாடப்படும் இந்தப் பெரிய விழாவில், என்னைத்த வயது வந்த பிறரும், இன்னும் கூட வயதில் மூத்த நபர்களும், கலந்து கொள்வர் என்பதொன்றே எனக்கு ஆறுத லாகும். அங்கு இப்போது பெரிய குடும்பங்களைக் கொண்ட தாடிவைத்த மனிதர்களான முது பெரும் காம்சொமால் உறுப் பினர்களும் இருப்பார்கள்; அவர்கள் தாம் எந்த லட்சியத்தின் நீதியைப் பாதுகாத்துப் போராடினார்களோ, அந்த நீதியினால் உத்வேகம் பெற்று, வெள்ளைப்படை ஜெனரல்களையும், குலாக்கு களையும், கொள்ளைக்காரர்களையும் மற்றும் ஏனைய இழிபிறவிகளை யும் முறியடித்தார்களோ, அந்தத் தமது இளமைக் கால உள் நாட்டுப் போர் நினைவுகளை நினைவு படுத்திக் கூறுவார்கள். இன்று அவர்கள் நமது அற்புதமான நாட்டிலுள்ள நம் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப் படுகின்ற பெருமித உணர்ச்சியோடு இவ்வாறு கூறுவார்கள்: "நாம் சாதித்து வருவதைக் காணும் போது அற்புதமாகத்தான் இருக்கிறது."

கட்சியின் வழிகாட்டலின் கீழ், நமது இளைஞர்கள் உள் நாட்டு யுத்தப் போர்முனைகளில் எதிரிகளை முறியடித்தனர்; கூட்டுப் பண்ணைகளை நிறுவினர்; நமது தொழில் துறையைக் கட்டியமைத்தனர்; நாடு தழுவிய அளவில் சோஷலிச உழைப்புப் போட்டியையும் தொடக்கி வைத்தனர். நமது இளைஞர்களின் அணிகளிலிருந்து ஸ்தக்கனோவ், விளைகிரதோவ் போன்ற தனிச் சிறப்புமிக்க தொழிலாளர்கள் முன்னணிக்கு வந்தனர்; இப்போது அவர்கள் எவ்வாறு உழைப்பது என்பதை வயதில் மூத்த, அனுபவமிக்க நபர்களுக்கும் கற்றுக் கொடுத்து வருகின்றனர்.

போல்ஷிவிஸத்தின் வித்துக்கள் உண்மையில் வளம்மிக்க மண்ணில்தான் ஊன்றப்பட்டுள்ளன!

வருங்காலம் உங்களுக்கே உரியது; மேலும், இளவயதைத் தாண்டிவிட்ட நாங்களும், எங்கள் இதயங்கள் அனைத்தோடும் உங்களோடேயே இருக்கிறோம்!

1938

வெஷென்ஸ்காயாவிலுள்ள கூட்டுப்பண்ணைக் கோஸாக் இளைஞர்களது நாடக அரங்கின் இரண்டாம் ஆண்டு விழா

தோழர்களே,

இன்று நாம் கூட்டுப்பண்ணைக் கோஸாக் இளைஞர்களது வெஷென்ஸ்காயா நாடக அரங்கின் இரண்டாம் ஆண்டு விழா வைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். பெரிய கலாசாரக் கேந்திரங்களிலிருந்து வெகுதொலைவில் தள்ளியிருந்த இந்தத் தூராதொலை ஸ்தானித்ஸாக்களிலும் பண்ணை வீடுகளிலும் ஒரு காலத்தில் நிலைமைகள் எவ்வாறு இருந்தன என்பதை நீங்கள் அனைவரும் நினைவுகூர முடியும். அந்தக் காலத்தில் தொழிலாளர்கள் மிக்க யாரோ ஒரு நாடகக் கம்பெனி அதிபரால் அவசரக் கோலத்தில் ஒன்று திரட்டப்பட்ட 'டூரிங்' நாடகக் கோஷ்டிகள் அவ்வப்போது வந்தன; அவர்களது கவலையெல்லாம் எவ்வளவு பணம் பார்க்க முடியுமோ அவ்வளவு பணம் பார்ப்பதாகவே இருந்தது. அவர்களுக்கும் கலைக்கும் எந்தச் சம்பந்தமும் இருந்ததில்லை; அவர்கள் செய்ததெல்லாம் கலையின் வருந்தத்தக்க போலி வடிவத்தை வழங்குவதாகவே இருந்தது. அல்லது ''போரினால் முடமாகிப் போனவர்'' எவராவது ஒருவர் நமது வட்டாரங்களில் திடீரென்று காட்சியளிப்பார். முடமாகிப் போனவர்களுக்காக அமைக்கப்பட்ட ஏதோ ஒரு தொழிற் கூடத்தில் கரண்டிகளை உற்பத்தி செய்து தள்ளும் வேலையில் மனம் சலித்துப்போன அவர், வேடிக்கை காட்டும் வித்தைக்காரராக மாறத் தீர்மானித்திருப்பார். அவர் சீட்டுக்கட்டு வித்தைகளை மற்றும் பிற வித்தைகளைக் காட்டிக் கொண்டு, பல ஸ்தானித்ஸாக்களிலும் பண்ணை வீடுகளிலும் சுற்றியலைந்து கொண்டிருப்பார். ஊர் ஊராகச் செல்லும் இசைவாணர்களும் அவ்வப்போது நம்மைத்தேடி வருவார்கள்; அவர்கள் இசைத்த இசை கர்ண கடூரமாகத்தான் இருந்தது; நமது வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் கூறியதுபோல், அது உண்மையில் நம்மைத் திணறவடிப்பதாகத்தான் இருந்தது. மேலும் இங்கு வசித்துவந்த மக்களில் மிகப் பலர் தம் வாழ்நாளில் ஒரு நடிகரையே கண்ணால் கண்டதில்லை; நாடக அரங்கு என்றாலே அவர்களுக்கு என்னவென்று தெரியாதிருந்தது. கூட்டுப்பண்ணை விவசாயிகள் மட்டுமல்ல பள்ளிக்குச் சென்று படித்துவந்த நமது சிறுவர் சிறுமியரும்கூட ஒரு நாடக அரங்கைச் சென்று காணும் வாய்ப்பே இல்லாமல் வளர்ந்து வந்தனர்.

இந்த நாடக அரங்கு, நமது கட்சியும் நமது சோவியத் அரசாங்கமும், மக்கட் தொகையினரின் கலாசார அபிவிருத்தியில்



ஜப்பானியப் பள்ளி மாணவி ஷோலகோவிடம் ஆட்டோகிராப் கையெழுத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்கிறாள்

நிக்கோ அருவிக்கருகில் ஷோலகோவ்





விண்வெளி வீரர் யூரி ககாரினுடு டான் நதிக்கரையில்

ஷோலகோவ் தமது இளம் சகாக்களோடு உரையாடுகிறார்





ஸ்டெப்பிவெளியின் வழியாக ஓர் உல்லாசப் பயணம்



ஷோலகோவின் அழைப்பின் பேரில்
வந்திருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த
களோடு ஷோலகோவ்



எழுத்தாளர்களோடு ஷோலகோவும் யூரி ககாரினும்

ஷோலகோவ் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசுகிறார்





பல்கேரியப் பதிப்பகமான நரோத்ஞ மிலாதெஷ் பதிப்பகத்தின் டைரக்டர் இவான் பொபோவ் ஷோலகோவை விருந்தினராக வரவேற்கிறார்



ராஸ்தாவ்-ஆன்-டானில், கல்வித்துறை இளைஞர்களது பல்கேரிய-சோவியத் மன்றத்தின் உறுப்பினர்களை ஷோலகோவ் சந்தித்துப் பேசுகிறார்

ஐந்தாவது அகில-யூனியன் மாநாட்டில் பங்கெடுத்த இளம் எழுத்தாளர் கோஷ்டியொன்றை ஷோலகோவ் வரவேற்கிறார்





கலைத்துறை இளைஞர்களது பல்கேரிய—சோவியத் மன்றக் கூட்டமொன்றில்

ஷோலகோவ் உரையாற்றுகிறார்





ஷோலகோவ் தமது இல்லத்தில்

கூட்டுப் பண்ணை விவசாயிகளின் மூன்றாவது அகில-யூனியன் காங்கிரசில் ஷோலகோவ் உரையாற்றுகிறார்



பால் காட்டிவரும் இடையறாத அக்கறையின் காரணமாக, அவற்றினூலேயே தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

விழாக் கொண்டாட்டங்களின்போது பாராட்டுரைகளைக் கூறுவதும், வணக்கங்களைத் தெரிவிப்பதும், முகமன் உரைகள் கூறுவதும் வழக்கமாகும். இந்த விழா ஒரு மகிழ்ச்சிகரமான வைபவமாகும். இந்த நாடகக்குழு நல்ல பணியாற்றியுள்ளது. எனவே இயல்பாகவே நாம் அவர்களை வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம். என்றாலும் நமது நாடக அரங்கை மேலும் வளர்ப்பது குறித்து நாம் காரியார்த்தமிக்க முறையில் பேசித்தான் ஆக வேண்டும். அது இன்னும் தனது சிசுப் பருவத்தில்தான் உள்ளது. ஆயினும் ஒவ்வொரு சிசுவையும்போல் அதுவும் வளர்ந்தாக வேண்டும். நமது நாட்டில் ஒரு நபர் பதினெட்டு வயது வந்ததும்தான் வயது வந்தவராகிறார்; ஆனால், நமது நாடக அரங்கு வயதுக்கு வருவதற்கு, இன்னும் பதினாறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்ற விருப்பம் நமக்கில்லை. இது மிகவும் விரைவாகவே வளர்ந்து ஆளாகிவிடும், பல ஆண்டுகள் கழிவதற்கும் முன்பே பக்குவ வயதை அடைந்து விடும் என்று நாம் நிச்சயமாகக் கூறலாம்.

அவ்வாறாயின், நாடக அரங்கு என்ன செய்தாக வேண்டும்? நல்ல நாடகங்களை மட்டுமே நடத்த வேண்டும்—அதுதான் பிரதானமானது. தற்கால நாடகங்களை மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்; ஏனெனில் மிகப்பல சமயங்களில், ஒரு மோசமான நாடகமும்கூட, அதன் நடப்பியல் சார்ந்த கருப்பொருளின் பலத்தால், நாடக மேடையில் ஏறி விடுகிறது. நடப்பியல் சார்ந்த நாடகம் ஒவ்வொன்றுமே நல்ல நாடகமாக இருந்து விடவில்லை. நமது நாடக ரசிகர்கள் கிரிபோயிதோவ், கோகோல், ஆஸ்த்ரோவ்ஸ்கி ஆகியோரின் நாடகங்களையும், மேலை நாடுகளைச் சேர்ந்த தலைசிறந்த நாடகங்களையும் காண விரும்புகின்றனர். இதுவரையில் ஆஸ்த்ரோவ்ஸ்கியின் நாடகங்கள் இரண்டுதான் நடத்தப்பட்டுள்ளன; அவற்றுக்கு எத்தனை பெரிய வரவேற்பு இருந்தது என்பதை எண்ணிப் பாருங்கள்!

மிகவும் தூரதொலைவிலுள்ள கூட்டுப் பண்ணைகளுக்கும் நமது நாடகங்களைக் கொண்டு செல்வது எப்படி என்ற பிரச்சினையைக் குறித்தும் தீவிரமாகச் சிந்தித்தாக வேண்டும். அங்கு நமது நாடக அரங்கு கொண்டு செல்ல வேண்டியவை இசைக் கச்சேரிகளோ, அல்லது கவனமற்றுத் தேர்ந்தெடுக்கப் பட்ட காட்சிகளின் கதம்ப அவியலோ அல்ல; மாறாக, முழுமையான நல்ல நாடகங்களையே கொண்டு செல்ல வேண்டும்.

மாபெரும் உண்மையான கலையை, வெகுஜனங்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதே உங்களது புனிதப் பணியாகும்.

பிரதேசக் கலைத்துறை நிர்வாகம், இந்த நாடக அரங்கின் முக்கியத்துவத்தைக் குறித்து மதிப்பிட்டு வருகிறது என்பது தெளிவு. கலைத்துறை டைரக்டர்களை அடிக்கடி மாற்றுவது நாடகக் குழுவின் வேலைத் தரத்தின்மீது பாதகமான விளைவையே ஏற்படுத்தும். இங்கேயே பல ஆண்டுகள் தங்கி உழைக்கத் தயாராகவுள்ள ஒரு கலைத்துறை டைரக்டரை, உண்மையிலேயே திறமை படைத்த நாடக அரங்கொன்றைக் கட்டியமைக்கும் பணிக்காகத் தமது விஷயஞானம் மற்றும் திறமைகள் அனைத்தையும் மகிழ்ச்சியோடு ஈடுபடுத்தக் கூடிய ஒரு நபரை, நாடகக் குழுவை நேசிக்கவும், அதனை விட்டுப் பிரிந்து போவதை வெறுக்கவும் கூடிய ஒரு நபரை, நிர்வாகம் நியமிப் பதற்கான தருணம் வந்து விட்டது.

நமது வெஷென்ஸ்காயாவில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள பிரகாசமான சிறிய கலைச் சுடர், நமது பிரதேசத்தைச் சேர்ந்த வட்டாரக் கேந்திரங்களுக்கும் விரைவில் பரவும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். மேலும் கலையானது வெகுஜனங் களின் மத்தியில் மேலும் மேலும் ஆழமாக ஊடுருவிப் பாயும்.

வெஷென்ஸ்காயா நாடக அரங்கு நமது நம்பிக்கைகளை மெய்ப்பிக்கும்; அது சோஷலிச எதார்த்தவாதத்தின் நாடக அரங்காக, உயர்தரமான நாடகங்களைத் தயாரிக்கும் நாடக அரங்காக மாறும்.

பொதுஜனங்கள் மத்தியில் மேலும் மிகுந்த பிரபலத்தை எய்தும் விதத்தில் நமது நாடக அரங்கின் பணி சிறந்தோங் கட்டும் என்று நாம் வாழ்த்துவோமாக!

1939

உங்கள் விசுவாசமிக்க தோழன்

மனிதகுலத்தின் அருமையான புத்திரர்கள், உலகில் எங்கணும் உழைக்கும் மக்களுக்கு மகிழ்ச்சி கிட்டுவதற்காகப் போராடி வந்த, தற்போதும் போராடி வருகின்ற மனிதர்கள், பிள்ளைப் பிராயத்திலிருந்தே புத்தகங்களில் ஆழ்ந்த அக்கறை காட்டி வந்தனர்; வாழ்க்கையைப் பற்றிய தமது ஞானத்தைப் புத்தகங்களின் மூலம் வளப்படுத்திக் கொண்டனர்.

விசித்திரமான, இன்னும் மர்மமாகவும் உள்ள எழுத்துக்களை ஒன்று கூட்டி, தனது மனத்துக்குப் புரியக்கூடிய வார்த்தைகளை உருவாக்க முயலும் முதல் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒரு

குழந்தையை, இருட்டில் ஒரு குறுகிய இடுக்கின் வழியாகப் பளிச்சிட்டுப் பாய்ந்து வரும் ஞானத்தின் ஒளி திடுக்கிட வைத்து விடுகிறது. அன்பார்ந்த சிறுவர் சிறுமியரே, உங்களைப் பொறுத்தவரையில், இது மிகவும் அண்மைக் காலத்திய கட்டம் இல்லையென்றாலும், இது கடந்துபோன காலகட்டமேயாகும். இப்போது நீங்கள் உங்கள் முன் காண்பது ஒரு குறுகிய இடுக்கின் வழியாகப் பாய்ந்து வரும் ஒளிக்கதிர் அல்ல; மாறாக, கண்ணைப் பறிக்கும் பிரகாசமிக்க உலகுக்குள், கம்யூனிசத்தின் அற்புதமான கருத்துக்களினால் வழிநடத்தப் பெற்று நீங்களே கட்டியமைக்கப் போகும் வாழ்க்கைக்குள், அதன் நியதிகளிலும் நீங்களே திறமை பெற்று அவற்றை ஆளவேண்டும் என்று உங்களிடம் கோரப்படும் ஒரு வாழ்க்கைக்குள் புகுவதற்காக விசாலமாகத் திறந்து விடப்பட்ட வாசலையே நீங்கள் காண்கிறீர்கள்.

விதிவிலக்கின்றி உங்கள் எல்லோருக்கும், ஒளியும் ஞானமும் மிக்க இந்த உலகுக்குள் புகுவதற்கான இந்தக் கதவுகளை விசால மாகத் திறந்து விடுவதற்காக, இந்தக் கதவுகளை என்றென்றைக்கும் திறந்த நிலையிலேயே வைத்திருப்பதாக, உங்களது மூதாதையரும், உங்களது பாட்டனார்களும், தந்தையரும், தமையர்களும் ஒரு வீரமிக்க போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது என்பதையும், அந்தப் போரில் எவ்வளவோ பலத்தைச் செலவிட வேண்டியிருந்தது என்பதையும், அவர்கள் தமது ரத்தத்தை எவ்வளவோ சிந்த வேண்டியிருந்தது என்பதையும், என்றுமே மறந்து விடாதீர்கள்.

நீங்கள் அந்த ஒளியை நோக்கித் துணிவோடு வீறுநடை போட்டுச் செல்லவும், புத்தகங்களை உங்கள் இதயமெல்லா வற்றையும் கொண்டு நேசிக்கவும் வேண்டும். புத்தகம் வெறுமனே உங்களது தலைசிறந்த நண்பன் மட்டும் அல்ல; அது வாழ்க்கையில் உங்களது விசுவாசமிக்க துணைவனும் ஆகும்.

1952

கஜாக் எழுத்தாளர்களின் மூன்றாவது காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து

....நாம் இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் எழுதி வந்ததைக் காட்டிலும் இப்போது மிகவும் சிறப்பாக எழுதியாக வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். அளவிடற்கரிய விதத்தில் வளர்ந்தோங்கியுள்ள நமது வாசகர் களின் கலாசாரத் தேவைகள் நம்மிடம் இதனைக் கோருகின்றன. மேலும், இன்றைய நிலைமைகளில் நட்புறவான விமர்சனமும்

மிகவும் அத்தியாவசியமானது என்பதும் சொல்லாமலே புரியும். பிரபல எழுத்தாளர்கள் இளம் எழுத்தாளர்கள் ஆகிய இருசாராருமே விமர்சிக்கப்பட வேண்டும்.

ஆயினும், எல்லோரும் அறிந்துள்ளதுபோல், விமர்சனமும் வேறுபடுகிறது என்பதும் உண்மைதான். முக்தார் அயூஜோவ் தமது உரையின்போது, நீங்கள் யார்மீது அக்கறை காட்டுகிறீர்களோ, யாரைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களோ அவர்களையே விமர்சிக்கிறீர்கள் என்று மிகவும் சரியாகவே கூறினார்.

இத்தகைய நட்புறவான விமர்சனம் பற்றிய ஓர் உதாரணத்தை, கஜாக்ஸ்தானின் தலையாய எழுத்தாளர்கள் சமர்ப்பித்த அறிக்கைகளில் காணலாம். அவர்களது தீர்ப்பில் ஓரளவுக்குக் கடுமையான தன்மை உள்ளது எனில், தமது தோழர்களின் இலக்கிய வருங்காலத்தின் மீது அவர்கள் காட்டும் அக்கறையே அதற்குக் காரணமாகும்.

லித்தரத்துர்னயா கெஜத்தாவில் வெளியிடப்பட்ட, சபித் முகானேவ் சம்பந்தமாக ஜார்ஜி முன்பிலித் எழுதிய கட்டுரையோ, மிகவும் வேறுபட்டதொரு விஷயமாகும். இதனைப் போன்ற எள்ளி நகையாடி ஏளனப்படுத்தும் விமர்சனத்தை, ஒரு தோழரின் நூலிலுள்ள தவறுகளைத் திருத்த, அவருக்கு உதவும் விருப்பமாக எவரும் கருதுவது சாத்தியம் அல்ல. இந்தக் கட்டுரை எழுத்தாளருக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை; மாறாக, அவரை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஓர் எழுத்தாளர் சித்தாந்த ரீதியில் சீர்கெட்டுப்போன ஒரு புத்தகத்தை வேண்டுமென்றே எழுதினால், ஏதாவதொரு சால்ஜாப்பின் பேரில், மக்களுக்கும் கட்சிக்கும் அரசியல் ரீதியில் தீங்கு பயக்கும் கருத்துக்களைப் பிரசாரம் செய்ய முனைவாரானால், அழிக்கும் நோக்கங் கொண்ட விமர்சனத்தை எழுதுவதை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன். இது விஷயத்தில் வார்த்தைகளைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை; மாறாக, பேனாவை ஒரு மரண ஆயுதமாகவே பயன்படுத்தலாம். ஆனால் நமது எழுத்தாளர்களில் ஒருவர் தமது படைப்பில் தோல்வியடைந்து விட்டால், அவருக்கு நட்புறவான உதவியைத் தான் வழங்க வேண்டும்; வருங்காலத்திலும் அவர் அதே தவறுகளைப் புரியாத விதத்தில், அவர் எங்கு தவறிழைத்து விட்டார் என்பதை அவருக்குச் சுட்டிக் காட்டியாக வேண்டும். தமது தோழர்கள் பலரது அபிப்பிராயத்துக்குச் செவி சாய்ப்பது தமது கௌரவத்துக்கு அடுக்காது என்று அவர் கர்வம் கொண்டிருப்பாரேயானால், அவர் கூட்டு உதவியை ஏற்றுக்கொண்டு

தான் ஆக வேண்டும். அவரது புத்தகத்தைப் பற்றிய ஒரு பரந்த ஆக்கபூர்வமான விமர்சனமே, எது சரியானது, எது தவருனது என்பதை அவரைக் கண்டு கொள்ளுமாறு செய்யும் தலைசிறந்த சாதனமாகும். மிக மிக வீண் கௌரவம் பிடித்த மனிதரும் கூட—விவேக புத்தியில் இயற்கையானது அவரை ஏமாற்றி விடாது இருக்குமானால்—''படையினர் அனைவரின் நடையும் ஒழுங்கு கெட்டுச் சீர்குலைந்து போயிருக்கும் நிலையில், படையின் சார்ஜெண்டின் நடை மட்டும் ஒழுங்கு கெடாமல் சீரோடு இருந்துவிட முடியாது'' என்பதை அவர் அப்போது புரிந்து கொள்வார்.

மிகவும் உணர்வு பூர்வமற்ற விமர்சனத்துக்கோர் உதாரண மாக, இலியா இரென்பர்க்கின் உருகும் பனி என்ற கதையைப் பற்றிய கான்ஸ்தாந்தின் சிமனேவின் கட்டுரையை ஒருவர் குறிப்பிட்டுக் கூறலாம். சிமனேவ் அந்தப் புத்தகத்தின் குறைபாடுகளைப் பற்றி வெளிப்படையாகவும் கூர்மையாகவும் குறிப்பிட்டுக் கூறுவதற்குப் பதிலாக, அவர் அவற்றைப் பூசி மெழுகியிருக்கிறார். சிமனேவ் இந்தக் கட்டுரையை எழுதிய போது, அவரை வழிநடத்திச் சென்றது இலக்கியத்தின் நன்மை பற்றிய நோக்கம் அல்ல.

இளம் எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கு மதிப்புரை எழுதும்போது, விமர்சகர்கள் ஒரு தந்தையின் கண்டிப்புடனும் அக்கறையுடனும் அவர்களை மதித்து நடத்தியாக வேண்டும். பொன்னிறக் கழுகு தனது குஞ்சுகளுக்கு எவ்வாறு பறக்கக் கற்றுக் கொடுக்கிறது என்பதைப் பற்றி என்னிடம் ஒருமுறை கூறினர். அது அவற்றைச் சிறகை விரித்துப் பறக்கச் செய்கிறது; அவற்றைக் கீழே இறங்க அனுமதிக்காமல், அவற்றை மேலும் மேலும் உயரே பறந்து செல்லுமாறு நிர்ப்பந்திக்கிறது; அவை முற்றிலும் களைப்படையும் வரையிலும் அவற்றை விரட்டி விரட்டி வேலை வாங்குகிறது. இவ்வாறுதான் ஓர் இளம் பொன்னிறக் கழுகு வானில் உயரப் பறந்து செல்லக் கற்றுக் கொள்ளும்....நமது இளம் எழுத்தாளர்களைப் பயிற்றுவிப்பதில், நாம் இந்த முறையைத்தான் பயன்படுத்த வேண்டும்; மேலும் மேலும் உயரே ஏறிச் செல்லுமாறு அவர்களை நாம் நிர்ப்பந்திக்க வேண்டும்; அப்போதுதான் இதன் பயனுக அவர்கள் பயந்தாங் கொள்ளிக் காகங்களாகவோ, வீட்டுப் பொட்டைக் கோழி களாகவோ இல்லாமல், இலக்கியத்தில் உண்மையான கழுகு களாக உருப்பெறுவார்கள். ஆயினும் பொன்னிறக் கழுகானது தனது குஞ்சுகள் முதல் முயற்சியிலேயே தேவைப்பட்ட உயரத்துக்குப் பறக்க இயலாவிட்டாலோ அல்லது அவ்வாறு

பறப்பதற்கு அவை பயந்தாலோ, அவற்றின் சிறகுகளை முறித்துப் போட்டு விடுவதில்லை. அதேபோல் அரும்பிவரும் எழுத்தாளர் களின் இறக்கைகளை முறித்துப் போடவும் நமது விமர்சகர் களுக்கு உரிமை கிடையாது. ஆயினும், துர்ப்பாக்கிய வசமாக, அத்தகைய காரியங்களும் நிகழத்தான் செய்கின்றன. அத்து மீறிய ஆர்வமிக்க விமர்சகர் ஒருவர், கனத்த தடிக்கம்பினால் ஓர் இளம் எழுத்தாளரின் தலைமீது பலமாக அடித்து, அவரிடம் கொஞ்சநஞ்சம் இருந்த நம்பிக்கையையும் குடியோடிப் போகச் செய்து விடுவார்; இதன் பின் அந்தக் கழுகுக் குஞ்சு மீண்டும் சிறகை விரித்துப் பறக்கத் துணியுமா என்பது எவருக்குமே தெரியாது.

ஓர் இளம் எழுத்தாளருக்கு நல்ல சன்மானம் வழங்கினால், அது தவிர்க்கொணுத விதத்தில் அவருக்குத் தலைக்கனம் அதிகரிக்கவும், அவரது படைப்பாக்க வலிமை குன்றிப் போகவும் தான் வழி வகுக்கும் என்று சிலர் அஞ்சும் அச்சத்தை நான் கொண்டிருக்கவில்லை. ஆரோக்கியமான நல்லொழுக்கக் கோட் பாடுகளைக் கொண்டுள்ள ஒரு மனிதர், அவர் எவ்வளவுதான் பிரபலமும் புகழும் பெற்றாலும்கூட, அவரது இளமை வயதிலும் சரி அல்லது முதிய வயதிலும் சரி, தலைக்கனத்துக்கு இரையாகி விட மாட்டார். அதே சமயம் தமது உள்ளத்தில் ஓரளவிற்குச் சீர்கெட்ட தன்மையைக் கொண்டிருக்கும் ஒரு நபரோ, தாம் இன்னும் தொட்டிலிலேயே கிடந்து வரும் நிலைமையிலும் கூட, தற்பெருமை கொண்டவராக வளரத் தொடங்கி விடுவார்...

வாழ்க்கையிலும் இதே போல் நிகழ்வதுண்டு: ஓர் இளம் எழுத்தாளர் சுமாரான புத்தகம் ஒன்றை எழுதுகிறார்; உதாரண மாக மூன்றாண்டுக்கால உழைப்பின் பலனாய், தாம் உருவாக்கிய இந்தப் புத்தகத்துக்கு அவர் ஓர் அற்பமான சன்மானத்தைப் பெறுகிறார். இந்தப் புத்தகம் ஓர் இரண்டாம் பதிப்புக்குக்கூடத் தகுதி பெறுவதில்லை; இதனால் அந்த எழுத்தாளர் தமது தவறு களைத் திருத்திக் கொள்ளும் முழுநேர வேலையிலும் தம்மை ஈடுப் படுத்திக்கொள்ள முடியாது; ஒரு புதிய புத்தகத்தை அவர் எழுத முற்படுவது என்பதோ அதைக் காட்டிலும் அசாத்தியம். ஏனெனில் அவருக்கிருந்து வந்த கடன்களையெல்லாம் தீர்த்து முடிந்த பின்னர், அவரிடம் மிஞ்சியிருக்கக் கூடியதெல்லாம், தம்மிடமுள்ள கடைசிக் கால்சராயையும் இழந்துவிட நேரும் பரிதாபத்திலிருந்து தம்மை அவர் காப்பாற்றிக் கொள்ளும் அளவில்தான் இருக்கும். எனவே அவர் இலக்கிய உலகிலிருந்து விலகிச் சென்கிறார்; ஒரு வேளை அவர் என்றுமே அதற்குத் திரும்பி வராமலும் போகலாம்.

மேலும், நான் உங்களிடம் கேட்க விரும்புவது இதுதான்: பெரிய எழுத்தாளர்களில் எவர்தான், மேதத்துவம் மிக்க படைப்புக்களோடு நமது இலக்கிய வாழ்வைத் தொடங்கினர்? பொதுவாக, அவர்களது முதல் முயற்சிகள் எப்போதும் சுமாராகத்தான் இருந்தன.

எனவே நீங்கள் என்ன சொன்னாலும் சரி, என்னைப் பொறுத்த வரையில், வணக்கத்துக்குரிய பெரிய எழுத்தாளர்களான நமக்கு, குறிப்பாக வணக்கத்துக்குரிய நாடகாசிரியர்களுக்கு வழங்கப் படும் ஊதியத்தில் ஒரு பகுதியை, இளம் எழுத்தாளர்களின் நன்மைக்காக நம்மிடமிருந்து கறப்பதையே முழுமனதோடு ஆதரிக்கிறேன்.

அவர்கள்தான் வருங்காலம் பற்றிய நமது நம்பிக்கையாவர்; இலக்கியத்தைக் கிழடு தட்டிப்போக அனுமதியாதவர்களும் அவர்களே.....

1954

மக்களுக்காக எழுதுவது மிகப்பெரும் கௌரவம் ஆகும்

(ராஸ்தாவ் மற்றும் காமென்ஸ்க் பிரதேசங்களைச் சேர்ந்த இளம் எழுத்தாளர்களின் கருத்தரங்கில் ஆற்றிய உரை)

அன்பார்ந்த நண்பர்களே,

இங்கு கூடியுள்ள நாம் அனைவரும், பல்வேறு இலக்கிய வகைகளிலும் பல்வேறு பாணிகளிலும் எழுதி வரும் நாம் அனைவரும், ஒரே விதமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறோம்; மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறும் ஒரே விருப்பத்திலேல் தூண்டப் பட்டு எழுதி வருகிறோம். நமது பொறுப்பு மிகப் பெரியது. ஏனெனில் மக்களுக்காக எழுதுவது மிகப் பெரும் கௌரவ மாகும். இங்கு நான் ஓர் இளம் கவிஞரான தோழர் மிக்கேலோ வின் கவிதையையும், அவரது தோழர்கள் செய்த கடுமையான விமர்சனத்தையும் கேட்டுக் கொண்டிருந்தேன். அவரது கவிதை யில் நீர்ப்பதம் சற்றுக் கூடிப்போய் விட்டதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை—ஏனெனில் மிதமிஞ்சிய நீரை எப்போதுமே வடியச் செய்து போக்கி விடலாம். பொருட்படுத்த வேண்டிய விஷயம் என்னவெனில், இந்த இளம் கவிஞர் தமது மூத்த தோழர்களைப் போலவே மக்களுக்கு உண்மையை எடுத்துக்கூற விரும்புகிறார் என்பதுதான்.

மக்கள் விஷயத்தில் ஓர் எழுத்தாளருக்குள்ள பொறுப்பு மிக மிகப் பெரிதாகும். நாம் அனைவரும் ஒன்றுகவும், நம்மில்

ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் மக்களின் மனச்சாட்சியாக இருந்தாக வேண்டும். மேலும், எனது இளம் நண்பர்களே, நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுவது இதுதான்: ஓர் இளம் நூலாசிரியருக்கு, எழுதுவது என்பது எப்போதுமே எளிதாக இருந்து விடுவதில்லை; உண்மையில் அவர் மிகப்பல சமயங்களில் மிகவும் கடினமாகப் பாடுபட்டுத்தான் எழுத வேண்டியிருக்கும் என்பதும் முற்றிலும் உண்மைதான்; என்றாலும், உங்கள் மனத்தில் இன்னும் முற்றிலும் சரிவர உருவாகாத ஒன்றை, வார்த்தைகளாக மாற்றி எழுதுவதில் அவசரமே காட்டாதீர்கள். நீங்கள் படைத்தளிக்கும் புத்தகம் ஒரு வரவேற்பைப் பெற வேண்டும்; ஒரு நீண்ட வாழ்வை வாழ வேண்டும்.

இலக்கியத்துக்குள் மேலும் மேலும் புதிய ரத்தம் பாய்ந்து கொண்டிருக்கிறது; ராஸ்தாவ் எழுத்தாளர் ஸ்தாபனத்தின் உறுப்பினர் தொகை இடையறாது அதிகரித்து வருகிறது.

போருக்கு முன்னரும் கூட ராஸ்தாவ் எழுத்தாளர்களின் பிரகாசமான தாரகை மண்டலமொன்றைக் கொண்டிருந்தது. கவிஞர் கிரிகோரி காத்ஸ், அற்புதமான திறமை படைத்த வசன இலக்கிய கர்த்தா அலெக்சாந்தர் புஸிகின் ஆகியோர் இருந்தனர். அவர்கள் இருவரும் நமது தாயகத்தை வீராவேசத்தோடு பாதுகாத்து நின்று, போரில் வீழ்ந்து பட்டனர். அணிகளில் அவர்களது இடத்தைப் பூர்த்தி செய்ய புதிய, இளம் எழுத்தாளர்கள் வந்தனர்; நீங்களும் கூட, காலக்கிரமத்தில் உங்களது மூத்த தோழர்களின் இடத்தை ஏற்றுக் கொள்வீர்கள். நாம் அனைவரும் சேர்ந்து, சோவியத் எழுத்தாளர்களின் மாபெரும் படையாக, சொல்லப் போனால், ஒரு வலிமைமிக்க இலக்கியப் பட்டாளத்தின் ''முஷ்டி''யாக விளங்கி வருகிறோம்.

இப்போது நீங்கள் நமது படைப்பாக்க முயற்சிகளைப் பற்றிப் பேசுவதற்காக இங்கு கூடியுள்ளீர்கள். இது மிகவும் நல்லதுதான். இந்தப் பிரச்சினைகளைச் சூடாகவும் உணர்ச்சி வேகத்தோடும் விவாதிக்கத்தான் வேண்டும். நீங்கள் வேலையில் உங்கள் இதயத்தையே ஈடுபடுத்தியாக வேண்டும்; உங்களது சர்வ பலத்தோடும் நீங்கள் உங்களை நமது சிரமமான தொழிலுக்கு அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.

நான் மீண்டும் ஒருமுறை உங்களை எச்சரிக்க விரும்புகிறேன்: முதலில் நீங்கள் இந்தப் பணியில் எவ்வளவுதான் கடினமாகப் பாடுபட வேண்டியிருந்த போதிலும், எளிதான வெற்றியை மட்டும் என்றும் நாடாதீர்கள். என்னதான் இருந்தாலும், நீங்கள்தான் எங்களுக்குப் பதிலாக இடம் பெறப் போகும் படை;

நீங்களே நமது நம்பிக்கை. நீங்கள்தான் நமது வருங்காலம். உங்களிற் பலர் ஏற்கனவே ஒரு நிகழ்காலத்தைப் பெற்றிருக் கிறீர்கள்; உங்கள் அனைவருக்கும் ஒரு வருங்காலம், எழுத்தாள ரின் வருங்காலம் உண்டு. ஓர் அற்புதமான மக்களின் அற்புதமான பிரதிநிதிகள் நீங்கள்தான். எனது அன்பார்ந்த நண்பர்களே, நான் உங்களுக்கு நல்வாழ்த்துக் கூறுகிறேன்; நீங்கள் வெற்றி பெறவும் மாபெரும் சாதனைகளைப் புரியவும் வாழ்த்துகிறேன்.

1955

இளம் எழுத்தாளர்களின் மூன்றுவது அகில-யூனியன் காங்கிரசில் ஆற்றிய உரை

நமது எழுத்தாளர் யூனியன் தலைமைப் பீடத்திலுள்ள என. நண்பர்கள், இளம் எழுத்தாளர்களுக்கு நான் ஏதாவது ''ஆ மான'' விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்று என்னை வற் புறுத்தும்போது என்னை மிகவும் தர்மசங்கடமான நிலைக்கு உள்ளாக்கி விடுகின்றனர்.

''ஆழமாக என்றால், திட்டவட்டமாக எதைத்தான் குறிப்பிடுகிறீர்கள்?''

''ஓ! அதுவா? நல்லது. ஓர் எழுத்தாளரின் பணி ஒன்றும் எளிதானதல்ல; அது சமயங்களில் மிகவும் கடினமாக இருக்கும்; அது ஒரு புனிதமான லட்சியம்—அப்படி இப்படியென்று அவர் களுக்குக் கூறுங்களேன்.''

நல்லது. இதோ நானும் இங்கு வந்துவிட்டேன்; இப்போது என்ன நிகழ்கிறது? என்முன்னால் மிகவும் திறமை படைத்த, மிகவும் திறன்மிக்க 360 இளம் எழுத்தாளர்களே உள்ளனர். இத்தகைய திறன்மிக்க நபர்களுக்கு நான் ஆரம்பக் கூறுகளைப் பற்றி உபதேசம் செய்யப் புகுந்தால் அதில் அர்த்தம் ஏதேனும் உண்டா? எனவே சமதையான ஒருவன் சமதையான மற்றவர் களோடு பேசுவதுபோலத்தான் அவர்களிடம் நான் பேசப் போகிறேன்.

இலக்கியத்தையும் இந்தத் தற்போதைய மாநாட்டையும் பொறுத்த வரையில் இங்கு பேசிய தோழர் அஷயோவோடு சில விஷயங்கள் மாறுபடுகிறேன் என்பதை நான் கூறியாக வேண்டும்.

உதாரணமாக, தமது பேச்சில் அவர் ஏதாவதொரு புத்த கத்தைப்பற்றி நல்ல விதமாகப் பேசி வரும்போதே, ஏதாவது சில்லறை விஷயங்களைக் கிளப்பி, சுவாரசியத்தைக் கெடுப்பது அத்தியாவசியம் என்று உணர்கிறாரே, அந்த விஷயம்தான்

எனக்குப் பிடிக்கவில்லை. புத்தகத்தின் சிறப்புக்கள் அதன் குறை பாடுகள், நூலாசிரியர் அதனை எழுதியுள்ள முறை, மற்றும் பிற படைப்பாக்கக் கூறுகள் அனைத்தையும் பற்றிக் கருத்தரங்கில் விரிவாக விவாதித்து முடிக்கும் வரையில் அவர் இதனைக் கூறுதிருந்திருக்கலாம்.

மேலும் இந்த விளக்கங்கள் விவரங்கள் எல்லாவற்றையும் இந்த மேடையிலிருந்து கொண்டு குறிப்பிட்டிருக்க வேண்டியது அவசியம்தானு?

மரத்திலிருந்து பட்டைகளை உரித்தெடுப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொள்வதும், மரப்பட்டை நார்களைக் கொண்டு செருப்புக்களைப் பின்னி முடிப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொள்வதும் வெவ்வேறான விஷயங்களாகும் என்று கார்க்கி கூறியதைத் தோழர் அஷயேவ் மிகவும் பொருத்தமாக மேற்கோள் காட்டியதாகவே நான் கருதினேன்.

நான் உங்கள் நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அதே உவமையைத் தொடர்ந்து மேலும் கூறினால், இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம் என்று அரையும் குறையுமாக வேலை பார்ப்பதைக் காட்டிலும், காட்டில் பழக்கப் பட்ட ஒரு பகுதியில் மரங்களிலிருந்து பட்டைகளை உரிப்பதும், அந்த வேலையையும் முழுமையாகச் செய்து முடிப்பதுமே நல்ல தாகும். எனது கருத்தை விளக்குவதற்கு ஓர் உதாரணம் கூறுகிறேன். நமது எழுத்தாளர்கள், மூத்த எழுத்தாளர்கள், இளம் எழுத்தாளர்கள் இருசாராரும், கருப்பொருள்களையும் கதைப் பொருள்களையும் வேட்டையாடிக் காண்பதற்காக, கன்னி நில அபிவிருத்திப் பிரதேசங்களுக்கு ஓடோடியும் சென்றனர்; ஆயினும் விளைந்த பயன் ஒன்றும் அத்தனை நன்றாக இல்லை; உண்மையில் பல சந்தர்ப்பங்களில் அது வருந்தத்தக்கதாகவே இருந்தது. அவர் கள் அங்கு ஒன்றிரண்டு மாதங்கள், ஏன் ஆறுமாதம் வரையிலும் கூடத் தங்கியிருந்தனர்; அவர்கள் ஏராளமான மரங்களிலிருந்து மரப்பட்டைகளை உரிக்கவும் செய்தனர்; ஆயினும் இந்த மரப் பட்டைகளைக் கொண்டு செருப்புக்களைப் பின்னுவது எப்படி என்பதை மட்டும் அவர்கள் இன்னும் கற்றுக்கொள்ளவே இல்லை.

உங்களில் மிகப் பெரும்பாலோர் நாட்டுப்புறப் பகுதிகளி லிருந்து வந்திருக்கிறீர்கள்; இது மிகவும் நல்ல விஷயமாகும்; ஏனெனில் நீங்கள் வாழ்க்கையோடு மிகவும் நெருங்கியிருந்து வருகிறீர்கள் என்பதே இதன் அர்த்தமாகும்.

நான் உங்களுக்கு விடுக்க விரும்பும் எச்சரிக்கை இதுதான்: வயது அதிகமாகிவிட்ட இளம் எழுத்தாளர்களாக, அதாவது

இலக்கியத் துறையில் கிழட்டுக் கன்னிப் பிறவிகளாக மாறி விடாதீர்கள். உங்களுக்குப் படைப்பாக்கப் பரிபக்குவம் விரை விலேயே உண்டாகட்டும். இதனை எழுத்தாளர்களான நாங்கள் மட்டுமல்லாமல், வாசகர்களும்—உலகில் வேறு எங்கணும் உள்ள வாசகர்களைக் காட்டிலும் மிகவும் உணர்ந்து பாராட்டும் திறமை படைத்தவர்கள் என்றே சொல்லக்கூடிய, நமது நன்கு வேலை வாங்கும், அக்கறைமிக்க வாசகர்களும்—வரவேற்பார்கள்.

மேலும், இது சம்பந்தமாக இன்னும் ஒரு விஷயம்: தயவு செய்து நீங்கள் முதுமைப் பருவத்தை எட்டும் வரையிலும், பரிபக்குவ சித்திலை எய்திவிட்டதாகப் பம்மாத்துப் பண்ணு தீர்கள்; ஏனெனில் அவ்வாறு பம்மாத்து செய்யும் எழுத்தாளர் களும் நம் மத்தியில் இருக்கின்றனர்; அவ்வாறு செய்பவர்கள் யாராா என்று நாம் கூற விரும்பவில்லை.

எனது சிற்றுரையின் முடிவில், நான் உங்களுக்கு வரும் ஆண்டில் மட்டுமல்லாமல், உங்களை எதிர்நோக்கியுள்ள வாழ்க்கை முழுவதிலும் உங்கள் பணியில் மிகவும் துணிவுமிக்க பெருஞ்சாதனைகளை நீங்கள் சாதிக்குமாறு வாழ்த்துக் கூற விரும்புகிறேன்.

1956

நட்பை என்றும் மறவாதீர்

இந்த விழாவில் பங்கெடுக்கும் நமது சொந்த இளம் மக்கள் மற்றும் நமது அருமை விருந்தினர்கள் ஆகிய அனைவரையும் நான் உளமாரக் கட்டிப்பிடித்துக் கொள்கிறேன். "கட்டிப் பிடித்தல்" என்ற வார்த்தையைக் கேட்டு நீங்கள் தயவுசெய்து குழம்பிப் போய் விடாதீர்கள்: இங்கு மாஸ்கோவில் நீங்கள் எவ்வளவோ பேர் கூடியுள்ளீர்கள்; எனவே உங்கள் அனைவரை யும் உடம்போடு சேர்த்துக் கட்டிப்பிடிப்பது ஒரு நபரால் செய்யக்கூடிய காரியம் அல்ல என்பதை நான் அறிவேன். என்றாலும் எல்லா எழுத்தாளர்களையும் போலவே, நீங்கள் இன்னும் இருமடங்காக இருந்தாலும்கூட, உங்களையெல்லாம் மானசீகமாகக் கட்டியணைத்துக் கொள்ளக்கூடிய அத்தகைய வாஞ்சைமிக்க இதயம் எனக்கும் உண்டு!

இது 1927 ஆம் ஆண்டாக இல்லாமல் 1957 ஆம் ஆண்டாக இருக்கிறதே என்று நான் பரிதாபப்படுகிறேன். ஏனெனில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் என்றால், நானும் இந்தக் கூட்டத்தில் ஒரு முழுமையான, சமதையான உறுப்பினராக

இருந்திருக்க முடியும்; இப்போது இருப்பதுபோல நான் ஒரு வயதுமுதிர்ந்த விருந்தாளியாக இருக்க நேர்ந்திருக்காது. விஷயம் என்னவெனில் நான் மிகவும் முந்திப் பிறந்து விட்டேன்; இவ்வாறு பிறந்ததற்கு நான் என்னைத்தான் குறை கூறிக்கொள்ள வேண்டும்.

இந்த விழாவை நீங்கள் மகிழ்ச்சிகரமாக அனுபவிக்கிறீர்கள் என்றும், குதூகலமாகப் பொழுதைப் போக்குகிறீர்கள் என்றும் நான் நம்புகிறேன். என்றாலும், உங்களது குதூகலக் கேளிக்கையின் போதும், சகல கண்டங்களையும் நாடுகளையும் சேர்ந்த இளம் மக்களின் நட்புறவையும் கூட்டணியையும் நீங்கள் மறந்து விடவே கூடாது; இந்தக் கூட்டணி உலகில் சமாதானத்தைப் பாதுகாத்துவர மனிதகுலத்துக்கு உதவும் என்பதை நினைவு கூருங்கள்.

1957

லவாவ் மாணவர்களுக்கு ஒரு கடிதம்

அன்பார்ந்த தோழர்களே,

நான் மெதுவாக எழுதிவரும் எழுத்தாளன் என்றே வெளித் தோற்றத்தில் நீங்கள் என்னை அறிந்திருக்கிறீர்கள். யுத்தத்துக்குப் பின் கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் நான் மூன்று புத்தகங்களை எழுதினேன். இந்த வேகம் எனக்கு ஒரு முறையான வேகமாகும் என்றே நான் கருதுகிறேன்.

இந்த ஆண்டில் நான் கன்னி நிலம் உழப்பட்டது நாவலின் இண்டாவதும் இறுதியுமான பாகத்தை எழுதி முடித்தேன்; இலையுதிர் பருவத்தில் அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற நாவலின் முதற் பாகத்தை எழுதி முடிப்பேன்; இதனோடு யுத்தப் பிற்காலத்தில் எழுதிய பலவகையான கட்டுரைகளையும் கதைகளையும் சேர்த்துக்கொண்டால், மூன்று புத்தகங்கள் ஆகின்றன.

ஒரே ஆண்டின்போது இரண்டு புத்தகங்கள் வெளிவருவது எப்படி என்பதையும் இவ்வாறு எளிதில் விளக்கி விடலாம்: நான் இந்த இரண்டு புத்தகங்களையும் எழுதுவதில் ஏககாலத்தில் ஈடுபட்டு வந்துள்ளேன்.

பிள்ளைகளே, மேலும் மிகவும் நேர்மையாகச் சொன்னால், அளவுதான பிரதானமான விஷயம்?

எனது பதில் உங்களுக்குத் திருப்தியளிக்கும் என்று நம்புகிறேன். நீங்கள் உங்கள் பாடங்களை நன்றாகப் படித்துவர வேண்டும்

என்றும், ஏனைய எல்லாவற்றிலும் மகிழ்ச்சிகரமாக இருந்து வரவேண்டும் என்றும் எனது இதயத்தின் அடியாழத்திலிருந்து நான் உங்களை வாழ்த்துகிறேன். நான் உங்களுக்கு நல்ல ஆரோக்கியம் கிட்ட வேண்டும் என்று வாழ்த்தவில்லை; ஏனெனில், நீங்கள் இளம் பிள்ளைகள்; எனது நல்வாழ்த்துக்கள் இல்லாமலே நீங்கள் அருமையான ஆரோக்கியத்தோடுதான் இருந்து வருவீர்கள்.

உங்கள்

1958 எம். ஷோலகோவ்

எனது நாட்டின் பெருமிதம்

எனது அன்பார்ந்த காம்சொமால் யுவர்களே யுவதிகளே! கடந்துபோய்விட்ட எனது சொந்த இளமைப்பருவமே! நமது நாட்டின் நமது கட்சியின் நியாயப்படுத்தப்பட்ட நம்பிக்கையே! உங்களது காங்கிரஸ் நடைபெறவிருக்கும் இந்தத் தருணத்தில் உங்களை வாழ்த்தவும், உங்களைத் தழுவி அரவணைக்கவும், எனது நாட்டின் பெருமிதமான நீங்கள் உங்கள் பணியிலும் படிப்பிலும், சொந்த வாழ்க்கையிலும் எல்லா வெற்றியும் மகிழ்ச்சியும் பெறவும் வாழ்த்துக்கூற என்னை அனுமதியுங்கள்.

1958

கீவ் பிரதேசத்தைச் சேர்ந்த பெலாயா திசெர்கோவ் என்ற கிராமத்திலுள்ள 2ஆம் எண் பள்ளியில் படிக்கும் இரு மாணவர்களுக்கு எழுதிய கடிதம்

அன்பார்ந்த வித்தாலி மற்றும் அலெக்சாந்தர்,

நான் இப்போதுதான் மாஸ்கோவிலிருந்து திரும்பியுள்ளேன்; எனவே எனது நல்வாழ்த்துக்களை உங்களுக்கு உரிய நேரத்தில் அனுப்ப முடியாது போய்விட்டது. என்றாலும் இவ்வளவு தாமதமான பின்னரும்கூட உங்கள் கடிதத்துக்குப் பதில் எழுதத் தீர்மானித்த அளவுக்கு, உங்கள் கடிதம் அத்தனை மகிழ்ச்சி பூட்டுவதாக இருந்தது.

நான் மேலும் பல ஆண்டுகள் வாழவும் எனது பணியில் நான் புதிய வெற்றிகளைப் பெறவும் விருப்பம் தெரிவித்து, நீங்கள் உங்கள் கடிதத்தை தொடங்கியுள்ளீர்கள். உங்கள்

பேரன்புக்கு நன்றி. மேலும் இரண்டாவது பாராவில் இவ்வாறு கூறுகிறீர்கள்: ''சிறிது காலத்துக்கு முன்னால் எங்களிற் பலர், தங்களது நூல்களின் தொகுக்கப்பட்ட தொகுதியைப் பெற்றுப் படிக்க விருப்பம் தெரிவித்து எங்கள் பெயர்களை எழுதிக் கொடுத்தோம்; பிறகுதான் அத்தகைய முழுமையான தொகுதி வெளிவரவில்லை என்றறிந்து வருத்தப் பட்டோம்.''

ஒரு முழுமையான தொகுதி நூல், நூலாசிரியரின் மரணத் துக்குப் பிறகே வெளியிடப்படும் என்பது உங்களுக்குத் தெரியாதா? வேறுவிதமாகச் சொன்னால், போக்கிரிகளான நீங்கள், நான், இன்னும் சாகவில்லையே என்பதற்காக வருத்தப் படுகிறீர்களா? உண்மையில் நல்ல காரியம்தான் செய்தீர்கள்! வெஷென்ஸ்காயாவிலிருந்து பெலாயா திசெர்கோவ் அதிகத் தொலைவில் இருக்கிறதே என்பதை எண்ணித்தான் நான் பரிதாபப்படுகிறேன்; இல்லையென்றால் நான் அங்கு வந்து, உங்களது ''அன்பான'' விருப்பங்களுக்காக உங்களை ஒருகை பார்த்திருப்பேன்...என்றாலும்கூட, நான் உங்களைப்போல் அத்தனை கொடிய மனம் படைத்தவனாக இல்லை; எனவே நான் உங்களது 10 ஆவது ''ஏ'' படிவத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும், நீங்கள் சகல தலைசிறந்த பாக்கியங்களையும் பெற—அபாரமான மதிப்பெண்களும், நல்ல ஆரோக்கியமும், ஆனந்தமும், பள்ளிப் படிப்பை முடித்தபின் மேலும் முன்னேற்றமும் பெற—எனது இதயத்தின் அடியாழத்திலிருந்து வாழ்த்துக் கூறுகிறேன்.

எனது அருமைச் சிறுவர்களே, உங்களை அரவணைத்து விடைபெறும்,

உங்கள்
எம். ஷோலகோவ்

உங்கள் கடிதம் எத்தனை நல்ல விஷயமாக விளங்கிவிட்டது பாருங்கள். உங்களோடு வேடிக்கையாகப் பேசியது, எனக்கு ஓர் இன்பகரமான மாற்றமாக இருந்தது. எனவே மீண்டும் வேலையில் ஈடுபடுவது மிகவும் எளிதாக இருப்பதை நான் காண்கிறேன்.

1959

எனது டான் பிரதேச மக்களுக்கு

இப்போது நான் உள்ளூருக்குத் திரும்பிய சூட்டோடு, எனது சகக் கிராமவாசிகளுக்கு ஒரு விஷயத்தை உடனே தெரிவிக்க

விரும்புகிறேன். ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசினது அமைச்சரவைக் கவுன்சில் முடிவின்படி, கர்கின்ஸ் காயா ஸ்தானித்ஸாவில் புதிய பள்ளிக் கட்டிடத்தை நிர்மாணிக் கும் வேலை இந்த ஆண்டில் தொடங்கப்படும். ஒரு காலத்தில் நான் எங்கு படிக்கவும், எழுதவும் கற்றுக் கொண்டேனோ அந்த இடத்திலுள்ள பள்ளிக்கூடத்துக்குப் பதிலாக, புதிய பள்ளிக் கூடத்தைக் கட்டும் பணிக்கு, எனது லெனின் பரிசுத் தொகை முழுவதையும் நான் நன்கொடையாக வழங்கியுள்ளேன்.

கர்கின்ஸ்காயா வாசிகள் அனைவருக்கும் எனது வாஞ்சை மிக்க வணக்கங்கள்.

1960

இதயம் கனிந்த நன்றி

(''கன்னி நிலம் உழப்பட்டது'' நாவலுக்காக அளிக்கப்பட்ட லெனின் பரிசை வழங்கும் விழாவின்போது, கிரெம்ளினில் ஆற்றிய பதிலுரையிலிருந்து)

இந்த முக்கியத்துவம் மிக்க சந்தர்ப்பத்தில், நான் முதன் முதலாக, எனக்கு ஓர் எழுத்தாளனின் பேனாவை ஆயுதமாக வழங்கி, எனது நாவல்களுக்கான வற்றாத விஷயச் சுரங்கத்தை யும் எனக்கு வழங்கியுள்ள சோவியத் மக்களுக்கே நன்றி கூற விரும்புகிறேன்.

லெனின் பரிசுக்கு எனது பெயரைப் பிரேரேபித்த வாசகர் களான எனது எண்ணிறந்த நண்பர்களுக்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன்.

எனது படைப்பை இத்தனை உயர்வாக மதிப்பிட்டமைக்காக, மத்தியக் கமிட்டிக்கும் சோவியத் அரசாங்கத்துக்கும் எனது இதயம் கனிந்த நன்றி. மேலும், இயல்பாகவே நான் லெனின் பரிசுக் கமிட்டிக்கும் நன்றி கூற விரும்புகிறேன்; அதனைப் பற்றி நான் கடைசியாகக் குறிப்பிட்டமைக்காக, என்னை மன்னிக்கு மாறு அதனைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு நபருக்குப் பரிசொன்றை வழங்கும் சமயத்தில், அவர் வருங்காலத்தில் இன்னும் அரும்பாடுபட்டு உழைக்கப் போவதாக உறுதி கூறுவது வழக்கம் என்பதை நான் அறிவேன். எனது முதிர்ந்த வயதும், எனது தொழிலின் பிரத்தியேகத் தன்மைகளும் இது விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்குமாறு என்னை நிர்ப்பந்திக்கின்றன.

உயர்வான மதிப்பெண்களையே பெறுவேன் என்று கூறும் ஒரு நல்ல பள்ளி மாணவனைப் போன்று, அடுத்த ஆண்டில் நான்

எழுதப் போகும் எல்லாவற்றையும் குறித்து நான் உறுதி கூறுவேன் என்று நிச்சயமாக என்னிடம் எதிர்பார்க்க முடியாது. ஆயினும் ஒரு மனிதனின் உறுதியோடும், எனது திறமைகளிலும் சக்திகளிலும் உள்ள முழுமையான தன்னம்பிக்கையோடும், நான் எனது பேனாவைக் கொண்டு எனது கட்சிக்கும் எனது மக்களுக்கும் முன்போலவே தொடர்ந்து விசுவாசத்தோடு பணி புரிந்து வருவேன் என்பதை மட்டும் நான் உங்களுக்குக் கூறிக் கொள்ள முடியும்.

வாசகர்களோடு எனக்குள்ள உறவுகள் முற்றிலும் கண்ணியமாகவே, மொத்தத்தில் நன்முகவே இருந்து வருகின்றன என்பதை நான் கூறியாக வேண்டும். வாசகர்களோடுள்ள இடையறுத தொடர்பானது, தமது சக்திகளில் நூலாசிரியருக்குள்ள தன்னம்பிக்கையை வலுப்படுத்துகிறது; அவரது பணியில் அவருக்கு உதவுகிறது. ஆயினும் எனது வாசகர்கள் சிலர் விஷயத்தில் நான் மோசமான உறவுகளைக் கொண்டிருக்கவில்லை என்றாலும்—ஆனால் அதனை நான் எப்படி விவரித்துக் கூறுவது?—எங்களது உறவுகள் சற்றே ஆறி அடங்கியவையாகவே உள்ளன. பல சமயங்களில் எழுத்தாளரிடம் விடுக்கும் கோரிக்கைகள் மிகவும் மிதமிஞ்சியவையாக உள்ளன. உதாரணமாக, ஒரு வாசகர் யூரி மிலோஸ்லாவ்ஸ்கியின் ஆசிரியர் தமது கதாநாயகர்களை உயிரோடு விட்டு வைத்திருக்கும் போது, ஷோலகோவ் மட்டும் நகுல்னேவ், தாவிதோவ் ஆகிய இருவரையுமே ஏன் கொன்று தள்ள வேண்டும் என்று சகல கரிசனத்தோடும் குறைப்பட்டுக் கொண்டிருந்தார். ''இதற்கும் சோஷலிச எதார்த்தவாதத்துக்கும் என்ன சம்பந்தம்?'' என்றும் அவர் கேட்டிருந்தார். இத்தகைய ஆலோசனை கவனத்தில் கொண்டாக வேண்டிய ஒன்றல்ல. மேலும் வருங்காலத்திலும் கூட, நான் எப்படி உணர்கிறேனோ அப்படித்தான் எழுதுவேன்; எழுதியாக வேண்டும்.

இங்கு இன்னுமோர் உதாரணம். லெஸ்தெக்ஸைர்யி ஊழியர்களிடமிருந்து, அந்தத் தொழிற்சாலையின் நிர்வாகியும் மற்றும் மூன்று பெண்களும் கையெழுத்திட்ட ஒரு கோபாவேசம் மிக்க கடிதம் எனக்கு வந்தது. அவர்களை அத்தனை கோபமுறச் செய்த விஷயம் என்னவெனில், கன்னி நிலம் உழப்பட்டது நாவலில் நான் எவ்வளவோ பல்வேறு விஷயங்களைக் குறித்து எழுதியிருந்த போதிலும், மருத்துவ மூலிகைகளைச் சேகரிக்கும் விஷயம் பற்றி நான் எதுவுமே குறிப்பிடவில்லை என்பதுதான். இத்தகைய முறையீடுகள் பல உள்ளன. என்றாலும் நான் ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்த முடியாது.

என் விஷயத்தில் ஒரு லெனின் பரிசைப் பெறுவதை, ஒரு கூடந்துபோன கட்டமாகவே கருத முடியும். அடுத்த ஆண்டில் ஓர் இளம் எழுத்தாளர் (ஒருவருக்கும் அதிகமாக இருந்தால் மிகவும் நல்லது) எனது இடத்தில் நின்று கொண்டிருப்பதைக் காணவே நான் விரும்புவேன்.

மூத்த தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்களான நாங்கள் எங்களது இலக்கிய வாழ்க்கைத் தொழில்களில் முதன்முதலாக ஈடுபடத் தொடங்கிய காலத்தில், அபரிமிதமான கவனத்தோடு நாங்கள் பேணி வளர்க்கப்படவில்லை—பரிசுகளும் ஊக்குவிப்புக் களும் எங்கள் மீது பொழியப்படவில்லை. இதனால் இலக்கியத் துறைக்குள் அனுமதிப்பது மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது என்று நான் கூற வரவில்லை. ஆனால் நிகழ்ந்து வருவது என்னவெனில், முதியவர்களின் இடத்தில் இளையவர்கள் இடம் பெற்றுவரும் தர்க்க ரீதியான வளர்ச்சிப் போக்குத்தான். மேலும் நான் இந்த மேடையில் இளைஞர்கள் ஏறி வரவேண்டும் என்பதையே ஆதரிக்கிறேன்.

நான் மீண்டும் மற்றொரு லெனின் பரிசை என்றுமே பெற மாட்டேன் என்று தாராளமாகக் கருதக் கூடும்; என்றாலும், இவ்வாறு கூறுவதன் மூலம், இலக்கியத் துறையில் நான் வகித்து வரும் ஸ்தானத்தை ஒரு போராட்டத்தை நடத்திப் பார்க்காமல் விட்டுக் கொடுத்து விடுவேன் என்று அர்த்தமாகாது!

நான் இங்கு மூத்த தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர் களான எனது தோழர்களைக் காண்கிறேன்; வாழ்க்கை அனுபவத்தையும் இலக்கிய அனுபவத்தையும் மிகவும் பெற்றுள்ள நாங்கள், எங்களது ஸ்தானங்களைப் போராடாமல் விட்டுக் கொடுப்பதென்பது, எங்களுக்குத் தகாது என்றே நான் கருதுகிறேன்.

எங்களது இடங்களில் இளைஞர்கள் இடம் பெறுவதையே நான் முழுமையாக ஆதரிக்கிறேன்; என்றாலும் அவர்கள் எங்களோடு சரிசமமாக முன்னேறி வந்து இடம் பெறுவதற்கு முன்னால், முதலில் அவர்கள் சற்று அரும்பாடுபட்டு உழைக்கட்டும்.

நான் இங்கு முந்திய ஆண்டுகளில் லெனின் பரிசு பெற்றவர் களைக் காண்கிறேன்; பரிசு வழங்கும் விழாவின் போது அவர் களும் பிரசன்னமாக இருப்பது ஒரு மரபாகவே மாறினால், அது ஒன்றும் மோசமான காரியமாக இராது. அடுத்த ஆண்டில் நமது இளம் எழுத்தாளர்களில் ஒருவர் இந்தத் தகுதிமிக்க பரிசைப்

பெறும்போது நானும் எதிரே வந்து அங்கு அமர்ந்து கொண்டிருப்பேன். கலை இலக்கியத் துறையில், சோஷலிசக் கலையின் அணைக்க முடியாத ஜோதியைச் சங்கேதமாகக் கை மாற்றிக் கொடுப்பதையும் ஒரு மரபாக்கலாம் என்று கூறினால், அதுவும் ஒரு நல்ல யோசனையேயாகும்.

1960

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 22 ஆவது காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து

அன்பார்ந்த பிரதிநிதித் தோழர்களே,

இந்தக் காங்கிரசின் இந்த முக்கியத்துவம்வாய்ந்த நாட்களின் போது, நாம் நமது லெனினியக் கட்சியின் புதிய திட்டத்தை அங்கீகரித்துக் கொண்டிருக்கும் காலத்தில், நமது வாழ்க்கையிலேயே, சோவியத் மக்கள் அனைவரது வாழ்க்கையிலேயே, ஒரு புதிய, மிகவும் பிரத்தியேகமானதோர் உணர்ச்சி உருவேறி வருவதுபோல் தோன்றுகிறது என்று நான் கூறினால், ஒவ்வொருவரும் என்னஉணர்கிறீர்களோ அதையே நான்எடுத்துக் கூறியதாகும் என்றே நான் கருதுகிறேன். ஒரு புதிய, புத்துணர் ஊட்டும் காற்று நமது முகங்களின் மீது வீசி, நமது கண்முன்னால் தூராதொலைவிலுள்ள கவர்ச்சிகரமான அடிவானத்தை நமக்குப் புலப்படுத்திக் காட்டுவது போலத்தான் இது உள்ளது. நமது சுவாசமும் தாராளமாகவும் ஆழமாகவும் உள்ளது; இப் போதிலிருந்து இன்னும் இருபது ஆண்டுக்காலத்தில் நாம் நிச்சய மாக அடையப் போகின்ற அந்த விரும்பத்தகுந்த வருங் காலத்தின் வரிவடிவங்களையும் நாம் தெள்ளத் தெளிவாகக் கண்டுணர முடிகிறது.

தனது உள்ளடக்கம் அனைத்தோடும், உழைக்கும் மனித குலத்தின் ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையுமே தனது நோக்க மாகக் கொண்டுள்ள இந்தத் திட்டம் உண்மையிலேயே எத்தனை மகத்தானது, உன்னதமானது என்பதையே இது காட்டுகிறது!

எனவே, இந்தத் திட்டத்தைத் தீட்டியவர்களுக்கு, நமது அண்மை வருங்காலத்தையும், தொலைதூர வருங்காலத்தையும் உண்மையான லெனினியத் தொலைநோக்கோடு ஏறிட்டு நோக்கி, மக்களது கனவுகளையும் நீண்ட காலமாகப் போற்றிவரப்பட்ட நம்பிக்கைகளையும் தெள்ளத் தெளிவாக வரையறுக்கப்பட்ட பணிகளில் குடிகொள்ளச் செய்தவர்களுக்கு, நன்றி கூற விரும்புவது முற்றிலும் இயல்புதானே.

நமது வலிமை மிக்க கட்சி எதனை வெற்றி கொண்டுள்ளது, எதனைச் சாதித்துள்ளது என்பதையும், அது இன்னும் அதிகமாக எவ்வளவு சாதிக்க வேண்டியுள்ளது என்பதையும் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, உண்மையில் நமது தொண்டையில் ஏதோ ஒன்று எழுந்து அடைக்கத்தான் செய்கிறது; ஏனெனில் உண்மையிலேயே அது அத்தனை அற்புதமாக உள்ளது! மேலும், உண்மையைச் சொல்லப் புகுந்தால், "நாமெல்லாம் திறமை மிக்க நபர்கள். இல்லையா? நாம் வலிமை மிக்க பிறவிகள். இல்லையா? ஒவ்வோர் அம்சத்திலும் வலிமை மிக்கவர்கள். இல்லையா?" என்று உந்தியெழும்பும் பாராட்டுணர்வோடும், வாஞ்சைமிக்க சௌஜன்யத்தோடும் நமக்கு நாமே கூறிக் கொள்ளும் அளவுக்கு, நாம் சமயங்களில் கட்சியைப் பற்றியும் சோவியத் மக்களைப் பற்றியும், அத்தனை பெருமையடித்துக் கொள்ளும் உணர்வையும் பெறுகிறோம்.

கம்யூனிசத்தை நோக்கிச் செங்குத்தாக மேலேறிச் செல்லுமாறு சரித்திரமே நமக்கு விதித்திருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இவ்வாறு ஏறிச் செல்வது சமயங்களில் மிகவும் கடினமாக இருக்கும், இதனால் ஏற்படும் சிரமத்தால் நமது வாயெல்லாம் வற்றியுலர்ந்து விடும் என்பதையும் நாம் நன்கு அறிவோம். என்றாலும் நாம் சிகரத்தை எட்டிப் பிடித்த பிறகோ, இதுவரையில் கண்டறியாத புதிய அடிவானங்கள் நம் முன்னே புலப்படும்; இந்த உயரத்தை நாம் ஏறி முடித்த பின்னரோ நமது உடம்பு களைத்துப் போயிருந்தாலும், நமது உணர்வு என்றுமே களைத்துப் போயிருக்காது; மேலும், அந்த உயரத்தில் ஓர் இதமளிக்கும், ஜீவனை வழங்கும் சுனையூற்று நமது தாகத்தையெல்லாம் தணித்துவிடும்.

இந்தச் சிரமமயமான மலையேற்றமானது அதன் உலக முக்கியத்துவத்தில், நாம் எந்தக் குறிக்கோளை நோக்கி முன்னேறிச் செல்கிறோமோ அந்தக் குறிக்கோளைப் போலவே, பெரியதும் கௌரவம் மிக்கதுமான முயற்சியாக விளங்கும். ஆயினும், மாபெரும் கப்பல்கள் மகா சமுத்திரங்களை நீந்திக் கடந்தாக வேண்டியிருப்பதுபோல், மாபெரும் மக்களும் ஒரு மாபெரும் மார்க்கத்தையும் கடந்தே ஆகவேண்டும்.

மேலும், கம்யூனிஸ்டுகளின் அஞ்சா நெஞ்சமும் விவேகமும் மிக்க கட்சியினால் வழி நடத்தப்படும் நமது துணிவாற்றல் மிக்க மக்களை, எந்தப் பின்னடைவுகளோ அல்லது சிரமங்களோ அச்சுறுத்த முடியாது. எதிரிகளின் சூழ்ச்சிகளையெல்லாம் மீறி, அவநம்பிக்கை கொண்டவர்களின் அழுகுணி ஒப்பாரிகளுக்கெல்லாம் மாறாக, நாம் கம்யூனிசத்தை அடைந்தே தீருவோம். நாம் அதனை அடைந்தே தீருவோம்; ஏனெனில், உழைப்புச்

சாதனைகளிலும் சரி, ஆயுதம் தாங்கிப் போராடும் சாதனைகளிலும் சரி, மிகவும் மகத்தானவர்களான நமது மக்களின் ஒரு கோடிப் பேரைக் கொண்ட கம்யூனிஸ்டு முன்னணிப் படையே வருங்காலத்துக்குள் செல்லும் தடத்தை வகுத்துச் செல்கிறது.

எகிப்திய நாட்டுப் பிரமிடுகள், மற்றும் ஏனைய தொன்மை வாய்ந்த நினைவுச் சின்னங்கள் ஆகியவை எல்லாம், மனிதகுல வரலாற்றில் தம்மைப் பற்றிய ஒரு நினைவை விட்டுச் செல்ல, மக்கள் மேற்கொண்ட பரிதாபகரமான முயற்சிகளைத் தவிர வேறு என்ன? இந்த நினைவுச் சின்னங்கள் யாவும் காலத்தால் மறைந்து விடும்; ஏனெனில் அவை இடிந்து சிதைந்து மண்ணோடு மண்ணாகப் போகக் கூடியவையே. ஆனால் கம்யூனிசமோ உண்மையில் காலமும் இயற்கைச் சக்திகளும் ஊடுருவ முடியாத தோர் நினைவுச் சின்னமாக, லெனினது புனிதத் திருநாமத்தைப் போன்ற அமரத்துவத்தோடு என்றென்றும் சிரஞ்சீவியாக நின்று இலங்கும். கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியமைக்கும் நிர்மாணிகள் யாவருக்கும் கீர்த்தி உண்டாகட்டும்! என்றுமே தயக்கமோ மாய்மாலமோ இல்லாமல், தமது சொல்லாலும் செயலாலும், நமக்கு—நமது முன்னணிப் படைத் தலைமைக்கும் படை வரிசைகளுக்கும்—உதவி வரும் நமது அயல்நாட்டுச் சோதரர்களுக்கும், நண்பர்களுக்கும், தோழர்களுக்கும் கீர்த்தி உண்டாகட்டும்!

நமது கட்சியைப் பற்றி, கட்சி நண்பர்களையும் தோழர் களையும் பற்றி நான் நினைத்துப் பார்க்கும்போது, கோகோலின் அந்த மறக்கொணாத வாசகங்களே நினைவுக்கு வருகின்றன. தாராஸ் புல்பா *வில், துப்னேவுக்குச் செல்லும் வழிகளில் போர் தொடங்கும் தருணத்துக்கு முன்னால், கிழவர் தாராஸ், ஜபரோழ்யிக் கோஸாக்குகளிடம் பேசும் பேச்சின் வாசகம் உங்களுக்கு நினைவு வருகிறதா? அவர் அவர்களிடம் இவ்வாறு கூறுகிறார்: ''தோழமையைக் காட்டிலும் மிகவும் புனிதமான பந்தங்கள் வேறு எதுவும் கிடையாது! ஒரு தந்தை தமது குழந்தையை நேசிக்கிறார்; ஒரு தாய் தன் குழந்தையை நேசிக் கிறாள்; குழந்தை தன் தந்தையையும் தாயையும் நேசிக்கிறது. ஆனால், அதுவல்ல முக்கியம், சோதரர்களே! ஒரு மிருகமும் கூடத்தான் தனது குட்டிகளை நேசிக்கிறது. ஆனால் மனிதப் பிறவிகள் மட்டுமே ரத்த பந்தத்தினால் அல்லாமல், உணர்வின் பந்தத்தினால் உறவுபூண முடியும்.''

---

* இந்த நாவல் இதே தலைப்பில் தமிழில் வெளிவந்துள்ளது. வெளியீடு: ஸ்டார் பிரசுரம், தமிழாக்கம்: ரங்க துரைவேலன்.

உண்மையில் இவை அற்புதமான வாசகங்களேயாகும். கம்யூனிஸ்டுகளான நாம், மார்க்ஸ்—ஏங்கெல்ஸ்—லெனின் ஆகியோரின் கருத்தின்மூலம், கம்யூனிஸ்டுக் கட்சி எந்தவொரு கருத்துக்காக ஒரு வெல்லும் போராட்டத்தில் ஈடுபட்டுப் போராடி வருகிறதோ அந்தக் கருத்தின் மூலம் உறவு பூண்டிருக் கிறோம். நமக்கு நமது கட்சித் தோழமையைக் காட்டிலும் புனிதமான பந்தங்கள் வேறு எதுவும் கிடையாது. நாமும் நமது குழந்தைகளோ, நமது மனைவிமார்களோ நேசிக்கிறோம். ஆயினும் தாராஸ் புல்பா கூறுவதுபோல், ''அதுவல்ல முக்கியம், சோதரர்களே!'' இதனால் நமது குழந்தைகளுக்கும் நமது மனைவிமார்களுக்கும் நாம் எந்தத் தீங்கும் நினைத்துவிடவில்லை. வேறு வழியில்லை. அவர்களும் இந்த உண்மையை வெறுமனே ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆயினும் இங்குதான் நான் மாட்டிக் கொண்டு விடுகிறேன்....கட்சித் தோழமையோடு நமக்குள்ள பந்தங்கள் நமது திருமண பந்தங்களைக் காட்டிலும் நமக்கு மிகவும் புனிதமானவை என்ற கருத்தைக் கேட்டதும், நமது மனைவிமார்கள் உடனே கோபாவேசம் கொண்டு விடுவார்கள் என்பது சொல்லாமலே தெளிவாகும். ஒருவேளை நான் மனைவிமார்களைப் பற்றிக் குறிப்பிட்டுத்தான், இந்தச் சிக்கலில் மாட்டிக்கொண்டு விட்டேனே என்று கருதுகிறேன். உண்மையில், தாராஸ் புல்பா அவர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை. மேலும், கோகோலின் அமரத்துவம் வாய்ந்த படைப்பிலிருந்து நான் இந்த மேற்கோளைத் தேடியெடுத்துக் கூறியமைக்காக, இப்போது வீடு திரும்பியதும் பிடரியில் அடிவாங்கப் போகும் முதல் நபர் நானாகவே இருக்கக்கூடும். என்றாலும் நான் பயப்படவில்லை; ஏனெனில் நான் உங்களது உளமார்ந்த அனுதாபத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்; அதன் பலத்தினால் எனது வீட்டிலும் அடுப்பங்கரையிலும் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் படுமோசமான சோதனை களை நான் துணிந்து நின்று தாங்கிக் கொள்வேன். ஒன்றே ஒன்றை மட்டும் உங்களிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்: இன்றிரவு நீங்கள் செய்யும் பிரார்த்தனைகளின்போது, என்னைப் பற்றியும் குறிப்பிடத் தயவுசெய்து மறந்து விடாதீர்கள்!

ஆயினும் தோழமையுணர்ச்சிகளை நாமும், முதலாளித்துவ வாதிகளும் வெவ்வேறு விதமாகத்தான் புரிந்து கொண்டிருக் கிறோம். இது ''நாம் மேற்கொள்ளும் மார்க்கங்கள்'' என்ற ஓ' ஹென்றியின் கதையில் மிகத் தெளிவாக விளக்கப்பட் டுள்ளது. அந்தக் கதைச் சம்பவம் மிகவும் எளிதானதுதான்: மூன்று கொள்ளைக்காரர்கள் அமெரிக்க எக்ஸ்பிரஸ் ரயில்

ஒன்றின் மெயில் வண்டியைக் கொள்ளையடிக்கிறார்கள். அவர்களில் ஒருவன் ரயிலின் காவல்காரனுல் சுட்டுக் கொல்லப் பட்டு விடுகிறான். ஏனைய இருவரும் கொள்ளையடித்த செல்வத்தோடு குதிரைகளில் ஏறித் தப்பித்துச் சென்று விடு கின்றனர். அவர்கள் குதிரைகளின்மீது வேகமாகச் செல்லும் போது, அவற்றில் ஒன்று கீழே விழுந்து தனது காலை முறித்துக் கொள்கிறது. பொலிவார் என்ற குதிரை மட்டுமே மிஞ்சி நிற்கிறது; அது இரண்டு பேர்களைச் சுலபமாகச் சுமந்து செல்லக் கூடிய பலம் வாய்ந்த குதிரைதான். என்ருலும் ஷார்க் டாட்ஸன் என்ற பொருத்தமான பெயரைக் கொண்டுள்ள அதன் சொந்தக் காரன் வேறுவிதமாகத் தீர்மானம் செய்கிறான். அவன் மிகவும் அமைதியாக, பொலிவார் ''இரண்டு பேரைச் சுமந்து செல்ல முடியாது'' என்று கூறிவிட்டு, அதே அமைதியோடு தனது கைத் துப்பாக்கியை எடுத்துத் தனது நண்பனை நேருக்கு நேராகச் சுட்டு வீழ்த்துகிறான்.

இதன்பின் ஷார்க் டாட்ஸன் தான் திருடிக் கொண்டு வந்த பணத்தின் மூலம் ஒரு செல்வ வளமும் மதிப்பும் மிக்க முதலாளி யாக மாறி, தனது சொந்தப் பங்கு மார்க்கெட் அலுவலகம் ஒன்றைத் தொடங்குகிறான். அதில் பணத்தை முதலீடு செய்த மற்றொரு பணக்காரனை அவனது நண்பன் திவாலாகும் நிலைமைக்கு உள்ளானபோது, டாட்ஸன் தனது மற்றொரு நண்பனை ஒரு மூறை அமைதியாகச் சுட்டுக் கொன்றதைப் போலவே, ''பொலிவார் இரண்டுப் பேரைச் சுமந்து செல்ல முடியாது'' என்ற அதே வாசகத்தைத் திரும்பக் கூறியவண்ணம், இவனையும் அமைதியாக நாசமாக்கி விடுகிறான்.

இந்தக் காங்கிரசில் பேசிய பேச்சாளர்கள், கோஷ்டிவாதி களைப் பற்றி, கட்சித் தோழமையின் புனிதமான பந்தங்களை எள்ளி நகையாடியவர்களைப் பற்றி, எவ்வளவோ எடுத்துக் கூறினர். இங்கு இந்தக் காங்கிரசில் அவர்களது சூற்றத் தன்மை வாய்ந்த நடவடிக்கையைக் குறித்துப் புதிய விவரங்கள் பலவற்றை நாம் தெரிந்து கொண்டோம். இந்தக் கேள்வி இயல்பாகவே எழுகிறது: கட்சிக்கு இத்தனை பெரிய, பரிகாரம் காண முடியாத தீங்கை இழைத்த நபர்களோடு நாமும்தான் எவ்வளவு காலத்துக்குக் கட்சி அணிகளில் கைகோர்த்து நிற்க முடியும்? கட்சியின், நாட்டின் விசுவாசமிக்க புதல்வர்களில் பல்லாயிரக் கணக்கானோரின் சாவுக்கும், அவ்வாறு பலியான வர்களது குடும்பங்களின் உருக்குலைந்து போன வாழ்க்கைக்கும் காரணமான குற்ற உணர்வைத் தமது உள்ளத்தில் கொண்டுள்ள

இவர்களின் பால், நாம் அளவுக்கு மீறிய சகிப்புத் தன்மையோடு நடந்து கொள்ளவில்லையா?

காங்கிரஸ்தான் கட்சியின் தலையாய உறுப்பாகும். கோஷ்டி வாதிகளின் மீதும் ஒடுகாலிகளின் மீதும் அது தனது கடுமையான, எனினும் நியாயமான தீர்ப்பை வழங்கட்டும்.

மேலும், வெறுக்கத்தக்க இந்த நபர்களைப் பற்றிய இந்த மகிழ்ச்சியற்ற பேச்சை முடித்துக் கொள்வதற்காக, தாராஸ் புல்பா நட்புறவைப் பற்றிப் பேசிய மற்றொரு பேச்சின் பகுதி யொன்றை முடிவுரையாக மேற்கோள் காட்ட என்னை அனுமதி யுங்கள்.

கிழவர் தாராஸும் தமது காலத்தில் கோஷ்டி வாதிகளை எதிர்த்துப் போராடவே செய்தார்; அப்போது அவர்கள் கொள்கை மாறிகள் என்றே குறிப்பிடப்பட்டனர். அவர் கூறியது இதுதான்: ''ஆயினும் துரோகிகளில் மிக மிக இழிந்தவனும் கூட, அவன் எவ்வளவுதான் சீர்கெட்டுப் போயிருந்தாலும் கூட, அவன் சாத்தானையே வணங்கும் அளவுக்குச் சேற்றில் விழுந்து புரள்பவனாக இருந்தாலும் கூட, சோதரர்களே, அவனிடமும் ரஷ்ய உணர்ச்சி என்பது ஓர் அணுவளவேனும் இருக்கவே செய்யும். இந்த உணர்ச்சி அவனை ஒருநாள் விழித் தெழச் செய்யும்; அப்போது அந்தக் கடைகெட்ட பிறவியான அவன் தரை மீது விழுந்து கிடப்பான்; தனது தலையைத் தனது கைகளால் இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டு, எந்தவிதமான சித்திரவதையை அனுபவித்தாவது தனது மான ஈனமற்ற செயல் களுக்குப் பரிகாரம் காணத் தயாராகி, தனது இழிந்த வாழ்க் கையை வாய் விட்டுக் கதறிச் சபித்துத் தீர்ப்பான்.''

ஆயினும் இது ஜபோரோழ்யிக் கோஸாக்குகளின் மத்தியில் இருந்தக் கொள்கை மாறிகளைப் பற்றிக் கூறப்பட்ட வாசகம் தான் என்பது உண்மையே. இன்றைய ஒடுகாலிகளுக்குத் ''தமது இழிந்த வாழ்க்கையை வாய்விட்டுக் கதறிச் சபித்துத் தீர்ப்ப''தற்கான துணிவு இருக்குமா, ''எந்தவிதமான சித்திர வதையை அனுபவித்தாவது தமது மான ஈனமற்ற செயல்களுக் குப் பரிகாரம் காணும்'' உறுதிப்பாடு அவர்களுக்கு இருக்குமா என்பது வாதத்துக்குரிய கேள்விதான். அவர்களுக்கு அத்தகைய துணிவும் உறுதிப்பாடும் இருக்கும் என்று நம்புவதே கடினமாக இருக்கிறது: அவர்கள் அத்தகைய நபர்கள் அல்ல. அவர்கள் ஒடுகாலிகள்தான்; என்றாலும் அவர்கள் வேறு ரகமான ஒடு காலிகளே. எவ்வாறாயினும் காலம்தான் இதனைப் புலப்படுத்தும்.

முதலாளித்துவப் பத்திரிகைகள் எழுப்பக் கூடிய கூக்குரலை

நாம் கற்பனை செய்து பார்க்க முடியும்: இந்தக் கம்யூனிஸ்டு எழுத்தாளர்கள் உண்மையில் எப்படியிருக்கிறார்கள் என்பதைப் பாருங்களேன் என்று அவர்கள் கூறுவார்கள். தமது தொழிலின் உணர்வு கோருவதைப் போல் மனிதத் தன்மையைப் புலப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்கள் பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்று கோருகிறார்களே!—எப்போதும் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் அந்த முதலாளித்துவப் பேனா-ஓட்டிகள் நிச்சயமாக இப்படித்தான் எதையாவது எழுதித் தீர்ப்பார்கள். கூலிக்கு மாரடிக்கும் இந்தக் கிறுக்கல் எழுத்தாளர்களுக்கான பதிலும் என்னிடம் தயாராக இருக்கிறது: "மரியாதையே இல்லாத கனவான்களே, வரிந்து கட்டிக்கொண்டு வராதீர்கள்; இங்கு யாரும் பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்று சதி செய்யவில்லை; சூழ்ச்சிகள் புரையோடி நச்சுப்பட்டுப்போன கோஷ்டிவாதிகளின் ரத்தத்தை எவரும் விரும்பவில்லை; மாறாக, மக்களுக்கும் கட்சிக்கும் எதிராகத் தாம் இழைத்துள்ள குற்றங்களுக்கு அவர்களே பதில் சொல்ல வேண்டும்; பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். அதுதான் உலக நியதியாகும்."

தோழமையைப் போலவே, மனிதத் தன்மையும், நாமும், முதலாளித்துவ வாதிகளும் அல்லது அவர்களது உலகக் கண்ணோட்டத்தைப் பகிர்ந்துக் கொள்ளும் நபர்களும், வெவ் வேறு விதமாகப் புரிந்து கொள்ளும் மற்றொரு கருத்தாகும். பல் வைத்தியரைப் போல் நாமும் ஒரு வலிமையும் ஆரோக்கியமும் மிக்க உடம்புக்குத் தொல்லை கொடுத்து வரும் சொத்தைப் பல்லைப் பிடுங்கி எடுக்கிறோம்; இதன் மூலம் மனிதத் தன்மை மிக்க ஒரு செயலைப் புரிகிறோம். ஒப்பு நோக்குக்காக, இங்கு மனிதத் தன்மை பற்றிய வேறுபட்ட கருத்துக்கு ஓர் உதாரணம் கூறுகிறேன். நான் இத்தாலிக்குச் சென்றிருந்த போது, ரோம் நகரின் புறநகர்ப் பகுதிகளில் ஒரு சிங்காரமான மாளிகை என் கவனத்தைக் கவர்ந்தது. அது பூனைகளுக்கான ஆரோக்கிய இல்லம் என்று என்னிடம் கூறினர். பூனைகள் என்றால், அந்த நகரின் சேரிகளில் வசிக்கும் பசிக் கொடுமைக்கும் போஷாக்குச் சத்துக் குறைவுக்கும் இரையாகியுள்ள பிள்ளைகள்—குறைந்த ஊதியம் பெற்று வரும் அல்லது வேலையில்லாது திண்டாடி வரும் இத்தாலி நாட்டுத் தொழிலாளர்களின் குழந்தைகள்—பிடித்து விளையாடுகின்ற எலும்பும் தோலுமான சொறி பிடித்த பூனைகள் அல்ல; மாறாக, இத்தாலிய நாட்டு கோடீசுவரர்களும் கோடீசுவரிகளும் சொந்தமாக வைத்து வளர்த்து வரும் வழுவழுப்பான செல்லப் பிராணிகள்தான் அவை.

சோம்பேறித்தனத்தாலும், உண்டு கொழுத்துப் போன

தாலும் நோய்வாய்ப்பட்டுள்ள இந்தப் பூனைகளுக்கு அனுபவமிக்க டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்; தகுதிகள் மிக்க ஆஸ்பத்திரித் தாதிகள் அவற்றைக் குளிப்பாட்டுகின்றனர்; பிரஷ்ஷைக் கொண்டு வாளிப்பாகத் துடைத்து விடுகின்றனர்; அவற்றின் மீது செண்ட் தைலத்தையும் தெளிக்கின்றனர்; மேலும், கவனமிக்க வார்டு நர்சுகள் இந்த ஊதிப் பெருத்த நோயாளிகளுக்குச் சகலவிதமான இன்சுவைத் தின்பண்டங்களையும் உணவாகக் கொடுக்கின்றனர்; இவற்றைக் காற்றுட வெளியே உலாவி வரக் கூட்டிச் செல்கின்றனர்; அவற்றைச் சகல விதத்திலும் செல்லமாகப் பேணி வளர்த்து வருகின்றனர். அதே சமயம், இந்த மாளிகைக்குக் கூப்பிடு தூரத்தில், பசியால் வாடும் குழந்தைகள், தமது குழிந்துபோன கண்களில் குழந்தைத் தன்மையற்ற நிராதரவான உணர்ச்சியோடு நம்மை வெறித்துப் பார்த்தவாறே, குப்பை கூளங்களைத் தோண்டி ஏதாவது உணவு கிடைக்காதா என்று தவித்துக் கொண்டிருக்கின்றனர். இதையும் மனிதத்தன்மை என்று கூறுவது? நமது பாஷையில், இது முற்றிலும் சீர்கெட்டுப்போன ஆத்மாக்களின் நீசத்தனம் என்றே கூறப்படுகிறது. மேலும், முதலாளித்துவவாதிகள் ''மனிதத் தன்மை'' என்ற இந்த உன்னதமான சொல்லைத் தமது அகராதியிலிருந்தே நீக்கி வீசி எறிந்து விடட்டும்; ஏனெனில் மனித வேடம் தரித்த மிருகங்கள் பயன்படுத்துவதற்கான சொல் அல்ல அது.

தொழில் முறை எழுத்தாளனை நான் இலக்கியத்தைப் பற்றிப் பேசத்தான் வேண்டும்; என்றாலும், உங்கள் அனைவரையும் போல் நான் முதலில் ஒரு கம்யூனிஸ்டாகவே இருக்கிறேன்; எனவேதான், பொதுவான கட்சி லட்சியத்தில் இலக்கியமும் ஒரு பகுதியேயாகும் என்பதை நான் ஒருகணம்கூட மறந்துவிடவில்லை என்றபோதிலும், நம்மை மிகவும் அலைக்கழித்துக் கொண்டிருக்கும் விஷயத்தைப்பற்றியே முதலில் பேசத் தொடங்கினேன். இதனை மேலும் விவரித்துக் கொண்டிராமல், இந்த நீண்ட முன்னுரைக்காக என்னை மன்னித்து விடுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இனி நான் இலக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசுகிறேன்....

மிகப் பல புத்தகங்கள் வெளிவரத்தான் செய்கின்றன; என்றாலும் சொல்லப்போனால், அவை வெகுவிரைவிலேயே சந்தடியின்றி அடங்கிப்போய் விடுகின்றன. காரணம்? காரணம் என்ன என்பதை நாம் அனைவரும் அறிவோம்: படைப்பின் மட்டமான தரத்துக்கும், வாசகர்களின் மிகவுயர்ந்த எதிர்பார்ப்புக்களுக்கும் இடையே நிலவிவரும் ஏற்றத்தாழ்வுதான்

காரணமாகும். எனினும் மேலோட்டமாகப் பார்க்கும் முதற் பார்வையில் தோன்றக்கூடிய அளவுக்கு, நிலைமை ஒன்றும் அத்தனை ஆபத்தானதாக இல்லை. மிகவும் வரவேற்கத்தக்க ஒரு நிகழ்ச்சிப் போக்கே நிகழ்ந்து வருகிறது; இது வாசகர்களுக்கு அவ்வளவாகப் புலனுகவில்லை; சஞ்சிகைகளில் தமது கதைகளை ஏற்கெனவே வெளியிட்டுள்ள இளம் எழுத்தாளர்களும், உண்மையிலேயே திறமை படைத்த எழுத்தாளர்களுமான ஏராள மான பேர், பக்குவம் அடைந்த, மிகவும் நம்பிக்கையூட்டக் கூடிய திறமைசாலிகளாக உருப்பெற்று வருகின்றனர். ரஷ்ய இலக்கியத்தில் மட்டுமல்ல, சோவியத் யூனியனது தேசிய இலக்கியங்கள் அனைத்தின் விஷயத்திலுமே இது நிகழ்ந்து வருகிறது. அவர்களது பெயர்களை வாசகர்கள் நன்கறிவார் களாதலால், நான் அவர்களை ஒன்றும் பட்டியல் போட்டுக் கூறப் போவதில்லை. நான் கூற விரும்புவதெல்லாம் இதுதான்: அவர்கள் வருங்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமலும், அவர்கள் தம் மனத்தில் நெடுங்காலமாகவே கொண்டு வந்துள்ள, அதற் காகவே தாம் திறமையோடு தேர்ந்தெடுத்த விஷயங்களைச் சேகரித்து வந்துள்ள, மிகப் பரந்த கதைத் திட்டங்களிலிருந்து அவர்களைப் பிரித்திருக்கச் செய்யாத விதத்திலும், அவர்கள் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெறும் விதத்தில் அவர்களுக்குச் சகல விதத்திலும் உதவிவர வேண்டும் என்பதுதான்.

தலைநகரங்களில் வசித்து வரும் நூலாசிரியர்களுக்கு மட்டு மல்லாமல், நாடெங்கணும் மிகப் பெரிய எண்ணிக்கையில் பரந்து சிதறிக் கிடக்கும் நாட்டுப்புற எழுத்தாளர்களுக்கும், நாம் நமது உதவியை வழங்கினுல், அத்தகைய எழுத்தாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு அதிகரிக்கும். இவர்கள் அனைவரும் தமது சொந்த அனுபவத்திலிருந்து வாழ்க்கையை நன்கு அறிந்துள்ளனர்; அவர்கள் எவ்வளவோ பயணம் செய்து, எவ்வளவோ விஷயங்களைக் கண்டறிந்துள்ளனர்; என்ருலும், பிரதானமான விஷயம் என்னவென்ருல், துர்ப்பாக்கியவசமாக, அவர்கள் பெரிய—அளவில் மட்டும் பெரியவை என்று கூறவில்லை— நாவல்களை எழுதும் வேலையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முடியாத, திறமை வாய்ந்த எழுத்தாளர்களாக உள்ளனர் என்பதுதான். நமது வெற்றிகளுக்கு நாம் நம்பியிருக்க வேண்டிய நபர்கள் அவர்கள்தான். எவ்வாருயினும், அவர்களிற் பெரும்பாலோர் நமக்கு ஏமாற்றமளித்துவிட மாட்டார்கள்— இது ஒன்றும் மிகவும் சின்ன விஷயமல்ல.

அண்மைக் காலத்தில் சில நல்ல புத்தகங்கள் வெளியிடப்

பட்டுள்ளன; என்றாலும் மனவேதனை தரத்தக்க விதத்தில் அவை மிகமிகக் குறைவாகவே உள்ளன. நாம் மேலும் அதிகமாகப் படைத்தளித்திருக்க முடியும். இந்த எண்ணமானது பிரதிநிதித் தோழர்களும் வாசகர்களுமான உங்களுக்கு மன வருத்தம் தருவதைக் காட்டிலும், எங்களுக்கே மிகவும் மனவருத்தம் தருவதாக உள்ளது.

நமது இலக்கியம் ஏன் சரிசமமாகக் கைகோர்த்து முன்னேறி வரவில்லை என்பதற்கும், ஏன் சுமாரான புத்தகங்கள் தோன்றி வருகின்றன என்பதற்குமான பிரதானமான காரணங்களில் ஒன்று, எதார்த்த வாழ்க்கையிலிருந்து எழுத்தாளர்கள் அன்னிய மாகிப் போயிருப்பதும்—இது எழுத்தாளர்கள் வாழும் சூழ்நிலையில் நிலைநாட்டப்பட்டுள்ள ஒரு காட்சியுண்மையாகும்—வெகு வேக மாக இயங்கிச் செல்லும் நமது வாழ்க்கையோடும் அதன் தொடர்ச்சியாக மாறிவரும் தன்மைகளோடும் அவர்கள் கொண்டுள்ள மேம்போக்கான பரிச்சயமுமேயாகும் என்றே நான் இன்னும் கருதுகிறேன்....

எனது அபிப்பிராயத்தின்படி, கூட்டுப் பண்ணை அல்லது அரசாங்கப் பண்ணையைச் சேர்ந்த மக்களைப் பற்றி எழுதும் ஒரு நூலாசிரியர், குறைந்த பட்சம் ஒரு விவசாய-விஞ்ஞானியின் அளவிலாவது, விவசாயத் துறையைப் பற்றி ஏதோ கொஞ்சம் விஷய ஞானத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஓர் இரும்பு-உருக்குத் தொழிற்சாலையைப் பற்றி எழுதுபவர்கள், அதன் தொழிலாளர்களையும், இஞ்சினீயர்களையும், தொழில் நுட்ப நிபுணர்களையும் பற்றி அறிந்திருக்க வேண்டும்; மிகவும் தகுதி மிக்க தொழிலாளி ஒருவர் உற்பத்தியைப் பற்றி நல்ல விஷய ஞானத்தைத் தெரிந்து கொண்டிருப்பது போல், அவர்களும் அந்த அளவுக்கு முற்றிலும் விஷயஞானம் பெற்றிருக்க வேண்டும். நமது ராணுவத்தைப் பற்றி எழுதுவதற்காகத் தமது பேனாவை அர்ப்பணித்துள்ள எழுத்தாளரும், ராணுவ விஷயங் களில் குப்ரினும், லெவ் டால்ஸ்டாயும் எவ்வாறு நிபுணர்களாக இருந்தார்களோ, அதற்கு எவ்விதத்திலும் குறையாத அளவுக்கு அந்த விஷயங்களில் நிச்சயமாக அவர் ஒரு நிபுணராக இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால், அவர் வெறுமனே கதையளந்து கொண்டுதான் இருப்பார்; அதனால் அவரது படைப்பும் மலிவான சரக்காகவே இருந்து விடும். இதுதான் அநேகமாக மிகவும் அடிக்கடி நிகழ்ந்து வருகிறது. இப்போதோ, காதல் கதை எல்லோரும் தாராளமாக எழுதக்கூடிய ஒன்றாக இருந்து வருகிறது—எந்தவிதமான பிரத்தியேக விஷய ஞானத்தையும் கோராத ஒரு விஷயம் இது...

''நிரந்தரமான மதிப்புக்களை''ப் படைத்தளித்து வரும் இளம் நாட்டுப்புறக் கவிஞர்கள் மாஸ்கோவுக்கோ, அல்லது பிற பெரிய நகரங்கள் எதற்குமோ வருவதற்குத் தடையேதும் இல்லை. கூட்டத்தைச் சமாளித்து தடுத்து நிறுத்த, தவிர்க்கொணுத விதத்தில் குதிரைப் படை போலீஸ் ஒருபுறத்தில் வந்து நிற்கவும், கலாரசிகர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் இளம் பெண்-விசிறிகள் முகஸ்துதியான தமது பாராட்டை வெறிபிடித்தாற்போல் கூச்சலிட்டு வெளியிடவும், மாஸ்கோவில் தமது இலக்கிய மாலை நிகழ்ச்சிகளில், நமது நாகரிகமான பள்ளியறைக் கவிஞர்கள் வெற்றிகரமாகக்காட்சியளிப்பதைப்பற்றி அவர்களும் கேள்விப்படுகிறார்கள். மிகமிக இறுக்கமாகக் குறுகிய கால்சராய்களையும், அளவுக்குமீறிய விதத்தில் பெரிதாகவுள்ள ஸ்வெட்டர்களையும் அணிந்திருக்கும் இந்த யுவதிகளின் வெறித்தனமான பாராட்டுக்குத் தாமும் உள்ளாக வேண்டும் என்று நாட்டுப்புற இளம் கவிஞர்களும் விரும்புகின்றனர். அவர்களும் புகழ் என்னும் இனிய கனியின் சுவையை ருசித்துப் பார்க்க விரும்புகின்றனர். எனவே மெக்காவுக்குப் புனித யாத்திரையை மேற்கொள்ளும் உண்மையான மார்க்க விசுவாசிகளின் பேரார்வத்தோடு, அவர்களும் மாஸ்கோவுக்கு வெள்ளம்போல் வந்து சேர்கிறார்கள். எந்தவிதமான புத்திபோதனைகளோ அல்லது தடுப்புக் காவல்களோ அவர்களைத் தடுத்து நிறுத்தி விடாது. அவர்கள் யுக்தியாலோ குயுக்தியாலோ எப்படியேனும் மாஸ்கோவுக்கு வந்து சேர்வதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

உதாரணமாக ஃபெதினுக்கோ, லியாஞுவுக்கோ, மாக்சிம் ரைல்ஸ்கிக்கோ அல்லது எனக்கோ, வீதியில் ஓர் இளம் பெண் எங்களைச் சுட்டிக் காட்டி, தன்னுடுள்ள யாரோ ஒருவரிடம், ''அதோ பாருங்கள்; பாருங்களேன்! அவர்தான் இன்னார்!'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினால், எங்களுக்கு மனத்தில் என்ன உணர்ச்சி ஏற்படும்? எங்களுக்கு இதிலெல்லாம் இனியும் எந்த உத்ஸாகமும் ஏற்படப் போவதில்லை. மாறாக, இத்தனை மட்டு மரியாதையின்றி எங்களது பெயர் குறிப்பிடப்படுவதைக் கேட்கும்போது, நாங்கள் மனம் புழுங்கி உடம்பை நெளித்துக் கொள்ளத்தான் செய்வோம். ஆனால் ஓர் இளம் எழுத்தாளருக்கோ இது மகிழ்ச்சியூட்டும் முகஸ்துதியாகவே ஒலிக்கும்; இளம் எழுத்தாளர்கள் சிலர் இதனைக் கேட்டு உணர்ச்சிப் பரவசத்தால் அப்படியே முகம் சிவந்தும் போய் விடுவார்கள். நாம் இளைஞர்களுக்கு இளக்காரம் காட்ட வேண்டிய அவசியமில்லை; என்றாலும் நாம் அவர்களைப் புரிந்து கொள்ள முயலத்தான் வேண்டும்.

முற்காலத்தில் விவசாயிகள் விதைப்புக்கு முன்னால் விதைத் தானியங்களைச் சலித்து எடுக்கும்போது, அவற்றைக் கயிறுகளில் கட்டித் தொங்கவிடப்பட்ட ஒரு பெரிய சல்லடையின் வழியாகச் சலித்து எடுப்பதை உங்களிற் பலர் பார்த்திருக்கக் கூடும். இதனால் தூசியும் பதரும் காற்றோடு பறந்து போய்விடும்; நல்ல கனமான விதைகள் மட்டுமே சல்லடையில் தங்கி நிற்கும் இலக்கியத்திலும் இப்படித்தான்: பதர்கள் காற்றோடு பறந்து போய்விடும்; விதைகள் மட்டுமே தங்கி நிற்கும். இந்தச் சல்லடையை வாழ்க்கையேதான் சுழற்றி வருகிறது. சுத்தப் படுத்தும் அத்தியாவசியமான நிகழ்ச்சிப் போக்கு தானே நிகழ்ந்து தீரும்.

இளம் எழுத்தாளர்கள் விஷயத்தில் நிலைமைகள் இவ்வாறு தான் உள்ளன. மூத்த எழுத்தாளர்கள் விஷயத்திலும் நிலைமை ஒன்றும் மேம்பட்டதாக இருந்து விடவில்லை. நகரத்தில் வாழும் மனிதரான ஒருவரை, அவருக்கு மிக மிகப் பயங்கரமாகத் தோற்றும் நாட்டுப்புறத்தில், அவரது முதிய வயதில் சென்று குடியேறுமாறு தூண்டுவதற்கு எப்படி முடியும்? மேலும், அவர் அங்கு சென்றாலும், அவர் யாருக்குத்தான் அங்கு நல்ல விதத்தில் பயன்பட முடியும்? எழுத்தாளர்கள் தாம் எந்த மக்களைப்பற்றி எழுதுகிறார்களோ, அந்த மக்களுக்கு மிகவும் நெருக்கமாகச் சென்று அவர்களை வாழச் செய்ய வேண்டும் என்ற நம்பிக் கையை, என்னைப் பொறுத்தவரையில், நான் நெடு நாட்களுக்கு முன்பே கைவிட்டுவிட்டேன். நம்பிக்கைக்கே இடமில்லாத விவகாரம் அது.

எழுத்தாளர்களான நாமும் கலைத்துறையில் ஈடுபட்டுள்ள நபர்களும் அன்பும் விவேகமும் மிக்க ஆலோசகர்களாக மக்களுக்குத் தொடர்ந்து பணியாற்றி வருவோம் என்ற நம்பிக்கை இங்கு இந்தக் காங்கிரசில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளாத ஒரு நபர் ஒரு நல்ல ஆலோசகராக விளங்குவது அரிதினும் அரிதாகும். தமது ஆலோசனையால் அவர் நம்மைச் சிக்கச் செய்துவிடும் குழப்பத்தி லிருந்து, நாம் என்றுமே மீண்டு வர முடியாது...உண்மையில், ஓர் எழுத்தாளர்—கடைசியாக முப்பது அல்லது நாற்பது ஆண்டு களுக்கு முன்பே கிராமத்தைக் கண்ணால் பார்த்திருந்த ஒரு நபர் அதனோடு முற்றிலும் தொடர்பற்றுப் போய்விட்ட அந்த நபர்,— சிலர் அத்தகைய தொடர்பைஎன்றுமே கொண்டிருந்ததும் இல்லை என்பதும் உண்மை-அவர் எப்படி தனது தொழிலை அத்துபடியாக அறிந்துள்ள ஓர் அனுபவமிக்க கூட்டுப் பண்ணைத் தலைவருக்கோ அல்லது அரசாங்கப் பண்ணையின் டைரக்டருக்கோ, உற்பத்தி

சம்பந்தப்பட்ட விஷயங்களில் உருப்படியான யோசனை எதையும் கூற முடியும்? தார்மிகப் பிரச்சினைகள் என்று வந்தாலும் கூட, தன்னடக்கம் மிக்கவர்களாகத் தோற்றும் இந்தப் பண்ணை மக்களில் சிலர், எழுத்தாளர்கள் சிலரையும்கூட மிகவும் எளிதாக முறியடித்து வென்று விடுவார்கள். வசந்தகாலப் பயிருக்கும் மாரிக்காலப் பயிருக்கும் வித்தியாசம் தெரியாத, ஓட்ஸ் தானியத்துக்கும் பார்லி அரிசிக்கும் வேற்றுமையைக் கண்டு கூறத் தெரியாத ஒரு நூலாசிரியர், அழையாத ஆலோசகரின் பாத்திரத்தைத் தாம் ஏற்றுக் கொள்ள விருப்பப்படாமல் இருப்பதே நல்லது; மேலும், விவேகசூன்யத்தின் விளைவாக, அவர் ஆலோசனை கூறத்தான் வேண்டும் என்று தமது புத்தியில் தீர்மானிப்பாரானால், நிலைமைகள் சுமுகமாக இருக்கும்போதே, அவர் தலை பிழைத்தால் போதும் என்று விரைவில் தப்பித்து ஓடி வந்து விடுவதே மேலாகும்.

எனது பேச்சு சற்று மன வருத்தம் தருவதாக உள்ளது என்பதை நானே உணர்கிறேன்; என்றாலும், நேர்மையாகச் சொன்னால், அவ்வாறு பேசாதிருக்க என்னால் முடியவில்லை! பயங்கரமான பேராசை என்னைப் பிடுங்கித் தின்கிறது; நான் நல்ல புத்தகங்களை அதிகமாக விரும்புகிறேன்; ஆனால் அவையோ மிக மிகக் குறைவாகவே உள்ளன. இது என்மீதும் பிறர்மீதும் என்னைக்கோபம் கொள்ளச் செய்கிறது. எனினும் இதனால் என்ன பயன்? இந்தப் பிரச்சினைகளைக் கூட்டாகவும், அத்தனை அவசரப் படாமலும்தான் தீர்த்தாக வேண்டும்.

இது போன்ற விஷயத்தில் அவசரம் காட்டுவதால் பயனேதும் விளைந்துவிடப் போவதில்லை. இது மற்றொரு தொல்லை. மேலும் தொல்லைகள் தனியாக வருவதில்லை என்பதையும் நீங்கள் அறிவீர்கள். உக்ரேன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டிச் செயலாளர் தோழர் பொத்கோர்னி தமது மிகவும் நல்ல சுவை மிக்க உரையின்போது, நான் மிகவும் நல்ல வாய்ப்பு என்று நினைத்திருந்த ஒரு விஷயத்தை கூறத் தவறி விட்டார்: கீவில் மட்டும்தான் உக்ரேனிய எழுத்தாளர்கள் இந்தக் காங்கிரசுக்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதல்ல என்பதை அவர் ஏன் சொல்லியிருக்கக் கூடாது? அவர் இவ்வாறே கூறியிருக்கலாம்: அன்பார்ந்த எழுத்தாளத் தோழர்களான நீங்கள் உக்ரேனின் பிராந்தியக் கேந்திரங்களிலிருந்து சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் இந்தக் காங்கிரசுக்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறீர்கள் என்பதைக் காணும்போது, நீங்கள் ஏன் அங்கேயே உங்கள் வீட்டை அமைத்துக் கொள்ளக் கூடாது, அங்கேயே நல்ல ஆரோக்கியத்தோடும் மகிழ்ச்சியோடும் வசித்து வந்து, உங்களுக்கு வாக்களித்த அந்த வட்டாரத்து

உழைக்கும் மக்களைப்பற்றி எழுதக் கூடாது என்று எனக்குக் கேட்கத் தோன்றுகிறது. போல்தாவா பிராந்தியத்திலிருந்து நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் போல்தாவா வாசிகளைப் பற்றி எழுதுங்கள்; சொர்னிகோவ் பிராந்தியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், சொர்னிகோவ் வாசிகளைப் பற்றி எழுதுங்கள்! ஆனால் அந்தோ, அவர் அவ்வாறு கூறவில்லை. மேலும் இப்போதோ அந்த எழுத்தாளர்கள் மீண்டும் தலைநகரான கீவ் நகருக்கே திரும்பவும் போய்ச் சேர்வார்கள்; நிலைமைகள் யாவும் முன்னிருந்ததைப் போலவே தொடர்ந்து இருந்து வரும். எழுத்தாளர்கள் மிகவும் மலிந்திருக்கும் ஏனைய பிராந்தியங்களின் செயலாளர்களிடமும் இதே கோரிக்கையை விடுக்க முடியும். அந்தச் செயலாளர்கள் அந்த எழுத்தாளர்களோடு பேசி அவர்களைச் சரிக்கட்டி, அவர்களைத் தமது அத்தனை அமைதியில்லாத நாட்டுப்புற நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அழைத்துச் சென்று, அங்கு அவர்களைத் தூங்கி வழியாத ஒரு போர்க்குணம் மிக்க வாழ்க்கையை வாழச் செய்திருக்க வேண்டும்; அவ்வாறு செய்தால், அது அவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய ஆழமான விஷய ஞானத்தை வழங்கி, உண்மையான படைப்பாக்க முயற்சியில் ஈடுபடுமாறு அவர்களுக்கு உத்வேகம் ஊட்டும். இப்போதும்கூட இந்த விஷயத்துக்குப் பரிகாரம் காண முடியும் என்றே நான் கருதுகிறேன்.

நமது இலக்கியம் முன்னணியில் நிற்கும் ஓர் இலக்கியமாகும்; அதன் சித்தாந்த உள்ளடக்கம் மட்டுமே இதற்குக் காரணம் அல்ல. வெளி நாடுகளிலுள்ள பதிப்பகத்தாரோடு நமக்குள்ள தொடர்புகள் விரிவடைந்து வருகின்றன. நமது புத்தகங்கள் எங்கணும் வெளியிடப்படுகின்றன. அயல் நாடுகளில் நமது வாழ்க்கையை, நமது இன்றைய எதார்த்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மிகவும் ஆழமாக இருப்பதால், வடிவத்தைக் காட்டிலும் உள்ளடக்க விஷயம்தான் அந்த வாசகர்களைப் பெரிதும் கவர்கின்றது.

ஆயினும், சோவியத் எழுத்தாளர்களான நாம் நமது சொந்த விமர்சகர்களுக்கு எதிராகக் கொண்டுள்ள குற்றச்சாட்டுக்களைக் காட்டிலும், அயல்நாட்டு விமர்சகர்களுக்கு எதிராகவே அதிகமான குற்றச்சாட்டுக்களைக் கொண்டிருக்கிறோம். நமது விமர்சகர்களிற் பெரும்பாலோர் வாழ்க்கையைப் பற்றிய விஷய ஞானத்தையே பெற்றிருக்கவில்லை என்றால், அயல்நாட்டு விமர்சகர்களோ—விஷய ஞானம் இருக்கட்டும்—அதனைப் பற்றிய எந்தவிதமான ஊகமான கருத்தையும்கூடக் கொண்டிருக்கவில்லை. பல சமயங்களில் அவர்கள் நம்மைப் பற்றிக் கூறும் குற்றச் சாட்டுக்கள் முற்றிலும் விவேகமற்றவை

யாகவே உள்ளன. நாம் நமது எழுத்துக்களில் பாரபட்சம் காட்டுவதாக அவர்கள் கூறுகிறார்கள். பின் அவர்கள் நாம் எப்படியிருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள்?

உதாரணமாக, நான் ஒரு சோவியத் போர் வீரரைப்பற்றி, எனக்கு எல்லையற்ற விதத்தில் அருமையும் பெருமையும் மிக்க ஒரு மனிதரைப்பற்றி, எழுதுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரைப்பற்றி நான் எப்படி மோசமாகக் கூற முடியும்? அவர் அடிமுதல் முடிவரையில், அவர் அணிந்துள்ள பக்கவாட்டுத் தொப்பியிலிருந்து காலில் அணிந்துள்ள பட்டித் துணிகள் வரையிலும், முழுக்க முழுக்க என்னுடையவர்; அவரது முகத்தில் விழுந்துள்ள கரும்புள்ளிகள் அல்லது அவரது குணம்சத்தில் உள்ள சிற்சில குறைபாடுகள் போன்ற விஷயங்களை நான் கவனிக்க முயல்வதில்லை. மேலும், இத்தகைய விஷயங்களை நான் கவனித்தாலும், அந்த விசித்திரமான சின்னக் கரும் புள்ளிகளோடும், அவரது குணம்சத்தில் தென்படும் அற்பமான குறைபாடுகளோடும் சேர்த்தே, வாசகர்கள் அவரை நேசிக்க முன்வரக்கூடிய விதத்திலேயே நான் அவரைப்பற்றி எழுத முயல்கிறேன்.

இங்கு நான் எனக்கு முன்னால் காண்கின்ற நபர்களில் மிகப்பெரும்பாலோர், வாழ்க்கை அனுபவத்தையும் பிற அனுபவங்களையும் ஏராளமாகப் பெற்றுள்ளவர்கள். சில சமயங்களில் ஒரு மனிதனுக்கு ஒரு சாதாரணப் பெண்ணின் முகத்தில் தென்படும் புள்ளிகள், உலகிலுள்ள மாசு மருவேயற்ற, பட்டுப் போல் மிருதுவான, அழகிய முகங்கள் அனைத்தையும் காட்டிலும் மிகவும் மதிப்பிடற்கரியவையாக மாறிவிடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் அவர் காதலிக்கும் பெண்ணின் கண்களின் ஓரங்களிலிருந்து இனம் காட்டும் கலைத்துப்போன சுருக்கங்கள், ஒரு சரசமாடும் இளம் யுவதியின் பளிச்சிடும் கவலையற்ற புன்னகையைக் காட்டிலும் அவருக்கு மிகவும் அழகானவையாகத் தோன்றும். மேலும் சில சமயங்களில், நீங்கள் மீண்டும் ஒரு முறை என்றுமே திரும்பிப் பார்க்கக்கூட விரும்பாத ஒரு பெண்ணுக்கு, மிக மிக அழகான ஆடவன் ஒருவன் காதலனாகக் கிட்டியிருப்பதைக் கண்டு, நீங்கள் அப்படியே திக்பிரமை பிடித்துப் போவதும் உண்டு! வாழ்க்கையில் எல்லாவிதமான விஷயங்களும்தான் நிகழ்கின்றன; இதனை நான் நன்கறிவதைப் போல் நீங்களும் அறிவீர்கள். எனவே ஓர் எழுத்தாளர்—அவர் ஓர் ''உணர்ச்சியற்ற மரக்கட்டை''யாக இல்லாதிருந்தால்—தாம் நேசிக்கும் நபர்களைப் பற்றி உணர்ச்சியற்ற அலட்சியத் தோடு எவ்வாறு எழுத முடியும்?

''எழுத உட்காரும்போது நீ உணர்ச்சியற்று இறுகிப்போய் விடவேண்டும்'' என்று சொன்னதாகச் செகாவுக்கு ஒரு பேருண்டு. நான் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு கலைஞன் ஒன்றைப் படைக்கும்போது அவன் உணர்ச்சியற்றவனாக இருக்க முடியாது! உங்களுக்கு மீனின் ரத்தமும், அசைந்தே கொடுக்க முடியாத அளவுக்கு அத்தனை தூரம் கொழுப்பேறிப்போன இதயமும் இருந்தால், நீங்கள் ஓர் உண்மையான இலக்கியப் படைப்பையே உருவாக்க முடியாது; உங்கள் வாசகர்களின் இதயங்களுக்குள் புகும் மார்க்கத்தையும் நீங்கள் என்றுமே கண்டறிய முடியாது.

ஓர் எழுத்தாளன் எழுதுகின்றபோது, அவனது ரத்த நாளங்களில் ரத்தம் கொதிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; எதிரியைப்பற்றி அவன் எழுதும்போது எதிரியின்பாற் கொண்ட அவனது கட்டுப்படுத்தப்பட்ட பகைமையுணர்வினால் அவனது முகம் வெளுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவன் தான் நேசிக்கும், தனக்கு மிகவும் அருமை மிக்கவர்களாக விளங்கும் தனது கதாபாத்திரங்களோடு சேர்ந்து தானும் சிரிக்க வேண்டும், அழவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இதன்மூலம்தான் போலியல்லாத ஓர் உண்மையான கலைப் படைப்பை உருவாக்க முடியும்.

இப்போது நான் விஷயமில்லாமலே பேசிக் கொண்டிருக்கிறேன்; எனவே நீங்கள் இதில் அக்கறை காட்டமுடியும் என்று நான் கருதவில்லை. எனவே இனி நான் சோவியத் இலக்கியத்தை எதிர்நோக்கியுள்ள பணிகளைக் குறித்துச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

நாம் போராடியாக வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ உள்ளன; முதலாவதாக, நமது இளம் மக்களின்மீது செல்வாக்கு வகிக்க நாம் போராடியாக வேண்டும். நமது இளைஞர்கள் அற்புதமான இளம் மக்களாவர். அவர்களது உற்சாகத்துக்கும் அவர்களது வீரஞ்செறிந்த உழைப்புக்கும் நாடு அவர்களுக்கு எவ்வளவோ கடமைப்பட்டுள்ளது. என்றாலும், நமது இளைஞர்களில் மிக மிக அற்பமான அளவிலான ஒரு பகுதியினர், நமது அன்றாட வாழ்க்கையில் வீரசாகசத்தை நாடி, அதனைக் கண்டறியத் தவறிவிடும் காரணத்தால், உள்ளத்தில் அமைதியற்று இருந்து வருகின்றனர். வீரசாகசம் அங்கு இருக்கத்தான் செய்கிறது; அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், அதனை நோக்கித் தமது கைகளை நீட்ட வேண்டியதும், தம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கையை மேலும் கூர்மையாக நோக்க வேண்டியதுமே ஆகும். இந்த இளைஞர்களை அன்னியமான

செல்வாக்குகளிலிருந்து மீட்டு, அவர்கள் உள்ளத்தில் வேலையின் பாலும் வீரமிக்க முயற்சியின்பாலும் கொள்ளும் சரியான கண்ணோட்டத்தை உருவேற்றுவது நமது கடமையாகும்.

இது எழுத்தாளர்களை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினை மட்டும் அன்று; இதனை அவர்கள் வருங்காலத்திலும் எதிர் நோக்குவார்கள். சோவியத் குடும்பம், புதிய மானிடனின் நல்லொழுக்கக் கோட்பாடுகள், நமது மக்களின் அசுர முயற்சி —ஆகிய இவை யாவும் கலைநயம் மிக்க படிமங்களில் குடி கொண்டாக வேண்டும்; இவை யாவும் சர்வாம்சமும் மிக்க பெரிய கதைப் படைப்புக்களில் விவரிக்கப் பட்டாக வேண்டும். கலைத்துறையைச் சேர்ந்த நபர்களான நாம் இதனை மிக நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறோம்; மக்களுக்கும் கட்சிக்கும் நாம் ஆற்ற வேண்டிய பொறுப்பின் பரிமாணத்தையும் நாம் முற்றிலும் உணர்ந்திருக்கிறோம்.

முடிவுரையாக நான் பின்வரும் விஷயத்தைக் கூற விரும்பு கிறேன். இங்கு பிரசன்னமாக இருக்கும் பிரதிநிதிகள் மத்தியில், ''ஒளிவிளக்குகள்'' என்று அன்போடு குறிப்பிடப்பெறும் பலர் உள்ளனர். இது ஒரு நல்ல, மிகவும் பொருத்தமான சொல்லே யாகும். நான் இந்த ''ஒளி விளக்குகளை,'' அவர்கள் பாதையை வெளிச்சமிட்டுக் காட்டுவது, தமது சொந்த முயற்சித் துறையில் உழைத்துவரும் மக்களுக்காக மட்டும் அல்ல என்பதை மறந்து விடாதிருக்குமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விஞ்ஞானம், தொழில்நுட்பம், தொழில் துறை, விவசாயம் ஆகிய துறைகளைச் சேர்ந்த ''ஒளி விளக்குகள்'' எழுத்தாளர்களான எங்களுக்கும் சேர்ந்துதான் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் நாங்கள் அவர்களைப் பொறுமையோடு ஏறிட்டு நோக்குகிறோம்; ஏனெனில் அவர்கள் எதனை எய்தியுள்ளார்களோ அதனை நாங்கள் எங்கள் முயற்சியில் இன்னும் எய்திவிடவில்லை. ஆயினும் அவர் களது ஒளி எங்கள் மீது பாய்கிறது; எங்களுக்கு இதமூட்டுகிறது; இருட்டு வேளைகளில், இருளின் ஊடே எங்களுக்கு ஒளி பாய்ச்சி வழிகாட்டுகிறது.

இந்த ஒளியை பாய்ச்சுவோருக்கு எனது மாபெரும் உளமார்ந்த நன்றி.

மேலும் இந்த ஒளியைச் சுமந்து செல்வோருக்கு ஆற்றலைச் சேகரித்து வழங்குவோருக்கும் அதே உளமார்ந்த நன்றி; எங்களைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள உளமார்ந்த அக்கறைக் கும் எங்களது மாபெரும் நன்றி; இந்த அக்கறைக்கு நாங்கள் முற்றிலும் தகுதியுள்ளவர்கள் அல்ல என்றாலும், இனிமேல் வருங்காலத்தில் நாங்கள் அதற்குத் தகுதியுடையவர்கள்

ஆவோம் என்பது மட்டும் எனக்கு முற்றிலும் நிச்சயமான விஷயமாகும்.

1961

இளம் பயோனீர்களுக்கு

இளம் பயோனீர்களுக்கு அவர்களது ஸ்தாபனத்தின் 40 ஆவது பிறந்த தின விழாவின்போது எனது மிகவும் தலைசிறந்த வாழ்த்துக்கள்; இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் அதற்கு மிகவுயர்ந்த அரசாங்கப் பரிசு வழங்கப்பட்டுள்ளதற்கும் எனது பாராட்டுக்கள். எனது அன்பார்ந்த இளம் பயோனீர்களே, ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இருந்து வாருங்கள்; கஷ்டப்பட்டுப் படியுங்கள்; நீங்கள் வளர்ந்து பெரியவர்களாகும் போது, உண்மையான லெனினியவாதிகளாக நீங்கள் மாறி விடுவீர்கள்.

1962

இளம் விவசாயிகளுக்கு

இளமை சுறுசுறுப்பும் மதர்ப்பும் மிக்க நடவடிக்கை மலிந்த பருவமாகும்—இதற்காகவே இளமை மனிதனுக்கு வழங்கப் பட்டுள்ளது. நமது தாயகத்தின் கீர்த்திக்கான உங்களது உற்சாக மிக்க, உளமார்ந்த முயற்சியை வியந்து பாராட்டவும், உங்களது உன்னதமான பணியில் நீங்கள் தலைசிறந்த வெற்றியைப் பெறுமாறு உங்களை வாழ்த்தவும்தான் முதிர்ச்சி மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனைத்தான் மகிழ்ச்சியோடும், தந்தை யின் பாசத்தோடும், நீங்கள் சாதிக்க முற்பட்டுள்ள பணியைச் சாதித்து முடிக்க உங்களுக்குள்ள திறமையில் பரிபூரண நம்பிக்கையோடும் நான் செய்கிறேன்.

1964

வெஷென்ஸ்காயாவைச் சேர்ந்த இளைஞர்களுக்கு

எனது அன்பார்ந்த இளம் நண்பர்களே—வெஷென்ஸ்காயா வட்டாரத்தைச் சேர்ந்த காம்சொமால் யுவர்களே, யுவதிகளே!

வரும் ஆண்டில் நீங்கள் உங்கள் பணியிலும் படிப்பிலும் தலைசிறந்த வெற்றிபெற நான் உங்களை வாழ்த்துகிறேன். கட்சி நம் அனைவரிடமும் கோருகின்ற புதிய கோரிக்கை தரமேயாகும். இயல்பாகவே இதில் நீங்களும் இடம் பெறுகிறீர்கள். இதனை

நாம் வெறுமனே உற்பத்தியில் தரத்தை உயர்த்தக் கோரும் வேண்டுகோளாக மட்டுமல்லாமல், படிப்பிலும், ஆக்கபூர்வ மான முயற்சியிலும், தமது தேட்டங்களிலும், மக்களோடு தமக்குள்ள உறவுகளிலும், நட்பிலும், சுருங்கச் சொன்னால், சோவியத் மானிடனின் தன்மையை எடுத்துக்காட்டும் யாவற்றிலும், காம்சொமாலைச் சேர்ந்த ஓர் உறுப்பினருக்கு அத்தியாவசியமான குணநலன்களை உயர்த்தவும் கோரும் ஒரு வேண்டுகோளாக அர்த்தப்படுத்திக் கொள்வோம்.

1965

டான் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு

அன்பார்ந்த தோழர்களே, காம்சொமால் உறுப்பினர்களே,

மூத்த தலைமுறையைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளான நாங்கள் உங்களை மிகவும் நேசிக்கிறோம்; ஏனெனில் ஒரு மதிப்பிடற்கரிய நினைவாக மாறிவிட்ட எங்களது போர்க்குணம் மிக்க புரட்சி கரமான இளமையை நாங்கள் உங்களில் காண்கிறோம்; ஏனெனில், மேலும் நீங்கள் தற்காலத்தில் வசித்தும் உருவாக்கி யும் எங்களோடு இங்கு இருந்து வருகிறீர்கள்; ஏனெனில், பிரதானமாக நீங்களே நெருங்கிவரும் பிரகாசமான வருங்காலத் தில், நமது ஒளிமிகுந்த நம்பிக்கையாகவும் இருந்து வருகிறீர்கள்.

பாருங்கள். எங்களது பாசம் முப்பரிமாணம் கொண்ட தாகும்; எங்களது நேசபாவம் பொறுமை மிக்கதாகவும் மிகவும் அதிகமாக வேலை வாங்குவதாகவும் இருப்பதற்குக் காரணமே இதுதான்.

சோஷலிச நிர்மாணத்துக்கு நீங்கள் மிகப்பெரும் பணி யாற்றியுள்ளீர்கள்; நீங்கள் இன்னும்கூட அதிகமாகப் பணி யாற்ற முடியும் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம்.

தயவு செய்து எங்களது எதிர்பார்ப்புக்களுக்கேற்ப வாழ்ந்து காட்டுங்கள்; நீங்கள் எங்கெங்கே இருந்தாலும், நீங்கள் உழைத்துக் கொண்டிருந்தாலும், படித்துக் கொண்டிருந் தாலும் அல்லது ராணுவத்தில் பணிபுரிந்து வந்தாலும், வெல்லற்கரிய காம்சொமால் உணர்வு காட்சியளிக்கும் எல்லா விடங்களிலும், செயலில் உங்கள் தகுதியை நிரூபித்துக் காட்டுங்கள்.

உங்களுக்கு வெற்றியும், மாபெரும் துணிகரமான செயல் களும், மகிழ்ச்சியும் வாய்க்க, எனது இதயத்தின் அடியாழத் திலிருந்து உங்களை வாழ்த்துகிறேன்.

1965

இளைஞர் படை பதிப்பகத்தின் பார்வையாளர் பதிவேட்டில் எழுதப்பட்ட வாசகம்

இளைஞர் படை அலுவலகத்துக்கு நான் எப்போதும் மகிழ்ச்சியுடனேயே வருகிறேன். இந்த இளம் மக்களோடு நான் இருக்கும்போது, சில ஆண்டுகளை நான் உதறித் தள்ளி விட்டது போலவே உணர்கிறேன்...

6-3-65

எம். ஷோலகோவ்

நாட்டுக்கு இளம் உழைப்பாளிகள் தேவை

(இளைஞர்களுக்கு ஆற்றிய ஓர் உரையிலிருந்து)

....இங்கும் பிற இடங்களிலும் இளம் மக்கள் பல காரணங்களுக்காகப் பண்ணைத் தொழிலை விட்டு விலகிக் கொண்டிருக்கும் காரணத்தால், கிராமப்புற இளைஞர்கள் உள்ளத்தில், விவசாயியின் உழைப்பின்பாலும், விவசாய உற்பத்தித் துறையில் ஆற்றும் பணியின்பாலும், ஒரு பற்றையும் மதிப்பையும் நாம் உருவாக்கி வளர்த்தாக வேண்டும். நான் பல வெளி நாடுகளில் பயணம் செய்திருக்கிறேன்; ஸ்வீடன், நார்வே, டென்மார்க் ஆகிய நாடுகளிலெல்லாம் இதே நிலைமைதான்; உண்மையில் நகர்ப்புறத்துக்குக் குடிபெயர்ந்து செல்லும் வேட்கை எங்களுமே தென்பட்டு வருகிறது. பண்ணை வீட்டு முறை நிலவிவரும் பின்லாந்திலும் ஸ்வீடனிலும் இந்த வேட்கை நிலவுவதை என்னால் புரிந்து கொள்ள முடியும். அங்கு பெரிய கிராமங்கள் இல்லை; மக்கள் தூராதொலைவில் பிரிந்து பிரிந்து வாழ்கின்றனர்; வீடுகள் ஒன்றிலிருந்து மற்றொன்று ஏறத்தாழ நான்கு கிலோமீட்டர் தொலைவிலேயே அமைந்துள்ளன; எனவே அங்கு இந்த வேட்கை நிலவுவதை எளிதில் புரிந்து கொள்ளவும் உணர்ந்தறியவும் முடியும். திரைப்படங்களைக் காண வெளியில் சென்றால், பன்னிரண்டு அல்லது பதினைந்து கிலோமீட்டர் தூரம் பயணம் செய்தாக வேண்டும்; மேலும், இளம் மக்கள் ஒரு மன்றத்திலோ அல்லது வேறு எங்கோ ஒன்று கூடுவது என்ற விஷயத்தைப் பொறுத்த வரையில், இத்தகைய பிரச்சினைக்கே அங்கு இடமில்லை.

நமது நிலைமைகளில் இந்த வேட்கைக்கு எந்த நியாயமும் இருக்கவில்லை. இங்கு நாம் கூட்டுப்பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் உழைத்துவரும் ஏராளமான ஊழியர்களைக் கொண்டிருக்கிறோம்; மேலும் நாம் திரைப்பட அரங்குகளையும்

மன்றங்களையும் பெற்றிருக்கிறோம்—இவை எல்லாம் நமது இளைஞர்களுக்குச் சேவை புரியவே உள்ளன. நீங்கள் நாடக அரங்குக்கு அடிக்கடி சென்று வருவதுபோல், ராஸ்தாவில் வசித்துவரும் யுவதியர் செல்வதாக நான் கருதவே இல்லை. எனவே, இது காரணமாயிருக்க முடியாது. கிராம வாழ்க்கையில் உள்ளக் கிளர்ச்சியோ அல்லது புதிய அனுபவங்களோ குறைவாக இருப்பதை, வேலையின் மும்முரமான கதிவேகத்தினாலும், உங்களது வயதையொத்த மக்களோடு கொள்ளும் கூட்டுற வினாலும் கருத்துக்களினாலுந்தான் ஈடுகட்டியாக வேண்டும்.

நாட்டுக்கு இளம் உழைப்பாளிகள் தேவை. தற்போது, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் மார்ச் பிளீனம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் ஒளியில், பெருமளவிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன; அரசாங்கப் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் கூட்டுப்பண்ணைகளுக்கும் நல்ல வாய்ப்புக்களுக்கு வழிகள் திறந்து விடப்பட்டுள்ளன; அவர்கள் மேலும் அதிகமான பணத்தைச் சம்பாதிப்பார்கள்; இது ஓர் ஊக்கச் சக்தியாக விளங்கும் என்பது தெளிவு. நகரில் நல்லதொரு வசதியான குடித்தனப் பகுதியைப் பெறுதவர்களும், தாங்கள் விரும்பக்கூடிய விதத்தில் அங்கு ஒரு நல்ல வேலையில் அமராது போனவர்களுமான நபர்கள், கிராமங்களுக்குத் திரும்பி வருவார்கள். இந்தத் தலைகீழ் நிகழ்ச்சிப் போக்கில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

தொழில்துறையில் பணி புரிய விரும்பும் இளம் மக்களின் பாதையில் அரசாங்கமும் கட்சியும் தடைமுடைகளை ஏற்படுத்த முடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் தாகன் ரோகுக்கோ அல்லது ராஸ்தாவுக்கோ செல்ல விரும்பு கிறீர்களா அல்லது இங்கேயே வெஷென்ஸ்காயாவில் தங்கியிருக்க விரும்புகிறீர்களா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது உங்கள் பொறுப்பாகும்.

விவசாயம் செய்யும் நிலத்திலேயே தங்கியிருக்க விரும்பும் ஒரு போற்றத்தக்க மனப்போக்கின் அறிகுறிகள் உள்ளன என்றே நாங்கள் கருதுகிறோம். தமது மத்தியிலுள்ள காம்சொமால் உறுப்பினர்கள் எல்லோரும் தத்தம் சொந்தக் கிராமத்திலேயே தங்கிப் பணி புரிந்து வரவேண்டும் என்ற ஏகோபித்த முடிவுக்கு வந்த, மாஸ்கோவுக்குச் சற்றுத் தள்ளி யுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த அர்புஜோவ் பள்ளியின் பட்டதாரிகள், தெரெந்தி செம்யோனோவிச் மல்த்சேவைக் கண்டு பேசியுள்ளனர். மத்தியக் கமிட்டியின் மார்ச் பிளீனம்

கூட்டமே தம்மை இந்த முடிவை எடுக்குமாறு தூண்டியதாக அவர்கள் கூறுகின்றனர்.

இங்கு கிராமத்தில் நமக்குக் கேளிக்கை வசதிகளுக்கு ஒன்றும் குறைவு இல்லை. நகரத்தில் இருப்பதைக் காட்டிலும் இங்கு அந்த வசதிகள் மிகவும் அதிகமாக இல்லை என்பது உண்மைதான். என்றாலும், மிகவும் அடிக்கடி இங்கு வந்து நாடக நிகழ்ச்சிகளை நடத்திவரும் முழுமையான நாடகக் கம்பெனிகளை நாம் கொண்டிருக்காவிட்டாலும், நாமும் நாடகக் குழுக்களைப் பெற்றுத்தான் இருக்கிறோம். மேலும் ராஸ்தாவ் வாத்திய சங்கீதக் கழகமும் நல்ல பணியை ஆற்றி வருகிறது; அதன் இசைவாணர்கள் அவ்வப்போது இங்கு வந்து நம்மை மகிழ்விக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

நமது அண்டையிலுள்ள வால்காகிராடு மற்றும் வோரோனேஷ் பிராந்தியங்களில் நிலவி வரும் கலாசார வாழ்க்கையிலும் இதே நிலைமையைக் காணலாம். வோரோனேஷ் பாடகர் கோஷ்டி அந்தப் பிராந்தியத்தில் நன்கு பணியாற்றி வருகிறது. வால்கா கிராடுப் பிராந்தியம் உர்யுப்பின்ஸ்க்கில் தனது சொந்த நாடக அரங்கைக் கொண்டுள்ளது. அது ஒரு நடமாடும் நாடக அரங்காகும்; அது ஆண்டின் தொடக்கத்தில் தனது வட்டாரச் சுற்றுப் பயணத்தைத் தொடங்கி, டிசம்பர் மாதவாக்கில் அதனைப் பூர்த்தி செய்கிறது; அதற்குள் அது அந்தப் பிராந்தியம் எங்கணும் பயணம் செய்து முடித்து விடுகிறது.

நீங்களே கண்டுகொள்ள முடிவது போல், நிலைமைகள் மாறிக் கொண்டுதான் இருக்கின்றன.

உதாரணமாக, என்னைப் பொறுத்த வரையில் நான் கலாசாரத்திலிருந்து மிகவும் தூர விலகி, எங்கோ வசித்துக் கொண்டிருப்பதாக நான் கருதவே இல்லை. குறைந்த பட்சம் நான் என்றுமே அவ்வாறு உணர்ந்ததே கிடையாது (ஒருவேளை இது நான் செய்து வரும் வேலையின் தன்மையின் காரணமாகவும் இருக்கலாம்).

சுருங்கக் கூறின், பின்வரும் விஷயத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறித்தான் ஆக வேண்டும்: விவசாயத் திறமை நமது நாட்டுக்கு மிகவும் முக்கியான, மிகவும் தேவைப்படுகின்ற ஒரு திறமையாகும்; எனவே நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்களே தீர்மானித்தாக வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது.

இனி நாம் கலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குச் செல்வோம்.

எனது சொந்தத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற எனது நாவலை நான் எழுதி முடித்துவிட விரும்புகிறேன். அதன்பின் நான் நாடகக் கலையில் எனது திறமையை முயன்று பார்க்க நான் விரும்புகிறேன். இந்த விஷயம் பற்றிக் கூறும்போது, இந்த இலக்கிய வகை விஷயத்தில் நமது நிலைமைகள் திருப்திகரமாக இல்லை என்பதை நான் கூறித்தானாக வேண்டும். நமது இளைஞர்களுக்குக் கல்வி போதனை செய்யும் ஒரு செல்வாக்கை செலுத்தக்கூடிய, நமது காலத்தவரையும் நமது இளம் உழைக்கும் மக்களையும் பற்றிய நல்ல நாடகங்கள் நம்மிடம் மிக மிகக் குறைவாகவே உள்ளன.

சினிமாவை எடுத்துக் கொள்வோம். எனது அபிப்பிராயத்தில், எனது படைப்புக்களின் மிகவும் வெற்றிகரமான திரைப்படத் தயாரிப்பு, பிரபலமான நடிகரும் டைரக்டருமான சேர்கி பொந்தார்சுக் தயாரித்த ஒரு மனிதனின் தலைவிதி என்ற திரைப்படமேயாகும். டான் நதி அமைதியாக ஓடுகிறது, கன்னி நிலம் உழப்பட்டது ஆகிய திரைப்படங்களைப் பொறுத்தவரையில், அவற்றில் திரைக்கதை வசன கர்த்தாக்களும் டைரக்டர்களும் சில தவறுகளை இழைத்துள்ளனர். உதாரணமாக, டான் நதி அமைதியாக ஓடுகிறது என்ற படத்தில், அதில் இடம் பெற்றிருக்க வேண்டிய சில உயிர்த்துடிப்பு மிக்க சம்பவங்கள் விடுபட்டுப் போயின; அதே சமயத்தில் அவை இல்லாவிட்டாலும் படம் எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டிராது என்று சொல்லக்கூடிய, படத்துக்கு அநாவசியமான சில நிகழ்ச்சிகளும் அதில் இடம் பெற்றிருந்தன. அதன் திரைப்படக் கதையை சேர்கி கெராசிமோவ்தான் எழுதினார் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே அது அவரது சொந்தப் படைப்பாக்க விவகாரமாகவே இருந்து விட்டது. மேலும் நடிகர்களின் நடிப்பும் அத்தனை மகிழ்ச்சி தருவதாக இல்லை.

இப்போது மாலி நாடக அரங்கு டான் நதி அமைதியாக ஓடுகிறது நாவலை நாடகமாக்கி நடத்த முயன்று வருகிறது. அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற நாவலை நாடகமாக்கி மேடையேற்றுவது பற்றிச் சிந்தித்துவரும் நாடக அரங்குகளைப் பொறுத்த வரையில், அவை மிகவும் அவசரப்படுகின்றன என்பதே எனது அபிப்பிராயமாகும்; ஏனெனில், ஒரு பூர்த்தியடையாத நாவலிலிருந்து நாடக ரீதியில் முழுமையானதும் ஒருங்கிணைந்ததுமான ஒரு நாடகத்தை உருவாக்குவது மிகவும் கடினமாகும்.

ராஸ்தாவிலுள்ள கார்க்கி நாடக அரங்கம் படைப்பிரிவு வந்து கொண்டிருக்கிறது என்ற எனது கதையின் அடிப்படையில் ஒரு நாடகத்தை அரங்கேற்ற முயன்று வருகிறது. ஆயினும், அதில் ஒரு பெண் பாத்திரத்துக்குக்கூட இடமில்லாதபோது, அது எத்தகைய நாடகமாக இருக்க முடியும்?

அவர்கள் தமது நாட்டுக்காகப் போராடினார்கள் என்ற எனது நாவலை மேலும் தொடர்ந்து எழுதவொட்டாமல் என்னை முடக்கியுள்ள ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பம் நிகழ்ந்துள்ளது. ராஸ்தாவில் நான் ஜெனரல் லுகினைச் சந்தித்தேன்; அவர் இப்போது ஓய்வு பெற்றோர் பட்டியலில் இடம் பெற்றவராக இருந்து வருகிறார். இந்த மனிதரின் வாழ்க்கை ஒரு சோகமய மான கதையாகும். காயம்பட்டு நினைவிழந்துபோன இவரை ஜெர்மானியர்கள் கைதியாக்கிக் கொண்டு சென்றனர். அவர் உறுதியும் துணிவாற்றலும் மிக்க மனிதராக, உண்மையான தேசபக்தராக இருந்து வந்தார். தமது நாட்டைக் காட்டிக் கொடுத்தவரும், எதிரிகளின் பக்கம் போய்ச் சேர்ந்து கொண்ட வருமான முன்னாள் ஜெனரல் விளாசோவ், தமது நாஜி மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில், தம்மோடு சேர்ந்து கொள்ளுமாறு லுகினையும் மனம் மாற்ற முயற்சி செய்தார்; ஆனால் லுகினை அதற்கு உடன்படாமல் உறுதியாக நின்றார். அவர் என்னிடம் எவ்வளவோ சுவைமிக்க விஷயங்களைக் கூறினார்; அவற்றில் சிலவற்றை நான் எனது நாவலில் பயன் படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

நாஜி ஜெர்மனியின்மீது சோவியத் மக்கள் பெற்ற வெற்றியின் வரவிருக்கும் 20 ஆவது ஆண்டுவிழா சம்பந்தமாக, பத்திரிகைகள் யுத்தத்தைப் பற்றிய பல கட்டுரைகளையும், கதைகளையும், பிற விஷயங்களையும் வெளியிட்டு வருகின்றன. மாபெரும் தேசபக்தப் போரின்போது சண்டையில் வீழ்ந்து பட்டவர்களின் நினைவுச் சின்னங்களையும் கல்லறைகளையும் கௌரவமாகப் போற்றிப் பாதுகாத்து வரும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது நமது இளைஞர்களின் கடமையாகும்.

இளைஞர்களுக்குக் கல்வி போதிப்பது மிகவும் முக்கியமான தொரு பணியாகும். பிள்ளைப் பருவத்திலிருந்தே அவர்களிடம் வேலை செய்யும் பழக்கங்களை வளர்த்துவர வேண்டும். நான் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்குச் சென்றிருந்த போது, ஒரு சர்க்கரைவள்ளிக் கிழங்கு வயலில் ஒரு குடும்பமே—தாய், பாட்டி, சுமார் ஒன்பது வயதான ஒரு சிறுவன் ஆகிய அனைவருமே—களைகளைப் பிடுங்கிக் கொண்டிருந்ததை நான் கண்டேன். அவர்கள் ஒவ்வொரு களைச்செடியையும் பிடுங்கி

எறிவதற்காக, உண்மையில் தமது முழங்கால்களே ஊன்றியே அந்த வயலில் ஊர்ந்து சென்று கொண்டிருந்தனர். நமது இளம் மக்களே வேலே பார்க்க வைப்பதில், சில சமயங்களில் நமக்கு மிகவும் சிரமமாகத்தான் உள்ளது. காம்சொமால் இந்தத் திசைவழியில்தான் தனது நடவடிக்கைகளேச் செலுத்தி வரவேண்டும்; தற்காலத்தின் தேவைகளேப் பூர்த்தி செய்யும் விதத்தில், குடும்பத்திலும் பள்ளிக்கூடத்திலும் வேலேக் கல்வியின் திறனே அதிகரித்து வரவேண்டும்....

1965

எப்போதும் தேசபக்தி மிக்கவராக இருங்கள்

(தாகெஸ்தான் பள்ளி மாணவிகளோடு நடத்திய
ஓர் உரையாடலிலிருந்து)

யு. எம். முர்துஜலீயேவா, ஒரு விடுதிப் பள்ளியின் தலேமை ஆசிரியை: *தாகெஸ்தான் மாதர்கள் பலர் பொது ஸ்தாபனங்களில் பணியாற்றுகிறார்கள். அவர்கள் மத்தியில் பள்ளி ஆசிரியைகளும், விஞ்ஞானிகளும், பிற நிபுணர்களும் உள்ளனர், என்றாலும் கூட பல நூற்றாண்டுகளாக இருந்து வந்துள்ள தப்பெண்ணங்கள் இன்னும் முற்றிலும் போக்கப்பட்டு விட வில்லே. அவை மிகவும் விடாப்பிடியாக நீடித்து வருகின்றன...*

எம். ஏ. ஷோலகோவ்: *நாட்டின் பொதுவான கலாசார அபிவிருத்தி வேகமாக முன்னேறி வருகிறது என்பது உண்மையாயினும்கூட, இது உண்மையில் ஒரு சிரமமான பிரச்சினையாகவே இருந்து வருகிறது. இதனால் நீங்கள் எதுவும் செய்யாமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க முடியாது; அவ்வாறு இருந்தால், இந்தப் பிற்போக்கான போக்குகள் மேலும் தலே தூக்குவதற்கே ஏதுவாகும். நீங்கள் நாசூக்கான, சாமர்த்தியமான வழிகளே மேற்கொண்டு, மத-விரோதமான கருத்துக்களேப் பரப்புவதன் மூலமும், எது சரி, எது தவறு என்பதைப் புரிந்து கொள்ள மக்களுக்கு உதவுவதன் மூலமுமே அவற்றை எதிர்த்துப் போராட வேண்டும்.*

அஸ்ஹியாத் அலகோவா, ஒரு பள்ளி மாணவி: *நமது இன்றைய வாழ்க்கையில் வீரச் செயல்களேப் புரிய முடியுமா?*

எம்.ஏ. ஷோலகோவ்: *வாழ்க்கையை நல்ல விதமாகவும், சமுதாயத்துக்குப் பயன்மிக்க முறையிலும் வாழ்வதும் ஒரு வீரச் செயல்தான். ஒரு நல்ல காம்சொமால் உறுப்பினராக இருந்து வருவதும்—சிறிய வீரச்செயல் என்றாலும்கூட—அதுவும் ஓர் அன்றாட வீரச்செயல்தான். அருமைக் குழந்தைகளே, சோவியத்*

யூனியனின் வலிமை யுத்தகால வீரச் செயல்களின் மீது மட்டும் கட்டியமைக்கப் பட்டிருக்கவில்லை. வயல்களிலும், கூட்டுப் பண்ணைகளிலும், அரசாங்கப் பண்ணைகளிலும், தொழிற்சாலைகளிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும் ஆற்றப்பட்டு வரும் நேர்மையான பணியை ஒதுக்கிவிட முடியுமா? நமது நாட்டின் பொருளாதார வலிமையும் சித்தாந்த பலமும் அன்றுடம் புரியப் படும் லட்சோப லட்சக்கணக்கான கவர்ச்சியற்ற உழைப்புச் சாதனைகளின் மூலமே உருவாகியுள்ளன. வீராவேசச் செயல் களின் நோக்கிலிருந்து பார்த்தால், யுத்தக் காலத்தில் புரிந்த வீரச் செயல்கள் மிகவும் கவர்ச்சிகரமாகத் தோன்றின என்பது உண்மையே. என்றாலும் போர்கள் என்றும் எதையும் படைத்துக் கொடுத்ததில்லை என்பதை நான் உங்களுக்குக் கூறியாக வேண்டும். போர் ஓர் அழிவுச் சக்தி; ஆனால் உழைப்போ ஓர் ஆக்கச் சக்தி. தொழிலாளர்களும், விவசாயிகளும், அறிவாளி களும் வீரஞ்செறிந்த முயற்சிகளை மேற்கொள்ளாது போயிருந்தால், மாபெரும் தேச பக்தப் போரினால் விளைந்த பல இடிபாடுகள் இன்னும் அப்படியேதான் இருந்து வந்திருக்கும்.

நன்றாகப் படிப்பதும்கூட ஒரு வீரச் செயல்தான்.

தமது காலத்தில்தான் எல்லாமே மிகவும் நன்றாக இருந்தன என்று சொல்லிக் கொள்வது முதியவர்களுக்கு மிகவும் பிடித்தமான விஷயம். இதனையெல்லாம் ஒருவர் முழுமையாக நம்பி ஏற்றுக்கொண்டுவிடக் கூடாது; என்றாலும் சில விஷயங் களில் அவர்கள் கூறுவதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த அளவுகோல்களையும் தர அளவைகளையும் கொண்டிருந்தனர். இப்போது அவர்களில் ஒருவனை எனக்கு, குட்டி வைக்கோல் போர்களைப் போல் தோற்றமளிக்கும் இந்த நவநாகரிகச் சிகை அலங்காரங்களின் மீது எந்த வெறுப்பும் இல்லை. அடிப்படையில் நமது இளம் மக்கள் நல்லவர்களே. அஸ்ஸியாத் அலகோவா இப்போது வீரச் செயல்களைப் பற்றி என்னிடம் கேட்டார். இது தான் முக்கியமான விஷயம்; சிகை அலங்காரங்கள் அல்ல. எனது காலத்தில், உள்நாட்டு யுத்த ஆண்டுகளில், எங்களது வாழ்க்கை வீரஞ்செறிந்த இளமை வாழ்க்கையாகவே இருந்தது. கடுமையான சோதனைகள் எதிர்ப்படும்போது நமது இளைஞர்கள் மீண்டும் வீரஞ்செறிந்தவர்களாகவே விளங்குவர். ஆயினும் நமது இளைஞர்கள் மத்தியில் மேலை நாட்டுப் பிரசாரத் தின் செல்வாக்குக்கு இரையாகும் நபர்களும் உள்ளனர். அயல் நாட்டுச் சித்தாந்தவாதிகள் உங்கள் மத்தியில் சம்சயத்தையும் அலட்சியத்தையும் விதைக்க விரும்புகின்றனர். என்றாலும், நமது நாட்டின் வருங்காலத்துக்கும், மூத்த தலைமுறையினரால்

எய்தப் பெற்றுள்ள எல்லாவற்றுக்கும் நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டியவர்கள் ஆவீர்.

''எவருடையதும் அல்லாத'' இளமை என்று எத்தகைய விஷயமும் கிடையாது என்பதை நாம் மிக நன்றாக அறிவோம். மேலும், உங்களைப் போன்ற அருமையான யுவதிகளை, அட்டுப் பிடித்த, அன்னியக் கரங்களுக்குள் ஒப்படைப்பது என்பதும் நமக்கு அடியோடு ஒத்துவராத விஷயமாகும். முதலாளித் துவத்தின் செல்வாக்குக்கு எதிராக நாம் செயலூக்கமிக்க போராட்டத்தை நடத்தி வருகிறோம். முதலாளித்துவச் சித்தாந்திகள் நமது திரையரங்குகளுக்குள் புகுந்து விடும் மோசமான திரைப்படங்களாலும், விளக்க முடியாத ஏதோ காரணத்துக்காக நமது பதிப்பகங்கள் வெளியிட்டு வரும் தீங்கு பயக்கும் புத்தகங்களாலும், உங்களைச் சீர்குலைக்க முயன்று வருகின்றனர். சோவியத் எழுத்தாளர்களான நாங்கள் நமது இளைஞர்களை, நமது சித்தாந்தம், மற்றும் வாழ்க்கை யையும் கலையையும் பற்றிய நமது கம்யூனிஸ்டுக் கருத்துக்கள் ஆகியவற்றின் உணர்விலேயே பேணி வளர்த்து வரப் பாடுபட்டு வருகிறோம்.

ஒரு பள்ளிக்கூடம் மக்கச்-கலாவிலோ, பெஸ்சனூக் கோப்ஸ்கோயியிலோ, வெஷென்ஸ்காயாவிலோ அல்லது வேறு எங்கணுமோ இருந்தாலும் சரி, அங்குள்ள மாணவர்களுக்குச் சர்வாம்சமான கல்வியை வழங்கியாக வேண்டும்: இது சினிமா, நாடகம், இலக்கியம் போன்ற பண்பை உருவாக்கும் செல்வாக்குகளையும், எல்லாவற்றுக்கும் முதன்மையாக, பள்ளிப் பாடங்களையுமே குறிக்கும்.

நமது பரந்த நாட்டுக்குப் புத்திக் கூர்மையும், கடின உழைப்பும், சிக்கனமும் மிக்க திறமையாளர்களாக விளங்கக் கூடிய நபர்கள் தேவை. இப்போது நீங்கள் தலைக்குமேல் குண்டு வீச்சு விமானங்கள் ஏதும் இரைந்து கொண்டிருக்காத அமைதியும் பந்தோபஸ்தும் நிலவும் சூழ்நிலையில் ஒன்றுகக் கூடியமர்ந்து, வாழ்க்கையையும் பொருளாதாரத்தையும் பற்றிய நமது பிரச்சினைகளை, நமது வருங்காலத்தை, சொல்லப் போனால் உங்களது வருங்காலத்தைக் குறித்து விவாதித்துக் கொண்டிருக்க முடியும் விதத்தில், நமது தலைசிறந்த மக்களில் லட்சோப லட்சக்கணக்கான பேர்கள் உள்நாட்டு யுத்தத்திலும் மாபெரும் தேசபக்தப் போரிலும் மாண்டுபட்டனர். சோவியத் ஆட்சியின் ஆதாயங்கள் மிகப் பெரும் விலையைக் கொடுத்துத்தான் பெறப் பட்டன. எனவேதான் நமது நாட்டை அதன் கணக்கிடற் கரிய ஆன்மிக மற்றும் பொருளாயதச் செல்வங்கள் அனைத்தையும்

உடைமையாக ஏற்றுக்கொள்ளும் பொறுப்பை மேற்கொள்ளக் கூடிய அத்தகைய மக்களாக உங்களை நாங்கள் உருவாக்க வேண்டியுள்ளது.

மக்களிடம் சிசுப்பருவத்திலிருந்தே, கிண்டர்கார்டன் வயதிலிருந்தே தேசபக்தியை ஊட்டி வளர்த்து வரவேண்டும். அப்போதுதான் அது ஒரு மனிதனின் மனோபாவத்தில் ஊறிப் போயிருக்கும். அப்போதுதான் அவன் எந்தச் சோதனைகளைக் கண்டும் அஞ்சாதவனாக இருப்பான்; அப்போதுதான் அவன் தனது நாட்டின்பாலும் கட்சியின் பாலும் கொண்டுள்ள விசுவாசத்தையும், கம்யூனிசக் கருத்துக்களைக் காட்டிலும் மேலும் விவேகமிக்க, மேலும் புதுமையான, மேலும் மனிதத் தன்மை மிக்க கருத்து ஏதும் உலகில் இல்லை என்ற தனது அசைக்க முடியாத திடமான கருத்தையும் வாழ்நாள் முழுவதிலும் கொண்டு செலுத்துவான்.

1965

சோவியத் எழுத்தாளர்களது நாலாவது காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து

அன்பார்ந்த பிரதிநிதித் தோழர்களே!
எங்களது மதிப்புக்குரிய விருந்தினர்களே!

காங்கிரசின் முதல் நாட்களைக் கொண்டு தீர்மானிக்கும்போது, நமது தோட்டத்தில் எல்லாமே அருமையாக உள்ளன: கடுமையான விமர்சனமோ, அநாவசியமான படபடப்போ எதுவும் இருக்கவில்லை; எல்லாமே அருமையாகவும், அமைதியாகவும் இருந்துள்ளன; வரப்பிரசாதம் போன்ற சாந்தியும் நல்லிணக்கமுமே ஆதார சுருதியாக விளங்கின; இதன் விளைவாக ஒவ்வொருவரது சுவாசமும், அற்புதமான தாளலயத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது; புன்னகைகள் அருள் பாலிப்பவையாக உள்ளன; இங்குள்ள நபர்களிற் சிலர் ஏற்கெனவே சுகமாகத் தூங்கத் தொடங்கிவிட்ட அளவுக்கு, பொதுவான சூழ்நிலை அத்தனை சாந்தமாக உள்ளது....

இந்தக் காங்கிரசுக்கான அடிப்படைக் காரியங்களை மேற்கொண்டு முடிப்பதில் எழுத்தாளர் யூனியனின் தலைமை பெரும் சிரமங்களை மேற்கொண்டது என்பது தெளிவு. இதற்கு இயல்பாகவே அவர்கள் நமது நன்றிக்கும் நமது பாராட்டுக்களுக்கும் உரியவர்களாவர்.

முந்தைய காங்கிரசுகளில் நிலைமைகள் ஓரளவுக்கு வேறு விதமாகவே இருந்தன என்பதையே நான் நினைவு கூர்கிறேன்:

பேரு மன்னர்கள் தமது பேச்சுக்களில் வாள்களை மோத விட்டனர்; ஆயுதங்களின் மோதல் முழக்கம் இருந்தது; நமது போர்க்குண வெறி வேகத்தில் நாம் ஒருவரையொருவர் மிஞ்ச விடவில்லை; போர் முடிந்ததும், போரில் நாம் பெற்றிருந்த உதைகளின் வேதனையை உணர்ந்து கொண்டும், நாம் பட்டிருந்த காயங்களைத் தடவிக் கொடுத்துக் கொண்டும் கலைந்து சென்றோம்; ஏனெனில் அந்தப் ''பண்டைய நல்ல நாட்களில்'' நாம் பாராட்டுக்களை ஒதுக்கித் தள்ளி வந்தோம்; பாராட்டுரை களையும் இன்சொற்களையும் விருப்பமற்றுத்தான் பரிமாறிக் கொண்டோம்—எவ்வாறாயினும், இந்தத் தற்போதைய காங் கிரசில் அவற்றை நம்மீது மிகவும் தாராளமாக அள்ளிச் சொரிந்த மார்க்கோவ், மற்றும் துதின் ஆகியோரின் அளவுக்கு, நாம் அவற்றைப் பரிமாறிக் கொள்ளவில்லை. உதைகளைப் பொறுத்த வரையில் மட்டும், நாம் அவற்றை ஒருவருக்கொருவர் மிகவும் முனைப்போடு கொடுத்துக் கொண்டோம். சமயங்களில், அந்த உதைகள் மிகவும் தகுதியான உதைகளாகவும் இருந்தன.

அப்போது நானும் பலமுறை கோதாவுக்குள் சென்று குதித்தேன்; நானும் உதைகள் கொடுத்தேன்; உதைகளையும் வாங்கினேன். என்றாலும், அந்தக் கொந்தளிப்பு மிக்க காங்கிரசுகள் இப்போது வெறும் நினைவாகவே போய்விட்டதைக் குறித்து நான் வருந்துகிறேன் என்றும், நான் மீண்டும் போரில் ஈடுபடவே விரும்புகிறேன் என்றும் நீங்கள் நினைக்க வேண்டுமென நான் விரும்பவில்லை. மாறாக, இந்த அமைதிமிக்க சூழ்நிலையில் நான் பரவசமடைகிறேன்; சோவியத் எழுத்தாளர் யூனியனின் எல்லைகளுக்குள்ளும் சரி, அதற்கப்பாலும் சரி, உங்கள் எல்லோரையும் போலவே நான் சமாதானத்தையும் சமாதான சக வாழ்வையுமே ஆதரிக்கிறேன்.

சோவியத் ஆட்சியின் 50 ஆவது ஆண்டில் நடைபெறும் ஒரு காங்கிரஸ், ஒரு விதத்தில் நமக்கும் ஒரு தொகுப்புரையாக விளங்குகிறது என்பது உண்மைதான். மேலும் பேச்சாளர்களில் மிகப் பெரும்பாலோர் தம்மையும் அறியாமல் நமது கடந்த காலச் சாதனைகளைக் குறித்தே பேசி வருவதும் இயல்பானதே யாகும்.

என்றாலும் மதிநுட்பம் மிக்க இந்தக் கீழை நாட்டுப் பழமொழியை நாம் என்றுமே மறந்துவிடக் கூடாது: ''பாதை யில் செல்லும்போது உனக்கு முன் பக்கத்தையே பார்த்துக் கொண்டு செல்; நீ கால் தடுக்கி விழாமல் இருக்க வேண்டு மானால், அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்க்காதே.'' எனவே

நாமும் அடிக்கடி கால் தடுக்கி விழாமல் இருப்பதற்காக வருங் காலத்தைப் பற்றியே சிந்திப்போம்.

இந்தக் காங்கிரசின் மனோநிலை அமைதியாகவும் காரியார்த்தம் மிக்கதாகவும் இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். என்றாலும் அதே சமயத்தில், நமது யூனியனின் தலைமையானது சகல இக்கட்டான விஷயங்களையும் எப்பாடு பட்டேனும் தவிர்த்துவிட வேண்டும் என்று ஒளிவு மறைவற்று விரும்புவதைக் கண்டு நான் சற்றே கவலை கொண் டுள்ளேன். இவ்வாறு செய்வது முற்றிலும் நியாயமாகத் தோன்றவில்லை. எவ்வாறாயினும் இந்தக் காங்கிரஸ் மகிழ்ச்சி கரமாகவே முற்றுப் பெறும்; ஆயினும், என்னதான் இருந்தாலும் நாம் ஏழாண்டுகளுக்குப் பிறகுதான் திரும்பவும் கூடியுள்ளோம்; எனவே முற்றிலும் இலக்கியம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், பணிகள் ஆகியவை போக, நாம் பேசிக் கொள்வதற்கு மேலும் எவ்வளவோ விஷயங்கள் உள்ளன.

நான் யூனியனின் தலைமைப்பீடத்தில் இடம் பெற்றிருக்க வில்லை; உத்தரவுகளை எவ்வாறு பிறப்பிப்பது என்பதை அறியாத ஒரு சாதாரண உறுப்பினர்—எழுத்தாளரான நான் சில பிரச்சினைகளைக் குறித்துப் பேசுவதற்கு என்னை அனுமதிக்கு மாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினைகள் என்னை மட்டுமே அலைக்கழிப்பவை அல்ல என்றும் நான் கருது கிறேன்.

தொடக்கத்தில், இந்தக் காங்கிரசைப் பற்றிச் சில வார்த்தைகள். இந்தக் காங்கிரசைத் தமது பிரசன்னத்தாலும், அதன் பணியில் தாம் காட்டும் அக்கறையாலும் கௌரவித்துள்ள நமது நல்ல நண்பர்களை விருந்தினர்கள் மத்தியில் காண்பது, நம் அனைவருக்குமே பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. ஜாரோஸ்லா இவாஸ்கீவிக்ஜ் அன்ஜ செகர்ஸ், ஜார்ஜி ஜகரோவ் ஆகியோரும் மற்றும் சோஷலிச நாடுகளிலிருந்து வந்துள்ள நமது ஏனைய சோதர சோதரிகளான எழுத்தாளர்களும், மற்றும் பாப்லோ நெரூடா, சார்லஸ் ஸ்னே, பமேலா ஜான்ஸன், ஆர்ட்டர் லுன்ட்க்விஸ்ட், மரியா ஒயின் ஆகியவர்களைப் போன்ற பெரிய நூலாசிரியர்களும், நமது நல்ல அண்டை நாட்டினரும் நண்பர் களுமான மார்ட்டி லார்னி, லின்ஜ வய்னே, மரியா தெரிசா லியோன் ஆகியோரும், மற்றும் நமது மதிப்புக்குரிய அயல்நாட்டு நண்பர்கள் அனைவரும் நமது அருகிலேயே அமர்ந்திருப்பதை உணர்வது மனநிறைவை அளிக்கிறது.

ஏனைய பிரதிநிதிகள் என்ன உணர்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது; ஆனால் என்னைப் பொறுத்தவரையில், எனது அருமையான பழைய நண்பரான இலியா கிரிகோரியேவிச் இரென்பர்க் இங்கு இல்லாததைக் கண்டு நான் மிகவும் மனவேதனைப் படுகிறேன். நான் என்னைச் சுற்றிலும் திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன்; ஆனால் இலியா கிரிகோரியேவிச்சை நான் காண முடியவில்லை; அவர் இங்கேயே இல்லை; இங்கு இருந்தாக வேண்டிய ஏதோ ஒன்று இல்லாது போய்விட்டதுபோல், இது ஏதோ ஒருவிதமான சங்கடமான மனை உணர்வை எனக்கு ஏற்படுத்துகிறது; எனது அடி வயிற்றுக்குள் ஓர் உறுத்தும் வேதனை தோன்றுகிறது; மற்றபடி இருள் சூழாத எனது மனநிலையில், வருத்தம் ஒரு கருநிழலைப் பரப்புகிறது. இரென்பர்க் எங்கே போனார்? காங்கிரஸ் தொடங்கவிருந்த தருணத்துக்கு முன்னால், அவர் இத்தாலியக் கடற்கரைக்குக் கப்பலேறிச் சென்றுவிட்டார் என்று தெரிய வருகிறது. அவர் செய்தது ஒரு விசித்தரமான காரியம்தான்.

எந்தவொரு தொழில் பட்டறையையும் சேர்ந்த கைவினைத் தொழிலாளர்கள், தமது சொந்தக் கௌரவத்தைப் போற்றி வருவதோடு மட்டுமன்றி, தமது தொழில் பட்டறையின் கௌரவத்தையும் போற்றி வரவேண்டும்; மேலும், அவர்கள் தமது தொழிலிலும் பெருமை கொள்கின்றனர். இலியா கிரிகோரியேவிச் நம் அனைவரையும் புண்படுத்தியிருக்கக் கூடாது. ஒரு கூட்டமைப்பில் ஒருவர் தம்மைப் பிறர் அனைவருக்கும் மேலானவராகக் கருதிக் கொள்ளவும், ''நான்தான் அதிகாரி; என்னிடம் ஒன்றும் எதிர்வார்த்தை பேசக் கூடாது!'' என்று கூறும் சிடுசிடுப்புக் குணம் படைத்த மாமியாரைப்போல் நடந்து கொள்ளவும் கூடாது.

இவையனைத்தையும் பற்றிய மற்றொரு வருந்தத்தக்க விஷயம் என்னவெனில், மோசமான உதாரணங்கள் பின் பற்றப்பட்டு வருகின்றன; பொது வாழ்க்கையின் நியதிகளை இரென்பர்க் மீறியுள்ள விதத்தைக் கண்டு தைரியம் பெற்றவர்களாய், நமது வயதில் முதிர்ந்த இளம் எழுத்தாளர்கள் சிலர் ஏற்கெனவே தாவிக் குதிக்கத் தொடங்கியுள்ளனர்; அவர்கள் உண்மையிலேயே வளர்ந்து ஆளாகும்போது, இதனை நினைந்து அவர்கள் வெட்கித் தலை குனியவே செய்வர்.

இளைஞர்களுக்கு ஏற்ப, நாம் கடந்து போனதை நினைவு கூர்ந்து விட்ட பின்னர், நாம் வருங்காலத்தில் நமக்கு என்ன காத்திருக்கிறது என்பதைக் காண்போம்.

1930 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில், மத்திய ரஷ்யாவி லுள்ள ஒரு சிறு நகரத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பிவந்த ஃபதயேவ், என்னிடம் கூறிய ஒரு சம்பவத்தை இப்போது கூறுகிறேன். அவர் என்னிடம் இவ்வாறு கூறினார்: ''அங்கு நான் காண விரும்பிய ஒரு புராதனமான பாதிரியார் மடம் இருந்தது. நல்லது. நான் அங்கே சென்றேன்; அதனைப் பார்த்தேன். அந்த மடத்துக்குள் மிகவும் பழைமையான, சிதிலமடைந்த ஒரு சிறு தேவாலயம் இன்னும் செயல்பட்டு வந்தது. நகரத்துக்குத் திரும்பி வரும் வழியில், அந்த மடத்தைச் சுற்றியிருந்த பள்ளத்தின் சரிவில் ஆரவாரமாகச் சத்த மிட்டு விளையாடிக் கொண்டிருக்கும் ஒரு சிறுவர் கூட்டத்தைப் பார்த்தேன். அதே சமயத்தில், இந்த வேடிக்கையையெல்லாம் பொறுமையுணர்ச்சியோடு சற்றுத் தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டும், ஆயினும் அருகில் நெருங்கிவரத் துணியாமல், வாடிப்போன புல்லைப் பலம்கொண்ட மட்டிலும் இழுத்துப் பிடுங்கி மகிழ்ந்தவாறும், தரையைத் தனது காலடியால் மிதித்துத் துவைத்தவாறும் இருந்த ஒரு சிறுவனையும் கண்டேன். பாவம், சிறுவன், இவன் செய்த ஏதோ தவறினால் இவனை விளையாட்டிலிருந்து நீக்கிவிட்டார்கள் போலிருக்கிறது என்று நினைத்தேன். இதன்பின் அவனருகே சென்று இவ்வாறு கேட்டேன்: 'நீ ஏன் இங்கு தன்னந்தனியாக நின்று கொண்டிருக்கிறாய்? நீ ஏன் மற்றவர்களோடு சேர்ந்து விளையாட வில்லை? நீ என்ன தவறு செய்தாய்?' அந்தப் பையன் என்னை ஏறிட்டுப் பார்த்தான்; அவனது கண்களில் ஒரு முதிர்ந்த வேதனை குடிகொண்டிருப்பதை நான் கண்டேன். 'என் தந்தை ஒரு பாதிரியார். அவர் இந்தத் தேவாலயத்தில்தான் பாதிரி யாராக இருக்கிறார். எனவேதான் அந்தப் பையன்கள் என்னைத் தமது விளையாட்டில் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள். அதனால் நான் தன்னந்தனியாகவே விளையாட வேண்டியிருக் கிறது' என்று என்னிடம் கூறினான் அவன். இதன் பின் ஃபதயேவ் மௌனமானார்; பிறகு அவர் விசித்திரமாகக் கீச்சிட்டுப் போன குரலில் என்னிடம் பின் வருமாறு கூறியது எனக்கு நினைவிருக் கிறது. 'பிறகு நான் என்ன செய்தேன், தெரியுமா? நான் அழுதேன்; முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுதேன். இது எத்தனை பயங்கரமான பிள்ளைப் பருவம்!' என்று கூறினார் அவர். என்றாலும், அவர் எப்படி கதையை முடிப்பார் என்று எதிர் பார்க்கலாமோ, அப்படிக் கூறியேதான் அவர் தமது கதையை முடித்தார் என்பதும் உண்மைதான். அவர் இவ்வாறுதான் கூறி முடித்தார்: ''என்றாலும், பெரியவரே, எல்லாச் சண்டாளர்

களுமே சற்று உணர்ச்சி வசப்பட்டவர்களாகவே இருக்க முனைகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே.''

நமது ''சிரமமயமான'' இளம் எழுத்தாளர்கள், என்னை அந்தப் பாதிரியாரின் மகனை சிறுவனையே எண்ணிப் பார்க்கச் செய்கின்றனர்: அவர்கள் தன்னந்தனியாகவே விளையாடு கிறார்கள்; அவர்களுக்குத் தோழமையுணர்ச்சி ஏதும் இருக்க வில்லை; மேலும், வயதில் முதிர்ந்த, உணர்ச்சி வசப்பட்ட சண்டாளர்களாகிய நாம் அவர்களுக்காகப் பரிவு காட்டி அழுவதும்கூட இல்லை; அவர்களோடு உண்மையிலேயே தொடர்பு கொள்வதற்கும் நாம் முயல்வதில்லை. நாம் செய்வ தெல்லாம், புதிதாகப் படையில் சேர்க்கப்பட்டவர்களை, ஒரு கிழட்டு சார்ஜெண்ட் எப்படி நடத்துவாரோ, அப்படி அவர்களை நடத்தி வருவதுதான்.

இதற்கு நாம் முடிவு கட்டியாக வேண்டிய, இதற்கெல்லாம் ஒரு சால்ஜாப்பைத் தேடிக் காண முயல்வதை நிறுத்தியாக வேண்டிய தருணம் வந்து விட்டது என்றே எனக்குத் தோன்று கிறது. இளம் எழுத்தாளர்களில் ஒரு பகுதியினரோடு நமக்குள்ள இயல்புக்கு மாறான தற்போதைய உறவுகளுக்கு, நாம் அனைவரும்தான் குற்றவாளிகள் என்பதை நாம் நேர்மையோடு ஒப்புக் கொள்வோம்—காம்சொமால் ஸ்தாபனம் எழுத்தாளர்களது யூனியனின் தலைமையையும், மூத்த எழுத்தாளர்களான நம்மையும்தான் குற்றம் சாட்ட வேண்டும். இந்தக் குற்றத்திலிருந்து நான் என்னை விடுவித்துக் கொள்ள முடியாது என்பதும், அவ்வாறு விடுவித்துக் கொள்ள நான் விரும்பவும் இல்லை என்பதும் சொல்லாமலே விளங்கும். எனவே நாம் விஷயங்களை நேர் நின்று நோக்கினால், நிலைமைகள் இவ்வாறுதான் உள்ளன. இளைஞர்கள் அகந்தையும் சினந்து சீறும் குணமும் படைத்தவர்களாக இருப்பதுதான் வழக்கம். நல்லது. இந்தக் குற்றத்துக்கான பொறுப்பில் ஒரு பகுதியை நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தால், ஒரு சமரசம் காணும் முயற்சியில் நாம்தான் முதலடியையும் எடுத்து வைத்தாக வேண்டும். இதனால் நமது பெருமை ஒன்றும் குலைந்து போய் விடப் போவதில்லை. இதுதான் நாம் செய்யக் கூடிய மிகமிக விவேகமான,—அல்லது நீங்கள் இவ்வாறு கூற விரும்பினால்,—மிக மிகத் தொலைநோக்குள்ள காரியமாகும் என்று நான் கருது கிறேன்.

இந்த இளம் மக்களும் ஒரு ஃபிராண்டேயின் நிலையை மேற் கொள்வது, ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை நியதிகளை அங்கீகரிக்க மறுப்பது போன்ற சில விஷயங்களில் குற்றவாளி

களே என்பதையும் நான் கூறியாக வேண்டும். அவர்களது மனச்சாட்சியில் இடம் பெற்றுள்ள வேறு சில விஷயங்களும் உண்டு. என்றாலும், அதற்கு அவர்களது இளமைப் பருவமே காரணம் என்று நாம் கொள்வோம்; அதனை அவர்களுக்கு எதிராக நாம் இப்போது பயன்படுத்தாது இருப்போம்; ஆண்டுகள் செல்லச் செல்ல அவர்களை நாம் மேலும் மேலும் வழிக்குக் கொண்டு வருவோம்.

இளம் எழுத்தாளர்களைப் பற்றிக் கூறப் புகுந்தால், அவர்கள் நமது இடத்தில் இடம்பெறப் போகும் அற்புதமான புதிய படையினரே ஆவர். இதையொன்றும் நான் உள்ளடங்கிப் போன குரலில் ரகசியமாகக் கூற வேண்டியதில்லை. மிகவும் மகிழ்ச்சியூட்டும் உண்மை என்னவென்றால், இளம் திறமையாளர்கள் பலர் ஏராளமான எண்ணிக்கையில் தோன்றி வருகிறார்கள் என்பதுதான்—அவர்கள் இப்போதுதான் ஆண்மைக் குரலைப்பெற்று வரும் சிறுவர்களாக உள்ளனர்; எனவே அவர்கள் இளம் சேவற் கோழியைப்போல் அடிக்கடி கீச்சுக் குரலை எழுப்புவது சகஜம்தான். இந்தச் சிறுவர்கள்தான் நமது உண்மையான செல்வமாவர்; இவர்களைப் பற்றிப் பரவச உணர்ச்சியும் நியாயமான பெருமிதமும் இல்லாமல் நாம் பேசவே முடியாது. நமது நாட்டின் வளமிக்க மண், இத்தகைய திறமையாளர்களை மிகவும் தாராளமாக வழங்கி வருகிறது என்பது அற்புதமானதுதான்; உண்மையிலேயே அற்புதமானதுதான்!

ஆயினும் இது விஷயத்திலும் சிந்தனைக்கு இடமுண்டு; இதிலும் வருங்காலத்தைச் சற்று உற்று நோக்குவதே நன்மை பயக்கும். தீவிரமான சிந்தனையைத் தூண்டும் சில புள்ளி விவரங்களை மேற்கோள் காட்ட நான் விரும்புகிறேன்.

முதலாவது எழுத்தாளர் காங்கிரசில், பிரதிநிதிகளில் 71 சதவீதம் பேர் நாற்பது வயதுக்கு உட்பட்டவர்களாக இருந்தனர்; இரண்டாவது காங்கிரசில் இந்தச் சதவீதம் 20.6 ஆகக் குறைந்தது; மூன்றுவதில் 13.6 சதவீதமாகக் குறைந்தது. இப்போதைய காங்கிரசில் இந்த வீதாசாரம் 12.2 சதவீதமாகவே உள்ளது. எனது சோதர எழுத்தாளர்களே, நாம் முதுமையடைந்து வருகிறோம். காங்கிரசுகளது பணிகளுக்குள்ளும், எழுத்தாளர் யூனியன்கள் மற்றும் அதன் பகுதிகள் ஆகியவற்றின் நிர்வாக உறுப்புக்களுக்குள்ளும் இளம் எழுத்தாளர்களை மிகவும் துணிச்சலோடு ஈர்த்துக் கொள்வதற்கான தருணம் நிச்சயம் வந்து விட்டது. இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால், நமது முறையானது, பதவி உயர்வு மிகமிக மெது

வாகவே கிட்டும் ஒரு ராணுவத்தில் உள்ள முறையைப் போன்றே உள்ளது; அதாவது ஒரு மனிதர் ஜெனரல் பதவியை எட்டிப் பிடிக்கும் காலம் வரும்போது, அவர் மிகவும் சிதிலமடைந்து போனவர்போல் தோற்றும் அளவுக்கு அத்தனை முதுமை தட்டிப் போயிருப்பார். நரை மயிர் மிகவும் மரியாதைக்குரியது என்பது உண்மைதான்; என்றாலும் அது மட்டுமே ஒரு மனிதரைத் தலைமைக்குத் தகுதியானவராக ஆக்கிவிட முடியாது. முடியுமா அது? இந்தக் காங்கிரசுக்குப் பிரதிநிதிகளாக வந்துள்ளவர்களின் சராசரி வயது கிட்டத்தட்ட அறுபது—இது நமக்கு வருத்தம் தருவதாக இல்லையா? எனவே நாம் இன்று இப்படித்தான் இருக்கிறோம்; ஒரு நல்ல திறமைசாலி, வருங்காலத்தைப் பற்றியே சிந்திக்கிறார்; தமது வீட்டைச் சீரழிவுக்கும் சீர்குலைவுக்கும் உள்ளாக்கக் கூடிய நபர்கள் அல்லாத நல்ல திறமைசாலிகளாக நம்மை நாமே கருதிக் கொள்வதற்கு நமக்கு உரிமை உண்டு.

எனவே, நீங்களே காண்பதுபோல், இளைஞர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பது ஏற்கெனவே மிகவும் அதியவசரமான விஷய மாகி விட்டது; இதனை இனியும் தள்ளிப்போட முடியாது. இதுபற்றி உரிய காலத்தில் தீர்மானித்தாக வேண்டும்.

அண்மைக் காலமாக, சோவியத் எழுத்தாளர்களான நமக்குப் படைப்பாக்கச் ''சுதந்திரம்'' வேண்டும் எனக் கூக்குரல் கிளப்பும் பல குரல்கள் மேலை நாடுகளிலிருந்து எழுந்து வருவதை நாம் கேட்டு வருகிறோம்.

1921-ல் மியாஸ்னிகோவ் மன்னராட்சி வாதிகளிலிருந்து அராஜக வாதிகள் உட்பட அனைவருக்கும் பத்திரிகைச் சுதந்திரத்தை வழங்குமாறு யோசனை தெரிவித்தபோது, லெனின் இவ்வாறு அவருக்குப் பதில் எழுதினார்:

''மிகவும் நல்லது. ஆனாலும் ஒரு நிமிஷம்: நமது புரட்சியின் நான்காண்டுக்கால அனுபவத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும் ஒவ்வொரு மார்க்சியவாதியும் ஒவ்வொரு தொழிலாளி யும் இப்படித்தான் கூறுவார்: 'நாம் இதனைக் கூர்ந்து கவனிப் போம்—இது எத்தகைய பத்திரிகைச் சுதந்திரம்? எதற்காக? எந்த வர்க்கத்துக்காக?' ''

அப்படியானால், நமது புரட்சியின் ஐம்பதாண்டுக் கால அனுபவத்தால் அதிக ஞானம் பெற்றுள்ள மார்க்சியவாதிகளும் தொழிலாளர்களும், ஒரு பரிபூரணமான பத்திரிகைச் ''சுதந்திரம்'' பற்றிக் கனவு கண்டு கொண்டிருப்போரின் வேண்டுகோள்களைக் கேட்கும்போது, அவர்கள் இப்போது என்ன கூறுவார்கள்?

உலகைக் கவலையும் பீதியும் கவ்விப் பிடித்துள்ளன. ஆனால் இங்கோ யாரோ ஒருவர் அனைவருக்கும்—மன்னராட்சிவாதிகளிலிருந்து அராஜகவாதிகள்வரை அனைவருக்கும்—பத்திரிகைச் சுதந்திரத்தைப் பெற விரும்புகிறார். இது என்ன?—இது வெறும் அப்பாவித்தனமா அல்லது அப்பட்டமான வெட்கங்கெட்ட செயலா?

இந்தச் ''சுதந்திர'' வெறியர்கள் நமது இளைஞர்களைக் கெடுக்க முயல்கிறார்கள். கனவான்களே, நீங்கள் வீண் முயற்சி செய்கிறீர்கள்! ''சிரமமயமான'' இளம் எழுத்தாளர்களும் சரி, அல்லது ''சிரமமில்லாத'' இளம் எழுத்தாளர்களும் சரி, உங்களோடு வரப்போவதில்லை. எங்களது தாயகத்தின் கவலைகளையும் இன்பங்களையும் அவர்கள் எங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளனர்; எங்களோடு பகிர்ந்து கொள்ளவும் போகின்றனர். மேலும், அவர்களில் எவர் ஒருவரையும் நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கவும் மாட்டோம்.

மாபெரும் தேசபக்தப் போரில் எழுத்தாளர்கள் ஆற்றிய பணியைப் பற்றி இங்கு பலர் மிக நன்றுகப் பேசியுள்ளனர். சோவியத் ராணுவத்தின் அரசியல் நிர்வாகம் நம்மை முதலாவது ரிசெர்வ் படையில் வைத்துள்ளது என்றால் அது ஒன்றும் சும்மா அல்ல. நமது நாட்டை அபாயம் அச்சுறுத்துமானால், நாம் மீண்டும் நமது ராணுவ யூனிபார்ம் உடைகளைத் தரித்துக் கொண்டு, நம்மில் முதியவர்களும், இளையவர்களும், ''சிரமமயமான''வர்களும், ''சிரமமில்லாத''வர்களுமான அனைவரும், நமது சொந்த சோவியத் ராணுவத்தின் அணிகளில் சேர்ந்து விடுவோம். ஏனெனில் நாங்கள் எங்களது மக்களின் சதையின் சதையாக ஒன்றுபட்டிருக்கிறோம்; அந்த மக்கள் போராடிப் பெற்ற சகலமும் எங்களுக்கு எல்லையற்றவிதத்தில் மதிப்பிடற் கரியவையாகும்.

முடிவுரையாக, நான் வருங்காலத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது சமுதாயத்தில் நிகழ்ந்து வரும் மிகப்பெரும் சமுதாய மாற்றங்களையெல்லாம் புலப்படுத்தக் கூடிய அளவுக்கு, வசன இலக்கியத்தில் நாவல் இலக்கிய வகை ஒன்றுதான் விளங்கி வருவதாக, காண்ஸ்தாந்தின் ஃபெதின் கூறியதை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். நாவல் இலக்கியமானது ஒரு பெரிய திரைச் சீலையை விரித்து, அதன் மீது நமது நாட்டில் நிகழ்ந்து வரும் சம்பவங்களை, மக்களது மனோபாவத்திலும் கண்ணோட்டத்திலும் ஏற்பட்டுள்ள மிகப் பெரும் மாற்றங்களைச் சித்திரித்துக் காட்டவும், தமது கதா

பாத்திரங்களின் பல்லாண்டுக் கால வாழ்க்கைகளை இனம் காட்டவும் எழுத்தாளருக்கு இடம் கொடுக்கிறது.

நமது புகழ் பெற்ற சிறுகதை எழுத்தாளர்கள், இந்த மிகப் பெரிய திரைச்சீலைகளுக்கு மாறுவதற்கான தருணம் வந்து விட்டது. நமது இலக்கியத்தை மேலும் வளப்படுத்தும் பெரும் கதை இலக்கியப் படைப்புக்களைப் படைப்பதற்கு அவர்களிடம் ஏராளமான திறமையும் சக்தியும் உண்டு.

கார்க்கியின் முன்முயற்சியின்பேரில் நாம் பல்வேறு ஆலைகள் மற்றும் தொழிற்சாலைகளின் வரலாறுகளை வெளியிட்டுள்ளோம்; தொடர்ந்து வெளியிட்டும் வருகிறோம். கூட்டுப் பண்ணைகள் அரசாங்கப் பண்ணைகள் ஆகியவற்றின் வரலாறுகளை எழுதுவதில் எழுத்தாளர்கள் ஏற்கெனவே முனைந்து ஈடுபட்டுள்ளனர். இந்தப் புத்தகங்கள் நாவல்களுக்குப் பதிலிகள் ஆகாது. இது தெளிவானது. என்றாலும் அவை ஒரு காவிய நாவலுக்கான அடிப்படையாக விளங்க முடியும். மேலும், ஒரு விஷய மூலாதாரம் என்ற முறையில், அவை ஒரு நூலாசிரியருக்கு மதிப்பிடற்கரிய உதவியாகவும் விளங்க முடியும்.

நமது நோக்கங்களுக்கும் நமது திறமைகளுக்கும் இடையே ஏற்றத் தாழ்வு ஏதும் இல்லை என்றே நான் கருதுகிறேன். மேலும், என்னதான் இருந்தாலும், நாம் இந்தப் பொன்விழா ஆண்டுக்குப் பிறகு கூட முன்னைப்போல் அரும்பாடுபட்டுத்தான் உழைக்க வேண்டியிருக்கும். சோவியத் இலக்கியம் தனது நாட்டுக்கும் உலகத்துக்கும் பல புதிய, அற்புதமான நாவல்களை வழங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இதனை நனவாக்குவதற்கு நமக்கு எல்லா நிலைமைகளும் திறமைகளும் உள்ளன.

நீங்கள் எல்லோரும் உங்கள் தேட்டங்களில் மாபெரும் துணிவுமிக்க காரியங்களையும், உங்களது படைப்பாக்கப் பணிகளில் வெற்றியையும் பெற, எனது இதயத்தின் அடியாழத்திலிருந்து நான் உங்களை வாழ்த்துகிறேன்.

1967

இத்தகைய அற்புதமான மக்களோடு வாழ்வதுதான் எத்தனை ஆனந்தமானது !

(கூட்டுப் பண்ணை விவசாயிகளின் மூன்றாவது அகில-யூனியன் காங்கிரசில் ஆற்றிய உரை)

தோழர்களே,

கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு மட்டுமே அல்லாமல், நம் அனைவருக்கும், நாடு முழுவதற்கும் மிகப் பெரும் முக்கியத்துவம்

வாய்ந்த சம்பவமாக விளங்கும் உங்களது காங்கிரசில் உங்களுக்கு வணக்கம் கூறுவதை நான் எனது மகிழ்ச்சியாகவும் கௌரவமாகவும் கருதுகிறேன்.

கடந்த நாற்பது ஆண்டுகளில் எவ்வளவோ காரியங்கள் நிகழ்ந்துள்ளன; ஒரு கூட்டுப் பண்ணைக் கிராமத்தின் தோற்றத்திலும் வாழ்க்கையிலும், மிகவும் முக்கியமாக, கூட்டுப் பண்ணை விவசாயிகளது மனோபாவத்திலும், எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது பொதுவாகத் தெரிய வந்துள்ள உண்மை; இதனைக் குறித்து நான் இன்று பேச விரும்பவில்லை.

ஆரம்ப காலத்தை, பல ஆண்டுகள் அனைத்துக்கும் முந்திய அந்தக் காலத்தைத் திரும்பிப் பார்க்கும்போது, ஒருவர் இப்படித்தான் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்ப்பார்: நமது நாட்டின் அபிவிருத்தி மார்க்கத்தை யார் தீட்டிக் கொடுத்தாரோ, யாருடைய பிறந்த தின நூற்றாண்டு விழாவை நாம் விரைவில் கொண்டாடப் போகிறோமோ, அந்த மனிதர்தான் எத்தகைய வியத்தகும் தொலைநோக்கைக் கொண்டிருந்திருக்க வேண்டும்! மேலும், நாட்டின் தொழில் மயமாக்கப் பணியை நிறைவேற்றி வந்த அதே சமயத்தில், ஒரு கூட்டுப்பண்ணை முறைமையை நிலை நாட்டுவதிலும் முனைவதற்காகத் தீட்டப்பட்ட எல்லாவற்றையும் சாதித்து முடிப்பதற்குத்தான் நமது கட்சிக்கு எத்தகைய வியத்தகும் மனோவுறுதியும் பலமும் இருந்திருக்க வேண்டும்!

ஒரு பெரிய போரின் மின்னல் வீச்சுக்கள் தூரா தொலைவிலுள்ள அடிவானங்களில் ஏற்கெனவே தட்டு மறித்து விளையாடிக் கொண்டிருந்தன; மேலும், போர் வந்தேவிட்டபோதோ, கூட்டுப் பண்ணைகள் ராணுவத்துக்கும், தொழிலாளி வர்க்கத்துக்கும், நாடு முழுவதற்கும் உணவு வழங்கக் கூடியதாகவே இருந்தன. ஆயாச மூட்டிய போரின் நான்கு ஆண்டுகளும் நமது வயிற்றை இறுக்கிக் கொள்ளச் செய்தன; என்றாலும் நாம் தாக்குப் பிடித்து நின்றோம்; வென்றோம்; மகா சமுத்திரத்துக்கு அப்பாலுள்ள அன்பான மாமாவிடம் நாம் ரொட்டிக்காக மடிப்பிச்சை கேட்டுப் போகவில்லை.

இதனை நாம் அடிக்கடி நினைவு கூர்கிறோம்; ஆயினும், கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு நாம் அடிக்கடி நன்றி கூறுவது, நாம் செய்து வர வேண்டிய ஒரு காரியமேயாகும் என்றும், அவர்கள் முன்னால் அடிக்கடி தலை வணங்குவதால், எவரது முதுகும் முறிந்து போகாது என்றுமே நான் கருதுகிறேன்.

இந்த நாட்களில் நாம் அனைவரும் தோழர் பிரெஷ்னேவின்

உரை, நமது இதயத்தில் பதித்துள்ள முத்திரையோடுதான் வாழ்ந்து வருகிறோம். அதில் அடங்கியிருந்த உள்ளத்தைக் கிளறும் உண்மைகளும், புள்ளி விவரங்களும், முடிவுகளும் சிந்திக்க வைக்கின்றன. உதாரணமாக, மக்கட் தொகையின் தலா விகிதச் சராசரி அளவில் சாகுபடிக்கேற்ற நிலம் எவ்வளவு உள்ளது என்ற புள்ளி விவரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நமது உள்ளங்களின் அப்பாவித்தனம் காரணமாக, நம்மிற் பெரும்பாலோர் நிலவளத்தில் நாம் அளப்பரிய செல்வந்தர்களாக இருப்பதாகத்தான் எண்ணிக் கொண்டிருந்தோம்; ஆனால் நாம் ஒன்றும் உண்மையில் அத்தனை வளம் படைத்தவர்களாக இல்லை என்பதே எதார்த்தத்தில் புலனாகின்றது,

இது முதன்மையான பிரச்சினைகளில் ஒன்றாகும்; ஏனெனில், இது கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு மட்டுமல்லாது, சோவியத் யூனியனது பிரஜைகளான நம் அனைவருக்கும், இன்றைய, வருங்காலத் தலைமுறையினருக்கும் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். உலகைப் போலவே நிலமும் பிரிக்கவொண்ணாதது என்பதை நாம் மிக நன்றாக அறிவோம்; மேலும், நமக்கு உணவளித்து வரும் நமது சாகுபடி நிலங்களை நாம் அன்போடும் கவனத்தோடும் மதித்து நடத்தி வரும் அதே சமயத்தில், நாம் வாழ்ந்து பணியாற்றி வரும், இன்ப துன்பங்களை அனுபவித்து வரும் நிலத்தையும், மனிதனின் நன்மைக்காக அதன்மீது இருந்து வரும் அனைத்தையும், அதே அன்போடும் கவனத்தோடும் மதித்து நடந்து கொள்ள வேண்டியது நம் அனைவரின் கட்டாயக் கடமையாகும். நான் காடுகளையும், நதிகளையும், அவற்றின் தொகைகளையும்தான் குறிப்பிடுகிறேன். இந்தப் பிரச்சினைகளின் பால் நாம் கொண்டுள்ள மனப்போக்கை நாம் திரும்பத் திரும்ப மறு பரிசீலனை செய்யவும், இயற்கைத்தாய் நமக்கு வழங்கியுள்ள வளங்களைப் பாதுகாத்து வர, எங்கெங்கே அவசியமோ அங்கெல்லாம் அதியவசரமான முடிவுகளை எடுக்கவும் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும். லியோனித் இலியிச் பிரெஷ்னேவின் உரையில் நாம் கேட்டறிந்த, இந்தக் கட்டுப்பாடோடு கூடிய கண்டிப்பான எச்சரிக்கை மிகவும் தக்க தருணத்தில் விடுக்கப்பட்டதாகும். மேலும் இந்த எச்சரிக்கைக்குச் செவி சாய்ப்பது, மிகவும் சிக்கனக்கார நபர்களான உங்களுக்கும்கூட நன்மையே பயக்கும்.

பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்கள் பலவும், அவற்றின் உடனடித் தன்மையை உணர்ந்து பார்க்கத் தூண்டுகின்றன. இது இப்படித்தான் இருக்க வேண்டும்; ஏனெனில் பிரதிநிதிகள் நிலத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தி வரும் திறமையாளர்கள்

ஆவர்; நமது மாபெரும் சமுதாயம் மேலும் அபிவிருத்தி காண் பதற்கான வருங்கால வாய்ப்புக்களை அவர்களே வகுக்கின்றனர்.

கூட்டுப் பண்ணை இயக்கத்தைச் சேர்ந்த முதுபெரும் பிரமுகர்களைப்பற்றி, இந்த மேடையில் எவ்வளவோ விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. என்னைத் தன்னடக்கமற்றவன் என்று தயவு செய்து எண்ணி விடாதீர்கள்; என்றாலும், அந்த முதுபெரும் பிரமுகர்களின் வரிசையில் நானும் இடம் பெறுவேன்; ஏனெனில் கூட்டுப் பண்ணை முறை பிறந்ததையும் அது வலுப் பட்டதையும் நான் கண்ணாரக் கண்டு வந்திருக்கிறேன். மேலும் இன்று, இந்த மண்டபத்தில், பல தலைமுறைகளைப் பிரதிநிதித் துவப்படுத்தும் சோவியத் விவசாய வர்க்கத்தின் கண்மணிகள் பலர் கூடியிருப்பதை நான் காணும்போது, கடந்த நாற்பது ஆண்டுகளில் நமது சோவியத் கிராமப்புறங்கள் கடந்து வந்துள்ள கீர்த்தி வாய்ந்த வரலாற்று மார்க்கத்தை நான் பெருமிதத்தோடு எண்ணிப் பார்க்கிறேன்; இந்த மார்க்கத்தைத் துடிப்பான முறையிலும் தகுதியான முறையிலும், இலக்கியத்திலும் கலையிலும் சித்திரித்துக் காட்ட வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதையும் உணர்கிறேன்.

எனது தொழில்முறைக் கடமையானது, இலக்கியத்தைப் பற்றியும் சில வார்த்தைகள் கூறுமாறு என்னை நிர்ப்பந்திக்கிறது. விஷயம் என்னவென்றால், பண்ணைத் தொழிலைப்போலவே, இலக்கியத் துறையிலும் அமோக அறுவடைகள் காணும் ஆண்டு களும், எதுவுமே விளையாத ஆண்டுகளும் உண்டு; வறட்சிக் காலங்களும் தூசிப் புயல்களும் உண்டு. நீங்கள் உங்கள் பயிர் களைத் தாக்கும் பூச்சிகளை வெற்றிகரமாக எதிர்த்துப் போராடி வருகிறீர்கள்; ஆனால், நான் இதனைச் சொல்வதற்கே வருத்தப் படுகிறேன்—எங்கள் மத்தியில் இன்னும் சில கொலொரடோ வண்டுப் பூச்சிகள் இருந்து வரத்தான் செய்கின்றன; அத்தகைய வண்டுப் பூச்சிகள் சோவியத் ரொட்டியைத் தின்று வளர்ந் தாலும், தமது மேலைநாட்டு முதலாளித்துவ எஜமானர்களுக்கே சேவை செய்து வருகின்றன; தமது எழுத்துக்களை அவர்களுக்குக் கள்ளத்தனமாகக் கடத்தி அனுப்பி வருகின்றன. ஆயினும், நீங்கள் உங்கள் வயல்களில் செய்து வருவதைப்போல், நாங்களும் எங்களது இலக்கியத் தோட்டங்களிலிருந்து எல்லாவிதமான பூச்சிகளையும் களைகளையும் தொலைத்துக் கட்ட மிகவும் ஆவலாக இருக்கிறோம்; அவற்றை நாங்கள் தொலைத்தும் கட்டுவோம்.

உற்பத்தி விஷயத்திலும் எங்கள் நோக்கங்கள் உங்களது நோக்கங்களை ஒத்தவையேயாகும்; அதாவது நல்ல தரமிக்க சரக்குகளைப் போதிய அளவு உற்பத்தி செய்ய வேண்டும்

என்பதே. நாங்கள் எப்போதுமே வெற்றி பெற்று விடுவதில்லை; ஆயினும், நீங்களும் அப்படித்தானே.

மேலும், நீடித்த மதிப்புள்ள சரக்குகளை உற்பத்தி செய்யுமாறு எங்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது; ஆயினும் துர்ப்பாக்கிய வசமாக, எல்லாப் புத்தகங்களுமே காலத்தின் சோதனையில் வென்று நின்று நிலைத்துவிட முடிவதில்லை. ஆயினும், கிராம வாழ்க்கையைப்பற்றி நாங்கள் ஏற்கெனவே சில புத்தகங்களை உருவாக்கியுள்ளோம் என்பது ஒரு மகிழ்ச்சியூட்டும் உண்மையாகும்; மேலும் நான் ஒரு கடைந்தெடுத்த நன்னம்பிக்கைவாதியாக இருக்கின்ற காரணத்தால், நமது காலத்தவர்களைப் பற்றிய பெரிய, புதிய நாவல்கள் இன்னும் எழுதப்படும் என்று முற்றிலும் திட நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

நாம் வேறு சிலவற்றிலும் பொதுவான அக்கறையைக் கொண்டிருக்கிறோம்—நமது இளம் மக்களைக் கண்டு நாம் கொள்கின்ற இன்பமும் பெருமிதமும், அவர்கள் மீது நாம் வைக்கின்ற நம்பிக்கைகளும்தான் அவை. இளம் எழுத்தாளர்கள் மத்தியில், உண்மையிலேயே திறமை மிக்க நபர்கள் பலர் உள்ளனர்; முதலாவதாக, அவர்களிடமிருந்துதான் நாங்கள் முக்கியத்துவமும் முழுமையான மதிப்பும் வாய்ந்த படைப்புக்களை இயல்பாகவே எதிர்பார்க்கிறோம்.

முடிவாக ஒரு விஷயம். தோழர்களே, எனது நாட்டினரே, இந்த மாநாட்டின் பிரதிநிதிகளே, உங்களிடம் உண்மையைக் கூறப் புகுந்தால், இங்கு நான் உங்களைப் பார்க்கும்போது, இத்தகைய அற்புதமான மக்கள் மத்தியில் வாழ்வதற்குத்தான் நான் எத்தனை அதிருஷ்டசாலியாக இருக்க வேண்டும் என்றே எண்ணுகிறேன்.

ஏன், இத்தகைய வலிமை மிக்க மக்களைக் கொண்டு, இத்தகைய வலிமை மிக்க கட்சியைக் கொண்டு, மலைகளையே அசைத்துவிட முடியும்! மேலும், அவசியம் நேர்கின்றபோது, நாம் உண்மையில் மலைகளை அசைக்கவும் செய்கிறோம்.

மலைகள் கிடக்கட்டும்; சாத்தானின் கொம்புகளையும்கூட நம்மால் ஒடித்துவிட முடியும். 1945-ல் நாம் அவனது கொம்புகளை ஒடிக்கத்தான் செய்தோம். அவன் புதிய கொம்புகளை வளர்ப்பானுல், அவற்றையும் நாம் மீண்டும் முறிப்போம். இந்த நல்ல காரியத்தைச் செய்வதற்குப் போதுமான பலமும் திறமையும் நமக்குண்டு.

இந்தக் காங்கிரஸ் விரைவில் முடிவுறும். பிரிந்துபோவதற்கு முன்னால், நமது மாபெரும், பல-தேசிய இன சோவியத்

நாட்டின் கீர்த்திக்காக, நீங்கள் மாடெரும் சாதனைகளைப் புரியுமாறு உங்களுக்கு வாழ்த்துக் கூற என்னை அனுமதியுங்கள்.

எந்தவொரு நாட்டைக் குறித்து உழைக்கும் மனிதகுலம் அனைத்தும், உலகிலுள்ள முற்போக்கு மனம் படைத்த மக்கள் அனைவரும் சரியான முறையில் பெருமைப்படுகிறார்களோ—அந்த நாட்டின் விசுவாசமிக்க புதல்வர்களும் புத்திரிகளுமான நம்மைப்பற்றிச் சொல்லவா வேண்டும்—அந்த நாடான லெனினது தாயகத்தின் கீர்த்திக்காக, உங்களுக்கு வெற்றிகள் கிட்டுமாறு வாழ்த்தவும் என்னை அனுமதியுங்கள்.

1969